கலைஞரின்
கடிதங்கள்



48

20.02.2013 - முதல்
31.05.2013 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 48

20.02.2013 - 31.05.2013



தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

Gowra Puthaga Maiyam
9, Saint John Church Complex,
Rockins Road, Trichy - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

Available @ :

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

Gowra Agencies
No : 1 Samy Street,
Sai Baba Temple Back Side
Triplicane, Chennai - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

Kalaignarin Kadithangal


விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : கலைஞர்
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

Author : Kalaignar
Editors:
K. Shanmuganathan M.com BGL
Dr K. Rajamanikam IAS
Subject : Epistle
© Rights :
Publisher :
S.Gowmareeswari M.A., M.L.I.S.,
Edition :
1st Edition - 2022
Published @ :
Seethai Pathippagam
6A/4, Parthasarathi Samy Street,
Triplicane,
Chennai-600 005.
Pages : 400
Typeset by : JaiJeena
Printed @ :
Classic Printers, Chennai - 2.
ISBN :

42255
தி89ச்2116
திருவல்ல.48

தி.மு.க. அறக்கட்டளை
போராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்
சென்னை-108
தலைமை அலுவலகம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
தலைமை அறிவாலயம்

மு.க.ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3706. ஐ.நா.வின் பட்டியலில் இணைவதா? வேண்டாமா?	20-2-2013	23
3707. இவையெல்லாம் பாராட்டாகத் தெரிகிறதா?	22-2-2013	29
3708. வென்றவர் சொல்வதெல்லாம் “வேதம் ஆகுமா?”	23-2-2013	35
3709. புரிந்துகொள்வதுதான் எப்போது?	24-2-2013	43
3710. தமிழகத்தை வளமாக்கும் திட்டத்துக்குத் தடை கோருவதா?	25-2-2013	50
3711. கண்ணீரைக் கவசமாக்கும் நாள் - மார்ச் 5.	27-2-2013	56
3712. இதற்கும் சேர்த்தா பாராட்டு விழா?	3-3-2013	62
3713. முற்றுகைப் போருக்குத் தயாராகி விட்டாயா?	04-03-2013	69
3714. போர் நின்றுவிட்டதாகப் பொய் சொன்னது போர்க்குற்றமே!	7-3-2013	74

3715. சேதுத் திட்டத்தைச் சீரழிக்க நினைப்பது நியாயமா?	8-3-2013	85
3716. இங்குள்ள தமிழர் ஒன்றாதல் காண்போம்!	9-3-2013	91
3717. மதுரவாயல் திட்டமும் அரோகரா! ஏன்? ஏன்?	10-3-2013	98
3718. உடன்பிறப்பே! உன்னை அழைக்கிறேன் வா!	11-3-2013	104
3719. இதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறீர்களா?	12-3-2013	111
3720. “டெசோ” கேட்பதால்; வலுவில்லை என்பதா?	14-3-2013	122
3721. உலகத் தமிழர்கள் ஒருபோதும் ஒப்பமாட்டார்கள்!	21-3-2013	128
3722. சட்டப்பேரவையில் அன்றும், இன்றும்!	27-3-2013	136
3723. வாடிக்கையாகிவிட்ட பித்தலாட்டம்!	28-3-2013	143
3724. “இந்து” ஏடே சுட்டிக்காட்டும் இரட்டை வேடம்!	29-3-2013	150
3725. கூட்டுறவுத் தேர்தல்களில் அராஜகம்!	31-3-2013	156
3726. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?	1-4-2013	161
3727. தங்கள் “தகுதி”யை வெளிப்படுத்துவார்களா?	3-4-2013	167

3728. அருந்ததியர்க்கு கழக ஆட்சி ஆற்றிய கடமை!	4-4-2013	173
3729. அந்த நாள் ஞாபகம் வந்ததே; அம்மையே!	9-4-2013	179
3730. துரோகம் தொடர்கதையானது யாராலே?	10-4-2013	186
3731. “தலித்” மக்கள் தெரிந்து கொள்வதற்காக!	11-4-2013	192
3732. பயன்பெறும் மக்களுக்கு உண்மை தெரியத்தான் போகிறது!	12-4-2013	199
3733. ஓங்கிக் குரல் கொடுப்போம்!	14-4-2013	206
3734. நாகரிகயுகத்தில் நரபலிக் கொடுமையா?	15-4-2013	212
3735. இதற்கோர் அறிக்கை படிக்கலாமே?	16-4-2013	215
3736. மறைந்த தலைவர்களுக்கு மாசு கற்பித்தல் கூடாது!	17-4-2013	219
3737. இந்தக் கூட்டுறவுத் தேர்தலில் எல்லாக் கட்சிகளும் எதிர்பார்ப்பது என்ன?	18-4-2013	225
3738. மீண்டும், மீண்டும் விடுத்திடும் வேண்டுகோள்!	19-4-2013	231
3739. மறக்க முடியாத மாமணிகள் – இருவர்! கலைஞர் இரங்கல் கடிதம்!	21-04-2013	236

3740. வருமுன் காப்பதா? வந்தபின் தவிப்பதா?	22-4-2013	241
3741. வலுவான காரணங்கள் குவிகின்றன!	23-4-2013	248
3742. ஈழத் தமிழர்க்கு இன்னமும் ஓயாத கொடுமைகள்!	27-04-2013	254
3743. கனவா? நனவா? கழுத்தே சும்மா இரு என்ற கதையா?	28-4-2013	259
3744. பெண் ஆளும் மாநிலத்தில் மண் ஆகும் சட்டம் ஒழுங்கு!	29-4-2013	266
3745. அமைப்பு சாராத் தொழிலாளர்களும் - நானும்!	30-4-2013	272
3746. காழ்ப்புணர்வின் உச்சகட்டம்!	1-5-2013	279
3747. அண்ணா அறிவித்த எழுச்சி நாள் எதற்காக?	3-5-2013	286
3748. “வாய் நீளம்” தோற்றுப்போகும்; “வாய்மையே வெல்லும்!”	5-5-2013	294
3749. இந்துக்களை இம்மியளவும் புண்படுத்தாத சேதுத் திட்டம்! கலைஞர் தொடர் கடிதம்-3	07-05-2013	304
3750. எழுச்சி நாள் வெற்றி பெற பணியாற்றுவோம்!	8-5-2013	311
3751. ஒரு நாடகமன்றோ நடக்குது நாட்டிலே!	09-05-2013	318

3752. “சேது”வுக்கு முட்டுக்கட்டை! தமிழர் வாழ்வைச் சீரழிக்கும் நடவடிக்கை!	10-5-2013	325
3753. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி; அன்றும் - இன்றும்!	11-5-2013	332
3754. ஈழத்தில் இன்னமும் தொடர்வதா இந்தக் கொடுமை?	12-05-2013	339
3755. தூங்கும் புலியை இடறுகிறார்கள்!	14-5-2013	346
3756. அறிவிப்போடு நிற்குமா அம்மாவின் திட்டங்கள்!	15-05-2013	352
3757. இரண்டாண்டு ஆட்சி; சாதனையா? வேதனையா?	18-5-2013	355
3758. இட ஒதுக்கீட்டுக் கொள்கை முழுமை பெற...	19-5-2013	363
3759. மத்திய அரசின் திட்டம், மாநில அரசால் பாழாகலாமா?	21-5-2013	369
3760. எச்சரிக்கையல்ல; எண்ணிப் பார்ப்பதற்காக!	22-5-2013	374
3761. நிலக்கரி நிறுவனப் பங்குகளை மீண்டும் விற்க முயற்சியா?	26-5-2013	380
3762. உவகை ஊட்டும் ஒகேனக்கல் தொடக்கம்!	27-05-2013	386
3763. அனைத்து உண்மையும் அனைவருக்கும் தெரியுமே!	31-5-2013	392

3706. ஐ.நா.வின் பட்டியலில் இணைவதா? வேண்டாமா?

உடன்பிறப்பே,

தூக்குத் தண்டனை பற்றிய கருத்துகள், ஆதரவாகவும் - நேர் எதிராகவும் கூறப்பட்டு - அந்தத் தண்டனை பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது; இன்று நேற்றல்ல; பல ஆண்டு காலத்திற்கு முன்பு குறிப்பாக வரலாற்றுக் காலத்திலேயே குற்றம் புரிந்தவர்களில் யார் யாருக்கு என்னென்ன குற்றத்திற்கு, என்னென்ன தண்டனை என்பதை வகுத்து வைத்திருந்தார்கள்.

அந்தத் தண்டனைகளை வரிசைப்படுத்தி ஒவ்வொரு தண்டனையையும், ஆய்வு செய்திடும்போது அவை அந்தந்தக் காலத்திற் கேற்றதாகவும், கடுமையான தண்டனைகளாகவும் குற்றம் சாற்றப்பட்டவர்களை, துடிக்க விடாத அல்லது துன்பத்திற்கு உள்ளாக்காத தண்டனைகளாகவும் இருந்தன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

ஒருசில தண்டனைகள் குற்றம் சாற்றப்பட்டவர்களின் உடலை வருத்துவதாகவும், மற்றும் சில தண்டனைகள் அவர்களுடைய உள்ளத்தை வாட வைத்து அவர்கள்தம் உறவினர் முன்னால் அல்லது ஊரார் முன்னால், வெட்கித் தலை குனிய வேண்டிய நிலைக்கு ஆளாகிற அளவுக்கு அவமானம் தரத்தக்க தாகவும் அமைந்தன.

போர்க்களங்களில் தலையைத் துண்டிப்பது, கைகால்களை அறுத்தெறிவது போன்ற ஆயுதத் தாக்குதல்களை அரசர்களே நேர் நின்று நடத்திய நிகழ்ச்சிகளும் வரலாற்று ஏடுகளில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

உலகம் முழுதும் உள்ள எல்லா நாடுகளுக்கும் மன்னிக்க முடியாத பெரும் குற்றங்களில் மரண தண்டனை என்பது பொதுவாக இருந்த தண்டனையாகும்.

சிறைச்சாலையிலே பூட்டி கரங்களிலே மதுக்கிண்ணத்தைத் தருவதைப்போல் விஷக் கிண்ணத்தைத்தந்து, அதில் நஞ்சினை நிரப்பி, "இந்த நாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்குரிய தண்டனையை நிறைவேற்றிடுக" என்று ஏதென்ஸ் நகரத்தில் இருந்த நீதிமன்றத்தில் கட்டளையிடப்பட்டு, அதனையேற்று சாக்ரடீஸ் எனும் தத்துவ ஞானி, அந்த விஷத்தை அருந்தி வீழ்ந்த வரலாறு நாம் படித்ததுதான்! இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், மரண தண்டனையை மகுடபதிகள், விஷத்தைக் கொடுத்தும் நிறைவேற்றினார்கள்; வேல், வாள் போன்ற போர்க் கருவிகளைக் கொண்டும் நிறைவேற்றினார்கள்; யானையின் காலால் தலையை இடரச் சொல்லி, மரண தண்டனைகளை நிறைவேற்றி மகிழ்ந்த மாமன்னர்களும் உண்டு வரலாற்றில்!

அண்மைக் கால உலகயுத்தங்களின் வரலாறுகளில் இரு அணியிலும் எத்தனையோ லட்சம் பேர், கொல்லப்பட்டுப் பிணக் குவியலிலே அந்த நாடுகளின் வெற்றிப்பதாகை விண்முட்ட ஏற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.

அவை, போர்க் களங்களில் வென்ற அணியினர் வீழ்ந்த அணியினருக்கு வழங்கிய மரணப் பரிசு எனலாம்.

கால மாறுதல்களால் - சரித்திர மாற்றங்களால் - வரலாற்று நிகழ்வுகள் அடுக்கடுக்காகத் தோன்றி, தனிப்பட்ட மரண தண்டனைகள் அல்லாமல்; எதிர்ப்பட்ட பகைவர்களின் உயிர்களைச் சூறையாடும் வீர விளையாட்டுகளாக அவை கருதப்பட்டதும் உண்டு.

எதிரெதிரே நின்று ஒருவரையொருவர் வெல்வதும், அல்லது கொல்வதும், மனிதாபிமானத்திற்கு - மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட விரோதச் செயல் என்ற நிலை, அசோகன் நடத்திய கலிங்கப் போர் முடிவுவரை இருந்தது என்பதையும்; அதன் பின்னர் "புத்தம்" பரவிய காரணத்தால் போர்களே கூடாது என்ற புதிய நிலை போதனைகளாக மாறின என்பதையும் மறந்து விட இயலாது. ஒரு போரினால் இரு தரப்பிலே உள்ள நாடு நகரங்கள் அழிவது மாத்திரமல்ல; எதிர்பாராத கொடும் சாவுகளாலும் எதிர்பார்த்த வீர மரணங்களாலும், வரலாற்று ஏடுகளில் செதுக்கப்பட்டுள்ள, மனிதர்களின் பெயர்கள் என்றைக்கும் அழிக்க முடியாதவை

யெனினும், அவர்களும் மரணத்தைச் சந்தித்தவர்கள்தான் என்பதை மறந்து விடுவதற்கில்லை.

கட்டபொம்மனும், பூலித்தேவனும் தூக்கிலிடப்பட்டார்கள். போர் முனையில் அல்ல; போர் முனையில் அவர்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, தூக்கு மேடைகளில் அவர்கள் ஏற நேரிட்டது.

உத்தமர் காந்தியடிகள் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார்.

வீரன் பகத் சிங் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இவர்களும் சரி; இவர்களுக்கு முன்பு நான் குறிப்பிட்ட போர்களில் உயிர்களைப் பறி கொடுத்த மாமன்னர்களாயினும், மாவீரர்களாயினும் சரி - அவர்களும்; மரணத்தில் தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டவர்கள்தான்.

எனவே, மனித சமுதாயத்திற்குப் பொதுவாக அமைகிற மரணம் என்பது, சில நேரங்களில் வெற்றிப் பரிசாகவும், சில நேரங்களில் விரோதிகளால் தரப்படுகின்ற தண்டனையாகவும் ஆகிவிடுகிறது. இந்த நீண்ட விளக்கங்களை - வரலாற்றுச் சான்றுகளை நான் குறிப்பிடுவதற்குக் காரணமே; மனித நேயம் எனும் அளவுகோலால் இவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து, ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும் என்ற காரணத்தினால்தான்!

இந்தப் பின்னணியில் இன்றையதினம் ஒரு கேள்விக்கு நாம் விடை காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மிகப் பயங்கரமான குற்றச்சாட்டுக்கு உரியவர்கள் எனப்படுவோரை, எப்படித் தண்டிப்பது; எவ்விதம் தண்டிப்பது; எந்த வகையில் தண்டிப்பது; என்பது பெரிய பிரச்சினையாக உலகில் உருவெடுத்திருக்கிறது. சில நாடுகளில், இறுதி முடிவுக்கே வந்து விட்டிருக்கிறார்கள். இந்தியாவில் பயங்கரக் குற்றங்களுக்கு - அவை நிரூபிக்கப்படுமானால் - என்ன தண்டனை அளிக்கலாம் என்பதும் இன்னமும் விவாதப் பொருளாகவே இருந்து கொண்டிருக்கிறது.

தண்டனைகள் பலவற்றில் மரண தண்டனை - ஆயுள் தண்டனை - சிறைத் தண்டனை போன்றவை பல நீதிமன்றங்களில் தீர்ப்புகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

அத்தகைய தீர்ப்புகள் வழங்கப்படும்போது, அந்தத் தண்டனைகளின் பட்டியலில் உள்ள மரண தண்டனை மனித

நேயத்திற்குப் பொருத்தமானதா என்பதைப் பல அறிஞர் பெருமக்களும், நீதிமான்களும், ஆய்வு செய்து அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக, குற்றவாளி என்று நீதிமன்றத்தின் முடிவாக இறுதித் தீர்ப்பு பெற்றவருக்கு;

இத்தனை ஆண்டுக் காலச் சிறைவாசம்;

அல்லது சாகும்வரை தூக்குத் தண்டனை;

என்று தீர்ப்பு வழங்கப்படுமேயானால் - குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவர் அல்லது குற்றம் சாற்றப்பெற்ற ஒருவர் அந்தத் தண்டனையை எந்த வகையில் ஏற்றுக்கொள்வது என்பதுதான் இப்போதுள்ள அய்யப்பாடு.

தண்டனை என்பதே ஒருவர் செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டதற்காக அவர் இத்தனை ஆண்டுக் காலம் சிறையிலே கழிக்க வேண்டும் என்று நீதிபதியால் விசாரணைக்குப் பிறகு வழங்கப்படும் தீர்ப்பிலே சொல்லப்படுவதுதான்! மிகக் கொடிய குற்றம் ஒன்றினைச் செய்தவருக்கு, ஆயுள் தண்டனை அல்லது தூக்குத் தண்டனை தரப்படுகிறது. இதிலே எது பெரிய தண்டனை? தூக்குத் தண்டனை! ஆனால் தூக்குத் தண்டனை பெற்றவர், தான் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகின்ற நேரத்தில், அவர் இந்த உலகத்திலிருந்தே விடுவிக்கப்படுகிறார். ஒரு சில மணித் துளிகளில் அவர் செய்த குற்றங்களுக்கெல்லாம் முடிவு காணப்பட்டு விடுகிறது. குற்றம் செய்தவரைப் பொறுத்த வரை அவருக்கு எந்தத் துன்பமும் இல்லை. ஒரேயடியாக இந்த உலகத்தின் துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டு ஓய்வு பெற்று விடுகிறார். அதே நேரத்தில் ஒருவருக்கு ஆயுள் தண்டனை என்றால், எத்தனை ஆண்டுக் காலம் அவர் சிறையிலே இருக்கிறாரோ, அத்தனை ஆண்டுக் காலமும் அவர்; தான் செய்த குற்றங்களை நினைத்து நினைத்து நெஞ்சைப் பிசைந்து வருந்தியாக வேண்டும். இப்போது நினைத்துப் பாருங்கள். ஒருவன் தான் செய்த குற்றத்திற்காக உடனடியாக இந்த உலகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு எந்தத் துயரமும் அடையாமல் விடுதலை பெற்றுச் சென்று விடுவதா? அல்லது பல ஆண்டுக் காலம் அதே குற்றத்திற்காகச் சிறையிலே இருந்து வாடி வதங்குவதா?

தற்போது பேசப்பட்டு வரும் வழக்கிலேகூட வீரப்பனின் நண்பர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வருக்கும் மைசூர் தடா நீதிமன்ற நீதிபதி முதலில் ஆயுள் தண்டனைதான் விதித்திருக்கிறார். ஆனால் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துகொண்ட போதுதான், உச்ச நீதிமன்ற நீதிபதி ஆயுள் தண்டனையை, தூக்குத் தண்டனை என்று மாற்றியிருக்கிறார். மேல்முறையீடு செய்யப்படாமல் இருந்திருக்குமேயானால் அவர்கள் ஆயுள் தண்டனையோடு இருந்திருப்பார்கள்.

அது மாத்திரமல்ல; தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு ஒன்பதாண்டுகள் ஓடிவிட்டன. அந்தத் தண்டனை உடனடியாக அப்போதே நிறைவேற்றப் பட்டிருந்தால் அவர்கள் கடந்த ஒன்பதாண்டுக் காலமாகச் சிறையிலே உழன்று உருக்குலைய வேண்டியிருந்திருக்காது. அவர்கள் ஒன்பதாண்டு காலம் சிறைத் தண்டனையையும் அனுபவித்துவிட்டு, தற்போது மேலும் தூக்குத் தண்டனை என்றால் ஒரே குற்றத்திற்காக இரண்டு கடும் தண்டனைகள் என்று ஆகிவிடாதா என்பதையும்; அதை நமது சட்டம் அனுமதிக்கிறதா என்பதையும்; எண்ணிப் பார்க்க வேண்டும்.

2011 நவம்பர் 21ஆம் தேதியன்று அஜ்மல் கசாப்கான் தூக்கிலிடப்பட்டார். 9-2-2013 அன்று அப்சல் குரு தூக்கிலிடப்பட்டார். இதுபற்றி பலவிதமான சர்ச்சைகள் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், மேலும் நான்கு பேர்களைத் தூக்கிலிட நடவடிக்கை எடுப்பதின் காரணமாக, தூக்குத் தண்டனை என்ற பயங்கரவாதத்திற்கு, ஒரு "தூக்குத் தண்டனை" அளித்திட அதாவது தூக்குத் தண்டனை என்பதையே அழித்தொழித்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற கருத்து மிக வேகமாக எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, ஏற்கனவே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தோழர் தியாகு, பெண்ணாடம் புலவர் கலியபெருமாள் ஆகியோரின் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்ட வரலாறும் நமக்கு உண்டு. அதைப்பற்றி தியாகுவும், புலவர் கலியபெருமாள் அவர்களின் இளைய மகன் சோழநம்பியாரும் தெரிவித்திருக்கிறார்கள்.

2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மன்றம் தூக்குத் தண்டனைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை முன்வைத்தபோது அதை 104 நாடுகள் ஆதரித்துக் கையெழுத்திட்டன; இந்தியா உட்பட 39 நாடுகள்தான் எதிர்த்து வாக்களித்தன; ஐ.நா. தீர்மானத்தையொட்டி உலகின் 90 சதவிகித நாடுகள் தூக்குத் தண்டனையை ரத்து செய்துவிட்டன. அந்தப் பெரும்பான்மை நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஏன் மனிதாபிமான முள்ள பலருடைய கருத்தும் அதுதான்!

அன்புள்ள,

மு.க.

20-2-2013

3707. இவையெல்லாம் பாராட்டாகத் தெரிகிறதா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதாவின் 65வது பிறந்தநாளையொட்டி, சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட 65 திருமண விழாவில் குட்டிக் கதைகளைச் சொன்னதன்னியில்; ஜெயலலிதா அரசியல் பேசியபோது, விவசாயிகளுக்குப் பயிர் இழப்புக்காக ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம்ரூபாய் வழங்கியிருக்கிறோம் என்றும், அதனை எதிர்க்கட்சிகளே பாராட்டியுள்ளன என்றும் பெருமிதத்தோடு, அவர் எடுத்த முடிவை அவரே புகழ்ந்து கூறியுள்ளார்.

ஆனால் உண்மையில், எந்தெந்த எதிர்க் கட்சிகள் எவ்வாறு பாராட்டியுள்ளன தெரியுமா?

தமிழகச் சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் விஜயகாந்த் விடுத்த அறிக்கையில் "சம்பா சாகுபடியை இழந்து பல லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வெறும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு மட்டும் இழப்பீட்டு நிவாரணம் பொருந்தும் என முதல்வர் அறிவித்துள்ளது யானைப் பசிக்குச் சோளப்பொரி போல் உள்ளது. சம்பா சாகுபடியை இழந்து வாடும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரமும், விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்க வேண்டும் என்று தே.மு.தி.க.வினர் வற்புறுத்தி வந்தோம். ஆனால் ஜெயலலிதா இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் என்று அறிவித்துள்ளார். இந்த இழப்பீடு போதுமானதல்ல" என்று கூறியிருக்கிறார்.

அம்மையாருக்கு இது தே.மு.தி.க.வின் பாராட்டாகத் தெரிகிறதா?

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் 9-2-2013 அன்று விடுத்த அறிக்கையில், "ஒரு ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய நிவாரணமாக

25 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ள நிலையில் ஏக்கருக்கு அரசு 15 ஆயிரம் ரூபாய் மட்டும் அளிப்பது போதுமானது இல்லை. 1.75 லட்சம் விவசாயிகளின் 3.61 லட்சம் ஏக்கர் பயிர்களுக்கு மட்டுமே இழப்பீடு தரப்படும் என்பதும் நியாயமானது இல்லை. தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்குத் தலா ஐந்து லட்சம் ரூபாயாவது இழப்பீடு வழங்க வேண்டும்" என்று கூறினார்.

அம்மையாருக்கு இது பா.ம.க.வின் பாராட்டாகத் தெரிகிறதா?

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் விடுத்த அறிக்கையில் முதலில் வறட்சி நிவாரண அறிவிப்புக்கு வரவேற்பு என்று கூறிய போதிலும், "விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. குறுவைச் சாகுபடி பொய்த்துப் போய், சம்பா சாகுபடியும் கருகிப்போன நிலையில், வேலை இல்லாமல் வறுமையில் வாடும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும்" என்று மாநிலச் செயலாளர் தோழர் ராம கிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார்.

இது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அம்மையாருக்கு அளித்திருக்கும் பாராட்டா?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஆளுங் கட்சிக்கு ஆதரவான கட்சி என்ற முறையில் முதல்வரின் அறிவிப்புகளை வரவேற்ற போதிலும், "பயிர்க்கடன்களை ரத்து செய்க" என்ற தலைப்பில் "ஜனசக்தி"யில் எழுதிய தலையங்கத்தில், "விவசாயிகள் தங்களது இடுபொருள் செலவுகள் உயர்ந்துள்ள நிலையில், தங்களுக்கேற்பட்ட பாதிப்பிலிருந்து விடுபட ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரமும், வேலையின்றி வாடும் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும் கோரியிருந்தனர். இயலுமாயின் தமிழக அரசு இக்கோரிக்கைகள் குறித்து மீண்டும் பரிசீலித்திடலாம்" என்று எழுதியிருக்கிறார்கள்.

இது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அம்மையாருக்குத் தந்திருக்கும் நற்சான்றிதழா?

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி செய்தியாளர்களிடம் கூறும்போது, "டெல்டா மாவட்டங்களில் 12லட்சம் ஏக்கர் சம்பா பயிர் சாகுபடி மேற்கொண்டதில் 3 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கருக்கு மட்டும்

தான் இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. இது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. காவிரி டெல்டாவில் நெல் உற்பத்தி செய்ய ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவு ஆகிறது. அதில் பாதி 15 ஆயிரம் ரூபாய் இழப்பீடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இழப்பீடும் 3 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கருக்குத் தான் எனக் கூறப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளுக்கும் 20 ஆயிரம் ரூபாய் வறட்சி நிவாரணம் அறிவிக்க வேண்டுமென்று கோரி பிப்ரவரி மாத இறுதியில் ஒரத்த நாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும்" என்று தெரிவித்திருக்கிறார்.

அ.தி.மு.க. அரசுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் என்ற அறிவிப்புகூட அம்மையாருக்கான பாராட்டுதானா?

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பெ.சண்முகம் விடுத்த அறிக்கையில், "உற்பத்தி பலமடங்கு உயர்ந்துள்ள நிலையில் பயிர்க் காப்பீடு உட்பட ஏக்கருக்கு ரூ. 15,000 என்பது போதுமானதல்ல. இந்த ஆண்டு முழுவதும் வேலையின்றி விவசாயத் தொழிலாளர்கள் கடன் வாங்கியும், வறுமையிலும் வாழ்ந்து கொண்டுள்ள நிலையில், அவர்களுக்கு எவ்வித நிவாரணமும் அறிவிக்காதது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

விவசாயிகளின் ஏமாற்றம் என்பதும் அம்மையார் மனம் மகிழும் பாராட்டுதானா?

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் துரைமாணிக்கம் வெளியிட்ட அறிக்கையில், "50 சதத்திற்கும் மேல் பயிர்கள் பாதிக்கப்பட்ட ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார். இதுபோதுமானதல்ல. தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் குடும்பங்களுக்கு 3 லட்ச ரூபாய் என்று அறிவித்திருப்பதும் போதுமானதல்ல. விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் பற்றிய அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்.

போதுமானதல்ல என்பதும் அம்மையாருக்கு நிறைவளித்திடும் புகழுரைதானா?

ஜெயலலிதா பேரவையில் அறிவித்த நிவாரணங்கள் குறித்து நான் விடுத்த அறிக்கையில்,

"குறுவைப் பயிரையும், சம்பாப் பயிரையும் இழந்து நிற்கும் விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு முதலில் 40 ஆயிரம் ரூபாய் வீதம் நிவாரண உதவி கேட்டு, குறைந்த பட்சம் 25 ஆயிரம் ரூபாயாவது கொடுத்தே ஆக வேண்டுமென்று கோரிக்கைகளைத் தொடர்ந்து வைத்ததுடன், பல்வேறு வகையான போராட்டங்களையும் நடத்தினார்கள். தமிழகத்திலே உள்ள அனைத்து எதிர்க்கட்சி களும் இந்தக் கோரிக்கையை வழிமொழிந்து, வலியுறுத்தின. ஆனால் நிவாரணமாக என்ன அறிவிக்கப்பட்டுள்ளது? 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் பாதித்துள்ள ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளின், 3 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் பயிர்களுக்கு மட்டுமே; ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா படித்திருக்கிறார். அப்படியானால், 50 சதவிகிதத் திற்குக் குறைவாக மகசூல் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கதி என்ன? 50 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட 15 ஆயிரம் ரூபாய் என்பது முழுவதையும் தமிழக அரசே தரப்போகின்ற நிவாரணமா? பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீட்டுத் தொகை ஆகியவை எல்லாம் சேர்ந்ததுதானே! அப்படியானால், தமிழக அரசு நிவாரணத் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு அளிக்கப் போகின்ற தொகைதான் எவ்வளவு? தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தொகை போதவே போதாது என்று விவசாயிகள் எல்லாம் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லாத காரணத்தால், சாகுபடியே செய்யாமல் வாழ்வாதாரத்தை அடியோடு இழந்த பல லட்சம் விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் என்பதும் முதல் அமைச்சரின் அறிக்கையிலே படிக்கப்பட வில்லை. விவசாயிகளின் கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை குறித்து எவ்வித அறிவிப்பும் இல்லை.

தற்கொலை செய்துகொண்டு இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்குப் பத்து இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகை வழங்கிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. மேலும் இறந்த விவசாயிகளின் குடும்பங்களில் தலா ஒருவருக்கு அரசுப் பணி வழங்கிட வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கப் பட்டது. அதிலே இறந்த விவசாயிகளின் குடும்பங்களுக்குத் தலா 3

லட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகையாகும். அந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றும், தற்கொலை செய்து கொண்டு இறந்த அனைத்து விவசாயிகளின் குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்றும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கிட வேண்டுமென்றும் மீண்டும் வலியுறுத்துகிறேன்"

- என்றெல்லாம் விரிவாக எழுதியிருந்தேன். என்னுடைய அறிக்கையையும் தி.மு.க. சார்பில் அம்மையாருக்கு அளிக்கப்பட்ட பாராட்டாகக் கருதுகிறாரா? தமிழகத்தின் முக்கிய எதிர்க் கட்சிகளும், விவசாயிகளின் அமைப்புகளும் ஒரே குரலில், அம்மையார் அறிவித்த நிவாரணம் போதுமானதல்ல; ஏமாற்றமளிக்கிறது; நிறைவளிக்கவில்லை; விவசாயிகளிடையே ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தி இருக்கிறது; என்று ஓங்கி ஒலித்த கருத்துரைகளை யெல்லாம் அப்படியே மறைத்துவிட்டு; ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான பதில் உரையில் முதலமைச்சர் செய்த அறிவிப்புகளை எல்லாம் எதிர்க்கட்சிகள் வரவேற்றிருப்பதாக திருமண விழாவில் முதலமைச்சர் கூறியிருப்பது எத்தகைய உண்மைக்கு மாறான தகவல் என்பதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் பலரும் தெரிவித்த கருத்துக்களை இங்கே தொகுத்துத் தந்துள்ளேன். நீறு பூத்திருக்கும் நெருப்பைப் பட்டுத் துணியால் மூடி மறைக்க முயற்சிக்கிறார் முதலமைச்சர்; எப்படிப்பட்ட முதலமைச்சர் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறார் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்!

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டு, எதிர்க்கட்சியினரும் விவசாயிகளும்தான் அளித்த நிவாரணத்தை ஏற்றுக்கொண்டு பாராட்டுகிறார்கள் என்று முதலமைச்சர் அறிவித்ததற்குப் பிறகு இன்று (21-2-2013) "தினமலர்" நாளேடு "டெல்டாவை விட்டு வெளியேறும் விவசாயத் தொழிலாளர்கள் - எதிர்பார்த்து ஏமாந்ததால் கேரளாவிற்குப் படையெடுப்பு" என்ற தலைப்பின்கீழ் - "அரசிடம் இருந்து வறட்சி நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாந்த டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள், வேலை தேடிக் கேரள மாநிலத்திற்குப் படையெடுத்து வருகின்றனர். அரசிடம் இருந்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு

25 ஆயிரம் ரூபாய்; விவசாயத் தொழிலாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கோரப்பட்டது. இந்த பணத்தை போக்குவரத்து, உணவுச் செலவிற்குப் பயன்படுத்தி, வெளி மாநிலங்களுக்கு வேலைக்குச் செல்லலாம் என விவசாயத் தொழிலாளர்கள் காத்திருந்தனர். ஆனால் விவசாயிகளுக்கு மட்டும் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக முதல்வர் ஜெ.அறிவித்துள்ளார். விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசிடம் இருந்து நிவாரணம் தொடர்பாக எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. இதனால் டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்" என்றெல்லாம் எழுதியுள்ளது.

ஆனால் ஜெயலலிதா தமிழகத்திலே என்ன நிலைமை என்பதே தெரியாமல், "வீடியோ-கான்பரன்சிங்" மூலமாகவே அனைத்தையும் நடத்திக் கொண்டிருப்பதால் ஐந்து லட்சத் திற்கும் மேற்பட்ட விவசாயிகள், ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் இன்னல்களைப் புரிந்து கொள்ளாமல் அனைவரும் பாராட்டுவதாகக் கூறிக் கொண்டிருக்கிறார். அவர் கொஞ்சம் கீழே இறங்கி வந்து நிலைமைகளைப் பார்த்து உண்மைகளைப் புரிந்துகொண்டு, விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் உரிய நிவாரணங்களை அளித்திட வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-2-2013

3708. வென்றவர் சொல்வதெல்லாம் "வேதம் ஆகுமா?"

உடன்பிறப்பே,

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிட்டது பற்றி அதற்காக உச்ச நீதிமன்றத்திற்கும், மத்திய அரசுக்கும் நன்றி கூறி அறிக்கை விடுத்துள்ளேன். காவிரிப் பிரச்சினையில் தி.மு.கழகமும், கழக அரசும் ஆரம்ப காலம் முதலே தொடர்ந்து இடைவிடாது என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டது என்பது பற்றியும் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். ஆனால் இதுபற்றி முதலமைச்சர் ஜெயலலிதா தனது 30 ஆண்டுக் கால அரசியல் வாழ்வில் கிடைத்த மகத்தான வெற்றி என்றும், 22 ஆண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுள்ளது என்றும் செய்தியாளர்களை அழைத்துச் சொல்லியிருப்பதும், அவரது இந்தக் கூற்றினை ஒருசில ஏடுகள் இதற்காகவே முதலமைச்சரைப் பலபடப் பாராட்டியும், கேலிச்சித்திரம் வரைந்தும் இருப்பது பற்றிச் சில விளக்கங்களை அளிப்பதை, காவிரிப் பிரச்சினையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன் என்ற முறையில், என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பாராட்டித் தலையங்கம் எழுதியுள்ள "தினமணி" நாளிதழிலேயே "இந்த நடவடிக்கையை வைத்துக் கொண்டு மட்டும் காவிரியில் இருந்து உடனடியாகத் தண்ணீர் பெற்றுவிட முடியாது. இது தொடர்பாக நிலவும் சட்டப் பிரச்சினைகளுக்கும் நடைமுறைச் சிக்கல்களுக்கும் மத்திய அரசும், உச்ச நீதிமன்றமும் தீர்வு கண்டால்தான் காவிரி நதி நீர்ப் பங்கீட்டு உரிமையைக் கோரும் அடுத்த கட்ட நகர்வைத் தமிழகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மேற்கொள்ள முடியும்" என்று எழுதியிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதே "தினமணி" நாளிதழில் மேலும் சில அய்யப்பாடுகளையும் எழுப்பியுள்ளனர். அதாவது;

1) இறுதித் தீர்ப்பு 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்துக் கர்நாடகமும், தீர்ப்பு தொடர்பாக விளக்கம் கேட்டுத் தமிழகம், புதுச்சேரி, கேரளம் ஆகிய மாநில அரசுகளும் காவிரி நடுவர் மன்றத்தில் முறையிட்டுள்ளன. உச்சநீதி மன்றத்திலும் இது தொடர்பாக வழக்குகள் 2007 ஆம் ஆண்டில் தொடரப்பட்டுள்ளன. அந்த வழக்குகளை உச்ச நீதிமன்றம் ஆரம்பத்திலேயே விசாரித்து நடுவர்மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு ஏன் உத்தரவிடவில்லை?

2) நான்கு மாநில அரசுகளும் நடுவர்மன்றத்திடம் சில விளக்கங்களைக் கேட்டு 2007 ஆம் ஆண்டில் முறையிட்டன. 11-4-2012இல் நடுவர்மன்றத் தலைவர், பதவி விலகிய பிறகு, புதிய தலைவர் நியமிக்கப்படவில்லை. நடுவர்மன்றத்திடம் நான்கு மாநில அரசுகளும் கேட்ட விளக்கங்களுக்கு என்ன பதில்?

3) உச்ச நீதிமன்றம் நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை, பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இறுதிக் கெடு விதித்திருந்தது. அதனால் இந்த வழக்குகளை உச்ச நீதிமன்றமே தொடர்ந்து விசாரிக்குமா? அல்லது காவிரி நடுவர் மன்றமே விசாரிக்குமா?

4) காவிரி நதி நீர் ஒழுங்குமுறை ஆணையம் அமைக்கப்பட வேண்டும். மத்திய அரசு அதை எப்போது அமைக்கும்?

இதுபோன்ற கேள்விகளை “தினமணி” 21-2-2013 அன்று எழுப்பியிருக்கின்றது. இதையும் நாம் மனதிலே கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்; “தினமணி” எழுப்பியிருக்கும் கேள்விகளை அலட்சியப்படுத்துவதற்கில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றையதினம் அளித்த பேட்டியையொட்டியும் நான் சில விளக்கங்களை அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். முதலில் அவர் 1991 ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் தேதி அன்று முதல் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதாகவும், அதற்கடுத்த நாளான 25-6-1991 அன்று

நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். இதிலிருந்தே, நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பு ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பிருந்த தி.மு. கழக ஆட்சியினரின் இடைவிடா முயற்சியினால்தான் வெளிவந்தது என்பதை ஜெயலலிதாவே ஏற்றுக்கொள்கிறார் என்றுதானே பொருள்!

காவேரி நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுவதை தனக்கு முப்பது ஆண்டு காலத்தில் கிடைத்த மகத்தான வெற்றி என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் அந்த நடுவர்மன்றம் என்ற ஒரு அமைப்பு உருவாவதற்கும், அந்த அமைப்பு இடைக்காலத் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு என்றெல்லாம் அறிவித்ததற்கும், இடைக்காலத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் உண்மையாகப் பாடுபட்டது யார் என்பதை, பத்திரிகைகள் மறைத்தாலும், நடுநிலையாளர்கள் ஒருசிலராவது எண்ணிப்பார்க்க மாட்டார்களா?

5-2-2007 அன்று நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வெளியானதற்கு மறுநாள் 6-2-2007 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "கருணாநிதியின் தொடர் துரோகச் செயலால் தான் காவேரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பு, தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது; இதற்கு தார்மீகப் பொறுப்பேற்று மைனாரிட்டி தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்றே சொன்னார்.

அந்தப் பாதகமான தீர்ப்பு, தற்போது மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதைத்தான் முப்பது ஆண்டு காலத்தில் கிடைத்த மகத்தான வெற்றி என்று ஜெயலலிதா சொல்கிறார். அன்று "பாதகமான தீர்ப்பு" என்று சொன்ன அதே நாவால், தற்போது "மகத்தான வெற்றி" என்று சொல்வது இரட்டை நாக்கா? இரட்டை நிலையா? தமிழக மக்களை ஏமாற்றுவதற்காகத் தரித்திடும் கபட வேடமா?

"நடுவர்மன்றத் தீர்ப்பு வந்தால்கூட, கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால்தான் காவேரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும். கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால்தான், நடுவர் மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும்" என்று 21-3-1991இல் கூறிய ஜெயலலிதா; நடுவர்மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை

வழங்கிய பிறகும், "நடுவர்மன்றம் தீர்ப்பு வழங்கினால்கூட, அதை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டாயம்; கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவுக்குக் கிடையாது" என்று கூறியவர்தான் தற்போது மகத்தான வெற்றி தனக்குக் கிடைத்திருப்பதாகக் கூறிக் கொள்கிறார் என்றால்; மக்களெல்லாம் மறதிக்குப் பேர் போனவர்கள் என்ற வழக்கமான அவரது எண்ணத்தால்தானே!

முதலமைச்சர் ஜெயலலிதா 20ஆம் தேதி அளித்த பேட்டியில், "எனது உத்தரவின்படி திரும்பத் திரும்ப சுப்ரீம் கோர்ட்டை அணுகி, பல்வேறு வழக்குகளைத் தமிழக அரசு தாக்கல் செய்து, அதனுடைய விளைவாகத்தான் காவிரி ஆணையம் மற்றும் காவிரி கண்காணிப்புக் குழு ஆகியவை அமைக்கப்பட்டன. இதற்கு முழுக் காரணம் எனது முயற்சிகளும், எனது அரசின் முயற்சிகளும்தான்" என்று கூறியிருக்கிறார். இதைப் படித்து சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை. காவிரிப் பிரச்சினை பற்றிய நிகழ்வுகளைத் தொடர்ச்சியாகக் கண்டு வருபவர்கள் அதிர்ச்சி அடையமாட்டார்களா? ஜெயலலிதா சொல்லியிருப்பது உண்மையா?

7-8-1998 அன்றுதான் தி.மு.கழக ஆட்சியிலே தான் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் முன்னிலையிலே டெல்லியில் ஒன்பது மணி நேரம் பேச்சு வார்த்தை நடைபெற்று, மத்திய அமைச்சர்களும், நான்கு மாநில முதல்வர்களும் கலந்து பேசி அதன் பின்னர்தான் காவிரி ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தையின் போது முதன் முதலாக கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்தான் காவிரி நதி நீர் ஆணையம், காவிரி கண்காணிப்புக் குழு ஆகியவற்றை அமைப்பது என்பதாகும். அதன்படி 11-8-1998 அன்று காவிரி நதி நீர் ஆணையமும், கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டன. ஆனால் முதல் அமைச்சர் ஜெயலலிதா நேற்றைய பேட்டியிலே அவர் பல்வேறு வழக்குகளை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததின் காரணமாகத்தான் இவை அமைக்கப்பட்டன என்று கொஞ்சமும் கூசாமல் உண்மைக்கு மாறாகச் சொல்லியிருக்கிறார். அதையும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் வெளியிடத்தான் செய்துள்ளன.

அது மாத்திரமல்ல; காவேரி ஆணையம் அமைக்கப்பட்ட பிறகு, 2-4-2002 அன்று சட்டப் பேரவையில் அ.தி.மு.க. ஆட்சிக்

காலத்தில், ஜெயலலிதா கூறும்போது, "செயல்படாத ஆணையம் காவேரி ஆணையம். அந்த ஆணையத்தை நாங்கள் ஏற்காமல், பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம். மத்திய அரசு சொன்னதை ஏற்றுக் கொண்டு காவேரிப் பிரச்சினையில் துரோகம் விளைவித்தது தி.மு.க. அரசுதான்" என்று வசை பாடினார்.

காவேரி ஆணையத்தை "பல் இல்லாத ஆணையம்", "செயல்படாத ஆணையம்" என்றெல்லாம் குறிப்பிட்ட ஜெயலலிதா, அதே 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதியன்று டெல்லியிலே நடைபெற்ற காவேரி ஆணையக் கூட்டத்திலே அவரே கலந்துகொண்டார்; ஆனால் கூட்டம் நிறைவடையும்வரை கலந்துகொள்ளாமல், பாதியிலேயே வெளிநடப்புச் செய்வதாகக் கூறிவிட்டு வெளியே வந்துவிட்டார்.

மீண்டும் 29-11-2002 அன்று பிரதமர் தலைமையில் காவேரி ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. கடைசி நிமிடம் வரை அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதாகக் கூறிய தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, பிறகு தன் பயணத்தையே ரத்து செய்துவிட்டார்.

காவேரி ஆணையத்தின் தலைவரான பிரதமர் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, உச்ச நீதிமன்றம் அவ்வாறு ஜெயலலிதா கூறியதைக் கடுமையாகக் கண்டித்து, முதலமைச்சர் ஜெயலலிதா அதற்காக வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்றே அறிவித்து, அதன்படி வருத்தம் தெரிவித்த ஜெயலலிதாதான், ஆணையம் வருவதற்கே தான்தான் காரணம் என்று உண்மைக்குப் புறம்பான செய்தியை ஓங்கி அடித்துச் சொல்கிறோமே என்ற நெருடல் எதுவுமின்றிச் செய்தியாளர்களிடம் சொல்லியிருக்கிறார்.

20ஆம் தேதிய பேட்டியில், காவேரி ஆணையக் கூட்டத்தைக் கடந்த ஒன்பதாண்டு காலமாகக் கூட்டவே மத்திய அரசு விரும்பவில்லை என்று கூறியிருக்கிறார். கடந்த ஒன்பதாண்டுகளில் கூட்டப்படவில்லை என்றாலும், 7-10-1998 முதல் 6-9-2001 வரையில் கண்காணிப்புக்குழு ஒன்பது முறைகள் கூட்டப்பட்டிருக்கின்றன. 21-6-2002 அன்று அ.தி.மு.க. அரசின் சார்பில் விடுத்த அறிக்கையில், காவிரி நதி ஆணையம் 28-10-1998, 14-7-2000 மற்றும் 10-10-2001 ஆகிய நாட்களில் மூன்று முறை மட்டுமே கூடியது. காவிரி கண்காணிப்புக்குழு 12 முறை கூடியது என்று சொல்லப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் 21-6-2002 அன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் காவேரிநதி ஆணையத்தின் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுத்து அறிவித்து விட்டார்கள். காவேரி ஆணையத்தைக் கூட்ட வில்லை என்று குறைபடுகிற ஜெயலலிதா 21-9-1998 அன்று ஆங்கிலத்தில் விடுத்த அறிக்கையில், "The Cauvery River Authority headed by the Prime Minister is a very big fraud perpetrated on the farmers of the Cauvery Delta in Tamil Nadu. This Authority headed by the Prime Minister has no such authority or power to order or implement anything regarding the release of Cauvery Water. I categorically state that the new Authority headed by the Prime Minister will not benefit Tamil Nadu even by an iota" என்று பிரதமர் தலைமையிலான ஆணையத்தை இழிவுபடுத்திச் சொன்னார்.

முதலமைச்சர் 20ஆம்தேதி அளித்த பேட்டியில், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த மத்திய அரசு எந்தவிதமான ஏற்பாட்டையும் செய்யவில்லை என்றும், அதற்காக 1993ஆம் ஆண்டு சாகும்வரை தான் உண்ணாவிரதம் இருந்ததாகவும், அப்போது மத்திய அமைச்சர் சுக்லா அவர்கள் சந்தித்து, காவிரி நடுவர் மன்றத்தின் இடைக் கால ஆணையைச் செயல்படுத்த மத்திய அரசு தேவையான குழுக்களை அமைக்கும் என்று உத்தரவாதம் அளித்த பிறகுதான் உண்ணா விரதத்தைக் கை விட்டதாகவும் சொல்லியிருக்கிறார்.

ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது 9-6-1992 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு.சுக்லா அவர்கள் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நடை முறைப்படுத்துவது பற்றித் தமிழக முதல் அமைச்சருக்கு ஒப்புதல் வேண்டிக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்திற்கு ஒப்புதல் அளித்து 6 மாதங்கள் கழித்துத்தான், அதாவது 14-12-1992 அன்று ஜெயலலிதா வரைவுப் பதிலிலே கையெழுத்திடுகிறார். அந்தக் கடிதம் தட்டச்சு செய்யப்பட்டு முதலமைச்சர் கையெழுத்திட்ட தேதி என்ன தெரியுமா? 30-3-1993. காவிரிப் பிரச்சினையில் எந்த அளவிற்கு அம்மையாருக்கு அக்கறை என்பதற்கு இந்த ஒரு சான்று போதாதா? அவர்தான் தற்போது நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த தான்தான் பாடுபட்டதாகச் சொல்கிறார். 22 ஆண்டுக் காலப் போராட்டத்திற்குக் கிடைத்த

வெற்றி என்கிறார். நம்புகிறவர்கள் இருந்தால், ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் எதை வேண்டுமென்றாலும் சொல்லலாம் அல்லவா?

ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்தது பற்றியும் கூறியிருக்கிறார். 18-7-1993 அன்று குழுவினை ஏன் அமைக்கவில்லை என்று கேட்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாக ஜெயலலிதா அறிவித்தார். கர்நாடக முதல்வருக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்கப் பிரதமர் கட்டளையிட்டால் தான் உண்ணா விரதத்தை நிறுத்துவேன் என்றார். ஆனால் இவரைச் சமாதானப்படுத்த வந்த மத்திய அமைச்சர் சுக்லா, அதிகாரிகளைக் கொண்டு இரண்டு குழுக்கள் அமைக்கப்படும் என்று கூறியதைத் தொடர்ந்து, அதுவே வெற்றி, வெற்றி என்று கூறி உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

நடுவர் மன்ற இடைக்கால ஆணை 1991இல் பிறப்பிக்கப்பட்ட பிறகு 1996 வரை ஜெயலலிதா தான் முதல்வராக இருந்தார். ஆனால் ஒரு ஆண்டு கூட, இடைக்கால உத்தரவுப்படி 205 டி.எம்.சி., தண்ணீரைப் பெற்றுத் தரவில்லை. ஆனால் 1996க்குப் பிறகு தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர்தான், 1998இல் ஒப்பந்தம் ஏற்பட்டு, கர்நாடகமே முதல் முறையாக நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை ஏற்றுக்கொண்டு 205 டி.எம்.சி., தண்ணீர் வழங்க ஒப்புக்கொண்டது. காவிரி நதிநீர் ஆணையத்தையும், கண்காணிப்புக் குழுவையும் அமைக்கவும் கர்நாடகா ஒப்புக் கொண்டதும் அப்போதுதான். 2007 ஆம் ஆண்டு நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பும் கழக ஆட்சியிலேதான் வந்தது. எனவே ஜெயலலிதா ஆட்சியில் காவிரிப் பிரச்சினையில் எந்த முக்கிய முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

7-11-2003 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் காவிரிப் பிரச்சினை குறித்துப் பேசும்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா என்ன சொன்னார்? "அடுத்த சட்டமன்றம் கூடும்போது, கர்நாடக அரசைக் கலைக்க வேண்டும் என்பதற்கான தீர்மானத்தை நானே கொண்டு வருவேன். மீண்டும் ஜனவரி மாதம் சட்டமன்றம் கூடுகிறது. அதற்குள் கர்நாடக அரசு நமக்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரைத் திறந்து விடவில்லை என்றால் அப்போது அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான்

சொன்னபடி தீர்மானம் கொண்டு வரப்படும்" என்றார். ஒரு முதல் அமைச்சர் சட்டப் பேரவையிலே பேசியது இது. என்னவாயிற்று?

"பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே" என்ற தமிழ்ப் பாடலைக் கேட்ட தமிழ் நாட்டு மக்கள், "பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து, பொய்யையே பேட்டியாக அளிக்கும் முதல் அமைச்சரைப்" பெற்றிருப்பதைப் பற்றிப் பெரும்பேறு ஆயிற்றே என்று பெருமைப்படத் தான் வேண்டும். ஆனால் பொய்யையே சொல்லி நலம் பெற்றவர்களும் இல்லை; மெய்யைச் சொல்லிக் கெட்டவர்களும் இல்லை என்பதைத் தமிழ்நாடு ஒரு நாள் புரிந்துகொண்டே தீரும்! வென்றவர் சொல்வதெல்லாம் "வேதம்" ஆகுமா?

அன்புள்ள,

மு.க.

23-2-2013

3709. புரிந்துகொள்வதுதான் எப்போது?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா பெயரால் 21-2-2013 அன்று ஏடுகளுக்குத் தரப்பட்ட அறிக்கையில், "இந்த ஆண்டு ஜூலைத் திங்களில் தமிழகத்தில் நடப்பதாக இருந்த இருபதாவது ஆசிய தடகளப் போட்டிகளில் இலங்கையும் பங்கேற்கும் என்பதால் தமிழக அரசினால் நடத்தப்படமாட்டாது என்றும்; அதற்கு முக்கிய காரணம், இலங்கை அரசு இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிராகத் தொடர்ந்து செயல்பட்டு வருவதுதான் என்றும்; இலங்கை வீரர்கள் போட்டிகளில் பங்கேற்கக் கூடாது என்ற தமிழக அரசின் கடிதத்திற்குத் தடகளக் கழகத்திடமிருந்து எவ்வித பதிலும் வராததும் ஒரு காரணம் என்றும்;" தெரிவித்திருக்கிறார்.

தமிழகச் சட்டப்பேரவையில் 10-5-2012 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின் கீழ் அறிக்கை படித்தபோது, "ஆசிய தடகளப் போட்டிகளை 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில் தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் நடத்திட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன். இந்தப் போட்டிகளில் 44 நாடுகளைச் சார்ந்த தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று மகிழ்ச்சியுடன் அறிவித்து, அது அனைத்து நாளேடுகளிலும் "புரட்சித் தலைவி அம்மா அறிவிப்பு" என்று கொட்டை எழுத்துக்களில் வெளிவந்தது.

சட்டப்பேரவையில் கடந்த மே திங்களில் ஜெயலலிதா செய்த அறிவிப்பினை, இந்தப் பிப்ரவரித் திங்களில், அதே ஜெயலலிதா ரத்து செய்திருக்கிறார். மே திங்களில் முதல் அமைச்சர் இந்த அறிவிப்பினைச் செய்தபோது, இலங்கை விளையாட்டு வீரர்கள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்வார்கள் என்பது முதல் அமைச்சருக்குத் தெரியாதா? அவரே 44 நாடுகளைச்

சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வார்கள் என்று அறிவித்திருக்கிறார். அந்த நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதை அப்போது அவர் அறிந்திருக்க வில்லையா? அம்மையார் முதலில் அறிவித்தபோது இலங்கை அரசு இலங்கை வாழ் தமிழர்களுக்கெல்லாம் நன்மைகளைச் செய்து, அதற்குப் பிறகு இப்போதுதான் கொடுமைகளைச் செய்யத் தொடங்கிவிட்டதா? முதல் அமைச்சர் நினைத்தால் தடகளப் போட்டிகளை நடத்துவதாக அறிவிப்பார்; நினைப்பு மாறினால் அதை ரத்து செய்து விடுவாரா?

மேலும் முதலமைச்சர் தனது அறிக்கையில் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை இலங்கை ராணுவம் கொலை செய்தது பற்றியும் குறிப்பிட்டு, "அது மன்னிக்க முடியாத மாபெரும் போர்க் குற்றம்" என்று கூறியிருக்கிறார். ஆனால் இதே ஜெயலலிதா, பாலச்சந்திரனின் தந்தை வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றி, 16-4-2002 அன்று அ.தி.மு.க. ஆட்சியிலே, தமிழகச் சட்டப்பேரவையிலே நிறைவேற்றிய தீர்மானம் என்ன?

- இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப்பேரவை வற்புறுத்துகிறது.
- தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சார்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்று மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது.
- இந்தியாவின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும், இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும், இந்திய மண்ணில் காலூன்றுவது ஒருபோதும் ஏற்கப்பட மாட்டாது; அனுமதிக்கப்பட மாட்டாது.
- பிரபாகரனை இந்தியாவிற்குக் கொண்டு வருவதற்கு ஸ்ரீலங்கா அரசோடு சட்டப்படியாகவும், தூதரக நடைமுறைப்படியும், அனைத்து விதமான முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என்றும்,

பிரபாகரனை அவர் புரிந்த குற்றங்களுக்காக இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தில் உரிய விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்றும் தமிழகச் சட்டமன்றப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

- ஸ்ரீலங்கா அரசினால் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்த இயல வில்லை என்றால்; ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறைப் பிடிப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்றும் மத்திய அரசைத் தமிழகச் சட்ட மன்றப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்; சாட்சாத் இதே ஜெயலலிதாதான்! அன்றைக்குப் பிரபாகரனுக்கு எதிராக இப்படியெல்லாம் வீராவேசத்தோடும், ஆத்திரத்தோடும் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு; இன்றைக்கு அதே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகனைக் கொலை செய்ததற்காகக் கண்ணீர் வடிக்கிறார் என்றால், "கேழ்வரகில் நெய் வடிகிறது!" என்று தானே கூறத் தோன்றும்!

அதே தீர்மானத்தில், இந்திய ராணுவத்தையே இலங்கை அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறைப் பிடிக்க வேண்டுமென்று முன்மொழிந்தவர், நேற்றைய தினம் விடுத்த அறிக்கையில், "இலங்கை ராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாடு உட்பட இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக் கூடாது" என்று இந்தியப் பிரதமருக்கு பல கடிதங்கள் எழுதியதாகவும், அவை அனைத்தும் "செவிடன் காதில் ஊதிய சங்கு" போல் கிடப்பில் போடப்பட்டது என்றும் சொல்லியிருக்கிறார் என்றால், எப்படிப் பட்ட இரட்டை வேடத்தை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முதலமைச்சர் ஜெயலலிதா போடுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா?

16-4-2002 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் ஜெயலலிதா பேசும்போது "நான் (ஜெயலலிதா) தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போதெல்லாம் இந்திய அரசாங்கத்தை ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்புகொண்டு பயங்கரவாத அமைப்பான விடுதலைப்

புலிகளின் தலைவரான பிரபாகரனை ஸ்ரீலங்கா நாட்டில் இருந்து இங்கு கொண்டு வந்து, நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டது, பேரவை அவைக் குறிப்பிலே இன்றளவும் உள்ளதே! அன்று விடுதலைப் புலிகளின் "ஜென்ம விரோதி"யைப் போல வெளி உலகுக்குக் காட்டிக்கொண்ட அதே ஜெய லலிதாதான்; இன்றைக்கு இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பதைப் போலப் பேசுகிறார், அறிக்கை விடுகிறார். அதற்கு "ஜால்ரா" போடவும் ஆட்கள் இருக்கிறார்களே?

அது மாத்திரமல்ல; ஈழத் தமிழர்களை இலங்கை ராணுவம் கொன்று குவித்தபோது இதே ஜெயலலிதா என்ன சொன்னார் தெரியுமா?

17-1-2009 அன்று அவர் விடுத்த அறிக்கையில், "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான். இலங்கையில் இப்போது என்ன நடக்கிறதென்றால், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவிடாமல், விடுதலைப் புலிகள் அவர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு, வலுக்கட்டாயமாக ராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்று விடுதலைப் புலிகளைப் "பயங்கரவாதிகளைப் போல" உருவகப்படுத்தி, அவர்கள் மீது பழியைப் போட்டவர்தான் தற்போது அதே விடுதலைப் புலிகளுக்கு, இலங்கை ராஜபக்ஷே அரசை எதிர்ப்பதைப் போலவும், ஈழத்தமிழர்களை ஆதரிப்பதைப் போலவும் காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்.

மேலும் கழகம் ஆட்சியில் இருந்தபோது, இலங்கையில் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்து, போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியபோது, ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட (14-10-2008) தீர்மானத்தைப் பார்த்தால், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம் தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது. இலங்கையில் தற்போது நடைபெறும் உள் நாட்டுப்

போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை என்பதை அய்ந்து முறை முதலமைச்சரான கருணாநிதி புரிந்து கொள்ளாதது விந்தையாக உள்ளது. இலங்கை உள்நாட்டு விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டால், பின்னர் நம் நாட்டு உள் விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அது இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்பதாக அமையும். அடுத்த நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளாது" என்றே மத்திய அரசுக்கு அப்போது வக்காலத்து வாங்கினார்.

1997ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது விடுதலைப் புலிகளை ஆதரித்தோம் என்பதற்காக, ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க கருணாநிதி முயற்சி செய்கிறார். விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மீண்டும் தலைதூக்கி விட்டார்கள்" என்று விடுதலைப் புலிகள் இந்தியாவின் எதிரிகள் என்பதைப் போலச் சொன்னவர் என்பதை மறக்க முடியுமா? அந்த விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரனின் மகன் மறைவுக்காகத்தான் ஜெயலலிதா கண்ணீர் வடிக்கிறாராம்!

ஆனால் ஜெயலலிதாவே கண்ணீர் வடிக்கின்ற அளவிற்கு இலங்கையில் நிலைமைகள் முற்றிய போதிலும்; வாழ்வாதாரத்தை இழந்து - வாழ்வுரிமைகளைப் பறிகொடுத்த ஈழத் தமிழர்களின் வரலாறு காணாத தொடர் இன்னல்களை, இந்திய அரசு இன்னமும் முழுமையாகப் புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை. குறிப்பாக நேற்றைய தினம் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு பிரணாப் முகர்ஜி அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கூடப் பூசி மெழுகத்தான் பார்த்திருக்கிறார்கள். அதிலே, "இலங்கையுடனான உறவு தொடர்ந்து மேம்பட்டு வருகிறது; அங்கு இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் குடியேற்றம் செய்வது, புனர் வாழ்வு அளிப்பது போன்ற நடவடிக்கைகளை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு அமைதியான கவுரவமான சம அந்தஸ்துடன் கூடிய வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதில், இந்தியா உறுதியாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது" என்று கூறப்பட்டிருப்பதனைத்தும் வெறும் சொற்றொடர்களே தவிர, தமிழர்களின் இதய வேதனையை எதிரொலிக்கும் கருத்துகளாக இல்லை.

இலங்கை அதிபர் ராஜபக்ஷே அவர்கள் ஈழத் தமிழர்கள்பால் அக்கறை கொண்டவரைப் போல இந்திய அரசிடம் காட்டிக் கொள்வதும், இந்திய அரசிடம் இருந்து தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்வதும், அதே நேரத்தில் அந்த உதவிகளை ஈழத் தமிழர்களுக்குப் பயன்படுத்தாமல், சிங்களவர்களுக்கே பயன் படுத்துவதும், தமிழ்ப் பெயரிலே உள்ள ஊர்களை எல்லாம் சிங்களப் பெயர்களாக மாற்றுவதும், தமிழர்க்குரிய கோயில்களை எல்லாம் இடித்துத் தரைமட்ட மாக்குவதும், தமிழர்களின் நிலம், வீடு மற்றும் பாரம்பரிய உடைமைகளையெல்லாம் பறித்துக் கொள்ளும் சிங்களவர் ஆக்கிரமிப்பையும் - வெறித்தனமான சிங்களமயமாக்கலையும் ஊக்குவிப்பதும் போன்ற இனவெறிச் செயல்கள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் உள்ளன.

பெரிய புராணத்தில் மெய்ப்பொருள் நாயனார் பற்றி ஒரு கதை உண்டு. அதில் மெய்ப்பொருள் நாயனாரைக் கொலை செய்வதற்காக முத்தநாதன் என்ற குறுநில மன்னன் வருவதை, சேக்கிழார் வர்ணிக்கும்போது,

“மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைகரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுள்
கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்தநாதன்”

என்று பொருத்தமாகக் குறிப்பிடுகிறார்.

அதாவது மெய்ப்பொருள் நாயனார் எனும் மன்னரைக் கொலை செய்ய வேண்டுமென்று சதித் திட்டம் தீட்டிய முத்தநாதன் என்ற குறுநில மன்னன், உடம்பெல்லாம் திருநீறு பூசிக் கொண்டு, முனிவர்களைப் போல முடியை இழுத்து மாற்றிக் கட்டிக்கொண்டு, தவ வேடமணிந்து கையில் புத்தகங்களும், புத்தகங்களுக்கு இடையே கத்தியையும் வைத்துக்கொண்டு, அரண்மனைக்குள் நுழைகிறான்; அப்படி நுழையும்போது மனத்தில் கொலை செய்ய வேண்டுமென்ற தீய எண்ணத்துடன் நுழைந்தான் என்பதைச் சேக்கிழார், விளக்கு எரியும்போது திரியின் நுனியில் ஒளியும், திரியின் அடியில் கரியும் இருப்பதைப் போல வெளியிலே தவ வேடமும், உள்ளே கொலை செய்யும் கெட்ட நோக்கமும் கொண்டு நுழைந்தான் என்கிறார்.

போரில் எதிர்த்து நின்று வெல்ல முடியாது என்ற நிலையில், தவ முனிவர் வேடமணிந்து ஏமாற்றிக் கொல்ல முற்பட்ட முத்தநாதனைப் போல, சிங்கள அதிபர் ராஜபக்ஷே அவர்கள் இந்திய அரசுக்கு மிகவும் நெருங்கிய நண்பராக நடித்து, தனக்குத் தேவையானதையெல்லாம் சாதித்துக்கொண்டு; அதே நேரத்தில் ஈழத் தமிழர்களை ஈவிரக்கமின்றி வேட்டையாடிக் கொண்டிருக்கிறார். மனித நேயத்திற்கு எதிரான - மனித உரிமைகளுக்குப் புறம்பான அவரது கொடுங்கோன்மைச் செயல்பாடுகளை உலக நாடுகள் எல்லாம் புரிந்துகொண்டு "ராஜபக்ஷே ஒரு சர்வதேசப் போர்க் குற்றவாளி" என்று கடுமையாகக் கண்டிக்கவும் தண்டிக்கவும் முற்படுகின்ற வேளையில், இந்திய அரசு மட்டும் அவரைப் பற்றிய உண்மை விகாரங்களை இன்னமும் புரிந்து கொள்ளாமல், "இலங்கையுடனான உறவு மேம்பட்டு வருகிறது" என்று குடியரசுத் தலைவரின் உரையிலே குறிப்பிட்டிருப்பது ஏன் என்று புரியவில்லை. உலக நாடுகள் எல்லாம் சர்வாதிகாரச் சதிகாரரை உணர்ந்துள்ள சூழலில், நெஞ்சில் நஞ்சும் முகத்தில் நட்பு வேடமும் பூண்டுள்ள, இலங்கையின் "மைபொதி விளக்கை" மத்திய அரசு எப்போதுதான் புரிந்துகொள்ளுமோ?

அன்புள்ள,

மு.க.

24-2-2013

3710. தமிழகத்தை வளமாக்கும் திட்டத்துக்குத் தடை கோருவதா?

உடன்பிறப்பே,

இந்திய உச்ச நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியன்று சேது சமுத்திரம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இடைக்காலத் தடை விதித்ததோடு, மாற்றுப்பாதை பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று மத்திய அரசை அறிவுறுத்தியது. அதன்படி 20.7.2008 அன்று டாக்டர் ஆர்.கே. பச்சௌரி தலைமையில் வல்லுநர் குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்தது. வல்லுநர் குழு 12-2-2012 அன்று தனது அறிக்கையை மத்திய அரசுக்கு வழங்கியது.

11 மாதங்கள் கழித்து இப்போது மத்திய அரசு பச்சௌரி குழு வழங்கியுள்ள அறிக்கையின் மீது தனது கருத்துக்களைத் தெரிவித்து, உச்சநீதிமன்றத்தில் 23-2-2013 அன்று பதில் ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளது. அந்தப் பதிலில்,

ஆதாம் பாலம் வழியாக மட்டுமே சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றும், மாற்றுப் பாதையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்றும் பிரபல சுற்றுச்சூழல் நிபுணர் ஆர்.கே.பச்சௌரி தலைமையிலான குழு அறிக்கை சமர்பித்துள்ளதாக உச்ச நீதிமன்றத்திடம் மத்திய அரசு தெரி வித்துள்ளது.

பச்சௌரி குழுவின் அறிக்கையை உச்ச நீதிமன்றத்திடம் மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் **ரோகின்டன்** நாரிமன் தாக்கல் செய்தார்.

அதில், சேது சமுத்திர திட்டத்தைச் செயல்படுத்த மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுப்பது பொருளாதார ரீதியாகவும்,

பூகோள ரீதியாகவும் சாத்தியமற்றது என்று கூறப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பச்சௌரி கமிட்டியின் அறிக்கையை மத்திய அமைச்சரவை இன்னும் ஆராயவில்லை என்பதால், இதன் மீது முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இந்தப் பதிலைப் பற்றி பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் திரு. ரவி சங்கர் பிரசாத் என்பவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "சேது சமுத்திரத் திட்டத்திற்காக எந்தவொரு சூழ்நிலையிலும் ராமர் பாலத்தை அழிக்கும் முடிவினை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று தெரிவித்திருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். மற்றும் பல்வேறு இந்து மத அமைப்புக்களும், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசும், பா.ஜ.க.வைப் பின்பற்றி இதே கருத்தைத்தான் உச்ச நீதிமன்றத்திலே வலியுறுத்தி இருக்கின்றது.

8.5.2002 அன்றே நான் அன்றைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலேயே சேது சமுத்திரத் திட்டம் பற்றிய விவரங்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன.

23.7.1967 அன்று சேது சமுத்திரத்தின் ஒரு பிரிவாக உள்ள தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றக் கோரி அறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சி நாளை அறிவித்தார்.

இத்திட்டம் உலகளவில் உள்ள சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்று சிறப்பினைப் பெறும் என்பதை அறிந்து இத்திட்டத்தை ஆராயப் பல குழுக்கள் அமைக்கப்பட்டும் நீண்ட நாட்களாகக் கிடப்பிலே போடப்பட்டது. மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமைந்ததும், சேது சமுத்திரத் திட்டம் பற்றிய சாத்தியக் கூற்றினை ஆராய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சேது சமுத்திரக் கால்வாய் அமைய வேண்டிய வழித்தடம் மற்றும் அதற்கான விவரங்கள் பா.ஜ.க. பிரதமரான திரு. வாஜ்பாய் அவர்கள் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசினால் பரிசீலிக்கப்பட்டு "ஆறாவது எண் பாதை" (ஆடம்ஸ் பாலம் அதாவது பாஜக தற்போது ஏற்க முடியாது என்று

கூறுகின்ற ராமர் பாலம்) முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசால் எந்தப் பாதையில் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று ஒப்புதல் அளிக்கப்பட்டதை மறந்து இன்றைக்கு அது ராமர் பாலம் உள்ள இடம் என்றும், அங்கே திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்றும் பா.ஜ.க. வினர் தற்போது கூறுவது எத்தகைய முரண்பாடு என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

பா.ஜ.க. மட்டுமல்ல; இங்கே தமிழகத்தில் ஆளுகின்ற அ.தி.மு.க. வின் சார்பில் 2001 தேர்தல் அறிக்கையில்;

"இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாகக் கிழக்கு நோக்கிக் கப்பல்கள் செல்ல வேண்டுமானால், இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக அமைவதுதான், சேது சமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி ராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள் மற்றும் பாறைகளை அகற்றி ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பது சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்"

என்று ஆடம்ஸ் பாலம் அமைந்துள்ள பகுதியில், "ராமர் பாலம்" என்று இப்போது சொல்கிறார்களே, அதே இடத்தில் அங்கே இருக்கும் மணல் மேடுகள், பாறைகள் ஆகியவற்றை அகற்றிவிட்டுக் கால்வாய் அமைப்பதுதான் தலையாய நோக்கம் என்று சொன்னவர்கள், இன்று ராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டுமென்று சொன்னால் அது எத்தகைய முரண்பாடு என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். தி.மு. கழகத்தின் முயற்சியினால் இந்தத் திட்டம் வந்துவிடக் கூடாது என்ற உள்நோக்கம் தானே காரணம்?

தேர்தல் அறிக்கையில் சொன்னது மாத்திர மல்லாமல், அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா 26.6.2005 அன்று விடுத்த நீண்ட அறிக்கை ஒன்றில்,

"என்னுடைய வற்புறுத்தலின் பேரில்தான் 1998ஆம் ஆண்டில் இத்திட்டம் ஒரு முன்னுரிமைத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு, தொடக்கச் சுற்றுச் சூழல் தாக்க

மதிப்பீடு ஆய்வுப் பணி; தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திடம் 1998ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அறிக்கையும், 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அளிக்கப்பட்டது. இவ்வாறாக, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நனவாவதை உறுதிப்படுத்துவதற்கு நான் முக்கியக் காரண மாக இருந்திருக்கிறேன்' என்று அன்றைக்கு இத்திட்டத்திற்கே தான்தான் காரணம் என்பதைப் போலச் சொல்லிக் கொண்டவரும் இதே ஜெயலலிதா தான் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சேது திட்டம் நிறைவேற்றப்படுமானால், அதன் மூலம் தமிழகத்தில் தொழில், வர்த்தகம் பெருகும்; நாட்டின் அன்னியச் செலாவணி வருவாய் அதிகரிக்கும்; கப்பல்களின் பயண தூரம், நேரம் பெருமளவு குறையும்; தமிழகம் மற்றும் அண்டை மாநிலத் துறைமுகங்களில் சரக்குகள் கையாளும்திறன் அதிகரிக்கும்; ராமேசுவரம் அல்லது மண்டபத்தில் புதிய சிறு துறைமுகம் உருவாகும்; சேதுக் கால்வாய் திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதால் கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி மீனவர்களின் பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் உயரும்; மன்னார் வளைகுடாவிலிருந்து பாக்கடல் சென்று வர மீனவர்களுக்கு இக்கால்வாய் வசதி அளிக்கும்;

இலங்கை உள்ளிட்ட வேறு நாடுகளின் துறைமுகங்களில் இந்தியச் சரக்குகள் பரிமாற்றம் செய்யப்படுவது தவிர்க்கப்படும்; நாட்டின் கடலோரப் பாதுகாப்பு வலுப்படுத்தப்படும்; இத்திட்டத்தால் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும்; சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 8 கோடி மனித நாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். ஏராளமான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்; ராமேஸ்வரம், மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதன் வாயிலாகச் சுமார் 10 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிட்டும்; சேது சமுத்திரக் கால்வாயைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளுக்கு இடையேயான கப்பல் போக்குவரத்து தூரம் சுமார் 424 மைல் அளவுக்குக் குறையும். இதன் மூலம் கப்பல்களின் பயண நேரம் 30 மணி அளவிற்குக் குறையும் வாய்ப்புள்ளது. கணிசமான

எரிபொருள் சேமிப்பும், அன்னியச் செலாவணி சேமிப்பும் ஏற்படும். கப்பல் வாடகைக் கட்டணத்தில் கணிசமான சேமிப்பு ஏற்படும். பயண நேரம் குறைவதால் கப்பல்கள் கூடுதல் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் கூடுதல் சரக்குகளைக் கையாள இயலும்; தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் ஒன்று சரக்குப் பெட்டகப் போக்குவரத்திற்கென ஒருங்கிணைப்பு துறைமுகமாக மேம்படுத்தப்படும்; தூத்துக்குடி துறைமுகமாக பெருமளவில் வளர்ச்சி அடையும்; கடற்படை மற்றும் கடலோரப் படை கப்பல்கள் கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிகளுக்கு அதி விரைவில் செல்ல இயலும். இதன் மூலம் இந்தியப் படைத் திறன் பெருமளவில் மேம்படுத்தப்படும்; ராமனாதபுரம், நாகப் பட்டினம், தூத்துக்குடி மாவட்டங்களில் கட்டமைப்பு வளர்ச்சி பெருகும்.

தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் இத்தகைய ஏராளமான பயன்களைக் கருத்திலே கொண்டுதான், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு மத்தியில் உருவானபோது அதன் குறைந்தபட்சச் செயல் திட்டத்தில் தி.மு. கழகத்தின் முயற்சியால் சேது சமுத்திரத் திட்டம் இடம்பெற்றது மாத்திரமல்லாமல், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிதிநிலை அறிக்கையிலும் சேர்க்கப்பட்டு, அதன் தொடக்க விழாவிற்குப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களும், நானும், மற்றத் தோழமைக் கட்சித் தலைவர்களும் மதுரையில் நடைபெற்ற பிரமாண்டமான விழாவிலே கலந்துகொண் டோம்.

சேது சமுத்திரத் திட்டத்தின் தொடக்க விழாவைத் தடுக்க வேண்டும் என்பதற்காக அப்போது சிலர் நீதிமன்றத்தின் மூலமாக தடை பெற முயன்றனர். அது தொடர்பான வழக்கில், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களின் பெஞ்ச்,

“தேசிய நலனுக்காகக் கொண்டு வரப்படும் சேது சமுத்திரத் திட்டத்தைத் தடை செய்யும் நோக்கத்தோடு மனுதாரர் நீதிமன்றத்துக்கு விரைந்து வந்து வழக்கு தொடுத்துள்ளார். சேது சமுத்திரத் திட்டம் நாட்டிற்கு நல்ல பலனைக் கொடுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால் தற்போது கப்பல்கள் இலங்கை நாட்டைச் சுற்றி வங்காள விரிகுடா கடலுக்கு வரவேண்டியுள்ளது. பாக் ஜலசந்தியிலே குறுக்காகக் கப்பல்

கால்வாய் அமைத்தால் பெருமளவு பணமும், நேரமும் சேமிக்கப் பட ஏதுவாகும். இந்தக் கால்வாய்த் திட்டம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே விழாவுக்குத் தடை கிடையாது''

- என்று கூறித் தீர்ப்பளித்தது.

அவ்வாறு; தொடங்கி வைக்கப்பட்ட சேது சமுத்திரத் திட்டம், அப்போது அமைச்சராக இருந்த தம்பி டி.ஆர்.பாலுவின் நல்ல முயற்சியின் காரணமாக வேகமாக முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த நேரத்தில், மதவாதச் சக்திகள் எப்படியும் அந்தத் திட்டத்திற்கு முட்டுக் கட்டைகளை உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்தோடு நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினை எடுத்துச் சென்றிருக்கின்றனர். உச்ச நீதிமன்றம் விரைவில் இதுகுறித்து நல்ல முடிவெடுத்துத் தீர்ப்பளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், நல்ல தீர்ப்பினைப் பெற்று சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றித் தென் தமிழக மக்களின் வாழ்வாதாரம் உயருவதற்கு வழிவகுத்திட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

25-2-2013

3711. கண்ணீரைக் கவசமாக்கும் நாள் - மார்ச் 5.

உடன்பிறப்பே,

சிங்கள அதிபர் ராஜபக்ஷேவின் ராணுவம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய செல்வன், 12 வயதே நிறைந்த பாலகன் பாலச்சந்திரனை எவ்வளவு கொடுமையாகச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றி 20-2-2013 அன்றே விரிவாக அறிக்கை வெளியிட்டிருந்தேன். நான் மட்டுமல்ல; இதயம் படைத்த அனைவரும் அந்த இளம் தளிர் பொசுக்கப்பட்டதற்காகக் கலங்கிக் கண்ணீர் சிந்தி, சிங்கள அரசுக்குத் தங்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பாலச்சந்திரன் கொடூரமாகக் கொல்லப்பட்ட அந்தக் கொடுமையான காட்சி லண்டனைச் சேர்ந்த "சேனல் 4" எடுத்த "நோ பயர் சோன்" (தாக்குதல்கள் நடத்தக் கூடாத பகுதிகள்) என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட ஆவணப் படத்தின் வாயிலாகச் டெல்லியிலே உள்ள "கான்ஸ்டிடியூஷன் கிளப்" என்ற அரங்கில் செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டுள்ளது. "இலங்கையின் கொலைக்களம்" என்ற பெயரில் இரண்டு ஆவணப் படங்களைத் தயாரித்து வெளியிட்ட டைரக்டர் "கெல்லம் மெக்ரே"தான் இந்தப் படத்தையும் தயாரித்து, இயக்கியிருக்கிறார். தாக்குதல்கள் நடத்தக் கூடாதென வரையறுக்கப்பட்ட பகுதிகளில், சிங்கள ராணுவம் அத்துமீறிக் கொடூரத் தாக்குதல்களை நடத்தி, ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் மக்களை இரக்கமின்றிக் கொன்று குவித்ததை நினைவிலே கொண்டுதான் இந்த ஆவணப் படத்திற்கு "நோ பயர் சோன்" என்று பெயரிடப்பட்டுள்ளது. ராஜபக்ஷேயின் அரசு எந்த அளவிற்கு மன்னிக்க முடியாத போர்க் குற்றங்களைப் புரிந்திருக்கிறது என்பதற்கு, மேலும் பல சாட்சியங்கள் அந்த ஆவணப் படத்தின் மூலமாக வெளியிடப்பட்டுள்ளது.

தாயும், குழந்தையும் ஒன்றாக வீழ்ந்து கிடக்கும் நெஞ்சை உறையச் செய்யும் காட்சி; மருத்துவமனைகளில் ஈழத் தமிழர்கள் உடலின் பல பாகங்களை இழந்த நிலையில் சிகிச்சை பெறுகின்ற காட்சி; அப்பாவிப் பெண்கள் ஆடைகள் நீக்கப்பட்டு, நிர்வாண நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கும் காட்சி; பெண் புலிகள் என்ற சந்தேகத்தில் ஏராளமான பெண்களை லாரியில் ஏற்றிக் கொண்டு செல்கின்ற காட்சி; சிங்கள ராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கர்னல் ரமேஷ் கொல்லப்பட்டு, முகம் சிதைந்த நிலையில் பிணமாகக் கிடக்கின்ற காட்சி; பெண் புலிகளின் தளபதியாக இருந்த இசைப்பிரியா என்ற இளம் வயதுப் பெண்ணைச் சிங்கள ராணுவம் சீரழித்து, படுகொலை செய்த காட்சி; ஆண்களை நிர்வாணமாக்கி, கண்களைக் கட்டி, கைகளைப் பின்னால் கட்டி முதுகிலே சுட்டுக் கொல்லுகின்ற காட்சி; குண்டு வீச்சில் பலியானவர்களின் உடல்கள் சிதறிக் கிடந்த காட்சி; இவையனைத்தும் இந்த ஆவணப் படத்திலே இடம் பெற்றிருப்பதாக ஏடுகளும், தொலைக் காட்சி நிறுவனங்களும் விவரித்துள்ளன. இவற்றைப் படிக்கவே நம்முடைய உள்ளங்கள் பதறிப் பரிதவிக்கின்ற நேரத்தில், இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டால் என்னதான் ஆவோமோ? ஏன்தான் தமிழர்கள் இப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்படுவதற்கு இலங்கைத் தீவிற்குச் சென்றார்களோ என்று எண்ணித்தான் துடிக்க வேண்டியிருக்கின்றது!

இதயம் படைத்த யாருமே ஏற்றுக்கொள்ள முடியாத போர்க் குற்றங்களைச் சிங்கள அரசு செய்துள்ளது என்பதற்கு, அடுக்கடுக்கான சான்றுகள் ஆவணப் படத்தில் மறைக்க முடியாத உண்மைகளாக வெளிவந்துவிட்டன.

குழந்தைகள் என்றுகூடப் பார்க்காது, விளையாட்டுப் பொருளை நீட்டுவதைப் போலத் துப்பாக்கியை நீட்டிச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் சண்டாளர்கள்! அப்பட்டமான மனித உரிமை மீறல் நடைபெற்றுள்ளது என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

மனிதாபிமானமற்ற கொடுமைகள் இலங்கையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதற்கு மேலும் ஒரு சான்றாக - சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமைகள்

கண்காணிப்பு என்ற அமைப்பு இலங்கையிலே நேரடியாக விசாரணை செய்து தயாரிக்கப்பட்ட 140 பக்க அறிக்கை - அமைந்திருக்கிறது. பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட 75 தமிழர்களிடம் நேரடியாக விசாரணை செய்த விவரங்கள் அந்த அறிக்கையிலே காணப்படுகின்றன. மனித உரிமைகள் அமைப்பின் ஆசியாவின் இயக்குநர் "ஆடம்ஸ்" என்பவர் அந்த அறிக்கையைப் பற்றிச் சொல்லும்போது "இலங்கை ராணுவத்தினர் கைது செய்யப்பட்டுப் பாதுகாப்பில் இருந்த தமிழ்ப் பெண்கள் மீதும், ஆண்கள்மீதும் நடத்திய பாலியல் வன்முறைகள் கணக்கில் அடங்காதவை; இவை போரின் போது நடைபெற்ற கொடுமைகள் மட்டுமல்லாமல் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வரும் நிகழ்வுகளாகும்" என்றே தெரிவித்திருக்கிறார்.

தமிழச்சிகளின் கற்பு ஈழத்திலே காற்றிலே பறக்க விடப்பட்டுள்ளது. கற்பு பறிக்கப்பட்டுத் தமிழ்க்குல மாதர்கள் நடுத் தெருவில் நிர்வாணப் பிணமாக வீசிஎறியப்பட்டார்கள். தமிழீழத்தில் உலகில் எங்குமில்லாத அளவிற்கு ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் தங்கள் கணவரைப் பறிகொடுத்துவிட்டுக் கைம்பெண்களாகத் திரிகிறார்கள். சிங்களச் சிப்பாய்கள் அவர்களை வைப்பாட்டிகளாக வைத்துக்கொள்வதாகக் கூறிக் கேலி செய்கிறார்களாம்! தமிழனின் மாமிசம் விற்பனை என்ற விளம் பரங்கள் கடைகளில் எழுதிவைக்கப்பட வில்லையா?

மணந்தவனை மரத்தில் பிணைத்து விட்டு, அவன் மனைவியை அவன் கண்ணுக்கு நேராகவே மானபங்கப்படுத்தவில்லையா? ஈழத்திலே நடந்த நிகழ்ச்சி ஒன்றை நினைவு படுத்துகிறேன். பாஸ்கரன் ஒரு தமிழன் - அவனை ஒரு மரத்திலே கட்டி வைத்துவிட்டு, நடுவீதியிலே அவனுடைய மனைவியை நிர்வாணமாக்கிக் கற்பழிக்கிறார்கள். அதோடு விடவில்லை, மாபாவிகள்! நிர்வாணமாக்கப்பட்ட அந்தப் பெண்ணைத் தலைகீழாக இரண்டு பாக்கு மரங்களில் ஒரு காலை ஒரு பாக்கு மரத்திலும் - இன்னொரு காலை இன்னொரு பாக்கு மரத்திலும் கட்டி - பாக்குமரத்தின் நுனிகளை ஒன்றாகவும் கட்டி - பிறகு திடீரென அந்த பாக்கு மரங்களின் நுனிகளை வெட்டிவிடுகிறார்கள். பாக்கு மரம் "படார்" என்று தனித்தனியாகப் பிரியும்போது, அந்தப் பெண்ணின் உடல் இரண்டாகப் பிளவுபட்டுக் கிழிந்து கீழே விழுகிறது. அவ்வளவும் அவள் கணவர் பாஸ்கரன்

கண்ணுக்கு முன்னாலே! நடைபெற்றதா இல்லையா இலங்கையில்! மறந்தா போய்விட்டது?

இலங்கையில் நடைபெற்ற கொடுமைகளை அறிந்த அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு உண்மை நிலைமைகளை அறிய மூன்று பேர் கொண்ட குழு ஒன்றினை இலங்கைக்கு அனுப்பிவைத்தது. அந்தக் குழுவினர் அத்துமீறல் நடந்தது உண்மைதான் என்று அறிக்கை ஒன்றினை ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் தாக்கல் செய்தனர். அதன்மீது விவாதம் நடந்தபோது இலங்கை அத்தனைக் குற்றச்சாற்றுகளையும் மறுத்ததோடு, நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறியது.

அந்தச் செய்திகளாவது உண்மையா என்று அறிய அமெரிக்கா மேலும் ஒரு குழுவினை இலங்கைக்கு அனுப்பியது. அந்தக் குழுவும் நிவாரணப் பணிகளில் மன நிறைவு இல்லை என்று தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையிலே தான் அமெரிக்கா மேலும் ஒரு தீர்மானத்தைத் தயாரித்துள்ளது. அந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம்தான் மார்ச் திங்கள் இறுதியில் ஜெனீவா நகரில் நடைபெற்று, அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்கு இறுதியில் வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது.

இலங்கையிலே இந்தக் கொடுமைகள் இன்று நேற்றா? தந்தை செல்வா அவர்களின் காலத்திலிருந்தே ஈழத்துத் தமிழ் மக்கள் பிஞ்சுகளாக - அரும்புகளாக - பூக்களாக - காய்களாக - கனிகளாக உதிர்ந்து அழிந்துகொண்டு தானே இருக்கிறார்கள்? தமிழன் என்றாலே அவனைத் தாக்கிக் கொன்று குவிக்கிற அளவுக்கு, சிங்கள வெறி அப்போதே தலைதூக்கிய காரணத்தால் தானே சிறைக்குள்ளிருந்த குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் போன்ற ஐம்பதுக்கு மேற்பட்டோரை சித்ரவதை செய்து அழித்தொழித்த நிகழ்ச்சியே இனப் படுகொலையின் “பிள்ளையார் சுழி”யாக அமைந்தது. 1978-79 ஆம் ஆண்டுகளில் சென்னை - கடற்கரையில் தங்கதுரையுடனும், குட்டிமணியுடனும் மற்றும் சில விடுதலை வீரர்களுடனும் நானும் என்னுடன் சில நண்பர்களும் உரையாடிக் கொண்டிருந்தபோது, அவர்களின் பாதங்களை “டார்ச்” விளக்கின் வெளிச்சத்தில் என்னிடம் காட்டுகிறார்கள். பாதம் முழுவதும் கொப்புளங்கள்; ஏன் இப்படி? என்று கேட்கிறோம். தலை மறைவாக ஓடிவந்து தமிழகத்தைச் சேர்வதற்காகப் பதுங்கிப்

பதுங்கி வரும்போது, செருப்பு சப்தம் தங்களை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்து விடும் என்பதால், வெறுங்காலுடன் வந்ததால் ஏற்பட்ட கொப்புளங்கள் என்கிறார்கள். அந்தக் குட்டிமணியும், தங்கதுரையும், ஜெகனும் மற்றும் 34 தமிழ் ஈழ விடுதலைக் காளைகளும் சிறைச்சாலைக்குள்ளேயே கொல்லப்பட்டார்கள்.

அந்தக் குட்டிமணிக்கும், தங்கதுரைக்கும், "உங்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது" என்று தீர்ப்பளிக்கப்பட்ட நேரத்தில், தங்கதுரை சொன்னார், "நாங்கள் இறந்து போய் விட்டால் எதிர்காலத்தில் உருவாக இருக்கின்ற தமிழ் ஈழத்தை உங்களுடைய சட்டதிட்டம் கட்டுப்படுத்த முடியாது" என்று! அதே நீதிமன்றத்தில்தான் குட்டிமணி சொன்னார், "நான் மரணத்திற்காகப் பயப்படுகின்ற கோழையில்லை! என்னை தூக்குமாட்டிக் கொன்றுவிட்ட பிறகு என்னுடைய கண்களை எடுத்து ஈழத்திலே இருக்கின்ற பார்வையற்ற ஓர் இளைஞனின் கண்ணுக்குப் பொருத்துங்கள்! வருங்காலத்தில் மலர இருக்கின்ற சுதந்திரத் தமிழ் ஈழத்தை நான் காண முடியாவிட்டாலும் - அந்த இளைஞனுக்குப் பொருத்தப்பட்ட என் கண்ணால் பார்த்து மகிழ்வேன்" என்று சொன்னார். அப்படிப்பட்ட இளைஞர்களை யெல்லாம் சிறைச்சாலைக் கொட்டடிக்குள்ளே கொலை செய்து, அவர்களின் கண்களைப் பிடுங்கி, "இந்தக் கண்களால் தானே ஈழத் தமிழகத்தைக் காண விரும்பினாய்", எனக் கேட்டு அந்தக் கண்ணையே பிடுங்கிக் கீழே போட்டு மிதித்த கொடுமை இலங்கையிலே நடைபெற்றது.

இந்த வேதனைகளையெல்லாம் நமது இந்திய நாட்டு மக்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நினைவுபடுத்தி, இலங்கை இனவாத அதிபர் ராஜபக்ஷே ஒரு சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று உணரச் செய்வதற்காகத் தான் வரும் மார்ச் 5ஆம் தேதியன்று சென்னையில் இலங்கைத் தூதரகத்தை "டெசோ" இயக்கத்தின் சார்பில் முற்றுகையிடுகின்ற அறப்போராட்டமும், அதே நாளில் இந்தியத் தலைநகரான டெல்லியில் நாடாளுமன்றத்திற்கு முன்னால் ஜனநாயக வழியில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்துவதென்று 25-2-2013 அன்று அண்ணா அறிவாலயத்தில் கூடிய "டெசோ" கலந்துரையாடல் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் நடைபெறும் கொடுமைகளுக்கு எதிராக தி.மு. கழகத்தின் சார்பிலும், "டெசோ" இயக்கத்தின் சார்பிலும் இதுவரை எத்தனையோ வகைப் போராட்டங்களை நாம் நடத்தியிருக்கிறோம். ஒரேநாள் அறிவிப்பில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டிப் பேரணி நடத்தியிருக்கிறோம். உண்ணாவிரதம், மனிதச் சங்கிலி, கறுப்புடை அணிந்து ஆர்ப்பாட்டங்கள் என்றெல்லாம் நடத்தியிருக்கிறோம். ஏன் சட்டப்பேரவை உறுப்பினர் பதவியையே நானும், பேராசிரியரும் ராஜினாமா செய்திருக்கிறோம். ஐ.நா. மன்றத்திற்கு ஒரு கோடி பேருக்கு மேல் கையெழுத்திட்ட மனுவினைக் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறோம். இலங்கைப் பிரச்சினைக்காக இருமுறை ஆட்சியையே இழந்திருக்கிறோம். ஒவ்வொரு போராட்டத்தையும் வெற்றிகரமான போராட்டமாக ஆக்கிய உடன்பிறப்புகள்தான், வரும் 5ஆம் தேதி நடைபெறும் முற்றுகைப் போராட்டத்தையும் முழுமையான வெற்றியாக ஆக்கித் தரவேண்டுமென்று உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கம் போலவே இந்தப் போராட்டத்தில் கழக உறுப்பினர்கள் மாத்திரமின்றி, "டெசோ" அமைப்பிலே இடம் பெற்றுள்ள இயக்கங்களின் உடன்பிறப்புகளும் அணி அணியாக வந்து கலந்துகொள்ள வேண்டுகிறேன். மார்ச் 5 - இலங்கைத் தூதுவரகத்திற்கு எதிரே முற்றுகைப் போர் - மறவாமல் கலந்து கொள்வீர்; நமது உள்ளத்து வேதனையை மீண்டும் உலகத்தார்க்கு வெளிப்படுத்தும் நாள் மார்ச் 5 - ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக நம் கண்ணீரைக் கவசமாக்கும் நாள் மார்ச் 5.

அன்புள்ள,

மு.க.

27-2-2013

3712. இதற்கும் சேர்த்தா பாராட்டு விழா?

உடன்பிறப்பே,

மத்திய அரசிதழில் காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டதற்காகத் தஞ்சையில் முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்து, பாராட்டு விழா நடத்தப் போகிறார்களாம்! கர்நாடகா காவிரி நீரை டெல்டா மாவட்டங்களில் சாகுபடிக்காகத் தரவில்லை என்பதற்காக, தமிழக முதலமைச்சர் உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடுத்தார் - அந்த வழக்கை விசாரித்த நீதிபதி, விசாரணைக்கு நடுவே, தமிழக அரசின் முறையீடு இல்லாமலேயே நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஏன் வெளியிடவில்லை, மத்திய அரசு உடனடியாக அதனை வெளியிட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார் - உச்ச நீதிமன்றமே தானே முன் வந்து பிறப்பித்த உத்தரவுக்காக ஜெயலலிதாவுக்குப் பாராட்டு என்கிறார்கள். நன்றாகப் பாராட்டட்டும்.

ஆனால் எனக்கொரு சந்தேகம்! இந்த ஆண்டு காவிரி நீர் கிடைக்காமல் காவிரி டெல்டா விவசாயிகள் எல்லாம் சாகுபடி பொய்த்துப்போய் பல கோடி ரூபாய் நட்டத்தில் வேதனையில் மூழ்கிக் கிடக்கிறார்களே, இதுவரை 17 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்கிறார்களே, அதற்காகவேகூட ஜெயலலிதாவைப் பாராட்டி விழா எடுக்கலாம்!

தற்கொலை செய்துகொண்ட பதினேழு விவசாயிகளின் குடும்பங்களுக்கும் தலா பத்து லட்சம் ரூபாய் நிவாரணமும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணியும் வழங்கிட வேண்டுமென்று கோரிக்கை வைத்துப் போராடிய நிலையில்; இறந்த 17 விவசாயிகளின் எண்ணிக்கையையே 9 பேர்தான் விவசாயிகள் என்று குறைத்துக் கூறி, அவர்களுக்கு மட்டும் வெறும் மூன்று இலட்ச ரூபாய் வீதம் தமிழக அரசு நிவாரண

உதவி அளித்திருக்கிறதே; அதற்காகவும் ஜெயலலிதாவைப் பாராட்டலாம்!

ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் நிவாரணம் கேட்டதற்கு மாறாக வெறும் 15 ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே; அதிலும், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் தரப்படவில்லையே; 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மட்டுமே என்று முதல் அமைச்சர் அறிவித்திருக்கிறாரே; விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்திட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தும் - விவசாயத் தொழிலாளர்களுக்குத் தலா பத்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று பலமுறை கேட்டும் எதுவும் தரப்படவில்லையே; எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லையே; இப்படி விவசாயிகள் தொடர்ந்து கொடுத்த வேதனைக் குரலுக்கு விடை தராமல் இருப்பதற்காகவும் ஜெயலலிதாவைப் பாராட்டலாம்!

26-2-2013 தேதிய "தினமலர்" நாளிதழில் "டெல்டா விவசாயிகளுக்குப் பயிர் இழப்பீடு வழங்குவதில் குளறுபடி" என்ற தலைப்பில் வந்துள்ள செய்தி என்ன?

"பயிர் இழப்பீடு நிவாரணம் வழங்குவதில் குளறுபடி ஏற்பட்டுள்ளதால், மீண்டும் டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் சங்கத்தினர், போராட்டத்திற்குத் தயாராகி வருகின்றனர். முதலமைச்சர் நேரடியாகத் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது" என்று எழுதிவிட்டு, மேலும் இதுகுறித்து காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கப் பொதுச் செயலாளர் கீழ்வேளூர் தனபாலன் கூறிய கண்டனத்தையும் விரிவாக வெளியிட்டுள்ளது. இந்தச் செய்திக்காகவே ஜெயலலிதாவைப் பாராட்டலாமே!

சென்னையைத் தவிர்த்து, மற்ற 31 மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், "டெல்டா" மாவட்டங்களில் பயிர் பாதித்த விவசாயிகளுக்கு மட்டுமே நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்தைக் கூட முறையாக வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது டெல்டா மாவட்டங்களில் எழுந்துள்ளது. இதைக் கண்டித்துப் போராட்டங்களும், சாலை மறியல்களும் நடக்க தொடங்கியுள்ளன. இப்படி விவசாயிகளிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தி ஏமாற்றத்தைக் கொடுத்ததற்காக ஜெயலலிதாவைப் பலபடப் பாராட்டலாமே!

அ.தி.மு.க. அரசை, குறிப்பாக முதல் அமைச்சரை ஆதரிப்பதையே பிறவிப் பயனாகக் கருதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தா.பாண்டியன் தலைமையில் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில் 26ஆம் தேதியன்றும், 27ஆம் தேதியன்றும் அந்தக் கட்சியின் சார்பாக வெளிவரும் "ஜனசக்தி" இதழின் முக்கிய செய்தியே என்ன தெரியுமா?

"விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தொடர்சாலை மறியல் - அனைத்துப் போக்கு வரத்தும் நிறுத்தம்" என்ற தலைப்பில் புகைப்படங்களோடு முதல் நாள் வெளிவந்த செய்தியில், "தமிழக அரசு குறுவை, சம்பாபருவத்தில் வேலை வாய்ப்பை இழந்துள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும், பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் முதல்வர் அறிவிப்பின்படி முழு அளவில் நிவாரணம் வழங்கிட வேண்டும் என்பன போன்ற கோரிக் கைகளை வலியுறுத்தித் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் திருவாரூர் மாவட்டம் முழுவதும் தொடர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்" என்று குறிப்பிட்டுவிட்டு, எங்கெங்கே யார் யாருடைய தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றதெனச் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கடுத்த நாளிலும் திருவாரூர் மாவட்டத்தில் இரண்டாம் நாளாக விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் சாலை மறியல் நடத்தியிருக்கிறார்கள். அ.தி.மு.க. அரசைப் பாராட்டுவதையே பழக்கமாகக் கொண்டவர்கள்கூட, குறைகளை அடுக்கிக் குரல்கொடுக்க முன்வந்திருக்கிறார்களே; அதை எண்ணிக் குதூகலத்தோடு ஜெயலலிதாவைப் பாராட்டலாமே!

"காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதால், தமிழக டெல்டா விவசாயிகளின்

எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது" என்று செய்தியாளர்களிடம் தற்போது கூறியிருக்கின்ற ஜெயலலிதா, நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பு 5-2-2007 அன்று வெளியிடப்பட்டபோது, அதனை நல்ல தீர்ப்பு என்று ஏற்றுக் கொண்டாரா? அது "தமிழகத்திற்குப் பாதகமான தீர்ப்பு" என்று அறிக்கை கொடுக்கவில்லையா? பாதகமான தீர்ப்பு, பயனளிக்கும் தீர்ப்பாக மாறியிருக்கும் வினோதத்திற்காகவே ஜெயலலிதாவைப் பன்னிப் பன்னிப் பாராட்டலாமே!

"நடுவர்மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால்தான் காவேரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும். கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால்தான், நடுவர்மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும்" என்று 21-3-1991இல் கூறிய ஜெயலலிதா; நடுவர்மன்றம், இடைக்காலத் தீர்ப்பினை வழங்கிய பிறகும், "நடுவர்மன்றம் தீர்ப்பு வழங்கினால்கூட, அதை நிறைவேற்ற வேண்டுமென்ற கட்டாயம்; கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவுக்குக் கிடையாது" என்று கூறியவர்தானே ஜெயலலிதா! அவர் தற்போது நடுவர்மன்றத் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டதை 22 ஆண்டுகால வெற்றி என்றும், 30 ஆண்டுகாலப் பெருமை என்றும் கூறும் ஜெயலலிதாவின் முரண்பாடான நிலைப்பாட்டுக்கு முழுமையான பாராட்டுரை வழங்கலாமே!

தஞ்சையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அந்த மாவட்ட அமைச்சர் வைத்திலிங்கம் என்பவர் பேசியதைப்பற்றித் தமிழ்நாடு விவசாயிகள் சங்க (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) தஞ்சை மாவட்டச் செயலாளர் சாமி நடராஜன் கூறும்போது, **"தஞ்சை மாவட்டத்தில் 12,300 ஏக்கர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளனர். அதுவும் ஆளுங்கட்சியினர் மட்டுமே இதன்மூலம் பயன்பெறும் வகையில் கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கொதித்துப் போயுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் அமைச்சர் வைத்திலிங்கம் விவசாயிகளைப் பார்த்து அறிவே இல்லையா? உணர்ச்சியற்ற பிண்டங்களா? நான் சொல்வதற்கு கைதட்ட மாட்டீர்களா? என்று பேசியது பொறுப்பற்ற தனமாகும். இதற்கு**

விவசாயிகள் சார்பில் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று தெரிவித்திருக்கிறார். வேறு பல விவசாயிகள் சங்கத் தலைவர்களும் அமைச்சரின் பேச்சினைக் கண்டித்திருக்கிறார்கள். அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் விவசாயிகளை அறிவற்றவர்கள் - உணர்ச்சி இல்லாத பிண்டங்கள் என்று பேசியதற்காகக்கூட, ஜெயலலிதாவைப் பெருமைப்படுத்தி - பாராட்டிப் பேசலாமே!

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் திருவாரூர் மாவட்ட துணைச் செயலாளர் பி.ஆர். பாண்டியன் கூறும்போது, “அறிவித்தது ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய், ஆனால் தருவது 3000 ரூபாய்தான்” என்றே சொல்லியிருக்கிறார். அறிவித்தது ஒன்று; தருவது வேறொன்று என்ற ஏமாற்று வித்தைக்காக ஜெயலலிதாவை எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாமே! முதலமைச்சர் அறிவித்துள்ள டெல்டா மாவட்டங்களில் 1 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு 3.61 லட்சம் ஏக்கர் பயிர்களுக்கு நிவாரணம் என்பது முறையாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல; ஏதோ எழுதிக்கொடுத்த ஒரு புள்ளி விவரத்தை முதலமைச்சர் அறிவித்திருக்கிறார் என்றும் நிவாரணத் தொகை போதாது என்றும்; அதனை உயர்த்த வேண்டும் என்றும்; விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணத் தொகை அறிவிக்கப்பட வேண்டு மென்றும்; மற்ற மாவட்டங்களிலே உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் தரப்பட வேண்டுமென்றும்; டெல்டா மாவட்டங்களில் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக மகசூல் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி நிதி வழங்கப்பட வேண்டுமென்றும்; கோரிக்கைகளும், குறைகளும், குளறுபடிகளும் அடுக்கடுக்காக வெளிவந்துகொண்டே உள்ளனவே; இப்படிக் குமுறல்கள் ஒலிக்கக் காரணமான அரைகுறை நிவாரண அறிவிப்பைச் செய்ததற்காக ஜெயலலிதாவை அளவின்றிப் பாராட்டலாமே!

நெல் சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கக் கூடாது என்ற வேளாண் விஞ்ஞானிகளின் கருத்துக்கேற்ப பல லட்சம் விவசாயிகள் கரும்பு, உளுந்து, வாழை, நிலக்கடலை, தென்னை, எள் போன்ற மாற்றுப் பயிர் சாகுபடி செய்த விவசாயிகளும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனரே; மாற்றுப் பயிரை

ஊக்குவிக்கவும், மாற்றுப் பயிர் விவசாயிகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து எழுந்து வருகிறதே; ஆட்சியாளர்களால் சிறிதும் கவனிக்கப்படாத நிலையிலுள்ள இந்தக் கோரிக்கையை எண்ணி ஜெயலலிதாவிற்குப் பாராட்டு தெரிவிக்கலாமே?

எனவே தற்போது நிவாரணத் தொகை வழங்கிக் கொண்டிருக்கும்போதே, தமிழகம் முழுவதிலும் உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகள் பற்றி மறு கணக்கெடுப்பு நடத்த வேண்டும். அந்த விவரங்களை ஒரு சில அமைச்சர்களை மட்டும் அனுப்பி அறிந்துகொள்ள முடியாது. மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளைக் கொண்டு குழு அமைத்து எவ்வித பாரபட்சமுமில்லாமல் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய முழுமையான புள்ளி விவரங்களை அறிந்து, அதற்கேற்ப நிவாரணம் அறிவித்து, அந்தத் தொகையையும் முறையாக அனைத்துக் கட்சிக் குழு அமைத்து, அந்தக் குழுவின் முன்னிலையில் வழங்க வேண்டும்.

"மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும்" காட்டுவதைப் போல, அ.தி.மு.க. அரசிடம் பெரிதும் நட்புக் கொண்டாடி வரும் "ஜனசக்தி"யில், நிவாரண உதவிகள் சரியாகக் கிடைக்கவில்லை என்று சாலை மறியல் நடத்திக் கொண்டிருக்கும் செய்தியை ஒவ்வொரு நாளும் வெளியிட்டுக் கொண்டே, தமிழக அரசின் செயல்பாடுகளைப் போற்றி வரவேற்றுப் பாராட்டவும் தயங்கவில்லை. அந்த இதழிலே கூட, "உண்மைத் தன்மைகளை உயர் மட்டக் குழுவினர் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்பது தெரிகின்றது. பாதிக்கப்பட்ட பல ஊர்களில் பாதிக்கப்பட்ட நிலங்கள் கணக்கெடுப்பில் விடுபட்டுப் போயுள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளும் பெரும் பகுதியினர் விடுபட்டுள்ளனர். இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 3.61 லட்சம் ஏக்கர் பாதிப்பு என்றும், 1.75 லட்சம் விவசாயிகளுக்கு நிவாரணம் என்றும் அறிவித்திருப்பது பாதிப்புக்குள்ளான நிலப்பரப்பும், விவசாயிகளின் எண்ணிக்கையும் சரியான கணக்கல்ல. விவசாயிகளிடம் கோபமும், கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. மானாவாரி மாவட்டங்களிலும் பாதிப்புகள் பற்றி முழுமையான ஆய்வு செய்து கணக்கெடுப்பு நடத்தி, விடுபடாமல் நிவாரணம் வழங்க வேண்டும்" என்றும், மேலும் பல கோரிக்கைகளையும்

முதல் அமைச்சருக்கே கடிதமாக எழுதியிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்த எச்சரிக்கைகளையெல்லாம் அப்படியே எடுத்தெறிந்துவிட்டு; புகழுரைகளிலும், போற்றிப் பாடல்களிலும், பாராட்டுப் பேச்சுகளிலும், தெருவோரங்களில் எல்லாம் "நீதித்தாயே", "காவிரி அன்னையே" என்று "போர்டு" வைத்துக் கொள்வதிலும் கவனத்தைச் செலுத்தி; பலவகையான துன்ப துயரங்களில் உழன்று கொண்டிருக்கும் தமிழக விவசாயிகளை மேலும் மேலும் "பாராட்டு விழா" என்றும், விவசாயிகள் "நன்றி விழா" என்றும் திசை திருப்புவதை; விவசாயிகளை ஏமாற்றுகின்ற ஏற்பாடாகத்தான் கருதுவார்கள்!

அன்புள்ள,

மு.க.

3-3-2013

3713. முற்றுகைப் போருக்குத் தயாராகி விட்டாயா?

உடன்பிறப்பே,

நாளை மார்ச் 5 - இலங்கைத் தூதுவரகத்திற்கு முன்னால் "டெசோ" சார்பில் நாம் நடத்த விருக்கும் முற்றுகைப் போராட்டம்! ஆம், இந்த நாளில்தான் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும், ஓட்டெடுப்பின்றியே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் இன்று செய்தி வந்துள்ளது.

"கண்ணீரைக் கவசமாக்கும் நாள் - மார்ச் 5" என்ற தலைப்பில் 27-2-2013 அன்று நான் விரிவாக எழுதிய "உடன்பிறப்பு மடலை" நீ படித்து, அதற்கான முன்னேற்பாடு முயற்சிகளில் ஈடுபட்டிருப்பாய் என்பதை நான் நன்கறிவேன். அதற்கு முன்பே 20-2-2013 அன்று நான் விடுத்த அறிக்கையில் பிரபாகரனின் இளைய செல்வன், 12 வயதே நிறைந்த பாலகன் பாலச் சந்திரனை சிங்களக் காடையர் கொன்று குவித்த சோகச் சம்பவம் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் சிங்கள அதிபர் ராஜ பக்ஷே அவர்கள் "இந்து" நாளிதழுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியில், பாலச்சந்திரன் படுகொலையை சிங்கள ராணுவம் செய்யவில்லை என்று கூறியிருக்கிறார். பாலகன் பாலச்சந்திரன் இலங்கையில்தான் கொல்லப்பட்டிருக்கிறான். அவனை சிங்கள ராணுவம் கொலை செய்யவில்லை என்றால் வேறு யார் கொன்றிருக்க முடியும் என்று கூட எண்ணிப்பாராமல் கொடூரமாகக் கொலையையும் செய்து விட்டு, தற்போது அதனை மறுத்துச் சர்வதேச அரங்கில் நல்லவராக நடிக்கப் பார்க்கிறார் ராஜபக்ஷே ! ஏன், பிரபாகரனையும், ஆயிரமாயிரம் ஈழத் தமிழர்களையும் கொன்று குவித்ததையும், தமிழச்சிகளின் கற்பினைச் சூறையாடியதையும்கூட இல்லையென்று ராஜபக்ஷே மறுத்தாலும் மறுக்கக் கூடும்.

ராஜபக்ஷே இந்த அளவிற்கு பொய்களைக் கூறக் கூடும் என்பதால்தான் நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் உலக நாடுகளுக்கு நிரூபிக்கத்தக்க வகையில் வீடியோ ஆவணங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இலண்டன் மாநகரத்திலுள்ள சேனல்-4 நிறுவனம் இலங்கைக்கு எதிராக ஆவணப் படம் எடுத்து உலகத்திற்கு உண்மையைக் காட்டி உணர்த்திட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. இலங்கையில் நடைபெற்ற நிகழ்வுகளைக் காட்டும் ஆவணப்படம் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் பிரதிநிதிகளுக்குத் திரையிடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. டெல்லியில் செய்தியாளர்களுக்கும், தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கும் திரையிடப்பட்டுள்ளது. எந்தவிதமான காழ்ப்புணர்வும் இன்றி நடுநிலையோடு கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது. ஆனால் அப்போது அந்தத் தீர்மான வாசகம் நீர்த்துப் போக வைக்கப்பட்டது. எனவே தான் இந்த ஆண்டும் அமெரிக்கா சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

அமெரிக்காவை முந்திக் கொண்டு, இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை இந்தியாவே முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதுதான் தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு தமிழனின் விருப்பமாகும். ஆனால் அமெரிக்காவின் தீர்மானம் இந்த மாதம் 21ஆம் தேதி வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று பேசப்படுகின்றது. இதுவரை இந்தியா தனது முடிவினை அறிவிக்காமல் இருப்பது தமிழகத்திலே உள்ள நம்மை ஆச்சரியமடையவைக்கிறது. அமெரிக்காவின் தீர்மானத்தை முறியடிக்க ராஜபக்ஷே தன்னால் இயன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். ஆனால் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்ற நிகழ்வுகள் பற்றிய ஆவணப் படத்தினைப் பார்த்த பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும், ராஜபக்ஷேவுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். அந்த நாடுகளின் பட்டியலில் நமது இந்தியாவும் இருப்பதாக இதுவரை அறிவிக்கவில்லையே என்பதுதான் உலகத் தமிழர்களின் இதய வேதனை!

நேற்று மாலையில் இதைப்பற்றி செய்தியாளர்களுக்கு, நம்முடைய இணை அமைச்சர், நாராயணசாமி அவர்கள் அளித்த

பேட்டியில், "இலங்கைப் பிரச்சினையை மத்திய அரசு மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறது. அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் பற்றிய முழு விவரங்கள் தெரியவில்லை. இதனால் மத்திய அரசு முடிவு செய்யவில்லை. அதுபற்றிய முழு விவரமும் தெரிய வந்த பின்னர் மத்திய அரசு சரியான நேரத்தில் சரியான முடிவினை எடுக்கும். இந்திய அரசு, கடந்த முறை எந்த நிலைப்பாட்டைக் (தீர்மானத்திற்கு ஆதரவு) கொண்டிருந்ததோ, அதையே இந்த முறையும் பின்பற்றும்" என்று சொல்லியிருக்கிறார்.

இலங்கை விவகாரத்தில் இந்திய அரசின் நிலையை அறிய மாநிலங்களவையில் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை தி.மு.க. தாக்கல் செய்தது. இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் மீது சர்வதேச விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் 27-2-2013 அன்று அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக கழகத்தின் சார்பில் பேசிய தம்பி திருச்சி சிவா, "கண்ணீர் பெருகும் கண்களுடன், இதயத்தில் வழியும் ரத்தத்துடன் இந்த அவையில் பேசுகிறேன். நாம் இன அழிப்பு மற்றும் மனிதப் பேரழிவுகளால் மனம் நொந்து போன உலக நாடுகள் எல்லாம் சேர்ந்து, அதற்குப் பரிகாரம் தேடிக் கொண்டிருக்கிறது. ஆனால், நம் தாய்நாடு மட்டும் ஒதுங்கி நிற்கிறது. உங்களுக்கு இலங்கையின் நட்பு வேண்டுமா? அல்லது இதே நாட்டில் தென்பகுதியில் வாழும் மக்களின் உறவு வேண்டுமா என்பதை அறிவியுங்கள்" என்று கேட்டிருக்கிறார்.

மேலும் இந்தப் பிரச்சினையில் மாநிலங்களவையில் அ.தி.மு.க. சார்பில் டாக்டர் வா.மைத்ரேயன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் டி. ராஜா, பா.ஜ.க. சார்பில் வெங்கய்ய நாயுடு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் டி.கே.ரெங்கராஜன் ஆகியோரும் மற்றும் சிவசேனை, திரிணாமுல் காங்கிரஸ், தெலுங்கு தேசம், சமாஜ வாதி கட்சி, லோக் ஜனசக்தி, ஐக்கிய ஜனதா தளம், ராஷ்டிரிய ஜனதா தளம் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் இலங்கைக் கொடுமைகளைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற மக்களவையில் கழகத்தின் சார்பில் தர்மபுரி தொகுதி கழக நாடாளுமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் இரா.

தாமரைச் செல்வன் இந்தியா தனித் தீர்மானமே கொண்டு வரவேண்டுமென்று பேசியிருக்கிறார்.

அரசின் சார்பில் இந்த விவாதத்திற்குப் பதிலளித்த மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் அவர்கள், "ஐ.நா. கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் தீர்மானத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தீர்வு காணப்படும்" என்று சொல்லியிருக்கிறார் எனினும், "இலங்கையின் உள்விவகாரங்களில் மத்திய அரசால் தலையிட முடியாது, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்பதற்காக இந்தியாவும் அதைப் பின்பற்ற வேண்டிய அவசியம் கிடையாது" என்றெல்லாம் கூறியிருப்பது மிகுந்த மன வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. அமைச்சரின் இந்தப் பதில் திருப்தி அளிக்கவில்லை என்று கூறி தி.மு.க., அ.தி.மு.க., இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்கள் அவையிலிருந்தே வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். மனித உரிமை ஆர்வலரும், பாகுபாட்டுக்கு எதிரான சர்வதேச மக்கள் இயக்கத்தின் தலைவருமான கலாநிதிநிமல்கா பொன்னாண்டோ , "இலங்கையில் மனித உரிமை மீறலுக்கும், போர்க் குற்றத்திற்கும் எதிராக ஜெனிவா மாநாட்டில் கொண்டு வரப்படும் தீர்மானம் மிகவும் கடுமையாக இருக்க வேண்டும்" என்றே கூறியுள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களை மறு குடியமர்வு செய்வதற்காக இந்திய அரசு கடந்த சில ஆண்டுகளாக நிதி உதவி அளித்து வருகிறது. இந்த ஆண்டு இலங்கைக்கு இந்தியா 500 கோடி ரூபாயை இலவசமாக 290 கோடி ரூபாயை இலங்கைக்கு வழங்கியது. அதற்கு முந்தைய ஆண்டில் 180 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இந்த நிதி உதவி இலங்கையில் தமிழர்களின் நல்வாழ்வுக்காக செலவழிக்கப்படும் என்ற நம்பிக்கையில்தான் வழங்கப் படுகிறது. ஆனால் இலங்கை இந்த நிதியை தமிழர்களுக்காகப் பயன்படுத்துவதில்லை என்றும், சிங்களவர்கள் பயன்பெறும் வகையிலேதான் இந்த நிதி திருப்பி விடப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இந்த நிதி உதவி யைக் கொண்டு கட்டப்படும் வீடுகளில் பாதிக்கப்பட்ட தமிழர்களை குடியமர்த்துவதற்குப் பதிலாக, ஆக்கிரமிக்கும் சிங்களவர்களைத்தான் குடியேற்றுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

இந்த வேதனைகளையெல்லாம் எதிரொலிப்பதற்காகத்தான் இலங்கை இனவாத அதிபர் ராஜபக்ஷே ஒரு சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று உலகம் உணரச் செய்வதற்காகத்தான்; நாளை மார்ச் 5ஆம் தேதியன்று சென்னையில் இலங்கைத் தூதரகத்தை "டெசோ" இயக்கத்தின் சார்பில் முற்றுகையிடுகின்ற அறப் போராட்டமும், அதே நாளில் இந்தியத் தலை நகரான டெல்லியில் நாடாளுமன்றத்திற்கு முன்னால் ஜனநாயக வழியில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்துவதென்று 25-2-2013 அன்று அண்ணா அறிவாலயத்தில் கூடிய "டெசோ" கலந்துரையாடல் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொள்வது என்பது - நம்முடைய தமிழ் இனத்தவர் இலங்கையிலே இன்னமும் நாதியற்றவர்களாகச் செத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்காக நாம் இருக்கிறோம் என்பதை உலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக! அதற்கு நீ தயாராகி விட்டாயா? தான் ஒரு போர்க் குற்றவாளி அல்ல என்று இன்னமும் நிமிர்ந்து நின்று "பேட்டி" கொடுத்துள்ள ராஜபக்ஷேக்கு, "தமிழினம் முற்றாக அழிந்து விடவில்லை" என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக நடைபெறும் முற்றுகைப் போராட்டம்தான் இது!

அன்புள்ள,

மு.க.

04-03-2013

3714. போர் நின்றுவிட்டதாகப் பொய் சொன்னது போர்க்குற்றமே!

உடன்பிறப்பே,

2009ஆம் ஆண்டு இலங்கையிலே ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் போர் நடைபெற்ற போது, இன்றைக்கு ஈழத் தமிழர்கள்பால் நாம் காட்டுகின்ற உணர்வுபூர்வமான அக்கறையை, அப்போதே காட்டவில்லை என்பதைப்போல ஒருசிலர் தொடர்ந்து பேசி வருகிறார்கள். இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போராட்டத்தை; அப்பொழுது அங்கே ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டதை; தி.மு.கழகம் அப்போது ஆட்சியிலே இருந்த காரணத்தால் தடுத்து நிறுத்தியிருக்கலாம், ஆனாலும் தடுத்து நிறுத்தவில்லை என்பதைப்போல தெரிந்தோ, தெரியாமலோ கூறி வருகிறார்கள். 2009ஆம் ஆண்டு இலங்கையில் போர் நடைபெற்றபோது, தி.மு.கழகம் எதுவும் செய்யவில்லையா?

கழக அரசின் சார்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 14-10-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, இலங்கையில் இரண்டு வார காலத்திற்குள் போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு முன் வராவிட்டால், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகிட நேரிடும் என்று ஒரு தீர்மானமே நிறைவேற்றப்பட்டது. அதையொட்டி, கழகத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை என்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டார்கள். அப்போது ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தம்பிகள் எல். கணேசன், செஞ்சி ராமச்சந்திரன் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் காதர் மொய்தீன் ஆகியோர்கூட தங்கள் பதவி விலகல் கடிதங்களை என்னிடம் கொடுத்து விட்டார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட அன்றே

பிரதமருக்கு அந்தத் தீர்மானம் தம்பி டி.ஆர். பாலு மூலமாக அனுப்பப்பட்டது. அதனை ஆய்வு செய்த பிரதமர், அரசியல் ரீதியான தீர்வு காண மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விரைவாக எடுத்திடும் என்று பாலுவிடம் உறுதிகூறி, அது அப்போதே அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது. அதே நாளில் பிரதமர் அளித்த பேட்டியிலும் -

> "இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. இப் பிரச்சினைக்கு ராணுவம் மூலம் தீர்வு என்பது சரியாக அமையாது. இலங்கையின் இறையாண்மையையும், அங்கு வசிக்கும் தமிழர்களின் மனித உரிமையையும் மதிக்கும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முழு ஈடுபாட்டுடன் மத்திய அரசு முயற்சி மேற்கொள்ளும் " என்று கூறியிருந்தார்.

18-10-2008 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் நேரடியாகவே தொலைபேசியில் இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் பேசினார். 22-10-2008 அன்று மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளதாக நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார். 24-10-2008 அன்று சென்னையில் "பிரமாண்டமான மனிதச் சங்கிலி" ஒன்றினை நடத்தினோம். 26-10-2008 அன்று திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் சென்னை வந்து என்னிடம் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசினார். சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, நார்வே நாட்டின் முயற்சியின் பேரில் ஏற்பட்ட சண்டை நிறுத்தம் தொடருவதை உறுதி செய்ய வேண்டுமென்று கலைஞர் வலியுறுத்தினார் என்றும், போர்ப் பகுதிகளில் அவதிப்படும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் மன்றம் மற்றும் இந்திய அரசின் மூலமாக மனிதாபிமான உதவிகள் அளிக்க இலங்கை அரசு உறுதி அளித்துள்ளது என்றும் கூறினார்.

12-11-2008 அன்று இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகச் சட்டப்பேரவையில் தீர்மானம் ஒன்றினை நான் முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்டது. 4-12-2008 அன்று தமிழகத்திலே

உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் நான் அழைத்துக் கொண்டு டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அதன் பின்னர் பிரணாப் அவர்கள் இலங்கைக்கு நேரிலேயே சென்று ராஜபக்சேயுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். 27-12-2008 அன்று நடைபெற்ற கழகப் பொதுக் குழுவிலே இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துத் தீர்மானம் நிறைவேற்றினோம்.

12-1-2009 அன்று தமிழர் தலைவர் கி. வீரமணி, பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன் என்னைச் சந்தித்ததைத் தொடர்ந்து மத்திய அமைச்சராக இருந்த டி.ஆர். பாலுவையும், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியையும் பிரதமரிடமும், சே. காந்தியிடமும் நிலைமைகளை விளக்கச் செய்தேன்.

28-3-2009 அன்று இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்பட இருவரும் உதவிட வேண்டுமென்று கேட்டுப் பிரதமருக்கும், திருமதி சோனியா அவர்களுக்கும் எழுதிய கடிதத்திற்கு, 31-3-2009 அன்று திருமதி சோனியா அவர்கள் எனக்கு எழுதிய நீண்ட கடிதத்தில், "நம்முடைய பிரதமர் அவர்கள் காங்கிரஸ் சார்பாக உங்களுக்கு எழுதிய கடிதத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அனைவரின் சார்பாக இலங்கையில் அண்மையில் நடை பெற்ற சம்பவங்கள் குறித்து ஐக்கிய முற்போக கூட்டணி அரசின் சார்பில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை விவரித்திருப்பதைப் பற்றி நானும் உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்... தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் போர், அதன் காரணமாக அங்குள்ள தாய்மார்கள், குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவித் தமிழர்கள் அனுபவித்துவரும் பெரும் துயரங்கள், நம்மை மிகுந்த கவலைக்கு ஆளாக்கியுள்ளது. அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களின் நலன்களைப் பேணவும் தேவையான முயற்சிகள் அனைத்தையும் இலங்கையின் அதிகார வர்க்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். உள்ளபடியே அதற்கான முதல் கட்டமாகப் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். நமது அரசு இலங்கை அரசுடன் போர் நிறுத்தத்தைப் பற்றித் தொடர்பு கொண்டு வருகிறது. போர் நிறுத்தம் ஏற்பட்டால் தான் அப்பாவி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர

முடியும்“ என்றெல்லாம் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் 5-4-2009 அன்று என்னைச் செய்தியாளர்கள் சந்தித்தபோது, “இலங்கையில் விடுதலைப் புலிகளின் அனைத்து இடங்களையும் ராணுவம் கைப்பற்றி விட்டதாகவும், அவர்களது ராணுவ தளங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், பிரபாகரனும், அவருடைய புதல்வரும் தமிழர்கள் வாழ்கிற பகுதியில் மறைந்திருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கிறதே” என்று என்னைக் கேட்ட நேரத்தில் “போர் நிறுத்தம் வேண்டுமென்று கடந்த ஆறு மாத காலமாகத் தொடர்ந்து சொல்லிவருகிறோம். எங்கள் குரலை மதித்து வெளிநாடுகளிலே உள்ள அரசுகள், ஐ.நா. மன்றத்தினர், வெளி நாட்டுத் தூதுவர்கள் மூலமாக இலங்கைக்குச் சொல்லி வருகிறார்கள். போரை நிறுத்துங்கள் என்று இந்திய அரசினர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ராபக்ஷே போரை நிறுத்தவில்லை. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்“ என்று கூறினேன்.

7-4-2009 அன்று பிரதமர் மன்மோகன்சிங், திருமதி சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருக்கு நான் அனுப்பிய தந்தியில் “இலங்கையில் ஒட்டு மொத்த தமிழின மக்கள் கூண்டோடு அழிக்கப் படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும், அங்குப் போர் நிறுத்தத்தை உறுதிசெய்து அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்றும் கேட்டுக்கொண்டேன். இறுதிப் போரிலே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக நான் மட்டுமல்ல, இந்திய அரசு மாத்திரமல்ல, பெரிய நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், நார்வே போன்றவைகள் வெளியிட்ட அறிக்கையிலேயே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும், பாதுகாப்பான பகுதி மீது இலங்கை போர் விமானங்கள் குண்டு வீசுவதை நிறுத்த வேண்டுமென்றும் தெரிவித்தன. இதற்கும் மேலாக ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர், பான்-கி-மூன் தொலைபேசி மூலமாகவே இலங்கை அதிபர் ராஜபக்ஷேயைத் தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மனிதாபிமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

9-4-2009 அன்று சென்னையில் என் தலைமையில்

“இலங்கை அரசே போரை நிறுத்து” என்று முழக்கமிட்டவாறு பிரம்மாண்ட மான பேரணி ஒன்று நடைபெற்றது. இலங்கை அதிபர் ராஜபக்சே இலங்கையில் இரண்டு நாள் போர் நிறுத்தம் செய்யப்படும் என்று அறிவித்தார். விடுதலைப் புலிகள் ஆதரவு கட்சி எம்.பி.க்களை இந்தியாவிற்கு பேச்சு வார்த்தை நடத்த வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்தது.

மத்திய உள் துறை அமைச்சராக அப்போது இருந்த நண்பர் ப.சிதம்பரம் அவர்கள் 14-4-2009 அன்று விடுத்த அறிக்கையில் இலங்கையில் போர் நிறுத்தம் தொடர்ந்திட வேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா கொடர்ந்து வற்பறுக்கும் என்றார். தமிழர் ‘தலைவர் இளவல் கி. வீரமணி அவர்கள் விடுத்த அறிக்கையில் உலக நாடுகளின் வற்புறுத்தல்கள் காரணமாக 48 மணி நேர போர் நிறுத்தத்தை ராஜபக்சே அரசு அறிவித்துள்ளது. தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் கலைஞர் தரும் இடையறாத அழுத்தம்தான் இதற்கு முக்கியமான காரணம். இந்திய அரசும் இதில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை” என்று குறிப்பிட்டார்.

21-4-2009 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் திருமதி சோனியா காந்தி, வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த

பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு நான் அனுப்பிய தந்தியில், “இலங்கையில் போர் நிலைமை ஆபத்தானதாக உள்ளது. தமிழர்கள் அனுபவித்து வரும் சிரமங்கள் மிக அபாயமான நிலையை எட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பு உட்பட அனைத்து நாடுகளும் உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்கும்படி இலங்கை அரசு மீது நிர்ப்பந்தம் செலுத்தியுள்ளன. இலங்கையிலுள்ள இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்ற இலங்கையில் உடனடியாகவும், நிரந்தரமாகவும் போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடும்படி வலியுறுத்துகிறேன்” என்று கேட்டுக்கொண்டேன்.

“நாதியற்ற ஈழத் தமிழரைக் காத்திட நடுவணரசுக்கு வேண்டுகோள்” என்ற தலைப்பில் உருக்கமிகு உடன்பிறப்பு கடிதம் ஒன்றை 21-4-2009 அன்று நான் எழுதியதோடு, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற, மத்திய அரசு போர் நிறுத்தத் திற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரி

23-4-2009 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்தப்பட வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டு அறிக்கை விடுத்தேன். அந்த வேலை நிறுத்தத்திற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டு, காங்கிரஸ், அ.தி.மு.க., சி.பி.எம்., சி.பி.ஐ., திராவிடர் கழகம், பா.ம.க., பா.ஜ.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., விடுதலை சிறுத்தைகள், இந்தியயூனியன் முஸ்லீம் லீக், எம்.ஜி.ஆர். கழகம், புதிய தமிழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் கடிதம் எழுதினேன். அந்த வேலை நிறுத்தம் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

நான் அனுப்பிய தந்தியின் அடிப்படையில் 22-4-2009 அன்று இரவு டெல்லியில் பிரதமர் அவர்கள் மத்திய அமைச்சர்கள், அதிகாரிகள் கொண்ட அவசரக் கூட்டம் ஒன்றினைக் கூட்டி, அப்பாவித் தமிழர்கள் மீதான போரினை இலங்கை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதனை இலங்கை அரசுக்கு நேரில் வலியுறுத்துவதற்காக பிரதமரின் சிறப்புத் தூதுவர்கள் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று கொழும்பு சென்றது. அந்தக் குழுவினர் கொழும்பில் ராஜபக்சேயை நேரில் சந்தித்து, உடனடியாகப் போரை நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென்ற இந்தியாவின் வேண்டுகோளைத் தெரிவித்தனர்.

24-4-2009 அன்றிரவு அண்ணா அறிவாலயத்திற்கு மத்திய உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் அவர்கள் வந்து, என்னைச் சந்தித்து விவரங்களையெல்லாம் விளக்கினார். அதே நாளில் பிரதமர் அவர்களும் தொலைபேசியில் என்னுடன் பேசி மத்திய அரசு எடுத்த முயற்சிகளையெல்லாம் கூறினார்.

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒபாமா அவர்கள் சார்பில் வெள்ளை மாளிகையிலிருந்து 25-4-2009 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், இலங்கை அரசுராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவும் தெரிவித்திருந்தது. 26-4-2009 அன்று இலங்கையில் போர் நிறுத்தம் குறித்து செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ஓரிரவு பொறுத்திருந்து பார்ப்போம் என்று

கூறினேன்.

அதே 26-4-2009 அன்று விடுதலைப் புலிகள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐ.நா.சபை ஆகியவற்றின் கோரிக்கையை ஏற்றுப் போர் நிறுத்தம் செய்கிறோம். இந்தக் காலவரையற்ற போர் நிறுத்தம் உடனே அமலுக்கு வரும். இலங்கை ராணுவம் நடத்தி வரும் போரால் தமிழ்மக்கள் அனுபவிக்கும் துன்பம் உச்ச நிலையை எட்டியுள்ளது. இலங்கை அரசும் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

26ஆம் தேதி வந்த இந்தத் தகவல்களுக்குப் பின் அன்றிரவு முழுவதும் நான் தூங்கவில்லை. போர் நிறுத்தம் பற்றி இலங்கை அரசு ஏதாவது அறிவித்ததா என்று டெல்லியிலே தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டே இருந்தேன். உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களைப் பலமுறை தொடர்பு கொண்டேன். பிரதமரும் என்னோடு தொடர்புகொண்டார். வெளிநாடுகளிலிருந்து ஏராளமான தமிழர்கள் என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசிக்கொண்டே இருந்தார்கள். அதிகாலை 4 மணி வரையிலே தொலைக்காட்சியில் நல்ல செய்தி வருமா என்று எதிர்பார்த்தேன். எந்தச் செய்தியும் வரவில்லை. இலங்கை அரசு போரை நிறுத்தவில்லை என்ற செய்திதான் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் 5 மணி அளவில் என் வீட்டாரிடம் அறிவாலயம் செல்கிறேன் என்று கூறிவிட்டு, அண்ணா நினைவிடத்திற்குச் சென்றேன். அதே ஆண்டு ஜனவரி மாதத்தில் மிகப் பெரிய அறுவை சிகிச்சை ஒன்றை என் முதுகிலே இந்த வயதிலே செய்துகொண்டு, நடக்க முடியாத நிலையில் சக்கர வண்டியிலே பயணம் செய்து கொண்டிருந்த நான் என் உடல் நிலையைப் பற்றியோ வேறு எதைப் பற்றியோ கவலைப் படாமல் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பது என்ற முடிவோடுதான் யாருக்கும் கூறாமல், கூறினால் அனுமதிக்க மாட்டார்கள் என்பதால், நானாக முடிவெடுத்துச் சென்றேன். அதேநாள் காலையில் உண்ணாவிரதப் பந்தலில் என்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம், "சிங்கள அரசு போர் நிறுத்தம் செய்ய முன்வராத காரணத்தால், என்னையே நான் அர்ப்பணித்துக்கொள்ள, நம்முடைய தமிழர்களுக்காக என் உயிரையும் வழங்க, இலங்கை அரசு வாங்கிய பலிகளிலே ஒரு

பலியாக நானும் அமைய, எல்லாத் தமிழர்களின் சார்பாக இந்த உண்ணா நோன்பை நான் மேற்கொண்டிருக்கிறேன்" என்றுதான் தெரிவித்தேன்.

நான் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த அதே நாளில் பகல் 11 மணி அளவில் **இலங்கை பாதுகாப்பு கவுன்சில்** கூடி ஆலோசனை நடத்தியது. முல்லைத் தீவில் நடத்தப்பட்டு வரும் போர், அதன் தொடர்ச்சியாக நான் உண்ணாவிரதம் இருப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது என்றும், அதன் முடிவில் இலங்கை வடக்குப் பகுதியில் நடத்தப்பட்டு வந்த போரை முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டு, 12 மணி அளவில் இலங்கை அரசு ஓர் அறிக்கையினை வெளியிட்டது. அந்த அறிக்கையில் **"இலங்கை வடக்கில் நடைபெற்று வந்த போர் முடிந்து விட்டது. வடக்கு பகுதியில் இனி கனரக ஆயுதங்களை பயன்படுத்த வேண்டாம் என்று ராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விமானத்தில் இருந்து குண்டு வீசுவதும் நிறுத்தப்படுகிறது. வடக்கில் சிக்கியுள்ள பொதுமக்களைப் பாதுகாப்புடன் மீட்கும் பணிகளில் இலங்கை ராணுவத்தினர் ஈடுபடுவார்கள். இனி அப்பாவி மக்களைப் பாதுகாக்கும் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்"** என்று கூறப்பட்டிருந்தது.

இலங்கை அரசு வெளியிட்ட அந்த அறிக்கையின் அடிப்படையில்; அன்றைய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் 27-4-2009 அன்று வெளியிட்ட அறிக்கையில் போர் நடவடிக்கைகள் முற்றுப்பெற்று விட்டதென்றும், கனரகத் துப்பாக்கிகள், போர் ஆயுதங்கள் போன்றவை குடிமக்களைப் பெருமளவிற்குக் கொல்லும் என்பதால் இலங்கை பாதுகாப்புப் படைகள் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்றும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது. குடிமக்களை மீட்பதற்கும், அவர்களைக் காப்பாற்றுவதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இனி கவனம் செலுத்தும் என்றும் குறிப்பிட்டதோடு, அதன் நகல் ஒன்றினையும் நான் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கே அனுப்பி, உண்ணாவிரதத்தை என்னை முடித்துக் கொள்ளும்படி

பிரதமரும், சோனியா காந்தி அம்மையாரும் கேட்டுக்கொண்டனர்.

அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும், மற்றும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், நண்பர்களும் நேரில் வந்து உண்ணாவிரதத்தை கைவிடும்படி வலியுறுத்தியதன் அடிப்படையிலும் மதியம் 1 மணி அளவில் நான் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டேன்.

இலங்கை அரசு அறிவித்த போர் நிறுத்தத்தை உண்மையென்று நானும் நம்பி, இந்திய அரசும் அதை நம்பி எனக்குத் தெரிவித்ததால் உண்ணாவிரதத்தை நான் திரும்பப் பெற்றேன். நாம் நம்பியது மாத்திரமல்ல, அமெரிக்க அரசே அதை நம்பி, அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் **ராபர்ட்** உட் இலங்கை அரசின் அறிவிப்பையும், விடுதலைப் புலிகளின் அறிவிப்பையும் வரவேற்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் அதற்குப் பின்னரும் இலங்கை சிங்கள அரசு ராஜபக்ஷேயின் சிங்கள பேரினவாதப் பிடிவாதத்தினால் களத்தில் நின்ற போராளிகளையெல்லாம் கொன்று குவித்தனர். போராட்டத்தை நிறுத்துவதற்கான எவ்வளவோ முயற்சிகளை நாம் மேற்கொண்டோம், அதற்கு உறுதுணையாக மத்திய அரசும், பிரதமரும், மத்திய அமைச்சர் பெருமக்களும் இருந்தும்கூட, சிங்கள ராணுவம் தன்னுடைய தாக்குதலைத் தொடர்ந்தது. இன்னமும் அந்தக் கொடுமை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. போர் நிறுத்தப்பட்டதாகச் சிங்கள அரசு பொய் சொன்னதே ஒரு போர்க்குற்றம்தானே?

இதற்கு வழி காணத்தான் தற்போது தி.மு.கழகம் ஆட்சியிலே இல்லா விட்டாலும்கூட, 'டெசோ' இயக்கத்தை மீண்டும் ஏற்படுத்தி அதிலே நானும், பேராசிரியரும், தமிழர் தலைவர் வீரமணி அவர்களும், தொல்.திருமாவளவன் அவர்களும், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும், சுப்புலெட்சுமி ஜெகதீசன் அவர்களும் உறுப்பினர்களாக இடம்பெற்று அதன் சார்பாகப் பல போராட்டங்களையும், மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் நடத்தி வருகிறோம். அந்த வரிசையில்தான் நாளை டெல்லியில் "டெசோ" சார்பில் பல நாட்டுப் பிரதிநிதிகளும், இந்திய நாட்டில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின்

பிரமுகர்களும் கலந்துகொள்ளும் கருத்தரங்கினை நடத்துகிறோம். அதுமாத்திரமின்றி வரும் 12ஆம் தேதியன்று தமிழகம் முழுவதும் பொது வேலைநிறுத்தம் செய்வதென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

2009ஆம் ஆண்டு இலங்கையில் போர் நடைபெற்றபோது, நான் இந்த வயதிலும் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் நோக்கோடு தான் யாரிடமும் கேட்காமல் உண்ணாவிரதத்தைத் தொடங்கினேன். அப்போது இலங்கை அரசு திடீரென்று கூடி போர் நிறுத்தம் என்று பொய்யாக அறிவிப்பினைச் செய்யுமென்று நான் எதிர்பார்த்தேனா? அவர்கள் அவ்வாறு போர் நிறுத்தம் என்று அறிவித்து, அதனை இந்திய அரசும் நம்பி எனக்குத் தெரிவித்து, உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளுமாறு கூறியதால்தான் நான் அதனை நிறுத்த நேரிட்டது. யார் நம்புகிறார்களோ இல்லையோ இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என் மனச்சாட்சிக்கொப்ப நான் நடந்துகொண்டுதான் இருக்கிறேன். இலங்கைத் தமிழர்களுக்கு நல்வாழ்வு கிடைக்குமென்றால், அதற்காக நான் ஆட்சியை இழக்கவே தயாராக இருக்கிறேன் என்றே பேரவையில் சொல்லியிருக்கிறேன். ஏன் ஆட்சியிலே இருந்தபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே நான் அக்கறை காட்டியதற்காகவே இரண்டு முறை ஆட்சியை இழந்திருக்கிறேன். சட்டப்பேரவை உறுப்பினர் பதவியையே பேராசிரியர் அவர்களோடு சேர்ந்து ராஜினாமா செய்திருக்கிறேன். இதற்கு மேலும் விஷமத்தனமானப் பிரச்சாரங்களுக்கு விளக்கமளிக்கத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

இறுதியாக 12ஆம் தேதி நடைபெறவுள்ள பொது வேலை நிறுத்தத்தை எப்போதும் போல வெற்றிகரமாக ஆக்கித்தர வேண்டியது தமிழகத்திலே உள்ள அனைத்துச் சாராரையும் சேர்ந்ததாகும். தீர்மானத்தில் கேட்டுக்கொண்டவாறு கட்சி சார்பற்ற முறையில் அனைத்துத் தரப்பினரும், சங்கடங்களைப் பொறுத்துக் கொண்டு இந்த வேலை நிறுத்தம் என்பது நம்முடைய தொப்புள் கொடி உறவுகொண்ட ஈழத் தமிழர்களுக்காக நடைபெறுகிறது என்பதை உணர்ந்து, அதனை வெற்றிகரமான ஒன்றாக ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு, மத்திய அரசு

இனியும் தாமதிக்காமல் ஜெனீவா நகரத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்திலே இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை முழுமனதாக ஆதரிக்க முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுத்து, அதற்கான அறிவிப்பினை மத்திய அரசு உடனடியாக வெளியிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

7-3-2013

3715. சேதுத் திட்டத்தைச் சீரழிக்க நினைப்பது நியாயமா?

உடன்பிறப்பே,

"சேது சமுத்திரத் திட்டத்தின் பெயரால் ராமர் பாலத்துக்குச் சேதம் விளைவிக்க மத்திய அரசு முயற்சித்தால் அதை பா.ஜ.க. கடுமையாக எதிர்க்கும் என்றும், ராமர் பாலத்தைச் சேதப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் பா.ஜ.க. ஏற்காது என்றும், ராமர் பாலம் இல்லாமல் ராமாயணம் கிடையாது என்றும், இந்தியாவின் அடையாளமும் முழுமையாகாது என்றும்; அந்தக் கட்சியின் தேசியக் கவுன்சில் கூட்டத்தில் 3-3-2013 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கூட்டத்தில், "ராமர் பாலத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கத் தமிழக அரசு அளித்துவரும் ஒத்துழைப்பை பா.ஜ.க. பாராட்டுகிறது" என்றும் தீர்மானம் கூறுகிறது.

சேது சமுத்திரத் திட்டத்தில் பா.ஜ.க., மற்றும் அ.தி.மு.க.வின் நிலை குறித்தும், அவர்கள் இந்தத் திட்டம் பற்றிக் கடந்த காலத்தில் என்ன நிலைப்பாட்டினை மேற்கொண்டிருந்தார்கள் என்பது பற்றியும் ஏற்கனவே நான் பலமுறை விளக்கியிருந்த போதிலும்; பா.ஜ.க. தற்போது அதன் தேசியக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில் அதுபற்றி மேலும் ஒரு முறை தெளிவாக்குவது அவசியமென்று கருதுகிறேன்.

2004ஆம் ஆண்டு மே திங்களில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சி அமைந்தது. அந்தக் கூட்டணியில் தி.மு.க.வும் இடம்பெற்றுச் சேது சமுத்திரத் திட்டத்தை எப்படியாவது குறைந்தபட்சத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டது. அதனையொட்டி, 27-5-2004 அன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் சார்பில் வைக்கப்பட்ட குறைந்தபட்ச செயல்திட்டத்தில், , "Long Pending Schemes in specific States that have national significance, like the Sethu Samuthiram Project....will be completed expeditiously" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டது.

மேலும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிதிநிலை அறிக்கையிலும் சேர்க்கப்பட்டு, மதுரையில் நடந்த சேது சமுத்திரத் திட்டத்தின் பிரமாண்டமான தொடக்க விழாவில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களும், நானும், மற்ற தோழமைக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டோம்.

2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக, அ.தி.மு.க. சார்பில் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில்,

> "தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியிலும், நாட்டின் ஒட்டுமொத்தத் தொழில் மேம்பாட்டிலும் முக்கியப் பங்காற்றவிருக்கும் **சேதுசமுத்திரத் திட்டத்தினை** நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க, மைய ஆட்சியில், அமைச்சுப் பொறுப்பில் ஐந்து ஆண்டு காலம் இருந்த தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., கட்சிகள் தவறிவிட்டதை இந்த நாடு நன்கறியும். இத்திட்டத்திற்குப் போதிய நிதியினை உடனடியாக ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று அமைய இருக்கும் மைய அரசை அ.தி.மு.க. வலியுறுத்தும்'' என்று சொல்லியிருந்தார்கள்.

இப்படிச் சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்ட ஜெயலலிதாதான், தற்போது அதற்கு முட்டுக்கட்டை போடப்படாத பாடுபடுகிறார்.

1955ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நடத்தப்பட்ட எல்லா ஆய்வுகளும்; தொழில் நுட்பரீதியாக இந்தத் திட்டம் சாத்தியமானதுதான் என்றே நிரூபித்திருக்கின்றன. இதில் எள்ளளவு ஐயமும் யாருக்கும் இருந்தது இல்லை.

புதிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர், பா.ஜ.க.வைச் சேர்ந்த திரு. அருண் ஜேட்லி, 9-3-2001 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். இந்த ஆய்வுப் பொறுப்பு, 2001 அக்டோபரில் 'நீரி' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

நாகபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் 'நீரி' (NEERI) என்ற சுற்றுச்சூழல் ஆய்வு மையம் அதனை ஆய்வு செய்து, எந்தக் கேடும் வராத- குறைந்த செலவில் பயணம் செய்ய ஏற்ற - சிறந்த தடம்; ஆறாம் வழித்தடமான, "ஆதாம் பாலம்" பகுதியில் அமைவதுதான் என்று கூறிவிட்டது.

இவ்வாறு கால்வாய் அமைய வேண்டிய வழித்தடம் மற்றும் விரிவான செயல்முறைகள் வாஜ்பாய் அவர்கள் தலைமையிலான பாரதீய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணி அரசினால் பரிசீலிக்கப்பட்டு, 6வது எண் பாதை - அதாவது ஆதாம் பாலம் வழியிலான பாதை என முடிவுசெய்யப்பட்டது. இப்படி பா.ஜ.க. வினரே இந்தப் பாதைக்கு அன்றே ஒப்புதல் தந்துவிட்டு, தற்போது "ராமர் பாலம்" என்று; எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அவர்களை நான் கேட்க விரும்புவது, பா.ஜ.க.வின் மத்திய அரசு 2002ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கு உரிய பின்னணி ஆய்வுகளையெல்லாம் பரிசீலனை செய்து, ஒப்புதல் வழங்கியபோது, இது ராமர் பாலம் உள்ள இடம், இங்கே திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று ஏன் சொல்லவில்லை? அவர்கள் ஆட்சியிலேயே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், அப்போது இது "ராமர் பாலம்" இல்லை என்று சொல்லியிருப்பார்களா?

சேது சமுத்திரத் திட்டத்திற்குச் சுற்றுச் சூழல் ஒப்புதல் பெறுவதற்காக, 2004 செப்டம்பர் முதல் 2005 பிப்ரவரி வரை 6 கடலோர மாவட்டங்களில் பொதுமக்கள் கருத்தறியும் கூட்டங்கள் நடத்தப்பட்டன; இக்கூட்டங்கள் 3 சுற்றுகளாக 14 இடங்களில் நடைபெற்றன. **இந்தக் கூட்டங்கள் எதிலும் ஒரு முறைகூட யார் ஒருவராலும் "ராமர் பாலம்" என்ற பெயர்கூட உச்சரிக்கப்பட வில்லை.**

இறுதியாக 31.3.2005 அன்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் தனது முறையான நடைமுறைகளுக்கும், விரிவான ஆய்வுகளுக்கும் பிறகு, இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் ஒப்புதலை வழங்கியது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள், விசாரணைகள் ஆகியவற்றின் மூலம் இந்த "ஆதாம் பாலம்" கடல் பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு கட்டுமான

அமைப்பும் இருப்பதற்கான உருப்படியான அறிவியல் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை என்பது தெளிவாகி யிருக்கிறது.

தொல்பொருள் துறை ஆய்வுகள் வெளிப்படுத்தும் விவரங்களின்படி, இப்பகுதியில் தொல்லியல் துறை முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு கட்டுமான அமைப்பும் இல்லை என்பதும் தெளிவாகி இருக்கிறது. உறுதியான ஆதாரம் எதுவும் இல்லாத காரணத்தால்தான், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு உட்பட அடுத்தடுத்து வந்த எந்த ஒரு அரசும் இத்திட்டப் பகுதியைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கவும் இல்லை; அதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவும் இல்லை.

பி.ஜே.பி. கட்சியினர், இன்று "ராமர் பாலம்" என்று கூச்சல் கிளப்பி, இத்திட்டத்தைக் கிடப்பில் போட முயற்சி செய்கின்றனர். இதே பி.ஜே.பி., ஆட்சியில் இருந்த கப்பல் துறை அமைச்சர்கள் கையொப்பமிட்டுத்தான், நன்கு ஆராய்ந்த பின்னரே, மற்ற வழித் தடங்களைவிட இதுவே எளிதானது-சிக்கனமானது - விரைந்து செய்யக் கூடியது - என்று உறுதி செய்துள்ளனர். இதை பி.ஜே.பி.யினர் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. 9.3.2001 இல் அமைச்சர் அருண் ஜேட்லி; 25.10.2002இல் அமைச்சர் எஸ்.திருநாவுக்கரசர்; 29.10.2002 இல் அமைச்சர் வி.வி.கோயல்; அதற்கு முன் அமைச்சர் சத்ருகன் சின்கா ஆகியோர் "ஆதாம் பாலம்" வழியிலான 6-வது எண் வழித்தடத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இராமர் பாலம் என்று கூறி அ.தி.மு.க. இன்று இத்திட்டத்தை எதிர்க்கிறது. ஆனால் 2001 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பக்கம் 83-84 இல் ஜெயலலிதா கூறியுள்ளது என்ன?

"இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாகக் கிழக்கு நோக்கிக் கப்பல்கள் செல்ல வேண்டுமானால், இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக அமைவதுதான், சேது சமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி ராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக

உள்ள மணல் மேடுகள் மற்றும் பாறைகளை அகற்றி ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பது சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்”

- என்று கூறப்பட்டுள்ளது. தேர்தல் அறிக்கையில் “ஆடம்ஸ் பிரிட்ஜ்” என்றும், “மணல் மேடுகள்” என்றும் அன்று கூறிய ஜெயலலிதா இன்று திடீரென்று “ராமர் பாலம்” எனக் கூறுவது எப்படி? ஏன்?

உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுக்களில் இராமர், இராமாயணம் பற்றி உண்மைக்கு மாறான எத்தகவலும் யாரையும் புண்படுத்தும் வகையில் சொல்லப்பட வில்லை.

“ராமாயணம் என்பது ஒரு காவியமல்ல. அது திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தைப் பற்றி மிகைப்படுத்தி, பல அறிவிற்குப் பொருந்தாத பல கதைகளைப் புகுத்தி எழுதப்பட்ட ஒரு கற்பனைக் கதை” என்று பண்டித நேரு அவர்கள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்களில் (டிஸ்கவரி ஆப் இண்டியா) குறிப்பிட்டுள்ளார்.

“The Ramayana is not history or biography. It is a part of Hindu mythology” என்று ஆழ்ந்த ராமபக்தரான மூதறிஞர் இராஜாஜி அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

1963ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் நாள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, பண்டித நேரு அவர்களின் அமைச்சரவைக் கூட்டத்தில், சேது திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்முன் நடவடிக்கைப் பட்டியலில் சேர்த்துக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

1972ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலில் வ.உ.சி. சிலையைத் திருமதி இந்திரா காந்தி அம்மையார், முதல்வராக இருந்த என் தலைமையில் திறந்து வைத்தார். அப்போதும் நான் தூத்துக்குடி துறைமுகத்தின் பயன் மேலும் வளர, சேதுக் கால்வாய் திட்டம் மிக மிக அவசியம் என்று பேசினேன்.

10-5-1986 அன்று எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற

வேண்டும் என்று கோரி, ஒரு தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

15-9-1998 அன்று சென்னையில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்துகொண்ட பிரதமர் வாஜ்பாய் "அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவில், நான் அறிவிக்க விரும்புகிறேன்; சேது சமுத்திரத் திட்டத்தை இந்த அரசு விரைவில் நிறைவேற்றும்" என்று பா.ஜ.க. பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அளித்த வாக்குறுதியையே மீறுகின்ற வகையில், பா.ஜ.க. தேசிய கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, வாஜ்பாய் அவர்களுக்கே செய்கின்ற துரோகம் அல்லவா?

நான் குறிப்பிட்டுள்ள இந்தக் கால கட்டங்களில் "ஆடம்ஸ் பாலம்" என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர "ராமர் பாலம்" என்று எந்தக் குறிப்பும் கிடையாது. மேலும் அந்த "ஆடம்ஸ் பாலத்தை" அகற்றிவிட்டு, சேதுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றுதான் வலியுறுத்தப்பட்டிருக்கிறதே தவிர, புதிய பிரச்சினை எதுவும் பகுத்தறிவு பூர்வமான நிலையிலே எழுப்பப்படவில்லை.

பண்டித நேரு - பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்தே பரிசீலனையில் இருந்த இந்தச் சேதுக் கால்வாய்த் திட்டத்தை இப்போது கேள்விக்குறியாக ஆக்கியிருப்பது ராமர்பாலம் பிரச்சினைதான்.

2005ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், சேதுக் கால்வாய்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு, பெருமளவுப் பணிகள் முடிவுற்ற நிலையில் திடீரென்று புதியதாக ஒரு காரணத்தைக்கூறிச் செந்தமிழ் நாட்டுக்குச் செழிப்பும் சிறப்பும் தரவல்ல ஒரு மாபெரும் திட் டத்தை மனம் போன போக்கில் சீரழிக்க நினைக்கிறார்களே, இது நியாயமா என்பதுதான்!

அன்புள்ள,

மு.க.

8-3-2013

3716. இங்குள்ள தமிழர் ஒன்றாதல் காண்போம்!

உடன்பிறப்பே,

12-3-2013 அன்று தமிழகத்தில் பொது வேலை நிறுத்தம்! "டெசோ" அமைப்பின் வேண்டுகோள் இது!

இலங்கையில் சிங்களப் பேரினவாத அதிபர் ராஜபக்சேவால் நடத்தப்பட்ட தெல்லாம் தமிழினப் படுகொலையே; அவர் அடுக்கடுக்காகச் செய்த தனைத்தும் போர்க்குற்றங்களே; அவர் தனது மன சாட்சியை நசுக்கி அழித்துவிட்டு மீறியதெல்லாம் மனித உரிமைகளையே; எனவே அவரைச் சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று அறிவிக்கவேண்டும்;

இலங்கையில் நடத்தப்பட்ட போர்க் குற்றங்கள் பற்றி, நம்பகத் தன்மையுடன் கூடிய சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்;

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 12-வயது மகன், பாலச்சந்திரனைச் சுட்டுக் கொலை செய்தது உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான சிறுவர்களையும், பெண்களையும், முதியோர்களையும் கொன்றழித்த சரித்திரம் காணாத கொடுமைகளுக்கு ராஜபக்சே சர்வதேசச் சட்டப்படி பொறுப்பேற்று, உலக நாடுகளுக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்;

இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையைக் கண்டிக்கும் வகையில் ஐ.நா.மனித உரிமைக் கவுன்சிலில் கொண்டுவரும் தீர்மானத்தை இந்திய அரசு ஒரு நொடியும் தாமதிக்காமல் முழு மனதோடு ஆதரிப்பதாக அறிவிக்க வேண்டும்; இந்திய அரசே, ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் பொது

வாக்கெடுப்புக்கென தக்கதொரு தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்; என்பவைகளுக்காகக் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் - ஜனநாயக நெறி பிறழாமல் - அமைதியான முறையில் - அறவழியில் - ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் - இது நம்முடைய தொப்புள் கொடிச் சொந்தங்களான ஈழத் தமிழர்களுக்காக நாம் கட்டாயம் கடைப்பிடித்தே தீர வேண்டிய அடிப்படைக் கடமை என்ற உணர்வோடு - அனைவரும் பங்கேற்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாகச் சிலருக்குச் சில நடைமுறைச் சங்கடங்கள் ஏற்படலாம். அவற்றையெல்லாம் அன்புகூர்ந்து பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேலை நிறுத்தத்தை "டெசோ" இயக்கத்தின் சார்பில் அறிவித்த காரணத்தால் ஒரு சிலர் தமிழ் இனப்பற்றைத் தங்கள் உள்ளத்திலிருந்து எடுத்தெறிந்துவிட்டு, இது ஏதோ திசை திருப்புகின்ற செயல் என்றெல்லாம் காழ்ப்புணர்ச்சியோடும், எதிர்ப்பு அறிக்கை கொடுக்காவிட்டால் யாரோ கோபப்பட்டு விடுவார்களோ - அதனால் பாதிப்பு ஏற்படுமோ என்பதற்காகவும், ஏதோ ஒரு உள்நோக்கத்தோடும் அறிக்கை விடுத்த போதிலும், இந்த வேலை நிறுத்தம் என்பது முழுக்க முழுக்க இன்னல்களால் உழன்று வரும் ஈழத் தமிழர்களுக்குத் தாய்த் தமிழகம் காட்டுகின்ற ஆதரவு என்ற உணர்வோடு; அதை வெற்றிகரமாக ஆக்கித்தர வேண்டுகின்றேன்.

எங்கே ஈழத் தமிழர் பிரச்சினையில் இங்குள்ள தமிழரெலாம் ஒன்றுபட்டு விடுவார்களோ, அதனால் தி.மு.க.விற்குப் பெயர் வந்து விடுமோ என்ற ஆதங்கத்தில், இப்போதே ஒரு சில "அவாள்" பத்திரிகைகள் இந்தப் பொது வேலைநிறுத்தம் வெற்றி பெறாது என்றும், மற்றக் கட்சிகளின் ஆதரவு இல்லை என்றும் தாங்களாகவே செய்தி வெளியிட்டுக்கொண்டு திருப்தி அடைய எண்ணுகிறார்கள்!

இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்காது ஏதோ ஒரு கடை திறக்கப்பட்டிருக்குமானால், அல்லது யாரோ ஒரு ஆட்டோ ஓட்டுனர் தனது வாகனத்தைச் சாலையில் ஓட்டினால், அல்லது ஒரு தொழில் நிறுவனம் தனது ஒரு நாள் இலாபமே பெரிது என்று

திறந்து வைத்தால், அவர்கள் எல்லாம் நம்முடைய ஈழத் தமிழர்கள் பால் ஆழ்ந்த பற்றற்றவர்கள் அல்லது ஈழத் தமிழர்களின் துன்ப துயரங்களையும், பிரச்சினைகளையும் முழுமையாகப் புரிந்து கொள்ளாதவர்கள் என்று ஆகிவிடும்.

பிரபாகரனின் மகனாகப் பிறந்த ஒரே குற்றத்திற்காக, பள்ளிக்குச் சென்று பயில வேண்டிய பச்சிளம் பாலகன், பாலச்சந்திரன் தன்னைக் கொலை செய்யப் போகிறார்கள் என்று புரிந்துகொள்ளக்கூட முடியாத பருவத்தில், அவன் மார்பிலே ஐந்து குண்டுகளைப் பாய்ச்சினார்களே, குலை நடுங்கும் அந்தக் கோரக் கொடுமைகளைக் கண்ட பிறகும், இந்தப் பொது வேலை நிறுத்தம் என்பது திசை திருப்பும் செயல் என்றோ, தேவையில்லாத ஒன்று என்றோ நினைக்க முடிகிறதா?

லண்டனைத் தலைநகராகக் கொண்ட 'சேனல்-4' தொலைக்காட்சி நிறுவனம் எத்தனையோ ஆபத்துக்கிடையே படம் எடுத்து, தயாரித்த அந்தக் கொடுமையான காட்சிகள்தான் எத்தகையவை? பாலச்சந்திரன் கைக்கும் வாய்க்கும் இடையே ரொட்டித் துண்டுடன் இருந்ததையும், அடுத்த படத்தில் அவன் துப்பாக்கிக் குண்டுகளை நெஞ்சில் தாங்கிப் பிணமாகக் கிடந்ததையும் விளக்கிடும் காட்சி; தாயும் குழந்தையும் ஒன்றாகக் கட்டிப் பிடித்துக்கொண்டு வீழ்ந்து கிடந்த காட்சி; அப்பாவிப் பெண்கள் ஆடைகள் நீக்கப்பட்டு, நிர்வாண நிலையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கும் காட்சி ; விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கர்னல் ரமேஷ் என்பவர் முகம் சிதைந்த நிலையில் கொல்லப்பட்டுப் பிணமாகக்கிடக்கின்ற காட்சி; பெண்புலி இசைப்பிரியா என்ற இளம்வயது பெண்ணைச் சிங்கள ராணுவம் சீரழித்து, படுகொலை செய்த காட்சி; ஆண்களை நிர்வாணமாக்கி, கண்களைக் கட்டி, கைகளைப் பின்னால் கட்டி, முதுகிலே சுட்டுக் கொல்கின்ற காட்சி; ஆகிய இதயத்தைக் கசக்கிப் பிழிந்திடும் காட்சிகளையெல்லாம் கண்ட பிறகும், இந்த ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் நாம் கலந்துகொள்ளாவிட்டால் அந்தச் சிங்களக் காடையரின் கொடுமைகளையெல்லாம் நாம் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொண்டவர்களாகிவிட மாட்டோமா?

பாதுகாப்பு வளையங்கள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும், மருத்துவமனைகளிலும் கொத்துக் கொத்தாகக் குண்டுகள் வீசப்பட்டுத் தமிழர்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்ட

கொடூரத்தைக் கண்டதற்குப் பிறகும் - தமிழினத்தின் பண்பாட்டுக் கூறுகளை அழித்திடும் நோக்கில் அவற்றின் வேர்களைச் சிதைத்திடும் கொடுமையான முயற்சிகளையும், தமிழர்களுடைய பூகோள அடிப்படையிலான வாழ்க்கை நெறிகளை அழித்திடும் முனைப்பையும் கண்டதற்குப் பிறகும் - ஈழத்தமிழர்களின் கல்விக் கூடங்கள், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் ஆகியவற்றைத் தகர்த்தும், தமிழர்களின் மொழி அடையாளத்தைச் சிதைத்தும், நூற்றுக்கணக்கான தமிழ் ஊர்ப் பெயர்களை மாற்றியும், இலங்கையில் நடைபெற்று வரும் சிங்களமயமாக்கலையும், ஆக்கிரமிப்பு அக்கிரமத்தையும் கண்டதற்குப் பிறகும் - இவற்றையெல்லாம் கண்டிப்பதற்காக நடைபெறும் வேலை நிறுத்தம் தேவையற்றது, திசை திருப்பும் செயல் என்றெல்லாம் கூறுவது மனசாட்சிக்கு மாறான கூற்றா இல்லையா?

நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர்கள் பற்றிய விவாதம் நேற்றையதினம் நடைபெற்றபோது நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் தம்பி டி.ஆர்.பாலுவின் குரலோடு இணைந்து, பா.ஜ.க. போன்ற கட்சிகள் எல்லாம் பிரச்சினையின் கடுமையை உணர்ந்து, தாமாகவே முன்வந்து நம்முடைய இனத்திற்காகக் குரல் கொடுக்கின்ற நிலையில், மத்திய அரசு தனது பதிலில் நாம் எதிர் பார்த்த அளவிற்கு உறுதி அளிக்காத நிலையில், அதற்கு மேலும் அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் இருப்பதால், ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டியது நம்முடைய கடமை அல்லவா?

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து எத்தனையோ ஆண்டுக் காலமாகக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்; சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்; சிறைபிடிக்கப்படுகிறார்கள்; அவர்களின் மீன்பிடிச் சாதனங்கள் எல்லாம் கடலிலே தூக்கி வீசி எறியப்படுகின்றன; பிடித்த மீன்கள் எல்லாம் கைப்பற்றப்படுகின்றன; மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள். நேற்றையதினம்கூட ஒரேநாளில் தமிழக மீனவர்கள் மூன்று இடங்களில் துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி ஒவ்வொரு முறையும் மீனவர்கள் கலக்கமடைந்து கண்ணீர் சிந்துவதும், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதும், தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சியினரும் அதற்காக அறிக்கைகளை வெளியிடுவதும், அரசின்

சார்பில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவதும், மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு மீனவர்களை விடுவிக்க முயற்சிப்பதும் என்பது நீண்ட தொடர்கதையாக நிகழ்ந்து வருகின்றது. அவர்களின் நெடுங்காலப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையோடு நடைபெறும் இந்தப் பொதுவேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளிப்பது என்பது ஒவ்வொருவரின் கடமை என்ற உணர்வோடு பங்கேற்க முன்வர வேண்டாமா?

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் - அதிலே நம்மிடையே உள்ள சகோதர யுத்தத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது - நம்மிடையே ஒற்றுமை உள்ளது என்றாலே சிங்கள அரசு அஞ்சி நடுங்கும் என்று எண்ணித்தான், "டெசோ" சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதுகூட, கட்சிச் சார்பற்ற முறையில் அரசியல் காழ்ப்பில்லாமல் ஈழத் தமிழர்களுக்காக இங்குள்ள தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நடத்தும் வேலை நிறுத்தம் இது என்று அறிவித்தோம். அந்தத் தீர்மானத்தை அ.தி.மு.க. கூட எதிர்த்து ஒரு வார்த்தை கூறாததற்கு முன்பாகவே, நம்முடைய தீர்மானத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தாலே, அது யாருக்கோ "குளுகுளு" என்றிருக்கும் என்ற எண்ணத்தோடு, இந்த வேலை நிறுத்தத்தைத் திசை திருப்பும் முயற்சி என்று ஒருசிலர் அறிக்கை விடுகிறார்கள். இவர்களின் இந்த அறிக்கையைப் படிக்கும் உலகத் தமிழர்களும், ஈழத் தமிழர்களும் என்னதான் எண்ணிக் கொள்வார்கள்? தேர்தலில் இவர்களுக்கு இரண்டொரு இடங்கள் வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் தம்மை மறந்து - தரம் தாழ்ந்து அறிக்கை விடுகிறார்களே, கடந்த காலங்களில் நம்மிடம் பாசமாக இருப்பதைப் போல எப்படி யெல்லாம் நேச வேடம் போட்டார்கள் என்று எண்ணிக்கொள்ள மாட்டார்களா?

அவர்கள் எப்படியோ போகட்டும்; அவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நம்மைப் பொறுத்தவரையில் நாம் தெளிவாக இருக்கிறோம். ஒரு சிலரைத் தவிர, மற்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் நம்மைத் தொடர்பு கொண்டு இந்த வேலை நிறுத்தத்திற்குத் தங்களின் முழு ஒத்துழைப்பையும் தருவதாகத் தெரிவித்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் - அவர்களுடைய தமிழ் இன உணர்வைப் போற்றி, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக ஒரு நாள் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய பொதுமக்களிடம், நம்மினத்தவர் இலங்கையிலே நாளும் நாளும் செத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்காக நாம் செய்கின்ற எள்ளளவு தியாகம் என்ற உணர் வோடு, அதனை ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வேலை நிறுத்தத்தின்போது, பெரிய தொழில் நிறுவனங்கள் முதல் சிறிய சிறிய நிறுவனங்கள் - பெரிய, சிறிய வர்த்தக நிறுவனங்கள் - கடைகள் அனைத்தும் மூடப் பட்டிருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். சாலைகளிலே ஆட்டோக்கள் ஓடக் கூடாது என்றும், திரைப்படத் துறையைச் சார்ந்தவர்கள் அன்று ஒரு நாள் பன்னிரண்டு மணிநேரம் தங்கள் தியேட்டர்களை மூடி, காட்சிகளை நிறுத்த முன்வரவும் வேண்டுகிறேன்.

தனியார் மற்றும் அரசுப் பேருந்துகள்; ஏன் இந்திய அரசே முன் வந்து அன்றையதினம் புகைவண்டிகள் மற்றும் விமானங்கள் தமிழகத்திலே ஓடாது என்று அறிவித்திட வேண்டும்; தமிழக அரசின் பொறுப்பிலே இருப்போரும், இந்த வேலை நிறுத்தம் என்பது நம்முடைய இன மக்களுக்காக நடைபெறுகின்ற ஒன்று என்ற உணர்வோடு அரசு அலுவலகங்களையெல்லாம் அன்று ஒரு நாள்-12 மணி நேரம், இந்தப் பொது வேலை நிறுத்தத்திற்காக விடுமுறைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது இலங்கை அரசுக்கான கண்டனம் மாத்திரமல்ல; அங்கே வாழ்ந்து மறைந்த ஈழத் தமிழர்களுக்காகக் கண்ணீர் அஞ்சலியுடன், இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்களுக்காக தாய்த் தமிழகம் காட்டுகின்ற ஆதரவு - அரவணைப்பு என்ற உணர்வோடு, இந்த வேலை நிறுத்தத்தில் நம்முடைய ஒற்றுமையை உறுதியாக வெளிப்படுத்திட முன்வர வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

ஈழத் தமிழர்களுக்காக எத்தனையோ வகைப் போராட்டங்களை 1956ஆம் ஆண்டிலிருந்து நடத்திப் பழக்கப்பட்ட தி.மு. கழகத்தின் தலைவன் என்ற முறையிலும், "டெசோ" இயக்கத்தின் தலைவன் என்ற முறையிலும், தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், கட்சியினருக்கும், அனைத்துப் பொதுமக்களுக்கும், சமுதாயத்தின்

எல்லாப் பிரிவினர்க்கும், தோழமைக் கட்சிகளின் சோதரர்க்கும், கழக உடன்பிறப்புக்களுக்கும் நான் விடுக்கின்ற வேண்டுகோள் இது!

மார்ச் 12 - காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை! 12 மணிநேரம்! தமிழகமே ஒன்று திரண்டு வேலை நிறுத்தத்தில் அழுத்தமாக நின்றது என்று தெரிந்தாலே ராஜபக்ஷே நடுங்குவார். அதற்கொரு வாய்ப்பு என்ற முறையில் இந்த வேலை நிறுத்தத்தில் அனைவரும் ஆர்வத்தோடு பங்கேற்பீர்! எப்போதும்போல இந்த வேலை நிறுத்தத்தில் மருத்துவமனைகள், பத்திரிகை அலுவலகங்கள் போன்ற அத்தியாவசியச் சேவைகளுக்கும்; இது தேர்வு நேரம் என்பதால் பள்ளிகள், கல்லூரிகளுக்கும்; விதி விலக்கு உண்டு.

பாவிகளின் கொலைவெறிக்கு பலியான பாலகன்
பாலச்சந்திரனின் மரணத்திற்குப் பிறகும்,

இந்த வேலை நிறுத்தத்தைக் களங்கப்படுத்த
நினைப்போர் –

திசை திருப்பிக் குளிர்காய எண்ணுவோர் –

எவராயினும், தமிழ் இனம் சகித்துக் கொள்ளாது!

அவர்கள் யார் என்று புரிந்துகொள்ளும்!

பொது வேலை நிறுத்தம் வெற்றி வெற்றி என்ற செய்தியை, இன்னல்களுக்கு ஆளாகியிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு ஆறுதலாக வழங்குவோம்! சங்கம் முழங்கிடுவோம்! "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே" என்று சங்கம் முழங்கிடுவோம்!

அன்புள்ள,
மு.க.
9-3-2013

3717. மதுரவாயல் திட்டமும் அரோகரா! ஏன்? ஏன்?

உடன்பிறப்பே,

2006 தமிழகச் சட்டசபைத் தேர்தலையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடிக்குப் பெரிதும் உள்ளாகியுள்ள பகுதிகளில் "பறக்கும்சாலைத் திட்ட"த்தை (Elevated Highway) செயல்படுத்துவோம்" என்று வெளியிட்டிருந்ததை அடுத்து, தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், 5.6.2006 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், சென்னைத் துறைமுகத்திற்கு உயர்மட்டப் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை அனுமதித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டேன்.

தம்பி டி.ஆர். பாலு போன்றவர்கள் தொடர்ந்து முயற்சியெடுத்து, சென்னைத் துறைமுகத்தையும், மதுரவாயல் சந்திப்பையும் இணைக்கும் மேம்பாலச் சாலை ஒன்றினை 1655 கோடி ரூபாய்ச் செலவில் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்ததோடு, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களே நேரில் வந்து 8.1.2009 அன்று முதலமைச்சராக இருந்த என் தலைமையில், அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

இந்தத் திட்டத்தின் மதிப்பு பின்னர் 1,815 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதில் பெரும்பகுதி நிதி ஒதுக்கீடு மத்திய அரசின் நிதியாகும். இது, இந்தியாவிலே மிக நீளமான உயர்மட்டச் சாலையாக அமையும் என்றும் அப்போதே அறிவிக்கப்பட்டது.

சென்னைத் துறைமுகத்திலிருந்து தங்கு தடையற்ற சரக்குப் பெட்டகப் போக்குவரத்திற்கு வழிவகை செய்வதற்காக கூவம் ஆற்றின் ஒரு கரையோரமாகப் பறக்கும் விரைவுச் சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குத் தமிழக அரசு

22-6-2007 அன்று கொள்கை அளவில் அனுமதி வழங்கியது. இந்த மேம்பாலச் சாலை அமைப்பதற்குத் தேவைப்படும் நில எடுப்புக்கான செலவுத் தொகையையும், மற்றும் இத்திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வு அளித்தல், மறு குடிஅமர்வுக்கு வகை செய்தல் ஆகியவற்றுக்காக ஏற்படும் செலவினத்தையும் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகமும், தமிழ்நாடு அரசும் 50க்கு 50 என்கிற விகிதாச்சார அடிப்படையில் ஏற்பதற்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் தமிழக அரசுக்கு 130 கோடி ரூபாய் செலவாகும்.

இதைத் தவிர, இந்த உயர்மட்ட பறக்கும் சாலை அமைப்பதையொட்டி இப்பகுதிகளில் மாசுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதி பெறுதல், குடிநீர்க் குழாய்கள், கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் மின்கம்பங்கள் ஆகியவற்றை இடமாற்றம் செய்தல் போன்ற பணிகளுக்காக இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட இது போன்ற மிகப் பெரிய திட்டங்கள் என்றால், இன்றைய தமிழக முதல்அமைச்சருக்கு எப்படித்தான் இருக்குமோ, அவற்றுக்கு மூடு விழா நடத்துவதற்கு என்ன வழி என்றுதான் பார்ப்பார்! ஒரு முக்கியமான உதாரணம் புதிய தலைமைச் செயலகம் போதாதா? தலைமைச் செயலகமும், பேரவையும் நடத்துவதற்காகவே ஆழ்ந்து சிந்தித்துத் திட்டமிட்டு, அமைச்சர்களுக்கான அறைகள் எல்லாம் வரிசையாகக் கட்டப்பட்டுப் பிரதமரையும், சோனியா காந்தி அம்மையார் அவர்களையும் அழைத்து வந்து முதலமைச்சராக இருந்த என் தலைமையில் திறப்பு விழாவும் நடத்தி, பார்த்தவர்கள் எல்லாம் வியந்து பாராட்டிய கட்டிடத்தை, மருத்துவமனையாக மாற்றப் போகிறார்களாம்! தலைமைச் செயலகமாக அது இயங்கக்கூடாதாம்; ஆனால் மருத்துவமனையாக மட்டும் இயங்கலாமாம்! மருத்துவமனை யாக இயங்குவதற்குத் தகுதியான கட்டிடம், தலைமைச் செயலகமாக ஏன் இயங்கக் கூடாது? எப்படிப்பட்ட மனோபாவம் கொண்டவரை தமிழகம் முதலமைச்சராகப் பெற்றிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா என்ன?

தலைமைச் செயலகத்தைப் போலவேதான் தமிழர்களின் நெடுங்காலக் கனவான சேது சமுத்திரத் திட்டம் ; பிரதமரும், சோனியா காந்தி அம்மையாரும் மதுரைவரை நேரில் வந்து, என் தலைமையில் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி னார்கள். அ.தி.மு.க.வும் தேர்தல் அறிக்கையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று குறிப்பிட்ட திட்டம்தான். ஆனால் இப்போது அ.தி.மு.க. அரசு, அந்தத் திட்டத்திற்கு எப்படியெல்லாம் முட்டுக்கட்டை போட எண்ணுகிறது. அந்த வரிசையிலேதான், இந்த மதுரவாயல் சாலைத் திட்டத்தை பிரதமரே நேரில் வந்து அடிக்கல் நாட்டினார் அல்லவா? அம்மை யாரால் எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்?

இந்தத் திட்டத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நேரத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இக்பால் அவர்களும், நீதிபதி சிவஞானம் அவர்களும் இந்தத் திட்டத்தைத் தொடரலாம் என்று தீர்ப்பளித்ததையும் தற்போதைய தமிழக அரசு பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பணிகள் வேகமாக நடைபெற்று வந்த நேரத்தில், 2012ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அ.தி.மு.க. ஆட்சியினர் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லித் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

29-1-2013 தேதிய "இந்து" நாளிதழில் தமிழக அரசு இந்தத் திட்டத்தை தொடருவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாகவும், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வந்த தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்திற்கு அதுபற்றிக் கடிதம் எழுதியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அந்த செய்திக் கட்டுரையை முடிக்கும்போது, "The Tamil Nadu Government is yet to complete its share of the work in terms of relief and rehabilitation of dwellers along the Cooum River and acquisition of the land" என்றும் எழுதியிருந்தது.

இந்த சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் திட்டத்திற்கான பணிகள் பற்றி, 6ஆம் தேதிய "இந்து", 7ஆம் தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா", 8ஆம் தேதிய "தினத்தந்தி" நாளேடுகள் செய்திகள் வெளியிட்டுள்ளன. அவற்றில் வந்துள்ள தகவல்படி, கடந்த ஓராண்டாக மீண்டும் தொடங்குவதற்கான அறிகுறிகூடத் தெரியவில்லை. இந்தத் திட்டத்தை நிறுத்திவைத்தத் தமிழக அரசின் நீர்வள ஆதாரத்துறை, இந்திய தேசிய நெடுஞ்சாலை

கு 874-8116
தினை. 48

ஆணையத்திற்கு எழுதிய கடிதத்தில், இந்தத் திட்டத்திற்கான வழித்தடத்திற்குப் புதிதாக அனுமதியும், கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒப்புதலும் பெற வேண்டுமென்று கூறியிருந்தது. அதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், திட்டத்தின் வழித் தடத்தில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படாததால், புதிதாக அனுமதியும், கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் ஒப்புதலும் பெறத் தேவையில்லை என்று தெரிவித்துவிட்டது.

மேலும், இந்தத் திட்டத்தால் கூவம் ஆறு தூர் வாரப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்; கூவம் ஆற்றின் கொள்ளளவு அதிகரிக்கும்; எதிர்காலத்தில் கூவம் ஆற்றங்கரையில் ஆக்கிரமிப்பு செய்யப்படுவது தடுக்கப்படும்; கூவம் ஆற்றங்கரையோரத்தில் வசிப்பவர்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும் என்றெல்லாம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தைத் தொடரவிடாமல் அ.தி.மு.க. அரசு தடுத்துவிட்ட காரணத்தால், இந்தப்பணிகளை மேற்கொண்டு வந்த "சோமா" நிறுவனம், தனக்கு நஷ்ட ஈடாக 668 கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்று தற்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் கோரியுள்ளது. அந்தக் கடிதத்தில், "தமிழக அரசு இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி, கூவம் ஆற்றங்கரையோரத்தில் வசிக்கும் 6,100 குடும்பத்தினரையும், சிந்தாதிரிப் பேட்டையில் 458 வணிகக் கட்டிடங்களையும் அப்புறப் படுத்தித் தருவதாக இருந்தது. ஆனால் அதைச் செய்து நிலத்தை ஒப்படைக்காததால் திட்டப்பணிகள் தாமதமாகின்றன. இந்தத் திட்டத்தால் தமிழக அரசும், சென்னைத் துறைமுகமும்தான் பெரிதும் பயனடைய உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்திற்குத் தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும். இல்லாவிட்டால், திட்டப் பணிகள் கடுமையாகப் பாதிக்கும். அதன் காரணமாகக் கட்டுமானப் பணிக்கான செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல பாதிப்புகள் ஏற்படும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே கழக அரசில் திட்டமிட்டபடி இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், வரும் செப்டம்பர்த் திங்களில் பணிகள் முடிந்து, சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே

4 வழி அதிவிரைவு பறக்கும் சாலையில் போக்குவரத்து தொடங்கியிருக்கும். ஆனால் இதுவரை 500 கோடி ரூபாய்ச் செலவு செய்து 20 சதவிகிதப் பணிகளே முடிந்துள்ளன.

இந்த நிலையில் மதுரவாயல் அதிவிரைவு பறக்கும் சாலைப் பிரச்சினை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படப் போவதாக ஏடுகளில் செய்திவந்துள்ளது. ஏற்கனவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டிருக்கும் தடைகளை அகற்றித் திட்டம் வேகமாகக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் முடிவடைவதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவருகிறது. இதற்கிடையே, இதே பிரச்சினைக்காக இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நீதிமன்றத்தை நாடப் போவதாகவும், "திட்டத்தை மீண்டும் உயிர்ப்பித்து நிறைவேற்றுவதற்குச் சட்டரீதியான வழிமுறையைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தோன்றவில்லை" என்று அந்த ஆணையத்தின் அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகவும் செய்தி வெளிவந்துள்ளது.

இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தமிழக அரசின் அணுகுமுறையால் மிகுந்த கவலைக்குள்ளாகியுள்ளது. இது போன்ற மிகப் பெரும் கட்டமைப்புக்கான திட்டங்கள் மற்ற மாநிலங்களில் எவ்விதத் தடையுமின்றி மாநில அரசுகளின் மனப்பூர்வமான ஒத்துழைப்போடும், உதவியோடும் வேகமாக நிறைவேறி வருகின்ற நிலையில் தமிழகத்தில் மட்டும்தான் மாநில அரசின் எதிர்மறை அணுகுமுறையின் காரணமாகத் திட்டம் தாமதமாகி வருகிறது.

மாநில அரசின் சார்பில் அடுக்கடுக்காக அய்யப்பாடுகள் எழுப்பப்பட்ட போதெல்லாம் தேவையான விளக்கங்களை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அளித்தும்கூட, ஏற்கனவே ஏற்பட்ட தாமதம் தொடர்ந்து நீடித்து வருகிறது. மத்திய அரசின் சார்பில் துறையின் அதிகாரி திரு. ஏ.கே. உபாத்யாய் அவர்களும், பிரதமரின் ஆலோசகர் திரு. டி.கே.ஏ. நாயர் அவர்களும் தமிழகத்தின் தலைமைச் செயலாளரைச் சந்தித்து திட்டம் விரைவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து தேவையான விளக்கங்களையெல்லாம் அளித்தும்கூட, தாமதம் தடுக்கப்படவில்லை.

"சென்னைத் துறைமுகத்திற்கு இந்தத் திட்டத்தின் மூலம் தனிச் சிறப்பு மேம்பாலச்சாலை உருவாக்கப்படாவிட்டால் சென்னைத் துறைமுகத்தையே மூட வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாக ஆகிவிடக் கூடும்" என்றே "டைம்ஸ் ஆப் இந்தியா" செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில்தான் இந்தப் பணிகளை மேற்கொண்டுவந்த "சோமா" நிறுவனம் தமிழக அரசினால் ஏற்பட்ட தாமதம் காரணமாகத் தங்களுக்கு நஷ்ட ஈடாக 668 கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்று தற்போது நிர்ப்பந்தம் செய்கின்ற நேரத்தில், இவ்வளவு பெரிய தொகையை யார் கொடுப்பது? காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்தத் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்ட தமிழக அரசின் தலையில் அல்லவா இந்த நட்டம் வந்து விழும்! அ.தி.மு.க. அரசின் இந்த "வெறுப்பு அரசியல்" காரணமாகத் தமிழகத் திற்குப் பொருள் இழப்பு மாத்திரமல்ல; இந்தத் திட்டத்தின் காரணமாகத் தமிழக மக்கள் அடையவிருந்த நன்மைகளும் சேர்ந்து பாதிக்கப்படுகின்றன என்பதை இப்போதாவது தமிழக மக்கள் புரிந்து கொள்வார்களானால், இனியாவது தமிழகம் உருப்படும்!

அன்புள்ள,

மு.க.

10-3-2013

3718. உடன்பிறப்பே!
உன்னை அழைக்கிறேன் வா!

உடன்பிறப்பே,

"டெசோ" சார்பில் ஈழத் தமிழர்களுக்காக நாம் நடத்தவிருக்கின்ற பொதுவேலை நிறுத்தத்திற்கு இடையிலே இன்னும் ஒரே ஒரு நாள் இருக்கின்றது.

ஈழத் தமிழர் பிரச்சினை உலக நாடுகளின் கேந்திர மையமான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திலும், இந்திய நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியிலும் பரபரப்போடு பேசப்பட்டு, பல்வேறு வகையான கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற நிலையில், அதற்கு முன்பே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையமே, 38 பக்கங்கள் கொண்ட ஓர் அறிக்கையைத் தயாரித்து, அதன் தலைவர் திருமதி நவநீதம்பிள்ளை அவர்கள் 11-2-2013 அன்று சமர்ப்பித் திருக்கிறார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில முக்கியமான விவரங்கள் :-

- இலங்கையில் போர் நடந்த நேரத்தில் பெரியவர்களும், சிறார், சிறுமிகளுமாகப் பல ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போய் உள்ளனர். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, மீண்டும் அவர்களது இடத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை சரியாகச் செயல்படுத்தவில்லை. எனவே காணாமல் போனவர்கள் பற்றிச் சர்வதேச விசாரணை தேவை.
- தமிழர்கள் வசிக்கும் பகுதியில் இன்னமும் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது; அவர்கள் ஏன் திரும்பப் பெறப்படவில்லை?

- ராணுவம் வாபஸ் பெறப்படாததுடன், மேலும் மேலும் குவிக்கப்படுவதால், அங்கு வசிக்கும் தமிழ்ப் பெண்கள், சிறுமிகள் மத்தியில் பாலியல் பலாத்கார அச்சம் நிலவுகிறது.
- உள்நாட்டுப் போருக்குப்பின் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகள், மீள் குடியமர்த்துதல் போன்றவை சரியாக நிறைவேற்றப்படவில்லை.
- மனித உரிமைகள் மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதாகச் சொன்ன இலங்கை அரசு அது குறித்து முழுமையான விசாரணை நடத்தவில்லை. புலம் பெயர்ந்தவர்களைக் குடியமர்த்தும் பணியைக் கூடச் செயல்படுத்தவில்லை.
- இலங்கை நடத்திய போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத் தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையமே இந்த அளவிற்குச் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கின்ற நிலையில் - ஈழத் தமிழர்களுக்காக - அவர்கள் தொடர்ந்து அனுபவித்துவரும் சோகங்களை எண்ணி, இரவும் பகலும் நாம் துடித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நமக்கு ஆறுதல் அளித்து - ஈழத் தமிழர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட வேண்டிய மத்திய அரசின் ஒருசில நடவடிக்கைகள் நம்மை வேதனைத் தீயில் ஆழ்த்துபவையாக அல்லவா உள்ளன! குறிப்பாக நம்முடைய வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு சல்மான் குர்ஷித் அவர்களுடைய ஈரமில்லாத உரைகளைக் குறிப்பிட்டாக வேண்டும்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானம் குறித்து, அமெரிக்காவுடன் இலங்கை அரசு பேச்சு நடத்திய பிறகு, அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதா, வேண்டாமா என்பது குறித்து இந்திய அரசு முடிவு செய்யும்" என்று சொல்லியிருக்கிறார். மேலும் அவர், "அந்தத் தீர்மானம் தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சு நடத்திச் சுமூகத் தீர்வு எட்டும்

வாய்ப்பை ஆராயும்படி இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல். பெரிஸைக் கேட்டுக்கொண்டுள்ளேன். தனக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழியாமல் அமெரிக்காவைத் தடுக்கும் வாய்ப்புகளை இலங்கை அரசு ஆராய வேண்டும். அதுவரை சம்பந்தப்பட்டவர்கள் காத்திருக்க வேண்டும்" என்றெல்லாம் கூறியிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல உள்ளது. நமது படை வரிசையில் முன் நின்று நமக்காகப் போரிட வேண்டிய தளபதி, எதிரிப்படையின் முன் வரிசையில் நின்று அவர்களுக்கு ஆலோசனைகளை வாரி வழங்குவதைப் போலத்தான் இந்த அமைச்சரின் பதில் அமைந்துள்ளது.

செய்தியாளர்களிடம் மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. போன்ற அகில இந்தியக் கட்சிகள் எல்லாம் இலங்கை அரசைக் கண்டித்துக் கடுமையாக வாதங்களை எடுத்துவைத்திருக்கிறார்கள். கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் தம்பி டி.ஆர். பாலு பேசும்போது "இலங்கையில் போரின் போது 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக ஆக்கப்பட்டனர்; சுமார் இரண்டு லட்சம் ஆண்களும், குழந்தைகளும் காணாமல் போயினர்; ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்தனர்; இரண்டாவது உலகப்போர், போஸ்னியா, ஈராக், தெற்கு சூடான் உள்நாட்டுப் போர்கள் ஆகியவற்றைவிட இலங்கை உள்நாட்டுப் போர் மிக மோசமானது" என்று வேதனைகளைக் கொட்டினார்.

தம்பி தயாநிதி மாறன் பேசுகையில், "ராஜீவ்காந்தி ஆட்சியின்போது இலங்கையில் தமிழர்களுக்காக இந்தியா உணவுப் பொட்டலங்கள் போட்டபோது, இந்தியன் என்பதற்காகப் பெருமைப்பட்டேன். இலங்கை ராணுவத்தினரின் போர்க் குற்றங்களை 'சேனல் 4' தொலைக்காட்சி அம்பலப்படுத்தியுள்ளது. இந்திய அரசின் நடவடிக்கைகளை இளைஞர்களும், வெளிநாடுவாழ் தமிழர்களும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டுள்ளனர். இந்தியா என்ன செய்யப் போகிறது என்று உலகமே பார்க்கிறது. இந்தியா இந்த விவகாரத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உருக்கத்தோடு வேண்டிக் கொண்டார்.

பா.ஜ.க. சார்பில் பேசிய அந்தக் கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவரான திரு.யஷ்வந்த் சின்கா அவர்கள், "இலங்கையில் வடக்கு மாகாணத்தில் நிறுத்தப்பட்டுள்ள

ராணுவத்தை உடனே அகற்ற இலங்கை அரசை இந்தியா கேட்டுக் கொள்ள வேண்டும். இலங்கை இனப்படுகொலை தொடர்பாக வெளியில் உள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள் நடத்தும் பாரபட்சமில்லாத சர்வதேச விசாரணைக்கு இந்தியா குரல் கொடுக்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கும் நாடாக மட்டும் இந்தியா விளங்கக் கூடாது ; இந்தியாவே அந்தத் தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்லும் நாடாக இருக்க வேண்டும்" என்றே பேசினார்.

ஏன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய நமது நண்பர் திரு. கே.எஸ். அழகிரி அவர்கள், "இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வலியுறுத்தி உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் குரல்கொடுத்து வருகின்றனர். அதை இந்தியாதான் செயல்படுத்த முடியும் என அவர்கள் நம்புகின்றனர். அதனால், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தம்பி தொல். திருமாவளவன் பேசும்போது, "நாம் நினைக்கிறபடி இலங்கை ஒரு நாளும் நட்பு நாடாக இருந்தது இல்லை. இலங்கைத் தலைவர்கள் இங்கே வருகிறபோது சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கிறோம், ஆனால் நமது தலைவர்கள் அங்கே சென்றால் தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். இந்தியாவை இலங்கை பல்வேறு கட்டங்களில் அவமதித்து இருக்கிறது. எனவே இந்தியா, இலங்கை மீதான தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று முழக்கமிட்டிருக்கிறார்.

மேலும் அ.தி.மு.க.வின் சார்பில் திரு. தம்பிதுரையும், ராஷ்ட்ரீய ஜனதா சார்பில் திரு.லாலுபிரசாத்யாதவ் அவர்களும், சமாஜ்வாடி கட்சியின் சார்பில் திரு. முலாயம்சிங் யாதவ் அவர்களும், மார்க்சிஸ்ட் உறுப்பினர் திரு. பி.ஆர். நடராசன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் திரு.லிங்கம் அவர்களும், திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் சவுக்கத்தாராய் அவர்களும், பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் தாராசிங் அவர்களும், இலங்கைத் தமிழர்களுக்காக அங்கே குரல் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் நாம் யாரிடமிருந்து ஒரு உறுதியான - திடமான அறிவிப்பு கிடைக்குமென்று எதிர்பார்த்

திருந்தோமோ, அவர்களிடமிருந்து ஏமாற்றம்தான் இதுவரை கிடைத்திருக்கிறது. விவாதத்திற்குப் பதிலளித்த சல்மான் குர்ஷித் பேசும்போது, "நட்பு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட்டு அங்கு அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என நெருக்குதல் கொடுப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. "பெரியண்ணன்" போலவும், "சூப்பர் போலீஸ்" போலவும் செயல்படுவது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு உகந்தது அல்ல" என்றெல்லாம் பேசியிருப்பதும்; காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர், அபிஷேக் சிங்வி பெங்களூரில் அளித்த பேட்டியில், "இந்திய அரசு இந்தப் பிரச்சினையை நடுநிலையோடு சீர்தூக்கிப் பார்க்கிறது. நாங்கள் எந்த ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையிலும் தலையிடமாட்டோம். அதுவும், அண்டை நாடு, இந்தியாவின் மதிப்பு மிக்க நட்பு நாடான இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடமாட்டோம்" என்று கூறியிருப்பதும், உலகத் தமிழ் மக்களிடையே மிகப் பெரிய வருத்தத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

குடியரசுத் தலைவர் உரைக்குப் பதிலளித்த பிரதமர் பேச்சிலும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து எந்தவிதமான உறுதியும் தரப்படவில்லை. இலங்கையிலே உள்ள தமிழர் தலைவர்களுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்.

மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது என்ற வெளிநாட்டுக் கொள் கையைக் கடைப்பிடித்திருந்தால் பண்டித நேரு அவர்கள் தென்னாப்பிரிக்காவின் நிறவெறிப் பிரச்சினையில் தலையிட்டிருக்க முடியுமா? வங்காளதேசத்தில் விடுதலை வீரர் முஜிபூர்ரகுமானுக்கு அன்னை இந்திராகாந்தி அம்மையார் உதவிக்கரம் நீட்டி விடுதலைக்கு உறுதுணை புரிந்திருக்க முடியுமா? என்ற கேள்விகளை யெல்லாம் வரலாற்றை உன்னிப்பாகக் கவனித்து வரும் உலகத் தமிழர்கள் கேட்கமாட்டார்களா?

நாடாளுமன்றத்தில் அமைச்சரின் பதிலுரைக்குப் பிறகு, தி.மு.க. உட்பட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் அவையிலிருந்தே வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

"இலங்கையின் போர்க் குற்றங்களுக்குப் போதுமான, நிரூபிக்கத்தக்க ஆதாரங்கள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையம் சுதந்திரமானதொரு விசாரணையை நடத்த வேண்டும்" என்று இந்தியாவில் உள்ள சர்வதேச பொது மன்னிப்புச் சபையின் தலைமை இயக்குனர் திரு. அனந்தபத்மநாபன் கூறியிருக்கிறார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகக் கொடுமைகள், மோசமாக தமிழர்கள் நடத்தப்படுதல், தமிழர்களைத் துன்புறுத்தல் ஆகியவை தொடர்ந்து நடப்பதாகப் பிரிட்டன் மனித உரிமைகள் அமைப்பின் இயக்குனர், திரு.டேவிட் தெரிவித்திருக்கிறார். அமெரிக்கா இலங்கைக்கு இரண்டு முறை உண்மை கண்டறியும் குழுவை அனுப்பியும், அந்தக் குழு; "நிவாரணப்பணிகள் நிறைவளிப்பதாக இல்லை" என்றே கூறியுள்ளது.

இவ்வாறு சர்வதேச அமைப்புகள், விசாரணைகள், சாட்சியங்கள் ஆகியவை இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், இனப் படுகொலை ஆகியவற்றுக்கு அதிபர் மகிந்தர் ராஜபக்சேவே பொறுப்பேற்றுப் பதிலளிக்க வேண்டியவர் என்றுதான் காட்டுகின்றன. இதையெல்லாம் முன் வைத்தும்; மத்திய அரசின் அணுகுமுறை மாற வேண்டும் என்பதற்காகவும், ஈழத் தமிழர்கள்பால் அக்கறை கொள்ள வேண்டுமென்பதற்காகவும், தேவையான அழுத்தத்தைத் தருவதற்காகத்தான் "டெசோ" இயக்கத்தின் சார்பில் வருகின்ற 12ஆம் தேதி - 12 மணி நேரம் - அதாவது காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை - பொது வேலை நிறுத்தத்தை அறிவித்திருக்கிறோம். அந்த வேலை நிறுத்தத்தில் தமிழர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பங்கேற்று வெற்றிகரமாக ஆக்கித் தரவேண்டுமென்று மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

உடன்பிறப்பே, உன்னைத் தவிர நான் வேறுயாரைப் போய்க் கேட்கப் போகிறேன்? நீ தொண்டனாக இருந்தாலும் - தொழிலாளியாக இருந்தாலும் - அல்லது ஆசிரியராக இருந்தாலும் - மாணவராக இருந்தாலும் - விவசாயியாக இருந்தாலும் - அரசு அலுவலராக இருந்தாலும் - யாராக இருந்தாலும் "தமிழ்ச் சொந்தம்" என்ற உரிமையோடு தம்பி என்ற முறையில், தழுதழுத்தக் குரலில் - தமையன் நான் கேட்கிறேன்!

தமிழனாகப் பிறந்த நீ; ஒட்டுமொத்தத் தமிழினமும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டிய தருணமிது என்பதைத் தவறாமல் உணர்ந்து தடந்தோள் உயர்த்திப் புறப்படுக!

அலுவலகம் செல்வோரை அறவழியில் கெஞ்சிக் கேட்டு - அமைதியாகக் கோரிக்கை விடுத்து - அவர்களும் நீயும் இணைந்து நின்று இந்த அறவழி, ஒரு நாள் வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்ய முடியாதா? முடியும்! நிச்சயமாக முடியும்! எதிராகக் கப்பியிருக்கும் இருள் கிழித்து; வெளிக் கிளம்பும் உதய விடியலாக உன் பணி திகழட்டும்; ஒரு நாள் தான்! ஒரு நாள் கூட அல்ல; காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை; தமிழ் ஈழத்தில் ரத்தம் சிந்தியவர்களுக்கு - உயிர் இழந்தோர்க்கு - வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிப்போர்; ஆம்; நம் உடன்பிறப்புகளுக்கு உற்றுழி உதவிட நாம் இயற்றும் தவம்தான் இந்த ஒரு நாள் வேலை நிறுத்தம்!

கோடிக்கணக்கான தமிழர்களில் - இங்கு வாழ்வோர் - அவர்கள் எங்கு வாழ்வோராயினும்; அவர்கள் இதயம் குளிர, நாம் இயற்றப் போகும் வேள்வி இது என்ற சங்கல்பத்தோடு விடியும், விடியும், இங்குள்ள தமிழர்க்கு மட்டுமல்ல; இலங்கை வாழ் ஈழத் தமிழர்களுக்கும் நல்ல பொழுது விடியும் என்ற நம்பிக்கையோடு நாளை நடைபெறும் அறவழி வேலை நிறுத்தத்தை - அன்பு வழி வேலை நிறுத்தத்தை - அமைதிவழி கடைப்பிடித்து வெற்றியடையச் செய்வோம்; வாராய் என்று என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்பே, உன்னை அழைக்கிறேன் வா!

அன்புள்ள,

மு.க.

11-3-2013

3719. இதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறீர்களா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு தஞ்சையில் பாராட்டு விழா நடைபெற்று - விவசாயி கள் எல்லாம் மன நிறைவோடு (?) விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்துள்ளார்கள். குறுவை, சம்பா சாகுபடிக்கு காவிரி நீர் கிடைக்காமல், பயிர் கருகி அதனால் விவசாயிகள் உள்ளம் கருகி, 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு - முதலமைச்சர் அறிவித்த நிவாரணம் யார் யாருக்குக் கிடைக்கவில்லை என்று பட்டியல் இட்டுக்காட்டி, அவர்களுக்கெல்லாம் தஞ்சை பாராட்டு விழாவில் முதலமைச்சர் நிவாரணங்களை அறிவிக்கப் போகிறார், "வாருங்கள், வாருங்கள்" வண்டியிலே ஏறுங்கள், இதோ கையிலே பிடியுங்கள் ஐநூறு ரூபாய் என்று கிராமம் கிராமமாக எட்டு அமைச்சர்கள் படையெடுத்துச் சென்று திரட்டி வந்த கூட்டத்திற்கு முன்னால், நிவாரணங்களை அறிவிக்கவில்லை! மாறாகக் கடந்த காலத்தில் தனித்தனியாக அறிக்கைகள் மூலம் என்னைத் திட்டியதையெல்லாம் தொகுத்துச் சேகரித்து வந்து, அந்தக் கூட்டத்திலே மணிக் கணக்கிலே படித்து விட்டுத் திரும்பியிருக்கிறார் ஜெயலலிதா!

அவர் படித்த முதல் குற்றச்சாட்டு, நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு 5-2-2007 அன்றே வெளியிடப்பட்டது; அப்போது அதனை மத்திய அரசிதழில் வெளியிட, அன்றைய முதலமைச்சர் கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதாகும். 5-2-2007 அன்று இறுதித் தீர்ப்பு வெளிவந்தவுடன், அதிலே பல சாதக பாதகங்கள் இருந்ததால், தன்னிச்சையாக நாங்கள் முடிவெடுக்காமல், 5-2-2007 அன்றும் 15-4-2007 அன்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அதிலே பெரும்பான்மையானவர்கள் என்ன முடிவெடுத்து, எப்படிச் செயல்பட வேண்டுமென்று கருத்து அறிவித்தார்களோ அதன்படி தான் நடந்து கொண்டோமே தவிர, ஜெயலலிதா கூறுவதைப் போல நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிடவில்லை.

முதலமைச்சர் ஜெயலலிதா தஞ்சையில் பேசும்போது, "வென்றவர் சொல்வது எல்லாம் வேதம் ஆகுமா?" என்ற தலைப்பிலே நான் ஓர் அறிக்கையை வெளியிட்டிருப்பதாகவும், அதிலே உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லியிருந்தாலும், என்னையும் அறியாமல் இந்தப் பிரச்சினையில் தலைப்பின் மூலம் "வென்றவர்" என்று அவரைக் குறிப்பிட்டிருப்பதாகக் கூறிக்கொண்டு தனக்குத்தானே பெருமைபட்டுக் கொண்டிருக்கிறார். காவிரிப் பிரச்சினையில் ஜெயலலிதா கூறிய அடுக்கடுக்கான பொய்களை எல்லாம் அந்தக் கடிதத்தில் வரிசையாக எடுத்துக்காட்டி, தேர்தலிலே வெற்றி பெற்ற ஒருவர் சொல்வதெல்லாம், அதாவது காவிரிப் பிரச்சினையில் பேட்டியிலே கூறியிருப்பதெல்லாம் "வேதம்" ஆகி விடுமா - "வேதம்" என்பதைக்கூட "உண்மை" என்ற பொருளிலேதான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதெல்லாம் இலக்கிய ரசனையோடு வெளியிடப்படும் தலைப்புகளாகும். அம்மையாருக்கு அது புரியாவிட்டால் அங்கே யாராவது இலக்கியம் தெரிந்தவர்கள் இருப்பார்களானால், அவர்களிடம் கேட்டுத் தெளிவு பெறலாம். அதை விட்டு, எழுதியிருப்பதையெல்லாம் அப்படியே மணிக் கணக்கிலே மேடையிலே படித்துக் காட்டினால் அது சரியல்ல. காவிரிப் பிரச்சினையில் அவர் வென்றதாக நான் எந்த இடத்திலும் கூறவில்லை. கூறவும் மாட்டேன்.

நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டதற்கு தான்தான் காரணம் என்று சொல்லும் ஜெயலலிதா, அந்த இறுதித் தீர்ப்பு 5-2-2007இல் வெளியானபோது, அதை 6-2-2007 அன்று பாதகமான தீர்ப்பு என்று அறிக்கை விடுத்தாரா இல்லையா என்று தேதி குறிப்பிட்டு என் அறிக்கையிலே கேட்டதும், தஞ்சைக் கூட்டத்தில்; இறுதித் தீர்ப்பில் ஒரு சில பாதகமான அம்சங்கள் இருந்தன, இருந்தாலும் அரசிதழில் அதை வெளியிட வேண்டுமென்று கூறினேன் என்பதை ஜெயலலிதா ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதா அப்போது தெரிவித்த "பாதகமான அம்சங்கள்" நிறைந்த நடுவர்மன்ற இறுதித் தீர்ப்புதானே தற்போது அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது! அவரே குறிப்பிட்ட அந்த பாதகங்கள் நிறைந்த அறிக்கை அரசிதழில் வெளிவந்ததற்காகப் பாராட்டு உண்மையிலேயே தேவைதானா?

"6-7-1986இல் நடுவர்மன்றத்தை உருவாக்க வேண்டுமென்று ஒரு கடிதம் மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்துக்கு அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்தின் மீது, பல ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் இல்லாமல் மத்திய அரசு இதனைக் கிடப்பில் போட்டது" என்று ஜெயலலிதா, தனது தஞ்சைப் பேச்சிலே எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியிலே பல ஆண்டுகளாக இதில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டு, எம்.ஜி.ஆர். அவர்களையும் தாக்கிடத் தவறவில்லை.

அதன் பின்னர் விவசாயிகள் சங்கத்தினர் உச்சநீதிமன்றத்திலே நடுவர்மன்றம் அமைக்குமாறு வழக்கு தொடுத்ததாகவும், உச்ச நீதி மன்றம் நடுவர்மன்றத்தை அமைக்குமாறு 4-5-1990 அன்று உத்தரவிட்டதாகவும், அதற்குப் பிறகுதான் 1986இல் எம்.ஜி.ஆர். எழுதிய கடிதத்தை அடிப்படையாக வைத்து 2-6-1990இல் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது என்றும், நடுவர்மன்றம் அமைந்ததில் கருணாநிதியின் பங்கு ஏதுமில்லை என்றும் ஜெயலலிதா தஞ்சையிலே பேசியிருக்கிறார்.

நடுவர்மன்றத்திலே மட்டுமல்ல; காவிரிப் பிரச்சினையில் எனக்கு என்ன பங்கு என்பதைத் தமிழ் நாட்டுமக்கள் நன்கறிவார்கள்; அதிலும் தஞ்சை மாவட்ட மக்கள் நன்றாகவே அறிவார்கள். அங்கே போய் நின்று கொண்டு என்னைப் பற்றிப் பேசியபோது, அந்த மக்கள் தமிழ்நாட்டிற்கு எப்படிப்பட்ட முதல் அமைச்சர் கிடைத்திருக்கிறார் என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பார்கள்!

நடுவர்மன்றம் அமைக்க 6-7-1986இல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார் என்று சொல்கிற ஜெயலலிதா அவர்களே, அதற்கு முன்பு 17-2-1970 அன்று, நான் முதலமைச்சராக இருந்தபோதுதான், நடுவர்மன்றம் அமைத்திட வேண்டுமென்று, தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு முதன் முதலாகக் கடிதம் எழுதப்பட்டது என்பதை மறந்து விட்டீர்களா என்ன?

8-7-1971 அன்று நடுவர்மன்றம் அமைத்திட வேண்டுமென்று தி.மு. கழக ஆட்சியில்தான், நான் முதலமைச்சராக இருந்த போதுதான், மத்திய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு

சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதெல்லாம் 1986ஆம் ஆண்டிற்கு முன்பு நடைபெற்றதா? இல்லையா? என்பதைப் படிப்பவர்களே புரிந்துகொண்டு, முதலமைச்சர் பேசியிருப்பதைப் பற்றி உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள்.

4-8-1971இல் தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அன்றைய பிரதமர் அவர்களின் வற்புறுத்தலால் அப்போது தமிழக முதல்வராக இருந்த நான் அந்த வழக்கைத் திரும்பப் பெற்றதால் பெருத்த பின்னடைவு ஏற்பட்டதாகவும் தஞ்சைக் கூட்டத்தில் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை என் மீது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சொல்லி, அதற்கு நான் தஞ்சை மண்ணிலேயே பதிலும் கூறிவிட்டேன். இருந்தாலும் மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன்.

1971ஆம் ஆண்டு ஒரு வழக்கு ஹேமாவதி அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. அதை முரசொலிமாறன், கோ.சி. மணி, ஜி.கே. மூப்பனார் மற்றும் தஞ்சை மாவட்டத்திலுள்ள பல்வேறு விவசாயச் சங்கங்கள் எல்லாம் முன்னின்று நடத்தினார்கள். அப்போதுதான் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் என்னை அழைத்து, பேச்சு வார்த்தை மூலம் காவேரி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம், இடையிலே நீங்கள் வழக்கு போட்டிருக்கிறீர்களே, வழக்கு இருக்கும்போது எப்படி பேச முன்வருவார்கள், என்னை நம்பி இந்த வழக்கைத் திரும்பப் பெறுங்கள் என்று சொன்னார்கள். நான் உடனே தன்னிச்சையாக வழக்கைத் திரும்பப் பெற்று விடவில்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களைத் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துப் பேசிவிட்டுத்தான் அந்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப் பெறுவது என்று முடிவு செய்தபோதுகூட, மீண்டும் எப்போது விரும்பினாலும் அந்த வழக்கைத் தொடரலாம் என்று அதற்கு வழி வைத்துக்கொண்டு அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டது. இதைத்தான் ஜெயலலிதா தஞ்சை மண்ணிலே சென்று, நான் ஏதோ செய்ததால், காவிரிப் பிரச்சினையிலே பின்னடைவு ஏற்பட்டது என்று புலம்பியிருக்கிறார்.

நடுவர்மன்றத்தை உருவாக்கிட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது, அதன் காரணமாக 2-6-1990இல் நடுவர் மன்றத்தை உருவாக்கி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்தது, ஆனால் அப்போது கருணாநிதி முதல்வராக இருந்தாரே தவிர,

அவருக்கு அதில் எவ்வித பங்கும் இல்லை என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். இந்த வரலாற்றையும் நான் தெளிவாக்குகிறேன்.

1990ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் மத்தியில் பிரதமராக இருந்த திரு. வி.பி. சிங் அவர்களிடம் தொடர்புகொண்டு நடுவர் மன்றம் அமைக்க ஒத்துழைப்பு தாருங்கள் என்று கேட்டோம். தமிழக அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு விசாரணையில் இருந்த காரணத்தால், மத்திய அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதுபற்றி பிரதமர் வி.பி. சிங் அவர்கள் தொலைபேசி மூலமாக, தமிழக முதல் அமைச்சராக இருந்த என்னைத் தொடர்பு கொண்டு உச்ச நீதிமன்றம் அறிக்கை கேட்டிருப்பதைப் பற்றிக் கூறினார். அப்போது நான் அவரிடம், இனிமேல் தமிழ்நாடு பேச்சு வார்த்தைக்குத் தயாராக இல்லை, நீங்களும் தயவுசெய்து மத்திய அரசின் சார்பில் நீதிமன்றத்தில் அதைத் தெளிவாக்கி விடுங்கள், அப்போதுதான் எங்களுக்கு நடுவர்மன்றம் கிடைக்கும் என்று சொன்னேன்.

சொன்னதோடு மாத்திரமல்ல; அப்போது சட்டப்பேரவை நடந்து கொண்டிருந்ததால், 24-4-1990 அன்று தமிழகச் சட்டப் பேரவையிலும் தீர்மானம் நிறைவேற்றி, உடனடியாக அதைப் பிரதமருக்கு அனுப்பிவைத்தோம். பிரதமரும் முறைப்படி மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக உச்ச நீதிமன்றத்திற்கு அதனைத் தெரிவித்தார். அதற்குப் பிறகுதான் இனி பேச்சுவார்த்தை இல்லையென்றால், நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிடுகிறோம் என்று நீதிமன்றம் தெரிவித்தது.

நடுவர் மன்றம் அமைந்த பிறகுகூட, இடைக் காலத் தீர்ப்பு ஒன்றினை வழங்கிட வேண்டுமென்று நாம் கேட்டபோது, 5-1-1991இல் தங்களுக்கு இடைக்காலத் தீர்ப்பு அளிக்க அதிகாரம் இல்லை என்று நடுவர்மன்றம் தெரிவித்தது. அதற்காக 10-1-1991 அன்றே தி.மு. கழக ஆட்சியில் உச்ச நீதிமன்றத்தில் நாம் மனு தாக்கல் செய்து; அதன் மீது 26-4-1991இல் நடுவர் மன்றத்திற்கு இடைக் காலத் தீர்ப்பு அளிக்க அதிகாரம் உண்டு என்று தீர்ப்பளித்தது.

இதுதான் உண்மை. நடுவர்மன்றம் அமைய கருணாநிதிக்குப் பங்கு உண்டா இல்லையா என்பதைத் தஞ்சை மாவட்டத்து மக்களே, நீங்களே சொல்லுங்கள்.

"காவேரி நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்தும் வகையில் ஒரு திட்டத்தினை வரையறுக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று வலியுறுத்தி 14-5-1992 அன்று எனது தலைமையிலான தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, இதற்காக 1993ஆம் ஆண்டு நான் நான்கு நாட்கள் உண்ணாநோன்பு மேற்கொண்டேன்" என்று ஜெயலலிதா தஞ்சையில் பேசியிருக்கிறார்.

தஞ்சைக் கூட்டத்திலே பேசிய ஜெயலலிதா தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணம் அவருடைய ரத்தத்தில் ஊறிய ஒன்று என்று கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட எண்ணம் ரத்தத்தில் ஊறிய ஒருவர் ஏற்கனவே ஆட்சியிலே இருந்தபோது எப்படிச் செயல்பட்டார் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் கூறுகிறேன்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இந்தக் காவேரி பிரச்சினையில் மத்திய அமைச்சர் சுக்லா அவர்கள் எழுதிய கடிதத்திற்கு எத்தனை மாதங்கள் கழித்துப் பதில் அனுப்பினார் என்பதைப் பற்றி நான் சில நாட்களுக்கு முன்பு எழுதிய குற்றச் சாட்டுக்குத் தஞ்சை கூட்டத்திலே ஜெயலலிதா ஏன் பதிலளிக்கவில்லை? அதாவது 9-6-1992 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த சுக்லா அவர்கள், "காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மனதிலே கொண்டு, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப் பினை மத்திய நீர்க் குழுமத்திடம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒத்துழைப்போடு விடலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது, இந்த ஏற்பாட்டிற்கு உங்களின் ஒப்புதலை உடனடியாகத் தெரிவித் தால் மிகவும் உதவியாக இருக்கும், குழுக்களை அறிவித்து ஆணைகளைப் பிறப்பிக்க இயலும்" என்று எழுதிய கடிதத்திற்கு, ஒன்பது மாதங்கள் கழித்துத்தான், 30-3-1993 அன்று ஜெயலலிதா பதில் எழுதினார் என்றால், எப்படிப்பட்ட எண்ணம் அவருடைய ரத்தத்திலே ஊறியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாமே! இதற்காகவே தனியாக ஒரு "பொன்னியின் செல்வி" பட்டத்தினைத் தஞ்சை விவசாயிகள் அளித்திருக்கலாமே!

இந்தக் குழு அமைக்கப்படவில்லை என்பதற்காகத்தான் 18-7-1993 அன்று ஜெயலலிதா உண்ணாவிரதத்தைத் தொடங்கினார், கர்நாடகா 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்க

வேண்டுமென்று, பிரதமர் நரசிம்மராவ் கர்நாடக முதல்வருக்கு, கட்டளையிட வேண்டும், அப்படிக் கட்டளையிட்டால்தான் நான் உண்ணாவிரதத்தை நிறுத்துவேன், இல்லா விட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் என்றார். பிரதமர் அப்படியொரு கட்டளை பிறப்பிக்காமலேயே, மத்திய அமைச்சர் சுக்லா உண்ணாவிரத இடத்திற்கே வந்து, ஒரு குழு அமைப்பதாகச் சொன்னவுடன், இப்போது போலவே அப்போதும் வெற்றி, வெற்றி என்று கூறி உண்ணா விரதத்தைத் திரும்பப் பெற்றார்.

அவர் உண்ணாவிரதத்தைத் திரும்பப் பெற்றது பற்றி நான் குறை கூறவில்லை. இருந்தாலும் அப்போது அதை வெற்றி விழாவாகக் கொண்டாடினார்கள். நம்முடைய நாவலர் "காவிரி தந்த கலைச்செல்வி, இப்போது காவிரி தண்ணீரை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறார். இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் அண்ணா சமாதிக்கும், புரட்சித் தலைவர் சமாதிக்கும் சென்றுவிட்டு இல்லம் திரும்புவார்" என்று அப்போது அறிவித்தார். ஜெயலலிதா செய்தியாளர்களிடம் மகத்தான வெற்றி கிடைத்துள்ளது என்றார். ஆனால் 1996ஆம் ஆண்டுவரை அ.தி.மு.க. ஆட்சியிலே நீடித்தபோதும் எதுவும் நடக்கவில்லை என்பதுதான் உண்மை. தஞ்சை ஜெயலலிதா பாராட்டு விழாவிற்கு இப்போது தலைமை தாங்கிய மன்னை ரெங்கநாதன் அப்போது "இதன் மூலம் வெற்றி கிடைத்தது என்று கூற முடியாவிட்டாலும், பிரச்சினையில் வரவேற்கத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார். ஜெயலலிதா அவர்களே பிறகு 27-7-1993இல் பிரதமருக்குத் தனக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்று கடிதம் எழுதினார் என்பதில் இருந்தே, உண்ணாவிரதப் பந்தலில் அவர்கள் கூறிய "வெற்றி" முழக்கம் எவ்வளவு தவறானது என்பதை அப்போதே தமிழ் மக்கள் புரிந்து கொண்டார்கள்.

தஞ்சைக் கூட்டத்திலே ஜெயலலிதா 1998ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்த கர்நாடக அரசும் ஏற்றுக்கொண்ட ஒரு முடிவினைப் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் தீவிர முயற்சியால் நான் ஒப்புக்கொண்டு, அப்போது காவேரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டதை மிகப் பெரிய துரோகம் என்று பேசியிருக்கிறார். 1998ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு. கழக ஆட்சியிலேதான் நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டுவரும்

ஒப்பந்தமே ஏற்பட்டது. பாரதப் பிரதமர் தலைமையில் காவேரி நதிநீர் ஆணையம் அமைக்கப்பட்டது. கண்காணிப்புக் குழு அமைந்தது.

1998இல் வாஜ்பாய் அவர்கள் பா.ஜ.க. பிரதமராக இருந்தார். நான் தமிழகத்தின் முதல் அமைச்சர். ஜெயலலிதா தமிழகத்திலே எதிர்க் கட்சியாக இருந்தாலும் பா.ஜ.க. கூட்டணியிலே மத்தியிலே இருந்தார். அப்போது பிரதமர் வாஜ்பாய் அவர்கள் என்னிடம், 12ஆம் தேதி உச்சநீதிமன்றம் மத்திய அரசின் கருத்தினைக் கேட்டிருக்கிறது, அதற்குள் அனைவரும் பேசி ஒரு நல்ல முடிவெடுக்கலாம், வாருங்கள் என்று அழைத்தார். நான் தன்னிச்சையாக அப்போதும் முடிவெடுக்கவில்லை. 40க்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசினேன். அதில் 30 பேர் நான் டெல்லி கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் என்றனர். 10 பேர் போகக் கூடாது என்றார்கள். ஜனநாயகத்தில் எதைக் கேட்பது? ஒன்பது மணி நேரம் இடைவிடாமல் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் பிரதமர் வாஜ்பாய் அவர்களே அமர்ந்து ஒப்பந்தம் கண்டார். காவேரி நதிநீர் ஆணையமும் அமைந்தது. அதைத்தான் தற்போது ஜெயலலிதா நான் செய்த துரோகம் என்கிறார். பா.ஜ.க.வின் பிரதமர், தமிழகத்திலே தி.மு. கழக ஆட்சி நடைபெற்றபோது, அவ்வாறு ஒப்பந்தம் கண்டார் என்பதற்காக ஜெயலலிதா அந்தக் கூட்டணியிலிருந்தே விலகினார். ஆனால் அவர் விலகியது பற்றி அப்போது அந்த மூத்த மனிதர், வாஜ்பாய் அவர்கள் எவ்வளவு நொந்துகொண்டு அறிக்கை விடுத்தார் என்பதை நான் இந்தக் கடிதத்திலே குறிப்பிட விரும்பவில்லை.

தற்போது முதலமைச்சர் ஜெயலலிதாவிற்குத் தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பில் பாராட்டு விழா எப்படி நடைபெற்றிருக்கிறதோ, அதைப் போலவேதான் 1998ஆம் ஆண்டு பிரதமர் வாஜ்பாய் தலைமையில் ஒப்பந்தம் ஏற்பட்ட போது, முதல் அமைச்சராக இருந்த எனக்கு இதே தஞ்சையில் காவிரிப்பாசன விவசாயிகள் சார்பில் 23-8-1998 அன்று நன்றி அறிவிப்புக் கூட்டம் நடைபெற்றது. காலையில் திருச்சி - கல்லக்குடியில் சமத்துவபுரத்தைப் பார்வையிட்டு, புதிய வீடுகளுக்கு அடிக்கல் நாட்டிவிட்டு, அங்கிருந்து பகல் ஒரு மணி அளவில் காரிலே புறப்பட்டுக் கீழப்பழூர், திருமானூர், திருவையாறு வழியாகத் தஞ்சைக்கு வந்தேன். வழியிலே 45 கிலோ மீட்டர் தூரமும் விவசாயப் பெருமக்களும், தாய்மார்களும்,

குழந்தைகளும் கூடி நின்று என்னை வரவேற்றார்களே, அந்தக் காட்சி இன்னமும் என் நினைவிலே உள்ளது.

ஜெயலலிதா விழாவிற்கு எட்டு அமைச்சர்கள் ஒரு வாரம் முகாமிட்டு, ஊருக்கு ஊர் சென்று கூட்டம் திரட்டினார்களே, அதைப்போல அப்போது இல்லை. தம்பி கோ.சி. மணி மட்டும்தான் அப்போது அமைச்சர். தம்பி பழனி மாணிக்கம், தம்பி உபயதுல்லா ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் செய்தனர். கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் யார் தெரியுமா? அப்போதும் விவசாயச் சங்கத் தலைவராக இருந்த சாட்சாத் இந்த மன்னை ரெங்கநாதன் அவர்கள்தான்.

அப்போது அந்த விழாவில் மன்னை ரெங்கநாதன் பேசியது என்ன தெரியுமா? "இந்தக் கூட்டம் தஞ்சை விவசாயிகள் சங்கம் சார்பில் நன்றியைத் தெரிவிக்கும் கூட்டம், பாராட்டுக் கூட்டம் என்று சொன்னாலும் முதலில் நன்றியைத்தான் தெரிவிக்க வேண்டும். இந்தச் சங்கம் ஆரம்பித்துப் பதினைந்து ஆண்டுகளில் இப்போது ஒரு நிறைவு காணப்படுகிறது. இதற்கு முக்கியக் காரணம், அரசியல் துணிவுடன் நமது முதல்வர் கலைஞர் செயல்பட்டிருக்கிறார். அதே அளவில் நமது பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும் அந்தத் துணிவு இருக்கின்றது. இரண்டு பேருடைய அந்த அரசியல் துணிவு காரணமாக இந்த காவேரிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது என்று நான் கூறுகிறேன். இந்த ஆரம்பத்தை ஆரம்பித்துவைத்த நாயகரைப் பாராட்டவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவரை மனமுவந்து பாராட்டுகிறோம். என்றென்றும் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றெல்லாம் பேசினார்.

தஞ்சையில் ஜெயலலிதாவிற்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் பாராட்டியிருக்கிறாரே, அப்போது எனக்கு நடைபெற்ற தஞ்சைப் பாராட்டு விழாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர் ஆர். நல்லகண்ணு அவர்கள்தான் கலந்துகொண்டு என்னைப் பாராட்டினார். தற்போது பொன்னியின்செல்வி சிலையைப் பரிசாகக் கொடுத்த ரெங்கநாதன் அப்போது காவிரித் தாய் சிலையை எனக்குப் பரிசாக வழங்கினார்.

1998ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நான் முதல்வராக இருந்த போது ஏற்பட்ட ஒப்பந்தம் குறித்து 7-8-1998 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு கூட்டம் நடைபெற்று, அந்தக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "நடுவர்மன்ற இடைக் காலத் தீர்ப்பை அமலாக்க உடன்பாடு ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. தமிழ்நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு, மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துவரும் காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினர்களின் கருத்தறிந்து, இடைவிடாத முயற்சி மேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரின் அக்கறையும், தமிழ்நாடு அரசின் செயல்பாடும் இந்த உடன்பாடு ஏற்பட முக்கியக் காரணமாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு வரவேற்கிறது" என்றெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல, தமிழ்நாட்டிலே அ.தி.மு.க.வைத் தவிர ஏனைய அத்தனை கட்சிகளும், அனைத்து நாளேடுகளும், சி. சுப்பிரமணியம், மூப்பனார் முதற்கொண்டு அத்தனை அரசியல் தலைவர்களும் பாராட்டினார்கள்.

அப்போது தஞ்சைக் கூட்டத்தில் நான் உரையாற்றும்போது, "எனது தலைமையிலான அரசுதான் காரணம்" என்றோ, "நான்தான் எல்லாம்" "எனக்கே உரிய பாராட்டு" என்றோ சொல்லிக் கொள்ளவில்லை. மாறாக என்ன பேசினேன் தெரியுமா? "எல்லோரும் பாராட்டுகின்ற - எல்லோரும் வாழ்த்துகின்ற - ஒரு நல்லத் தீர்வை - டெல்லிப் பட்டிணத்திலே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் மூலம் நாம் இன்றைக்கு சாதித்திருக்கிறோம் என்றால், இது என்னுடைய தனிப்பட்ட ஒரு முயற்சியால் அல்ல. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் டெல்லிச் செல்லலாமா என்ற கருத்து வைக்கப்பட்டபோது, சென்றுதான் தீர வேண்டு மென்று என்னை வழியனுப்பி வைத்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பெருமை, அவர்களுக்குத் தரப்பட வேண்டிய பாராட்டு, வழங்கப்பட வேண்டிய வாழ்த்து இது. அதைப் போலவே தஞ்சைத் தரணியின் விவசாயப் பெருங்குடி மக்கள் - தமிழக விவசாயப்பெருங்குடி மக்கள் - நண்பர் ரெங்கநாதனைப் போன்ற விவசாயிகளுக்காகப் பாடுபடக் கூடிய தலைவர்கள் - அத்தனை பேருக்கும் வழங்கப்பட வேண்டிய வாழ்த்து. இது தனி ஒருவனாகிய எனக்கு மாத்திரம் சொந்தமான பாராட்டு அல்ல. எனக்கு மாத்திரம் தெரிவிக்கப்பட வேண்டிய

நன்றி அல்ல. நான் உங்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கின்றேன். தஞ்சைத் தரணியே! தாயே! உனக்காக நான் என்றைக்கும் உழைப்பேன். உழைத்துக் கொண்டே இருப்பேன். நூறாண்டு காலம் வாழ வேண்டுமென்று இங்கே எழுதி வைத்திருக்கிறீர்கள். நூறாண்டுக் காலமல்ல; ஓராண்டுக் காலம் வாழ்ந்தாலும் உங்களுக்காகவே வாழ்வேன்" - என்று பேசினேன். இது இன்னமும் "முரசொலி" யிலே இருக்கிறது. நான் இதைப் பேசி 15 ஆண்டுக் காலம் ஆகிறது. இன்னமும் உழைத்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்பதற்கு இந்த மடலே சான்று அல்லவா?

நிவாரண அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்துத் தஞ்சைக் கூட்டத்திற்கு வந்த விவசாயிகள் எல்லாம் தற்போது போராட்டம் நடத்துவது எப்படி என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்! போரவையில் முதலமைச்சர் நிவாரணம் அளித்தபோது கம்யூனிஸ்ட்கள் அதை வரவேற்றதாகத் தஞ்சை கூட்டத்தில் ஜெயலலிதா பேசியிருக்கிறார். ஆனால் "ஜனசக்தி"யையும், "தீக்கதிர்" நாளேட்டையும் முதலமைச்சர் படித்திருந்தால் நிவாரணம் சரியாக அறிவிக்கப்படவில்லை என்பது பற்றி வந்த செய்திகளை அறிந்திருக்க முடியும்.

முதலமைச்சர் ஜெயலலிதாவிற்குத் தஞ்சையிலே பாராட்டு விழா என்றால் நன்றாகப் பாராட்டட்டும். நமக்குக் காழ்ப்பு கிடையாது. ஆனால் அங்கேபோய் நின்றுகொண்டு என்னை துரோகி என்றும், கர்நாடக வழக்கறிஞர் போலத் தொடக்கம் முதல் செயல் பட்டேன் என்றும் சரமாரியாகத் தாக்கியிருப்பது நியாயம் தானா? இதைத் தமிழ் நாட்டு விவசாயிகளும், அரசியல் தலைவர்களும், பத்திரிகைகளும் ஏற்றுக்கொள்கிறார்களா?

அன்புள்ள,

மு.க.

12-3-2013

3720. “டெசோ” கேட்பதால்; வலுவில்லை என்பதா?

உடன்பிறப்பே,

ஈழத் தமிழர்களின் நலன் காப்பதற்காக என்னைத் தலைவராகவும் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், கி.வீரமணி, தொல்.திருமாவளவன், சுப.வீரபாண்டியன், சுப்புலெட்சுமி ஜெகதீசன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட “டெசோ” அமைப்பை மீண்டும் உருவாக்கி, இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலை, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், சிங்கள மயமாக்கல் போன்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி அவ்வப்போது விரிவாக கலந்தாலோசனை செய்து உரிய தீர்மானங்களை நிறைவேற்றி இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தோம். அத்தோடு நில்லாமல், தொடர்ந்து பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து இந்தியாவில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து வந்து, அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்று 14 தீர்மானங்களை வடிவமைத்து 12-8-2012 அன்று சென்னையில் நடைபெற்ற “டெசோ” வின் மாபெரும் மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானங்களை இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களிடம் நமது நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள் நேரடியாகக் கொடுத்து தேவையான விளக்கமளித்து வந்தனர். பின்னர் கழகப் பொருளாளர், தளபதி தம்பி மு.க.ஸ்டாலினும், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் தம்பி டி.ஆர்.பாலுவும் அந்தத் தீர்மானங்களை எடுத்துச்சென்று, நேரடியாக நியூயார்க்கில் உள்ள ஐ.நா. மன்றத்தின் தலைமை அலுவலகத்திலும், ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திலும் கொடுத்துத் தேவையான விவரங்களையும், அடிப்படை ஆதாரங்களையும் வழங்கி வந்தனர்.

அதன் தொடர்ச்சியாக நமது நாடாளுமன்ற -மாநிலங்களவை உறுப்பினர்கள் கொண்ட குழுக்களை அமைத்து டெல்லியிலுள்ள பல்வேறு நாடுகளின் தூதரகங்களில் "டெசோ" மாநாட்டுத் தீர்மானங்களை நேரடியாகக் கொடுத்து அவர்களின் ஆதரவையும் கோரினோம்.

டெசோ இயக்கத்தின் சார்பில், பெப்ரவரி திங்கள் 8ஆம் தேதியன்று கறுப்புடை அணிந்து என்னுடைய தலைமையில், சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தி னோம். அந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கமே சிங்களப் பேரினவாத அதிபர் ராஜபக்ஷேயை சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று அறிவிக்க வேண்டும்; விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மைந்தன், பாலகன் பாலச்சந்திரனைச் சிங்கள ராணுவம் படுகொலை செய்த கொடுமையை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதுதான். மார்ச் திங்கள் 5ஆம் நாளன்று சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவரகத்தின் முன்னால் "முற்றுகைப் போராட்டம்" டெசோ சார்பில் நடத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கான தோழர்கள் அந்த முற்றுகைப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டனர். மார்ச் திங்கள் 7ஆம் நாளன்று இந்தியத் தலைநகர் டெல்லியில் "டெசோ" சார்பில் ஈழத் தமிழர்கள் மீது ஏவப்பட்டு வரும் கொடுமைகள் குறித்த "கருத்தரங்கம்" ஒன்றினை நடத்தினோம்.

கழகத்தின் சார்பில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதம்கோரி, அந்த விவாதத்தின்போது அனைத்துக் கட்சித் தலைவர்களும் கழகத்தின் கருத்தினையொட்டிப் பெரிதும் வாதாடினர். ஆனால் மத்திய அரசின் சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு சல்மான் குர்ஷித் அவர்கள் பதிலளித்துப் பேசும்போது, "ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானம் குறித்து, அமெரிக்காவுடன் இலங்கை அரசு பேச்சு நடத்திய பிறகு, அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதா, வேண்டாமா என்பது குறித்து இந்திய அரசு முடிவு செய்யும்" என்று சொன்னார்.

ஆனால் இந்தியாவின் இந்த யோசனையை இலங்கை அரசு நிராகரித்துவிட்டது. "அமெரிக்காவுடன் பேச்சு நடத்த எங்கள் நாடு

உத்தேசிக்க வில்லை. அமெரிக்கத் தீர்மானத்தின் சாராம் சத்தை இலங்கை முற்றிலுமாக நிராகரிக்கிறது. ஒரு நாட்டுக்கு ஐ.நா. பார்வையாளர்கள் வருகை புரிவது என்பதைச் சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்புதல் அல்லது அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று இலங்கையின் சார்பில் ரவிநாதா ஆர்ய சின்ஹா அறிவித்துவிட்டார்.

இந்தியா வழங்கும் ஆலோசனையை இலங்கை ஏற்றுக் கொள்ளுமென்று மத்திய அரசிலே உள்ளவர்கள் எந்த அடிப்படையில் நம்பிக்கை கொண்டார்கள் என்று நமக்குப் புரியவில்லை. சிங்கள அரசு, இந்திய அரசுக்கு நீண்ட காலமாக கற்பித்து வரும் பாடத்தை மத்திய அரசிலே உள்ளவர்கள் எப்படித்தான் மறந்தார்களோ? பண்டாரநாயகா - செல்வநாயகம் உடன்பாடு, டட்லி - செல்வநாயகம் உடன்பாடு, ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தனா உடன்பாடு என்று எந்த உடன்பாட்டையும் உதாசீனப்படுத்திய இலங்கை அரசை; பண்டித நேரு அவர்களையும், இளைய தலைவர் ராஜீவ்காந்தி அவர்களையும் அவமானப்படுத்திய சிங்கள அரசை இன்னமும் இந்தியா நட்பு நாடு என்று சொல்லிக்கொண்டு, அவர்களைக் காப்பாற்ற நினைக்கிறது என்பதுதான் நமக்குப் புரியாத வேதனையாக நீடித்து வருகிறது. எனினும் அமெரிக்காவின் தீர்மானத்தையாவது கடைசி நேரத்தில் இந்தியா ஆதரிக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இன்னமும் இருக்கிறது.

இப்படி இந்திய அரசு மிகுந்த நம்பிக்கையோடு வழங்கிய ஆலோசனையை இலங்கை அரசு அதனைப் பரிசீலித்துக் கூடப் பார்க்க மனமில்லாமல் நிராகரித்துவிட்ட நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தைப் பற்றிய நிலைப்பாட்டை மத்திய அரசு எப்போது உறுதியாக அறிவிக்கப்போகிறது என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே நீடித்து வருகிறது.

இத்தகைய சூழலில், ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தில் அமெரிக்கா தாக்கல் செய்திருக்கும் இலங்கை குறித்த வரைவுத் தீர்மானம், ஈழத் தமிழர்களுக்குப் பயனளிக்காது என்றும்; இலங்கையைத் தண்டிக்கும் அளவிற்கு அதிலே தீவிரமாக எதுவும் கூறப்படவில்லை என்றும்; தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க.வை

விழுந்து விழுந்து நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்கத் துடிக்கும் சில ஏடுகளைப்போல, "டெசோ" நடத்திய முழு அடைப்புப் போராட்டம் "பிசுபிசுத்துப் போனது" என்று சில அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு, தாங்களும் "இருக்கிறோம்" என்று காட்டிவருகிறார்கள்.

தி.மு.க. அங்கம் வகித்து வரும் "டெசோ" அமைப்பு, அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவதன் காரணமாகவே; காழ்ப்புணர்வு கொண்டு, அமெரிக்கத் தீர்மானத்தில் எதுவுமே இல்லை என்பதைப்போல தமிழ்நாட்டிலே சிலர் பேசி வருவதை உலகத் தமிழர்கள் கவனித்து வருகிறார்கள்.

அமெரிக்காவின் தீர்மானமே உறுதியானது - இறுதியானது - தீவிரமானது என்று "டெசோ" அமைப்பு கருதி எப்போதும் அறிவிக்கவில்லை. எனினும் அந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று "டெசோ" கோரிக்கை வைப்பதற்குச் சில அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன.

ஈழத் தமிழர்களை நசுக்கி நாசமாக்கி வரும் இலங்கை அரசுக்கு எதிராக உலக நாடுகளின் கேந்திரமையமான ஐ.நா. அவையில் மற்ற எந்த நாடும் தீர்மானம் எதையும் முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்காத நிலையில் வல்லரசு நாடான அமெரிக்கா தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவரும் வாய்ப்பினைப் பெற்றிருப்பதை நாம் வரவேற்க வேண்டும். அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் என்பதால்தான் சென்ற முறை அந்தத் தீர்மானம் ஏற்கப்பட்டது. இந்த முறையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் பெரும் பான்மையான உறுப்பு நாடுகள், அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன.

உலக நாடுகளுக்கெல்லாம் பொதுவானதொரு மன்றத்தில், இலங்கைக்கு எதிரான முதல் நகர்வை ஏற்படுத்தியது அமெரிக்க வல்லரசு தான். அந்த நகர்வுதான் உலகெங்கிலும் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிய அக்கறையையும், பரிவையும் - இலங்கைச் சிங்கள அரசுக்கு அதிர்ச்சியையும் பயத்தையும் உருவாக்கியிருக்கிறது. இதனை உலகத் தமிழர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

"டெசோ" அமைப்பு நேரடியாக

ஐ.நா.மன்றத்தில் இலங்கைக்கெதிரான தீர்மானம் எதையும் முன் மொழிந்திடும் வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை. இங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அதே நிலைதான் என்பதை உணர வேண்டும். அதனால்தான் தமிழினப் படுகொலை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்குப் பொறுப்பான ராஜபக்ஷேயின் போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத் தன்மையுடன் கூடிய சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கான வலிமைமிக்கத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு செல்ல வேண்டும்; பொது வாக்கெடுப்பு குறித்த தனித் தீர்மானம் ஒன்றினை இந்தியாவே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் முன்னெடுத்துச் சென்று, ஈழத் தமிழர் வாழ்வில் விடிவு காண வேண்டும்; குறைந்தபட்சம் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தையாவது உரிய திருத்தங்களுடன் இந்தியா ஆதரித்திட வேண்டும்; என்று "டெசோ" சார்பில் நாம் தொடர்ந்து குரலெழுப்பியும், கோரிக்கைகள் கொடுத்தும் வருகிறோம்.

இன்றைய சூழலில் அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிப்பதற்கும், இந்தியாவே தனியானதொரு தீர்மானத்தைக் கொண்டு செல்வதற்கும் அழுத்தம் தருவக சொன்னதன்னியில்; நாமே உலக நாடுகள் அவையில் தீர்மானத்தை முன்மொழிய முடியுமா; நாமே நேரடியாக இலங்கைக்குக் கெடு விதித்திட இயலுமா; நாமே படை திரட்டிக்கொண்டு, இலங்கையைப் போருக்கு அழைப்பது சாத்தியமா; என்பதையெல்லாம் இங்குள்ள சில அரசியல்வாதிகள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். "டெசோ" இப்போது மேற்கொண்டுள்ள நிலைப்பாட்டைவிட, உயர்ந்த - உகந்த நிலைப்பாட்டை ஈழத் தமிழர் குறித்து; ஓயாமல் கருத்துகள் தெரிவித்து வரும் இந்தச் சில அரசியல்வாதிகள் வகுத்தளிப்பார்களேயானால், ஈழத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் உவகையோடு அதனை வரவேற்பார்கள்!

அமெரிக்கா போன்ற ஒரு வல்லரசு இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை முன் மொழிய அவர்களாகவே முன் வருகின்ற நேரத்தில் - அந்தத் தீர்மானத்தை 30க்கு மேற்பட்ட உலக நாடுகள் ஆதரிக்கத் தயாராக இருக்கும்போது - குறைந்தபட்சம் அதை யாவது நாம் வரவேற்க வேண்டாமா என்ற எண்ணத்தோடுதான்; ஈழத் தமிழர்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களை முழுமையாகத் துடைத்திட உடனடியாக இயலாவிட்டாலும், அவர்களுக்கு

ஆறுதல் வழங்கிடும் வகையிலேதான், "டெசோ" அமைப்பு, அமெரிக்கா, தீர்மானத்தை முன்மொழிவதை வரவேற்றும், அதை இந்திய அரசு உரிய திருத்தங்களோடு ஆதரிக்க முன் வர வேண்டுமென்றும் கேட்டுவருகிறோம். ஆனால் இங்கேயுள்ள சிலர் - ஏதோ தங்களையே பெரிய "வல்லரசுகள்" என்பதைப் போலக் கருதிக் கொண்டு - எதற்கெடுத் தாலும் "குந்தகம்" சொல்வது என்ற முறையில்; அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தில் அது சரியில்லை, இது சரியில்லை என்றெல்லாம் வேண்டாத விமர்சனம் செய்து குட்டையைக் குழப்பப் பார்க்கிறார்கள்!

அன்புள்ள,

மு.க.

14-3-2013

3721. உலகத் தமிழர்கள் ஒருபோதும் ஒப்பமாட்டார்கள்!

உடன்பிறப்பே,

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள வரைவுத் தீர்மானம் நான்கு முறை திருத்தப்பட்டு, பெருமளவுக்கு நீர்த்துப்போக விட்டதாலும்; திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்த திருத்தங்கள் எவற்றையும் இந்திய அரசு சிறிதும் பரிசீலனை செய்யாததாலும்; மத்திய அமைச்சரவையிலிருந்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்தும் தி.மு.கழகம் உடனடியாக விலகிக் கொள்வதென முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.கழகம் உரிய நேரத்தில் தக்க முடிவை மேற்கொண்டுள்ளதென உன்போன்ற பல்லாயிரக்கணக்கான உடன்பிறப்புக்களும், பல்வேறு தரப்பினரும் பெருமளவுக்கு வரவேற்றுள்ளனர்.

1956ஆம் ஆண்டு சிதம்பரத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்த தீர்மானம் ஒன்றை நான் முன்மொழிந்து பொன்னம்பலனார் வழிமொழிந்த நாள் முதல், இன்றுவரை எந்தவிதத் தொய்வும் இல்லாமல், ஈழத் தமிழர் நலனுக்காகவும் உரிமைகளுக்காகவும் தொடர்ந்து நாம் குரல் கொடுத்து வருவதை, ஈழத் தமிழர்களும், ஈழத் தமிழர்களின் தலைவர்களும் அன்றும் இன்றும் நன்றாகவே அறிவர்.

ஈழத் தமிழர்களுக்காக 1976ஆம் ஆண்டிலும், 1991ஆம் ஆண்டிலும் என இரண்டு முறை ஆட்சியையே பறிகொடுத்தது

மட்டுமல்லாமல், சட்டப்பேரவை உறுப்பினர் பதவியையும் பேராசிரியரோடு இணைந்து ராஜினாமா செய்தவன் நான். ஈழத் தமிழர்கள் பாதிப்புக்கு ஆளான போதெல்லாம் பதறியடித்து, முதல் குரல் எழுப்பியது திராவிட முன்னேற்றக் கழகம். ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக்காகப் பேரணிகள், பொதுக்கூட்டங்கள், மாநாட்டுத் தீர்மானங்கள், மனிதச் சங்கிலிகள், வேலை நிறுத்தம், 'டெசோ' அமைப்பு உருவாக்கம், மீள் உருவாக்கம் என ஜனநாயகம் அனுமதிக்கும் அத்தனை வகையான அறவழி - அமைதி வழிப் போராட்டங்களையும் நாம் நடத்தியுள்ளோம்.

இன்றைய (19-3-2013) செய்தியாளர்கள் கூட்டத்தில்கூட, "2009ஆம் ஆண்டில் இலங்கையில் போர் நடந்தபோது நீங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று குற்றச்சாட்டு கூறப்படுகிறதே?" எனக் கேட்டபோது, "2009ஆம் ஆண்டில் நாங்கள் என்ன செய்ய வில்லை? அப்போது நாங்கள் ஒன்றும் அமைதியாக இல்லை" என்று பதில் சொன்னேன்.

28-3-2009 அன்று இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்பட இந்தியா உதவிட வேண்டுமென்று கேட்டு, பிரதமருக்கும், திருமதி சோனியாகாந்தி அவர்களுக்கும் நான் கடிதம் எழுதினேன். 31-3-2009 அன்று திருமதி சோனியா காந்தி அவர்கள் எனக்கு எழுதிய நீண்ட பதிலில், "இலங்கையில் முதல்கட்டமாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். நமது அரசு, இலங்கை அரசுடன் போர் நிறுத்தத்தைப் பற்றித் தொடர்புகொண்டு வருகிறது" என்று உறுதிபடத் தெரிவித்திருந்தார். போரை நிறுத்துங்கள் என்று இந்திய அரசு கேட்டுக்கொண்டதற்குப் பிறகும், இலங்கை அதிபர் ராஜபக்ஷே போரை நிறுத்தவில்லை.

7-4-2009 அன்று பிரதமர் மன்மோகன்சிங், திருமதி சோனியாகாந்தி, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப்முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரை, "இலங்கையில் ஒட்டுமொத்தத் தமிழின மக்கள் கூண்டோடு அழிக்கப்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்; போர் நிறுத்தத்தை உறுதிசெய்ய வேண்டும்" என்று நான் அவசரத் தந்தி மூலம் கேட்டுக்கொண்டேன்.

இறுதிப் போரிலே இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான்,

நார்வே போன்ற நாடுகளின் சார்பிலும், ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் பான்-கி-மூன் அவர்களும் ராஜபக்ஷையைக் கேட்டுக் கொண்டும்கூட, ராஜபக்ஷேயின் சிங்களப் பேரினவாதமும், தமிழினத்தை அழித்தொழிக்க வேண்டுமென்ற ஆவேசமுமே பொங்கி வழிந்தது. 9-4-2009 அன்று சென்னையில் என் தலைமையில் "இலங்கை அரசே போரை நிறுத்து!" என்று முழக்கமிட்டவாறு மிகப் பிரம்மாண்டமான பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இலங்கை அதிபர் ராஜபக்ஷே "இரண்டு நாள் போர் நிறுத்தம்" என்று அறிவித்தார்.

23-4-2009 அன்று ஒருநாள் வேலை நிறுத்தம் நடத்தப்பட வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்று, வேலைநிறுத்தம் தமிழகத்தில் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது. 24-4-2009 அன்று உள்துறை அமைச்சர் திரு.சிதம்பரம் அவர்கள் என்னைச் சந்தித்து விவரங்களை விளக்கினார். பிரதமர் அவர்களும் தொலைபேசியில் மத்திய அரசு எடுத்த முயற்சிகளை எல்லாம் என்னிடம் கூறினார்.

25-4-2009 அன்று இலங்கை அரசு, ராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது. 27-4-2009 அன்று நான் எதிர்பார்த்த எந்தச் செய்தியும் வரவில்லை என்பதோடு, இலங்கை அரசு போரையும் நிறுத்தவில்லை என்பதால், விலாப்புறத்தில் அறுவை சிகிச்சை மேற்கொண்டிருந்த நிலையிலும், அதிகாலையில் அண்ணா நினைவிடம் சென்று உண்ணாநோன்பைத் தொடங்கினேன். அன்று பகல் 11 மணியளவில் இலங்கைப் பாதுகாப்புக் கவுன்சில் கூடி ஆலோசனை நடத்தி 12 மணியளவில் "இலங்கை வடக்கில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்துவிட்டது" என்று இலங்கை அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.பிரணாப்முகர்ஜி அவர்கள் "போர் நடவடிக்கைகள் முற்றுப் பெற்றுவிட்டன" என்று அறிக்கை வெளியிட்டு அதன் நகலை, நான் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கே அனுப்பி, உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளும்படி பிரதமரும், சோனியா காந்தி அம்மையாரும் கேட்டுக்கொண்டனர்.

போர் முடிவுக்கு வந்துவிட்டதாக ராஜபக்ஷே அரசு சொன்னதை உலக நாடுகளும் நம்பின; மத்திய அரசும் நம்பியது; மத்திய

அரசு எனக்கும் நம்பிக்கையை ஊட்டியது. அதுமாத்திரமல்ல; அமெரிக்க அரசே அதை நம்பி, அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் ராபர்ட் உட் அவர்கள் இலங்கை அரசின் போர் நிறுத்த அறிவிப்பை வரவேற்பதாகத் தெரிவித்தார். மத்திய அரசு என்னைக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் மற்றும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், நண்பர்களும் வலியுறுத்தியதன் அடிப்படையிலும் நான் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டேன்.

இலங்கையில் இறுதிப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கும், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் எனது உயிரைப் பணயம் வைத்து, இப்படி எல்லாம் சங்கிலித் தொடர்போல நடவடிக்கைகளை மேற்கொண்டதற்குப் பிறகும்; தி.மு.கழகத்தையும் என்னையும் ஆரம்ப காலம் முதலே குற்றம் காண்பவர்களும் - குறை சொல்பவர்களும், ஈழத் தமிழர்களுக்காக எதையுமே இழக்க முன்வராதவர்களும், எத்தனையோ முறை தேவையான விளக்கங்களைக் கொடுத்ததற்குப் பிறகும், அதையே திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டுவது நிரந்தரமான விரோதத்தினாலும், திசை திருப்பிடும் தீயநோக்கத்தாலுமே தவிர வேறல்ல. அது அவர்களால் நடத்தப்படும் கபட நாடகம்!

2001 செப்டம்பர் 11 அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப் பிறகு, விடுதலைப் போராளிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை உலக நாடுகள் பல மறந்து போய்விட்டதையும்; அதனாலேயே பல நாடுகள் புலிகள் இயக்கத்திற்குத் தடை விதித்ததையும், பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் மிலி பாண்ட் - பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் கூச்சனர் போன்றோர் வல்லரசுகளின் சார்பில், ஈழச் சிக்கலைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொண்டும் முடியாமல் போனதையும்; இங்குள்ள ஒரு சிலர் மறைத்துவிட்டாலும்கூட, வரலாறு மறந்துவிடாது.

ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே ஜெயலலிதா - கழகம் இன்று மேற்கொண்டு அறிவித்துள்ள முடிவைக் கபட நாடகம் என்றும்; 2009ஆம் ஆண்டு இலங்கையில் உச்சக்கட்டப் போர் நடந்தபோது நான் எந்த நடவடிக்கையும்

மேற்கொள்ளவில்லை என்றும்; தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஜெயலலிதா கொண்டு வந்த தீர்மானத்தின்மீது நான் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகவும்; கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் அமெரிக்கத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, நான் அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றும்; மனித உரிமைகள் ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக இந்திய பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்று நான் சொல்லியிருப்பதாகவும்; ஈழத் தமிழர் பிரச்சினையில் நான் எதுவுமே செய்யாததைப் போலவும், ஜெயலலிதா அதற்காகத் தனி அவதாரமே எடுத்திருப்பதைப் போலவும் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஜெயலலிதாவின் அறிக்கையிலே சொல்லப்பட்டுள்ளவை எந்த அளவுக்கு உண்மைக்குப் புறம்பானவை என்பதை நடுநிலையாளர்கள் நன்கு அறிவார்கள்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் மட்டுமல்லாமல், தமிழர்களின் ஒட்டுமொத்த நலனோடு தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளிலும் இரட்டை வேடம் போட்டுக் கபட நாடகம் ஆடி வருபவர் ஜெயலலிதா. அண்ணாவின் கனவான சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினையிலும், காவிரிப் பிரச்சினையிலும் முன்னுக்குப் பின் முரணாக, கருத்துக்களைச் சொல்லிக் கபட நாடகம் என்பதற்கு இலக்கணம் வகுத்திருப்பவர் ஜெயலலிதா.

ஈழத் தமிழர் பிரச்சினையில்; 16-4-2002 அன்று அ.தி.மு.க. ஆட்சியில், தமிழகச் சட்டப்பேரவையில் -

> “விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்” என்றும்; “ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறை பிடிப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும்” என்றும் -

தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பரம விரோதியைப் போல உலகுக்குக்

காட்டிக் கொண்டவர் ஜெயலலிதா. "ராஜபக்ஷே நடத்தும் யுத்தம் தமிழர்களை எதிர்த்து அல்ல; விடுதலைப் புலிகளை எதிர்த்துத்தான்" என்று அபாண்டமாகப் பொய் சொல்லி அகிலத்தையே அதிர்ச்சியுறச் செய்தவர் ஜெயலலிதா!

17-1-2009 அன்று,

> "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான்."

என்று ராஜபக்ஷே அரசு கொத்துக் கொத்தாகக் குண்டுகளை வீசி, பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்ததை நியாயப்படுத்தியும், இலங்கை ராணுவத்திற்கு வக்காலத்து வாங்கியும் அறிக்கை வெளியிட்டவர் ஜெயலலிதா. இப்போது, தமிழகத்தில் மாணவச் செல்வங்களின் தன்னியல்பான பேரெழுச்சியைக் காவல் துறையைக் கொண்டு, அடக்கியும் ஒடுக்கியும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான தனது மனநிலையை ஜெயலலிதா வெளிப்படுத்திடத் தவறவில்லை! அப்படிப்பட்டவர் ஈழத் தமிழர்களுக்காக வடிக்கும் கண்ணீர் நீலிக்கண்ணீரே அன்றி வேறல்ல; ஜெயலலிதா போடுவது நாடகம், அதுவும் கபட நாடகமே அன்றி வேறல்ல.

ஈழத் தமிழர் பிரச்சினையில் ஜெயலலிதா காட்டிய முரண்பாடான அணுகுமுறையைப் போலவே; தென்மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான சேது சமுத்திரத் திட்டத்திலும் முன்னுக்குப் பின் முரணாகக் கருத்துக்களைச் சொல்லிக் கடப நாடகம் ஆடி வருகிறார். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா வெளியிட்ட அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில், "ராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் **ஆடம்ஸ் பிரிட்ஜ்** பகுதியில் கப்பல் போக்குவரத்துக்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகளை அகற்றி ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பது, சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்" என்றும்; 2004ஆம் ஆண்டு ஜெயலலிதா வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "சேது சமுத்திரத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கப் போதிய நிதியினை உடனடியாக ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட

காலவரையறைக்குள் நிறைவேற்றிட வேண்டுமென்று வலியுறுத்துவோம்" என்றும் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு, தற்போது ராமர் பாலத்தைத் தேசியச் சின்னமாக அறிவிக்க வேண்டுமென்று ஜெயலலிதா சொல்வது எத்தகைய முரண்பாடு? எப்படிப்பட்ட கபட நாடகம்?

டெல்டா மாவட்ட மக்களின் - குறிப்பாக விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்குக் காரணமாகக் கருதப்படும் காவிரிப் பிரச்சினையிலும், வேறுபாடான நிலைகளை மேற்கொண்டவர் ஜெயலலிதா. இந்தியப் பிரதமராக இருந்த திரு. வாஜ்பய் அவர்கள் தலைமையில் காவிரி ஆணையம் அமைக்கப்பட்டபோது, அதைப் "பல் இல்லாத ஆணையம்" என்றும்; "செயல்படாத ஆணையம்" என்றும் தரக்குறைவாக விமர்சித்ததோடு; காவிரி ஆணையத்தின் தலைவரான பிரதமர் வாஜ்பய் மீதே தனக்கு நம்பிக்கை இல்லை என்றும் கூறி, உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கே ஆளானவர் ஜெயலலிதா. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளியானபோது, 6-2-2007 அன்று "கருணாநிதியின் தொடர் துரோகச் செயலால்தான், காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்புத் தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது" என்று ஆத்திரங் கொப்பளிக்கச் சொன்னவர்; அந்தப் "பாதகமான தீர்ப்பு" தற்போது மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதைத்தான், முப்பதாண்டு காலத்தில் தனக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று சொல்லி, "பொன்னியின் செல்வி" என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டு, ஜெயலலிதா பரவசப்பட்டிருக்கிறார். இப்படிக் காவிரிப் பிரச்சினையிலும் ஜெயலலிதா ஆடி வருவது கபட நாடகமே!

கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்த தொடர்ச்சியான அழுத்தத்தின் காரணமாகத்தான், இந்திய அரசு ஆதரித்தது என்பதையும்; தற்போது நாம் கேட்கும் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி - அமெரிக்கத் தீர்மானத்தோடு அந்தத் திருத்தங்களையும் இணைத்து ஆதரித்திட வேண்டுமென்ற நமது நிலைப்பாட்டையும்; 'டெசோ' மாநாட்டுக்கும், தீர்மானங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும், வேலை நிறுத்தத்திற்கும் தமிழக மக்கள் மத்தியிலும் - மாணவர்கள் மத்தியிலும் கிடைத்த மிகப் பெரிய வரவேற்பையும்; ஈழத் தமிழர்களின் நலன் காக்க யார், எப்பக்கமிருந்து குரல்

கொடுத்தாலும் வரவேற்கக் கூடியதே என்றும் - ஒவ்வொரு வரும் மாறுபாடான குரல் கொடுத்து ஈழத்தமிழர் நலனுக்குக் குந்தகம் ஏற்படுத்திவிடக் கூடாது என்றும் - நமக்கிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றை மறந்து ஈழத் தமிழர்களுக்காக நாம் அனைவரும் ஒரே குரலில் எதிரொலித்திட வேண்டும் என்றும் - நான் ஏற்கனவே விடுத்த வேண்டுகோளையும்; ஜெயலலிதா மறந்துவிட்டாரா? அல்லது திரை போட்டு மறைத்திட முயற்சிக்கிறாரா?

பிரதமர் வாஜ்பய்க்கும், அருமை நண்பர் எம்.ஜி.ஆருக்கும், ஜானகி அம்மையாருக்கும் செய்த துரோகத்தையும், வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் செய்த துரோகத்தையும், சுயநல அரசியலின் காரணமாகத் தற்போது தமிழக மக்களுக்கே தொடர்ந்து செய்து வரும் துரோகத்தையும் மறைப்பதற்காக; மற்றவர்களைப் பார்த்து, "துரோகம், துரோகம்" என்று கூக்குரலிடும் உத்தியை, இங்குள்ள தமிழர்களும், ஈழத் தமிழர்களும் ஏற்க மாட்டார்கள்; உலகத் தமிழர்களும் ஒருபோதும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்!

அன்புள்ள,

மு.க.

21-3-2013

3722. சட்டப்பேரவையில் அன்றும், இன்றும்!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவைக் கூட்டம் 8-2-2013 அன்று நடைபெற்றபோது, தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்று, பின்னர் அந்தக் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல் வெளியேறிய தாகக் கூறப்படும் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் (தமிழழகன்) பேரவையில் பேசும்போது, தான் கட்சியிலிருந்து வெளியேறிய காரணத்தால், ஆட்சியினர் தன் தொகுதிக்கு நன்மைகளைச் செய்கிறார்கள் என்றும், மற்ற தே.மு.தி.க. உறுப்பினர்களும் தன்னைப் போல் முடிவு எடுத்தால், அவர்களும் பயன் பெறலாம் என்றும் வெளிப்படையாக அழைப்பு விடுத்தார். அவரது அந்தப் பேச்சுக்குத் தே.மு.தி.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் அவையில் எதிர்ப்பு தெரிவித்தனர். இரு சாராருக்கும் இடையே தகராறு அப்போது ஏற்பட்டது. தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்குள் நடைபெற்ற விவகாரம் இது. இதில் தே.மு.தி.க. சார்பில் வெற்றிபெற்று அக்கட்சியின் கட்டுப்பாட்டுக்குப் புறம்பாகச் செயல்படும் உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறி, தே.மு.தி.க.விலே தொடர்ந்து உறுதியாக இருக்கின்ற ஆறு பேர் மீது பிரச்சினை எழுப்பப்பட்டு, உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

உரிமைக் குழுவும் ஒரு மாதத்திற்குள் இந்தப் பிரச்சினை பற்றி ஆய்வு செய்து தனது அறிக்கையினைத் தாக்கல் செய்துவிட்டது. அதன்படி அந்த ஆறு சட்டப்பேரவை உறுப்பினர்களும் ஓராண்டு காலத்திற்குப் பேரவைக்கு வர முடியாத அளவிற்குத் தடை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஓராண்டு காலத்திற்கு அவர்களுக்கு ஊதியமும் கிடையாது. இந்த நடவடிக்கையைக் கண்டித்து, தி.மு.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் வெளிநடப்பு செய்துள்ளன. கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது அ.தி.மு.க. வுடன் தோழமைக்

கொண்டு அவர்களின் வெற்றிக்காக உழைத்த தோழமைக் கட்சி ஒன்றுக்கு ஏற்பட்ட நிலை இது.

இதனையொட்டிக் கடந்த காலங்களில் தமிழகச் சட்டப்பேரவையில் நடைபெற்ற ஒரு சில சம்பவங்களை நினைவூட்டினால் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

24-11-1986 அன்று எம்.ஜி.ஆர். ஆட்சியில், மொழிப் போராட்டத்தின் ஒரு கட்டமாக இந்திய அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக, பேரவைத் தலைவர்; தி.மு.கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அவர்களையும், மற்றும் எஸ். பாலன், ஏ.செல்வராசன், பரிதி இளம்வழுதி, பி.பொன்னுரங்கம், கோவை எம்.ராமநாதன், தர்மபுரி ஆர். சின்னசாமி, ஆலந்தூர் ம. ஆப்ரகாம், மதுராந்தகம் சி.ஆறுமுகம், அரக்கோணம் வி.கே. இராசு ஆகியோரையும் பேரவையிலிருந்து நிரந்தரமாக நீக்கித் தனது தீர்ப்பினைப் படித்தார். எதிர்க்கட்சிகள் சார்பில் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் கூட - அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற அன்றைய ஆளுங்கட்சியான அ.தி.மு.க. கடைசிவரை முன்வரவில்லை.

★

28-12-1988 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் நடைபெற்றது என்ன? "ஜா" அணியினரும், "ஜெ" அணியினரும் அவையிலே உள்ள "மைக்கு"களைக் கையிலேபிடுங்கிக் கொண்டு ஒருவருக்கொருவர் தாக்கிக்கொண்டு, சட்டப்பேரவை வரலாற்றில் இல்லாத மிகப் பெரிய ரகளையைச் செய்ததைத் தமிழகம் மறந்துவிட்டதா என்ன? உள்கட்சி விவகாரம் சட்டப்பேரவைக்கு வந்து ஊர் சிரித்ததைப் பார்த்து நாடே சிரித்தது.

★

மற்றொரு உதாரணம் - 1991ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அ.தி.மு.க. ஆட்சியிலே ஜூலை 4ந்தேதி ஆளுநர் உரையாற்றினார். ஆளுநர் உரையாற்றத் தொடங்கியபோது, பா.ம.க. உறுப்பினராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் ஒரு அறிக்கையை அவையிலே ஆங்கிலத்திலே படிக்கத் தொடங்கினார். அப்போது அ.தி.மு.க. உறுப்பினராக இருந்த தாமரைக்கனி, பண்ருட்டி ராமச்சந்திரனின் அருகில் வந்து தாக்கினார்.

இதைப்பற்றி 5-7-1991 அன்று பேரவைத் தலைவர்; அவை கூடியதும் - இரங்கல் உரை ஆற்றுவதற்கு முன்பாகவே - அவசர அவசரமாக ஒரு தீர்ப்பினைப் படித்தார். அந்தத் தீர்ப்பு வருமாறு :-

பேரவைத் தலைவர் :- "4-7-1991 அன்று ஆளுநர் உரை நிகழ்த்துகையில், பண்ருட்டி

ச.இராமச்சந்திரன் எழுந்து ஆளுநர் உரையாற்றுவதற்குக் குறுக்கீடு செய்தார். அப்போது உறுப்பினர் திரு.தாமரைக்கனி தன் இருக்கையை விட்டு எழுந்து வந்து பண்ருட்டி இராமச்சந்திரனின் இருக்கைக்குப் பின்னால் நின்று கொண்டு விரும்பத்தகாத வகையில் அவர் தோள் மீது ஓங்கித் தட்டினார். இவர்கள் இருவரது செயல்களுமே விதிகளுக்கு முரண்பாடானவை என்றும், எனவே இது குறித்துப் பேரவைத் தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதல் அமைச்சர் ஜெயலலிதா 4-7-1991 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போது என்னைக் கேட்டுக்கொண்டார். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் பேரவையின் ஒழுங்கிற்குப் பெருத்த ஊறு விளைவிப்பனவாகவே நானும் கருதுகிறேன். எனவே, பண்ருட்டி இராமச்சந்திரன் மற்றும் இரா. தாமரைக்கனி ஆகிய இரு உறுப்பினர்களையும் இன்று முதல் மூன்று நாட்களுக்குப் பேரவையின் நடவடிக்கைகளில் இருந்து நீக்கிவைத்துத் தீர்ப்பு வழங்குகிறேன்" என்றார்.

★

22-3-1999 அன்று ஒரு சம்பவம்! சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றபோது அ.தி.மு.க. உறுப்பினராக இருந்த தாமரைக்கனி, அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தின் முகத்திலே குத்தினார். அவர் அணிந்திருந்த மோதிரம் வீரபாண்டி ஆறுமுகத்தின் மூக்கிலே குத்தி ரத்தம் கொட்டியது. அதே தாமரைக்கனி பின்னர் அ.தி.மு.க.விலிருந்து விலகிச் கழகத்திலேயே சேர்ந்தார்.

★

இதோ மற்றொரு உதாரணம்:- 7-1-2011 அன்று தி.மு.கழக ஆட்சியில் ஆளுநர் உரையாற்றியபோது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் ரகளையில் ஈடுபட்டு, வெளியேற்ற வந்த அவைக் காவலர்களைக் கடுமையாகத் தாக்கினார்கள். அதிலே ஒருவர், அவைக் காவலர்களை எட்டி உதைத்து, தொப்பிகளைப் பறித்து

அவர்கள் முகத்திலேயே அடித்தார். அந்தப் புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளிலே அப்போதே வெளிவந்தன. ஆளுநர் உரையாற்றியபோது அத்துமீறிச் செயல்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒன்பது பேரை மாதக் கணக்கிலோ, ஆண்டுக் கணக்கிலோ அல்ல; அந்தத் தொடர் முழுவதும் நீக்கம் செய்து பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் உத்தரவிட்டார். அதை எதிர்த்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். ஆனால் அதற்கு அடுத்த நாள் என்ன நடந்தது தெரியுமா?

முதல் அமைச்சராக இருந்த நான் மறுநாள் பேரவையில் கூறும்போது, "பேராசிரியர் உள்ளிட்ட பத்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை - அ.தி.மு.க. ஆட்சியிலே நீக்கப்பட்டவர்களை மீண்டும் அந்த ஆட்சியில் அனுமதிக்கவில்லை. ஆனால் வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் மீண்டும் அவைக்கு வந்து ஒத்துழைக்க வேண்டுமென்று அண்ணா வழியிலே நடைபெறுகின்ற இன்றைய தி.மு. கழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தேன்.

★

மற்றொரு நிகழ்ச்சி. 18-10-2007 அன்று காலை உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின், ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவையில் இருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக எழுந்து பயங்கரமாக கூச்சலும், குழப்பமும் விளைவித்து, அவரைப் பேச விடாமல் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் அனைவரும் தங்கள் இருக்கைகளைவிட்டுக் கும்பலாக எழுந்து, பேரவைத் தலைவரின் இருக்கை முன்பு தரையில் அமர்ந்து கண்ணியக் குறைவாக நடந்து கொண்டார்கள். பேரவைத் தலைவர் பலமுறை அவர்களை இருக்கைக்குத் திரும்புமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொண்டும் அவர்கள் திரும்பாத காரணத்தினால், பேரவைத் தலைவர் அவைக் காவலர்களை அழைத்து, அவர்களை வெளியேற்ற உத்தரவிட்டார். அப்போது திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.போஸ் தன்னை அப்புறப்படுத்த வந்த காவலர் பி.மதிவாணனின் தொப்பியைப் பிடுங்கி, பேரவைத் தலைவர் மீது தூக்கி எறிந்தார். அதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் பார்த்தார்கள். பேரவைத் தலைவரையே தாக்கிய

அந்தச் செயலுக்காகத் தி.மு.கழக ஆட்சியில் முதலில் ஆறு மாத காலத்திற்கு அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும், நான் உடனடியாகத் தலையிட்டு இந்தக் கூட்டத் தொடர் தவிர அடுத்த கூட்டத் தொடரின் முதல் பத்து நாள்களுக்கு மட்டும் நீக்கம் செய்தால் போதும் என்று கூறி, அவ்வாறே கடைப்பிடிக்கப்பட்டது. இது தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்ற மற்றொரு உதாரணம்.

★

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற விஜயகாந்த் அவர்களையே பத்து நாட்களுக்குப் பேரவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று நடவடிக்கை எடுத்த நிகழ்ச்சி வேறு எப்போதாவது நடந்தது உண்டா? அதுவும் அ.தி.மு.க. ஆட்சியில் தான் நடைபெற்றது.

★

13-11-2008 அன்று தி.மு.கழக ஆட்சியில் நான் அவையிலே இல்லாத நேரத்தில் - பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியினை அறிந்து - "அவர்கள் மின்சார வாரியம் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று அக்கறையோடு இருந்தார்களே, வெளியேற்றப்பட்டுவிட்ட காரணத்தால், அந்த விவாதத்தில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமே" என்று எண்ணி - நானே எதிர்க்கட்சித் துணைத் தலைவருடன் தொலைபேசியிலே பேசிட முயற்சித்து - அது கிடைக்காத காரணத்தால் - ஆளுங்கட்சியைச் சேர்ந்த தம்பிகள் மு.க.ஸ்டாலின், துரைமுருகன், வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு ஆகிய அமைச்சர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு - எதிர்க்கட்சித் தலைவரின் அறைக்கே சென்று அ.தி.மு.க.வினரைச் சமாதானம் செய்து மின்சாரம் பற்றிய விவாதத்திலே கலந்துகொள்ள வாருங்கள் என்று அழைக்கச் செய்தேன். மேலும் பேரவைத் தலைவரோடும் தொலைபேசியிலே பேசி, வெளியேற்றப்பட்ட ஆணையைத் திரும்பப் பெற்று, அவர்களையெல்லாம் கலந்து கொள்ள வாருங்கள் என்று அவையிலேயே அழைப்பு விடுக்கவும் கேட்டுக்கொண்டேன். அவரும் அவ்வாறே அழைப்பும் விடுத்தார். ஆனால் இத்தனைக்கும்

பிறகு என்ன காரணத்தாலோ அவர்கள் அவைக்கு வரவும் இல்லை. மின்சார விவாதத்திலே கலந்து கொள்ளவும் இல்லை. ஆனாலும் அண்ணா கற்றுக் கொடுத்த அந்தப் பண்பாட்டுடன் நாம் நடந்து கொண்டோம் என்ற மன ஆறுதல் எனக்குக் கிடைத்தது. ஆனால் அண்ணா பெயரால் இன்னமும் கட்சி நடத்துபவர்களோ?

★

25-3-1989! 13 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்று, நிதியமைச்சர் என்ற முறையில் நான் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கியபோது நடந்தது என்ன? எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா எழுந்து, "முதல் அமைச்சர் ஒரு கிரிமினல் குற்றவாளி, அவர் நிதிநிலை அறிக்கையைப் படிக்கக் கூடாது" என்று கூறி, என் கையிலே இருந்த நிதிநிலை அறிக்கையைப் பிடுங்கிட முற்பட்டார். அவருக்குத் துணையாக அ.தி.மு.க. உறுப்பினர்கள், அவரைச் சூழ்ந்து நின்று கொண்டு "படிக்காதே, படிக்காதே" என்று கூச்சலிட்டனர். அந்தியூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் என் கையிலிருந்த நிதி நிலை அறிக்கைப் புத்தகத்தைப் பிடித்திழுத்துக் கிழித்தெறிந்தார். அதைத் தடுக்க முனைந்தபோது என் முகத்தில் குத்தி, மூக்குக் கண்ணாடி கீழே நொறுங்கி விழுந்தது. அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தின் தலையில் ஒலிபெருக்கிக் கம்பியால் தாக்கி, ரத்தம் ஒழுகிய நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவ்வளவு பெரிய சம்பவத்திற்கே அப்போது என்ன தண்டனை வழங்கப் பட்டது தெரியுமா? கலவரம் செய்த அ.தி.மு.க. உறுப்பினர்களை ஒரு வார காலம் தற்காலிக நீக்கம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், 27-3-1989 அன்று சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவராக இருந்த இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன், அந்தத் தற்காலிக நீக்கத்தையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதை யொட்டி, நான்; "எதிர்க்கட்சிகள் இல்லாமல் இந்த அவை நடவடிக்கைகளை நடத்த வேண்டும் என்கிற குறுகிய மனப்பான்மை எனக்கோ இந்த அரசுக்கோ நிச்சயமாக இல்லை. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அந்த எண்ணத்தின்

அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை நான் அணுகுகிறேன். அன்றையதினம் ஏற்பட்ட ஒரு உணர்ச்சியின் காரணமாக, கொந்தளிப்பின் எதிரொலியாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்று எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் அவையில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டேன். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். இதனை அப்போது "பாரத ரத்னா" சி. சுப்ரமணியம் அவர்களே ஏடுகள் வாயிலாகப் பாராட்டியிருந்தார்.

★

உடன்பிறப்பே, சட்டமன்றத்தில் ஜனநாயகம் எவ்வெப்போது எப்படியெல்லாம் கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்காக இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எழுதியுள்ளேன். இதை நான் எழுதிக் கொண்டிருக்கும்போதே எனக்குக் கிடைத்த தகவல்படி தற்போது தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான நடவடிக்கையை ஓராண்டிலிருந்து ஆறு மாதமாகக் குறைத்திருக்கிறார்களாம். இதுவும் அதிகபட்சத் தண்டனைதான். என்னுடைய இந்த விளக்கங்களையெல்லாம் படித்துப் பார்த்த பிறகாவது, அ.தி.மு.க. ஆட்சியினர் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீது தற்போது எடுத் திருக்கும் நடவடிக்கை பற்றி மறுபரிசீலனை செய்து, அதனை ரத்து செய்வதற்கோ அல்லது நாட்கள் கணக்கில் அல்லது வாரக் கணக்கில் குறைத்து அறிவிப்பதற்கோ முன்வருவார்கள் என்று நம்புகிறேன். முன் வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-3-2013

3723. வாடிக்கையாகிவிட்ட பித்தலாட்டம்!

உடன்பிறப்பே,

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து வேட்டையாடுவதைப் பற்றி நேற்றையதினம் (26-3-2013) தமிழகச் சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு, முதலமைச்சர் ஜெயலலிதா பதிலளித்தபோது, தேவையில்லாமல் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு, 1974 ஆம் ஆண்டு கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டதாகவும், அப்போது தமிழக முதல்வராகக் கருணாநிதிதான் இருந்தார் என்றும் கூறியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டை மறுத்து நான் பலமுறை விளக்கமளித்த போதிலும் ஜெயலலிதா என்ன காரணத் தாலோ ஏற்கனவே சொன்னதையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறார்.

1974 ஆம் ஆண்டில் கச்சத் தீவை இலங்கைக்குத் தருவதென்ற முடிவை மத்திய அரசு எடுத்தபோது, அன்றைய தமிழகத்திலே இருந்த மாநில அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதற்குப் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. அதையும் மீறி, சில காரணங்களைச் சொல்லி கச்சத் தீவு இந்திய அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுவிட்டது. அப்படி வழங்கப்பட்ட நேரத்திலேகூட, கச்சத் தீவிலே மீன் பிடிக்கும் உரிமை, யாத்திரை செல்கின்ற உரிமை, மீன் வலைகளைக் காயவைப்பதற்கான உரிமை இவைகள் எல்லாம் மீனவ மக்களுக்கு உண்டு என்கிற ஷரத்து அதிலே சேர்க்கப்பட வேண்டுமென்று அன்றைய தமிழக தி.மு.க. அரசு வலியுறுத்தியதின் பேரில், அந்த ஷரத்து அதிலே சேர்க்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு வந்த நெருக்கடி நிலை காலத்தில் தமிழகத்திலே கவர்னர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், அந்த ஷரத்துக்கள் எப்படி அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டன என்றே தெரியாத அளவிற்கு அந்த ஷரத்துக்கள் பறி போய்விட்டன. ஆனால் அதற்காக நமது எதிர்ப்பைத் தெரிவிக்காமல் இருந்திருக்கிறோமா?

1974ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோதே கழகப் பொதுக் குழுவில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதுமான கச்சத்தீவின் மீது இலங்கைக்கு அரசுரிமை வழங்கும் வகையில் இந்திய அரசு செய்துள்ள ஒப்பந்தத்தைக் கழகப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிக்கு எதிராக இந்த ஒப்பந்தம் அமைந்துவிடக் கூடாது என்று தமிழக தி.மு.க. அரசு பலமுறை ஆதாரங்களுடன் மத்திய அரசை அணுகித் தடுத்தும்கூட, அதனை அலட்சியப்படுத்திவிட்டு மத்திய அரசு கச்சத் தீவை இலங்கைக்கு அளித்த செயல் வேதனை தருவதாகும். கச்சத்தீவு பிரச்சினையை முடிந்துவிட்ட பிரச்சினையாகக் கருதாமல், மத்திய அரசு மறுபரிசீலனை செய்து அந்தத் தீவின் மீது இந்திய அரசுக்கு அரசுரிமை இருக்குமாறு ஒப்பந்தத்தைத் திருத்த வழிவகை காண வேண்டுமென்று பிரதமர் இந்திராகாந்தியை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது."

தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்ல, 14-7-1974 அன்று தமிழகம் முழுவதும் கழகத்தின் சார்பில் "கச்சத் தீவு ஒப்பந்தக் கண்டன நாள்" நடத்தப்பட்டது. கச்சத் தீவு ஒப்பந்தம் கூடாதென்றும், கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதியே என்றும் பல்வேறு ஆதாரங்களோடு முதலமைச்சர் என்ற முறையில் 6-1-1974 அன்று பிரதமர் இந்திராகாந்திக்குக் கடிதம் எழுதினேன்.

திருமதி இந்திராகாந்தி பிரதமராக இருந்த நேரத்திலேதான் கச்சத் தீவினை இலங்கைக்குத் தர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அவர்கள் வெளியுறவுத் துறை அமைச்சரையும், அதிகாரிகளையும் என்னிடம் அனுப்பி விவாதிக்கச் செய்தபோது, தமிழக அரசின் சார்பில் நாங்கள் எங்கள் கடுமையான எதிர்ப்பினைப் பதிவு செய்த பிறகும், கச்சத் தீவினை மத்திய அரசு இலங்கைக்கு வழங்கியது.

23-7-1974 அன்று கச்சத் தீவு பற்றிய பிரச்சினை நாடாளுமன்றத்தில் பேசப்பட்டபோது, "கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்ததை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்று கழகத்தின் சார்பில் மக்களவையில் இரா.செழியனும், மாநிலங்களவையில் எஸ்.எஸ். மாரிசாமியும் கருத்துத் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு ஜெயலலிதா ஒருமுறை விடுத்த அறிக்கையில், "கச்சத் தீவு பிரச்சினை என்பது மற்றொரு நாட்டுடனான பிரச்சினை. அதை மீட்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது. மாநில முதலமைச்சருக்கு அந்த அதிகாரம் இருந்திருந்தால் அன்றைக்கே கச்சத் தீவு மீட்கப்பட்டிருக்கும்" என்று அவரே தனது அறிக்கையில் தன்னையும் மறந்து கூறியிருக்கிறார். கச்சத் தீவைப் பொறுத்தவரை மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் என்று கூறிய ஜெயலலிதா, "கச்சத் தீவை நான் தாரைவார்த்து விட்டேன்" என்று திரும்பத் திரும்பச் சொல்கிறாரே, அப்போதெல்லாம் இது மத்திய அரசுக்கான அதிகாரம் என்ற நினைவு வரவில்லையா?

கச்சத் தீவு குறித்து பிரதமர்களாக இருந்தவர்களுக்கெல்லாம் ஜெயலலிதா கடிதம் எழுதி பல முறை வலியுறுத்தியிருப்பதாகச் சொல்லுகிறார். ஆனால் நான் பிரதமருக்குக் கடிதம் எழுதினால், கடிதம் எழுதினால் மட்டும் போதுமா, ஏன் நேரில் செல்லவில்லை என்பார்.

கச்சத் தீவு பிரச்சினையைப் பற்றி ஜெயலலிதா அடிக்கடி குறை கூறிக் கொண்டுள்ளார். மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் மத்திய அரசு கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்த நடவடிக்கையை கண்டித்துத் தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்லாமல்; கச்சத் தீவு தொடர்பான ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியாத நிலை இருந்தால் தமிழக மீனவர்களின் உரிமைகள் பாதிக்கப்படாதவகையில் அந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசு தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றுகூட மத்திய அரசைத் தி.மு. கழகம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டது.

1991இல் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து முழங்கியபோது "கச்சத் தீவை மீட்பேன்" எனச் சபதமிட்டாரே அந்த சபதத்தை நிறைவேற்றிட அதன்பின் ஆட்சி செய்த ஐந்தாண்டு காலமும் அதற்காக ஒரு சிறு துரும்பையேனும் கிள்ளிப் போட்டிருப்பாரா? கச்சத் தீவில் உள்ள அந்தோணியார் கோவிலுக்குச் செல்வதற்குக்கூட அவர் ஆட்சியில் வழிவகை செய்யவில்லை. தி.மு. கழக ஆட்சியிலேதான் அதற்கொரு வழி பிறந்தது.

20-4-1992 அன்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா பேசும்போது "கச்சத் தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு

அனுப்பினோம். ஆனால், கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக் கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று கூறியிருக்கிறார்.

தி.மு. கழகத்தைப் பொறுத்து மாத்திரமல்ல, தி.மு. கழக ஆட்சியைப் பொறுத்தும் பல நேரங்களில் கச்சத் தீவு பிரச்சினையை எழுப்பிக் கச்சத் தீவை மீட்டுக் கொடுங்கள் என்று கேட்கத் தவறியதும் இல்லை. கச்சத் தீவிலே மீனவர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டி அந்தப் பாதிப்பை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்கவும் கழக அரசு தவறியது இல்லை.

ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால் - 30-9-1994இல் தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, அப்போது பிரதமராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் அணில் "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations" அதாவது "தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ்சிறிய தீவினை (கச்சத் தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்" என்று ஜெயலலிதா குறிப்பிட்டிருக்கிறார். அதே பாடத்தைத்தான் இன்னமும் மத்தியிலே உள்ள அமைச்சர்கள் கூறி வருகிறார்கள்.

கச்சத் தீவை இலங்கைக்கு இந்தியா வழங்கப் போகின்ற செய்தி, அதற்கு முன்பு பல ஆண்டுகளாகச் செய்தி அளவிலேதான் இருந்தது. இன்னும் ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்றால் தமிழகச் சட்டமன்றத்தில் 29-3-1972 அன்று கச்சத் தீவு பற்றிய ஒரு கேள்வியே இடம்பெற்று, அதற்கு நான் பதிலும் கூறியிருக்கிறேன். அந்தப் பதிலில் "நாம் கச்சத் தீவைக் குறித்த நியாயமான விவகாரங்களை மத்திய அரசிற்குத் தெரிவித்திருக்கிறோம். கச்சத் தீவு பிரச்சினை இந்திய அரசு தலையிட்டுச் சுமூகமாக தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை" என்று தெரிவித்திருக்கிறேன்.

அதனைத் தொடர்ந்து மதுரையில் நான் பேசும்போது, "கச்சத் தீவு தமிழ்நாட்டிற்கே சொந்தம், இந்தியாவிற்கே சொந்தம் என்ற ஆதாரங்களை எல்லாம் பிரதமருக்கு எடுத்துவைத்தேன். எதையும் லட்சியம் செய்யாமல் என்னை அழைத்து இதுபற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கச்சத் தீவை இலங்கைக்குத் தானம் செய்திருக்கிறார் பிரதமர்" என்றும்; திருச்சியில் நான் பேசும்போது,

"கச்சத் தீவு தமிழகத்தின் உரிமை. கச்சத் தீவு பிரச்சினையில் நாட்டில் இருக்கும் மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறார்கள். அதைக் கேளாமல் இலங்கைக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டு, ஒப்பந்தம் ஆகிவிட்ட செய்தியை உலகுக்கு அறிவிக்கிறார்கள். நாம் பத்திரிகையைப் பார்த்து தெரிந்துகொள்கிறோம்" என்றும் பேசியிருக்கிறேன்.

கழக ஆட்சிக் காலத்தில், கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்கான தீர்மானத்தை ஆளுங்கட்சியான தி.மு.க. கொண்டு வந்தபோது எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க. அதனை ஆதரிக்காமல் வெளிநடப்பு செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1974 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதி திடீரென்று மத்திய அரசின் அறிவிப்பு வந்தது. அதே ஆண்டு ஜூன் 29 ஆம் தேதியன்று சென்னை தலைமைச் செயலகத்திலே அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து அவர்களோடு பேசி, அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், நான் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. அந்தத் தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திட மறுத்து விட்டது.

அந்தக் கூட்டத்திற்குப் பிறகு, அன்றைய பிரதமருக்கு நான் எழுதிய கடிதம் வருமாறு :-

"On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Sri Lanka Agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India. May I express the hope that you will take into consideration the decision contained in the Resolution and take appropriate action?"

23-7-2003 அன்று ஜெயலலிதா அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையே நல்லுறவைப் பேணவும், தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் உரிமைகளைக் காப்பாற்றவும் உள்ள ஒரே வழி என்று குறிப்பிட்டு மேலும் எழுதியிருக்கிறார்.
"The best possible solution is to get the island of Katcha Theevu and adjacent seas on lease in perpetuity solely for fishing, drying of nets and pilgrimage. Sri Lanka's Sovereignty over Katcha Theeve could

be upheld at the same time." (அதாவது "கச்சத் தீவையும், அதற்கு அருகிலே உள்ள கடல் பகுதிகளையும் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், வலைகளைக் காயவைப்பதற்கும், யாத்திரை செல்வதற்கும் நிரந்தரக் குத்தகைக்கு பெறலாம்; அதே நேரத்தில் கச்சத் தீவில் இலங்கை நாட்டுக்குள்ள இறையாண்மையை ஏற்றுக் கொள்ளலாம்"). இப்படியெல்லாம் அன்றைக்கு எழுதியவர்தான் இன்றைக்கு நம்மைப் பார்த்துக் கேள்விக் கணை தொடுக்கிறார்.

மேற்கு வங்காளத்தில் உள்ள பெருபாரி பகுதியைப் பற்றி முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் பேசியிருக்கிறார். இதே கருத்தைத் தான் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதும் 21-6-2009 அன்று விடுத்த அறிக்கையிலே கூறிவிட்டு, கச்சத் தீவை மீட்க நான் ஆட்சியிலே இருந்தபோது என்ன செய்தேன் என்று அப்போதும் கேட்டார், இப்போதும் கேட்டிருக்கிறார். என்னைக் கேள்வி கேட்கும் ஜெயலலிதா 1991 முதல் 1996 வரையிலும், 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலும், 2011 முதல் இதுவரையிலும் ஆட்சியிலே இருக்கிறாரே, இவர் என்ன செய்து கிழித்து விட்டார்? கச்சத் தீவை வாங்கித் தந்து விட்டாரா? ஆனால் நான் செய்த பாவத்திற்கு விமோசனமாக ஏதாவது செய்திருக்கிறேனா என்று கண்ணியத்தை மறந்து பேரவையில் ஜெயலலிதா கேட்டிருக்கிறார். அதனால்தான் நான் ஆட்சியிலே இருந்தபோது என்ன செய்தேன் என்பதை விளக்கியிருக்கிறேன்.

"கச்சத் தீவை மீட்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது" என்றும்; "இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே நல்லுறவு வேண்டும் என்பதற்காகத்தான் கச்சத் தீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது" என்றும் "கச்சத் தீவில் இலங்கைக்கு உள்ள இறையாண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் பேசிய, அறிக்கை விடுத்த ஜெயலலிதா அதை நான் தாரைவார்த்து விட்டேன் என்றும், அவர் அதை மீட்பேன் என்பதும் எப்படிப்பட்ட "கபட நாடகம்" என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாதா என்ன?

கச்சத் தீவு பற்றி ஜெயலலிதா உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது 2008ஆம் ஆண்டு. அதற்கு முன்பே தமிழர் தலைவர் கி.வீரமணி இதே கச்சத் தீவுக்காக 1997ஆம் ஆண்டே ஒரு வழக்கினைத் தாக்கல் செய்திருக்கிறார். ஆனால் பல ஆண்டுகள் ஆகியும் இந்த வழக்கில் ஒரு முடிவு காணப்படவில்லை

என்பது தான் உண்மை. எப்படியோ தமிழ் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் போதெல்லாம் ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும், நான்தான் கச்சத் தீவினை இலங்கைக்குத் தாரை வார்த்து விட்டதைப்போலக் கூறுவது என்பது வாடிக்கையாகப் போய்விட்ட பித்தலாட்டமாகிவிட்டது!

அனபுள்ள,

மு.க.

28-3-2013

3724. “இந்து” ஏடே சுட்டிக்காட்டும் இரட்டை வேடம்!

உடன்பிறப்பே,

கடந்த சில நாட்களாகத் தமிழகச் சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், அங்கே தி.மு.கழகத்தினரை வாய் திறந்து ஜனநாயக ரீதியாகக் கருத்து தெரிவிக்க விடாமல் ஆளுங்கட்சி தங்களது “மெஜாரிட்டி”யைக் கொண்டு தங்கள் விருப்பம்போல் பேசியும் வெளியேற்றியும் வருவதையும், முதல்அமைச்சர் பதிலுரை என்ற பெயரால் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், முழுக்க முழுக்க என்னைத் தனிப்பட்ட முறையில் எப்படியெல்லாம் தாக்கித் தரக்குறைவாகப் பேச முடியுமோ அந்த அளவிற்குத் தாக்கி உரையாற்றுவதையும் கண்டு வருகிறாய்!

அந்த வரிசையில் நேற்றையதினம் (27-3-2013) ஈழத் தமிழர்களுக்காகத் தமிழக மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்தை நசுக்கிடத் தமிழகக் காவல் துறையினர் முயற்சிப்பது குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம். அதற்குப் பதிலளிக்க வேண்டிய முதல் அமைச்சர் தன் பேச்சு முழுவதிலும் இலங்கைப் பிரச்சினையிலே நான் “கபட நாடகம்” ஆடுவதாகவும், “இரட்டைவேடம்” போடுவதாகவும் பல பக்கங்கள் பேச்சினைத் தயார் செய்துகொண்டு வந்து அவையிலே படித்துவிட்டு, ஏடுகளுக்கும் விநியோகம் செய்திருக்கிறார். இலங்கைப் பிரச்சினையிலே நான் கபட நாடகம் ஆடுவதாக ஜெயலலிதா பழி சுமத்துவது இது எத்தனையாவது முறை என்றே ஞாபகம் இல்லை. மேலும் கச்சத் தீவு பிரச்சினையாக இருந்தாலும், இலங்கைப் பிரச்சினையாக இருந்தாலும், காவேரி பிரச்சினையாக இருந்தாலும் அரைத்த மாவையே அரைப்பதைப்போல், ஜெயலலிதா சொன்னதையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறார். அந்தப் பேச்சினை ஏடுகள் பெரிதாக வெளியிடுகின்ற காரணத்தால், அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியது என்னுடைய கடமையாகிறது.

ஜெயலலிதா தன் பேச்சின் துவக்கத்திலேயே தமிழர் நலன் கருதி மத்திய காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டுமென்று அவர் 2009ஆம் ஆண்டே கூறியதாகவும், ஆனால் நானோ அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்துக்கு மத்திய அரசு முன் வராவிட்டால், தமிழகத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் ராஜினாமா செய்வார்கள் என்ற அளவில் தீர்மானம் நிறைவேற்றியதாகவும், பின்னர் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, என்னைச் சந்தித்த பிறகு, மத்திய அரசின் நடவடிக்கை திருப்தி அளிப்பதாக இருக்கிறது என்று தெரிவித்து ராஜினாமா நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன் என்றும் கூறியிருக்கிறார்.

ஜெயலலிதா இதிலே எதை நாடகம் என்கிறார்? இலங்கையிலே போர் கடுமையாக நடக்கிறது என்று கேள்விப்பட்டதும் உடனடியாக 14-10-2008 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியது நாடகமா? (அவரது அகராதியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் என்றாலே "அலர்ஜி" ஆயிற்றே?) அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் போர் நிறுத்தம் செய்ய முன்வரா விட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று தீர்மானம் நிறைவேற்றியது நாடகமா? அந்தத் தீர்மானத்தை உடனடியாகப் பிரதமருக்கு அனுப்பி, பிரதமர் அரசியல் ரீதியான தீர்வுகாண மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விரைவாக எடுத்திடும் என்று கூறியது அப்போதே ஏடுகளிலே வெளிவந்ததே, அது நாடகமா?

அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றி ஜெயலலிதா அப்போது விடுத்த அறிக்கையில், "தீர்மானத்தைப் பார்த்தால், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம் தான் தமிழகமக்கள் மனதில் எழுந்துள்ளது. இலங்கையில் தற்போது நடைபெறும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை என்பதை ஐந்து முறை முதலமைச்சரான கருணாநிதி புரிந்துகொள்ளாதது விந்தையாக உள்ளது. இலங்கை உள்நாட்டு விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டால், பின்னர் நம் நாட்டு உள் விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அது இந்திய

இறையாண்மைக்கு ஊறு விளைவிப்பதாக அமையும். அடுத்த நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளாது" என்றே ஜெயலலிதா தெரிவித்திருந்ததை தற்போது வசதியாக மறந்துவிட்டுப் பேசுவதற்குப் பெயர்தான் "இரட்டை வேடம்".

நமது வேண்டுகோளினை ஏற்று இந்தியப் பிரதமர் 18-10-2008 அன்று இலங்கை அதிபருடன் பேசியதும், 22-10-2008 அன்று மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி நாடாளுமன்றத்திலேயே இலங்கைத் தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளதாகக் கூறியதும், அதற்குப் பிறகும் 24-10-2008 அன்று சென்னையில் பிரமாண்டமான "மனிதச் சங்கிலி" ஒன்றினை நாம் நடத்தியதும்; 26-10-2008 அன்று பிரணாப் முகர்ஜி அவர்கள் சென்னைக்கே வந்து என்னைச் சந்தித்துவிட்டு, செய்தியாளர்களிடம் கூறும்போது, போர்நிறுத்தம் தொடருவதை உறுதி செய்ய வேண்டுமென்று அவரிடம் நான் வலியுறுத்தியதை எடுத்துக் கூறியதும்; 12-11-2008 அன்று இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் ஒன்றினை நான் முன்மொழிந்து நிறைவேற்றியதும்; 4-12-2008 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களையும் பிரதமரிடம் அழைத்துச் சென்று மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை இலங்கைக்கு அனுப்பிப் பேச்சுவார்த்தை நடத்தச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதும், அவ்வாறே பிரணாப் அவர்கள் இலங்கைக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியதும், 27-12-2008 அன்று தி.மு. கழகப் பொதுக்குழுவிலே இலங்கைத் தமிழர்களுக்காகத் தீர்மானம் நிறைவேற்றியதும்; என ஈழத் தமிழர் பாதுகாப்புக்காக நான் சங்கிலித் தொடர் போல எடுத்த நடவடிக்கைகள் அனைத்துமே நாடகமா? இரட்டை வேடமா?

அதற்குப் பிறகும் தி.மு.கழகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஏற்கனவே நான் விரிவாகவே எழுதிவிட்டேன். ஆனால் ஜெயலலிதா தன் பேச்சில் "அனைத்துக் கட்சிக் கூட்டம்" - "சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்" - "மனிதச் சங்கிலிப் போராட்டம்" - "நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல் கடிதங்களைத் திரு. கருணாநிதியே பெற்றுக் கொள்ளுதல்" - "எல்லோரும் பிரதமருக்குத் தந்தி அனுப்புங்கள்" - "டெல்லியில் பிரதமருடன் சந்திப்பு" - "வேலை நிறுத்தம்" - "பேரணி" -

“தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்” என பல்வேறு “கண்துடைப்பு” நாடகங்கள்தான் அப்போது நடந்தன என்று சொல்லியிருக்கிறார் என்றால், தி.மு.கழகம் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது “கண்துடைப்பு” என்றால், நேற்றையதினம் ஜெயலலிதா பேரவையில் நிறைவேற்றிய தீர்மானம் கபட நாடகமா? ஓரங்க நாடகமா?

ஜெயலலிதா போன்ற ஒருசிலரின் “அபிலாஷை”யின்படி, தி.மு. கழகம் மத்திய அரசிலிருந்து தற்போது வெளியேறிவிட்டது. இதனால் என்ன நடந்துவிட்டது? ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு விடிவு ஏற்பட்டுவிட்டதா? அமெரிக்கத் தீர்மானத்தில் இந்தியா திருத்தங்களைக் கொண்டுவந்து விட்டதா? நாடாளுமன்றத்தில் தீர்மானத்தை திருத்தங்களோடு நிறைவேற்றிவிட்டதா? மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேறியது மட்டும்தான் நடந்தது. ஆனால் அதற்காக தி.மு.க. சிறிதும் கவலைப்படவில்லை. 2009இல் தி.மு.க. மத்திய அரசிலிருந்து வெளியேறியிருந்தாலும் இதே நிலை தான் என்பதை நடுநிலையோடு சிந்தித்துப் பார்ப்பவர்கள் உணர்வார்கள். அப்போதே வெளியேறியிருந்தால் இலங்கைத் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதெல்லாம், தி.மு.கழகத்தின் மீது பழியைப் போடுகின்ற ஒரு செயலே தவிர வேறல்ல என்பதுதான் உண்மை. அனுமானத்தின் அடிப்படையில் ஒரு கருத்தை உறுதி செய்வதை, வரலாற்றை அறிந்தவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அதுமாத்திரமல்ல; தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோதும், இல்லாதபோதும் ஈழத் தமிழர்களுக்காக இத்தனைப் போராட்டங்களையும் நடத்தியது; அரசியல் ரீதியாகப் பல்வேறு இழப்புகளுக்கும் ஆளானது. ஆனால் ஜெயலலிதா நேற்று பேசும்போது, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது ஈழத் தமிழர்களுக்காக எதுவும் செய்யாமல், ஆட்சி அதிகாரத்தை இழந்தபின், திடீரென்று ஞானோதயம் பிறந்ததுபோல இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அதிக அக்கறை செலுத்துவதுபோலக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறேன் என்றெல்லாம்; ஏதோ ஈழத் தமிழர்களுக்காக இழப்பைச் சந்தித்தவரைப் போலக் குறிப்பிட்டிருக்கிறார். ஆட்சிக்கு வருவதைப் பற்றியே கற்பனை கூடச் செய்து பார்க்காத 1956ஆம் ஆண்டிலேயே, சிதம்பரத்தில் நடைபெற்ற தி.மு.க.

பொதுக் குழுவில் ஈழத் தமிழர்களுக்காகத் தீர்மானத்தை முன் மொழிந்த எனக்குத் திடீரென்று ஞானோதயம் என்று கூறுகின்ற ஜெயலலிதாவிற்கு இலங்கைத் தமிழர்கள் மீது எத்தனை நாட்களாக அக்கறை? தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாதா? 1956ஆம் ஆண்டிலிருந்து நடந்து வரும் நிகழ்வுகளையும், ஜெயலலிதா அரசியலுக்கு வந்தபின் நடக்கும் நிகழ்வுகளையும் ஒப்பிட்டுப் பார்க்க மாட்டார்களா?

16-4-2002 அன்று இதே சட்டசபையில்; ஈழத் தமிழர்களுக்காகப் பாடுபட்ட விடுதலைப் புலிகளின் தலைவர், பிரபாகரனைக் கைதுசெய்து இந்தியாவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றியதை தமிழ்நாட்டு மக்கள் அவ்வளவு சீக்கிரமாகவா மறந்துவிட்டார்கள்?

17-1-2009 அன்று இலங்கைத் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்று ஜெயலலிதா கூறியதை மறக்க முடியுமா என்ன? இதையெல்லாம் அப்படியே மறைத்துவிட்டு நான் இரட்டை வேடம் போட்டேன் என்று பேரவையில் "மெஜாரிட்டி" உள்ளது என்ற கித்தாப்பில் எதைவேண்டுமென்றாலும் பேசுவதா?

அடுத்து ஜெயலலிதா தன் பேச்சில் என்மீது சாற்றியுள்ள குற்றச்சாட்டு, நான் இருந்த உண்ணாவிரதத்தைப் பற்றிப் புது விளக்கத்தைச் சமீப காலமாகக் கூறுவதாகவும், இலங்கையில் தமிழர்கள் மீதான போரை நிறுத்திவிட்டதாக இலங்கை அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்ததாகவும், அதனை மத்திய அரசு நம்பி தனக்குத் தெரியப்படுத்தியதாகவும், அதனை நான் நம்பியதாகவும் எந்தத் தமிழரும் இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

சமீபகாலமாக நான் இதைக் கூறவில்லை. இதோ 28-4-2009 தேதிய "தினத்தந்தி". தலைப்பு : "மத்திய அரசின் கோரிக்கையை ராஜபக்சே ஏற்றார் - கருணாநிதி உண்ணா விரதம் வெற்றி - போரை நிறுத்தி விட்டதாக இலங்கை அறிவிப்பு". இதைத் தவிர இரண்டாம் பக்கத்தில் "போர் நடவடிக்கை முடிவுக்கு வந்தது - இலங்கை ராணுவம் அறிவிப்பு" என்ற தலைப்பில் இலங்கை அதிபர் ராஜபக்சே அலுவலகத்தில் இருந்து வெளியான அறிக்கை முழுவதுமாக வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே நான் சமீபகாலமாக இதைக்

கூறவில்லை. ஜெயலலிதா பேரவையிலே கூறியுள்ள உண்மைக்கு மாறான தகவல்களுக்கு இதுவும் ஓர் உதாரணம்!

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.கழகம் விலகிய போதிலும், மத்திய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முயற்சியில் யாராவது ஈடுபட்டால் அதற்கு தி.மு.க. துணை போகாது என்று பேசியதை எடுத்துக்காட்டி, அது தமிழக மக்களுக்குச் செய்யும் துரோகம் என்று ஜெயலலிதா பேரவையில் கூறியிருக்கிறார். ஜெயலலிதாவுக்கு எப்படியாவது மத்திய ஆட்சி கவிழாதா? சந்தடி சாக்கில் தான் பிரதமராக ஆகிவிட முடியாதா? என்ற நப்பாசை! அதன் காரணமாக நாங்கள் செய்வதெல்லாம் துரோகமாகத் தெரிகிறது போலும்! எதற்கெடுத்தாலும் நான் இரட்டை வேடம் போடுவதாக ஜெயலலிதா அடிக்கடி கூறுகிறார்.

சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று தேர்தல் அறிக்கையிலே கூறிவிட்டுத் தற்போது அதை வேண்டாமென்று ஜெயலலிதா கூறுகிறாரே, அதற்குப் பெயர்தானே "இரட்டை வேடம்"!

காவிரி ஆணையத்தை "பல் இல்லாத வாரியம்" "செயல்படாத வாரியம்" என்றெல்லாம் கூறிவிட்டு, தற்போது அதை ஆதரிப்பதற்குப் பெயர்தானே "இரட்டை வேடம்"!

யார் "இரட்டை வேடம்" போடுகிறார்கள் என்பதற்கு இன்று (28-3-2013) வெளிவந்துள்ள "இந்து" நாளிதழில் உள்ள தலைப்பையும், அதன்கீழ் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளையும் படித்தாலே புரிந்து கொள்ளலாம். அதாவது "From a bitter critic of LTTE to a champion of Tamil Eelam (விடுதலைப் புலிகளைக் கடுமையாக விமர்சித்தவர், தமிழ் ஈழத்தின் ஆதரவாளராகி யுள்ளார்) என்பதைப் படித்துப் பார்த்தால் யார் இரட்டை வேடம் போடுபவர், யார் இரட்டை முகம் கொண்டவர் என்பதை ஐயம் திரிபற அறிந்துகொள்ளலாம்!

அன்புள்ள,

மு.க.

29-3-2013

3725. கூட்டுறவுத் தேர்தல்களில் அராஜகம்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர 31 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு - டெல்டா மாவட்டங்களிலே உள்ள விவசாயிகளில் 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே நிவாரணம் - அதுவும் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் மட்டுமே என்று முதலமைச்சர் பெரிதாக நினைத்து அறிவித்து, அந்தத் தொகை போதுமானதல்ல என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் எல்லாம் போராடி, நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது முழு நிவாரணத் தொகை அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்து, அந்தச் சலுகையைக்கூட முதலமைச்சரே அறிவிக்க வேண்டும் என்பதற்காகக் காத்திருக்கின்ற நிலையில், அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் - தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்களுக்கு வருகிற ஏப்ரல் 5ஆம் தேதி தொடங்கி 5 கட்டங்களாகத் தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக அரசின் கூட்டுறவுச் சங்கங்களில் அ.தி.மு.க.வினரை உறுப்பினர்களாகச் சேர்க்கும் உள்நோக்கத்துடன் அ.தி.மு.க. அரசு கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்திருத்தத்தின்படி, கூட்டுறவுச் சங்கங்கள் - தனி அலுவலர்களின் தலைமையில் நிர்வாகம் இருக்கும்போது, "பொதுக்குழு" மூலம் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்கக் கூடியதாகும். ஆட்சிப் பொறுப்பிலே இருப்போர் எதையும் ஆழ்ந்து எண்ணிப் பாராமல், தங்கள் கட்சியினரை மட்டும் உறுப்பினர்களாக்கிக் கொண்டு, உள்கட்சித் தேர்தல் நடத்துவதைப் போலக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலையும் நடத்தி நாடகமாடத் திட்டமிட்டு, அவசர அவசரமாகத் தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கத் தேர்தலை நடத்த முற்பட்டிருப்பதில் இருந்தே, இந்தத் தேர்தலில் எந்த அளவிற்கு முறைகேடுகளைச் செய்யவும்,

கூட்டுறவு அமைப்புகளை ஜனநாயக நெறிமுறைகளுக்குப் புறம்பாகக் கைப்பற்றி ஆக்கிரமித்துக் கொள்ளவும், திட்டமிட்டுள்ளார்கள் என்பது நன்றாகப் புரிந்தது. எனவே ஜனநாயகத்திற்கு விரோதமான முறையிலும், நேர்மை, நியாயம் ஆகியவற்றுக்கு இடமளிக்காத வகையிலும் நடைபெற விருக்கின்ற கூட்டுறவு சங்கத் தேர்தல்களைத் தி.மு.கழகம் புறக்கணிப்பது என்று முடிவு செய்து அறிவிக்கப்பட்டு விட்டது. கழகம் செய்த அந்த அறிவிப்பு எவ்வளவு நியாயமானது என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் சில நாட்களாகக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை தமிழக அரசு எவ்வாறு நடத்துகிறது என்பதற்கு சில உதாரணங்கள் வருமாறு :-

- சேலம் மாவட்ட குழந்தைகள் நல அமைப்பாளர் மற்றும் உதவியாளர்கள் பெண்கள் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கத்திற்கான தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் 7 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். சி.ஐ.டி.யு. சார்பு அமைப்பான தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம் சார்பில் 9 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். ஆனால் அ.தி.மு.க. சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்த அனைவரும் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்வு பெற்றதாகச் சங்க அறிவிப்பு பலகையில் நோட்டீஸ் ஒட்டப்பட்டது.

- தேனி மாவட்டம், க. புதுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தராததைத் தொடர்ந்து புகார் செய்யச் சென்ற மார்க்சிஸ்ட் கட்சியின் பகுதிச் செயலாளர் திரு.ஜி.எம்.நாகராஜன் அ.தி.மு.க.வினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார். படுகாயமடைந்த அவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் திரு. கோ. நீலமேகம் விடுத்துள்ள அறிக்கையில், கிராமப்புறங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு முதல் கட்டத் தேர்தலுக்கு மார்ச் 29 அன்று வேட்பு மனுத் தாக்கல் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், பெரும்பாலான தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அலு வலகம்

அன்றையதினம் திறக்கப்படவே இல்லை. ஒருசில இடங்களில் அலுவலகம் திறக்கப்பட்டாலும், வாக்காளர் பட்டியலைக் காட்ட மறுக்கிறார்கள். போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களையும் கொடுக்க மறுக்கின்றனர். கொடுக்கும் வேட்பு மனுக்களை மட்டுமே பெற்றுக்கொள்ளுமாறு மேலிடம் வாய்மொழியாக உத்தரவிட்டுள்ளது என்கிறார்கள் என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

- மதுக்கூர் ஒன்றியம், விக்ரமம் கிராமத்தில் உள்ள சொசைட்டியில் மனுதாக்கல் செய்யச் சென்றவரிடம், ஆளுங்கட்சி ஒன்றியச் செயலாளரைப் போய்ப் பாருங்கள் என்று கூறிவிட்டார்களாம்.

- மதுக்கூர், மண்டலக் கோட்டை, இரங்காடு, வேப்பங்குளம் போன்ற சொசைட்டிகளில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

- கும்பகோணம் ஒன்றியம், தேவனாஞ்சேரி, சோழபுரம், திருப்பரம்பியம் சொசைட்டிகளில் வேட்பு மனுவினைக் கொடுக்க மறுத்ததோடு, ஆளுங்கட்சியினர் கும்பலாகச் சேர்ந்துகொண்டு தகராறு செய்துள்ளனர். கூட்டுறவு அலுவலர்கள் மதியத்திற்குப் பிறகு வேட்பு மனுவைத் தருவதாகக் கூறிவிட்டு அலுவலகத்தைப் பூட்டி விட்டனர்.

- திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை சொசைட்டியிலும் வேட்பு மனுவைக் கொடுக்க மறுத்துள்ளனர்.

- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அதிகாரிகள் துணையுடன் ஆளுங்கட்சியினர் மோசடி தேர்தலை நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

- கரூர் மாவட்ட அனைத்துச் சத்துணவுப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கத் தேர்தலில் கரூர் மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் அராஜகத்தில் ஈடுபடுவதாகச் சத்துணவுப் பணியாளர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

❖ தாந்தோணிமலையில் உள்ள கரூர் மாவட்ட அனைத்து சத்துணவுப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயச் சங்க அலுவலகத்திற்குச் சென்று வேட்பு மனுக்களைக் கேட்டபோது, அங்கே அமர்ந்திருந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் இருவர், யாருக்கும் மனு கொடுக்கக் கூடாது, நாங்கள் போனில் கேட்டுச் சொன்னால்தான் மனு கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதிகாரிகளும் மனுக்களைக் கொடுக்க மறுத்துவிட்டார்களாம்.

❖ மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்தில் வெள்ளியன்று காலை 11 மணிவரை, வேட்புமனு கொடுக்கப்பட வில்லையாம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வேட்பு மனுக்களைக் கேட்டதற்கு அதிகாரிகள் தர மறுத்து விட்டார்களாம். இதைத் தொடர்ந்து கட்சியின் சார்பில் சாலை மறியல் போராட்டமும் நடை பெற்றுள்ளது. காவல் துறையினர் அங்கே வந்து, தாங்கள் வேட்பு மனுக்களைப் பெற்றுத் தருவதாகக் கூறியதைத் தொடர்ந்து மறியல் கைவிடப்பட்டுள்ளது. ஆனால் மனுக்களைத் தாக்கல் செய்யச் சென்றபோது, கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் கூடியிருந்த 300க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் மனுக்களைத் தாக்கல் செய்ய விடாமல் தடுத்திருக்கிறார்கள். து.ராமமூர்த்தி என்பவர் கொடுத்த மனுவை, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மலையாளம் என்பவரின் தம்பி பறித்துக்கொண்டு போய்விட்டாராம். இந்த அராஜகங்களையெல்லாம் காவல் துறையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.

❖ வேலூர் சி.எம்.சி. கூட்டுறவு சங்கத் தேர்தலில் 240 தொழிலாளர்களின் ஓட்டுரிமையைப் பறித்ததால் ஆர்ப் பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

❖ தர்மபுரியில் உள்ள அரசு பொது நூலகத்தில் நூல் கட்டுனராகப் பணி புரிபவர் பெ. சரவணன். பார்வையில்லாத மாற்றுத் திறனாளியான இவர், சங்கத்தின் மாவட்டச் செயல் தலைவராகவும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னணி ஊழியராகவும்

விளங்குபவர். பல்வேறு பொதுச்சேவைகளிலும் ஈடுபட்டு வரும் இவர், அங்குள்ள பொது நூலகத் துறை கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில் கடந்த இருபதாண்டுகளாக உறுப்பினராக இருந்து வருகிறார். கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு சங்கத் தேர்தலில் இயக்குநராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தற்போது நடைபெறவுள்ள கூட்டுறவு சங்கத் தேர்தலில் இயக்குனராகப் போட்டியிட 29-3-2013 அன்று வேட்பு மனுதாக்கல் செய்துள்ளார். தேர்தல் அதிகாரி, லோகநாதன் என்பவர் இவருடைய வேட்பு மனுவைப்பெற முதலில் மறுத்ததோடு, பார்வையற்றவர் எழுதப் படிக்க முடியாது என்பதால், போட்டியிட முடியாது எனவும் கூறி வேட்பு மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் மிரட்டியிருக்கிறார். கடும் எதிர்ப்பிற்குப் பிறகு வேண்டா வெறுப்பாகக் காலதாமதம் செய்து வேட்பு மனுவை வாங்கிக்கொண்டிருக்கிறார்.

உடன்பிறப்பே, வேட்பு மனு தாக்கல் தொடங்கிய முதல் நாளிலேயே தமிழகம் முழுவதிலும் நடைபெற்ற இத்தகைய சம்பவங்கள் பற்றி ஏடுகளிலே வெளிவந்துள்ள செய்திகளைத் தான் திரட்டி இங்கே தந்திருக்கிறேன்.

இப்படியெல்லாம் நடைபெறும் என்பதை முன்கூட்டியே உணர்ந்துதான், தெரிந்துதான் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு நடத்தும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களையே புறக்கணித்தது. இன்னும் என்னென்ன வேடிக்கைகளை இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அரசும், ஆளுங்கட்சியினரும் நடத்தப் போகிறார்கள் என்பதைத் தமிழகம் காணத்தானே போகிறது!

அன்புள்ள,

மு.க.

31-3-2013

3726. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?

உடன்பிறப்பே,

கேரளாவைச் சேர்ந்த மீனவர்கள் இரண்டு பேர் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கேரளாவில் நடுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அந்த வழியாக வந்த இத்தாலி கப்பல் பாதுகாவலர்கள் எந்தக் காரணமுமின்றி, அவர்களைச் சுட்டுக் கொன்றனர். கடற்கொள்ளையர்கள் என்று நினைத்து அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாகப் பின்னர் இத்தாலி தரப்பினர் கூறினர்.

இது தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து, இத்தாலி கப்பலில் பாதுகாவலர்களாக வந்த கடற்படை அதிகாரிகள் இரண்டு பேரைக் கைது செய்தனர். அவர்கள் மீது இந்திய சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசும் கேரள அரசும் திட்டவட்டமாகத் தெரிவித்தன.

ஆனால் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க ராஜ்ய ரீதியில் இத்தாலி அரசு பல்வேறு தொடர் முயற்சிகளை எடுத்தது. ஆனால் அந்த முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை. இது தொடர்பாக இத்தாலி அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. வழக்கு நிலுவையிலே இருந்த போதே, இத்தாலி கடற்படை அதிகாரிகள் இருவரும் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு இத்தாலி சென்று வர நீதிமன்றம் அனுமதி அளித்தது. அவர்கள் நாடு சென்று திரும்பினர். கடந்த மாதம் மீண்டும் ஒரு முறை தேர்தலில் வாக்களிப்பதற்காக தாய்நாடு செல்ல அனுமதி கோரி, உச்ச நீதிமன்றமும் அதற்கு அனுமதி அளித்தது. அதன்படி இத்தாலி சென்ற அவர்கள் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பவில்லை.

அவர்களை இந்தியாவுக்கு அனுப்ப முடியாதென்று இத்தாலி அறிவித்தது. இதனால் அதிர்ச்சியடைந்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த இடதுசாரி கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் மன்மோகன்சிங்

அவர்களை டெல்லியிலே 12-3-2013 அன்று தனித்தனியே சந்தித்து, இந்த விவகாரத்தில் பிரதமர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

அதைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன் சிங், இத்தாலி அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார். காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி அம்மையாரும் இத்தாலி அரசு துரோகம் இழைத்து விட்டதாகக் குற்றஞ்சாட்டினார். உச்ச நீதிமன்றமும் இந்த விவகாரத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்து, இரு வீரர்களுக்கும் உத்தரவாதம் அளித்த இத்தாலி தூதர் வெளிநாடு செல்வதற்கு அதிரடியாகத் தடை விதித்தது. இத்தனைக்கும் பிறகு இத்தாலி அரசு பணிந்தது. இரண்டு கடற்படை வீரர்களையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவைக்க முடிவுசெய்தது.

இது இத்தாலி; இப்போது இலங்கைக்கு வருகிறேன்.

கடந்த மாதம் 27 ஆம் தேதியன்று தூத்துக்குடி, தருவைகுளத்தைச் சேர்ந்த மீனவர்கள் 16 பேர் கச்சத் தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது சிங்கள கடற்படையினரால் கடத்திச் செல்லப் பட்டார்கள். அவர்கள் மார்ச் திங்கள் இரண்டாவது வாரத்தில்தான் விடுவிக்கப்பட்டனர்.

ராமேஸ்வரம் மீனவர்கள் 19 பேர் இந்த மாதம் 13 ஆம் தேதியன்று மீன் பிடிக்கச் சென்றபோது சிங்களப் படையினர் கடத்திச் சென்று விட்டார்கள். இவர்கள் தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 28-3-2013வரை அவர்களைக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டு, அவர்கள் அனுராதபுரம் சிறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கே வைக்கப்பட்டனர்.

மீண்டும் 14 ஆம் தேதியன்று ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 34 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துச் சென்றார்கள். அப்போது தமிழக மீனவர்களை அவர்கள் இரும்புத் தடிகளாலும், துப்பாக்கியின் பின்புறத்தாலும் கடுமையாகத் தாக்கினார்கள். மீனவர்கள் வைத்திருந்த ஜி.பி.ஆர்.எஸ். கருவிகளைப் பறித்துக் கொண்டனர். மீனவர்கள் பிடித்து வைத்திருந்த ஏராளமான மீன்களையும் பறித்துக் கடலில் கொட்டினார்கள். மீனவர்களின் வலைகளையும் அறுத்தெறிந்தனர்.

18-3-2013 அன்று புதுக்கோட்டை மாவட்டம் புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த 25 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்ற

போது, அவர்களில் மூன்று பேரை இலங்கைக் கடற்படையினர் மறித்துக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள். பலத்த காயத்தோடு திரும்பிய அவர்கள் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தமிழக மீனவர்கள் இவ்வாறு சிறை பிடிக்கப் படும்போதெல்லாம் தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு உடனடியாக முதலமைச்சர் கடிதம் எழுதுவதும், மத்திய அரசின் வெளியுறவுத்துறை அதிகாரிகள் இலங்கையிடம் முறையிடுவதும் தொடர்கதையாக நீடித்து வருகிறது.

இந்த நிலையில் 13ஆம் தேதி சிறைபிடிக்கப்பட்டு அனுராதபுரம் சிறையில் 28ஆம் தேதி காவலில் இருந்த 19 மீனவர்களும், "ரிமாண்ட்" காலம் முடிவுற்றுத் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், 28ஆம் தேதி இலங்கை நீதி மன்றம் ஏப்ரல் 11ஆம் தேதிவரை அவர்களின் "ரிமாண்ட்" காலத்தை நீடித்து உத்தரவிட்டுள்ளது. இதை அறிந்து அந்த 19 மீனவர் குடும்பத்தினரும் பெரும் வேதனையில் மூழ்கியுள்ளனர். சகோதர மீனவர்கள் இலங்கைச் சிறையிலே வாடுவதற்காக இங்கேயுள்ள மீனவர்கள்தான் கடந்த சில நாட்களாகவே தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்களே, நேற்றுகூட ரெயில் மறியல் போராட்டம் நடத்தினார்களே, அதெல்லாம் மத்திய-மாநில அரசுகளின் காதுகளில் விழுகிறதா?

இதற்கிடையே மற்றும் ஒரு செய்தி! இந்தியக் கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்கள் ஐந்து பேரைத் தூத்துக்குடி கடலோரக் காவல் படை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த நேரத்தில் சிறை பிடித்து, வழக்கு தொடுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு இந்த ஐந்து சிங்கள மீனவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெற்றால், இலங்கை அதிகாரிகளும் அதற்கு மதிப் பளித்து இலங்கையில் கைதாகிச் சிறையில் உள்ள இந்திய மீனவர்களையும் விடுவிப்பார்கள் என்று எதிர்பார்த்து விடுதலை செய்திருக்கிறார்கள். வழக்கையே திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால் இலங்கை அரசு "ரிமாண்ட்" காலத்தை மேலும் நீடித்திருப்பது கண்டனத்திற்குரியது என்று மீனவர் சங்கத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கேரள மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளால் பிரச்சினை எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், "இத்தாலியின் நடவடிக்கை ஏற்க முடியாதது. இரு கடற்படை வீரர்களையும் திருப்பி அனுப்ப முடியாதென இத்தாலி கூறியிருப்பது, ஏற்கத்தக்கதல்ல என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. இத்தாலியின் நடவடிக்கை, நமது நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. எல்லா விதிகளையும் அவர்கள் மீறிவிட்டனர். அந்த அரசின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதி என்ற வகையில் அளிக்கப்பட்ட வாக்குறுதி கேள்விக் குறியாக ஆகிவிட்டது. இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்பதை உணர்ந்து அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்" என்று கூறினார்.

கேரள மீனவர்கள் இருவரைச் சுட்டுக் கொலை செய்த இரண்டு இத்தாலி கடற்படையினர் குறித்து அகில இந்திய அளவில் பல்வேறு நிலைகளில் விவாதித்து இந்த அளவிற்கு வேகம் காட்டுகின்ற இந்திய அரசு, கடலில் மீன் பிடிக்கச் சென்ற பாவத்திற்காக 19 தமிழ் மீனவர்கள் இலங்கையிலே சிறையிலே அடைக்கப்பட்டு, தற்போது அவர்களின் "ரிமாண்ட்" ஏப்ரல் 11 வரை நீடிக்கப்பட்டிருக்கிறதே, அதற்காக என்ன சொல்கிறது?

கேரள மீனவர்களையும், தமிழக மீனவர்களையும் பாகுபடுத்திப் பார்ப்பது நியாயம் தானா? இதுவரை தமிழக மீனவர்கள் 600 பேருக்கு மேல் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டிருக்கிறார்களே! ஒரு நிகழ்விலாவது கேரள மீனவர் - இத்தாலி கடற்படையினர் பிரச்சினையில் பின்பற்றப்பட்ட அணுகுமுறையும், காட்டப்பட்ட ஆர்வமும், வேகமும்; தமிழக மீனவர் - இலங்கைக் கடற்படையினர் பிரச்சினையில் கடைப்பிடிக்கப்பட்டதுண்டா? கைது செய்த இந்திய மீனவர்களை காவல் நீடிப்பு செய்து மேலும் 15 நாட்களுக்குச் சிறையிலே பூட்டிவைக்கப்படுகிறார்கள். ஆனால் கைது செய்யப்பட்ட சிங்கள மீனவர்களை அவசரம் அவசரமாக இங்கே விடுதலை செய்கிறார்கள். தமிழா! இதுதான் உன் கதியா? நாதியற்றவன் தமிழன் என்பதற்கு இதுதான் உதாரணமா?

அப்படித்தான் ஆகிவிட்டது நிலைமை! ஏனென்றால் தமிழர்களின் ஒற்றுமையில்லாத போக்குத் தான் இதற்குக் காரணம். பத்திரிகைகளில் இன்று ஒரு செய்தி வந்துள்ளது. "தமிழகச்

சட்டமன்றத்தில் தமிழ் ஈழத் தீர்மானம் வந்தபோது தி.மு.க. வெளி நடப்பு செய்தது ஏன்? - கருணாநிதிக்கு

பழ. நெடுமாறன் கண்டனம்" என்று தலைப்பிட்டு அந்தச் செய்தி வந்துள்ளது. ஏற்கனவே ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது இதே நெடுமாறன் "பொடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் கடலூர் சிறைச்சாலையிலே கேள்வி கேட்பாரற்ற நிலையில் அடைக்கப்பட்டிருந்தபோது, நான்தான் அவருக்காகக் குரல் கொடுத்தேன். அதற்கு அவர் இப்போது நன்றி காட்டுகிறார். மீண்டும் தன்னை இந்த ஆட்சியில் உள்ளே வைத்து விடுவார்களோ என்ற பயம் அவருக்கு இருக்கலாம். அதற்காக ஆட்சியாளர் செய்கின்ற ஒவ்வொன்றையும் விழுந்து விழுந்து பாராட்டி அறிக்கைவிடலாம். அதைப் பற்றி நமக்கொன்றும் கவலை இல்லை. ஆனால் போகிற போக்கில் சும்மா நம் மீதும் விழுந்து பிறாண்ட வேண்டிய அவசியம் என்ன? "தமிழ் ஈழத் தீர்மானம் வந்தபோது தி.மு.க. வெளிநடப்பு செய்தது ஏன்?" என்று கேட்டு எனக்குக் கண்டனம் தெரிவிக்கிறாராம்.

பழ. நெடுமாறனை நான் கேட்க விரும்புவதெல்லாம், தமிழ் ஈழத் தீர்மானம் வந்தபோது தி.மு.க. வெளிநடப்பு செய்ததா? அல்லது அவர்கள் வெளியேற்றப்பட்டார்களா? தமிழீழத் தீர்மானம் அவையில் கொண்டுவரப் போவதாக ஏற்கனவே அவைக்கோ, உறுப்பினர்களுக்கோ தெரிவிக்கப்பட்டதா? கிடையாது. நடைபெற்ற தெல்லாம் ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத்தில் மாணவர்கள் நடத்தும் போராட்டம் குறித்து விதி 55இன் கீழ் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது விவாதம். பலரும் பேசிய பிறகு, முதலமைச்சர் பதிலளித்தபோது தேவையே யில்லாமல் என்மீதும், கழகத்தின் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளை அடுக்கினார். பொதுவாகச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கும் போது யார் மீதும் குற்றச்சாட்டு கூடாது. எனினும் தொடர்ந்து என் மீது பழி கூறப்பட்டதால் கழகத்தினர் அதை எதிர்த்துக் குரல் கொடுத்ததைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் தி.மு.க. உறுப்பினர்களை யெல்லாம் வெளியேற்றிவிட்டார். அதற்குப் பிறகுதான், முதலமைச்சர் ஜெயலலிதா தனது பதிலின் இறுதிக் கட்டமாக எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் திடீரென்று ஈழத் தமிழர்களுக்கான தீர்மானத்தை முன்மொழிந்து அது நிறைவேறி யிருக்கிறது.

இந்தச் செய்தி ஏடுகளில் எல்லாம் வெளிவந்திருக்கிறது. ஆனால் நெடுமாறன் தமிழ் ஈழத் தீர்மானம் வந்தபோது தி.மு.க. வெளிநடப்பு செய்தது ஏன் என்று கேட்டு எனக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். ''வெளியேற்றப்பட்டனர்'' என்பதற்கும், ''வெளியேறினர்'' என்பதற்கும் உள்ள வேறுபாட்டை - நல்ல ஆசிரியர் ஒருவரை வைத்து அவர் கற்றுத் தெரிந்துகொள்வது நல்லது. வெளிநடப்பு செய்ததன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு தி.மு.க. துரோகம் செய்துவிட்டதாம். தமிழகத்திலே இப்படி சில அரசியல்வாதிகள்!! எங்கே இந்த ஆட்சியில் தங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்பதற்காக தேவையில்லாமல் ஓடிப்போய்ப் பாராட்டு தெரிவிக்கிறார்கள். தெரிவிக்கட்டும், பிழைத்துப் போகட்டும், ஆனால் நம்மைத் தாக்கினால்தான் அங்கே பிழைக்க முடியும் என்றெண்ணி இப்படியெல்லாம் இல்லாத பழியைச் சுமத்துகிறார்களே, இப்படிப் பட்டவர்களின் இத்தகைய போக்குகளினால்தான் - பொல்லாத அணுகுமுறைகளால்தான் தமிழ் மீனவன் தாக்கப்படுகிறான், நாதியற்றவனாக வாழ்கிறான்! ஆனால் இவர்கள் ஏதோ ஈழத் தமிழர்கள்பால் தாங்கள்தான் அக்கறை கொண்டவர்கள் போல நடித்து ஏமாற்றுகிறார்கள். நான் எழுதிய "மலைக்கள்ளன்" திரைப்படத்தில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பாடிய "எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?" என்ற பாடல் வரிதான் ஞாபகத்திற்கு வருகிறது!

அன்புள்ள,

மு.க.

1-4-2013

3727. தங்கள் "தகுதி"யை வெளிப்படுத்துவார்களா?

உடன்பிறப்பே,

தமிழக அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் மீது ஏடுகளில் புகார்கள் வருவதும், வேறு வழியின்றி அவர்கள் மீது முதலமைச்சரே நடவடிக்கை எடுத்துப் புகாருக்கு ஆளானவர்களை ஒதுக்கிவைத்து விட்டதாகக் காட்டிக்கொள்வதும், தவறு செய்த சில அமைச்சர்கள் மீது "ஏதோ" ஒரு "முக்கிய" காரணத்திற்காக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நீடிக்க அனுமதிப்பதும், தொடர்ந்து நாம் 2011ஆம் ஆண்டிலிருந்து நேரில் கண்டு வருகின்ற சம்பவங்களாகும். அவ்வாறு தவறிழைத்த பல அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். பல அமைச்சர்கள் மீதான புகார்கள் தொடர்ந்து எனக்குக் கிடைத்து வந்தபோதிலும், தனிப்பட்ட முறையில் அவர்கள்மீது குறை கூறுவதைத் தவிர்ப்பதற்காகவே, கேள்வி-பதில் பகுதியைக் கூட நான் எழுதாமல் கடந்த சில வாரங்களாகத் தவிர்த்துவந்தேன். ஆனால் போக்குவரத்துத் துறை அமைச்சர் மீது அடுக்கடுக்காகப் பல புகார்கள் கூறப்பட்ட போதிலும் இதுவரை மேலிடத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏடுகளில் ஏற்கனவே வெளிவந்த சில தகவல்கள் வருமாறு :-

கரூர் வெங்கமேடு, பெரியகுளத்துப் பாளையத்தைச் சேர்ந்த ராமலிங்கம் - தெய்வானை தம்பதியின் தத்துப்பிள்ளை காமாட்சி பெரியசாமி என்கிற கோகுல். கோவை இந்துஸ்தான் கல்லூரியில் படித்து கால்சென்டரில் வேலை பார்த்தார். படிக்கும்போது கோவையைச் சேர்ந்த கவுரி சாந்தினி என்ற பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். ராமலிங்கம் மறைவுக்குப்பின் தன் வளர்ப்பு மகன் கோகுலுடன் தெய்வானை வசித்து வந்தார். தெய்வானைக்கு கரூர் - சேலம் பைபாஸ் சாலையில் பல கோடி ரூபாய் மதிப்புடைய 3.5 ஏக்கர் பூர்வீக நிலம் உள்ளது. இந்நிலையில் 2011 ஜூன் 3ஆம் தேதி, கோவையிலிருந்து கரூருக்கு புறப்பட்ட கோகுலை ஒரு கும்பல்

காரில் கடத்தியது. அந்தக் கும்பல், அவரை மது குடிக்கவைத்து அவரிடம் வெற்றுத் தாள்களில் கையெழுத்து வாங்கிக் சொத்துக்களை அபகரித்துக் கொண்டதாகத் தெரிகிறது. கோகுல் 2011 செப்டம்பர் 19ந்தேதி கரூர் மாவட்ட குற்றப் பிரிவு போலீசில் புகார் செய்தார். இதை அடுத்து நடராசன், கருப்பண்ணன், பிரபு, பெரியசாமி, மோகன்ராஜ் ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். அதன்பின் எந்த விசாரணை யும் நடக்கவில்லை.

கடந்த ஜனவரி 5ந்தேதி கரூர் நீதிமன்றத்தில் கோகுல் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "2011 ஜூன் 3ந்தேதி என்னைக் கடத்திச் சென்றனர். அங்கே அமைச்சர் செந்தில் பாலாஜியின் தம்பி அசோக் வந்தார். அமைச்சருக்கு போன் செய்த அவர், என்னிடம் கொடுத்தார். மறுமுனையில் பேசிய செந்தில் பாலாஜி "ஏன்டா அனாதைப் பயலே, உனக்கு இவ்வளவு சொத்து தேவையா? நான் சொல்வதைக் கேட்காவிட்டால், உன்னை ஆசிட் ஊற்றிக் கொளுத்திடுவேன்" என்றார். இரண்டு வாரம் என்னை அடைத்துவைத்துச் சித்ரவதை செய்தனர். கரூர் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று மிரட்டிக் கையெழுத்து வாங்கி என் சொத்துகளை அவர்களது பெயருக்குக் கிரயம் செய்து கொண்டனர். எனக்கு எந்தப் பணமும் தரவில்லை" என்று வாக்குமூலம் கொடுத்தபின் கோகுல் எங்குச் சென்றார், என்ன ஆனார் என்ற எந்த விவரமும் இல்லை. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை.

கோகுல் தனது ரகசிய வாக்குமூலத்தில், தன்னைக் கடத்திச் சென்றவர்கள் என்று போக்குவரத்து அமைச்சரையும், அவரது தம்பியையும் குறிப்பிட்டிருந்த போதிலும், வழக்கில் அவர்கள் பெயரைப் போலீசார் சேர்க்கவில்லை. அவர்களின் பெயர்களைச் சேர்க்க வேண்டுமென்று கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர், வழக்கறிஞர் மணிராஜ், கரூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

வழக்கு பல மாதங்களாக நடைபெறுகிறது. வாக்குமூலம் கொடுத்த கோகுல் என்ன ஆனார் என்றே தெரியவில்லை. ஆளுங்கட்சியினர் அதிகாரத்தைக் காட்டி மிரட்டி, இந்த வழக்கை ஒன்றும் இல்லாமல் செய்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகிறார்களாம். அமைச்சர் பாலாஜிமீது சொல்லப்படும் இந்தக் குற்றச்சாட்டு பற்றி அரசின் சார்பில் இதுவரை எந்த விளக்கமும் தரவில்லை. இத்தகைய குற்றச்சாட்டுக்கு ஆளானவர்தான் தி.மு.க.

சட்டமன்றக் கட்சித் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் தகுதியைப் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார்.

இதே போக்குவரத்துத் துறை அமைச்சர் பெயரை எழுதிக் கொண்டு, ஈரோடு நகரில் நம்பர் பிளேட் இன்றி, அ.தி.மு.க. வர்ணம் பூசிய ஆட்டோ ஒன்று சுற்றி வருவதாகவும், போக்குவரத்து அலுவலக அதிகாரிகள் அதுபற்றி நடவடிக்கை எடுக்க முடியாமல் திண்டாடுவதாகவும் ஒரு செய்தி ஏடுகளில் வந்தது. அதற்காவது விளக்கம் தரப்பட்டதா? கிடையாது.

பா.ஜ.க.வின் தமிழ் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் அளித்த பேட்டி ஒன்று 12-3-2013 அன்று ஏடுகளில் வெளிவந்தது. அந்தப் பேட்டியில், "கரூரில் போலி மதுபானம் தயாரிப்பில் ஒரு கும்பல் ஈடுபட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன், சாராய வழக்கில் கைதானவர்களுக்கும், இந்தக் கும்பலுக்கும் தொடர்புள்ளது. சாராயம் காய்ச்சுவது மட்டுமல்லாமல், போலி பிராந்தி, விஸ்கி போன்றவற்றைத் தயாரிப்பதிலும் இவர்கள் ஈடுபட்டதாகப் புகார் கூறப்படுகிறது. அமைச்சரான செந்தில் பாலாஜிக்கும் இந்தக் கும்பலுக்கும் தொடர்பு இருப்பதாக இங்கு மக்கள் சந்தேகிப்பதைப் புறந்தள்ள முடியாது. இந்த விஷயத்தில் தமிழக அரசு தனி கவனம் செலுத்த வேண்டும்" என்று கூறியிருந்தார். அதன்படி இந்த அரசு கவனம் செலுத்தியதா? கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுடன் அமைச்சர் பாலாஜியைத் தொடர்புபடுத்தும் அந்தத் தகவல் உண்மையா என்பதைப் பற்றி அரசினர் விளக்கமளித்துச் சந்தேகத்தைப் போக்கிட வேண்டிய பொறுப்பு உண்டா? இல்லையா?

இதெல்லாம் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வந்த செய்திகள். ஆனால் 28-3-2013 தேதியிட்ட "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் ஒரு செய்தி வந்துள்ளது. அது வருமாறு :-

> "போக்குவரத்துத் துறையின் சார்பில் பேருந்துகளில் "டிக்கெட்" வழங்குவதற்கான "எலெக்ட்ரானிக் மெஷின்"களை நிறுவுகின்ற 200 கோடி ரூபாய்க்கான ஒரு பணி ஒரு கம்பெனிக்குத் தரப்பட்டுள்ளது. அந்தக் கம்பெனிக்கு "டிக்கெட்" மெஷினைத் தயாரிப்பதற்கான எந்த அனுபவமும் கிடையாது. கம்பெனிகளின்

பதிவாளருடைய "வெப்சைட்" படி அந்தக் கம்பெனிக்கு தேவையான எந்த அருகதையும் இல்லை. இந்த இயந்திரத்தைப் பொருத்துகின்ற கம்பெனிக்கு நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிடைக்கும். இந்த ஒப்பந்தம் ஐந்தாண்டு காலத்திற்கு நீடிக்கும். இதற்கான ஆவணங்கள் "டைம்ஸ் ஆப் இந்தியா"விடம் உள்ளன. தற்போது டெண்டர் வழங்கப்பட்டுள்ள கம்பெனி, டெண்டர் கோரப்பட்ட 24-1-2013 அன்றுதான் தொடங்கப்பட்டுள்ளது. டெண்டர் தேதி இரண்டு முறை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. முதலில் 31-12-2012 என்ற தேதிக்கு மாறாக 18-1-2013 என்றும், பிறகு 24-1-2013 என்றும் மாற்றப்பட்டுள்ளது.

டெண்டர் தாக்கல் செய்ய முக்கிய விதிகள் என்னவென்றால், அவர்கள் 25 கோடி ரூபாய்க்கான சொத்து உடையவர்களாக இருக்கவேண்டும். ஆனால் இந்தக் கம்பெனியின் சொத்து 8 லட்சத்திற்கும் குறைவு என்று ஆவணங்கள் கூறுகின்றன. இந்தக் கம்பெனியைப் பற்றி அதிகாரிகளின் ஆய்வுக் குழு சில குறைபாடுகளைத் தெரிவித்த போதிலும், இந்த டெண்டர் அவர்களுக்கே தரப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. இந்தக் கம்பெனி இணைத்து அனுப்பியுள்ள பல ஆவணங்கள் விதிமுறைகளுக்கு மாறாகக் கையினால் எழுதப்பட்டுள்ளதாம். இந்தக் கம்பெனியின் தகுதியின்மை குறித்தும் ஆய்வுக்குழு தெரிவித்திருக்கிறதாம்.

அரசு தற்போது டெண்டர் அளித்த கம்பெனியின் மூன்று உறுப்பினர்களில் இரண்டு பேர், ஏற்கனவே கறுப்புப் பட்டியலிலே இடம்பெற்றவர்கள் என்று இந்தப் பணிக்கான டெண்டர் விண்ணப்பம் செய்து கிடைக்காதவர்கள் இந்தத் துறையிடம் புகார் தெரிவித்திருக்கிறார்கள்.

இதுபற்றி விவரமாக எழுதியுள்ள "டைம்ஸ் ஆப் இந்தியா" ஏடு, துறை அதிகாரியிடம் இதைப்பற்றி விசாரித்ததாகவும், குறிப்பிட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க மறுத்த போதிலும், தவறு நடைபெறவில்லை என்று கூறியதாகவும் எழுதியுள்ளது.

அரசின் துறையினைப் பற்றி இந்த அளவிற்குப் பெரிதாக விவரங்களுடன் ஆங்கில நாளேடு ஒன்று வெளியிட்டிருப்பதால், இதிலே உள்ள உண்மை என்ன என்பதைப் பற்றி அரசின் சார்பில் விவரம் அளிக்க வேண்டுமென்று கழகத்தின் சார்பில் தளபதி மு.க.ஸ்டாலின் கழக சட்டமன்றக் கட்சியின் தலைவர் என்ற முறையில் 28ஆம் தேதியன்றே அவையிலே விளக்கம் கேட்டிருக்கிறார். ஆனால் அவருக்கு அங்கே இதைப்பற்றி பேசுவதற்கு அனுமதி வழங்கப்படாததால், கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளார்கள். அதற்குப்பிறகு நீண்ட நேரம் கழித்து, கழகத்தின் சார்பில் விளக்கம் கேட்டதையே அவைக் குறிப்பிலிருந்து நீக்கியும் விட்டார்கள். அ.தி.மு.க. அரசு செய்தது சரிதான் என்றால், நேற்றைக்குச் சொன்ன விளக்கத்தை அன்றைக்கே அவையிலேயே சொல்லியிருக்கலாம் அல்லவா? பேசுவதற்கே ஏன் அனுமதி மறுக்கவேண்டும்? அந்தப் பத்திரிகையிலே இந்தப் புகார் வந்து நான்கு நாட்களுக்குப் பிறகு அமைச்சர் விளக்கமளிக்கிறார். ஏன் இந்தத் தாமதம்? இந்தத் தாமதம் பற்றிப் பல வகையிலும் பொதுமக்கள் சந்தேகம் கொள்வார்கள் அல்லவா?

எப்படியோ? அரசு பற்றி ஒரு மிகப் பெரிய புகார் ஆங்கில நாளேட்டில் வெளிவந்துள்ளது. அவர்களுக்குக் கிடைத்த ஆவணங்கள் அடிப்படையிலே அதை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அரசு அதற்கான விளக்கங்களை உரிய முறையில் அளிக்க வேண்டுமே தவிர, எப்படி இதை வெளியிட்டீர்கள் என்று அவர்கள் மீதும் ஒரு அவதூறு வழக்குபோட முனைவது நல்லதல்ல. அரசு எதற்கெடுத்தாலும் அவதூறு வழக்கு போட்டுத் தவறுகளைச் சுட்டிக்காட்டுபவர்களை முடக்கிவிடுவதன் காரணமாக அரசின் பல்வேறு தவறுகள் சுட்டிக்காட்டப்படாமலே நின்று விடுகின்றன. நேர்மையான அரசாக இருந்தால், உரிய குற்றச்சாட்டுகளுக்கு நிறைவளித்திடும் வகையில் பதிலளிக்க வேண்டியதுதான் கடமையே தவிர, வழக்குப் போட்டு மிரட்டுவது நல்லதல்ல.

இந்தியா முழுவதும் வெளியாகும் ஒரு முக்கியமான பத்திரிகையில் முதல் பக்கத்தில் வந்த ஒரு புகாரைத் தி.மு.க. மாத்திரமல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, புதிய தமிழகம் கட்சி ஆகியவற்றின் சார்பாக பிரச்சினை எழுப்பினால், பொறுப்புள்ள அமைச்சர் பதில் அளிக்க

வேண்டுமே தவிர, "தகுதி இல்லை" என்று சொல்வதும், "யாரோ மண்டபத்தில் எழுதிக் கொடுத்ததைத் திருவிளையாடலில் தருமி தன் பாட்டு என்று சொல்லிப் பரிசு கேட்டதைப்போல ஏதோ பத்திரிகையில் வந்த செய்தியைப் பிடித்துக் கொண்டு வந்து இங்கே வந்து குற்றம் சொல்கிறார்கள்" என்றும், "சில கிருமிகள் எழுதியதாகக் கூறுகின்ற குற்றச்சாட்டு" என்றும் பேசுவது ஒரு அமைச்சருக்கு உள்ள "தகுதி" அல்ல; பேரவையில் காப்பாற்றப்பட வேண்டிய கண்ணியத்திற்கும் இது துணை செய்யாது.

"தட்சணாமூர்த்தி கருணாநிதி என பெயர் மாறினால் பிறவி குணம் மாறி விடுமா?" என்று பேரவையில் அமைச்சர் பேசியதாக சில ஏடுகளிலே வெளிவந்துள்ளது. இதிலிருந்தே அ.தி.மு.க. அமைச்சரின் "தகுதி" என்ன என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே புரிகிறது!

இறுதியாக அமைச்சரிடம் ஒரே ஒரு விளக்கம்! இந்தக் குறிப்பிட்ட டெண்டர் "இன்ஜெனரி டெக்னாலஜீஸ் சொல்யூஷன்ஸ்" என்ற கம்பெனிக்குத் தரப்பட்டதை அமைச்சர் ஒப்புக்கொள்கிறார். இந்தக் கம்பெனி என்றைக்குத் தொடங்கப் பட்டது? எப்போது டெண்டர் கொடுக்கப்பட்டது? டெண்டர் நிபந்தனையாக மூன்றாண்டுகள் அனுபவம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே? அது ஏன் புறக்கணிக்கப்பட்டது? ஆனால் ஏற்கனவே ஏதோ ஒரு பெயரில் இந்த நிறுவனம் இயங்கிவந்ததாக அமைச்சர் சொல்கிறார். ஏதோ ஒரு பெயரில் இந்த நிறுவனம் இயங்கிவந்தது என்றால், அந்த நிறுவனத்தின் பெயரால் டெண்டர் கோரியிருக்க வேண்டியது தானே? ஏன் அரசின் நிபந்தனை தளர்த்தப்பட்டது? இந்தக் கேள்விக்கு அமைச்சரோ, முதல் அமைச்சரோ பதில் அளிப்பார்களா? தங்களுடைய தகுதியை வெளிப்படுத்துவார்களா?

அன்புள்ள,

மு.க.

3-4-2013

3728. அருந்ததியர்க்கு கழக ஆட்சி ஆற்றிய கடமை!

உடன்பிறப்பே,

1-4-2013 தேதிய "தீக்கதிர்" நாளிதழின் முதல் பக்கத்தில், "அருந்ததியர் வாழ்வில் விடியல்; மார்க்சிஸ்ட் கட்சிக்கே பெருமை" என்ற தலைப்பில் ஒரு செய்தி வந்துள்ளது. சாகித்ய அகாடமி விருது பெற்ற "தோல்" நாவல் ஆசிரியர் செல்வராஜ் அவர்களுக்குத் திண்டுக்கல்லில் நடைபெற்ற பாராட்டு விழாவில், அருந்தமிழர் விடுதலை இயக்கத்தின் மாநிலத் தலைவர், திரு. ஜக்கையன் பேசிய பேச்சுக்குத்தான் இவ்வாறு தலைப்பிட்டு "தீக்கதிர்" வெளியிட்டுள்ளது. சாகித்ய அகாடமி விருது அந்த நாவலுக்குக் கிடைத்தது, தகுதியான ஒருவருக்குக் கிடைத்த உரிய விருது என்பதில் நான் அப்போதே மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். அந்தப் பேச்சில் திண்டுக்கல் நகரத்தில் அருந்ததியர் உள் ஒதுக்கீட்டுக்கான மாநாட்டைத் தோழர் என்.வரதராஜன் நடத்தியதுபற்றியும், இன்றைய அந்தத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி பாலபாரதி கலந்துகொண்டது குறித்தும் தெரிவித்துவிட்டு, "இன்றைக்கு அருந்ததியர் சமூகம் 3 சதவிகிதம் உள் ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கிறது என்றால், அதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள்தான் காரணம்" என்றும் பேசியிருக்கிறார். அதிலே நமக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஆனால் அந்தப் பேச்சாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த அந்த முக்கியமான வேண்டுகோள் எந்த ஆட்சிக் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அருந்ததியர் சமுதாயத்தினர் இந்த உள் ஒதுக்கீட்டுப் பயனைப் பெற்றுவருகிறார்கள் என்பதைச் சொல்லாமலே விட்டுவிட்டாரே! அது ஏன் என்று புரியவில்லை. அவர் பேசாமல் விட்டுவிட்ட காரணத்தால், இந்தக் கடிதத்தின் மூலம் அருந்ததியர் சமுதாயத்திற்குக் கழக ஆட்சியில் என்னென்ன செய்யப்பட்டது என்பதை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

ஆதி திராவிட மக்களுக்குள், அருந்ததியினர் சமூக மற்றும் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதால் அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியமெனக் கருதி, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில் இருந்து 3 சதவிகிதம் அருந்ததியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவதற்கான முடிவு 27-11-2008 அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் எடுக்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2009ஆம் ஆண்டில் "தமிழ்நாடு அருந்ததியர்கள் "தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளைப் பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாகத் தனி ஒதுக்கீடு செய்தல் சட்டம்" இயற்றப்பட்டு, 29-4-2009இல் இது தொடர்பான விதிகளும் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தி.மு.கழக ஆட்சியில் இவ்வாறு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டதன் காரணமாக 2009-2010இல் அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த 56 மாணவ மாணவியர் மருத்துவக் கல்லூரிகளிலும், 1,165 மாணவ மாணவியர் பொறியியல் கல்லூரிகளிலும் சேர்ந்து, மொத்தம் 1,221 பேர் பயன்பெற்றனர்.

2010-2011இல் இந்த எண்ணிக்கை மருத்துவக் கல்லூரிகளில் 70 என்றும், பொறியியல் கல்லூரி களில் 1,813 என்றும் மொத்தம் 1,883 என்றும் மேலும் அதிகரித்தது.

2009-2010இல் முதன் முதலாக - அருந்ததியர்க்கு மூன்று சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்பட்டபின் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பயனடைந்த அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு ஊக்கம் அளிப்பதற்காக; "பெண் சிங்கம்" என்ற திரைப்படத்திற்கு நான் கதை வசனம் எழுதி, அதற்கு ஊதியமாகக் கிடைத்த 50 லட்சம் ரூபாயையும், மேலும் என் சொந்தப் பணத்திலிருந்து 11 லட்சத்து 5 ஆயிரம் ரூபாயையும் சேர்த்து மொத்தம் 61 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயை நன்கொடையாக வழங்கி, இந்த 1,221 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் கல்வி வளர்ச்சி நிதியாக 5-12-2009 அன்று வழங்கினேன்.

வெள்ளையரை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்த ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் இறுதியில் தன்னையே மாய்த்துக்கொண்ட வரலாறு ஒரு புறம் என்றால்; மற்றொருபுறம்; வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு முன்பே, நெல்லைச் சீமையின் நெல்கட்டும் செவல் மாவீரன் பூலித்தேவன் வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டார். வெள்ளையருக்கு எதிரான பல போர்களில் பூலித்தேவனுக்கு முதன்மைப் படைத் தலைவராக இருந்தவர், அருந்ததிய சமுதாயத்தைச் சேர்ந்த "ஒண்டி வீரன்". கட்ட பொம்மனுக்கும், பூலித் தேவனுக்கும், சுந்தரலிங்கத்துக்கும் நினைவுச் சின்னங்களை எழுப்பிய கழக அரசு, அருந்ததிய சமுதாயத்தினரான விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் நினைவைப் போற்றும் வகையில் தக்கதோர் நினைவுச் சின்னம் ஒன்றினை நெல்லைச் சீமையில் எழுப்பும் என்று கழக ஆட்சியிலேதான் நிதிநிலை அறிக்கையிலேயே 19-3-2010 அன்று அறிவிக்கப்பட்டது.

அருந்ததியர்களுக்கு அவர்தம் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் நிதிஉதவி வழங்குவதற்கென தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 8.6.2007 அன்று தொடங்கப்பட்டு, 22 ஆயிரத்து 811 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அவர்களுள் 1,133 உறுப்பினர் குடும்பங்களுக்கு 17 இலட்சத்து 86 ஆயிரத்து 440 ரூபாய் நிதிஉதவி வழங்கப் பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலே தான்.

மேலும், மனிதக் கழிவை அகற்றித் தூய்மைப்படுத்தும் பணிகளில் முன்னர் ஈடுபட்டிருந்தோருக்கு மாற்றுத் தொழிலில் ஈடுபட உதவுவதற்காக 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மறுவாழ்வுத் திட்டம் ஒன்றும் கழக அரசால் செயல்படுத்தப்பட்டது. இப்பணியாளர்கள் கழிவுநீர்க் குழாய்களில் இறங்கிப் பணிபுரிவதைத் தவிர்க்க, மாநகராட்சிகள் அனைத்திலும் அடைப்புகளை அகற்றும் இயந்திரங்கள் வாங்கத் திட்டமிடப்பட்டு; சென்னை மாநகரைப் பொறுத்தவரை 3 கோடியே 97 இலட்சம் ரூபாய்ச் செலவில், 47 தூர்வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன; மற்ற 9 மாநகராட்சிகளுக்கும் தேவையான அடைப்பு நீக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டன. மாநகராட்சிகள் அனைத்திலும் சாக்கடைகளில்

ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்காக மனிதர்களை ஈடுபடுத்தும் அவலநிலையை அகற்றி, இயந்திரங்கள் மூலம் தூய்மை செய்யும் பணி தொடங்கப்பட்டது.

சென்னை சாந்தோம் கலைவிழா மன்றம் சார்பில் 2008ஆம் ஆண்டுக்கான 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டபொழுது நான் ஆற்றிய உரையில், "தமிழ்நாட்டில் சிறுபான்மையோருக்கு, ஏழை, எளியோருக்கு, பிச்சைக்காரர்களுக்கு, ஊனமுற்றோர்க்கு எல்லோர்க்கும் ஒருவர் பாக்கி இல்லாமல் அரசின் சார்பிலே நன்மைகள் பலவற்றைச் செய்திருந்தாலும்கூட, ஒரு பகுதி விடப்பட்டுள்ளது. ஒரு பகுதி கண்ணிருந்தும் குருடர்களாக - வாயிருந்தும் பேச முடியாதவர்களாக - வாழ முடியாதவர்களாகவே, மதிக்கப் படாதவர்களாகவே ஒரு சமுதாயம் தமிழ்நாட்டிலே இருக்கிறது. இன்னமும் இருந்து வருகின்றது. அந்தச் சமுதாயத்தின் பெயர்தான் அருந்ததியர் சமுதாயம்.

அந்த அருந்ததியர் சமுதாயம் தங்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வேண்டுமெனக் கேட்டார்கள். அதற்காக நீதியரசர் ஜனார்த்தனம் குழு அமைக்கப்பட்டு, அக்குழு அரசுக்கு அறிக்கையைத் தந்தது.

அந்த அறிக்கையை இன்னும் இரண்டொரு நாளில் கூடுகின்ற எங்களுடைய அமைச்சரவைக் கூட்டத்திலே ஆலோசித்து விவாதித்து அந்தச் சமுதாயத்திற்குத் தேவையான சலுகையை இந்த அரசு அளிக்கவிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், மலம் தூக்குகின்ற மனிதவர்க்கம் அது; தலையில் மலத்தைத் தூக்கிச் செல்லுகின்ற மனிதவர்க்கம்; நாகரிக காலத்தில் மலத்தை அகற்ற - கழிவறைகளைச் சுத்தப்படுத்த - பல வழிமுறைகள் வந்திருந்தும்கூட இன்னமும் கிராமப் பகுதிகளில் அந்த மலத்தைத் தூக்குகின்ற மகா கொடிய நிலை இன்னும் மாறவில்லை.

மனிதனை மனிதனாக ஆக்க வேண்டும். மனித மலத்தை மனிதனே தூக்குவது நமக்கெல்லாம் பெருமையாகாது. வெட்கக்கேடு. நமக்கு அதைவிட அவமானம் வேறில்லை. அவர்கள் அவமானச் சின்னங்கள் அல்ல. அவர்களை அப்படி ஆக்கி வைத்து அரசு நடத்திக் கொண்டிருக்கிறோமே நாம்தான் அவமானச்

சின்னங்கள் என்ற எண்ணத்தோடு, அந்த அவமானத்தைப் போக்க எடுத்திருக்கின்ற நடவடிக்கைதான் என்னைப் பொறுத்தவரை முக்கியம்.

அரசுச் செயலாளர்கள் என்னிடம் பேசும்போது இப்போதே இதைச் செய்ய வேண்டுமா என்றார்கள். அப்போது நான் சொன்னேன். கீழான மக்கள் கேவலப்படுத்தப்படும் மக்கள், புழுக்களாய் நெளிந்து கொண்டிருக்கின்ற மக்கள், மனிதனைப் பார்த்து மனிதனே மதிக்காத அளவிற்கு மட்டரகமாக ஆக்கப்பட்ட மக்கள் - அந்த மக்களைக் கைதூக்கி விடுவதுதான் இந்த கருணாநிதியின் வேலை - இதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். அந்தச் சாதனையிலே, சரித்திரத்திலே, இதுவரையில் இடம்பெறாமல் இருப்பது இந்த அருந்ததியர் மக்களுக்கு நாம் அன்பு காட்டி அவர்களைக் கைதூக்கிவிடாமல் இருப்பதுதான் - நான் என்னுடைய சரித்திரத்தில் கடைசியாகவாவது - கடைசிப் பக்கத்தில் எழுத வேண்டிய - அச்சடிக்கப்பட வேண்டிய செய்தி அருந்ததியர்களுக்குச் சமூக நீதி அளித்தேன் என்ற அந்தச் செய்தி இடம்பெற வேண்டும்" - என்று தெரிவித்தேன்.

இன்னும் கூற வேண்டுமேயானால், அருந்ததியர் இட ஒதுக்கீட்டுக்கான மசோதா பேரவையிலே நிறைவேற்றப்படவிருந்த நாளன்று இராமச்சந்திரா மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வந்த நான் 26-2-2009 அன்று என் கைப்பட பேரவைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அருமைப் பேராசிரியர் அவர்களே, சட்டப்பேரவை அனைத்துக் கட்சி அன்பு உடன்பிறப்புகளே, இன்று வந்து உங்களைச் சந்திப்பதாக இருந்தும்கூட டெல்லி மருத்துவரும் சென்னை மருத்துவ நண்பர்கள் குழுவும் அளித்த அறிவுரையாலும் அச்சுறுத்தலாலும் வர இயலவில்லை. மன்னிக்க வேண்டுகிறேன். நிமிர முடியாமலும், திரும்ப முடியாமலும் "நங்கூரம்" போட்டது போல நரம்பிணைந்து முதுகுத் தண்டில் வலி! வலி!

ஒன்று உடல் வலி - பிறிதொன்று நீங்கள் வழங்கியுள்ள மன வலி! கருத்து மாறுபாடுகளுக்கிடையிலேயும் நீங்கள் காட்டும் கனிவு - அரசியல் மாச்சரியங்களை மீறி நீங்கள் காட்டும் அன்பு - இன்று நம்மை மீண்டும் இணைக்கிறது - தமிழ்த் தாயின் கரம் நம்மை ஒரு சேர அணைக்கிறது. அறிவியக்கம் - ஆன்மிகம் -

நாத்திகம் - ஆத்திகம் - இந்த வேறுபாடுகள் மாறுபாடுகள் கடந்த நன்றியுணர்வும் நன்மனித நேயமும் வளர்த்திடுவோம்.

ஆரம்பகால பொதுவுடைமைவாதி என்ற முறையிலும் அய்யா, அண்ணா, காமராஜர், அண்ணன் ஜீவா போன்றோரின் அருமைத் தொண்டர்களில் ஒருவன் என்ற முறையிலும் - அடி மட்டத்துக்கெல்லாம் அடி மட்டமாகக் கிடந்து அவதியுறும் "மனித ஜீவன்கள்'' - "அருந்ததி'' மக்கள், புதிய உலகம் - புரட்சியுகம் - காண்பதற்காக; இன்று அவையில் நான் முன் வைக்கும் சட்ட முன்வடிவை; உங்கள் ஆதரவு வழங்கி; நிறைவேற்றித்தர வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

உங்கள் அன்பு நதியில் -
என்றும் நனைந்திடவே விரும்பி வாழும்;
உடன்பிறப்பு - உங்களில் ஒருவன்,
அன்பு மறவாத (மு. கருணாநிதி)
26.2.2009"

- என்று எழுதியிருந்தேன்.

அருந்ததியர் சமுதாயத்தின்பால் எனக்கு எந்த அளவிற்கு ஈடுபாடு உண்டு என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு கூறவேண்டுமேயானால், என்னுடைய அணுக்கத் தொண்டராக - என்னை அன்றாடம் பராமரிப்பதிலே தன்னை முழு அளவிலே ஈடுபடுத்திக் கொண்டவராகப் பணியாற்றும் தம்பி நித்யாவே அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். ஏன், கழகத்தின் மூன்று துணைப் பொதுச் செயலாளர்களிலே ஒருவரே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்!

அன்புள்ள,
மு.க.
4-4-2013

3729. அந்த நாள் ஞாபகம் வந்ததே; அம்மையே!

உடன்பிறப்பே,

4-4-2013 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ்ப் படித்த ஓர் அறிக்கையில், "மதுரை மாவட்டத்தில், தற்போது பெருகிவரும் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, மதுரையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் விமான நிலையத்திற்கு அருகில் மதுரை- திருநெல்வேலி நான்கு வழிப்பாதையில் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் திற்குச் சொந்தமான 586.86 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த **"துணைக்கோள் நகரம்"** ஒன்று உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணைக்கோள் நகரத்தில் 19,500 மனைகள் உருவாக்கப்படும்" என்றெல்லாம் அந்த அறிக்கை நீண்டு கொண்டே போகிறது.

இந்த மகத்தான அறிவிப்பினை முதலமைச்சர் அவையிலே படித்துவிட்டு அமர்ந்ததுதான் தாமதம். உடனே இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலும், பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும், மனித நேய மக்கள் கட்சியின் சார்பிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் முதலமைச்சரின் அறிவிப்பினைப் பாராட்டி நன்றி தெரிவித்திருக்கிறார்கள். பிரச்சினை அதோடு முடியவில்லை. அறிவிப்புக்குரிய துறையின் அமைச்சர் எழுந்து தனது துறை பற்றிய அறிவிப்பினைச் செய்ததற்காக நன்றியை "அம்மா" அவர்களின் பொற்பாதங்களில் குவித்திருக்கிறார். அப்போதும் பிரச்சினை முடியவில்லை. பேரவைத் தலைவர் எழுந்து முதல் அமைச்சரின் அறிவிப்புக்காகத் தெரிவிக்கப்பட்ட வாழ்த்துக்களோடு தனது நன்றியையும் இணைத்துக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து ஏடுகளும் இந்த அறிவிப்பினை வழக்கம்போல் பெரிதாக வெளியிட்டிருக்கின்றன.

இதைப் படித்தவுடன் என் மனதிலே சில எண்ணவோட்டங்கள்! 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் 9-9-2011 அன்று இதுபோலவே தமிழகத்தின் அனைத்து ஏடுகளிலும் ஒரு தலைப்புச் செய்தி. அது என்ன தெரியுமா?

"திருமழிசையில் 311 ஏக்கரில் குடியிருப்புகள் - சென்னை அருகே துணை நகர் - சட்ட சபையில் ஜெயலலிதா அறிவிப்பு"

நம்மைப் பொறுத்தவரையில் திருமழிசையில் ஆகட்டும், மதுரையில் ஆகட்டும், துணை நகரம் வரப்போவதில் மகிழ்ச்சிதான். ஏனென்றால் திருமழிசையில் இவர்கள் துணை நகரம் அமைக்கவுள்ள இடம் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதி வாரியத்தினால் கையகப்படுத்தப்பட்ட இடம்!

அப்போது அதிலே ஒரு வேடிக்கை! திருமழிசை துணை நகரத்தை 311 ஏக்கரில் உருவாக்கப் போவதாக ஜெயலலிதா பேரவையில் 9-9-2011 அன்று அறிவித்து அனைத்துக் கட்சியினரும் உடனடியாக எழுந்து அதைப் பாராட்டினார்கள் என்ற போதிலும், அதற்கு முன்பே 25-8-2011 அன்று பேரவையில் வீட்டு வசதித்துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இத்திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. பாவம்; அவர் அறிவித்தால் அதை யார் பொருட்படுத்துவார்கள்? "ஜெ" அறிவித்தவுடன் தான் அதற்கு பெரிய "மவுசே" ஏற்பட்டது, வெளி உலகத்திற்கும் தெரிந்தது.

எனவே கொள்கை விளக்கக் குறிப்பில் அதற்கு முன்பே அறிவிக்கப்பட்ட ஒரு திட்டத்தைத்தான் 9-9-2011 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா ஏதோ புதிதாக அன்றுதான் அத்திட்டத்தை உருவாக்கி அறிவிப்பதைப்போலப் பேரவையில் 110வது விதியின் கீழ் அறிவித்திருக்கிறார்.

ஆனால் அந்த அறிவிப்பு என்னவாயிற்று? திருமழிசையிலே துணைக்கோள் நகரம் அமைந்து விட்டதா? இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டது. இன்னமும் அடிக்கல் நாட்டு விழாவே நடைபெற்ற தாகத் தெரியவில்லை.

சென்னையையொட்டி துணைக்கோள் நகரம் அமைக்கும் இந்த யோசனை அப்போதல்ல; தி.மு. கழக ஆட்சியிலும் வந்தது. அதாவது; 2006ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப் பேற்றதும் 1-9-2006 அன்று பேரவையில் செய்யப்பட்ட

அறிவிப்பில், "வண்டலூர் - கேளம்பாக்கம் சாலைக்குத் தென் பகுதியில், பழைய மாமல்லபுரம் சாலைக்கும் 45ஆம் எண் தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தை உத்தேசமாகச் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தேர்வு செய்துள்ளது.

இப்பகுதியில் 13 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. 270 சதுர கிலோ மீட்டரில் உள்ள இந்நிலப்பரப்பு மாசற்ற, நல்ல சுற்றுப்புறச் சூழலில் இருக்கிறது. புதிய நகர அமைப்பிற்கு இது உகந்த பகுதியாகும். இப்பகுதியில் பெரும்பாலான நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாகவே உள்ளன. இவற்றைக் கையகப்படுத்தும்போது நீர்வளப் பகுதி, குடியிருப்புப் பகுதி, காடுகள் உள்ள பகுதி ஆகியவற்றை நீக்கிவிட்டுத் தரிசாகவும், புஞ்சையாகவும் உள்ள நிலங்கள் மட்டுமே கையகப் படுத்தப்பட உள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்களுக்கு நியாயமான மார்க்கெட் விலை வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து வாழலாம். புதிய நகரம் அமையும்போது உருவாகும் வேலைவாய்ப்புகள் இப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு நல்ல பலனை வழங்கி அவர்கள் பொருளாதாரரீதியாக உயர்வடைய வழிவகுக்கும்" என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டது.

தி.மு.கழக ஆட்சியில் பேரவையில் இந்த அறிக்கை படிக்கப்பட்டதுதான் தாமதம் - மறுநாளே 2-9-2006 அன்று ஜெயலலிதா அவசர அவசரமாக ஓர் அறிக்கையினை வெளியிட்டார். அதில்,

"ஆணவம் கொண்ட அற்ப ஜீவராசிகளின் பொறுப்பில் ஆளும் அதிகாரம் சிக்கிக்கொண்டிருப்பதால், ஜனநாயக மக்கள் விரோத அலங்கோலங்கள், பாரம்பரியம் மிக்க தமிழகத்தில் தொடர் நிகழ்வுகளாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்கு, சென்னையை ஒட்டி அமைக்க இருப்பதாக மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கும் துணை நகர அறிவிப்பும் ஓர் உதாரணமாகிவிட்டது. ஓர் முதலமைச்சருக்குத் தொலைநோக்குப் பார்வை

இல்லாதபோது இது போன்று தான்தோன்றித்தனமாகச் செயல்படுகின்ற நிகழ்வுகள் நெஞ்சை நடுங்க வைக்கும் நீசச் செயல்களாக அமைந்து விடுகின்றபோது அதற்கான விலையைக் கருணாநிதியும் அவரது கட்சியும் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.சென்னைமாநகரத்தில் உள்ள மக்களின் இட நெருக்கத்தைக் குறைப்பதற்காக இந்தத் துணை நகரம் ஏற்படுத்தவிருப்பதாகக் கருணாநிதி சொல்கிறார். முதலில் அவர் வீட்டில் உள்ள பெண்டு பிள்ளைகள், பேரன் பேத்திகள், மறைந்த முதல் மனைவியின் உறவினர்கள், அவர்கள் வழி வந்த உறவினர்கள், இருக்கும் மனைவியின் உறவினர்கள், ஏற்படுத்திக்கொண்ட துணைவியின்வழி வந்த உறவினர்கள் ஆகியோர் முதலில் கோபாலபுரத்தை விட்டும், சி.ஐ.டி. காலனியை விட்டும் வெளியேறி ஜனநெருக்கத்தை மேற்படி பகுதிகளில் குறைக்கட்டும். மக்கள் நெருக்கடியைப் பற்றி மிகவும் கவலைப்படும் கருணாநிதி தனது குடும்ப உறுப்பினர்களால் உருவாகியுள்ள ஜன நெருக்கடியை உணர்ந்து அவர்களை முதலில் சென்னை மாநகரத்தைவிட்டு வெளியிலே அனுப்பிவைக்கட்டும். கருணாநிதிக்கு “துணை” என்றால் மிகவும் பிடிக்கும் போலும், அதனால்தான் சென்னை மாநகருக்கும் ஒரு “துணை”யைத் தேடுகின்றார். துணை நகரம் பற்றிய அறிவிப்பு வந்தவுடனே அலறித் துடிக்கும் மக்களின் வேதனை சுகபோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் கருணாநிதிக்குத் தெரிய வாய்ப்பில்லை. தனது குடும்பத்தார், சுற்றத்தார் மற்றும் பேரன்கள் தயாநிதி மாறன், கலாநிதி மாறன் பயன்பெறவே சென்னை துணை நகரத் திட்டம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ளது என்ற செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன”

என்றெல்லாம் அந்த அறிக்கையில் ஜெயலலிதா, நாகரிகம்-பண்பாடு என்பதற்கெல்லாம் எள்ளளவும் இடமளிக்காமல், அப்போது கூறியிருந்தார். இன்றைக்கும் பழைய ஏடுகளில் அவரது அறிக்கை இடம்பெற்றுள்ளது. ஆனால் அந்த அறிக்கையையே மறந்துவிட்டு, அவரே திருமழிசையில் “துணை நகரம்” அமைக்கப்

போவதாக அறிவித்தார். தற்போது மதுரையிலே "துணை நகரம்" அமைக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்.

இதிலே இன்னும் வேடிக்கை என்ன வென்றால், ஜெயலலிதா தி.மு.க. அறிவித்த துணை நகரத்தை அப்போது எதிர்த்து அறிக்கை கொடுப்பதற்கு முன்பாகவே; எங்களுடன் தோழமைக்கட்சியாக இருந்த பா.ம.க. சார்பில் டாக்டர் ராமதாஸ் அவர்கள் இந்த துணை நகரம் வருவதால் விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கும், அங்கே வசிக்கின்ற மக்கள் சிரமப்படுவார்கள் என்று நாகரிகமாகச் சொன்ன தன் பேரிலேயே இரண்டே நாட்களில், அதாவது 2-9-2006 அன்றே நான் விடுத்த அறிக்கையில், "தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டு சென்னையை ஒட்டிய துணை நகர அமைப்பு உருவாக்கப்படுமென நான் குறிப்பிட்டிருந்த திட்டம்; நல்லெண்ண அடிப்படையிலும் தோழமைக் கட்சி வழங்கிய அறிவுரையை சிந்தித்துப் பார்த்தும்; சில சுயநலத் தீய சக்திகள் திட்டமிட்டுள்ள பகிரங்க வன்முறை வெறியாட்டத்துக்கு அப்பாவிப் பொது மக்கள் பலியாகிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடனும் கைவிடப்பட்டுள்ளது" என்று அறிவித்துவிட்டேன்.

ஆனாலும், ஜெயலலிதாவின் அந்த அறிக்கை பற்றி 3-9-2006 அன்றே பா.ம.க.வின் அதிகார பூர்வ ஏடான "தமிழ் ஓசை"யில், "ஜெயலலிதாவின் அறிக்கை -- அநாகரிகத்தின் உச்சக் கட்டம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதியிருந்தார்கள்.

தற்போது அ.தி.மு.க.வுடன் தோழமைக் கட்சியாக உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான "தீக்கதிர்", 4-9-2006 அன்று எழுதிய தலையங்கத்தில்,

"சென்னை அருகே துணைநகரம் அமைக்கும் திட்டம் ரத்து செய்யப்படுவதாக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். நல்லெண்ண அடிப்படையில் தோழமைக் கட்சியினரின் உணர்வுகளை மதித்து இந்த முடிவை எடுத்திருப்பதாக முதல்வர் அறிவித்துள்ளார். ஆனால் ராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு அந்த இடத்தில் தலைமைச் செயலகம் கட்ட முந்தைய (அ.தி.மு.க.) ஆட்சி முயன்றபோது மாணவிகள்

போராடினர். அனைத்துத் தரப்பு மக்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும் ஆணவத்தோடு அந்தத் திட்டத்தைக் கைவிட அடாவடியாக மறுத்த ஜெயலலிதா அரசின் செயலோடு முதல்வர் கலைஞரின் இந்த அறிவிப்பை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. துணை நகரத் திட்டம் கூடாது என்று ஜெயலலிதா விடுத்த அறிக்கை அரசியல் அநாகரிகத்தின் உச்சமாக இருந்தது வேதனையளிக்கிறது. அரசின் ஒரு திட்டத்தை எதிர்க்க எதிர்க்கட்சிகளுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் அதில் அரசியல் நாகரிகம் பேணப்பட வேண்டும். ஆனால் ஜெயலலிதாவின் அறிக்கையில் முதல்வர் கருணாநிதி குடும்பத்தினர் குறித்து அருவருக்கத்தக்க, அநாகரிகமான வார்த்தைகளை ஜெயலலிதா பயன்படுத்தியுள்ளார். அவரது வன்மத்தையும், வக்கிரத்தையுமே இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது. இதனால்தான் சட்டமன்றத்தில் இந்த அறிக்கையை முதல்வர் (கலைஞர்) படித்துக் காட்டியபோது, அ.தி.மு.க.வினரால் கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லை போலும். சட்டமன்றமும், அரசியல் அரங்கமும் நாகரிகமான விவாதம் நடைபெற வேண்டிய இடங்களேயன்றி ஆத்திரத்தையும் அவதூறையும் வெளிப்படுத்தும் இடங்கள் அல்ல. ஜெயலலிதாவோ, அவரது கட்சியினரோ மக்களின் தீர்ப்பிலிருந்து இன்னமும் பாடம் கற்றுத் திருந்தவில்லை என்பதையே அவர்களது வார்த்தைகளும் செயல்பாடுகளும் நிரூபிக்கின்றன”

என்று எழுதியிருந்ததை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

நான் இதையெல்லாம் குறிப்பிட்டதால் ஜெயலலிதா உடனே “நான் மாமல்லபுரம் அருகே துணை நகரம் அமைப்பதைத்தான் எதிர்த்தேன், திருமழிசையில்தானே பிறகு அறிவித்தேன்” என்று சொல்லக்கூடும்! ஆனால் அதே திருமழிசையில் தி.மு.கழக ஆட்சிக் காலத்திலேயே ஒரு துணை நகரம் அமைப்பதற்கான முயற்சிகளில் 2006ஆம் ஆண்டு பொறுப்புக்கு வந்ததும் தொடங்கினோம். அந்தப்பகுதி மக்களும், விவசாயிகளும், எதிர்க்கட்சிகளும்,

தோழமைக் கட்சிகளும் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள். எனவே அவர்களின் கோரிக்கைகளை யேற்று, 21-12-2006 அன்று தமிழக அரசின் சார்பில் துணை நகரம் அமைக்கும் திட்டத்திற்காக நஞ்செய், புஞ்செய் நிலங்களை கையகப்படுத்துவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம்; துணை நகரத் திட்டத்தை அறிவித்தபோது ஜெயலலிதாவும், வேறு சிலரும் அதனை எதிர்க்காமல் இருந்திருந்தால் கழக ஆட்சியிலேயே துணை நகரமும் வந்திருக்கும், சென்னையின் இட நெரிசலும் ஓரளவு குறைந்திருக்கும். ஆனால் அன்றைக்குத் தி.மு.கழக அரசு துணை நகரத்தை அறிவித்தபோது எதிர்ப்பு கூறப்பட்டாலும், தற்போது ஜெயலலிதா அம்மையார் பேரவையில் 110வது விதியின் கீழ் மதுரையிலே துணை நகரம் அமைக்கப் போவதாக அறிவித்திருப்பதை அவருடைய தோழமைக் கட்சிகள் எல்லாம் வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றன. மதுரை துணை நகரமும், திருமழிசைபோல் காலதாமதமாகி விடாமல் விரைவில் நடைமுறைக்கு வருகிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்! ஆனால் தி.மு.க. ஆட்சியில் "துணை நகரத்தை" அறிவித்தபோது, மறுநாளே அதுபற்றி "அநாகரீகமாக" "கொச்சைப்படுத்தி"; "துணை" என்ற வார்த்தையை வைத்து அறிக்கை விடுத்த ஜெயலலிதா அம்மையாரின் தற்போதைய "துணை" நகரத்தைப் பற்றி நான் அவர் "பாணி"யிலே அறிக்கைவிட விரும்பவில்லை. மாறாக அவர் விடுத்த அறிக்கையைத்தான் தற்போது ஞாபகப்படுத்தியிருக்கிறேன். "அந்த நாள் ஞாபகம் வந்ததே; அம்மையே! அம்மையே!" என்றுதான் பாடிடத் தோன்றுகிறது.

அன்புள்ள,

மு.க.

9-4-2013

3730. துரோகம் தொடர்கதையானது யாராலே?

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டமன்றத்தில் நேற்றைய தினம் தென்பெண்ணையாற்றுத் தண்ணீரைக் கர்நாடக அரசு திருப்பிவிடுவதைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கழகச் சட்டப் பேரவை உறுப்பினர் தம்பி எ.வ.வேலு கொடுத்து, அதன் மீது உறுப்பினர்கள் பேசிப் பொதுப்பணித்துறை அமைச்சர் பதில் அளித்திருக்கிறார். அப்போது அந்த அமைச்சரும், அவையை அமைதியாக நடத்திச் செல்லும் பொறுப்புமிக்க அவை முன்னவரும் எழுந்து தேவையில்லாமல், காவிரிப் பிரச்சினை பற்றியும், முல்லைப் பெரியாறு பற்றியும், இலங்கைப் பிரச்சினை பற்றியும் பேசி, அதில் தி.மு. கழகமும், நானும் துரோகம் இழைத்து விட்டதாகப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பதிலளிக்கத் தயாராக இருந்த முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரான தம்பி துரைமுருகனையும் பேசவிடாமல் செய்திருக்கிறார்கள். அ.தி.மு.க. அமைச்சர்கள் அனைவரைப் பற்றியும் நான் குறை கூறவில்லை. ஆனால் ஒரு சில அமைச்சர்கள், அப்படிப் பேசினால்தான் தங்களுடைய தலைமை தங்களைக் கொண்டாடும் என்று கருதிக்கொண்டோ, தங்களுடைய இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவோ என்னவோ சட்டப்பேரவையில் பிரச்சினைகளை எழுப்புகிறார்கள். அதற்குப் பதில் சொல்ல எதிர்க் கட்சிகள் முயற்சி செய்தால், ஜனநாயகரீதியாக வாய்ப்பளித்திட மறுத்து மாற்றுக் கருத்தைச் செவிமடுக்கும் பொறுமையின்றி, வெளியேற்றவும் செய்கிறார்கள்.

தமிழகச் சட்டப்பேரவையில் மாத்திரமல்ல; 7-4-2013 அன்று டெல்லியில் பிரதமர் தலைமையில் மாநில முதலமைச்சர்கள், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகளின் கூட்டு மாநாடு நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டத்தில் தமிழக முதல் அமைச்சர்

கலந்து கொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக, தமிழக அமைச்சர் ஒருவர், தமிழக முதலமைச்சரின் பேச்சினைப் படித்தபோது, "காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமைகளுக்காகக் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக நான் (ஜெயலலிதா) மேற்கொண்ட இடைவிடாத போராட்டத்தின் காரணமாகக் கடைசியில் சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவைத் தொடர்ந்து காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது" என்று கூறியதாகத் தமிழக ஏடுகளில் வெளிவந்துள்ளது. இருபதாண்டுகளுக்கு மேலாகத் தமிழக முதல் அமைச்சர் மேற்கொண்ட இடைவிடாத போராட்டத்தின் காரணமாக உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து காவிரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழிலே வெளியிடப்பட்டதாம்! "கேழ்வரகில் நெய் வடிகிறது" என்று கிராமங்களில்தான் சொல்வார்கள். அதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. முதலமைச்சர் பேச்சுதான் அப்படி என்றால், தமிழகச் சட்டப்பேரவையில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், காவிரிப் பிரச்சினையில் தி.மு.க. துரோகம் இழைத்து விட்டது; இலங்கைப் பிரச்சினையிலே தி.மு.க. துரோகம் இழைத்துவிட்டது; முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தி.மு.க. துரோகம் இழைத்துவிட்டது; கச்சத் தீவில் தி.மு.க. துரோகம் செய்துவிட்டது என்று எந்தவித அடிப்படையுமின்றி, எதையும் முழுமையாக அறிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள்.

துரோகத்திற்குச் சொந்தக்காரர்கள் யார்? தமிழினத்திற்கு - தமிழர்களின் நலனுக்குத் தொடர்ந்து "துரோகம்" செய்தது யார்? என்பதை விளக்குவதற்காகத்தான் இந்தக் கடிதம்!

❖ இலங்கையில் போர் நிறுத்தம் நிரந்தரமாக ஏற்பட ஆவன செய்யும்படி மத்திய அரசை வலியுறுத்திட 23-4-2009 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று நான் அறிக்கை கொடுத்த நேரத்தில், "இலங்கையில் ராஜபக்ஷே இப்போது நடத்தும் யுத்தம் தமிழர்களை எதிர்த்து அல்ல; விடுதலைப் புலிகளை எதிர்த்துத்தான்" என்று ஜெயலலிதா கூறினாரே; அதற்குப் பெயர் துரோகமா? அல்லவா?

❖ இலங்கையில் ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டபோது, "ஒரு போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது

சகஜம்தான்" என்று 17-1-2009 அன்று ஜெயலலிதா சொன்னாரே, அதைவிட ஒரு பெரிய துரோகம் இருக்க முடியுமா? என்ன?

- "பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டு வரவேண்டும்" என்று ஜெயலலிதாவே 16-4-2002 அன்று சட்டப் பேரவையில் தீர்மானம் முன்மொழிந்து நிறைவேற்றினாரே, அதைவிடவா ஒரு பெரிய துரோகம் இருக்க முடியும்?
- இலங்கைப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து சென்னை தலைமைச் செயலகத்திலே கூட்டம் நடத்தியபோது அதைப் புறக்கணிப்பதாக ஜெயலலிதா அறிவித்தாரே, அது பச்சைத் துரோகமா? அல்லவா?
- ஈழத் தமிழர்களுக்காகச் சென்னை மாநகரில் மிகப் பிரமாண்டமான "மனிதச் சங்கிலி"யை 2009ஆம் ஆண்டு நடத்தியபோது அதை "கபட நாடகம்" என்று ஜெயலலிதா வர்ணித்தாரே, அது துரோகமா? அல்லவா?
- இலங்கையில் நிரந்தரப் போர் நிறுத்தம் காண, மத்திய அரசு முயற்சிக்கக் கோரித் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் என் தலைமையில் டெல்லி சென்று பிரதமரிடம் கோரிக்கை வைத்தபோது, அதை ஜெயலலிதா புறக்கணித்தது துரோகமா? அல்லவா?
- விடுதலைப் புலிகளை இன்றைக்கும் விரோதிகள் என்று கூறுகிற ஜெயலலிதா துரோகியா? நான் துரோகியா?
- ஈழத் தமிழர்களுக்காக இரண்டு முறை ஆட்சியை இழந்தது தி.மு.க., நானும் பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பதவியையே ராஜினாமா செய்தோம். ஏன் தற்போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து கூட விலகினோம். இவை துரோகச் செயல்களா? அல்லது அவற்றை விமர்சிக்கும் ஜெயலலிதா போன்றவர்கள் துரோகிகளா?
- தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சார்ந்த எந்த ஒருவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்று

பேரவையில் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றியது துரோகமா? அல்லவா?

❖ இலங்கையில் தமிழினப் படுகொலையைக் கண்டித்துப் போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியபோது, ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் "அந்தத் தீர்மானத்தைப் பார்த்தால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம்தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது. இலங்கையில் தற்போது நடைபெறும் உள் நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை என்பதை ஐந்து முறை முதலமைச்சராக இருந்த கருணாநிதி புரிந்து கொள்ளாதது விந்தையாக உள்ளது. இலங்கை உள் நாட்டு விஷயத்தில் இந்திய அரசு தலையிட்டால் பின்னர் நம் நாட்டு உள் விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்படும்" என்று ஜெயலலிதா குறிப்பிட்டாரே, இதை விடவா ஒரு பெரிய துரோகம் இருக்க முடியும்?

❖ காவிரிப் பிரச்சினையில் "நடுவர்மன்றத் தீர்ப்பு வந்தால் கூட, கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால் தான் காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும். கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால் தான் நடுவர்மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும்" என்று 21-3-1991இல் ஜெயலலிதா கூறியது துரோகமா? அல்லவா?

❖ "நடுவர்மன்றம் தீர்ப்பு வழங்கினால் கூட, அதை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டாயம்; கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவுக்குக் கிடையாது" என்று ஜெயலலிதா கூறியது, தமிழ்நாட்டிற்கு அவர் செய்த துரோகமா? அல்லவா?

❖ 9-6-1992 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு.சுக்லா, நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்தக் குழு அமைப்பது

பற்றி ஒப்புதல் கேட்டு அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதத்திற்கு 30-3-1993 அன்று ஒன்பது மாதங்கள் கழித்துத்தான் ஜெயலலிதா பதில் எழுதினார். இதைவிட ஒரு பெரிய துரோகம் இருக்க முடியுமா?

- 1991இல் நடுவர் மன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்தும்கூட, 1996ஆம் ஆண்டுவரை முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த ஜெயலலிதா ஒரு ஆண்டு கூட இடைக்கால உத்தரவுப்படி 205 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்றுத் தரவில்லை. அது அவர் செய்த துரோகமா? அல்லவா?

- காவிரி நதிநீர் ஆணையம் தி.மு.கழகத்தின் பெருமுயற்சியால் அமைந்த நேரத்தில், 2-4-2002 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் ஜெயலலிதா "செயல்படாத ஆணையம், காவிரி ஆணையம். அந்த ஆணையத்தை நாங்கள் ஏற்காமல் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம்" என்று கூறினார். இவ்வாறு காவிரி ஆணையத்தை, "பல் இல்லாத ஆணையம்" என்றும் "செயல்படாத ஆணையம்" என்றும் ஜெயலலிதா கூறியது துரோகமா? அல்லவா?

- ஜெயலலிதா 21-9-1998 அன்று ஆங்கிலத்தில் விடுத்த அறிக்கையில் "The Kaveri River Authority headed by the Prime Minister is a very big fraud perpetrated on the farmers of the kauveri Delta in Tamil Nadu" என்று குறிப்பிட்டார். இது தமிழகத்திற்கு மறைமுகமாக அவர் செய்த துரோகமா? அல்லவா?

- 21-6-2002 அன்று கூடிய தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் காவிரி நதி ஆணையக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை என்று ஜெயலலிதா முடிவெடுத்தாரே, அது தமிழகத்திற்கு ஜெயலலிதா செய்த துரோகமா? அல்லவா?

- காவிரி ஆணையத்தின் தலைவரான பிரதமர் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்று ஜெயலலிதா கூறி, அதை உச்ச நீதிமன்றமே கண்டிக்கின்ற அளவிற்கு நிலை மாறி,

பின்னர் ஜெயலலிதா அதற்காக வருத்தம் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டதே, அது ஜெயலலிதா தமிழகத்திற்குச் செய்த துரோகமா? அல்லவா?

❖ பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்திருந்ததைப் பற்றி பிரதமராக இருந்த வாஜ்பாய், "அ.தி.மு.க.வுடன் கூட்டணி இருந்த காலம்தான் எனது அரசியல் வாழ்க்கையிலேயே மிகவும் வேதனையான காலம்" என்றும், "அரசைக் கவிழ்க்கப் போவதாகச் சுதந்திரத் தினத்திற்கு முந்தையநாளன்று கூட ஜெயலலிதா அச்சுறுத்தினார், ஆனால் அவரது பிளாக் மெயில் தந்திரத்திற்கு நாங்கள் அடிபணியவில்லை என்றும் 22-8-1999 அன்று குறிப்பிட்டார் என்றால் அது ஜெயலலிதா செய்த நம்பிக்கை துரோகமா? அல்லவா?

❖ ஏன், எல்லாவற்றிற்கும் மேலாக, ஜெயலலிதாவை அரசியலுக்கு அழைத்துவந்து அறிமுகப்படுத்தி ஆளாக்கிய எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களுக்குத் தன் கைப்பட எழுதிய கடிதத்திலேயே இவரது வளர்ச்சியைப் பார்த்து எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்றும், தனது வளர்ச்சியை அவரால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை என்றும் குறிப்பிட்டாரே; அதைவிட ஒரு பெரிய பச்சைத் துரோகம் இருக்க முடியுமா? என்ன?

உடன்பிறப்பே, இந்த விவகாரங்களை யெல்லாம் எழுதுவதற்கோ, மற்றவர்களைச் சங்கடப்படுத்துவதற்கோ எனக்கு உண்மையில் விருப்பம் இல்லைதான். ஆனால் அன்றாடம் தமிழகச் சட்டப்பேரவையில் ஒரு சில அமைச்சர்கள் நம்மை இவ்வாறு எழுதுவதற்கு அவர்களாகவே தூண்டுகிறார்களே என்பதுதான் வேதனையான உண்மை.

அன்புள்ள,

மு.க.

10-4-2013

3731. “தலித்” மக்கள் தெரிந்து கொள்வதற்காக!

உடன்பிறப்பே,

2013-2014ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பேரவையில் படிக்கப்பட்ட மறுநாளே, “தினமலர்” நாளிதழின் சிறப்பு நிருபர் - “பட்ஜெட்டில் பெரிய திட்டங்களோ, அறிவிப்புகளோ, இலவச மற்றும் சலுகை திட்டங்களோ என எதுவும் வெளியாகவில்லையே என, அலுத்துக் கொள்பவர்கள் ஏப்ரல் 1ஆம் தேதிவரை பொறுமை காக்க வேண்டும். ஏனெனில் முதல்வர் ஜெயலலிதா சபை விதி110ன் கீழ், தன் அதிரடி அறிவிப்புகளை சரவெடியாய் வெளியிடுவார் என கண்டிப்பாக எதிர்பார்க்கலாம்” என்று எழுதியிருந்ததற்கும், தற்போது முதலமைச்சர் ஜெயலலிதா ஏப்ரல் 1ஆம் தேதிமுதல் சட்டப்பேரவை விதி 110இன் கீழ் ஒவ்வொரு துறை சம்பந்தமான அறிவிப்புகளை யெல்லாம் அவரே படிப்பதற்கும் உள்ள ஒற்றுமையைப் பார்க்கும்போது, அ.தி.மு.க. ஆட்சியில் முதல் அமைச்சர் எந்த அளவிற்கு அறிவிப்புகளை வெளியிடுவதில் மட்டும் ஆர்வம் காட்டுகிறார் என்பதை “தினமலர்” நாளிதழ் முன்கூட்டியே யூகித்து எழுதியிருப்பதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

பேரவையில் முதல்வரையோ, அரசையோ குறை கூறிப் பேசினால் உடனடியாக வெளியேற்றம் - நேற்றையதினம் மானியக் கோரிக்கைமீது விவாதத்தைத் தொடங்கிவைக்கப் பிரதான எதிர்க்கட்சிக்கு வாய்ப்பில்லை என்ற தடை - நிலைமை இப்படியே போய்க் கொண்டிருக்கின்றது. அதைப் பற்றியெல்லாம் தமிழக நாளேடுகள் கண்டித்து எழுதுவதற்குப் பயப்படுகிறார்கள். நமக்கேன் வம்பு என்று எண்ணுகிறார்கள். இந்த நிலையில் தான் இன்று (10-4-2013) காலை “இந்து” நாளிதழில் “Atrocities against Dalits touched their peak in 2012, finds study” என்ற தலைப்பில் ஒரு செய்திக்கட்டுரை அதன் சிறப்பு செய்தியாளரால் தரப்பட்டுள்ளது. அதாவது 2012ஆம் ஆண்டில் “தலித்”களுக்கு

எதிரான வன்கொடுமைகள் அதன் உச்சக்கட்டத்தை எய்தின என்ற தலைப்பில் வெளிவந்துள்ள அந்தக் கட்டுரையில்,

> "தலித்"கள் மீதான வன்கொடுமைகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் 2012ஆம் ஆண்டுதான் உச்சக் கட்டத்தை எட்டியது. தமிழகத்தில் விழுப்புரம், விருதுநகர், தர்மபுரி, தேனி ஆகிய மாவட்டங்களில் அதிகப்பட்சமான வன்கொடுமைகள் நிகழ்ந்துள்ளன. இந்த ஆய்வினைச் செய்திருப்பது மதுரையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் "எவிடென்ஸ்" எனப்படும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். வன்கொடுமைக்கு ஆளான மக்களுக்குச் சட்டப்படி வழங்கப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் மறுவாழ்வு ஏற்பாடுகள் இதுவரை சென்றடையவில்லை. தர்மபுரி நிகழ்வில் மட்டும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.
>
> ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 370 நிகழ்வுகளில் 2012ஆம் ஆண்டு மட்டும் 112 நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்வுகளில் "தலித்"கள் மீது தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன. மேலும் 28 நிகழ்வுகளில் மிகக் கடுமையான விளைவுகள் "தலித்"களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. 36 நிகழ்வுகளில் "தலித்"களுக்குச் சொந்தமான குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. கொலையில் முடிந்த 96 நிகழ்வுகளில் வழக்குகள் தொடரப்பட்டு அவை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்றன. மூன்று நிகழ்வுகளில் மட்டுமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.
>
> 62 நிகழ்வுகளில் பாலியல் குற்றங்கள் "தலித்" பெண்களின் மீது நடத்தப்பட்டிருக்கின்றன. அவை அனைத்திலும் வழக்குகள் தொடரப்பட்ட போதிலும், இதுவரையில் ஒரு நிகழ்வில்கூட தண்டனை அளிக்கப்படவில்லை"

என்று "இந்து" ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. அதாவது அ.தி.மு.க. ஆட்சியின் 2012ஆம் ஆண்டில்தான் "தலித்"களுக்கு எதிரான இத்தகைய வன்கொடுமைகள் அதிக அளவில் நடைபெற்றுள்ளன என்று ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆய்வு செய்து அறிவித்துள்ளது.

இந்த அரசுக்கு இவ்வாறு சான்றிதழ் அளித்துள்ள அந்தத் தொண்டு நிறுவனம் என்ன பாடுபடப் போகிறதோ?

ஆனால் தி.மு. கழக ஆட்சி நடைபெற்றபோது "தலித்"களுக்கு எதிராக எங்கே வன்கொடுமை நடைபெற்றாலும் அங்கே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்பதற்கும், வன்கொடுமைகள் நடைபெறக் கூடும் என்பதை முன்கூட்டியே நுண்ணறிவுப் பிரிவின் மூலமாக அறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்ட தற்கும் ஒரு சில உதாரணங்களை மட்டும் தருவதை என் கடமையாகக் கருதுகிறேன்.

மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் உத்தப்புரம் கிராமத்தில் வாழும் பிள்ளைமார் இனத்தவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் இடையே 1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் இரு சமூகத்தினரையும் சம்மதிக்கச் செய்து ஏற்கனவே, 1989இல் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, இருபிரிவினரின் குடியிருப்புகளுக்கிடையே வெள்ளாளர் உறவின்முறை சார்பில் 103 மீட்டர் நீளமுள்ள பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டது.

இந்தச் சுவரை அகற்றுவது, வெள்ளாளர் சமூகத்தினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள நடைபாதைப் பகுதியில் தொடர்பு ஏற்படுத்தித் தருவது, 1989ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கோவில் மற்றும் அரச மரத்தினைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள சுற்றுச் சுவரை அகற்ற வேண்டும் என்ற ஆதிதிராவிட சமுதாயத்தின் கோரிக்கையின் பேரில் எழுந்த பிரச்சினைகளைத் தீர்க்கச் சமாதானக் கூட்டம் 2.5.2008 அன்று நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒரு தீர்வு எட்டப்பட இருந்த நிலையில், ஆதிதிராவிட மக்கள் 1989ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தின்கீழ் மாரியம்மன்கோவில் பக்கத்தில் உள்ள சுற்றுச் சுவரை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர். அது தொடர்பாக, மாவட்ட வருவாய் அலுவலர் தாவா நிலங்களைச் சார்நிலை அலுவலருடன் புலத் தணிக்கை செய்து, 4.5.2008 அன்று சட்ட வல்லுநரின் கருத்தையும் பெற்று, ஆதிதிராவிடர்

அதிகமாக வசிக்கும் பகுதிக்குச் செல்லும் வண்ணம் 6.5.2008 அன்று சுவர் உடைக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள பஞ்சாயத்து சாலையை இணைத்திடப் பாதை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இது தொடர்பாக, இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை குறித்து அரசு நியமித்த விசாரணைக் குழுவின் பரிந்துரைகள்படி, 191 பேருக்கு 10 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட 12.9.2009 அன்று தி.மு.க. ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டு 15.9.2009, 16.9.2009 ஆகிய இரண்டு நாள்களில் வழங்கப்பட்டது.

மேலும் உத்தப்புரம் கிராமத்தில் 4 குடும்பங்களுக்குத் திருமண நிதியுதவியாக 16 ஆயிரம் ரூபாய்; இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்குகளுக்காக 87 ஆயிரத்து 500 ரூபாய்; கணவனை இழந்த இரண்டு பெண்களுக்கு நலிந்தோர் உதவித் திட்டத்தின்கீழ் 20 ஆயிரம் ரூபாய்; முதியோர், விதவை மகளிர், கணவனால் கைவிடப்பட்ட மகளிர், உடல் ஊனமுற்றோர், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஆகியோர்க்கும் இந்திராகாந்தி தேசிய முதியோர்க்குமாக மொத்தம் 113 பேருக்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டது. 38 இலட்சத்து 41 ஆயிரத்து 255 ரூபாய் செலவில் 1655 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்;

2 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் 80 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் ; 6 0 ஆயிரத்து 515 ரூபாய் மதிப்பீட்டில் 8 பேருக்கு 2.03 ஹெக்டேர் நிலம் ; 10 ஆயிரத்து 870 ரூபாய் மதிப்பீட்டில் 35 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இவையல்லாமல், உத்தப்புரம் கிராமத்தின் வெள்ளாள சமுதாய மக்கள் வாழும் வடக்கு தெருவில் 39 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சிறுபாலம், சிமெண்ட் சாலை, திருமண மண்டபம், இந்திரா நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒரு குடியிருப்பு கட்டப்பட்டதுடன் தெரு விளக்குகள், சுடுகாட்டுச் சுற்றுச்சுவர், குடிநீர் வசதி, சாலை அமைத்தல், நூலகக் கட்டடம், விளையாட்டு மைதானம் அமைத்தல் முதலிய பல பணிகள் நடைபெற்றன.

அதேபோல, ஆதிராவிட சமுதாய மக்கள் வசிக்கும் தெற்குத் தெருவில் 73 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவு மையக் கட்டடம், தார், சிமெண்ட் சாலைகள், சுடுகாடுகளில் கூரை அமைத்தல், தானிய களம், அரசு நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல், கழிவுநீர் வாய்க்கால், குடிநீர், தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 40 குடியிருப்பு வீடுகள் மற்றும் 14 கச்சா வீடுகள் கட்டுதல், நாடக மேடை அமைத்தல், குளிக்குமிடத் தொட்டி, சமுதாயக் கூடம், சாலை அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்றன.

விழுப்புரம் மாவட்டம் காங்கேயனூர் கிராமத்தில் திரௌபதி அம்மன் கோவிலில் 7.8.2009 அன்று நடைபெற்ற தீ மிதித் திருவிழா தொடர்பாக, மேலந்தல் கிராம ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த குபேந்திரன் என்பவர் 8.8.2009 அன்று காலை தாக்கப்பட்டதாகக் கூறி மேலந்தல் காலனி மக்கள் ஏறத்தாழ 90 பேர் மூங்கில்துறைப்பட்டு சாலையில் முள் மற்றும் மரங்களைப் பரப்பிச் சாலை மறியல் செய்தனர். இது தொடர்பாக இரு பிரிவினரிடையே பிரச்சினை ஏற்பட்டு, திருக்கோவிலூர் வருவாய்க் கோட்டாட்சியரால் விசாரணைக்கு ஆணையிடப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர் அமைதிக் குழுக் கூட்டம் நடத்தியதன்பயனாக, 7.10.2009 அன்று கோவில் திறக்கப்பட்டு, காங்கேயனூர், மேட்டுச்சேரி, மேலந்தல் ஆகிய கிராம மக்கள் அனைத்துத் தரப்பினரும் சென்று வழிபட்டனர்.

நாகை மாவட்டம் வேதாரண்யம் வட்டம் செட்டிபுலம் கிராமத்தில் பூட்டியிருந்த அருள்மிகு காமாட்சி அம்மன் கோவிலுக்குள் ஆதி திராவிடர்கள் சென்று வழிபடுவது குறித்த பிரச்சினையில், கலவரம் ஏற்படும் சூழ்நிலை உருவானதைத் தொடர்ந்து, 8.10.2009 அன்று நாகை வருவாய்க் கோட்ட அலுவலகத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் 14.10.2009 காலை 11 மணிக்கு கிராமப் பொதுமக்கள் அனைவரும் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வதென ஏற்றுக் கொள்ளப்பட்டது. காவல் துறையினர் உதவியோடு நிலைமை அங்கே கட்டுப்படுத்தப்பட்டு, அந்த கிராமத்தில் சட்டம் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் பந்தப்புலி கிராமம் கண்ணநல்லூர் மாரியம்மன்கோவிலில் வழிபாடு செய்வது தொடர்பாக, சாதி இந்துக்களுக்கும், தேவேந்திர குல வேளாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையில் இரு சமூகமும் தொடுத்த வழக்கில் சங்கரன்கோவில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் இந்தக் கோவில் எந்தத் தனிப்பட்ட இனத்திற்கும் உரிய கோவில் அல்ல என்று 11.8.2008 அன்று தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 23.9.2008 அன்று கோடை விழா நடத்த அனுமதி கேட்டனர். அப்பொழுது கிராமத்தில் நிலவிய பதற்றமான சூழ்நிலை காரணமாக மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைதிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. பிறகு என்னுடைய அறிவுரைகள் படி அனைத்து சமுதாயத்தினரும் கூடி வழிபாடு செய்வதற்கேற்ப மிகுந்த பாதுகாப்புடன் 24.12.2008 அன்று கோவில் திறக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் கோவிலுக்குள் சென்று வழிபட்டனர்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகளிலும் இட ஒதுக்கீட்டின்படி "தலித்" சமுதாயத்தினரே போட்டியிட முடியும் என்ற காரணத்தால், பல ஆண்டுகளாகத் தேர்தல்கள் நடைபெறாமல் உள்ளாட்சி ஜனநாயக நடைமுறைகள் செயல்படாமல் இருந்தன.

2006இல் கழக அரசு அமைந்தபின், அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழகத்தின் மற்ற பகுதிகளைப் போலவே இந்த நான்கு கிராம ஊராட்சிகளிலும் அனைத்து சமூகங்களின் ஒத்துழைப்புடன் அமைதியான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சமுதாய நல்லிணக்க உணர்வுகளை வளர்ப்பதில் அங்கு ஒரு புதிய வரலாறு படைக்கப்பட்டது.

அன்று மகத்தான இந்தச் சாதனை நிகழ்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய பெருமக்களையும், பொதுமக்களையும் மதித்துப் போற்றும் வகையில் கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார் மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சி

மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், அந்தக் கிராமங்களில் வாழும் பல்வேறு சமுதாயங்களையும் சேர்ந்த தலைவர்கள் அனைவருக்கும் 13.11.2006 அன்று சென்னையில், "சமத்துவப் பெருவிழா" எனும் பெயரில் மிகப் பெரிய ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது.

விழாவில் நான் உரையாற்றும்போது இந்த நான்கு ஊராட்சிகளிலும் வாழும் மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காகத் தமிழக அரசின் சார்பில் ஓர் ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் வீதம் 80 இலட்ச ரூபாயும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஓர் ஊராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்ச ரூபாயும் வழங்கப்படுமென அறிவித்து, அவ்வாறே வழங்கப்பட்டது.

"தலித்" சமுதாய மக்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமைகள் கழக ஆட்சியில் எவ்வாறு பேசித் தீர்க்கப்பட்டன என்பதற்கும், தற்போது அந்தச் சமுதாய மக்கள் எந்த அளவிற்கு அ.தி.மு.க. ஆட்சியில் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஆதாரப் பூர்வமாக வெளிவந்துள்ள ஒரு செய்திக் கட்டுரையையும் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறேன். இரண்டு ஆட்சியிலும் நிலைமைகள் எவ்வாறு கையாளப்பட்டது என்பதை "தலித்" சமுதாய மக்களே நன்கு புரிந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

அன்புள்ள,

மு.க.

11-4-2013

3732. பயன்பெறும் மக்களுக்கு உண்மை தெரியத்தான் போகிறது!

உடன்பிறப்பே,

21-3-2013 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் அவர்களால் 2013-2014ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் 1-4-2013 அன்று பேரவையில் நடைபெற்று, அந்தத் துறையின் அமைச்சரும் பேரவையில் பதிலளித்துவிட்டார். ஆனால் நேற்றைய தினம் (10-4-2013), முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ் ஒரு நீண்ட அறிக்கையினை, குடிநீர் வழங்கல் துறைக்கான மானிய விவாதத்தின்போது சொல்லப்பட வேண்டிய அறிவிப்புகளை, இவரே பேரவையில் படித்திருக்கிறார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 450 கோடி ரூபாய்ச் செலவிலும், தஞ்சையில் 125 கோடி ரூபாய்ச் செலவிலும், கோவையில் 114 கோடியே 25 லட்சம் ரூபாய்ச் செலவிலும், திருப்பூரில் 76 கோடியே 44 லட்சம் ரூபாய்ச் செலவிலும், திருச்சியில் 797 கோடியே 69 லட்சம் ரூபாய்ச் செலவிலும், திருநெல்வேலியில் 227 கோடியே 26 லட்சம் ரூபாய்ச் செலவிலும், கூட்டுக் குடிநீர் திட்டங்களை மேற்கொள்ளப் போவதாகவும், தஞ்சை, திண்டுக்கல் நகராட்சிகளை மாநகராட்சிகளாக ஆக்கப் போவதாகவும், காரைக்குடி, சிவகாசி நகராட்சிகளைச் சிறப்பு நிலை நகராட்சிகளாக உயர்த்தப் போவதாகவும் 110வது விதியின்கீழ் வேறு சில அறிவிப்புகளோடு சேர்த்துப் படித்திருக்கிறார். ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அறிவிக்க வேண்டிய இந்தத் திட்டங்களையெல்லாம் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது துறையின் அமைச்சரை அறிவித்திட அனுமதிக்காமல், ஒருசில நாட்கள் கழித்து முதல் அமைச்சரே 110வது விதியின்கீழ்ப் படிக்கிறார் என்றால், அந்தத் துறைக்கு என்று பிறகு எதற்காகத் தனியே ஒரு அமைச்சர்? பாதித்

திட்டங்களை முதல் அமைச்சர் படித்துவிட்டுப் போகட்டும்; மீதி பாதியையாவது துறையின் அமைச்சர்களை விட்டுப் படிக்கச் சொன்னால்தானே; பாதிக் கடமையையாவது அவர்களுக்கும் நிறைவேற்றிய நிறைவு ஏற்படும்!

"முதல் அமைச்சர் அறிவிப்பு" என்று ஏடுகளில் வெளிவரவேண்டும் என்பதுதான் காரணமா? இந்த அறிவிப்புகளை நிதியமைச்சரோ, துறைகளின் அமைச்சரோ அறிவிக்கக் கூடாது என்பதுதான் எண்ணமா? இதே முதலமைச்சர் ஜெயலலிதா; முன்பு எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தபோது பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்குத் தன் கைப்பட எழுதிய கடிதத்தில் "எம்.ஜி.ஆரைத் தவிர மற்ற அனைவரும் இங்கே "ஜீரோக்கள்" என்று எழுதினாரே, அப்படித்தான் இப்போதும் மற்ற அமைச்சர்கள் எல்லாம் "ஜீரோ"க்களாகவே இருக்கிறார்களா?

முதலமைச்சர் இவ்வாறு இந்த ஒரு துறையின் அமைச்சர் குறித்த விவரங்களை மாத்திரமல்ல, ஒவ்வொரு துறை அமைச்சரின் முக்கிய அறிவிப்புகளையும் முதலமைச்சரே 110வது விதியின்கீழ்ப் படிக்கிறார் என்றால் பிறகு எதற்காக மானியத் துறையின்மீது விவாதம், பதில் உரை எல்லாம்? இனி மேல் ஒவ்வொரு ஆண்டும், நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வது, பொது விவாதம் நடத்துவது, மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடத்துவது, அமைச்சர் பதில் கூறுவது என்பதற்குப் பதிலாக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு துறை குறித்தும் முதலமைச்சரே 110வது விதியின் கீழ் அறிக்கையைப் படித்து, மற்றக் கட்சிகளின் தலைவர்களும், பேரவைத் தலைவரும் வரிசையாக அந்த அறிவிப்புகளுக்குப் பாராட்டுரை வழங்கலாம் என்று முடிவெடுத்து விடலாம் அல்லவா?

மேலும் முதலமைச்சர் தன் அறிக்கையின் தொடக்கத்திலேயே "ராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் ராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் 3.80 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் எனது (ஜெயலலிதாவின்) ஆட்சிக் காலத்தில்தான் கொண்டுவரப்பட்டது. இதேபோன்று ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் வடிவமைக்கப்பட்டுப் பின்னர் நிறைவேற்றப்பட்டது" என்று சொல்லியிருக்கிறார்.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் தி.மு. கழக ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. "வீடியோ கான்பரன்சிங்" மூலமாக

அல்ல, நானே பரமக்குடி நகருக்குச் சென்று அந்தப் பெரிய விழாவிலே கலந்து கொண்டேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சர் பொறுப்பையேற்றுப் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருந்த நிலையில், நீலகிரியில் 21-5-1989 அன்று நடைபெற்ற மலர்க் கண்காட்சியைத் திறந்து வைக்கச் சென்றபோது, அந்த மலர்க் கண்காட்சியைப் பார்த்துவிட்டு - நீலகிரியில் பூத்துக் குலுங்கியிருந்த மலர் கூட்டத்தைப் பார்த்து விட்டு, துள்ளியோடிய அருவிகளைப் பார்த்துவிட்டு எண்ணிக் கொண்டேன்; அந்த எண்ணத்தையும் அப்போதே அந்த நிகழ்ச்சியில் வெளியிட்டேன். "நான் நீலகிரியைப் பார்த்து - இந்தச் செழிப்பைப் பார்த்து - இந்த மலர்வனத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்ற அதே நேரத்தில், வறண்டு கிடக்கின்ற ராமனாதபுரம் மாவட்டத்தையும் எண்ணிக் கவலைப்படுகிறேன்" என்று அப்போது அந்தக் கண்காட்சி விழாவிலே குறிப்பிட்டேன்.

குறிப்பிட்டதோடு இருந்து விடவில்லை. ராமநாதபுரம் மாவட்டத்தையும் வளம் மிக்க நீலகிரி மாவட்டம் போல அப்படியே ஆக்கிட முடியாதென்றாலும் - ஓரளவு அவ்வாறு மாற்றிட வேண்டும் - அடிப்படைக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் என்ற முனைப்போடு ஆட்சிப் பொறுப்பிலே இருந்து செயல்பட்டேன். அதன் விளைவாகத்தான் 1996 ஆம் ஆண்டில் கழக அரசு அமைந்தபொழுது, இராமநாதபுரம் மாவட்டத்தில் 72 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் உவர் நீரை நன்னீராக்கும் 11 திட்டங்களைச் செயல்படுத்தினோம். அந்தத் திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட உவர்நீரை நன்னீராக்கும் 11 கலன்கள் மூலம் மொத்தம் 237 கிராமக் குடியிருப்புகள் குடிநீர் வசதி பெற்றன.

2006 மே திங்களில் தமிழகத்தில் கழக அரசு மீண்டும் அமைந்த பிறகு, சட்டப்பேரவையில் 22.7.2006 அன்று அளித்த நிதிநிலை அறிக்கையில் "இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களில் பல ஆண்டுகளாக நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாகக் காவிரி நீரைக் கொண்டு வந்து வழங்கும் 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பெரும் திட்டத்தின் பணிகள் இந்த ஆண்டு தொடங்கும்" என்று

செய்யப்பட்ட அறிவிப்பினை உடனடியாகச் செயல்படுத்து வதற்காக; வகுக்கப்பட்ட திட்டம்தான் இந்த இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

இத்திட்டப் பணிகளுக்கு, 30.1.2007 அன்று பரமக்குடியில் நடைபெற்ற விழாவில் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்ததும் நான்தான். மகத்தான இந்தத் திட்டத்தில், முதற்கட்டமாக இராமநாதபுரம், இராமேசுவரம், பரமக்குடி, கீழக்கரை ஆகிய நகராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும், மண்டபம், சாயல்குடி, முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் 27-6-2009 முதல் குடிநீர் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக இத்திட்டத்தின் வழியோரப் பகுதிகளாகிய புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, ஆலவயல், பொன்னமராவதி பகுதிகளைச் சேர்ந்த 32 குடியிருப்புகளுக்கும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை நகராட்சியுடன், திருப்பத்தூர், காளையார் கோவில், இளையான்குடி முதலிய பகுதிகளைச் சேர்ந்த 799 குடியிருப்புகளுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு ஊரகப் பகுதிகளுக்கும் தொடர்ந்து குடிநீர் வழங்கப்பட்டது. இத்திட்டப் பணிகளை அடிக்கடிப் பார்வையிட்டு, அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி, ஊக்கப்படுத்தி இரண்டாண்டு காலத்திற்குள் நிறைவேற்றி முடித்த பெருமை துறையின் அமைச்சரும், துணை முதலமைச்சருமான தம்பி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களையே சேரும்.

மக்களுக்குக் குடிநீர் தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தி.மு. கழக ஆட்சியிலே தான் 1971ஆம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கப்பட்டது.

1995-96ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் இறுதி ஆண்டிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை 213 கோடியே 82 லட்சம் ரூபாய்.

2000-2001ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் இறுதி ஆண்டிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 842 கோடி ரூபாய்.

இந்தப் புள்ளி விவரம் மூலமாகவே எந்த அளவிற்குந் தி.மு.கழக ஆட்சி; குடிநீர்ப் பிரச்சினைகளிலே அக்கறை கொண்டு செயல்பட்டது என்ற உண்மை உங்களுக்குப் புரியும்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டமாகிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் 51 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு, 27.6.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அது இன்றும் இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு நல்ல முறையில் பயனளித்து வருகிறது. இந்தத் திட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே 1995ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. கழக ஆட்சியில் தான் நிதி ஒதுக்கப்பட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

நரிப்பையூர் குடிநீர்த் திட்டமும் தனது ஆட்சிக் காலத்திலேதான் கொண்டு வரப்பட்டது என்று பேரவையில் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

1998ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் ராமநாதபுரம் மாவட்டத்தில் நரிப்பையூர் கிராமத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆசியாவிலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்டது. 46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டம் கடலாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட 296 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கிடப் பயன்பட்டது. 1998இல் "பெல் நிறுவனம்" டெண்டர் எடுத்து, 5 ஆண்டு காலம் அவர்களது பராமரிப்பின்கீழ் இத்திட்டம் இயங்கியது. அதற்குப் பின், தோஷியன் நிறுவனத்தின் பராமரிப்பில் இத்திட்டம் செயல்பட்டு வந்தது. இத்திட்டம் தொடங்கியபோது நாள் ஒன்றுக்கு 38 லட்சம் லிட்டர் குடிநீர் தயாரித்து 296 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது.

சென்னைக் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, 1996ஆம் ஆண்டில் கழக அரசு அமைந்தபோது, ஆந்திர மாநில அரசோடு இணக்கமான உறவு முறையைக் கடைப்பிடித்து, பல ஆண்டுகளாகத் தடைபட்டு நின்ற கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி முடித்து கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா கால்வாய் மூலம் சென்னைக்குக் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

அதுபோலவே, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையை முற்றிலும் போக்கிட ஜப்பான் பன்னாட்டு

கூட்டுறவு நிதியுதவியுடன், 1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகள் முழு வீச்சில் கழக ஆட்சியிலேதான் நிறைவேற்றப்பட்டன.

மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே தொடங்கப்பட்ட போதிலும், நீதிமன்ற வழக்கு காரணமாகத் தாமதமாகி, திட்டத்தைச் செயல்படுத்துவதில் மேற்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை. அந்நிலையில் 2006இல் கழக அரசு அமைந்தபிறகு, பேச்சுவார்த்தை நடத்தி திட்டத்தை விரைந்து செயல்படுத்துவது குறித்து முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் நீரை, ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டிருந்த - குடிநீரின் விலையை ஓரளவுக்குக் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 25.2.2007 அன்று உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த தம்பி மு.க.ஸ்டாலின் அவர்களால் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. சோதனை இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து 31.7.2010 அன்று இத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.

மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைத் தொடர்ந்து நெம்மேலி - கடல்நீர் குடிநீராக்கும் திட்டம், இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவால் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்ட போதிலும், அந்தத் திட்டத்திற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு, மத்திய அரசிடம் கழக அரசுதான் கோரிக்கை விடுத்து நிதி பெற்றுப் பணிகளைப் பெருமளவுக்கு நிறைவேற்றித் தந்தது.

ஆனால் தமிழகச் சட்டப் பேரவையில் தி.மு. கழக ஆட்சியில் குடிநீர்த் திட்டங்கள் எதையுமே கொண்டு வரவில்லை என்பதைப் போலவும், ஜெயலலிதாதான் நரிப்பையூர் திட்டமானாலும், ராமனாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமானாலும், மீஞ்சூர் குடிநீர்த் திட்டமானாலும், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டமானாலும், நெம்மேலி குடிநீர்த் திட்டமானாலும் அவைகளையெல்லாம் கொண்டு வந்ததைப் போலவும் பேரவையில் பெருமை பேசிக் கொள்கின்ற காரணத்தால், இந்த விவரங்களையெல்லாம் மக்களுக்குத் தெரிவிக்கின்றேன். போகிறபோக்கைப் பார்த்தால்,

கல்லணையைக் கட்டியதே கரிகாலன் அல்ல; தானேதான் என்று 110வது விதியின்கீழ் அறிவித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை; இது 110வது விதி அல்ல; தமிழ்நாட்டு மக்களின் தலைவிதி! அம்மையார் என்னதான் தனக்கே எல்லாப் பெருமைகளையும் தேடிக்கொள்ள முயன்றாலும், அந்தந்தப் பகுதிகளிலே அன்றாடம் இந்தத் திட்டத்தினால் பயன்களை அனுபவித்து வரும் தமிழக மக்களை ஜெயலலிதா இந்தச் செயற்கை அறிவிப்புகள் மூலம் ஏமாற்ற முடியாதல்லவா? பயன்பெறும் மக்களுக்கு உண்மை தெரியாமலா போய் விடும்?

அன்புள்ள,

மு.க.

12-4-2013

3733. ஓங்கிக் குரல் கொடுப்போம்!

உடன்பிறப்பே,

தமிழகத்திலே சட்டப்பேரவை கடந்த முறை எவ்வாறு நடைபெற்றது என்பது குறித்துக் கடந்த சில மாதங்களுக்கு முன்பு "தினமலர்", "தினத்தந்தி" நாளேடுகள் எழுதியிருந்ததுதான் இப்போது என் நினைவுக்கு வந்தது.

"தினமலர்" எழுதியிருந்ததாவது:-

"தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் பல முறை வெளி நடப்பு செய்தனர். தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், இரு முறை வெளியேற்றப்பட்டனர். எதிர்க்கட்சியும் இணைந்ததுதான் சட்டசபை. மிருக பலம் ஆளுங்கட்சிக்கு இருந்தாலும், சட்டமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்ற வேண்டும். எதிர்க் கட்சிகள் சட்டசபையில் தொடர்ந்து இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அ.திமு.க. அரசு இதைச் செய்யத் தவறுகிறது. விதி 110இன்கீழ் அனைத்து அறிவிப்புகளையும் முதல்வர் வெளியிடுவது முறையற்றது; விதிமீறலும்கூட. வாழ்த்தி மட்டுமே பேச வேண்டும்; விவாதங்களோ, விமர்சனங்களோ இருக்கக் கூடாது என்பதற்காக, விதி 110ன் கீழ் அறிவிப்புகளை வெளியிடுவது ஏற்புடையதல்ல. எவ்வளவுதான் விரோதங்கள் இருந்தாலும் பார்லிமெண்ட்டிலிருந்து இதுவரை ஒரு உறுப்பினர் கூட வெளியேற்றப்பட்டதில்லை. அப்படிப்பட்ட ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் சட்டசபையும். ஆனால் இங்கு ஜனநாயகப் படுகொலைகள் தான் அரங்கேறி வருகின்றன. இது நாட்டுக்கு நல்லதல்ல. எந்தப் பிரச்சினை குறித்தும் விவாதிக்க முடியாது; வெறும் அறிவிப்புகள் மட்டும் வெளிவரும் என்பது, ஜனநாயக முறையல்ல. தமிழகத்தில் மட்டும்தான், இப்படி நடக்கிறது. ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில், இது வாடிக்கையும் ஆகிவிட்டது. விவாதமே இல்லாமல் அனைத்தையும் ஏற்க வேண்டும் என்பது என்ன நியாயம்?

இதனால் சட்டசபையில் என்ன நடக்கிறது என்பதே வெளியில் தெரிவதில்லை. இது போன்ற செயல்பாடுகள் ஜனநாயகத்துக்கும், நாட்டுக்கும் நல்லதல்ல!"

"தினத்தந்தி" எழுதிய தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :-

"மூன்று நாட்களுக்கு முன்பு முடிவடைந்த சட்டசபை குளிர்கால கூட்டத் தொடரின்போது ஒரே நாளில் 23 மசோதாக்கள் நிறைவேறியிருக்கின்றன. அதுவும் விவாதம் இல்லாமல் நிறை வேறியிருக்கின்றன. சட்டமன்றப் பேரவையில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மசோதாக்கள் மீது விவாதம் நடத்த வேண்டுமென்றுகோரி, விவாதத்திற்குபிறகே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் வழியில் உள்ள ரயில் நிலையங்களில் நிற்காமல் செல்வதை "ரன்-த்ரூ" என்று சொல்வார்கள். அதுபோல் விவாதம் இல்லாமல் "ரன்-த்ரூ" வாக ஒரே மணி நேரத்தில் 23 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன."

இவையெல்லாம் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக நடைபெறும் நாளேடுகளிலேயே வந்த விமர்சனம்! எதிர்க்கட்சிகளின் கருத்துக்களையே கேட்கமாட்டோம், இன்னும் சொல்லப்போனால் எதிர்க் கட்சி என்ற ஒன்றையே இருக்கவிட மாட்டோம், இல்லாமல் செய்வதற்குத் தேவைப்படும் எல்லாவிதமான முயற்சிகளிலும் ஈடுபடுவோம் என்பது ஒரு நல்ல ஜனநாயக அரசுக்கு அழகல்ல. தமிழகத்தில் 2011 சட்டப்பேரவைத் தேர்தலுக்குப்பின் பிரதான எதிர்க்கட்சியாக தே.மு.தி.க.தான் அமைந்தது. கடந்த தேர்தலில் அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சிதான் தே.மு.தி.க. தற்போது அந்தக் கட்சி இந்த ஆட்சியிலே என்ன பாடுபடுகிறது? தே.மு.தி.க.விற்கும், தி.மு.கழகத்திற்கும் தோழமை கிடையாதுதான். ஆனாலும் அ.தி.மு.க. அரசு தே.மு.தி.க. என்ற எதிர்க்கட்சியின் மீது எடுக்கும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். ஜனநாயகத்தில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒன்றையொன்று உரிய முறையில் மதித்திட வேண்டும்.

தே.மு.தி.க.விலிருந்து திடீரென்று ஐந்து சட்டப்பேரவை உறுப்பினர்கள், முதல் அமைச்சரைச் சந்திக்கிறார்கள். தொகுதி மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதற்காகத்தான்

முதலமைச்சரைச் சந்தித்தோம் என்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களுக்காக முதலமைச்சரைச் சந்திக்கச் செல்வதாக இருந்தால், தங்கள் கட்சியின் தலைமையிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டாமா? அந்தக் கட்சியும் சேர்ந்து கடந்த தேர்தலில் பாடுபட்டதால்தானே இவர்கள் ஆளுங்கட்சியாக வந்து அதிகாரம் செலுத்த முடிகிறது. அதற்கு நன்றி தெரிவிக்கும் செயலா இது?

தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்ற "தலித்" சமுதாயத்தைச் சேர்ந்த சட்டமன்றப் பெண் உறுப்பினர் ஒருவர் "பாதுகாப்பு இல்லாத சூழலில் வாழ்கிறேன்" என்று கதறியதாக "தினமலர்" செய்தி வெளியிடவில்லையா? "அரசு விழாவில் கலந்துகொள்ளச் சென்றால், தனக்கு ஆளுங்கட்சியினர் கொலை மிரட்டல் விடுக்கின்றனர். இங்கே உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லை. பெண்கள் வெளியே செல்ல முடியாத அளவுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது" என்றெல்லாம் பேசியதாக அந்தப் பத்திரிகையிலே செய்தி வெளியிட்டார்களே?

தமிழகச் சட்டப்பேரவைக் கூட்டம் 8-2-2013 அன்று நடைபெற்றபோது, தே.மு.தி.க. சார்பில் வெற்றிபெற்று, வெளியேறியதாகக் கூறப்படும் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் (தமிழழகன்) பேரவையில் பேசும்போது, தான் கட்சியிலிருந்து வெளியேறிய காரணத்தால், ஆட்சியினர் தன் தொகுதிக்கு நன்மைகளைச் செய்கிறார்கள் என்றும், மற்ற தே.மு.தி.க. உறுப்பினர்களும் தன்னைப் போல் முடிவு எடுத்தால், அவர்களும் பயன்பெறலாம் என்றும் வெளிப்படையாகப் பேரவையிலே சட்டமன்ற ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கிடும் அளவுக்கு அழைப்பு விடுத்தது முறையா? அவரது அந்தப் பேச்சுக்கு தே.மு.தி.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் அவையில் எதிர்ப்புத் தெரிவித்தனர். இரு சாராருக்கும் இடையே தகராறு அப்போது ஏற்பட்டது. தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்குள் நடைபெற்ற விவகாரம் இது. இதில் தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்று அக்கட்சியின் கட்டுப்பாட்டுக்குப் புறம்பாகச் செயல்படும் உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறி, தே.மு.தி.க.விலே தொடர்ந்து உறுதியாக இருக்கின்ற ஆறு பேர் மீது பிரச்சினை எழுப்பப்பட்டு, ஆறு மாத காலத்திற்கு "சஸ்பென்ட்" செய்யப் பட்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் முன்பாகக் கடந்த ஆண்டு 3-2-2012 அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த விஜயகாந்த் அவர்கள் மீதே அவர் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டார் என்று ஒரு காரணத்தைக் கூறி சட்டமன்றக் கூட்டத் தொடரில் இருந்து பத்து நாட்களுக்கு "சஸ்பென்ட்" செய்யப்பட்டார். மேலும் அந்த நாட்களுக்கு அவர் எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையிலோ, சட்டப் பேரவை உறுப்பினர் என்ற முறையிலோ வழங்கப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது என்ற நிலைக்கு உள்ளாக்கினார்கள். பேரவையிலிருந்து நடவடிக்கை எடுத்தது மட்டுமல்ல; அவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், அவர் மீது எத்தனை அவதூறு வழக்குகள். அவர் மீது மாத்திரமல்ல; பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், ஊடகங்கள் மீது இந்த ஆட்சியிலே எத்தனை வழக்குகள். சி.என்.என்., ஐ.பி.என். மீது நேற்றுக்கூட ஒரு அவதூறு வழக்கு! அவர்கள் செய்த குற்றம் என்ன தெரியுமா? அவர்கள் வெளியிட்ட "கார்ட்டூன்" ஒன்றில் செய்தியாளர் முதல்வரிடம் ஆட்சியை எப்படி நடத்துகிறீர்கள் என்று கேட்க, அதற்கு "முதலாளியைப் போல" என்று பதில் கூறுவதாகக் காட்டினார்களாம். அதற்காக அவதூறு வழக்கு. "ஆனந்தவிகடன்" பத்திரிகையில் தமிழக அமைச்சர்களைப் பற்றி ஒரு கட்டுரை வெளிவந்தது. இவ்வாறு ஒரு கட்டுரை வந்திருக்கிறது என்று நான் எழுதினேன். உடனே அந்தக் கட்டுரையில் இடம்பெற்றிருந்த அத்தனை அமைச்சர்களும் தனித்தனியாக என் மீது அவதூறு வழக்கு தொடுத்துள்ளனர். தமிழகத்தில் என்ன நடைபெறுகிறது? நெருக்கடி நிலையா? தமிழக மக்களின் நலன் கருதி, ஆட்சியைப் பற்றியோ, முதலமைச்சரைப் பற்றியோ யாரும் எதுவும் விமர்சித்துப் பேசக் கூடாதா?

தே.மு.தி.க.வைச் சேர்ந்த திருத்தணி தொகுதி எம்.எல்.ஏ., மீது ஏதோ ஒரு புகாரைக் கூறி கடந்த ஆண்டு அவரைக் கைது செய்தார்கள். அவர் மறுநாளே ஜாமீனில் வெளியே வந்துவிட்டார். உடனே உயர் நீதிமன்றத்தில் "அப்பீல்" செய்து ஜாமீனை ரத்து செய்து, கடந்த மூன்று நாட்களாக அவரைக் கைது செய்ய நான்கு தனிப்படைகளாம். என்ன கொடுமை இது? இங்கே என்ன ராணுவ ஆட்சியா? சர்வாதிகார ஆட்சியா?

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டுப் பேரணி, பொதுக்கூட்டம் நடத்த விடுதலைச்

சிறுத்தைகள் கட்சிகள் சார்பில் அனுமதி கேட்டதற்குக்கூட இந்த ஆட்சியில் மறுக்கப்பட்டு, அந்தக் கட்சியின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் முறையிட்டு, அந்தக் கட்சியின் தலைவர் திருமாவளவன் அவர்களே நீதிமன்றம் சென்று அசம்பாவிதம் எதுவும் நடக்காது என்று உறுதி அளித்தபின் உயர்நீதிமன்றம் அம்பேத்கர் பிறந்த நாள் பேரணி நடத்த அனுமதி அளித்துள்ளது. ஆனால் வேதனை என்ன தெரியுமா? தமிழக அரசின் சார்பில் அதை எதிர்த்து மேல் முறையீடு செய்கிறார்களாம். ஜனநாயகத்திற்கு விரோதமான இந்த அணுகுமுறை இந்திய அரசியல் சட்டத்திற்கும், அதை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கருக்கும் அ.தி.மு.க. அரசால் இழைக்கப்படும் அநீதியாகும். இதைப்போல இலங்கைத் தமிழர்களுக்காக "டெசோ" சார்பில் மாநாடு ஒன்றினை நடத்த இந்த அரசினால் அனுமதி மறுக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தின் கருணையினால் அந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இதெல்லாம் நல்லாட்சியின் நடைமுறைகளா அல்லது காட்டாட்சியின் கொடுமைகளா?

1989ஆம் ஆண்டு தி.மு.கழகம் 13 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பொறுப்புக்கு வந்தபோது, முதன்முதலாக நான் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கிய நேரத்தில், என் கையிலிருந்து நிதிநிலை அறிக்கையைப் பிடுங்கிக் கிழித்தெறிந்து என்னையும் தாக்குவதற்கு ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. வினர் முற்பட்டபோது, அவர்கள் ஒரு சில நாட்களுக்கு அவை நடவடிக்கையிலிருந்து "சஸ்பென்ட்" செய்யப்பட்டனர். அதையும் ரத்து செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி கோரிக்கை வைத்த நேரத்தில், நான் எழுந்து, "எதிர்க்கட்சிகள் இல்லாமல் இந்த அவை நடவடிக்கைகளை நடத்த வேண்டும் என்கிற குறுகிய மனப்பான்மை எனக்கோ, இந்த அரசுக்கோ நிச்சயமாக இல்லை. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை நான் அணுகுகிறேன். அன்றைய தினம் ஏற்பட்ட ஒரு உணர்ச்சியின் காரணமாக, கொந்தளிப்பின் எதிரொலியாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தைத் திரும்பப்பெற்று எதிர்க் கட்சித் தலைவரும், மற்றவர்களும் அவையில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்புகூட பேரவையில் தி.மு.கழகம் எப்படியெல்லாம் பெருந்தன்மையாக நடந்து கொண்டது என்பதைப் பல்வேறு உதாரணங்களின் மூலமாக எடுத்துக்காட்டியிருந்தேன். 7-2-2011 அன்று சட்டப் பேரவை - ஓமந்தூரார் வளாகத்தில் கழக ஆட்சியில் கட்டப்பட்ட புதிய சட்டப்பேரவையிலே நடைபெற்றபோது, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் - பேரவை விதி 20(1)-ன்கீழ், "எதிர்க் கட்சித் தலைவர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவரைப் பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ள நிலையில், அவர் சட்டப்பேரவையின் இந்தக் கூட்டத்தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்படவேண்டும்'' என்று ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். இத்தீர்மானத்தை அ.தி.மு.க. சட்டப்பேரவைக் கொறடா கே.ஏ.செங்கோட்டையன் வழிமொழிய, குரல் வாக்கெடுப்பின் மூலம் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சட்டப்பேரவையில் ஆளுங்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தோழமைக் கட்சிகளும் அதிகப் பெரும்பான்மையாக இருந்தாலும், எதிர்க்கட்சி கொண்டு வந்த அந்தத் தீர்மானத்திற்கு மனிதாபிமான அடிப்படையில், எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொண்டன. அதெல்லாம் "அரசியல் நாகரீகம்"!

ஆனால் தற்போது எதிர்க்கட்சி என்ற ஒன்றே இருக்கக் கூடாது; இருந்தாலும் அது தன் கடமையை ஆற்ற அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு, காரியங்கள் நடத்தப்படுகின்றன. அரசியலிலே, அடிப்படையில் ஒரு கண்ணியமும், பண்பாடும் நாகரிகமும் இருந்திட வேண்டுமென்பதற்காக இந்தக் கருத்துக்களை நான் தெரிவிப்பதற்கே உள் நோக்கம் கற்பித்து; ஒரு சிலர் விமர்சிக்கக்கூடும். ஜனநாயகத்தில் அரசியலை அரசியலாகச் சந்திக்க வேண்டுமே தவிர, இதுபோன்ற நாகரிகமற்ற செயல்பாடுகளின் மூலமாகச் சந்தித்துச் சாதிக்கலாம் என்று நினைப்பது சரியல்ல என்பதே என் கருத்து. ஜனநாயக மாண்புகளில் நம்பிக்கை கொண்டுள்ள அனைவரும் ஒன்றிணைந்து ஓங்கிக் குரல் கொடுத்திட 'வாரீர்' என்று அன்புடன் அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

14-4-2013

3734. நாகரிகயுகத்தில் நரபலிக் கொடுமையா?

உடன்பிறப்பே,

நரபலிக்காகக் குழந்தையைக் கொலை செய்த செய்தியை இன்று (14-4-2013) தமிழ் நாளேடு ஒன்றில் பார்த்தேன்.

சென்னை - வியாசர்பாடியைச் சேர்ந்த கட்டிடத் தொழிலாளி செந்தில். அவருடைய மனைவியின் பெயர் கீதா. அவர்களுக்கு இரண்டரை வயதில் விஷ்ணு என்ற மகன் இருந்தான். 9-4-2013 அன்று குழந்தை விஷ்ணு, பக்கத்து வீட்டு மாடியில் இருந்த தண்ணீர் பேரலுக்குள் மூழ்கிக்கிடந்தான். அதைக் கண்ட உறவினர்கள் குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் குழந்தை வழியிலேயே இறந்துவிட்டான்.

குழந்தை விஷ்ணு தண்ணீருக்குள் தவறி விழுந்து இறந்துவிட்டதாகப் பெற்றோர் நினைத்து, உடலை எரித்து விட்டனர். இதற்கிடையே அந்தப் பகுதியில் உள்ள ஜோசியா என்பவர், குழந்தையை அவருடைய சின்ன பாட்டியான மகேஸ்வரி என்பவர்தான் தண்ணீர்த் தொட்டியில் அமுக்கிக் கொலை செய்ததாக அக்கம்பக்கத்தினரிடம் தெரிவித்தார். காவல்துறையினருக்கும் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

காவல்துறையினர் மகேஸ்வரியை அழைத்து விசாரித்தபோது, அவர் குழந்தையைக் கொலை செய்ததை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்திருக்கிறார். அந்த வாக்குமூலத்தில், "செந்தில் குடும்பத்திற்கும், எனக்கும் இடையே மன வேறுபாடு இருந்து வந்தாலும், செந்திலின் மகன் விஷ்ணு எப்பொழுதும் என்னுடன்தான் விளையாடுவான். 7-4-2013 அன்று இரவு எங்கள் தெருவுக்கு வந்த ஒரு குடுகுடுப்பைக் காரனிடம் என் கையை நீட்டி ஜோசியம் பார்த்தேன். அப்போது எனக்கும், எனது குடும்பத்திற்கும் யாரோ "செய்வினை" வைத்ததாகத் தெரிவித்து, 2000 ரூபாய் கொடுத்தால் அந்தச் செய்வினையை

அகற்றிவிடுவதாக அந்தக் குடுகுடுப்பைக்காரன் தெரிவித்தான். மறுநாள் அந்தக் குடுகுடுப்பைக்காரன் மந்திரித்த எலுமிச்சம் பழம், 2 தாயத்து, குங்குமம் போன்ற பொருள்களைக் கொடுத்து தாயத்தை என்னையும் என் குழந்தையையும் கட்டிக் கொள்ளுமாறு கூறினான். குடுகுடுப்பைக்காரன் என்னிடம் இருந்து 1000 ரூபாய் பெற்றுக்கொண்டான். தாயத்தைக் கட்டிய சிறிது நேரத்திலேயே நான் சுய நினைவை இழந்தேன். குழந்தை விஷ்ணுவைப் பார்க்கும் போது எனக்கு ஆத்திரமாக இருந்தது. குழந்தையைக் கொலை செய்துவிடலாம் என்று தோன்றியது. 9-4-2013 அன்று நான், குழந்தையை அழைத்து வந்து, வீட்டில் இருந்த தண்ணீர்த் தொட்டிக்குள் அமுக்கிக் கொலை செய்ய முயற்சித்தேன். குழந்தை மூச்சுத் திணறி உயிருக்குப் போராடினான். உடனே குழந்தையைத் தூக்கிக்கொண்டு பக்கத்து வீட்டு மாடிக்குச் சென்று, அங்கிருந்த தண்ணீர் பேரலில் குழந்தையைத் தலைகீழாகப் போட்டுவிட்டு, தவறி விழுந்துவிட்டதாக நாடகமாடினேன். அனைவரும் அதை நம்பினர். குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் குழந்தை விஷ்ணு இறந்துவிட்டான்" என்று தெரிவித்திருக்கிறார்.

மகேஸ்வரி மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார். குழந்தை விஷ்ணுவை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது அவன் முகம், கை, கால்களில் காயங்கள் இருந்ததாகப் பார்த்தவர்கள் தெரிவிக்கிறார்கள். மகேஸ்வரி, "தோஷம்" கழிக்கும் நோக்கத்தில் குழந்தையை நரபலிக்காகக் கொலை செய்திருக்கலாம் என்று அந்தப் பகுதியில் உள்ளவர்கள் கருதுகிறார்கள்.

இந்தச் செய்தியைப் படித்தபோது, நாம் 21ஆம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம், என் எண்ணத்தைத் துளைத்தெடுத்தது. அறிவியல் மிகவும் முன்னேறியிருக்கும் காலம் இது. மனித அறிவுக்கு எட்டாதது எதுவுமே இல்லை என்ற நிலை உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. உயிர்களின் பரிணாம வளர்ச்சி, கோள்களைப் பற்றிய முழுமையான ஆய்வு, தகவல் தொழில்நுட்பம் எனும் அறிவியல், இவ்வுலகத்தையே ஒரு சிறு கிராமமாகச் சுருக்கியதோடு - உள்ளங்கையில் உலகம் என்ற நிலை; - இப்படி மனித அறிவு, ஆழமாகவும் அகலமாகவும், எல்லை இதுதான் என்று வரையறுத்திட

முடியாத அளவுக்கு விரிவடைந்து கொண்டே இருக்கிறது. இவற்றை எல்லாம் கண்டும் கேட்டும், மனித அறிவின் அருமை பெருமைகளை வியந்து போற்றுகின்ற அதே வேளையிலேதான்; "செய்வினை - குடுகுடுப்பைக்காரன் - தாயத்து - தோஷம் - நரபலி" என்றெல்லாம் செய்திகள் செவிகளில் விழும்போது; வியக்கத்தக்க உயரத்திற்கு விஞ்ஞானம் சென்றதற்குப் பிறகும், மூடநம்பிக்கை எனும் பள்ளத்தாக்கில் இருந்து இன்னும் மனித இனத்தின் ஒரு பகுதி விடுபடவில்லையோ என்று தோன்றுகிறது.

உலகம் தோன்றிய நாள் தொட்டு, தந்தை பெரியாரும் அவரைப் பின்பற்றித் தன்மான இயக்கத்தினரும் ஆற்றி வரும் எவ்வளவோ பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்குப் பிறகும், உடன்பிறந்தே கொல்லும் வியாதியாக மூடநம்பிக்கையும், நல்ல கழனியில் தோன்றும் களையைப் போல, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சமுதாயத்தை அரிக்கத்தான் செய்கிறது. இந்த மூடநம்பிக்கைக்களையை முற்றிலுமாக அகற்றுவது என்பது மிகச் சிறந்த சமுதாயப் பணியாகும். அரசியலைக் கடந்து, கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால், அனைவரும் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியப் பணியாகும் இது.

"நமது மக்கள் அனைவரும் மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து என்றைக்கு விடுபடுகின்றார்களோ, அன்றுதான் நம் நாட்டின் உண்மையான விடுதலையை நாம் அடைந்ததாக அர்த்தமாகும்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னதை, அனைவரும் நினைவு கூர்ந்து, அயராது செயலாற்றுவதே நமது சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்றதாகும்.

அன்புள்ள,

மு.க.

15-4-2013

3735. இதற்கோர் அறிக்கை படிக்கலாமே?

உடன்பிறப்பே,

புதுக்கோட்டை மாவட்டத்தில், கோட்டைப் பட்டினம் மற்றும் ஜெகதாபட்டினம் பகுதியில் விசைப்படகு மீன்பிடித் தளங்கள் உள்ளன. இந்த மீன்பிடித் தளங்களில் இருந்து நூற்றுக் கணக்கான விசைப்படகுகளில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வருவதைப்போல, நேற்று முன்தினமும் அங்கிருந்து 184 விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருக் கிறார்கள்.

இதில் 182 விசைப்படகுகளில் சென்ற மீனவர்கள் மீன்பிடித்துவிட்டு நேற்று காலை கரைக்குத் திரும்பிய நிலையில், வீரன், வடிவழகன் ஆகியோருக்குச் சொந்தமான 2 விசைப்படகுகள் மட்டும் கரைக்குத் திரும்பவில்லை. அதில் சென்ற 9 மீனவர்களும் கரைக்குத் திரும்பாததால், அப்பகுதி அனைத்து மீனவர்களும் துன்பத்திற்கு ஆளாயினர். அவர்கள் நேற்று மாலை திரும்பியபோது, அந்த மீனவர்கள் கண்ணீரோடு தங்களை இலங்கைக் கடற்படையினர் மடக்கி, கம்பி, பைப், போல்ட், ஸ்பானர் போன்றவற்றால் சரமாரியாகத் தாக்கியதாகவும், இரண்டு படகுகளின் கண்ணாடிகள், ஜி.பி.எஸ். கருவிகள், வயர்லெஸ் போன்கள் ஆகியவற்றை அடித்து உடைத்தனர் என்றும், செல்போன்களையெல்லாம் பறித்துக்கொண்டனர் என்றும், இவர்கள் படகுகளில் பிடித்துவைத்திருந்த ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்பிலான மீன்களை எடுத்து கடலில் கொட்டிவிட்டதாகவும்,

5 வலைகளை அறுத்து கடலில் வீசிவிட்டதாகவும், அதன் மதிப்பு இரண்டரை லட்சம் ரூபாய் என்றும் அதன் பின்னர் தான் துன்புறுத்தி விடுவித்ததாகவும் கூறியிருக்கிறார்கள். இது ஒரு நாள் நிகழ்ச்சி மட்டுமல்ல;

காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் வேளாங்கண்ணிக்கு அருகில் இந்திய எல்லைக்கு உட்பட்ட பகுதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, நமது மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே நடுக்கடலில் மோதல் ஏற்பட்டுள்ளது. இலங்கை மீனவர்கள் உடனடியாக இலங்கைக் கடற்படையினருக்குத் தகவல் அளித்து, இலங்கைக் கடற்படையினர் அங்கே விரைந்து வந்து இந்திய மீனவர்கள் 46 பேரையும் கைது செய்து, 5 படகுகளுடன் இலங்கைக்குக் கொண்டு சென்று விட்டனர். இதுபற்றி நாகை மாவட்ட மீனவர்கள் இந்தியக் கடற்படையினருக்குத் தகவல் தெரிவித்தவுடன், அவர்கள் தலையிட்டு இந்திய மீனவர்களை மீட்டு வந்திருக்கிறார்கள்.

12-4-2013 அன்று இலங்கைக் கடற்படை தாக்கி நாகை மீனவர்கள் எட்டு பேர் பெரிய அளவிற்குக் காயமடைந்த புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளில் வெளிவந்தன. இப்படி அண்மைக்காலமாகத் தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்களாலும், இலங்கைக் கடற்படையினராலும் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்கதையாகிவிட்டன. எனவே, தமிழக மீனவர்களின் துன்பத்திற்கு விடிவே இல்லை என்ற நிலைதான் நாளும் நாளும் நீடித்துக் கொண்டே இருக்கிறது. 1.1.1991 முதல் 1996வரை இலங்கைக் கடற்படை மேற்கொண்ட 79 துப்பாக்கிச்சூடு நிகழ்வுகள் காரணமாக 38 மீனவர்கள் இறந்துள்ளனர். 99 மீனவர்கள் காயமடைந்தனர். 1996 முதல் 2001 வரை நிகழ்ந்த 58 துப்பாக்கிச்சூடு நிகழ்வுகளில், 34 மீனவர்கள் இறந்துள்ளனர். 68 மீனவர்கள் காயமடைந்தனர். 2001 முதல் 2006 வரை நிகழ்ந்த 17 துப்பாக்கிச் சூடுகளில் 7 மீனவர்கள் இறந்து, 21 மீனவர்கள் காயமடைந்தனர். 13.5.2006 முதல் இதுவரை நிகழ்ந்த 26 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில்

8 மீனவர்கள் இறந்து, 22 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். ஆக, 1991 முதல் 21-12-2006 வரை இலங்கைக் கடற்படை, தமிழக மீனவர்கள் மீது மேற்கொண்ட 180 துப்பாக்கிச் சூடு நிகழ்வுகளில் மொத்தம் 87 தமிழக மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். 210 மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

பல்வேறு நிகழ்வுகளில் தமிழக மீனவர்களின் 175 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் கவர்ந்து செல்லப்பட்டன.

இதுவரை 600க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. தொடர்ந்து மீனவர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளும், அவர்களின் குடும்பத்தினர் இன்றைக்கும் அடைந்து வரும் வேதனைகளும் எழுதி மாளாதவையாகும்.

கழக ஆட்சியில் மீனவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் நிறுவப்பட்டது. 31-3-2011 வரையில் எடுத்த புள்ளி விவரப்படி அந்த வாரியத்தின் சார்பில் 3 இலட்சத்து 85 ஆயிரத்து 756 மீனவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அதுவரை 9 ஆயிரத்து 452 உறுப்பினர்களுக்கு 4 கோடியே 52 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிவாரணம் பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக வழங்கப்பட்டது.

மீனவர்களுக்கான இலவச வீடு கட்டித் தரும் திட்டம் தி.மு.கழக ஆட்சியிலே முடிவெடுக்கப்பட்டு, முதற்கட்டமாக இரண்டாயிரம் வீடுகள் கட்டுவதற்காக 7 கோடியே 40 இலட்ச ரூபாய் ஒப்பளிக்கப்பட்டது. மீண்டும் 2010-2011 ஆம் ஆண்டில் "மா.சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதி திட்டத்தின்" கீழ் மொத்தம் 2 ஆயிரத்து 949 வீடுகள் 75 ஆயிரம் ரூபாய் என்ற அலகுத் தொகையில் 22 கோடியே 12 இலட்சம் ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டுப் பயனீட்டாளர்களுக்கு வீட்டின் கட்டுமானப் பணி களைத் தொடங்க பணி ஆணையும் வழங்கப்பட்டது.

மீனவர்களின் நலனில் கழக அரசு தனி அக்கறை கொண்டு, மீன் பிடிக்கச் செல்லும்போது காணாமல் போகும் மீனவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தையும், கடலில் மீன் பிடிக்கச் செல்லத் தடை உள்ள காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தையும் தொடங்கிச் செயல்படுத்தி வந்தது.

இந்த மீன்பிடித் தடைக்காலம்தான் இன்று முதல் தொடங்குகிறது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆய்வு நடத்தியதில், தடை செய்யப்பட்ட வலைகள், இயந்திரம் பொருத்திய படகுகள் பயன்பாடு காரணமாகக் கடல் உயிரின வளம் குறைந்து வருவது கண்டறியப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு, இனவிருத்தி காலங்களைக் கண்டறிந்து, அந்த நாட்களில் மீன்பிடிக்கத் தடை விதித்தால், மீன் வளம்

அதிகரிக்கும் என்பதால் இந்த ஏப்ரல் 15 முதல் மே 29ஆம் தேதிவரை 45 நாட்களுக்கு "மீன்பிடித் தடைக் காலம்" என்று அறிவித்து, ஒருசில ஆண்டுகளாக அது கடைப்பிடிக்கப்பட்டு வருவதின் தொடர்ச்சியாக இந்த ஆண்டு இன்று முதல் மீன் பிடித் தடைக்காலம்.

இந்த மீன் பிடித் தடைக்காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கழக ஆட்சிக் காலத்தில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டு, அந்த நிவாரணத் தொகை படிப்படியாக உயர்ந்து தற்போது 2000 ரூபாய் அளவிற்கு வழங்கப்படுவது தற்போதுள்ள விலைவாசி நிலையில் மிகவும் குறைவான தொகை என்றும், இந்தத் தொகையை உயர்த்தித்தர வேண்டுமென்றும் மீனவர்கள் மிகவும் உருக்கமாக ஒரு கோரிக்கையினை இந்த அரசுக்கு விடுத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை. தற்போதுள்ள வாழ்க்கை நிலையில் 45 நாட்களுக்கு - நாள் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் 100 ரூபாய் என்ற அளவிலாவது கணக்கில் எடுத்துக் கொண்டு - ஒவ்வொரு மீனவருக்கும் 4,500 ரூபாயினை - வழங்கிட இந்த அரசு முன்வர வேண்டும். இந்த 4,500 ரூபாயைக் கொண்டு குடும்பம் நடத்துவதென்பதை எண்ணிக்கூடப் பார்க்க இயலாது. இருந்தாலும், இந்த உண்மை நிலையை உணர்ந்து தமிழக அரசு உடனடியாக மீனவர்களுக்கு இந்த உதவியினை நிச்சயம் நிறைவேற்றித்தர வேண்டுமென்று நான் கழகத்தின் சார்பில் வலியுறுத்துகின்றேன்.

எது எதற்கோ 110வது விதியின்கீழ் அறிக்கை படிக்கின்ற தமிழக முதலமைச்சர், மீனவர்களின் கண்ணீரைத் துடைக்க உதவிடும் இதற்கான அறிவிப்பினையும்; ஒரு அறிக்கையினையும் நாளையே படிப்பார் என்று எதிர்பார்ப்போம்.

அன்புள்ள,

மு.க.

16-4-2013

3736. மறைந்த தலைவர்களுக்கு மாசு கற்பித்தல் கூடாது!

உடன்பிறப்பே,

சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்துக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்ட சட்டப்பேரவையில் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவந்து அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு ஒருமனதாக அதனை நிறைவேற்றியிருக்கிறார்கள். கழக சட்ட மன்றக் கட்சித் தலைவர், தம்பி தளபதி மு.க.ஸ்டாலினும் அந்தத் தீர்மானத்தைக் கழகத்தின் சார்பில் வரவேற்பதாகக் கூறியிருக்கிறார்.

இந்த நேரத்தில் என் நினைவு 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்குச் செல்கிறது. வி.பி.சிங் அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்ற பின், எனது அழைப்பின் பேரில் சென்னை கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதுதான், நான் பேசும்போது மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலையங்களுக்கு அண்ணா பெயரும், காமராஜர் பெயரும் சூட்டப்பட வேண்டுமென்று பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தேன். உடனடியாகப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் மேடைக்கு சற்றுத் தொலைவில் பிரதமருக்காகப் பிரத்தியேகமாக வைக்கப் பட்டிருந்த (Hot Line) தொலைபேசியில் டெல்லிக்குத் தொடர்பு கொண்டு, தொடர்புடைய அதிகாரிகளிடம் பேசினார். பின்னர் மேடைக்கு வந்து உரையாற்றும்போதுதான் சென்னையில் உள்ள உள்நாட்டு விமானத்தளத்துக்கு காமராஜர் பெயரும்; வெளிநாட்டு விமான தளத்துக்கு அண்ணா பெயரும் சூட்டப்படும் என்று அறிவித்தார். அந்தப் பெயர்கள்தான் இன்றளவும் விளங்கி வருகின்றன.

அதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது நவீனமயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்திற்கு எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைச் சூட்ட

வேண்டுமென்று அ.தி.மு.க. அரசின் சார்பில் முயற்சியெடுத்து, அதற்குத் தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அனுப்ப வேண்டுமென்று மத்திய அரசின் அமைச்சர் தமிழக முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தின்படி நேற்றையதினம் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்தைக் கழகத்தின் சார்பில் நாம் வரவேற்ற போதிலும், அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த தமிழக முதலமைச்சரைப் பற்றி அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன் கடைசி நாட்களில் என்ன கருத்தினைக் கொண்டிருந்தார் என்பதைப் பற்றியும், அவரைப் பற்றி இன்றையதினம் ஆட்சியிலே இருப்பவர்கள் எப்படியெல்லாம் விமர்சித்தார்கள் என்பதைப் பற்றியும் ஒருகணம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அப்படியிருந்தவர்கள் இன்றைய தினம் மாறி, இந்த அளவிற்கு விமான நிலையத்திற்கு எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று முயற்சி எடுத்திருப்பது மனதிற்குப் பெரும் ஆறுதலாக உள்ளது.

1.1.1989 'மக்கள் குரல்' இதழில், "அம்முவின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. எதையோ நினைத்து அம்முவை அரசியலில் ஈடுபடுத்தினேன். பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காய் முடிந்துவிட்டது. சூதும், வாதும், வஞ்சகமும், சூழ்ச்சியும் கற்ற இந்த அம்மு எனக்கே உலை வைக்கிறாள். சும்மா ஓடுகிற ஓணானை முகத்திலே நுழையவிட்ட கதையாக என் விஷயம் ஆகிவிட்டது இப்போது. இந்த அம்மு அபாயகரமானவள். யாரையும் அவள் தனக்காகப் பயன்படுத்துவாள். எதையும் செய்யத் தயங்கமாட்டாள். மிகவும் கெட்டவள்" என்று எம்.ஜி.ஆர். சொன்ன கருத்தை "மக்கள் குரல்" ஆசிரியர் டி.ஆர்.ராமசாமி அவரது பத்திரிகையில் அப்போதே வெளியிட்டிருந்தார்.

22-1-1985 தேதியிட்ட "அண்ணா" இதழில், "வயதுக்கும் தகுதியும் மீறிய பொறுப்பில் ஜெயலலிதாவை உட்கார வைத்தது என் தவறு. எனக்குத் தெரியாமல் பல இடங்களில் என் பெயரை ஜெயலலிதா பயன்படுத்துவதை இனியும் தாங்கிக் கொள்ள முடியாது" என்று எம்.ஜி.ஆர். அவர்களின் கருத்து வெளியாகியிருந்தது.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் ஜெயலலிதாவை அரசியலுக்கு அழைத்து வந்து பல்வேறு பொறுப்புகளை

அளித்தார். தனக்குப் பிறகு ஜெயலலிதா இந்த அளவிற்கு உயர்ந்த இடத்திற்கு வருவதற்கே எம்.ஜி.ஆர். அவர்கள்தான் காரணமாக இருந்தார். மாநிலங்களவை உறுப்பினராக்கி இந்தியா முழுவதும் அறியச் செய்தவரும் அவர்தான். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது இறுதி காலத்தில் எந்த அளவிற்கு மனம் நொந்து கருத்துகளைத் தெரிவித்தார் என்பதைத்தான் "அண்ணா" ஏடு, "மக்கள் குரல்" ஏடு ஆகியவற்றில் வெளிவந்த செய்திகளே அப்போது எடுத்துக் காட்டின.

இன்னும் சொல்லப் போனால் சென்னை மாநகரில் தமிழக அரசின் சார்பில் புதிதாகத் திரைப்பட நகர் ஒன்று உருவாக்கப்பட்டபோது, அதற்கு எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரையாவது, நடிகர் திலகம் சிவாஜி அவர்களின் பெயரையாவது சூட்ட வேண்டுமென்று தமிழகத் திரைப்பட உலகம் பெரிதும் எதிர்பார்த்து, அதற்கான கோரிக்கைகளை விடுத்த நேரத்தில், முதலமைச்சர் ஜெயலலிதா அதையெல்லாம் கேட்காமல் தன் பெயரையே திரைப்பட நகருக்குச் சூட்டிக் கொண்டார். ஆனால் பின்னர் தி.மு.கழக ஆட்சி அமைந்தபிறகு, அந்தத் திரைப்பட நகருக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரே சூட்டப்பட்டு, இன்றளவும் அந்தப் பெயரிலேதான் அந்த நகர் விளங்கி வருகிறது.

16-4-1989 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற திரைப்படத் துறை விழா ஒன்றில் நான் பேசும்போது, "அரசியல் துறையில் ஆயிரம் மாறுபாடுகள் கடைசிக் காலத்தில் ஏற்பட்டாலுங்கூட, ஆரம்பக் காலந் தொட்டு நாற்பதாண்டு கால கலையுலக வாழ்க்கையில் ஒன்றாகப் பழகிய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பெயரால், தமிழக அரசின் சார்பில் தரப்படுகின்ற கலைஞர்களுக்கான ஒரு விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்" என்று அறிவித்து, அது இன்றளவும், ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

31-8-1989 அன்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவும், பல்கலைக் கழகக் கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது. ஆனால் அடிக்கல் நாட்டப்பட்ட அடுத்த ஆண்டே கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் கட்டிடப் பணிகள் விரைவாக நடைபெறவில்லை. ஆனால் 1996இல் மீண்டும் கழகம்

பொறுப்பேற்ற பிறகு, கட்டிடப் பணிகளைத் துரிதப்படுத்தி 31-7-1998 அன்று குடியரசுத் துணைத் தலைவராக இருந்த திரு. கிருஷ்ணகாந்த் அவர்களை அழைத்து வந்து, ஆறு கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டு, கட்டிட முகப்பில் அமைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையினை நானே திறந்து வைத்தேன்.

1989ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதியினை ஒதுக்கி எம்.ஜி.ஆர். மறைந்து உடல் அடக்கம் செய்த இடத்தில் எந்தவிதமான நினைவு மேடையும் கட்டப் படாமல் கற்கள் மட்டுமே கொட்டிக் கிடந்த நிலையை மாற்றி உடனடியாக அந்த இடத்தை அழகுபடுத்த ஆணையிட்டேன். எம்.ஜி.ஆர். பலருக்கு உதவி செய்து நிழலாக இருந்தார் என்பதை நினைவூட்டும் வகையில் குடைபோன்று அந்த இடத்தை வடிவமைத்து உருவாக்கச் சொன்னேன். 15-11-1989 அன்று எம்.ஜி.ஆர். நினைவிடத்தின் திறப்பு விழா கழக ஆட்சியிலே நடைபெற்று, நானே அதனைத் திறந்து வைத்தேன். அப்போது அதற்கு அ.தி.மு.க. சார்பில் எதிர்ப்புத் தெரிவித்தபோது, அந்த விழாவிலே பேசிய பி.எச்.பாண்டியன் அவர்கள், "அரசியலில் என்னதான் நல்லது செய்தாலும், அதைக் கொச்சைப்படுத்துகிற நிலை தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ளது வருந்தத் தக்கது. ஒரே ஒருவர் மட்டும் இந்த விழாவை எதிர்க்கிறார். அவருடைய பெயரைச் சொல்லக் கூட நான் விரும்பவில்லை. நான் சபாநாயகராக இருந்தவன் என்ற முறையில் சில உண்மைகள் எனக்குத் தெரியும். புரட்சித் தலைவரைப் பதவியிலிருந்து இறக்க மூன்று முறை முயற்சித்தார். அவரே இப்போது இந்த ஆட்சியைக் கலைக்க முயற்சிக்கிறார். இப்படி ஒரு பிழைப்புத் தேவையா?" என்றெல்லாம் பேசியது பழைய நாளேடுகளில் உள்ளது.

அப்படிப்பட்ட ஜெயலலிதாதான் தற்போது தன்னை மாற்றிக் கொண்டு அருமை நண்பர் எம்.ஜி.ஆரின் பெயரை விமான நிலையத்தின் ஒரு பகுதிக்குச் சூட்ட முன்வந்திருக்கிறார்.

இவை மாத்திரமல்ல! அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றி, ஜெயலலிதா தன்கைப்பட எழுதி சேலம் வழக்கறிஞர் கண்ணன் மூலமாக - பிரதமர் ராஜீவ்காந்திக்குக் கொடுக்க வேண்டுமென்று அனுப்பிய கடிதத்தில்; "The root cause of everything that is happening here is that the C.M. is terribly jealous of my popularity. He cannot stomach the fact that I have become so popular.

So he is doing everything possible to eliminate me from the political scene and from public life." அதாவது, "மிகுந்த செல்வாக்குடன் நான் பிரபலம் அடைந்திருப்பதை பார்த்து முதலமைச்சர் (எம்.ஜி.ஆர்) மிகவும் பொறாமைப்படுகிறார். இதுதான் இங்கு நடைபெறும் ஒவ்வொரு செயலுக்கும் மூல காரணம். நான் மிகவும் பிரபலம் அடைந்துள்ளதை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. எனவே, அரசியலில் இருந்தும், பொதுவாழ்வில் இருந்தும் என்னை ஒழித்துக்கட்டத் தன்னால் முடிந்ததை யெல்லாம் அவர் (எம்.ஜி.ஆர்) செய்து வருகிறார்" என்று எம்.ஜி.ஆரைப் பற்றி எழுதினார்.

அது மாத்திரமல்ல; அதே கடிதத்தில், "MGR himself who does not want to give me due importance does not want to induct me into the Cabinet. No one here can really dare to oppose him for without him they are Zeros." (எனக்கு உரிய முக்கியத்துவம் தர விரும்பாத எம்.ஜி.ஆர்., என்னை அமைச்சரவையில் சேர்க்கவும் விரும்பவில்லை. அவரை எதிர்க்க இங்கு யாருக்கும் தைரியமில்லை. ஏனென்றால் அவரில்லா விட்டால் மற்றவர்கள் எல்லாம் பூஜ்யங்கள்) என்றெல்லாம் எழுதியவர், இன்றைக்குத் தானே முன்வந்து சென்னை விமான நிலையத்திற்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றுதானே?

ஆனால் இதிலே நமக்குக் கிடைத்த தகவல்கள் - விமான நிலையம் என்றால் அங்கே உள்நாட்டு முனையம் என்றும் வெளிநாட்டு முனையம் என்றும் இரண்டுதான் இருக்க முடியும்! உள்நாட்டு முனையத்திற்கு ஏற்கனவே பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் பெயர் சூட்டப் பட்டு, அது நடைமுறையிலே இருந்து வருகிறது. தற்போது விரிவாக்கம் மட்டுமே செய்யப்பட்டிருப்பது உள்நாட்டு முனையம்தான். அதற்கு மற்றொரு பெயர் என்பது சற்றுக் குழப்பமாக உள்ளது. இந்தக் கருத்தை நான் மாத்திரமல்ல; பெருந்தலைவர் காமராஜரிடம் அன்பு கொண்டவர்களும் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இன்றைய தினம் (16-4-2013) வெளிவந்துள்ள "டெக்கான் கிரானிகல்" ஆங்கிலப் பத்திரிகையில் "Naming Wars - Passengers say airport already named" என்ற தலைப்பில் வெளி வந்துள்ள செய்தி வருமாறு :-

"What's in a Name? This is what are passengers' and airport officials asked when this newspaper tried to find out their reaction for the State Assembly's Resolution to name the new domestic terminal after former Chief Minister M.G. Ramachandran. "Where is the question of naming the terminal again, when it is already named? The domestic terminal-1 at Chennai airport has been named after former C.M. Kamaraj and we have just added another terminal (II) to it. So, where does the question of renaming the extension crop up? It will only add to the confusion" said a senior airport official"(சென்னை விமான நிலையத்தின் புதிய உள்நாட்டு விமான முனையத்திற்கு எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்ட வேண்டுமென்று தமிழகச் சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்தைப் பற்றி கருத்துக் கேட்டபோது, "பெயரில் என்ன இருக்கிறது?" என்று விமானப் பயணிகளும், விமான நிலைய அதிகாரிகளும் பதில் அளித்தனர். விமான நிலைய மூத்த அதிகாரி ஒருவர், "உள்நாட்டு முனையத்திற்கு ஏற்கனவே பெயர் சூட்டப்பட்டுவிட்ட நிலையில், அந்த முனையத்திற்கு மறுபடியும் பெயர்சூட்ட வேண்டுமென்ற வினா எங்கே எழுகிறது? முதல் உள்நாட்டு முனையத்திற்கு முன்னாள் முதல்வர் காமராஜர் பெயர் ஏற்கனவே சூட்டப்பட்டுவிட்டது. இப்போது இரண்டாவது முனையம் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத்திற்குப் பெயர் சூட்ட வேண்டுமென்ற கேள்வி எங்கே எழுகிறது? இது குழப்பத்தையே அதிகரிக்கும்" என்று கூறியிருக்கிறார்) என்று "டெக்கான் கிரானிகல்" ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகமே மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துக் கொண்டாடி இன்றளவும் போற்றிப் பாராட்டி வரும் ஒரு தலைவரின் பெயரைச் சூட்ட நினைக்கும்போது, அதனால் எந்தவிதமான குழப்பங்களோ, கருத்து வேறுபாடுகளோ ஏற்படாத வகையில் அனைத்துத் தரப்பினரும் மனமுவந்து வரவேற்கத்தக்க நிலையில் செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு.க.

17-4-2013

3737. இந்தக் கூட்டுறவுத் தேர்தலில் எல்லாக் கட்சிகளும் எதிர்பார்ப்பது என்ன?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறுகிறதாம். அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. அரசு எவ்வாறு செயல்படும் என்பதை முன்கூட்டியே ஆலோசித்து எதிர்பார்த்தே, திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டுறவுத் தேர்தல்களில் பங்கேற்பதில்லை என்று முடிவெடுத்து ஏற்கனவே அறிக்கை மூலமாக வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டது. இருந்தாலும் அ.தி.மு.க. அரசு கூட்டுறவுத் தேர்தல்களை ஓரளவிற்காக வாவது முறையாக நடத்த முற்படும் என்று நினைத்து வேறு சில கட்சிக்காரர்களும், எந்தக் கட்சியையும் சாராதவர்களும் முடிவுக்கு வந்து, இந்தத் தேர்தலில் ஆங்காங்கு போட்டியிடுகிறார்கள்.

ஆனால் அவர்கள் அ.தி.மு.க. அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளினால் என்ன பாடுபடுகிறார்கள் என்பதைப் பற்றியும், ஆளுங்கட்சியே இந்தக் கூட்டுறவுத் தேர்தலில் ஆங்காங்கு உட்கட்சிப் பூசலால் குடுமிபிடிச் சண்டையில் ஈடுபட்டு வருவதைப் பற்றியும் அன்றாடம் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. அதைப்பற்றி நானும் இதுவரை இரண்டு மூன்று முறை எழுதிவிட்டேன் என்றாலும், தொடர்ந்து ஆளுங் கட்சியினர் நடத்தும் அதிகாரச் சேட்டைகளினால் விளைந்துள்ள அநியாயங்களைப் பற்றி நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இங்கே ஓரளவிற்குத் தொகுத்துள்ளேன்.

16-4-2013 நாளிட்ட "தீக்கதிர்" நாளேட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் விடுத்த அறிக்கையில், "தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்கு நடந்து முடிந்துள்ள இரண்டு கட்டத் தேர்தல்களில் பரவலாக நடைபெற்ற ஆளுங்கட்சியினரின் அத்துமீறல் நடவடிக்கைகளைக் கண்டித்தும், தேர்தல் ஆணையம் வெறும் பார்வையாளராக

இருப்பதை விமர்சித்தும், கூட்டுறவுத் தேர்தலை ஜனநாயக முறையில் நேர்மையாக நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும் எனவும் ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தியுள்ளது. சென்னையில் மூன்றாம் கட்டத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நடைபெற்றபோது, பரவலாக, பல இடங்களில், ஆளுங்கட்சி தவிர, இதரக் கட்சிகள், அமைப்புகள், தனி நபர்கள் மனுத் தாக்கல் செய்ய அனுமதிக்கப்படவில்லை. காவல்துறை பல இடங்களில் ஆளுங்கட்சியின் அராஜகத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டதைப் பார்க்கமுடிந்தது. ஆளுங்கட்சியினர், வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய அலுவலகங்களில் கதவைப் பூட்டிக் கொண்டு மற்றவர்களை உள்ளேவிட மறுப்பது, கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டு சைக்கிள் செயின், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் அச்சுறுத்துவது, தாக்குவது போன்ற சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டனர். வேட்பு மனுக் கொடுக்க உள்ளேயே போக முடியாத நிலையில், தாக்குதல்களையும் எதிர் கொண்டு, ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டப் போராடிய தோழர்கள் சுற்றி வளைக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டனர். தியாகராயர்நகர் கூட்டுறவு வங்கி, பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கம், போக்குவரத்துக் கழகப் பணியாளர் கடன் சொசைட்டி, அண்ணா தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், நொச்சிக் குப்பம் மீனவர் சொசைட்டி, மீனவர் கடன் கூட்டுறவுச் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்களில் இதுதான் நிலைமையாக இருந்தது. இந்தப் படுமோசமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

கூட்டுறவுத் தேர்தல் குறித்து வந்த மற்றொரு செய்தி - அ.தி.மு.க.வினர் மற்ற வேட்பாளர்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்ய அனுமதிக்கவில்லை; அ.தி.மு.க. உறுப்பினர்கள் மட்டுமே அனைத்து இடங்களிலும், வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர். ஆளுங்கட்சியினரின் அராஜகப் போக்கைக் கண்டித்து சாலை மறியல் நடைபெற்றது. சாலை மறியல் செய்தோர் மீது காவல் துறையினர் தடியடி நடத்திக் குண்டுக் கட்டாகக் கைது செய்தனர். தியாகராயர் நகர், தேனாம்பேட்டை, ராயப்பேட்டை, தாம்பரம், நொச்சிக்குப்பம், பல்லவன் இல்லம், பிராட்வே ஆகிய

இடங்களிலும் அராஜகங்கள் நடந்தன. இதை எதிர்த்து சி.ஐ.டி.யு. சார்பில் ஆங்காங்கே மறியல் போராட்டங்கள் நடந்தன.

கூட்டுறவுத் தேர்தல் குறித்து சி.ஐ.டி.யு. சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "அண்ணா தி.மு.க. தொழிற்சங்கம் கட்டை, சைக்கிள் செயின், கத்தியுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரவுடிக் கும்பலுடன் வந்து வேட்புமனுத் தாக்கல் செய்ய வரிசையில் நின்றிருந்த சி.ஐ.டி.யு. வேட்பாளர்களைத் தாக்கி அலுவலகத்தில் இருந்து பகிரங்கமாக வெளியேற்றினர்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களில் சில இடங்களில் அ.தி.மு.க.வினரே இரு குழுக்களாகப் பிரிந்து மோதிக் கொண்டனர். உதாரணமாக திருவள்ளூரில் அ.தி.மு.க. மாவட்டக் கவுன்சிலர் குமார், அ.தி.மு.க. முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயராமன் ஆகியோர் தலைமையில் 24 பேர் தனித்தனியாக வேட்பு மனுத்தாக்கல் செய்தனர். தேர்தலின்போது "பூத்" முகவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, பின்னர் அடிதடியில் தொடர்ந்து, ஒருவருக்கொருவர் கல் வீசி, பலர் காயமடைந்தனர். இன்ஸ்பெக்டரின் காரின் கண்ணாடி மற்றும் நான்கு பைக், ஒரு ஆட்டோ அடித்து நொறுக்கப்பட்டது.

கூட்டுறவுத் தேர்தலில் போட்டியிட்ட கோவிந்தராஜ் என்பவர் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் சோளிங்கர் - சித்தூர் சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

திருப்போரூர் ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் நடந்த தேர்தலைப் படம் பிடிக்கச் சென்ற பத்திரிகையாளர்களை விரட்டி விட்டு, பின் தேர்தல் முடிவுகளை அறிவித்தார்கள்.

கோவையில் காந்திபுரம் ஏ.டி.டி. காலனிப் பகுதியில், பெண்கள் ஆடைத் தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. அங்கே 300க்கும் மேற்பட்ட பெண் வாக்காளர்களுக்கு வாக்களிக்கவே வாய்ப்பு வழங்கப்படவில்லை. அவர்கள் தேர்தல் நடத்துவோரிடம் வாக்குவாதம் செய்தும் பயன் ஏற்படவில்லை.

அரியலூர் உதயநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் வாக்குப் பதிவு நடந்து கொண்டிருந்தபோது மர்ம நபர்கள் சிலர் உள்ளே புகுந்து, வாக்குச் சீட்டுக்களைப்

பறித்துக் கிழித்தெறிந்திருக்கிறார்கள். இதற்காக அங்கே மறியல் நடைபெற்றது.

அணைக்குடம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத் தேர்தலில் மர்ம நபர்கள் வாக்குச் சாவடிக்குள் புகுந்து தேர்தல் அதிகாரி பாண்டியனிடம் இருந்து வாக்குச் சீட்டைப் பறித்துக் கிழித்தெறிந்திருக்கிறார்கள்.

கோடாலிகருப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத் தேர்தலில் ஆளுங்கட்சியினர் வாக்குச்சாவடிக்குள் நுழைய முயன்று தகராறு நடைபெற்றுத் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

16-4-2013 தேதிய "தினத்தந்தி" நாளிதழிலேயே; திண்டுக்கல்லில் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தலில் நேற்றைய தினம் வேட்பு மனுத்தாக்கல் செய்தபோது மோதல் வெடித்து, அ.தி.மு.க.வினரும், சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத் தினரும் ஒருவருக்கொருவர் கம்புகளால் தாக்கிக்கொண்ட போது எடுத்த புகைப்படமும், அதிலே ரத்தம் சொட்டச் சொட்ட காயமடைந்து செல்கின்ற புகைப்படமும் வெளியிடப்பட்டுள்ளன. காவல் துறையினர் முன்னிலையிலேயே ஒருவருக்கொருவர் இவ்வாறு தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கல் வீச்சு மற்றும் உருட்டுக்கட்டைத் தாக்குதலில் மணிகண்டன், அபிமன்யூ, அன்வர், மாசாணம், முகமது அலி ஜின்னா, சின்னப்பராஜ், முத்துசாமி, சதீஷ்குமார், மாணிக்கம், ஜெயக்குமார், ராஜா, சவரிநாதன் ஆகியோர் காயமடைந்ததாகவும், திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் "தினத்தந்தி"யே செய்தி வெளியிட்டுள்ளது.

16-4-2013 அன்று "தினமலர்" நாளிதழில் வெளி வந்த செய்தியில், கூட்டுறவுச் சங்கத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்ய, தியாகராயர் நகரில் உள்ள தியாகராயர் நகர் கூட்டுறவு அலுவலகத்துக்கு வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும், அ.தி.மு.க. வினருக்கும் இடையே மோதல் நடந்த சம்பவம் புகைப்படத்தோடு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் சென்னை காசிமேட்டில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த இரண்டு குழுக்களிடையே

ஏற்பட்ட தகராறில் ஒரு பிரிவினர் சாலை மறியலில் ஈடுபட்ட புகைப் படத்தோடு கூடிய செய்தியையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

16ஆம் தேதியன்று பேரவையில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பாகவும், புதிய தமிழகம் சார்பாகவும் கூட்டுறவுத் தேர்தல் முறைகேடுகள் குறித்து பிரச்சினை எழுப்ப முயன்றபோது, கட்சிச் சார்பற்ற முறையில் நடுநிலையோடு பேரவையை நடத்திச் செல்லும் நமது சட்டமன்றப் பேரவைத் தலைவர், "கூட்டுறவுத் துறை மானியத்திற்கு அமைச்சர் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டார்; மீண்டும் கூட்டுறவுத் தேர்தல் பற்றிப் பேச அனுமதிக்க முடியாது" என்று பெருந்தன்மையோடு கூறி விட்டார். மின் துறை அமைச்சரோ கூட்டுறவுத் தேர்தலில் ஏற்பட்ட மோதல் காரணமாகத் தங்களுடைய கட்சியினர் ஐந்து பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக அவையிலே தெரிவித்திருக்கிறார். அதிலிருந்தே கூட்டுறவுத் தேர்தலில் எந்த அளவிற்கு மோதல்கள் முற்றி வன்முறை வெடித்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பேரவைத் தலைவர் அனுமதி மறுத்த காரணத்தால் கம்யூனிஸ்ட் கட்சிகளும், புதிய தமிழகம் கட்சியும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

இந்த முறையிலேயே தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்புகளுக்கு இரண்டு கட்டத் தேர்தல்களை முடித்துவிட்டனர். அந்தத் தேர்தல்களிலும் அ.தி.மு.க. அனைத்துவிதமான அத்துமீறல் - சட்ட விதிமுறைமீறல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு, ஜனநாயகப் படுகொலையை நடத்தி, அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமே அனைத்துப் பதவிகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்துவதற்காக அ.தி.மு.க. அரசின் சார்பில் அமைக்கப்பட்ட தேர்தல் ஆணையம் இந்தக் கோமாளிக் கூத்துக்களையெல்லாம் அன்றாடம் அமைதியாக வேடிக்கை பார்த்து ஊக்குவித்து வருகிறது.

இவ்வளவுக்கும் பிறகு இனியாவது கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் தலையிட்டு, அராஜகமாகவும், சட்ட விரோதமாகவும் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் அனைத்தையும் ரத்து செய்து ஆணையிட வேண்டும்; ஜனநாயக ரீதியாக வேட்பு மனுத் தாக்கல் செய்ய விரும்பும் அனைவரிடமிருந்தும் அவைகளைப்

பெற்று, அதன் பிறகு தேர்தல் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்; அதிகார மமதையில் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஜனநாயகத்திற்கு விரோதமாக ஆட்டம்போட்ட ஆளுங்கட்சியினர் மீதும், அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய காவல் துறையினர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; அப்போதுதான் கூட்டுறவுத் தேர்தல் முறையாக நடைபெற்றது என்று நாட்டிற்கு அறிவிக்க இயலும்.

இதே எண்ணத்தைத்தான் தமிழகத்திலுள்ள அனைத்து எதிர்க்கட்சியினரும் வெளியிட்டுள்ளனர். இதைத்தான் தமிழ்நாட்டு மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இல்லாவிட்டால் இந்தக் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்தியதில் எந்தவிதமான அர்த்தமும் இருக்க முடியாது.

அன்புள்ள,

மு.க.

18-4-2013

3738. மீண்டும், மீண்டும் விடுத்திடும் வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். பிட்டாவைக் கொலை செய்வதற்காக, 1993ஆம் ஆண்டு டெல்லியில் கார் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் பிட்டா உயிர் தப்பிய போதிலும், ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை நடத்திய, தேவேந்தர்பால் சிங் புல்லார் என்பவர், ஜெர்மனி நாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டார். 1995ஆம் ஆண்டு, புல்லார் ஜெர்மனியில் இருந்து நாடு கடத்தப்பட்ட பிறகு, 2001ஆம் ஆண்டு விசாரணை நீதிமன்றம், புல்லாருக்குத் தூக்குத் தண்டனை விதித்தது. டெல்லி செஷன்ஸ் நீதிமன்றம் 2002ஆம் ஆண்டு அந்தத் தண்டனையை உறுதி செய்தது. இதற்கிடையே புல்லாருக்கு மனநிலை பாதிக்கப்பட்டது. கருணை அடிப்படையில் தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்று புல்லார், 2003ஆம் ஆண்டு குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு அனுப்பிட, 2011ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராக இருந்த பிரதிபா பாட்டீல் அதனை நிராகரித்தார்.

கருணை மனுவின் மீது முடிவெடுக்கக் கால தாமதமானதால், தனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டுமென புல்லார், உச்ச நீதிமன்றத்தில் 2011 செப்டம்பரில் மனு தாக்கல் செய்து, கடந்த 12-4-2013 அன்று அந்த மனு நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து பஞ்சாப் மாநிலம் முழுவதிலும் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. மனநிலை பாதிக்கப்பட்ட புல்லாருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கக்கூடாதென சில மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை எழுப்பியுள்ளன. பஞ்சாப் மாநில ஆளுங்கட்சியான சிரோன்மணி அகாலி தளம் சார்பில் இந்தக் கருத்து வலியுறுத்தப்படுகிறது. அந்த மாநில முதலமைச்சர், பிரகாஷ்சிங்பாதல் அவர்களும், அவர் மகனும் துணை முதலமைச்சருமான சுக்பீர்சிங் அவர்களும் பிரதமர் மன்மோகன்

சிங் அவர்களையும், மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே அவர்களையும் நேரில் சந்தித்து, புல்லாருக்குக் கருணை காட்டும்படி வலியுறுத்தியுள்ளனர். இந்தப் பிரச்சினை காரணமாகப் பஞ்சாபில் கொந்தளிப்பான நிலை நிலவுவதாகவும், புல்லாருக்குக் கருணை காட்டுமாறும், அதன் மூலம் மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட உதவிடுமாறும் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சர் ஷிண்டே அவர்களிடம் செய்தியாளர்கள் இதைப் பற்றிக் கேட்டபோது, "பஞ்சாப் முதல் அமைச்சரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்" என்று கூறியிருக்கிறார். மத்திய அமைச்சரின் இந்த அறிவிப்பு மனித உரிமை ஆர்வலர்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற முதலமைச்சர் முதல் அந்த மாநில மக்கள் அனைவரும் ஒருமனதாகக் குரல் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே என்ன நிலைமை?

29-8-2011 அன்று நான் விடுத்த அறிக்கையில், "மனித உரிமைக்கும், மனிதாபிமானத்திற்கும் எதிரான தூக்குத் தண்டனை தேவையில்லை என்றும், அதனை எல்லா நாடுகளும் ரத்து செய்து விடலாமென்றும் கருத்துத் தெரிவிக்காதோர் யாரும் இல்லை. உயர்ந்தபட்சத் தண்டனையான தூக்குத் தண்டனைக்குப் பதிலாக - கொலைக் குற்றம் சாற்றப்பட்ட ஒரு கைதி - எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும் அந்தக் குற்றத்தை எண்ணி யெண்ணி தனக்குத்தானே வருந்துவதைவிடத் தூக்குத் தண்டனையால் பெரிய பயன் ஒன்றும் விளைந்துவிடப் போவதில்லை என்பதால்; ஆயுள் தண்டனையாக மாற்றி அமைத்திட வேண்டும். கொலைக் குற்றத்தில் ஒரு மனிதன் ஈடுபட்டிருப்பானேயானால், அவன் அதற்காக ஆயுள் முழுவதும் வருந்தி வாடுவதுதான்; தூக்குத் தண்டனையைவிடக் கடுமையானது என்பது மட்டுமல்ல - அந்த மனிதன் திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பினை வழங்கி, வழி வகுத்திடக் கூடியதுமாகும். மத்தியப் பேரரசுக்கு நாம் எழுதிய மனமுருக்கும் கடிதங்களும் - பிரதமர் மற்றும் இந்தியத் தலைவர்கள் அனைவரிடமும் நேரில் எடுத்து வைத்த கோரிக்கைகளும் யாரும் அறியாதது அல்ல. தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப் போவதாகக் கூறப்படும் சாந்தன், பேரறிவாளன், முருகன்

ஆகிய மூவரின் உயிர்களைக் காத்தருள வேண்டுமென்றும் - இன்று நம்மிடையே இல்லாத இளந்தலைவர் ராஜீவ் காந்தியே இருந்தால்கூட; இந்தச் சூழலில் உண்மைத் தமிழர்களின் குரலுக்கு மதிப்பளித்து, "மறப்போம்; மன்னிப்போம்" எனும் அண்ணாவின் பொன்மொழிக்கேற்ப இந்த மூவரின் உயிரையும் அந்த மாமனிதர் காப்பாற்றியிருப்பார் என்பதை எண்ணி - மரண தண்டனையை மாற்றியமைத்து; அவர்கள் உள்ளபடியே குற்றம் புரிந்திருந்தால்; அதற்காக மனம் வருந்தும் நிலையில் அவர்கள் இருபதாண்டு காலத்திற்கு மேல் சிறையில் இருந்ததையே ஆயுள் தண்டனையைவிட அதிகமானதெனக் கருதி - தூக்குத் தண்டனையை ரத்து செய்தால் - இந்த மனித நேயச் செயலை மனமாரப் புகழ்ந்து மகிழக் கூடிய இனமாகத் தமிழினம் இருக்கும் என்று எடுத்துக்கூறி இந்த மூவரையும் மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று; தூக்கு மேடையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்; அதன் பிறகு எத்தகைய தூய வாழ்வினை மேற்கொண்டு அதனைத் தொடருகிறார்கள் என்பதை அறிந்தவன் என்ற முறையிலும், அவர்களின் விடுதலைக்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவன் என்ற அடிப்படையிலும்; மத்திய, மாநில அரசுகளை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்த மூவரையும் விடுவிப்பதற்கான தீர்மானத்தைப் பேரவையில் நிறைவேற்றிய போது ஜெயலலிதா தனது உரையில், அரசியல் அமைப்புச் சட்ட விதி 161இன் கீழ் மாநில முதலமைச்சருக்கு இதில் அதிகாரம் இல்லை என்றும், மாநில கவர்னருக்கும் அதிகாரம் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார். இன்று வரை ஜெயலலிதா அதே கருத்தைத்தான், அதாவது இதிலே மாநில முதல் அமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். ஆனால் தமிழகச் சட்டப் பேரவையில் 30-8-2011 அன்று அவர் 110வது விதியின்கீழ்ப் படித்த அறிக்கையில், கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் 21-4-2000 அன்று ஒப்புதல் அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். அதே முறையில்தான் இந்த மூன்று பேரின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற அக்கறையுடன் தமிழக அரசும், ஜெயலலிதாவும் தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநரின் பரிந்துரைக்கு அனுப்ப வேண்டுமென்று நானும், தமிழகத்திலே

உள்ள வேறு சில கட்சிகளும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம்.

அதைப் போலவே, வீரப்பனின் நண்பர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வருக்கும் கருணை காட்டி, தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அமைத்திட வேண்டுமென்றும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறோம். ஞானப்பிரகாசம், சைமன், மீசை மாதையன், பிலவேந்திரன் ஆகிய நான்கு பேர் மீது வழக்கு விசாரணை நடத்திய மைசூர் தடா நீதிமன்றம் ஆயுள் தண்டனைதான் அவர்களுக்கு விதித்தது. ஆனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்த காரணத்தால்தான், உச்ச நீதிமன்றம் இந்த நான்கு பேருக்கும் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை, தூக்குத் தண்டனையாக மாற்றி 2004ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. தீர்ப்பளித்து ஒன்பதாண்டு காலமாக இந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. இதற்கிடையே அவர்கள் நான்கு பேரும் இந்தியக் குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு அனுப்பினார்கள். அந்தக் கருணை மனுவினை இந்தியக் குடியரசுத் தலைவர் நீண்ட கால நிலுவைக்குப் பிறகு, கடந்த 11-2-2013 அன்று நிராகரித்து விட்டார்.

அந்த நான்கு பேரின் சார்பாகத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தண்டனையை நிறைவேற்றத் தடை விதிக்கக்கோரியும் உச்ச நீதிமன்றத்தில் 16-2-2013 அன்று மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். மேலும் அந்த மனுவில் தங்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் சார்பில் வழக்கறிஞர்கள் காலின் கன்சால்வஸ், சமிக் நாராயண் ஆகியோர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. அல்டமாஸ் கபீர் அவர்களின் இல்லத்திற்கே சென்று இந்த மனுவினை தாக்கல் செய்து, உடனடியாக அதன் மீது விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றம் இந்த நால்வர் மீதான முடிவையும் தள்ளிவைத்துள்ளது.

2007 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மன்றம் தூக்குத்தண்டனைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை முன் வைத்தபோது, அதை 104 நாடுகள் ஆதரித்துக் கையெழுத்திட்டன;

இந்தியா உட்பட 39 நாடுகள்தான் அதை எதிர்த்து வாக்களித்தன; ஐ.நா. தீர்மானத்தை யொட்டி உலகின் 90 சதவிகித நாடுகள் தூக்குத் தண்டனையை ரத்து செய்துவிட்டன. அந்தப் பெரும்பான்மையுடன் இந்தியாவும் இணைய வேண்டாமா?

குற்றவாளிகள் தப்பித்தாலும், நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்பதை பொறுப்பிலே உள்ளவர்கள் மனதிலே கொண்டு, இந்த நால்வரின் தூக்குத் தண்டனையையும், மற்றும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனையையும் புல்லாரின் தண்டனையை மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்போது; இணைத்துப் பரிசீலித்து, தண்ட னையை மாற்றி அமைத்திட வேண்டும் என்றும், பொதுவாக தூக்குத் தண்டனையையே அறவே ரத்து செய்ய வேண்டுமென்றும் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி அதற்கு வழிகாண மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

19-4-2013

3739. மறக்க முடியாத மாமணிகள் - இருவர்!

கலைஞர் இரங்கல் கடிதம்!

உடன்பிறப்பே,

கடந்த மாதம் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுக் குழுக் கூட்டம், 23-3-2013 அன்று அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தையொட்டி வேறு ஒரு நிகழ்ச்சிக்கு தேதி வாங்குவதற்காக தொ.மு.ச. பேரவை யின் தலைவர் செ. குப்புசாமி, சண்முகம், ரெத்தினசபாபதி மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் என்னைச் சந்தித்து கேட்ட போது உடனடியாக ஒப்புக் கொண்டேன். பொதுக் குழுவின் சிறப்புக் கூட்டத்திலும் கலந்து கொண்டேன். அப்போது எனக்கு அருகே அமர்ந்திருந்த அந்த உருவம், செ. குப்புசாமி இன்று இல்லையாம்! நேற்றிரவு அந்தச் செய்தி என்னிடம் தெரிவிக்கப்பட்ட போது துடித்துப் போய்விட்டேன். அவரைப் பற்றி எத்தனை எத்தனையோ நினைவுகள்.

மத்திய அரசில் ரயில்வே துறையில் வேலை கிடைப்பது என்பது அந்தக் காலத்தில் மிகவும் அரிது. ஆனால் குப்புசாமி அவர்கள் மத்திய ரயில்வேயில் ஸ்டேஷன் மாஸ்டராகப் பணி யாற்றிக் கொண்டிருந்தவர். கழகத்தின் மீதுள்ள பற்றுக் காரணமாக அந்த அரசுப் பணியை உதறிவிட்டு; பிற்காலத்தில் தொ.மு.ச. பேரவைக்கு தலைவராக வருவார், நாடாளுமன்ற உறுப்பினராக வருவார், என்றெல்லாம் எதிர்பார்க்காத நிலையில் அந்தப் பொறுப்புகளுக்கு வந்தவர். அவர் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த காலத்திலிருந்து அவரை நான் நன்கறிவேன். பண்ருட்டியில் கழகக் கூட்டம் எங்கே நடந்தாலும், அதிலே கலந்து கொள்ளும் சிறப்புப் பேச்சாளர்களுக்கு குப்புசாமி தன் வீட்டிலிருந்துதான் சாப்பாடு கொண்டு வருவார்.

தொ.மு.ச. பேரவைப் பொதுக்குழுவில் அண்மையில் நான் பேசிய போது, குப்புசாமி அவர்கள் இவ்வளவு விரைவில் நம்மை

விட்டுப் பிரிந்து விடுவார் என்று நினைக்க முடியாத நிலையில், கூட்டத்தின் தொடக்கத்தில் அவரைப் பற்றித்தான் நீண்ட நேரம் பேசினேன். மத்திய அரசில் ஸ்டேஷன் மாஸ்டராக அவர் பணியாற்றிய அந்தக் காலத்திலும், அதற்குப் பிறகும், திராவிட இயக்கத்திலே தந்தை பெரியாருடைய கொள்கைகளிலே ஈடுபாடு கொண்டு தொடர்ந்து அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பற்றும் பாசமும் கொண்டு - அதே

வழியில் என்னிடத்திலும் அன்பு கொண்டு பணியாற்றி வந்தவர். அவருக்கும் எனக்கும் ஏறத்தாழ ஓரிரு வயதுதான் வித்தியாசம் இருக்க முடியும்.

கழகத்தின் தலைமை அலுவலகம் ஓமந்தூரார் வளாகத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த போது, குப்புசாமி தலைமைக் கழகத்தின் செயலாளர்களில் ஒருவர். அரசு அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதாலோ என்னவோ காலை 9 மணிக்கெல்லாம் அலுவலகத்திற்கு வந்து விடுவார். அவர் அமர்ந்திருக்கும் இடத்திற்கும், நாங்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்கும் நீண்ட தூரம். எனினும் அன்றாடம் இருபது தடவைகளாவது அதற்கும் இதற்கும் நடந்து வந்து கொண்டே இருப்பார். நான் அலுவல் காரணமாக எவ்வளவு கடிந்து கொண்டாலும், எதுவுமே நடக்காத மாதிரி பொறுமையாக அடுத்த கணமே பதில் சொல்லுவார்.

குப்புசாமி அவர்களுடைய வாழ்க்கையில் - அவருடைய சொந்த வாழ்க்கையிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி, அரசியல் வாழ்க்கையிலும் சரி, எத்தனையோ சோதனைகள்! அந்தச் சோதனைகளை எல்லாம் சாதனைகளாக ஆக்கிக் கொண்டு, அதுபற்றி எந்த விதமான "லவலேசம்" என்று சொல்வார்களே, அதாவது எந்தவிதமான கவலையும் கொள்ளாமல், தன்னுடைய பணியைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டே இருப்பவர் அவர்.

இந்த இயக்கத்திலேயே அவர் உருவாக்கி, இன்றளவும் பாடுபட்டு, பணியாற்றிக் கொண்டிருந்த தொழிற் சங்கப் பாசறையிலே கூட, அவரைப் பற்றிய கருத்து மாறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் வருவதுண்டு. அதையெல்லாம் அவர் எப்படிச் சமாளித்தார், எப்படித் தாங்கிக் கொண்டார், எப்படி அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இதுவரைப் பணியாற்றிக் கொண்டிருந்தார் என்பதையெல்லாம் நான் எண்ணும்போது, அவர்

எனக்குத் தோழர் அல்லவா? எனக்கு நண்பர் அல்லவா? ஆகவே எனக்குள்ள சோதனைகளை நான் எண்ணிக் கவலைப்படுவதா அல்லது குப்புசாமி போன்றவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளைப் பற்றிக் கவலைப்படுவதா என்று சீர்தூக்கிப் பார்க்கும்போது, அந்தச் சோதனை பெரிதா? இந்தச் சோதனை பெரிதா என்ற கேள்விக்கே இடமில்லாமல் இரண்டு சோதனைகளும் பொதுவாக உள்ள சோதனைகள்தான், இந்த இயக்கத்திலே உழைப்பவர்களுக்கு உருவாகிற சோதனைகள்தான் என்றுதான் அவரும் எண்ணி, இந்த இயக்கத்தைக் காத்து வந்தார்.

1977ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தொ.மு.ச. பேரவையின் தலைவராக பொறுப்பேற்றுப் பணியாற்றியவர் தோழர் செ.குப்புசாமி. தொ.மு.ச. பேரவை ஒரு மத்தியத் தொழிற் சங்கமாக 1970ஆம் ஆண்டு முதல் செயல்பட்டாலும், மத்திய அரசின் மத்தியத் தொழிற் சங்கத்துக்குரிய தகுதியைப் பெற முடியாமல் இருந்த நிலையை மாற்றியமைத்து குப்புசாமி அவர்கள் எடுத்து வந்த தொடர் முயற்சிகளினாலே 2008ஆம் ஆண்டில் அந்த "தகுதி" தொ.மு.ச. பேரவைக்குக் கிடைத்தது. அதனாலேதான் தொ.மு.ச. பேரவை இந்தியத் தொழிலாளர் நிலைக் குழு, இந்தியத் தொழிலாளர் மாநாடு மற்றும் சர்வதேசத் தொழிலாளர் மாநாடுகளிலும் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தொ.மு.ச. பேரவை 13 மாநிலங்களில் இணைப்புச் சங்கங்களைத் தொடங்குவதற்கும், சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை 15 லட்சத்திற்கும் மேல் உயர்த்துவதற்கும் காரணகர்த்தாவாக இருந்து அரும்பணியாற்றிய அருமை உடன்பிறப்பு குப்புசாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற செய்தி வேதனையை அளிக்கின்றது. நம் விழி நீரைப் பெருக்குகின்றது!

உழைப்பே உலகத்தின் உன்னதமான மூலதனமாகும். உழைப்பு விற்பனைக்குரிய பொருளல்ல. உழைப்பைத் தருபவன் ஒரு மனிதன். பெறுபவனும் மனிதன். மனிதர்கள் அனைவரும் சம நிலையிலே உள்ளவர்கள். யாரும், யாருக்கும் தாழ்ந்தவர்கள் இல்லை - என்ற உயரிய எண்ணங்களோடு வாழ்நாள் முழுதும் பணியாற்றி மற்றவர்களுக்கும் அந்த எண்ணத்தை ஏற்படுத்தியவர்தான் குப்புசாமி.

வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த தொகுதி என்ற காரணத்தால் கழகத்தின் சார்பில்

குப்புசாமி வேட்பாளராக நிறுத்தப்பட்டு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றார். அதற்கடுத்த முறை, அவர் உடல் நிலை கருதி, அந்தத் தொகுதியை வேறொருவருக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது, அதைப் பெருமனதோடு ஏற்றுக் கொண்டு, எந்தவிதமான மனக்கிலேசமும் கொள்ளாமல், வடசென்னை நாடாளுமன்ற கழக வேட்பாளரின் அறிமுகக் கூட்டத்திலேயே கலந்து கொண்டார். அவருக்குக் கழகத்தின் சார்பில் தரப்பட்ட எல்லாப் பணிகளையும் கழகத்தின் வளர்ச்சிக்காகவே ஆற்றினார். மறைகின்ற நாள் வரை, கழகம், கழகம், கழகம் என்றே பாடுபட்ட மறக்க முடியாத மாமனிதர்தான் மறைந்த நண்பர் செ.குப்புசாமி. அவர் மறைந்தாலும், கழகம் இருக்கின்ற வரையில், தொ.மு.ச. பேரவை இருக்கும் வரையில் செ. குப்புசாமியின் நினைவுகள் நீடிக்கும். வாழ்க குப்புசாமி.

★ ★ ★

அடுத்து, "துன்பம், துணையோடு வரும்" என்பார்களே, அது போல நேற்றையதினம் நமக்குக் கிடைத்த மற்றொரு துன்பச் செய்தி, "தினத்தந்தி" நாளிதழின் அதிபரும், இந்திய ஒலிம்பிக் சங்க முன்னாள் தலைவருமான டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் நேற்றிரவு 10 மணி அளவில் மறைந்துவிட்டார் என்ற செய்தியாகும்.)

தமிழகத்திலே "நாம் தமிழர் இயக்கம்" கண்டு, தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் பெரிதும் பாடுபட்டவரும், தமிழகத்திலே உள்ள சாதாரண, சாமான்யர்களுக்கு நாளேடுகளைப் படித்து நாட்டின் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விழைவினை ஏற்படுத்தியவரும், பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு தமிழகத்திலே ஆட்சி அமைத்த போது, பேரவைத் தலைவராகப் பணியாற்றியவரும், அண்ணாவின் மறைவுக்குப் பிறகு 1969இல் என் தலைமையிலான அமைச்சரவையில் கூட்டுறவுத் துறை, வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்து சீரியப் பணிகளை ஆற்றியவருமான சி.பா. ஆதித்தனார் அவர்களின் இளைய மைந்தர்தான் நண்பர் சிவந்தி ஆதித்தன். எனக்கு வாய்த்த உயிர் நண்பர்களில் ஒருவராக சிவந்தி அவர்கள் திகழ்ந்தார்கள்.

இன்னும் சொல்லப்போனால் நான் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை என்னைச்

சந்தித்து தமிழகத்தின் அரசியல் நிலை, இந்தியாவின் அரசியல் நிலை ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்வதோடு, அவர் தன்னுடைய சொந்த வாழ்க்கை, குடும்பம் பற்றியெல்லாம் என்னிடம் அளவளாவிடுவார். அவர் கடந்த சில வாரங்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையிலே நினைவில்லாத நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியினை அறிந்ததும், எனக்குத் தெரிந்த பிரபல மருத்துவர் தேவராஜ் அவர்களைத் தொடர்பு கொண்டு, உடனே சிவந்தி அவர்களைப் பார்த்து விட்டு, நான் வந்து காண முடியுமா என்று கேட்கச் சொன்னேன். மேலும் கழகப் பொருளாளர் தம்பி தளபதி ஸ்டாலினை யும் நேரில் அனுப்பி பார்த்து வரச் செய்தேன் ஆனால் சிவந்தி அவர்கள் நினைவிழந்த நிலையில் இருப்பதாகவும், யாரையும் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை என்றும் கூறிய காரணத்தால், நான் நேரில் சென்று மருத்துவமனையில் பார்க்க இயலவில்லை.

எப்படியும் உடல் நலம் ஓரளவுக்குத் தேறி நினைவுக்கு வந்து விடுவார், நேரில் சென்று காணலாம் என்று எண்ணியிருந்த நிலையில், அவருடைய மறைவுச் செய்தி கிடைத்து திடுக்கிட்டுப் போனேன்.

அவரை இழந்து வாடும், அவருடைய அருமை மைந்தன், அன்புத் தம்பி பாலசுப்ரமணியத்திற்கும், அவரின் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், "தினத்தந்தி" உள்ளிட்ட அவரது நிறுவனங்களில் பணியாற்றும் அருமைத் தோழர்களுக்கும், குறிப்பாக அவரைப் பெரிதும் நம்பியிருந்த அந்தச் சமுதாயப் பெருமக்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறக்க முடியாத மாமணிகள் இருவரின் மறைவுக்கு என் கண்ணீர் அஞ்சலி!

அன்புள்ள,

மு.க.

21-04-2013

3740. வருமுன் காப்பதா? வந்தபின் தவிப்பதா?

உடன்பிறப்பே,

சென்னை மாநகரம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் குடிநீர்ப் பஞ்சம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அ.தி.மு.க. அரசு குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் குடிநீர்த்திட்டங்களை 110வது விதியின்கீழ் அறிவிப்பதிலேயே காலத்தைச் செலுத்தி வருகிறது. அது என்னவோ? அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகமே காணாத வகையில் மின்வெட்டு. கிராமங்களில் மக்களால் வாழ முடியவில்லை. இந்த ஆண்டு விவசாயிகள் சாகுபடியே செய்யவில்லை, செய்தவர்களும் மகசூலைப் பெற வில்லை. காரணம், காவிரியில் சாகுபடிக்கான தண்ணீரை இந்த ஆட்சியினரால் பெற்றுத்தர இயலவில்லை! இதோ குடிநீர்ப் பஞ்சம் வந்துவிட்டது. மேட்டூர் வரலாறு காணாத அளவிற்கு வறண்டு கிடக்கிறது. காவிரி ஓடையாகக் காட்சி தருவதை புகைப்படம் எடுத்து ஏடுகளிலே வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் இதையெல்லாம் மறைத்துவிட்டு, "நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்க ஆயிரம் கோடி ரூபாயில் புதிய குடிநீர்த் திட்டம்" ஒன்றை முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் அறிவித்திருக்கிறார்.

22-2-2013 அன்று முதலமைச்சர் திறந்துவைத்த நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் வரலாறு என்ன தெரியுமா?

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கிட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்றைச் சென்னைக்கு அருகே அமைத்திட வேண்டுமெனத் திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தது. 2004இல் மத்தியில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, திராவிட

முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொண்டது.

அதன்பயனாக, 2004-2005ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் அளித்து உரையாற்றிய மத்திய நிதியமைச்சர்,

> "சென்னை மற்றும் கொரமண்டல் கடற்கரை நெடுகிலும் உள்ள நகரங்களுக்கு நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறனுடைய கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்"

- என அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, மத்திய அரசின் நிதி உதவியைப் பெற்றுச் சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துமாறு அன்றைய அ.தி.மு.க. அரசுக்குப் பலமுறை கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் இறுதிவரை அ.தி.மு.க. அரசு இருந்துவிட்டது.

2006இல் தமிழகத்தில் கழக அரசு அமைந்த பின், தேர்தல் அறிக்கையில் தந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்து 27.1.2008 அன்று மத்திய நிதியமைச்சர் அவர்களிடம் நானே நேரில் வழங்கி இத்திட்டத்திற்கான அனுமதியையும், நிதியுதவியையும் உடனே வழங்குமாறு கேட்டுக்கொண்டேன்.

இத்திட்டத்திற்கு மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் 908 கோடியே 28 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திடப் பரிந்துரை செய்தது. 2009 மார்ச் திங்களில் இத்திட்டத்திற்குரிய நிதியில் மத்திய அரசு தமிழக அரசுக்கு முதல் தவணையாக 300 கோடி ரூபாயை வழங்கியது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை 23.2.2010 அன்று துணை முதலமைச்சராக இருந்த தம்பி ஸ்டாலின் தொடங்கிவைத்தார். இத்திட்டத்திற்கான பணிகள் அனைத்தையும் 2011 டிசம்பருக்குள் நிறைவேற்றி முடித்திட

இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பணிகள் முடுக்கிவிடப்பட்டன. 2011 டிசம்பருக்குள் முடிந்திருக்க வேண்டிய பணிகள் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக ஓராண்டுக்குப் பிறகு இப்போதுதான் தொடக்க விழா நடைபெற்றிருக்கிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா படித்த அறிக்கையில் 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்றை மீஞ்சூரில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் அவருடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்டதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். அந்தத் திட்டம் பற்றிய ஒரு குறிப்பு வருமாறு :-

சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுவாரியம் மீஞ்சூர் நகரில் கடல்நீரைச் சுத்தப்படுத்தி, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது கோரியது. இரண்டு கம்பெனிகள் மட்டுமே டெண்டர் கேட்டனர். ஒரு கம்பெனி ரஷ்ய அரசுக்குச் சொந்தமானதும், உலகத்தரமுள்ள முக்கியமான ஒருசில கம்பெனிகளில் ஒன்றுமாகும். இந்தக் கம்பெனியின் பெயர் "மெசர்ஸ் க்ருனிசேவ் மாநில ஆய்வு மற்றும் தயாரிப்பு ஸ்பேஸ் சென்டர்" என்பதாகும். மற்றொரு போட்டியாளர் "மெசர்ஸ் மார்சன் கம்பெனி". இது ப்ரெஞ்சுக் கம்பெனியாகும். இந்த இரண்டாவது கம்பெனி முறையான ஒப்பந்தப் புள்ளி தாக்கல் செய்யாததால், ரஷ்யக் கம்பெனி மட்டுமே இறுதியான ஒப்பந்தக்காராராக மிஞ்சியது.

ரஷ்யக் கம்பெனி சார்பில் ரஷ்யாவிலிருந்து ஒரு குழு சென்னை வந்து தமிழக அரசின் இந்தத் துறை குறித்த அமைச்சர், அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்தபோது, நேரடியாக வாய்மொழி உத்தரவாக இந்த டெண்டரில் முன்வைப்புத் தொகை செலுத்துவது குறித்து விதிவிலக்கு தரப்படும் என்றும், வற்புறுத்தப்பட மாட்டாது என்றும் கூறியிருக்கிறார்கள்.

செப்டம்பர் 2003இல் ரஷ்யக் கம்பெனிக்கு; இந்த ஒப்பந்தப் புள்ளி முன்வைப்புத் தொகை கட்டாததாலும், தாங்கள் ஒருவர் மட்டுமே இந்த ஒப்பந்தப் புள்ளியைக் கோரியிருப்பதாலும்

கிடைக்காது என்ற தகவல் தெரிகிறது. ஒரேயொரு ஒப்பந்தப் புள்ளி என்பதைப் பொறுத்தவரையில் ஒப்பந்த ஆவணங்களிலோ அல்லது தமிழ்நாடு அரசின் ஒப்பந்தப் புள்ளி அளிப்பது குறித்த சட்டத்திலோ கொடுக்கக் கூடாது என்பதற்கான தடை எதுவும் இல்லை. இதையெல்லாம் குறிப்பிட்டுத் தனது மனுவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தக் கம்பெனி குடிநீர் வாரியத்திடம் கேட்டுக்கொள்கிறது. இதற்கு எந்தவிதமான பதிலும் வராத காரணத்தினால், இந்தக் கம்பெனி தமிழக முதல் அமைச் சருக்கு 15.9.2003 அன்றும், 19.9.2003 அன்றும் நேரடியாக இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு உதவிட வேண்டுமென்று எழுதுகின்றது.

முதலமைச்சருக்கு எழுதிய 15.9.2003 தேதியிட்ட கடிதத்தில், குடிநீர் வாரியத்தின் தவறான முடிவிற்கு உண்மையான காரணம் வேறாக இருக்குமென்று தெரிகிறது என்றும், குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் மூத்த அமைச்சர்களுக்குப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு சில பேர் பலமுறை தங்களுக்கும் மாஸ்கோவிற்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு 50 கோடி லஞ்சமாகக் கேட்டார்கள் என்றும், ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டபோது அவர்களும் மண்டபத்தின் வெளியே காத்திருந்ததோடு மீண்டும் அவர்களுடைய வேண்டுகோளை வலியுறுத்தினார்கள் என்றும் மாநில அரசு விரிவான விசாரணையை நடத்தினால் இது குறித்த விவரத்தைத் தரவும் தயாராக இருக்கிறோம் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

இந்தக் கடிதங்களுக்குப் பிறகு - எந்தவிதமான காரணமும் இன்றி இந்தக் கம்பெனிக்கு எந்தப் பதிலும் அளிக்காமல் திடீரென்று 22-9-2003 அன்று இதே பணிக்காகப் புதிய ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள ரஷ்யக் கம்பெனி சென்னை உயர் நீதிமன்றத்தில் இதுகுறித்து ரிட் மனு தாக்கல் செய்தது. அதனையேற்றுக் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் இப்பணிக்காக மறு ஒப்பந்தப் புள்ளி கோருவதற்குத் தடை விதித்தது. விசாரணையின்போது ரஷ்யக் கம்பெனியின் வழக்கறிஞர் 50 கோடி ரூபாய் லஞ்சம் கேட்டதற்கான டேப்ரிகார்டர் ஆதாரம் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்தார். விசாரணை தொடர்ந்து நடந்தது.

2006இல் கழக அரசு அமைந்தபிறகு, இத்திட்டம் குறித்து ஆய்வு செய்து இந்நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டிருந்த விலையில் ஓரளவுக்குக் குறைத்து, நிர்ணயம் செய்யப்பட்டு 25.2.2007 அன்று - உள்ளாட்சித் துறை அமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுப், பல்வேறு தொழில் நுட்பக் காரணங்களினால் திட்டத்தை நிறுவுதலில் தாமதம் ஏற்பட்ட போதிலும், சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் சோதனை இயக்கத்தினை இந்தத் துறையின் அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் இருந்த மு.க.ஸ்டாலின் 2.6.2010 அன்று தொடங்கிவைத்தார்.

இந்த நிலையில், பூண்டி ஏரிக்கு வரும் கிருஷ்ணா தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளில் நீர்மட்டம் தொடர்ந்து குறைகிறது. மேட்டூர் அணையும் வறண்டு விட்டது. இவற்றைப் பற்றியெல்லாம் அ.தி.மு.க. அரசு கவலைப்படாமல், 110வது விதியின்கீழ்த் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கின்றது. அந்தத் திட்டங்கள் எப்போது நடைமுறைக்கு வருவது? எப்போது தமிழ்நாட்டு மக்கள் குடிநீரை அருந்துவதோ? எப்படிப் போனால் என்ன? தமிழ்நாட்டு மக்களுக்குக் குடிநீர் கிடைத்தால் என்ன? கிடைக்காவிட்டால் என்ன? வெறும் காகித அறிவிப்பு, தமிழ் மக்களின் தண்ணீர் தாகத்தைத் தணித்திடுமா?

மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்கள் கடும் வறட்சியில் சிக்கித் தவித்து வருகின்றன. குளங்களிலும், கிணறுகளிலும் தண்ணீர் வற்றிவிட்டது. தண்ணீர்த் தேவை அதிகரிப்புடன் மின்வெட்டுப் பிரச்சினையும் இருப்பதால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். ஆங்காங்குக் குடிநீருக்காகத் தமிழகத்தில் பல இடங்களிலே போராட்டங்கள் நடக்கத் தொடங்கியுள்ளன. மக்கள் காலிக் குடங்களுடன் இரவுப் பகலாகக் கண்விழித்துத் திரிகின்ற நிலை காணப்படுகிறது. தண்ணீருக்காக கர்நாடகா, ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களைத் தமிழகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில்,

அந்த மாநிலங்களோடு தமிழக அரசு சுமூக உறவு கொள்ளாமல் பகை நோக்குடன் நடந்து கொண்ட காரணத்தால், தமிழகத்தில் இருக்கின்ற நீர்நிலைகள் இந்த நிலைக்கு ஆளாகிவிட்டதாகச் சமூக ஆர்வலர்கள் தமிழக அரசின் மீது குற்றச்சாட்டுக் கூறுகிறார்கள். காவேரி, வைகை, தாமிரபரணி போன்ற நதிகள் எல்லாம் மணல் திட்டுகளாகி விட்டன. மழை பெய்யாத நிலையில், மழை பெய்தபோது கிடைத்த நீரைப் பக்குவமாகச் சேர்த்து வைக்கும் பணியிலே அரசு அக்கறை காட்டவில்லை. ஆறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்து வருவதால் கடலோர மாவட்டங்களில் உள்ள நன்னீர் உப்பு நீராக மாறி, குடிநீருக்குப் பயனற்றதாக ஆகிவிட்டது.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை, மாநகரின் குடிநீர்த் தேவைக்கான செங்குன்றம், சோழவரம், செம்பரம்பாக்கம், பூண்டி நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 11.057 டி.எம்.சி. ஆகும். ஆனால் இந்த நீர்த் தேக்கங்களில் சுமார் 10 அடி வரை சேறும் வண்டல் மண்ணும் நிற்கிறது. இதனால் ஏரியின் முழுக் கொள்ளளவுக்குத் தண்ணீரைத் தேக்க இயலவில்லை. அதேபோல கண்டலேறுவிலிருந்து கிருஷ்ணா கால்வாயில்; வாய்க்கால் சீரமைக்கப்படாததால் வரும் நீர் வீணாகி ஆந்திராவில் உள்ள வயல்களிலும், வாய்க்கால்களிலும் தேங்கி விடுகிறது.

சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நாள் ஒன்றுக்கு 831 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதில் 766 மில்லியன் லிட்டர் தண்ணீர் வீட்டு உபயோகத்திற்காகவும், 28 மில்லியன் லிட்டர் தண்ணீர் மொத்த நுகர்வோர்களுக்கும், 37 மில்லியன் லிட்டர் தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள கிணறுகள் மற்றும் போர்வெல்களிலே இருந்து தண்ணீரைக் கொண்டு வந்து நகரிலே தனியார் லாரி உரிமையாளர்கள் பெரிய ஓட்டல்களுக்கெல்லாம் விற்பனைசெய்து வருகிறார்கள். தற்போது நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் லோடு நகரிலே விற்பனை ஆவதாகவும், போகப்போக இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

கிராமங்களிலே "தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது" என்பார்கள். ஆனால் இந்த ஆட்சியினர் அவ்வாறு வாலைப் பிடிக்கவும் முயற்சி செய்யாமல் காலத்தைக் கடத்திவிட்டார்கள். தமிழகத்தில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும் என்பதைப் பற்றி முன்கூட்டியே கணித்து, வருமுன் காத்திட வேண்டிய அ.தி.மு.க. அரசு, தண்ணீர்ப் பஞ்சம் வருவதற்குமுன் காத்திடத் தவறி விட்டது. தண்ணீர்ப் பஞ்சம் தற்போது வந்ததற்குப் பின்னரும், அதிலிருந்து மக்களைக் காத்திடும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், அதிகாரிகளை அழைத்துப் பேசுவதாகப் புகைப்படங்களை வெளியிட்டு, அன்றாடம் ஒன்றிரண்டு 110 அறிவிப்புகளைப் பேரவையிலே படித்துவிட்டு, ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும், விளம்பர உத்திகளிலும் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறது.

பாசனத்திற்குத் தண்ணீர் பெற்றுத்தராமல் விவ சாயிகளைக் கண்ணீரில் தவிக்கவிட்ட இந்த ஆட்சியினர், நாள் ஒன்றுக்கு 16 மணி நேரம், 18 மணி நேரம் என்று மின்வெட்டு செய்து தொழிற்சாலைகளை மூடவைத்து, தொழிலாளர்களை வாட விட்ட இந்த ஆட்சியினர், தற்போது குடிநீர்ப் பஞ்சத்திற்குக் காரணமாகிப் பெண்களைக் காலிக்குடங்களுடன் அலைக்கழிப்புக்கு ஆளாக்கியுள்ளனர். இன்னும் என்னென்ன கொடுமைகளோ?

அன்புள்ள,

மு.க.

22-4-2013

3741. வலுவான காரணங்கள் குவிகின்றன!

உடன்பிறப்பே,

இலங்கை ராணுவத்தினரிடமிருந்து தப்பித்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்து கடல் கடக்கும் ஈழத் தமிழர்கள் பல நாட்டு ராணுவத்தினரிடம் பிடிபடுகிறார்கள். அப்படிப் பிடிபட்டு துபாயில் இறக்கிவிடப்பட்ட 45 பேரில், 19 பேரை மீண்டும் இலங்கைக்கே திருப்பியனுப்ப ஐ.நா. உத்தரவிட்டுள்ளது. அவர்களில் ஒருவரான ரமணன் ஜனியர் விகடன் வார இதழுக்கு அளித்துள்ள பேட்டி வருமாறு :-

"கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், ஈழ அகதிகள் 102 பேர் ஆஸ்திரேலியா செல்வதற்காகத் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிந்தலக்கரை வந்தோம். அங்குள்ள காளிகோயிலில் கூடினோம். அந்தக் கூட்டத்தில் நானும், என் மகளும், என் மனைவியும் இருந்தோம். முதலிலேயே படகில் ஏறிய நாங்கள் 45 பேர் போலீசில் சிக்காமல் ஆஸ்திரேலியா நோக்கிக் கிளம்பினோம். நானும் என் மனைவியும் படகில் வந்துவிட்டோம். என் குழந்தை பின்னால் வந்த குழுவினருடன் வருவதாக இருந்த நிலையில், குழந்தை காவலரிடம் சிக்கிக்கொண்டது. நானும், என் மனைவியும் இப்போது துபாயில் இருக்க, என் குழந்தை திருச்சியில் இருக்கிறது. அக்டோபர் மாதம் 9ஆம் தேதி சிந்தலக்கரையிலிருந்து கிளம்பிய படகு சர்வதேசக் கடல் எல்லையில் சென்றுகொண்டிருந்தபோது, படகில் ஓட்டை விழுந்துவிட்டது. படகில் இருந்த தண்ணீரை இறைத்துச் சோர்ந்துபோன நாங்கள் சேட்டிலைட் போன் மூலம் ஆஸ்திரேலிய நேவிக்குத் தகவல் கொடுத்தோம். கொஞ்ச நேரத்தில் சரக்குக் கப்பல் வந்து எங்களைக் காப்பாற்றியது. எங்கும் இருட்டு. மொழியும் தெரியவில்லை. நாங்கள் ஆஸ்திரேலியா கொண்டு செல்லப்படுவதாக நம்பினோம். ஆனால் எங்களைத் துபாயில் இருக்கும் ஜபர்அலி என்ற துறைமுகத்தில் இறங்கச் சொன்னார்கள். சில தொண்டு நிறுவனங்களும் வந்தது. அவர்களிடம் "நாங்கள் தஞ்சம் தேடி ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டோம், எங்களை

இங்கே கொண்டு வந்துவிட்டனர். இலங்கையிடம் எங்களை ஒப்படைக்க மாட்டோம் என்ற உத்தரவாதம் அளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கப்பலை விட்டு இறங்க மறுத்தோம். "துபாய் அரசு உங்களை இலங்கைக்கு அனுப்பாது" என்று அவர்கள் உத்தரவாதம் கொடுத்ததன் பேரில் இறங்கினோம். ஆனால், இப்போது ஐ.நா. எங்களைக் கைவிட்டுவிட்டது. எங்களில் 19 பேரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முடிவினை ஐ.நா. எடுத்துவிட்டது".

இந்தக் குழுவில் இடம்பெற்ற ஹரினி என்று அழைக்கப்படும் லோகினி ரதி மோகன் கூறியிருப்பதாவது :-

"புலிகளின் தேசியத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றினேன். 2009ல் நாங்கள் தப்பித்துத் தமிழகத்துக்கு வந்தோம். எங்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப மாட்டோம் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டதன்பேரிலேயே நாங்கள் தரை இறங்கினோம். ஆனால் இப்போது, அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பு எங்களை இலங்கைக்குப் போகச் சொல்கிறது. எங்களைச் சுதந்திரமாக ஊடகங்களிடம் பேசவோ, வெளி உலகுடன் தொடர்புகொள்ளவோ அனுமதிக்காமல் அடைத்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் இசைப்பிரியாவுக்கு நடந்ததுதான் எனக்கும் நடக்கும். தவிர, என் கணவர் ஒரு நாட்டில், என் பெற்றோர், தங்கைகள் ஒரு நாட்டில் எனத் திசைக்கொருவராய் சிதறிக் கிடக்கிறோம். எங்காவது ஒரு நாட்டுக்குத் தப்பி அங்கிருந்து சிதறிக் கிடக்கும் எங்கள் குடும்பங்கள் ஒன்று சேர வேண்டும். நாங்களும் நல்ல வாழ்க்கைக்கு ஆசைப்பட்டுத்தான் கடல் கடக்கிறோம். எந்த நாட்டுக்குச் செல்ல வேண்டாம் என நினைக்கிறோமோ, அந்த நாட்டுக்குப் போய்ச் சேர்ப்பதற்காகவா எங்களை நடுக்கடலில் இருந்து காப்பாற்றினார்கள்?"

இவ்வாறு தங்கள் இதயத் துயரை வெளிப் படுத்தியிருக்கிறார்கள். துபாயில் கரை சேர்க்கப்பட்ட 45 பேரில் மிக முக்கியமாக புலிகளின் ராணுவப் பேச்சாளராக இருந்த இளந்திரையனின் மனைவியும், குழந்தைகளும், வேறு சில போராளிகளும் இருந்துள்ளனர். இவர்களில் எட்டு பேரை ஸ்வீடன் அரசு ஏற்றுக்கொண்டது. அமெரிக்கா 11 பேருக்குத் தஞ்சம் தருவதாக வாக்களித்துள்ளது. ஏற்கனவே ஏழு பேரைக் கொழும்புவுக்குத் திருப்பி அனுப்பிவிட்ட நிலையில்

எஞ்சியிருக்கும் 19 பேருக்குத் தஞ்சம் தர நாடுகள் எதுவும் முன்வரவில்லை. அவர்களைத் துபாய் அரசு கொழும்புவுக்கே திருப்பி அனுப்பத் தயாராகி வருவதாகச் செய்திகள் நமக்கும் வந்துள்ளன.

நாதியற்ற தமிழன் உலகின் பல பாகங்களில் எப்படியெல்லாம் அவதிப்படுகிறான் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேடிப்போகத் தேவையில்லை. அவர்கள் தமிழர்கள், ஈழத் தமிழர்கள். அவர்களுக்காக உதவிட நமக்குத்தான் முதல் கடமை உள்ளது. நமக்கென்று ஒரு நாடு இருக்கின்றது. அவர்கள் இந்த 19 பேருடைய துயரினைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த 19 பேரும் மீண்டும் இலங்கைக்குச் செல்ல விரும்பவில்லை. வேறு எந்த நாட்டிலும் அவர்கள் தஞ்சம் அடையத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வில் விளக்கேற்ற இந்திய அரசு உதவிட வேண்டாமா?

இலங்கை சிங்களப் பேரினவாத அரசைப் பற்றிய வேறு சில தகவல்களும் செய்தித்தாள்களில் தொடர்ந்து வந்தவண்ணம் இருக்கின்றன. கடந்த வாரமே பிரிட்டன் அரசு இலங்கையில் மனித உரிமை மீறல் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக அறிக்கை வெளியிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவுத் துறை 2012ஆம் ஆண்டில் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் தாக்குதலுக்கு ஆளாவது, காணாமல் போவது, கொலை செய்யப்படுவது எனப் பல்வேறு கொடுமைகளைச் சந்திக்கின்றனர். இலங்கைப் பாதுகாப்புப் படையினரும், ராணுவத்தினரும் இத்தகைய மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபடுகின்றனர். முக்கியமாக சமூக ஆர்வலர்கள், விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது அதிகமாக உள்ளது. இவர்களை ஆட்சியாளர்கள் அச்சுறுத்துகின்றனர். அரசுக்கு எதிராகக் கருத்து தெரிவிப்பவர்கள் திடீரென மாயமாகி விடுகின்றனர். சமூக நலத்துறை அமைச்சரும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் பகுதியில் பயமுறுத்தல், வழிப்பறி மற்றும் ஊழல் செயல்களை ஊக்குவித்து வருகிறார் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துகளை மனதிலேகொண்டுதான் 12-8-2012 அன்று சென்னை மாநகரில் "டெசோ" சார்பில் நாம் நடத்திய மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தில், "தமிழ் இளைஞர் கள் பலர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர். பலர் சித்திரவதை முகாம்களில் சொல்லொணாத வேதனைக்கும், துயரத்துக்கும் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். தமிழ்ப் பெண்கள், இராணுவப் படையினரால் பாலியல் வன்முறை உள்ளிட்ட பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். தமிழ்க் குழந்தைகள் துப்பாக்கிகளைப் பார்த்துக்கொண்டு, இராணுவப் படையினர் கட்டவிழ்த்து விடும் வன்முறையால் பாதிக்கப்பட்டு, முடிவில்லாத அச்சத்துடன் வாழ்கின்றனர்" என்று சுட்டிக் காட்டியிருக்கிறோம். இத்தகைய மனித உரிமை மீறல்களையும், இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைகளையும் விசாரிப்பதற்காகச் சுதந்திரமான நம்பகத்தன்மை கொண்ட சர்வதேச அளவிலான விசாரணைக் கமிஷன் அமைத்திட வேண்டும் என்று நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 250 பேருக்கு இந்தியக் கடற்படைக் கப்பல்களில் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும், இந்தியக் கடலோரக் காவல் படையைச் சேர்ந்த "சுஜாதா, தரங்கிணி, வருணா" ஆகிய மூன்று கப்பல்கள்தான் இந்தப் பயிற்சியை அளித்துள்ளன என்றும் செய்திகள் வருகின்றன. இலங்கைக் கடற்படை துணைத் தளபதி ஒருவர் இலங்கைக் கடற்படையினரில் 80 சதவிகிதம் பேருக்கு இந்தியாதான் பயிற்சி அளிக்கிறது என்றே கூறியிருக்கிறார். இந்தச் செய்திகள் எல்லாம் நம்முடைய வேதனையை நாளும் நாளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இலங்கை ராணுவத்தின் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களானாலும் அவர்களுக்கு இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கக் கூடாது என்று நாமும் ஈழத் தமிழர் நலனில் அக்கறை கொண்டுள்ள அத்தனை பேரும் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வந்தும்கூட, இன்னமும் அத்தகைய பயிற்சிகள் தொடர்வது கொடுமையிலும் கொடுமையாக உள்ளது. மத்திய அரசின் இத்தகைய செயலைத் தமிழகத்தின் சார்பில் கண்டிப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

இதற்கிடையே இன்று ஆங்கில நாளேடு ஒன்றில் வந்துள்ள செய்தியின்படி, "காமன் வெல்த்" சட்ட மாநாடு ஒன்று ஏப்ரல் 14

முதல் ஏப்ரல் 18ஆம் தேதிவரை தென்னாப்பிரிக்கா வில் உள்ள "கேப்-டவுன்" நகரத்தில் நடைபெற்றுள்ளது. அந்த மாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் தலைமை நீதிபதிகள் 27 பேர் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒருமனதாக அந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தில், காமன்வெல்த் அமைச்சர்கள் சார்ந்த நடவடிக்கைக்குழுவின் கூட்டம் 26-4-2013 அன்று லண்டன் மாநகரத்திலே நடைபெறவுள்ளது; அந்தக் கூட்டத்தில் முக்கியமாக இலங்கைப் பிரச்சினை பற்றிப் பரிசீலனை செய்து காமன் வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்குவது குறித்து முடிவெடுக்க வேண்டும்; தொடர்ந்து இலங்கையில் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காமன்வெல்த் போற்றி வரும் அடிப்படை கொள்கை மீறல்கள் ஆகியவற்றின் காரணமாக இலங்கையை நீக்குவது முக்கியத்துவம் பெறுகிறது; காமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்துவதை மறு பரிசீலனை செய்யவேண்டும் என்றெல்லாம் காமன்வெல்த் நாடுகளின் தலைமை நீதிபதிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள், இலங்கையின் தலைமை நீதிபதி திருமதி ஷிரானி பண்டாரநாயகே இலங்கை அதிபரால் பதவி நீக்கம் செய்யப்பட்ட தற்கும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

25-3-2013 அன்று சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு அவசரக் கூட்டத்தில், "இனப் படுகொலையை நடத்தி, தமிழ் ஈழ மக்களையே அழித்தொழிக்க முயன்ற இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடப்பது எவ்விதத்திலும் நியாயமானதோ, ஏற்கக் கூடியதோ அல்ல. எனவே, அம்மாநாட்டை எக்காரணம் கொண்டும் அங்கு நடத்திடக் கூடாது என்று காமன்வெல்த் தலைமையை இக்கழகச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் 6-4-2013 அன்று நான் விடுத்த அறிக்கையிலும், இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது என்பது குறித்து 26-4-2013 அன்று இலண்டன் மாநகரில் அமைச்சர்கள் சார்ந்த காமன்வெல்த் நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் முடிவெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறேன்.

அன்றையதினம் நாம் வலியுறுத்திய அந்தக் கோரிக்கையைத்தான் இன்றையதினம் காமன் வெல்த் நாடுகளின்

தலைமை நீதிபதிகளும் எதிரொலித்திருக்கிறார்கள். எனவே இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது என்ற முடிவினை காமன்வெல்த் நடவடிக்கைக் குழுவில் இடம் பெற்றுள்ள நாடுகள் எல்லாம் ஆதரிக்க வேண்டுமென்றும், அதற்கு நமது இந்திய அரசு தேவையான அழுத்தத்தைத் தர வேண்டுமென்றும் மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

23-4-2013

3742. ஈழத் தமிழர்க்கு இன்னமும் ஓயாத கொடுமைகள்!

உடன்பிறப்பே,

இலங்கை ராணுவத்தினரிடமிருந்து தப்பித்து - தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கடல் கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட 45 ஈழத் தமிழர்கள் பிடிபட்டனர். துபாயில் இறக்கி விடப்பட்ட அவர்களுள் 19 பேரை மீண்டும் இலங்கைக்கே திருப்பியனுப்ப ஐ.நா. உத்தர விட்டுள்ளது என்றும்; 8 பேரை ஸ்வீடன் அரசு ஏற்றுக் கொண்டது என்றும்; அமெரிக்கா 11 பேருக்குத் தஞ்சம் தருவதாக வாக்களித் துள்ளது என்றும்; ஏற்கனவே 7 பேரை கொழும்புவுக்குத் திருப்பி அனுப்பிவிட்ட நிலையில் எஞ்சியிருக்கும் 19 பேருக்குத் தஞ்சம் தர நாடுகள் எதுவும் முன்வரவில்லை என்றும்; அவர்களை துபாய் அரசு கொழும்புவுக்கே திருப்பி அனுப்பத் தயாராகி வருவதாகச் செய்திகள் நமக்கு வந்துள்ளன என்றும்; அவர்களின் துயரினைக் களைய உடனடியாக இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் 23-4-2013 அன்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

23ஆம் தேதி "முரசொலி"யில் வெளிவந்த என்னுடைய இந்த வேண்டுகோளைப் படித்த மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள், அதை மத்திய அரசு பரிசீலித்ததாகவும், துபாயில் உள்ள அந்த 19 ஈழத் தமிழர்களும் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்றும் தகவல் அனுப்பியுள்ளார். துபாயில் பிடிபட்டிருந்த அந்த ஈழத் தமிழர்களிடமிருந்தும் அதுபற்றி எனக்குத் தகவல் வந்துள்ளது. இதற்காக மத்திய அரசுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும் ஈழத்தமிழர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும், இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகின்ற ஈழத் தமிழர்களுக்கு எதிரான இன்னல்களைக் களைவதில் இந்திய அரசு இன்னமும் மெத்தனமாகவே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், 22ஆம் தேதியன்று மக்களவையில் இந்திய ராணுவ அமைச்சர் அந்தோணி அவர்கள், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவது பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோது, சர்வதேச கடல் எல்லைக்கு அருகே வரும் மீனவர்களைத் தாக்கக்கூடாது என்றும், மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளவும், இலங்கை ராணுவத்துக்கு உத்தரவிட இலங்கை அரசை இந்தியா அறிவுறுத்தியுள்ளது என்றும், இந்திய மீனவர்களின் நலன் காக்க இந்தியா தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் மக்களவையில் கூறும் போது, "இந்தப் பிரச்சினை தொடர்பாக கடந்த 2008ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரு நாடுகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது; அதன்படி இந்திய மீன்பிடி படகுகள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுடக்கூடாது; இந்தியக் கடல் பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகள் நடை பெறுவதைத் தடுக்கவும், நமது கடல் பகுதியில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்கவும் பாக் ஜலசந்தி பகுதியில் இந்தியக் கடற்படை கப்பல்களும், கடலோர பாதுகாப்புப் படை கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன" என்றும் தெரிவித்திருக்கிறார்.

எனினும், எந்த உடன்பாட்டையும் மதிக்காத சிங்கள அரசு, இந்த உடன்பாட்டையும் கொஞ்சமும் மதித்து நடக்கவில்லை என்பதை 2008ஆம் ஆண்டிற்குப் பிறகும்கூட தொடர்ந்து தமிழக மீனவர்கள் அங்கே தாக்கப்பட்டு வரும் கொடிய நிகழ்ச்சிகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

இவைகளையெல்லாம் மனதிலே கொண்டுதான் இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடத்தப்படக் கூடாது என்று "டெசோ" சார்பில் நாம் கூறி வருகிறோம். இதற்கிடையே 23-4-2013 அன்று நான் விடுத்த அறிக்கையிலே கூட, "காமன்வெல்த்" சட்ட மாநாடு ஒன்று ஏப்ரல் 14 முதல் ஏப்ரல் 18ஆம் தேதி வரை தென்னாப்பிரிக்காவில் உள்ள "கேப்-டவுன்" நகரத்தில் நடைபெற்றது பற்றியும் அந்த மாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் தலைமை நீதிபதிகள் 27 பேர் கலந்து கொண்டு, ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில், "26-4-2013 அன்று லண்டன் மாநகரத்திலே நடைபெறும் காமன்வெல்த் அமைச்சர்கள்

சார்ந்த நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினை பற்றி பரிசீலனை செய்து காமன் வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்குவது குறித்து முடிவெடுக்க வேண்டும்; தொடர்ந்து இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காமன்வெல்த் போற்றி வரும் அடிப்படைக் கொள்கை மீறல்கள் ஆகியவற்றின் காரணமாக இலங்கையை நீக்குவது முக்கியத்துவம் பெறுகிறது; காமன் வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்றெல்லாம் காமன்வெல்த் நாடுகளின் தலைமை நீதிபதிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதன் தொடர்ச்சியாக, இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதோடு காமன்வெல்த் நாடுகளின் தூதுவர்களைக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து அதற்கான வேண்டுகோளை விடுத்து வருகிறார்கள். நமது வேண்டுகோளுக்கு மேலும் வலிவு சேர்க்கும் வகையில், மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் ஆசிய இயக்குனர் பிராட் ஆடம்ஸ் என்பார், "இலங்கையில் தலைமை நீதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார்; பத்திரிகைகள் ஒடுக்கப்படுகின்றன; அடிப்படை சுதந்திரம் மறுக்கப்பட்டு, மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன; இப்படிப்பட்ட நாட்டில், காமன் வெல்த் மாநாடு நடந்தால், அது இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்ததாகிவிடும். மனித உரிமை மீறல் விஷயத்தில், இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் வரை, அந்நாட்டில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது, இது தொடர்பாக, லண்டனில் நடக்கும் கூட்டத்தில் விவாதித்து, இலங்கையை எச்சரிக்க வேண்டும். மனித உரிமையை மதிக்காத நாட்டில் காமன்வெல்த் மாநாட்டை நடத்த முடியாது என்பதை உறுப்பு நாடுகள் பதிவு செய்ய வேண்டும்" என்று வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் அளவுகடந்து போகின்றன என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாக, இலங்கையிலே தமிழர்களுக்குச் சொந்தமாக இருந்த 6,381 ஏக்கர் நிலங்கள் சிங்கள ராணுவத்தினரால் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு முதலே யாழ்ப்பாணத்தின் "வலிகாமம்" பகுதி சிங்கள ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்தது முதல் இந்த ஆக்கிரமிப்பு நடைபெற்று

வருகிறது. இலங்கையில் போர் முடிவுற்ற பிறகு, இந்த நிலங்கள் திரும்பவும் தமிழர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர் பார்த்திருந்த நிலையில், இந்த நிலங்களை சிங்கள ராணுவத்திற்கே சொந்தமாக ஆக்கிக் கொள்வதற்கான உத்தரவினை சிங்கள அரசு தற்போது பிறப்பித்திருக்கிறது.

இந்த மாதிரியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பகுதியிலே மட்டுமல்ல; தமிழர்களுக்குச் சொந்தமான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திரிகோண மலை, மட்டக் களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மேலும் தமிழர்களுக்குச் சொந்தமான இந்த நிலப்பகுதியில், யாழ்ப்பாணம் மண்டலத்திற்கான ராணுவ தலைமை அலுவலகத்தைக் கட்டுவதற்கும் இலங்கை அரசு திட்டமிட்டிருக்கிறதாம். தமிழர்கள் வழிபட்டு வந்த சுமார் 2,500 கோவில்களும், 400 கிறித்தவ தேவாலயங்களும் இடிக்கப்பட்டு, அங்கே சிங்கள வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டுவிட்டதாம். இதைப்பற்றியெல்லாம் அங்கிருந்து தகவல் அனுப்பியிருப்பதோடு, இதனைக் கண்டித்து தமிழர்கள் சார்பில் அங்கே அறப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஈழத் தமிழர்களின் இந்தக் கோரிக்கை பற்றித் தான் ஏற்கனவே 12-8-2012 அன்று சென்னையில் பிரமாண்டமாக நடைபெற்ற "டெசோ" மாநாட்டிலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. அந்தத் தீர்மானத்தில், "இன்றைய இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைக்குப் பதிலாக இராணுவத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. இராணுவம், அதன் நடவடிக்கைகளுக்காக, தமிழர் பகுதிகளில் தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான வீடுகளை கையகப்படுத்திக் கொண்டுள்ளது. காலியாக உள்ள வீடுகளைத் தன் கட்டுப்பாட்டில் மேற்கொள்ளும் இராணுவம், அவற்றைக் காலி செய்ய மறுக்கிறது. இராணுவத்தின் அனுமதி யின்றி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழர்களின் வீடுகளில் எந்த சமூக நிகழ்ச்சிகளும் நடத்த முடியாது. இராணுவத்தினரே அங்கு மாவட்ட ஆட்சியராகவும் அரசு நிர்வாகிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். இன்றையத் தமிழ் ஈழம் ஓர் இராணுவ முகாம் போலக் காட்சியளிக்கிறது. ஜனநாயக அடிப்படை யிலான உள்ளாட்சி அமைப்புகள் இல்லாததால் அங்குள்ள

தமிழர்களுக்குத் தங்களது குறைகளை எடுத்துக் கூறவும், பேசவும், அமைதியான முறையில் போராடவும் வழியில்லை. அவர்கள் எப்போதும் பெரும் பீதியில் உறைந்து கிடக்கின்றனர். எனவே தமிழீழப் பகுதிகளிலிருந்து உடனடியாக இராணுவத்தைச் சிங்கள அரசு விலக்கிக் கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் அவையும் உலக நாடுகளும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இராணுவத்தைத் திரும்பப் பெறுவதை நேரடியாகக் கண்காணிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் அவை ஒரு பன்னாட்டுக் குழுவை ஏற்படுத்த வேண்டும்" என்றும்;

"பன்னெடுங்காலமாகத் தமிழ் மீனவர்கள் வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்குக் கடலோரப் பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாகத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வலிந்து குடியமர்த்தப்பட்டுள்ள சிங்களர்களை உடனே அப்பகுதிகளிலிருந்து திருப்பி அனுப்புவதோடு, மீண்டும் தமிழர்கள் தங்களின் தொழில், வணிக மற்றும் இயற்கை வள ஆதாரங்களின் மீது உரிமை கொண்டோராய் அறிவிக்கப்பட வேண்டும். தமிழர்களின் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படுத்தும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள, ஐ.நா. அவை இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்" என்றும் ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இலங்கையில் இவ்வாறு தமிழர்கள் வாழ்ந்த அவர்களுக்குச் சொந்தமான நிலப் பகுதிகளை யெல்லாம் சிங்கள ராணுவம் ஆக்கிரமித்து கைப்பற்றுகின்ற முயற்சிகளை முறியடிக்கும் வகையில், இந்தப் பிரச்சினையில் முக்கியமாக நமது இந்திய அரசும் மற்றும் உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் அமைப்பும் உடனடியாக தலையிட்டு, ஈழத் தமிழர்களுக்கு உரிய இந்த நிலங்களை மீட்டு, தொடர்ந்து அவர்கள் அங்கே வாழவும், தமிழர்கள் வாழ்ந்த இந்தப் பகுதி களிலிருந்து சிங்கள ராணுவம் வெளியேறவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-04-2013

3743. கனவா? நனவா?
கழுத்தே சும்மா இரு என்ற கதையா?

உடன்பிறப்பே,

24-4-2013 அன்று திருவான்மியூரில் "தமிழகச் சட்டப்பேரவையில் ஜனநாயகம் படும்பாடு" என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய கழகப்பொதுச் செயலாளர் பேராசிரியர், "தமிழ்நாடும் தற்போது நடக்கும் கேலிக்கூத்தும்" என்றுதான் தன் பேச்சைத் தொடங்கினார். பேராசிரியர் சொன்ன கருத்தைத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் நாள் தவறாமல் மெய்ப்பித்து வருகிறார். சட்டப் பேரவையில் இந்த ஆட்சிக்கு எதிராகக் கருத்து தெரிவிக்க யாருக்குமே உரிமை இல்லை என்ற அளவிற்கு, பேரவை நடைபெறுவதை ஏடுகளில் காணலாம். அம்மையாரைப் புகழ்ந்து பேசிட வேண்டும்; எல்லா அறிவிப்புகளுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும்; அவர் அவையிலே படிப்பதையெல்லாம் அனைவரும் தலைவணங்கிக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று போற்றிப் புகழ்பாடும் மன்றமாக பேரவை உருமாறி வருகிறது.

தமிழகத்திலே இதுவரை எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் யாரும் தற்போது நடைபெறுகின்ற அளவிற்கு அன்றாடம் 110வது விதியின் கீழ் முதலமைச்சருக்குரிய துறைகள் அல்லாத வேறு துறை அமைச்சர்களுக்குரிய அறிவிப்புகளையும் முதலமைச்சரே படிக்கிறாரே, அதைப் போலச் செய்ததில்லை. முதல் அமைச்சரே அனைத்து அறிவிப்புகளையும் படிப்பதால், அதனை வரவேற்றும் பாராட்டியும் மற்றக் கட்சித் தலைவர்களும், பேரவைத் தலைவரும் பேசுகிறார்கள். அந்த அறிவிப்புகளிலே உள்ள குற்றம் குறைகளைச் சொல்ல யாராவது விரும்பினால்; 110வது விதியின்கீழ்ப் படிக்கப்படும் அறிக்கை மீது குறை சொல்ல அனுமதி கிடையாது என்று கூறி, மீறிப் பேச முற்பட்டால் உடனே அவையிலிருந்து பேரவைத் தலைவர்

வெளியேற்றி விடுவார். நான்கு தடவை அவ்வாறு வெளியே அனுப்பிவிட்டு, பிறகு தொடர் முழுவதற்கும் வரக் கூடாது என்றும் கூறிவிடுவார். அப்படிப்பட்ட ஜனநாயகம்தான் அன்றாடம் தமிழகச் சட்டப் பேரவையிலே கொடிகட்டிப் பறக்கிறது.

25-4-2013 அன்று ஒரு நாளில் மட்டும் மின்துறை மீது அந்தத் துறையின் அமைச்சர் கூற வேண்டியதை எல்லாம் முதல் அமைச்சரே படித்திருக்கிறார். பிறகு எதற்காக மின்துறை அமைச்சர்? அவருக்காக வேறு தனி "பணி" எதுவும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? அந்தப் "பணி"யை மட்டும்தான் அவர் கவனிப்பாரா? எத்தனை, எத்தனை அறிவிப்புகள்? அந்த அறிவிப்புகள் எல்லாம் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடையவை ஆயிற்றே? நிதி நிலை அறிக்கையிலே அந்த அறிவிப்புகள் ஏன் செய்யப்பட வில்லை? அந்த அறிவிப்புகளின் கீழ் செலவழிக்கப்படவிருக்கும் நிதிக்குப் பேரவையின் ஒப்புதல் தேவையில்லையா? உண்மையாக நடைமுறைப் படுத்தினால்தானே, அந்தக் கவலை? அன்றாடம் ஏடுகளிலே வெளிவர வேண்டும் என்பதற்காக அறிவிக்கப்பட்டவைகளா அவைகள்? முதலமைச்சரின் இந்த அறிவிப்புகள் நிதிநிலை அறிக்கை மற்றும் மான்யக் கோரிக்கைகளின் மதிப்பைக் குலைத்து விடாதா?

உதாரணத்திற்காக ஒன்றைக் கேட்கிறேன். கடந்த 3-5-2012 அன்று பேரவை விதி 110ன் கீழ் முதலமைச்சர் ஜெயலலிதா காவல்துறை சம்பந்தமான சில அறிவிப்புகளைச் செய்தார். 2012ஆம் ஆண்டு காவல்துறை மீதான விவாதம் நடைபெற வில்லையா? முதலமைச்சர் அதற்குப் பதில் சொல்லவில்லையா? சொன்னார்; காவல்துறை மீதான விவாதத்திற்கு நீண்ட நேரம் 24-4-2012 அன்று பதில்களைப் படித்தார்; அறிவிப்புகளைச் செய்தார். இருந்தாலும் பத்து நாட்களுக்கெல்லாம் 3-5-2012 அன்று ஒரு மிகப்பெரிய அறிவிப்பினைச் செய்தார். அந்த அறிவிப்பினைக் காவல்துறை மானியத்திற்குப் பதிலளித்த போதே செய்திருக்கலாம் அல்லவா? ஆனாலும் செய்யவில்லை! ஏன் செய்யவில்லை? அப்போது செய்திருந்தால், பத்தோடு பதினொன்றாவது அறிவிப்பாக ஆகியிருக்கும். தனியாக 110வது விதியின்கீழ்ப் படித்தால்தான், அதை முதல் பக்கத்தில் வெளியிடக் காத்திருக்கும் ஏடுகளில் எல்லாம் மிகப் பெரிதாக வெளிவரும்;

பேரவையில் உள்ள கட்சித் தலைவர்கள் எல்லாம் "அம்மா"வைப் பாராட்டுவார்கள் என்பதாலா? என்னவோ தெரியவில்லை. 3-5-2012 அன்று முதலமைச்சர் 110வது விதியின்கீழ்ப்படித்த அறிக்கை என்ன? இதோ அது :-

"உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின்கீழ்க் காவல்துறையில் காவலர்கள் முதல் துணைக் கண்காணிப்பாளர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும் சொந்த வீடு கட்டித்தர தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் நடவடிக்கை எடுக்கும். இந்தத் திட்டத்தின்கீழ்ச் சுமார் 36,000 குடியிருப்புகள் கட்டப்படும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் 10 ஏக்கர் நிலமும், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக் கோட்டையூர் கிராமத்தில் 100 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்து தரப்படும்" என்றெல்லாம் முதல் அமைச்சர் பேரவையிலே 110வது விதியின்கீழ் இந்த அறிவிப்பைச் செய்ததும், மாண்புமிகு உறுப்பினர் செ.கு.தமிழரசன் ஆரம்பித்து, கொங்கு தமிழர் கட்சி சார்பில் உ. தனியரசு, புதிய தமிழகம் கட்சி சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி, மனித நேய மக்கள் கட்சி சார்பில் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் ம.கலையரசு, சமத்துவ மக்கள் கட்சி சார்பில் ஆ.நாராயணன், காங்கிரஸ் கட்சி சார்பில் எஸ்.விஜயதாரணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எம். ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அ. சவுந்தரராசன் ஆகியோர் முதல் அமைச்சருக்குப் பாராட்டு தெரிவித்து நன்றி கூறினார்கள்.

அவர்களையெல்லாம் மீறி, அன்றையதினம் பேரவைத் தலைவராக இருந்த அருமை நண்பர் ஜெயக்குமார் அவர்களோ ஒரு கவிதையே அவையில் பாடினார். "உடலுக்கு உயிர் காவல், உடைமைக்கு நம் தாய் காவல் - உலகுக்கு ஒளி காவல், உயிருக்கு நம் தாய் காவல் - கடலுக்கு கரை காவல், களவு போகாமல் இருப்பதற்கு நம் தாய் காவல்" என்றெல்லாம் தொடங்கிக் கவிதைபாடினார். இன்றைய பேரவைத் தலைவர் அல்ல - அப்போதிருந்த பேரவைத் தலைவர் பாடினார்.

முதலமைச்சர் அந்த அறிவிப்பினைச் செய்து கிட்டத்தட்ட ஓராண்டு ஆகிறது. அந்த 36 ஆயிரம் குடியிருப்புகளில் இந்த ஓராண்டு காலத்திற்குள் காவலர் வீட்டு வசதிக் கழகத்தின்

மூலமாகக் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் எத்தனை? அந்தத் திட்டத்திற்காகப் காவல் துறை நண்பர்கள் பணம் எல்லாம் கட்டினார்களே, அந்தக் குடியிருப்புகள் கட்டித் திறக்கப்பட்டு விட்டதா? நேரில் முதலமைச்சர் சென்று திறந்து வைத்தார்களா? வீடியோ கான்பரன்சிங் மூலமாகவே திறக்கப்பட்டு விட்டதா?

இதுபோன்றதொரு மிகப்பெரிய அறிவிப்பினைத்தான் 25-4-2013 அன்று பேரவையில் முதலமைச்சர் படித்திருக்கிறார். அதற்கு ஏடுகளில் எல்லாம் மிகப் பெரிய முதல் பக்கத் தலைப்புகள்?

எ நீலகிரி மாவட்டத்தில் 7000 கோடி ரூபாயில் புனல் மின் திட்டம்! எ மின் கட்டமைப்பையும் தொடரமைப்பையும் வலுப்படுத்த 5000 கோடி ரூபாய்த் திட்டம்! எ 3572 கோடி ரூபாயில் 19 புதிய 400 கிலோ வோல்ட் துணை மின்நிலையங்கள்! எதிருவலத்தில் 1000 கோடி ரூபாயில் துணை மின்நிலையம் - மின்தொடர்கள்! எ தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மீண்டும் மாற்றிட 30,602 கோடி ரூபாய்த் திட்டங்கள்!

சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கான மின் திட்டங்களை தமிழக முதலமைச்சர் 110வது விதியின்கீழ் அறிக்கையாகப் பேரவையில் படித்திருக்கிறார். அந்தத் திட்டங்கள் பற்றிப் பேரவையிலே உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் அந்தத் திட்டங்கள் சாத்தியக் கூறான திட்டங்கள்தானா? அந்த அறிவிப்புகள் எல்லாம் அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டதா? அல்லது அதிகாரிகள் மையத்திலாவது பேசப்பட்டதா? யாரும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை; ஏனென்றால் கேட்பதற்கு விதிப்படி அனுமதி கிடையாது.

முதலமைச்சரின் இந்த அறிவிப்பு தமிழக ஏடுகளில் எல்லாம் எந்த அளவிற்குப் போடப்பட்டிருக்கிறது தெரியுமா? 7 ஆயிரம் கோடியில் புதிய நீர் மின் திட்டம் - "தினத்தந்தி"; வீடுகளில் சூரிய சக்தி மின் சாதனங்கள் பொருத்த 20 ஆயிரம் ரூபாய் - "தினமலர்"; 8 ஆயிரம் கோடியில் துணை மின் நிலையங்கள், 7 ஆயிரம் கோடியில் புனல்மின் திட்டம் - "தினமணி"; ரூ.16,350 கோடியில் ஜெயலலிதா திட்டங்கள் - "மாலை முரசு"; 30,602 கோடி ரூபாய் திட்டம் - "நமது எம்.ஜி.ஆர்.;" என்று மிகப்பெரிய அளவிற்கு வெளியிடப்பட்டுள்ளது.

கிராமங்களில் இன்றுவரை 15 மணி நேரத்திற்கு மேல் மின்வெட்டு! கோடைக் காலம் தொடங்கிவிட்டது. குழந்தைகள் இரவிலே காற்று இல்லாமல் தூங்குவதில்லை. அவரவர்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு தெருக்களிலே அலைகிறார்கள். கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து சோற்றுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி யெல்லாமா இந்த ஆட்சியாளர்கள் கவலைப்படுகிறார்கள்? ஆமாம், கவலைப்பட்டுத்தான் சிந்தித்து-சிந்தித்து இந்தத் திட்டங்களை எல்லாம் நமது முதல் அமைச்சர் தீட்டி வெளியிட்டிருக்கிறார்.

கிராமங்களிலே மின்வெட்டு காரணமாக அவதியுறும் தாய்மார்களிடம் எல்லாம் தமிழக அமைச்சர்கள் முதல் அமைச்சரின் இந்த 110வது விதியின் கீழான அறிவிப்புகளையெல்லாம் துண்டு நோட்டீஸ்களாக அடித்து, எடுத்துக்கொண்டுபோய் விநியோகிக்கலாம். அதிலும் இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவு பெற சுமார் 8 முதல் 10 ஆண்டுகள் ஆகும் என்ற வரிகளை அடிக் கோடிட்டுக் காட்டவேண்டும். “முதலமைச்சர் அறிவித்துள்ள இந்தத் திட்டங்கள் பத்தாண்டுகளில் நிறைவு பெற்றுவிடும்; அப்போதே மின்வெட்டு தளர்த்தப்பட்டு உங்கள் குழந்தைகளுக்கு ஏராளமாகக் காற்று கிடைக்கும். அப்போது தூங்க வைத்து விடலாம்” என்று கூட்டம் போட்டுப் பிரச்சாரம் செய்யலாம்.

ஏற்கனவே திட்டமிட்ட கூடங்குளம் மின் நிலையத்திலிருந்தே மின்சார உற்பத்தி தொடங்கப்படுமா? மின்சாரம் கிடைக்குமா? கிடைத்தால் தமிழகத்திற்கு எவ்வளவு கிடைக்கும்? அந்த ஆலையையே தொடங்கக் கூடாது என்று போராட்டம் ஒரு பக்கம்! அந்தப் போராட்டக்காரர்களை முதலில் உசுப்பி விட்டுவிட்டுப் பின்னர் அவர்களைப் பார்க்கக்கூட மறுத்த படலம் ஒரு பக்கம்! போராட்டக் குழுத் தலைவர் உதயகுமாரன் “ஆனந்தவிகடன்” இதழுக்கு இந்த வாரம் அளித்த பேட்டியில் முதலமைச்சர் ஜெயலலிதா முதலில் அவர்களுக்கு வாக்குறுதி அளித்ததையும், பின்னர் கைவிட்டதையும் பற்றி வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

இந்த நிலையில்தான் எப்படிப்பட்ட திட்டங்களை முதலமைச்சர் பேரவையில் அறிவித்திருக்கிறார் தெரியுமா? நீலகிரி மாவட்டத்தில் 7000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2000 மெகாவாட்

மின்திறன் கொண்ட புனல் மின் திட்டம் உருவாக்கப்படுமாம்; இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படுமாம்; இத்திட்டம் நிறைவு பெற சுமார் 8 முதல் 10 ஆண்டுகள் ஆகுமாம்; மின் கட்டமைப்பையும், தொடரமைப்பையும் வலுப்படுத்த 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாம்; இது மட்டுமல்லாமல், 822 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட 14 புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுமாம்; திருவலத்தில் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய 400 கிலோ வோல்ட் துணை மின்நிலையமும், அதற்கான மின் தொடர்களும் அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு துவங்கப்படுமாம்; (அப்படியென்றால் மற்ற திட்டங்கள் எல்லாம் எந்த ஆண்டில் தொடங்கப்படும் என்று யாரும் கேட்கக் கூடாது; ஏனென்றால் முதல்அமைச்சர் சொன்னது 110வது விதியின் கீழான அறிக்கை) 2,300 கோடி ரூபாய்ச் செலவில் கயத்தாறிலிருந்து சென்னைக்கு மின் தொடர் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறதாம்; 1,230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின்நிலையங்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்படுமாம்; நெல்லை மாவட்டம், கானார் பட்டியில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமாம்; 11 புதிய 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளும் இந்த ஆண்டு துவங்கப்படுமாம்; மொத்தம் 56 துணை மின்நிலையங்கள் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுமாம். மேற்கூரையில் சாதனங்களைப் பொருத்தி மின் உற்பத்தி செய்யும் வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு 20,000 ரூபாய் முதலீட்டு மானியம் வழங்கப் போகிறார்களாம்; இறுதியான அறிவிப்பைப் பார்த்து யாரும் சிரிக்கக் கூடாது. ஆமாம், இந்த ஆண்டு 11 லட்சம் புதிய மின் இணைப்புகளை வழங்கப் போகிறார்களாம்! எப்படி அறிவிப்புகள்? ஓராண்டு நிதிநிலை அறிக்கையே சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு என்கிற போது, முதலமைச்சர் ஒரே நாளில் 110வது விதியின்கீழ் 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டங்களை அறிவிக்கிறார் என்றால் "மேலைக்கே வாழ்க்கைப்படப் போகிறேன்; கழுத்தே சும்மா இரு" என்று கிராமத்தில் சொல்வார்களே; அதைப் போலத்தான் இருக்கிறது.

சிறுவர்களுக்குப் பாடப் புத்தகத்தில் ஒரு கதை வரும். கிளாடியஸ் என்ற ஒரு கண்ணாடி வியாபாரி, கண்ணாடிப்

பொருட்களை வீதிகள் தோறும் விற்றுக் கொண்டே சென்றான். கடும் வெயில். அதன் கொடுமை தாங்கமுடியாமல், ஒரு மரத்தடியில் தனது கண்ணாடிப் பாத்திரங்கள் கொண்ட கூடையை கீழே இறக்கி வைத்துவிட்டு, நன்றாகப் படுத்து உறங்கிவிட்டான். தூக்கத்தில் ஒரு கனவு. கண்ணாடி வியாபாரி தனது பாத்திரங்களை விற்று அதிலே அதிக லாபம் அடைந்து கொஞ்சம் கொஞ்சமாகச் செல்வச் சீமானாக உயருகிறான். மிகப்பெரிய தொழில் அதிபராக அந்தஸ்தில் வளர்ந்துவிட்டான். அப்போது அவனது வேலைக்காரன் வந்து முதலாளியிடம் ஏதோ கூற, உடனே கோபமடைந்த முதலாளி அந்த வேலைக்காரனை நோக்கி ஓங்கி ஒரு உதை உதைக்கிறான். கனவிலே உதைப் பதாக நினைத்துக் கொண்டு, உண்மையிலேயே தன் கால் பக்கம் இருந்த கண்ணாடிப் பாத்திரங்கள் நிறைந்த கூடையை நோக்கி அந்த வியாபாரி ஓங்கி உதைக்க, அந்தக் கண்ணாடிப் பாத்திரங்கள் எல்லாம் உடைந்து தூளாகின்றன என்பது கதை. அதைப்போல பகல் கனவு காண யாருக்கும் உரிமை உண்டு அல்லவா?

அன்புள்ள,

மு.க.

28-4-2013

3744. பெண் ஆளும் மாநிலத்தில் மண் ஆகும் சட்டம் ஒழுங்கு!

உடன்பிறப்பே,

கடந்த 22-4-2013 அன்று பாராளுமன்றம் கூடியவுடனே மத்திய நிதிநிலை அறிக்கைமீதான இரண்டாவது கட்ட விவாதத்தைத் தொடங்கி மாண்புமிகு உறுப்பினர்கள் கடுமையாக விமர்சிக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் - அங்கே என்ன பேசப்பட்டது தெரியுமா? அலைக்கற்றை ஒதுக்கீடு பற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டுக் குழுவின் அறிக்கை எவ்வாறு ஏடுகளுக்கும், ஊடகங்களுக்கும் முன் கூட்டியே கசியவிடப்பட்டது என்பது பற்றியும், நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றியும், டெல்லி மாநகரில் ஐந்து வயது குழந்தை மீது நடத்தப்பட்ட பாலியல் பலாத்காரம் பற்றியும்தான் எதிர்க்கட்சிகள் எல்லாம் தங்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்து அவையை நடத்த முடியாமல் ஒத்திவைக்க வேண்டிய நிலைமை ஏற்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சி ஊடகங்கள் எல்லாம் அன்றையதினம் ஐந்து வயது சிறுமி மீதான பாலியல் பலாத்காரம் குறித்தும், அதற்குக் காரண மானவர்களுக்கு எப்படிப்பட்ட தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது குறித்தும் குழு விவாதங்களையெல்லாம் காரசாரமாக நடத்தினார்கள்.

டெல்லியில் பேருந்தில் கடந்த டிசம்பர் திங்களில் ஒரு மாணவி கற்பழிக்கப்பட்ட விவகாரம் குறித்து நாடாளுமன்றத்திலேயே பிரச்சினை எழுப்பப்பட்டு, குடியரசுத் தலைவர் மாளிகையைப் பெண்களே முற்றுகையிட முயற்சி செய்கின்ற அளவுக்கு நிலைமை முற்றியது. தமிழ்நாடு போலீஸ் பற்றிய வலைதளத்தில், 2011ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை தமிழகத்தில் 484 கற்பழிப்புக் குற்றங்கள் என்பதற்கு மாறாக; 2012ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 528 கற்பழிப்புக் குற்றங்கள் நடை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 528

குற்றங்களில், பெரும்பாலானவை அதாவது 75 கற்பழிப்புக் குற்றங்கள் சென்னை மாநகரில் மட்டுமே பதிவாகியுள்ளன.

திருவைகுண்டம் அருகில் பள்ளிக்குச் சென்ற 7ஆம் வகுப்பு மாணவி 12 வயதான புனிதா என்பவர் மர்ம நபரால் பலாத்காரம் செய்யப்பட்டு, கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டதைப் பற்றிய செய்தி அறிந்து, அந்த மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி என். பெரியசாமியை அந்த வீட் டிற்கே அனுப்பி, அந்தப் பெண்ணின் தாயாருக்கு ஆறுதல் கூறி, நிதி உதவி அளிக்கச் செய்ததோடு, கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினரான கவிஞர் கனிமொழியை தூத்துக்குடிக்கே நேரடியாக அனுப்பி அந்தக் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்கச் செய்தேன். அதன் பிறகுதான், அ.தி.மு.க. அரசு விழித்துக்கொண்டு, அந்த மாவட்ட அமைச்சர் ஒருவரை அந்த வீட்டிற்கு அனுப்பி நிதி வழங்கச் செய்தது.

ஏதோ ஓர் இடத்தில் மாத்திரமன்றி இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக இத்தகைய கொடுமையான பாலியல் வன்முறைக்கு மாணவிகளும் ஏழைப்பெண்களும் உள்ளாக்கப்படும் செய்தி பரவலாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய செயல்களில் ஈடுபடும் கொடியவர்களுக்குக் கடுமையான தண்டனை என்பது அவர்களை ஆயுள் முழுவதும் தனிமைச் சிறையில் அடைத்து வைக்க வேண்டும் என்பதுதான். இதுபற்றி மத்திய, மாநில அரசுகள் உறுதியான முடிவு எடுத்துப் பாலியல் குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்தப் பாலியல் வழக்குகளில் நடவடிக்கை எடுப்பது என்பது, காவல் நிலையத்தில் பெயருக்கு ஒரு வழக்குப் பதிவு என்ற அளவிலேதான் உள்ளது.

ஆனால் 1-1-2013 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாடு புறப்பட்டுச் சென்ற பிறகு, அவர் பெயரால் ஒரு நீண்ட அறிவிப்பு வந்துள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒடுக்கிட 13 அம்சத் திட்டம் என்ற பெயரால் வெளியாகியுள்ள அந்த அறிவிப்புக்கு எப்போதும் போலப் பாராட்டுகள் -பளபளப்பான விளம்பரங்கள்! பாலியல் பலாத்காரம் இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை முதலமைச்சர் ஆக்கிவிட்டார் என்றே மிகைப்படுத்தப்பட்ட செய்திகள்.

முதலமைச்சர் அறிவித்துள்ள 13 அம்சத் திட்டங்களில் முதல் மூன்று திட்டங்கள் பாலியல் வன்முறை வழக்குகளை - இனி நடப்பவை மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளை - யார் விசாரித்து நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றிய நிர்வாக அறிவிப்புகளாகும். நான்காவது அம்சம்தான் "குண்டர் தடுப்புச் சட்டம்" - ஏற்கனவே இந்த ஆட்சியில் இந்தச் சட்டம் முறை தவறிப் பயன்படுத்தப்பட்டுப் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கின்றது. தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் இந்தச் சட்டப் பிரிவின் கீழ்க் கைது செய்து, அவர்கள் எல்லாம் நீதிமன்றங்களின் மூலமாக நியாயம் பெற்று வருகிறார்கள். அடுத்து, பாலியல் வன்முறை வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப் போகிறார்களாம். இது முதலமைச்சரின் அறிவிப்பில் ஒரு அம்சம். பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவச் சிகிச்சைக்கான செலவை ஏற்பதும் ஒரு திட்டமாகும். இவ்வாறு அறிவிக்கப்பட்ட அந்த 13 அம்சத் திட்டங்கள் எல்லாம் பிறகு என்னவாயிற்றோ? மற்ற பல அறிவிப்புகளைப் போல, இந்த அறிவிப்புகளும் "ஏட்டுச் சுரைக்காய்" என்ற அளவிலே நின்றுவிட்டதோ; என்னவோ?

டெல்லியில் தற்போது ஒரு சிறுமியின் மீதான பாலியல் பலாத்கார சம்பவம் நினைத்துப் பார்க்க முடியாத கொடூரம். பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஒருவன், அந்தச் சிறுமிக்கு "சாக்லெட்" வாங்கித் தருவதாகச் சொல்லி அழைத்துப் போய்; அவளை ஒரு அறையிலே அடைத்து வைத்து, தன் நண்பர்களுடன் சேர்ந்து பலாத்காரம் செய்தது மட்டுமல்ல, அவளுடைய உடம்பு முழுவதும் கடிக்கப்பட்ட காயங்கள்! பூட்டப்பட்ட அறைக்குள்ளிருந்து அவளது அழுகுரலைக் கேட்டுப் பசியோடு கிடந்த அந்தச் சிறுமியை மீட்டிருக்கிறார்கள். 2001ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை, இந்தியாவில் 48,338 குழந்தைகள் மீதான பாலியல் பலாத்கார வழக்குகள் பதிவாகியிருக்கின்றன.

டெல்லியில் நடைபெற்ற இந்தச் சிறுமி மீதான பாலியல் தொடர்பான வழக்கு நாடாளுமன்றம்வரை மிகவும் சூடாக விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே; தமிழகத்திலே என்ன நிலை?

கடந்த ஏப்ரல் 12ஆம் தேதியன்று தொழில் நகரமான திருப்பூரில் ஒரு கொடுமை. எட்டு வயதான ஒரு மலையாளச் சிறுமி

பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு, வீட்டிலே தனியாக இருந்த போது, ஒரு கும்பலால் அலற அலறக் கற்பழிக்கப்பட்டிருக்கிறாள்.

அந்தச் சிறுமியின் தாய் லலிதா; தந்தை உன்னிக்கிருஷ்ணன் சென்னையிலே பணியாற்றுகிறார். கணவன், மனைவியிடம் சில காலமாக நல்ல உறவு இல்லை. திருப்பூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கிறாள் அந்தச் சிறுமி. பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு, அந்தச் சிறுமி தன் தாயார் வேலை செய்கின்ற தொழிற்சாலையிலிருந்து திரும்புகிறவரை "டியூஷன்" படிப்பது வாடிக்கை. ஆனால் ஏப்ரல் 12ஆம் தேதி பள்ளி சீக்கிரம் முடிந்துவிட்டது. "டியூஷனும்" அன்று ரத்தாகிவிட்டது. எனவே சிறுமி வீட்டிற்கு வந்து சாப்பிடப் போகும் நேரத்தில் கண்ணன் என்பவன் வீட்டிற்குள் நுழைந்திருக்கிறான். அவனும் வேறு மூவரும் சேர்ந்து அந்தச் சிறுமியைக் கற்பழித்த பிறகு, கொடுமையும் படுத்தியிருக்கிறார்கள்.

மாலையில் தாயார் இல்லம் திரும்பியபோது சிறுமி நினைவில்லாமல் கிடந்ததைப் பார்த்துவிட்டு, அங்கே உள்ள ஒரு மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டுச் சென்றிருக்கிறார். நினைவு திரும்பிய பிறகு சிறுமி நடந்ததையெல்லாம் விவரித்ததன் அடிப்படையிலேதான் காவல் துறையிலே புகார் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் காவல்துறை தொடக்கத்தில் சாதாரணமாக இதை எடுத்துக்கொண்டபோதிலும், உள்ளூர்வாசிகள் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்த பிறகு வழக்கினைப் பதிவுசெய்து, குற்றவாளிகள் நால்வரையும் கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் நால்வரும் அங்கேயுள்ள தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுபவர்கள். காவல்துறையில் புகார் செய்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர்கள் மிரட்டியிருக்கிறார்கள்.

தற்போது கோவையிலே உள்ள "கங்கா மருத்துவமனை"யில் அந்தச் சிறுமி சிகிச்சை பெற்று வருகிறாள். கேரள முதலமைச்சர் உமன் சாண்டி விசாரித்தபோது சிறுமி நலம் பெற்று வருவதாக மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கேரள முதலமைச்சர் சிறுமியின் குடும்பத்தினரிடம் பேசியதோடு, மருத்துவ உதவி போன்ற அனைத்து உதவிகளையும் செய்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார். மேலும் உள்ளூர் மலையாளச் சங்கங்கள் அதிர்ச்சியிலே இன்னமும் உறைந்து போயுள்ள ஜெலலிதாவிற்கு

ஆறுதல் கூறிவருகின்றன. இதற்கிடையே கேரள முதல்வரின் அறிவுரையின் பேரில், கேரள மாநில காங்கிரஸ் கட்சியின் செயலாளர் சி. சந்திரன் நேரடியாக வந்து சிறுமியின் உறவினர்களை விசாரித்திருக்கிறார். மேலும் அவர் தமிழகத்திலே உள்ள மலையாளச் சங்க நிர்வாகிகளிடமும் இதுபற்றிப் பேசியிருக்கிறார்.

இவ்வளவும் நடந்த பிறகும் கூட; இந்தப் பாலியல் பலாத்கார சம்பவம் நடைபெற்ற தமிழகத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. அமைச்சர்களோ, உள்ளூரில் உள்ள ஆளுங் கட்சியினரோ அந்தச் சிறுமியைப் பார்க்கவோ, அவருடைய தாயாருக்கு ஆறுதல் கூறவோ, எந்த உதவியும் செய்யவோ முன்வரவில்லை என்பதுதான் சோகத்தின் உச்சக் கட்டம். கேரள மாநில முதல்வர் இந்தச் சம்பவத்திற்காக முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில், தமிழகத்திலே உள்ள ஒரு பெண் முதலமைச்சர், இதுபற்றி ஒரு அறிக்கைகூட வெளியிடவில்லை. மாறாக 23ஆம் தேதி சட்டப் பேரவையில் தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது என்று பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டு வந்து காவல் துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்திருக்கிறார்.

முதலமைச்சர் மாத்திரமல்ல; தமிழகத்திலே உள்ள ஊடகங்களும், பத்திரிகைகளும் டெல்லியிலே உள்ள சிறுமி கற்பழிக்கப்பட்டது பற்றி விபரங்கள் அனைத்தையும் விமர்சிக்கின்ற நிலையில், திருப்பூரில் நடைபெற்ற கற்பழிப்பு பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படாதது ஏன்? அதைப்பற்றி எழுதினால், தொலைக்காட்சியிலே விமர்சனம் செய்தால், தமிழகத்திலே உள்ள முதல் அமைச்சரின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சம்தானே காரணம்! தமிழகத்திலே கற்பழிக்கப்பட்டது ஒரு மலையாளச் சிறுமி என்றதும், அந்த மாநில முதல் அமைச்சரே நேரடியாகத் தலையிட்டுக் கவனம் செலுத்துகின்றபோது, தமிழக முதலமைச்சர் இதிலே அலட்சியம் காட்டுவது சரியானதுதானா?

பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு உரிய நியாயம் வழங்கவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படவும், தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நண்பர் திருப்பூர் கே. சுப்பராயன் கோரிக்கை வைத்துள்ளார். இந்தக் கோரிக்கையைச் சுப்பராயன் தமிழக அரசுக்கு வைப்பதைவிட, அவருடைய கட்சியின் மாநிலச்

செயலாளரான தோழர் பாண்டியனிடம் தெரிவித்தாலே போதும்; பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நிவாரணம் கிடைத்திட வழி ஏற்படும்.

திருப்பூரிலே மாத்திரமல்ல; தேனி மாவட்டத்தில், ஆண்டிப்பட்டி அருகே உள்ள பாலக் கோம்பை கிராமத்தைச் சேர்ந்த எஸ்.எஸ்.எல்.சி. மாணவி நதியா என்பவர் இந்த மாதத்தில் முதல் வாரத்திலே கற்பழிக்கப்பட்டு, கொலையே செய்யப்பட்டிருக்கிறாள். இதைப் பற்றியெல்லாம் இங்கேயுள்ள அரசு கவனிக்கிறதா? சட்டப்பேரவை என்று ஒன்று அன்றாடம் நடைபெறுகிறதே, அங்கேயாவது இதுபற்றியெல்லாம் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

பாலியல் குற்றம் என்றால் டெல்லி மாநகரமே அல்லோலகல்லோலப்படுகிறது; பேரணி - முற்றுகைப் போராட்டம் என்று கொந்தளிப்பு ஏற்படுகிறது. கேரளச் சிறுமி பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான செய்தி கேள்விப்பட்டதுமே கேரள முதலமைச்சரும், மலையாளிகள் சங்கத்தினரும் கவலை கொண்டு ஆறுதல் கரம் நீட்டுகிறார்கள். ஆனால் ஒரு பெண்மணி ஆளும் தமிழ் மாநிலத்தில், தட்டிக்கேட்க ஆளில்லாமல் பாலியல் குற்றங்கள் பரவலாக நடைபெறுகின்றனவே?

அன்புள்ள,

மு.க.

29-4-2013

3745. அமைப்பு சாராத் தொழிலாளர்களும் - நானும்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்து நலன் பேண வேண்டுமென்பதற்காகவே, 35 நலவாரியங்களை அமைத்து, அந்த வாரியங்களின் மூலமாக அந்தந்தத் தொழிலாளர்களை உறுப்பினர்களாக்கி, அவர்களுக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளையெல்லாம் செய்து, அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் காத்து வந்ததைத் தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் மறந்திருக்கமாட்டார்கள். எந்தெந்த வகைத் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து தங்களுக்கெனத் தனி வாரியம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கழக ஆட்சியில் கோரிக்கை வைத்தபோதெல்லாம் அந்தக் கோரிக்கைகளை ஏற்று, அந்தத் தொழிலாளர்களுக்கான வாரியங்கள் அமைக்கப்பட்டதை அனைவரும் அறிவர். அந்த வாரியங்களிலே உறுப்பினராக ஆக வேண்டுமென்றால், தொழிற்சங்கம் மூலமாக வேண்டுகோள் வந்தாலேபோதும், உடனடியாக உறுப்பினர் அட்டைகள் அந்தத் தொழிற்சங்கம் மூலமாகவே வழங்கப்பட்டுவிடும்.

அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு என்று ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், அந்தந்தக் குழுக்களிலே கழக ஆட்சியிலே இடம் பெற்றிருந்தார்கள். ஆனால் தற்போது, அ.தி.மு.க. ஆட்சியிலே ஆலோசனைக் குழுக்களே மீண்டும் புதுப்பிக்கப்படவும் இல்லை; அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள் அனைத்தும் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டவை என்ற ஒரே காரணத்தினால் செயலிழந்து முடமாக்கப்பட்டு விட்டன. தற்போது உறுப்பினராகப் பதிவு செய்திட வேண்டுமென்றால், உறுப்பினர்களே நேரில் வர வேண்டும் - கிராம நல அதிகாரி சான்றிதழ் அளிக்க வேண்டும் -

வங்கிக் கணக்கு தொடங்கப்பட வேண்டும் என்று இப்படியெல்லாம் கடும் நிபந்தனைகள்!

இந்த நேரத்தில் ஐந்தாவது முறையாகக் கழக ஆட்சி பொறுப்பேற்ற 13-5-2006 முதல் 19-4-2011 வரை எந்தெந்த நலவாரியங்களின் சார்பில் எந்த அளவிற்கு உதவிகள் வழங்கப் பட்டன என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்கிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 10 இலட்சத்து 59 ஆயிரத்து 969 தொழிலாளர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு, அவர்களில் 3 இலட்சத்து 46 ஆயிரத்து 44 தொழிலாளர் குடும்பங்களுக்கு 100 கோடியே 54 இலட்சத்து 504 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டில் அப்போதைய தி.மு.க. அரசினால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டுவந்த தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்திருந்த 4 இலட்சத்து 49 ஆயிரத்து 938 தொழிலாளர்களில் 2 இலட்சத்து 87 ஆயிரத்து 724 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 67 கோடியே 33 இலட்சத்து 7 ஆயிரத்து 113 ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

2000-2001 ஆம் ஆண்டில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கிய தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் முதலான 9 அமைப்புசாரா நல வாரியங்களை முந்தைய அ.தி.மு.க அரசு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் இணைத்துவிட்டது.

ஆனால், அந்த 9 வகை அமைப்புசாரா தொழில்களிலும் ஈடுபட்டுவரும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களின் நலன்களில் அக்கறை கொண்டு சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் அவையனைத்தையும் 1.9.2006 முதல் மீண்டும் தனித்தனி நல வாரியங்களாகச் செயல்படும் வகையில் கழக அரசு ஆணையிட்டதுடன், மேலும் பல அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களையும் உருவாக்கி அவற்றின்மூலம் தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துப் பல வகை நலத்திட்ட உதவிகளை வழங்கி வந்தது.

அந்த வகையில், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியத்தில் பதிவு செய்து கொண்ட

ஒரு இலட்சத்து 619 தொழிலாளர்களில் 17 ஆயிரத்து 46 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 3 கோடியே 92 இலட்சத்து 11 ஆயிரத்து 633 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட 34 ஆயிரத்து 182 தொழிலாளர்களில் 16 ஆயிரத்து 634 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 3 கோடியே 14 இலட்சத்து 60 ஆயிரத்து 732 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட 25 ஆயிரத்து 397 தொழிலாளர்களில் 9 ஆயிரத்து 332 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 2 கோடியே 8 இலட்சத்து 89 ஆயிரத்து 826 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட 4 இலட்சத்து 42 ஆயிரத்து 288 தொழிலாளர்களில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 850 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 61 கோடியே 25 இலட்சத்து 95 ஆயிரத்து 684 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட 82 ஆயிரத்து 61 தொழிலாளர்களில் 29 ஆயிரத்து 65 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 9 கோடியே 21 இலட்சத்து 50 ஆயிரத்து 489 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட 33 ஆயிரத்து 416 தொழிலாளர்களில் 7 ஆயிரத்து 401 பணியாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு கோடியே 55 இலட்சத்து 49 ஆயிரத்து 745 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிபட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துகொண்ட 1 இலட்சத்து 80 ஆயிரத்து 116 தொழிலாளர்களில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 185 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 23 கோடியே 88 இலட்சத்து 20 ஆயிரத்து 61 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட

11 ஆயிரத்து 225 தொழிலாளர்களில் 3 ஆயிரத்து 61 பணியாளர் களின் குடும்பங்களுக்கு 89 இலட்சத்து 59 ஆயிரத்து 583 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

இதுபோலவே, தமிழ்நாடு ஓவியர் நல வாரியம் என்றும், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் என்றும், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியம் என்றும், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியம் என்றும், தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியம் என்றும், தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் என்றும், சமையல் கலைஞர்கள் நல வாரியம் என்றும் பல்வேறு வகைத் தொழிலாளர்களுக்காக வாரியங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தொழிலாளர் நலத்துறை அல்லாத பிற துறைகளின் கீழ் இயங்கிய மற்ற 18 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் என்று எடுத்துக் கொண்டால் டி.வி. தொழிலில் ஈடுபட்டிருப்போரின் நலன்களைக் கருத்தில்கொண்டு கேபிள் டி.வி. தொழிலாளர்கள் நலவாரியம் 28.3.2008 அன்று அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் சமூகப்பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 7.8.2006 அன்று தொடங்கப்பட்டு, 18.1.2007 அன்று விவசாயத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப்பட்டது. இவ்வாரியத்தின்கீழ் ஒரு கோடியே 74 இலட்சத்து 65 ஆயிரத்து 498 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். அதில் 8 இலட்சத்து 72 ஆயிரத்து 981 விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு 684 கோடியே 2 இலட்சத்து 55 ஆயிரத்து 686 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

'தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்' 20.4.2007 அன்று தொடங்கப்பட்டு. உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக முதற்கட்டமாக 1 கோடி ரூபாய் நிதி அனுமதிக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 25 ஆயிரத்து 192 கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு 15.3.2011 வரை 4 ஆயிரத்து 869 கலைஞர்களின் குடும்பங்களுக்கு

66 இலட்சத்து 31 ஆயிரத்து 567 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

'தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்' 27.5.2008 முதல் தொடங்கப்பட்டது. 15.3.2011 வரை 9 ஆயிரத்து 762 பேர் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டனர். நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3 ஆயிரத்து 593 நரிக் குறவர்களின் குடும்பங்களுக்கு ஒரு கோடியே 97 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

'தமிழ்நாடு கிராமக் கோவில் பூசாரிகள் நல வாரியம்' 22.4.2007 அன்று தொடங்கப்பட்டு, 65 ஆயிரத்து 326 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். 15.3.2011 வரை 2 ஆயிரத்து 30 பூசாரிகளின் குடும்பங்களுக்கு 63 இலட்சத்து 21 ஆயிரத்து 45 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது.

'தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம்' 24.4.2007 முதல் தொடங்கப்பட்டு, இவ்வாரியத்தில் 15.3.2011 வரை 52 ஆயிரம் பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 3 ஆயிரத்து 632 பேருக்கு ஒரு கோடியே 62 இலட்சத்து 75 ஆயிரத்து 478 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

'தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்' 10.4.2008 அன்று தொடங்கப்பட்டு, 2 ஆயிரத்து 86 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். 775 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 83 ஆயிரத்து 880 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

'தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்' 20.4.2007 அன்றும், தமிழ்நாடு உலமா மற்றும் பணியாளர் நல வாரியம் 24.8.2009 அன்றும்; தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் 31.8.2010 அன்றும், 'தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம்' பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில் 20.4.2007 அன்றும் தொடங்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வந்தன.

தமிழ்நாடு தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தில் 43 ஆயிரத்து 351 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 15.3.2011 வரை 1,133 பேருக்கு 17 இலட்சத்து 86 ஆயிரத்து 440 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்ட மிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென 'தமிழ்நாடு மீனவர் நல வாரியம்' 29.6.2007 அன்று உருவாக்கப்பட்டது. 3 இலட்சத்து 85 ஆயிரத்து 756 மீனவ தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, 15.3.2011 வரை 5 ஆயிரத்து 60 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு 5 கோடியே 22 இலட்சத்து ஓராயிரத்து 411 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு திரைப்படத் துறையினர் நல வாரியம் 28.10.2009 அன்றும், தமிழ்நாடு ஆடு வளர்ப்போர் நல வாரியம் 16.5.2010 அன்றும், தமிழ்நாடு காதி நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம் 6.8.2010 அன்றும், தமிழ்நாடு பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர் நல வாரியம் 17.8.2010 அன்றும் தொடங்கப்பட்டன. மாநிலம் முழுவதிலும் உள்ள ஆவண எழுத்தர்கள் மற்றும் குடும்பத்தினர் நலனைக் கருத்தில் கொண்டு, 28.10.2010 அன்று ஆவண எழுத்தர் நலவாரியம் உருவாகபபட்டது.

ஆக மொத்தம் 35 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 13 இலட்சத்து 55 ஆயிரத்து 884 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில், 21 இலட்சத்து 41 ஆயிரத்து 279 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 1011 கோடியே 56 இலட்சத்து ஓராயிரத்து 87 ரூபாய் உதவித்தொகை கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது.

கழக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த இந்த உதவிகள் எல்லாம் தற்போது தொடர்ந்து வழங்கப் படுகின்றனவா, அந்த வாரியங்களின் கதி என்ன என்றே தெரியாதநிலை உள்ளது. இதைப்பற்றியெல்லாம் ஆராய்வதற்காகச் சென்னை மாநகரில், ஏ.ஐ.டி.யு.சி. சங்க அலுவலகத்தில், கடந்த 23ஆம் தேதியன்று தொழிற்சங்கத் தலைவர், தோழர் எஸ்.எஸ். தியாகராசன் தலைமையில் அனைத்துச் சங்கங்களின் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் தொ.மு.ச., ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., பி.எம்.எஸ்., மற்றும் எச்.எம்.எஸ். சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருக்கிறார்கள். தொ.மு.ச. சார்பில் கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் தம்பி சிங்கார இரத்தின சபாபதியும் கலந்துகொண்டிருக்கிறார்.

அ.தி.மு.க. அரசின் அமைப்புசாராத் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து, வரும் 7-5-2013 அன்று காலை 10 மணியளவில் தமிழகத்தில் அனைத்து மாவட்ட அலுவலகம் முன்பு பத்து தொழிற்சங்கங்களின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட முன்வந்திருக்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் அமைப்பு சாராத் தொ.மு.ச. பேரவையைச் சார்ந்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று நானும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு மே தினத்தையொட்டி; தமிழக முதலமைச்சர் பேரவையில் படிக்கும் 110வது விதி அறிக்கையாக, இந்த 35 வாரியங்களையும் மீண்டும் உயிர்ப்பித்துப் பல லட்சக்கணக்கான அமைப்பு சாரா தொழிலாளர்களின் வாழ்வில் மீண்டும் ஒளியேற்றுவதாக அமைய வேண்டும் என்பதே அந்த வாரியங்களைத் தொடங்கக் காரணமாக இருந்தவன் என்ற முறையில் எனது எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும்.

அன்புள்ள,

மு.க.

30-4-2013

3746. காழ்ப்புணர்வின் உச்சகட்டம்!

உடன்பிறப்பே,

15-9-2007 அன்று ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழவில் கலந்துகொண்ட நான் என் பேச்சின் இறுதியாக ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அந்தக் கூட்டத்தில் அது நிறை வேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் வருமாறு :-

“ஏறத்தாழ நூறாண்டுக் காலக் கனவாகவும், திராவிட இயக்கத்தின் தனிப் பெரும் கோரிக்கைகளில் ஒன்றாகவும் இருந்து வந்த சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், திருமதி சோனியாகாந்தி அவர்களும் பேருதவி புரிந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்துள்ள நிலையில், அதனைக் கெடுத்து, தென்னக மக்களுடைய பொருளாதார வளம் பெருகிட இயலாமல், ராமர் பாலம் என்ற மதவாத மிரட்டலைச் செய்திட ஒரு சில மதவாத அமைப்புகள் குறுக்கே நிற்பதற்கு; மத்திய அரசு அஞ்சி அதற்கு இடம்தரக் கூடாது என்றும், மதவாத மூட நம்பிக்கைகளை வேரோடுகளையப் போரிட்ட ஈரோடு தந்த வள்ளல் பெரியார் பிறந்த மண்ணிலே இருந்து இந்த மாபெரும் கூட்டத்தின் வாயிலாகத் தென்னக மக்களின் சார்பில் குரல் கொடுக்கிறோம்”

இது கழகப் பொதுக் கூட்டத்தில் 2007இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். ஆனால் இதற்கு எதிர்ப்பாக இன்னொரு தீர்மானம்; அது என்ன தெரியுமா?

“சேது சமுத்திரத் திட்டத்தின் பெயரால் ராமர் பாலத்துக்குச் சேதம் விளைவிக்க மத்திய அரசு முயற்சித்தால் அதை பா.ஜ.க. கடுமையாக எதிர்க்கும். ராமர் பாலத்தைச் சேதப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் பா.ஜ.க. ஏற்காது. ராமர் பாலம் இல்லாமல் ராமாயணம் கிடையாது. இந்தியாவின் அடையாளமும் முழுமையாகாது” என்று பா.ஜ.க.வின் தேசியக் கவுன்சில் கூட்டத்தில் 3-3-2013 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அந்தக் கூட்டத்தில், "ராமர் பாலத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கத் தமிழக அ.தி.மு.க. அரசு அளித்து வரும் ஒத்துழைப்பை பா.ஜ.க. பாராட்டுகிறது" என்றும் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்.

சேது சமுத்திரத் திட்டம் என்பது தமிழ்நாட்டு மக்களின் எத்தனை ஆண்டுக் காலக் கனவு?

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சி மத்தியிலே அமைந்து, அதிலே தி.மு.க.வும் இடம்பெற்றபோது, சேது சமுத்திரத் திட்டத்தை எப்படியாவது குறைந்தபட்சத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டோம். அதனையொட்டி, 27-5-2004 அன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் சார்பில் வைக்கப்பட்ட குறைந்தபட்ச செயல் திட்டத்தில், "Long Pending Schemes in specific States that have national significance, like the Sethu Samuthiram Project....will be completed expeditiously" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டது.

மேலும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிதிநிலை அறிக்கையிலும் அது சேர்க்கப்பட்டு, மதுரையில் நடந்த சேது சமுத்திரத் திட்டத்தின் பிரமாண்டமான தொடக்க விழாவில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களும், நானும், மற்ற தோழமைக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டோம். சேது சமுத்திரத் திட்டத்திற்காக அந்தக் காலத்தில் நாம் மட்டுமே குரல் கொடுக்கவில்லை.

2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக, அ.தி.மு.க. சார்பில் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில்,

"தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியிலும், நாட்டின் ஒட்டு மொத்தத் தொழில் மேம்பாட்டிலும் முக்கியப் பங்காற்றவிருக்கும் **சேது சமுத்திரத் திட்டத்தினை** நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க, மைய ஆட்சியில், அமைச்சுப் பொறுப்பில் ஐந்து ஆண்டு காலம் இருந்த தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., கட்சிகள் தவறி விட்டதை இந்த நாடு நன்கறியும். இத்திட்டத்திற்குப் போதிய நிதியினை உடனடியாக ஒதுக்கி, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத்

திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று அமைய இருக்கும் மையஅரசை அ.தி.மு.க. வலியுறுத்தும்" என்று சொல்லியிருந்தார்கள்.

இப்படிச் சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்ட ஜெயலலிதா தலைமையிலே உள்ள தமிழக அரசுதான், நேற்றைய தினம் சேது சமுத்திரத் திட்டத்தைக் கைவிட உத்தரவிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது என்றால், இதற்குப் பெயர்தானே இரட்டை வேடமும், கபட நாடகமும் ஆகும்.

1955ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நடத்தப்பட்ட எல்லா ஆய்வுகளும் தொழில் நுட்பரீதியாக இந்தத் திட்டம் சாத்தியமானதுதான் என்றே நிரூபித்திருக்கின்றன. இதில் எள்ளளவு ஐயமும் யாருக்கும் இருந்தது இல்லை.

புதிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர், பா.ஜ.க. வைச் சேர்ந்த திரு. அருண் ஜேட்லி, 9-3-2001 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். இந்த ஆய்வுப் பொறுப்பு, 2001 அக்டோபரில் 'நீரி' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

நாகபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் (NEERI) 'நீரி' என்ற சுற்றுச்சூழல் ஆய்வு மையம் அதனை ஆய்வு செய்து, எந்தக் கேடும் வராத- குறைந்த செலவில் பயணம் செய்ய ஏற்ற - சிறந்த தடம் ஆறாம் வழித்தடமான, "ஆதாம் பாலம்" பகுதியில் அமைவதுதான் என்று கூறிவிட்டது.

இறுதியாக 31.3.2005 அன்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் தனது முறையான நடைமுறைகளுக்கும், விரிவான ஆய்வுகளுக்கும் பிறகு, இத்திட்டத்திற்கான சுற்றுச் சூழல் ஒப்புதலை வழங்கியது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள், விசாரணைகள் ஆகியவற்றின் மூலம் இந்த "ஆதாம் பாலம்" கடல் பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு கட்டுமான அமைப்பும் இருப்பதற்கான உருப்படியான அறிவியல் பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை என்பது தெளிவாகி யிருக்கிறது.

உறுதியான ஆதாரம் எதுவும் இல்லாத காரணத்தால்தான், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு உட்பட அடுத்தடுத்து வந்த எந்த ஒரு அரசும் இத்திட்டப் பகுதியைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கவும் இல்லை; அதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவும் இல்லை.

9.3.2001 இல் அமைச்சர் அருண்ஜேட்லி; 25.10.2002இல் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசர்; 29.10.2002 இல் அமைச்சர் வி.வி. கோயல்; அதற்குமுன் அமைச்சர் சத்ருகன் சின்கா ஆகியோர் "ஆதாம் பாலம்" வழியிலான 6-வது எண் வழித்தடத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

நேற்றையதினம் (29-4-2013) தமிழக அரசின் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "சேது சமுத்திரத் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும், ராமர் பாலத்தைத் தேசிய புராதனச் சின்னமாக அறிவிக்க வேண்டும், ராமர் பாலத்தைச் சேதப்படுத்தவோ, உடைக்கவோ கூடாது என்று மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறி, அ.தி.மு.க. அரசு இப்போது இத்திட்டத்தை எதிர்க்கிறது. ஆனால் 2001 தேர்தல் அறிக்கையில் பக்கம் 83-84இல் ஜெயலலிதா கூறியுள்ளது என்ன:-

> "இந்திய தீபகற்பத்தைச் சுற்றி இதுவரை தொடர்ச்சியான கப்பல் போக்குவரத்திற்கு ஏற்ற பாதைகள் இல்லை. மேற்கிலிருந்து கடல் வழியாகக் கிழக்கு நோக்கிக் கப்பல்கள் செல்லவேண்டுமானால், இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வாக அமைவதுதான், சேது சமுத்திரத் திட்டம். இத்திட்டத்தின்படி ராமேசுவரத்திற்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள் மற்றும் பாறைகளை அகற்றி ஆழப்படுத்திக் கால்வாய் அமைப்பது சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்"

– என்று கூறப்பட்டுள்ளது. தேர்தல் அறிக்கை யில் "ஆடம்ஸ் பிரிட்ஜ்" என்றும், "மணல் மேடுகள்" என்றும் அன்று கூறிய ஜெயலலிதா இன்று திடீரென்று "ராமர் பாலம்" எனக் கூறுவது எப்படி? ஏன்?

“ராமாயணம் என்பது ஒரு காவியமல்ல. அது திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தைப் பற்றி மிகைப்படுத்தி, பல அறிவிற்குப் பொருந்தாத பல கதைகளைப் புகுத்தி எழுதப்பட்ட ஒரு கற்பனைக் கதை” என்று பண்டித நேரு அவர்கள் இந்திராகாந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்களில் (டிஸ்கவரி ஆப் இண்டியா என்ற நூலில்) குறிப்பிட்டுள்ளார்.

“The Ramayana is not history or biography. It is a part of Hindu mythology” என்று ஆழ்ந்த ராமபக்தரான மூதறிஞர் இராஜாஜி அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

10-5-1986 அன்று எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கோரி, ஒரு தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

2005 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அடிக்கல் நாட்டப்பட்டுச் சேதுக் கால்வாய்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இதுவரை 829 கோடி ரூபாய் செலவு செய்த பிறகு, இவ்வளவு பணமும் செலவழிக்கப்படும்வரை வாய் மூடி மௌனியாக இருந்துவிட்டுத் தற்போது திடீரென்று இந்தத் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட ஜெயலலிதா நினைப்பது சரிதானா?

சேதுத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், அதன் மூலம் தமிழகத்தில் தொழில், வர்த்தகம் பெருகும்; நாட்டின் அன்னியச் செலாவணி வருவாய் அதிகரிக்கும்; கப்பல்களின் பயண தூரம், நேரம் பெருமளவு குறையும்; தமிழகம் மற்றும் அண்டை மாநிலத் துறைமுகங்களில் சரக்குகள் கையாளும் திறன் அதிகரிக்கும்; ராமேசுவரம் அல்லது மண்டபத்தில் புதிய சிறு துறைமுகம் உருவாகும்; சேதுக் கால்வாய் திட்டத்தின்கீழ் மீன் பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதால் கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி மீனவர்களின் பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் உயரும்; மன்னார் வளைகுடாவிலிருந்து பாக் கடல் சென்று வர மீனவர்களுக்கு இக்கால்வாய் வசதி அளிக்கும்; இலங்கை உள்ளிட்ட வேறு நாடுகளின் துறைமுகங்களில் இந்தியச் சரக்குகள் பரிமாற்றம் செய்யப்படுவது தவிர்க்கப்படும்;

நாட்டின் கடலோரப் பாதுகாப்பு வலுப்படுத்தப்படும்; இத்திட்டத்தால் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும்; சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 8 கோடி மனித நாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

ஏராளமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்; ராமேஸ்வரம் மற்றும் நாகப்பட்டினம் துறை முகங்கள் மேம்படுத்தப்படுவதன் வாயிலாக சுமார் 10 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்புக் கிட்டும்; சேது சமுத்திரக் கால்வாயைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளுக்கு இடையேயான கப்பல் போக்குவரத்து தூரம் சுமார் 424 மைல் அளவுக்குக் குறையும்.

இதன் மூலம் கப்பல்களின் பயண நேரம் 30 மணி அளவிற்குக் குறையும் வாய்ப்புள்ளது. கணிசமான எரி பொருள் சேமிப்பும், அன்னியச் செலாவணி சேமிப்பும் ஏற்படும். கப்பல் வாடகைக் கட்டணத்தில் கணிசமான சேமிப்பு ஏற்படும்.

பயண நேரம் குறைவதால் கப்பல்கள் கூடுதல் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் கூடுதல் சரக்குகளைக் கையாள இயலும்; தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரை துறைமுகங்களில் ஒன்று சரக்குப் பெட்டகப் போக்குவரத்திற்கென ஒருங்கிணைப்புத் துறைமுகமாக மேம்படுத்தப்படும்; தூத்துக்குடி துறைமுகம் பெருமளவில் வளர்ச்சி அடையும்; கடற்படை மற்றும் கடலோரப் படைக் கப்பல்கள் கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிகளுக்கு அதி விரைவில் செல்ல இயலும். இதன் மூலம் இந்தியப் படைத்திறன் பெருமளவில் மேம்படுத்தப்படும்; ராமனாதபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி மாவட்டங்களில் கட்டமைப்பு வளர்ச்சி பெருகும்.

தொடங்கி வைக்கப்பட்ட சேது சமுத்திரத் திட்டம், அப்போது அமைச்சராக இருந்த தம்பி டி.ஆர். பாலுவின் நல்ல முயற்சியின் காரணமாக வேகமாக முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்த நேரத்தில், இந்தத் திட்டம் பூர்த்தியடைந்து விட்டால் தி.மு. கழகத்திற்கு பெரும் பெயர் வந்து விடுமே என்ற காரணத்தால், இந்தத் திட்டத்திற்காக 829 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ள

நிலையில், இதற்கும் மூடு விழா நடத்த அ.தி.மு.க. அரசு காழ்ப்புணர்வோடு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது என்பதுதான் உண்மை!

அன்புள்ள,

மு.க.

1-5-2013

3747. அண்ணா அறிவித்த எழுச்சி நாள் எதற்காக?

உடன்பிறப்பே,

சேது சமுத்திரத் திட்டம் என்பது தமிழ்நாட்டு மக்களின் எத்தனை ஆண்டுக் காலக் கனவு?

150 ஆண்டுக் காலமாக தமிழ்மக்கள் கண்ட கனவு தான் சேது சமுத்திரத் திட்டம். பேரறிஞர் அண்ணா அவர்கள் சேது சமுத்திரத் திட்டத்திற்காக ஆட்சியிலே இருந்த போதே "எழுச்சி நாள்" கடைப்பிடித்தார். தி.மு. கழகம் மாத்திரமல்ல; அ.தி.மு.க.வும் 2001ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலும், 2004ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலும் சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று கோரிக்கை வைத்ததை மக்கள் மறந்து விடவில்லை. மத்தியிலே அமைகின்ற ஆட்சியிடம் சேது திட்டத்தை வலியுறுத்திக் கேட்டுப் பெறுவோம் என்றார்கள். அவர்களே தற்போது சேது சமுத்திரத் திட்டம் வேண்டாமென்று உச்சநீதிமன்றத்திலே 29-4-2013 அன்று மனுத்தாக்கல் செய்திருக்கிறார்கள்.

ஏன்? அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போதே 10-5-1986 அன்று சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கோரி, ஒரு தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

சேது சமுத்திரத் திட்டப் பணிகளின் துவக்க விழா 2005ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 2ஆம் நாள் மதுரை மாநகரமே குலுங்குகின்ற வண்ணம் தென் மாவட்டங்களில் உள்ள மக்கள் எல்லாம் திரண்டிருந்து நடத்திய காட்சிதான் தற்போது என் கண்ணுக்குத் தெரிகிறது. மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த தம்பி டி.ஆர்.பாலுதான் மதுரை விழாவுக்குத் தலைமை வகித்தார். பிரதமர் மன்மோகன்சிங்

அவர்கள் சேது சமுத்திரத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார். திருமதி சோனியா காந்தி அம்மையாரும், நானும் விழாவிற்கு முன்னிலை வகித்தோம். தமிழக ஆளுநராக இருந்த சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தமிழக அரசின் ஒரே பிரதிநிதியாகச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மத்திய அமைச்சர்களாக இருந்த ப.சிதம்பரம், தயாநிதிமாறன், ஆ.இராசா, அன்புமணி ராமதாஸ், மணிசங்கர அய்யர், கே.எச். முனியப்பா ஆகியோரும், தமிழகத்தின் பல்வேறு கட்சித் தலைவர்களான தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அன்றைய தலைவர் ஜி.கே.வாசன் எம்.பி., டாக்டர் ராமதாஸ், வைகோ, என்.வரதராசன், தா.பாண்டியன், கே.எம். காதர்மொகிதீன் எம்.பி. ஆகியோரும் விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றினர்.

அந்த விழாவில் அவர்கள் உரையாற்றியதைத் தற்போது நினைவுபடுத்துவதும் என் கடமை.

பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் பேசும்போது, "மதுரையில் இன்று சேது சமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டச் செயல்பாடுகளைத் துவக்கி வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாள் இந்திய மக்களுக்குக் குறிப்பாகத் தமிழக மக்களுக்குத் தேசிய குறைந்தபட்ச செயல் திட்டத்தில் எங்களது அரசு கொடுத்த புனித வாக்குறுதியை நிறைவேற்றும் நன்னாள். சேது சமுத்திரத் திட்டம்; கடல் பொருளாதார வருவாயைப் பெருக்கவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

150 ஆண்டுகளுக்கு முன் உருவான ஒரு கனவு இன்று நிகழ்வுக்கு வந்திருக்கிறது. இக்கனவை நனவாக்கிய நமது மதிப்புமிகு தலைவர்களான திரு.கருணாநிதி அவர்களையும், திருமதி. சோனியாகாந்தி அவர்களையும் பாராட்டுகிறேன்.

சேது சமுத்திரத் திட்டம் இந்தியத் துறைமுகத் துறையில் இதுவரை இல்லாத வகையில், ஒரு மாபெரும் திட்டமாகும். இது பயண நேரத்தைக் குறைக்கிறது. அத்துடன் மீனவர்களுக்கு உதவக்கூடிய வகையில் அமையக்கூடியது. இந்தத் திட்டம் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், மேம்பாட்டினையும் தமிழக மற்றும் கோரமண்டல கடற்கரைப் பகுதிக்குக் கொண்டுவரும்

என்பதில் எனக்கு எவ்வித அய்யமும் இல்லை. இந்தப் புதிய முயற்சி மற்றும் தொழில் முனை செயல்பாடுகளில் சேது சமுத்திரத் திட்டம் ஒரு முக்கியப் பங்குவகிக்கும். இந்தத் திட்டம் நமது நாட்டின் தலைசிறந்த கடல் வாணிக மரபை மீண்டும் புதுப்பிக்கும் என்று நான் நம்புகிறேன். சிறிது நேரத்துக்கு முன், கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கே பேசும்போது சென்னையில் உலகத் தரம் வாய்ந்த வாகன சோதனை மையம் அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். உலகத் தரம் வாய்ந்த வாகன சோதனை மையத்தைச் சென்னை அருகே ஓரகடத்தில் அமைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதை இங்கே நான் அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

திருமதி சோனியாகாந்தி அவர்கள் பேசும்போது, "இன்று ஒரு 150 ஆண்டுக் கனவு நனவாகின்றது. இத்தனை ஆண்டுக் காலமாக சேது சமுத்திரத் திட்டம் பேசப்பட்டு வந்தாலும், அதனை நடைமுறைப்படுத்த எதுவும் செய்யப்படவில்லை. இன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தொழில்நுட்ப சவாலான, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த, இந்தத் திட்டத்தை நனவாக்க உறுதியுடன் காலடி எடுத்துவைத்திருக்கின்றது. இம்மாபெரும் திட்டம் இந்தியக் கடல் எல்லைக்குள் ஒரு தொடர்ச்சியான கடல்வழிப் பாதை அமைப்பதால், தேசிய அளவிலும், மண்டல அளவிலும் மற்றும் நாட்டின் பாதுகாப்புக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ்நாடு, குறிப்பாகத் தென் மாவட்டங்கள் இத்திட்டத்தால் பெரும் பயனடையும். தமிழகத்தின் கடலோரப் பகுதியின் பொருளாதாரமும், கடல் வணிகமும் பெரும் வளர்ச்சி பெறும்" என்றார்.

மத்திய நிதியமைச்சர், ப.சிதம்பரம் உரையாற்றும்போது, "2004 மே மாதம் 22ஆம் நாள் மத்தியிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பொறுப்பேற்றது. சரியாக ஆறு வார காலத்திலே பிரதமர் ஒப்புதல் அளித்து அமைச்சரவை ஒப்புதல் அளித்து, 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் தேதியன்று, சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றும் என்று முதல் நிதி நிலை அறிக்கையிலே அரசு அறிவித்தது. அறிவித்து ஓராண்டு கூட முடியவில்லை. இதோ 2005ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் தேதி இந்த மகத்தான திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுகிறோம். 2

ஆயிரத்து 427 கோடி ரூபாய்ச் செலவிலே இத்திட்டம் நிறைவேறப் போகிறது. இந்தத் திட்டத்திற்கு வாங்கப் போகிற கடன் தொகைக்கு மத்திய அரசு தன் உறுதியை அளித்திருக்கின்றது. ஆகவே நிச்சயமாக இந்தத் திட்டம் குறித்த காலத்திலே குறித்த செலவுத் தொகையிலே நிறைவேறும்" என்றார்.

சேதுசமுத்திரத் திட்டத் தொடக்க விழாவில் உரையாற்றிய ம.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் வைகோ, "1967ஆம் ஆண்டு ஆட்சியமைத்த பேரறிஞர் அண்ணா அவர்கள், "சேதுக் கால்வாய் அமையட்டும், செந்தமிழ் நாடு செழிக்கட்டும்" என்று எழுச்சி நாள் கொண்டாடிய அதே ஜூலை மாதத்தில் இந்தத் திருவிழா நடைபெறுவது சாலப் பொருத்தம். இந்தச் சேது சமுத்திரத் திட்டம் நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி.பா.ஆதித்தனாரும், காங்கிரசின் கே.டி. கோசல்ராமும் குரல் கொடுத்த திட்டம். என் ஆருயிர் அண்ணன் கலைஞர் அவர்கள், 1958ஆம் ஆண்டிலேயே சட்டமன்றத்திலே முரசு கொட்டிய திட்டம். டாக்டர் ராமசாமி முதலியார் கமிட்டியின் அறிக்கையை மத்திய அரசு நிறைவேற்ற ஏன் இன்னும் தாமதம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், அதே சட்டமன்றத்தில் சங்கநாதம் எழுப்பிய திட்டம். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய வற்புறுத்தலால் பண்டித நேரு அவர்கள் 1963 செப்டம்பர் 12இல் அறிவித்த திட்டம். 1998இல் செப்டம்பர் 15இல் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் பிறந்த தின விழா மறுமலர்ச்சிப் பேரணியில் சேதுக் கால்வாய் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றும் என்று அன்றைய பிரதமர் வாஜ்பாய் அறிவித்த திட்டம். 24 ஆண்டுகள் நாடாளுமன்றத்தில் என் சக்திக்கேற்ற வகையில் எல்லாம் குரல் கொடுத்தும், 2004ல் எனது ஆருயிர் அண்ணன் கலைஞர் அவர்கள் முயற்சியில்; மத்திய அரசின் குறைந்தபட்ச செயல்திட்டத்தை உருவாக்குகின்ற பொறுப்பை டாக்டர் மன்மோகன்சிங் அவர்களும், பிரணாப் முகர்ஜி அவர்களும் ஏற்றிருந்த நேரத்திலே அவர்கள் இடத்திலே சென்று சேதுக் கால்வாய்த் திட்டத்தைக் குறைந்தபட்ச செயல் திட்டத்தில் சேருங்கள் என்று சொன்னதை ஏற்று அவர்கள் சேர்த்துக் கொடுத்த திட்டம். இது தொடங்குகிற நாள் மகிழ்ச்சிக்குரியது. பனாமா கால்வாயைப்போல் - சூயஸ் கால்வாயைப் போலப் புகழ்

பெறப் போகும் இந்தத் தமிழன் கால்வாய்க்கு 2427 கோடியே 40 லட்சம் ரூபாயைத் தந்துள்ள டாக்டர் மன்மோகன்சிங் அவர்களே உங்கள் பெயரும் உங்கள் அரசின் பெயரும் காலக் கல்வெட்டிலே பதிக்கப்படும்" என்றெல்லாம் தெரிவித்தார்.

மத்திய அமைச்சராக இருந்த அன்புமணி ராமதாஸ் பேசும்போது, "அனைத்துத் தமிழ் நெஞ்சங்களும், இந்த நாளுக்குத்தான் ஏங்கிக் கொண்டிருந்தோம். இந்த நாள் மிக முக்கிய நாள். வரலாற்றில் இந்த நாள் அனைத்துத் தமிழர்களுக்கும் மிக முக்கிய நாள். அதை விட இங்கே நம்முடைய தமிழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் பல ஆண்டு காலமாக இந்தத் திட்டம் தமிழகத்திற்கு வர வேண்டும் என்று மிகவும் பாடுபட்டு, அந்தக் கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது. கடந்த ஓராண்டு காலமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அரசு பல சாதனைகளைத் தமிழகத்திற்குச் செய்து கொண்டிருக்கிறது. அதில் மிக முக்கிய சாதனை இந்த சேது சமுத்திரத் திட்டம்" என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த இன்றைய மத்திய அமைச்சர் தம்பி ஜி.கே.வாசன் பேசும்போது, "காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தமிழக மக்களுடைய நீண்ட நாள் கனவான சேது சமுத்திரத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கின்றது. இது தமிழகத்திற்குக் கிடைத்த பெருமை. சேது சமுத்திரத் திட்டம் வரும் வருடங்களிலே தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டுவரக்கூடிய அடித்தளமான திட்டம். அத்தகைய சிறப்புமிக்கத் திட்டத்திற்குப் பின்னால் மிகச் சிறந்த முறையிலே குரல் கொடுத்த ஐயா கலைஞர் அவர்களுக்கும், பிரதமருக்கும் கட்சிகளின் தலைவர் களுக்கும் நான் நன்றி கூறுகிறேன்" என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்த என். வரதராசன் உரையாற்றும்போது, "சேது சமுத்திரத் திட்டத் துவக்க விழாவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய மக்கள் வறுமைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கக் கூடிய காலம் இது. அத்தகைய போராட்டத்திற்குச் சேது சமுத்திரத் திட்டத்தின் பணிகள் பயன்பட வேண்டும். வேலைவாய்ப்பை நல்குகிற திட்டமாக இது வளர்க்கப்பட

வேண்டும். ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய தா. பாண்டியன், "இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கும், இன்னொரு வகையிலே இந்திய நாடு முழுமைக்கும் நல்ல ஒரு திருநாள். தேங்கிக் கிடந்த ஒரு திட்டத்தை இன்று துவங்குகிற நல்ல நாள். 145 ஆண்டுகளாகக் கருக்கொண்டிருந்த ஒரு குழந்தை அவதரித்திருக்கிற நாள். இந்நாள் வெட்டப்படுவது கால்வாய் என்றாலும், அது தூண்டிவிடப் போவது இந்தத் தமிழ்நாட்டின் பொருளாதார மாற்றத்தை, வளர்ச்சியை. அது இந்திய நாட்டுப் பொருளாதாரத்தை வளர்க்கவும் உதவும். சுற்றி வரும் கப்பல்களின் கால அளவைக் குறைக்கும். எனவே இது நாட்டுக்கு நல்ல செய்தி. சிலர் கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடும் என்று நினைக்கிறார்கள். ஆனால் இங்கே சிறப்பாக விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்றார்.

அந்த விழாவிலே நான் பேசும்போது, "இன்று இனிய நாள். "எழுச்சி நாள்" எழுச்சி வெற்றி பெற்ற நாள். 1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது உரிமைகளை எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும், எந்தக் காரணத்திற்காகவும் விட்டுத்தர மாட்டோம், அந்த உரிமைகளுக்காக அதை வழங்கக் கூடியவர்கள் இடத்திலே வாதாடுவோம், போராடுவோம் என்பதற்கேற்ப "எழுச்சி நாள்" கொண்டாடி, தூத்துக்குடி துறைமுகம், நெய்வேலி இரண்டாவது சுரங்கம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகியவைகளோடு இணைத்து சேது சமுத்திரத் திட்டமும் வேண்டும் என்று வாதாடியபோது அந்த எழுச்சி நாள் கூட்டங்களிலே அன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா உரையாற்றியபோது, இந்தத் திட்டம் நிறைவேறுமா என்பது உள்ளபடியே கேள்விக் குறியாக இருந்தது.

பல கட்சிகளை ஒன்றாகச் சேர்த்து, இந்தக் கூட்டணியால் கட்சிகளை மாத்திரமல்ல, கடல்களையும் இணைக்க முடியும் என்பதற்கு அடையாளமாக அந்த இணைப்பின் வடிவமாக - சின்னமாக - சேது சமுத்திரத் திட்டத்தை இன்றைக்கு நாம்

தொடங்குகின்றோம். இந்தத் திட்டத்தினால் ஏற்படக் கூடிய பயன்கள் எவை எவை என்பதை நம்முடைய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் இங்கே சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். சேது சமுத்திரத் திட்டம் என்பது மன்னார் வளைகுடாவையும் வங்காள விரிகுடாவையும் இணைத்து ஆதம் பாலம் வழியாக இந்தியக் கடற்பரப்பில் ஒரு கடல் வழித் தடத்தை உருவாக்குவது ஆகும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இந்தக் கால்வாய் இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, புதுக்கோட்டை, நாகை மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கு மாத்திரமல்லாமல், இந்த நாட்டிற்கே தொழில் வளத்தைப் பெருக்கக் கூடிய ஆதார சுருதியாக விளங்குகின்ற திட்டமாகும்" என்றெல்லாம் எடுத்துரைத்தேன்.

அந்தத் தொடக்க விழாவினையே தடுத்து நிறுத்திட வேண்டுமென்று அப்போது சிலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக் கொடுத்தார்கள். அது தொடர்பான வழக்கில், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களின் பெஞ்ச்,

"தேசிய நலனுக்காகக் கொண்டு வரப்படும் சேது சமுத்திரத் திட்டத்தைத் தடை செய்யும் நோக்கத்தோடு மனுதாரர் நீதிமன்றத்துக்கு விரைந்து வந்து வழக்கு தொடுத்துள்ளார். சேது சமுத்திரத் திட்டம் நாட்டிற்கு நல்ல பலனைக் கொடுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால் தற்போது கப்பல்கள் இலங்கை நாட்டைச் சுற்றி வங்காள விரிகுடாக் கடலுக்கு வரவேண்டியுள்ளது. பாக் ஜலசந்தியிலே குறுக்காக கப்பல் கால்வாய் அமைத்தால் பெருமளவு பணமும், நேரமும் சேமிக்கப்பட ஏதுவாகும். நேரமும் சேமிக்கப்பட ஏதுவாகும். இந்தக் கால்வாய் திட்டம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே விழாவுக்குத் தடை கிடையாது" என்று கூறித் தீர்ப்பளித்தது.

இவ்வளவையும் மீறி மக்களின் வரிப்பணம் 829 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காகச் செலவிட்ட பிறகு, தற்போது மதம் சம்மந்தமான காரணங்களைத் தெரிவித்து எப்படியாவது இந்தத் திட்டத்திற்கு மூடு விழா செய்திட நினைப்பதைத் தமிழகம் புரிந்துகொள்ள வேண்டாமா? இந்தத் திட்டத்தினால் தென் தமிழகம் பெரும் பயன்பெறும், குறிப்பாக லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றெல்லாம்

தெரிந்த பிறகும், இந்தத் திட்டம் வரக் கூடாது என்று நினைப்பது முறைதானா? மாநிலத்திலே ஆட்சியிலே இருப்போர், இதுபோன்ற திட்டங்களை எப்படியாவது பெற்று, அதனை நிறைவேற்றி மாநில மக்கள் பயன்பெற நினைப்பார்களே தவிர, மிகுந்த முயற்சியெடுத்துப் பெற்ற திட்டம் தேவையில்லை என்று அரசின் சார்பிலேயே நீதிமன்றத்திற்குச் சென்று தெரிவிப்பார்களா? தமிழ்நாட்டு மக்களுக்கு இதையெல்லாம் புரியவைக்க வேண்டிய கடப்பாடு தி.மு.கழகத்திற்கு உண்டு. அதை நிறைவேற்றுவதற்காகத்தான் தலைமைக் கழகத்தின் சார்பில் 15-5-2013 புதன்கிழமை அன்று தமிழகமெங்கும் சேது சமுத்திரத் திட்டம் தொடரப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி "எழுச்சி நாள்" கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. எப்போதும்போல, இந்தக் கூட்டங்களையும் கழக உடன்பிறப்புகள் சிறப்பாக நடத்திட வேண்டுமென்று சேது சமுத்திரத் திட்டத்திற்காகப் பெரிதும் பாடுபட்டவர்களில் ஒருவன் என்ற முறையில் உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-5-2013

3748. “வாய் நீளம்” தோற்றுப்போகும்; “வாய்மையே வெல்லும்!”

உடன்பிறப்பே,

3-5-2013 அன்று என்ன காரணத்தாலோ முதலமைச்சர் பேரவையில் 110வது விதியை விட்டுவிட்டார். கச்சத் தீவைத் திரும்பப் பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதை வலியுறுத்தித் தீர்மானம் ஒன்றை முதல் அமைச்சரே முன்மொழிந்து, அவரே அந்தத் தீர்மானத்தின் மீது நீண்ட நேரம் பேசி நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசின் சார்பில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்றால், அதைப்பற்றி முன்கூட்டியே உறுப்பினர்களுக்குத் தெரிவித்திருந்தால், அந்தப் பொருள் பற்றி அவையிலே பேசுவதற்கு உறுப்பினர்கள் தயாராக வந்திருப்பார்கள். ஆனால் முதல் நாள் இரவுதான் மன்ற உறுப்பினர்களுக்கே தெரிவித்து மறுநாள் முதலமைச்சர் தனக்கென ஓர் உரையைத் தயாரித்து வைத்துக்கொண்டு, அவையிலே உள்ள மற்றவர்கள் அந்தப் பொருள் பற்றி விரிவாகப் பேசுவதற்கு இடமே அளிக்காமல், அந்த உரையைப் படித்து முடித்துவிட்டார்.

முதலமைச்சர் பேரவையிலே படித்த உரையைத் தமிழ்நாட்டு மக்களை ஒருமுறை கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அந்த உரையில்; தொடக்கம் முதல் முடிகின்ற வரையில் எனக்குச் செய்யப்பட்ட “அர்ச்சனை” தான்! கச்சத் தீவை மீட்க வேண்டுமென்றால் மீட்க வேண்டியதுதானே? அதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் வேண்டுகோள் அவர்களுக்கு விடுக்க வேண்டியதுதானே? இதிலே என்மீது “புகழ்”(?) பாடுவதற்காகப் பேரவையிலே ஒரு தீர்மானமா?

திடீரென்று கச்சத் தீவு பற்றிய தீர்மானம் அம்மையாருக்கு எப்படி நினைவுக்கு வந்தது? கடந்த மாதம் 15-4-2013 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற “டெசோ” அமைப்பின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான் பேரவையில்

கச்சத் தீவு பற்றித் தீர்மானம் கொண்டுவர உசுப்பி விட்டிருக்கிறது போலும்!

"டெசோ" நிறைவேற்றிய தீர்மானத்தின் இறுதியாக; இந்தியாவின் எந்தவொரு பகுதியையும் வேறு ஒரு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதென்றால், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 368வது பிரிவின்படி நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்கு வைத்துச் சட்டம் இயற்றப்பட வேண்டும். கச்சத் தீவைப் பொறுத்தவரை அப்படி எந்தவொரு சட்டமும் இதுவரை நிறைவேற்றப்படாததால், கச்சத் தீவை இலங்கைக்கு ஒப்பந்தத்தின் மூலம் விட்டுக் கொடுத்தது அரசியல் சட்டரீதியாகச் செல்லுபடி ஆகாது என்பதுதான் உண்மை. எனவே 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதைப் பிரகடனப்படுத்தவும், "டெசோ" அமைப்பின் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதென முடிவெடுக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் ஜெயலலிதாவைப் பற்றியோ, அவரது கட்சியைப் பற்றியோ நாம் எதையும் குறிப்பிடவில்லை. ஆனால் ஜெயலலிதா பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய நேரத்தில் இவ்வளவு நேரம் செலவிட்டு என்னைப் பற்றி "புராணம்" பாட வேண்டுமா என்ன?

இலங்கைத் தமிழர்களுக்காக - தமிழக மீனவர்களுக்காக என் வாழ்நாளில் நான் பாடுபட்டேனா இல்லையா என்பதை அவர்களே அறிவார்கள், தமிழ்நாட்டு மக்களே அறிவார்கள். அதற்காக நான் தமிழக முதலமைச்சரிடம் சான்றிதழா கேட்டேன்?

"கச்சத் தீவை மீட்டே தீருவேன்" என்று அம்மையார் ஜெயலலிதா அவர்கள் 1991ஆம் ஆண்டு சூளுரைத்ததைப்போல நானா சூளுரைத்தேன்? அவர் சபதம் செய்துதான் 22 ஆண்டுகள் ஓடிவிட்டன! என்ன செய்து முடித்துவிட்டார்? 15-8-1991 அன்று ஜெயலலிதா என்ன பேசினார்? "கச்சத் தீவைத் திரும்பப் பெற மத்திய அரசுடன் வாதாடவும், தேவை ஏற்பட்டால் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது" என்று முழங்கியது நானா? ஜெயலலிதாவா? அப்படிச் சவால் விட்டுவிட்டுத் தற்போது என்னைப் பார்த்து, ஏன் போராடவில்லை என்றும், துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை என்றும் குற்றம் சாட்டுவது நியாயம்தானா?

25-12-1990 அன்று சங்கராச்சாரியாரைச் சந்திக்க வந்த அன்றைய பிரதமர் சந்திரசேகர் அவர்களைத் தனது வீட்டிற்கே அழைத்து ஜெயலலிதா தேனீர் விருந்து கொடுத்து, தொடர்ந்து டெல்லி சென்று பிரதமரிடமும், குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமனிடமும் தி.மு. கழக ஆட்சி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது. எனவே அந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று நேரில் புகார் மனுக் கொடுத்தாரே ஜெயலலிதா, அதைப்போல கச்சத் தீவுப் பிரச்சினைக்காக டெல்லி சென்று பிரதமரையும், குடியரசுத் தலைவரையும் எத்தனை முறை சந்தித்தார்? என்னென்ன போராட்டங்களை, எந்தெந்தத் தேதியிலே நடத்தினார் என்று பட்டியலிட முடியுமா?

20-4-1992 அன்று இதே சட்டப் பேரவையில் ஜெயலலிதா பேசும்போது "கச்சத் தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால், **கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக்கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை**" என்று கூறினாரே, அதை மறந்துவிட்டுத் தற்போது நான் கச்சத் தீவை ஏன் மீட்கவில்லை, எதை மீட்டிக் கொண்டிருந்தேன் என்று கேள்வி கேட்டால் என்ன செய்வது? சட்டப்பேரவையிலேயே; "கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று ஜெயலலிதாவே பேசிவிட்டு, இப்போது என்மீது குறை கூறுவது என்ன வேடிக்கை?

ஜெயலலிதா மேலும் அப்போது பேசும்போது, "மீனவர்கள் இண்டர்நேஷனல் பவுண்டரி லைனைக் கடந்து சென்று கச்சத் தீவு அருகில் உள்ள கடல் பகுதியில் மீன் பிடித்தால்தான் அவர்களுக்குப் போதிய அளவு நல்ல வகை மீன்கள் கிடைக்கின்றன. நம்முடைய இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கச் சென்றால், அவர்களுக்குத் தேவையான அளவு நல்ல ரக மீன்கள் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ பலமுறை இண்டர் நேஷனல் பவுண்டரி லைனைக் கடந்து செல்லும்போது இலங்கைக் கடற்படையினர் அவர்களுடைய படகுகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி, அவர்கள் பிடித்து வைத்திருக்கின்ற மீன்களை எல்லாம் கைப்பற்றிக் கொண்டு, அவர்களுடைய படகுகளை எரித்து, இப்படிப்பட்ட

சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன" என்று பேரவையில் குறிப்பிட்டாரா இல்லையா?

கச்சத் தீவை தாரைவார்க்கத் தி.மு.க. எந்தக் காலத்திலும் ஒப்புக் கொள்ளவும் இல்லை, தாரைவார்க்க உடன்படவும் இல்லை. தி.மு. கழகத்தைப் பொறுத்து மாத்திரமல்ல, தி.மு. கழக ஆட்சியைப் பொறுத்தும் பல நேரங்களில் கச்சத் தீவுப் பிரச்சினையை எழுப்பிக் கச்சத் தீவை மீட்டுக் கொடுங்கள் என்று கேட்கத் தவறியதும் இல்லை. கச்சத் தீவிலே மீனவர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டி அந்தப் பாதிப்பை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்கவும் கழக அரசு தவறியது இல்லை.

ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால் - 30-9-1994இல் தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, அப்போது பிரதமராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations" அதாவது தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ் சிறிய தீவினை (கச்சத் தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான் - என்று அன்றைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா குறிப்பிட்டது உண்டா இல்லையா?

முதலமைச்சர் ஜெயலலிதா தனது உரையில், ஒப்பந்தம் கையெழுத்து ஆவதற்கு முன்பே கச்சத்தீவை இந்தியா தாரை வார்க்கப்போவது தெரிந்திருந்தும் ஏன் எந்தவிதமான நடவடிக் கையையும் கருணாநிதி உடனே எடுக்கவில்லை என்று கேள்வி கேட்டிருக்கிறார்.

ஒப்பந்தம் 26/28-6-1974 அன்று கையெழுத்தான உடனேயே 29-6-1974 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினேன். அதில் பொன்னப்ப நாடார், ஏ.ஆர். மாரிமுத்து, ஆறுமுகசாமி, திருப்பூர் மொய்தீன், அப்துல்வகாப், அரங்கநாயகம், வெங்கடசாமி, ஜி. சாமிநாதன், ஈ.எஸ். தியாகராசன், ஏ.ஆர். பெருமாள், சக்திமோகன், மணலி கந்தசாமி, ம.பொ.சி., ஏ.ஆர். தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டு கச்சத் தீவு பற்றித் தீர்மானம் நிறைவேற்றினோம். ஆனால் அ.தி.மு.க. அந்தத் தீர்மானத்தை ஆதரித்துக் கையெழுத்திட

அப்போதே மறுத்துவிட்டது. ஆனால் அதே 29ஆம் தேதியன்று நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்,

Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Sri Lanka Agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India. May I express the hope that you will take into consideration the decision contained in the Resolution and take appropriate action?

என்று எழுதியிருக்கிறேன். இதுதான் கச்சத் தீவினை நான் தாரை வார்த்துவிட்டேன் என்பதற்கான ஆதாரமா? "துரும்பைக் கூடக் கிள்ளிப்போடவில்லை" என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே; துரும்பைக் கிள்ளிப் போட்டதற்கான ஆதாரம்தான் இது!

அதுமாத்திரமல்ல; 24-7-1974 அன்று கச்சத்தீவுப் பிரச்சினைக்காகத் தமிழகம் முழுவதும் கண்டனப் போராட்டங்களைத் தி.மு.க. நடத்தியது. தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களிலே முதலமைச்சராக இருந்த நானே கலந்து கொண்டேன். 23-7-1974 அன்று நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை வந்தபோது, "தமிழகத்துக்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்ததை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று அப்போது தி.மு. கழக உறுப்பினராக இருந்த நண்பர் இரா. செழியன் குறிப்பிட்டார். "தமிழக அரசைக் கலந்தாலோசிக்காமல், மத்திய அரசு தன்னிச்சையாக இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது ஜனநாயக விரோதப் போக்காகும்" என்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் நண்பர் எஸ்.எஸ். மாரிசாமி தெரிவித்தார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே அதாவது 21-8-1974 அன்று பேரவையில் அரசின் சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானம், "இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து,

கச்சத் தீவின்மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது" என்பதாகும். ஆனால் இந்தத் தீர்மானத்தை ஜெயலலிதா, "பெயரளவிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக" தற்போது சொல்லியிருக்கிறார். நாங்கள் தீர்மானம் நிறைவேற்றினால் "பெயரளவிலே" நிறைவேற்றப்பட்டது, அம்மையார் நிறைவேற்றினால் மட்டும் "முழு மனதோடு" நிறைவேற்றப்படுவதா?

அடுத்து ஜெயலலிதா தனது நீண்ட உரையில் எடுத்து வைத்திருக்கும் மற்றொருவாதம் - "1974இல் திரு. கருணாநிதி கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட செய்தியை, பத்திரிகைகளில் பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன், பதறிப் போனேன் என்கிறார். ஆனால் 2013இல் **ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே** இவர் சொல்லித்தான் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன என்கிறார். இது என்ன பித்தலாட்டம்" என்று பேரவையில் பேசியிருக்கிறார். "பித்தலாட்டம்" என்று யாரோ ஒரு உறுப்பினர் அல்ல; முதல் அமைச்சரே இப்படிப் பேசி அவை நடவடிக்கைக் குறிப்பிலே இடம்பெற்றுள்ளது.

15-4-2013 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது, கழக அரசு முதல் நிலையிலேயே அதனைக் கடுமையாக எதிர்த்தது. அதையும் மீறி **ஒப்பந்தம் கையெழுத்தானபோது,** குறைந்தபட்சம் தமிழக மீனவர்களுக்கு கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையும், மீனவர்களின் வலைகளை அங்கே உலர்த்திக் கொள்வதற்கான உரிமையும் அந்த ஒப்பந்தத்தின் பிரிவுகளில் சேர்க்கப்பட வேண்டுமென்று கழக அரசு வலியுறுத்தி அந்த ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன" என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஜெயலலிதா நேற்றையதினம் பேரவையில், **"ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே,** கருணாநிதி சொல்லித்தான் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன என்கிறார்; இது என்ன பித்தலாட்டம்" என்று கேட்டிருக்கிறார். தீர்மானத்தில் **"ஒப்பந்தம் கையெழுத்தானபோது"** என்றுதான் இருக்கிறதே தவிர, **ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே"** என்று குறிப்பிடப்படவில்லை. இதில் இருந்து யார் செய்தது பித்தலாட்டம்

என்பதையும், பேரவையில் முதலமைச்சரே உண்மையை மறைத்துத் தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார் என்பதையும் தமிழ்நாட்டு மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்!

அடுத்து, ஜெயலலிதா தனது உரையில் "கச்சத் தீவுப் பிரச்சினையில் திரு. கருணாநிதியின் செயலற்ற தன்மை காரணமாக, இரட்டை நிலை காரணமாக, தனக்கே இயல்பான கபட வேடம் காரணமாக, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தற்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறார். சட்டப் பேரவையில் ஒரு முதலமைச்சரே இந்த அளவிற்குக் கடுமையாக என்னைத் தாக்கிப் பேசுவது முறைதானா என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் முடிவுசெய்ய வேண்டும்.

எது இரட்டை நிலை? "விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு அழைத்துவர வேண்டும்" என்று பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்துவிட்டு, தற்போது இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுகிறாரே; அதுவல்லவா இரட்டை நிலை!

இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட போது, "போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான்" என்று பேரவையில் ஜெயலலிதா முழங்கினாரே, அதற்குப் பெயர் இரட்டை நிலையா? கபட நாடகமா? ஏதோ எப்படியோ பதவியிலே இருக்கிறோம், நம்மை எதிர்க்க யாரும் இல்லை, நாம் எதை வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் பேசலாம், நாம் பேசி முடித்துவிட்டுத் திரும்பிப் பார்த்தால், கைதட்டி அதற்கு தலையாட்டுவோர் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் இப்படியெல்லாம் பேசலாமா?

ஜெயலலிதா திரும்பத் திரும்ப தனது உரையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே அந்த ஒப்பந்தம் கையெழுத்தாகப்போவது எனக்குத் தெரியும் என்பதைப் போலக் கருதிக்கொண்டு பேசியிருக்கிறார். இதற்கு நான் விளக்கம் சொல்வதைவிட 17-8-1991 அன்றே "தினமணி" நாளேடு எழுதிய தலையங்கத்தில், "1974இல் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி திருமதி பண்டாரநாயகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில், இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட, கச்சத்தீவை

இலங்கைக்கு விட்டுக்கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகுமுன்னர் இதைப் பற்றித் தமிழக மக்களிடம் மத்திய அரசு கலந்தாலோசிக்கவில்லை" என்று அப்போதே எழுதியிருந்தது. அதே தலையங்கத்தில், "1976இல் இந்திய நாட்டில் அமலில் இருந்த நெருக்கடி காலத்தில், மக்களைக் கலந்தாலோசிக்காமல் இலங்கை அரசுடன் செய்து கொண்ட மற்றொரு ஒப்பந்தத்தின் மூலம், இந்திய மீனவர்களுக்குக் கச்சத் தீவின் அருகில் மீன் பிடிக்கும் பரம்பரை உரிமையும் விட்டுக் கொடுக்கப்பட்டது" என்று எழுதப்பட்டிருப்பதில் இருந்தே, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது மீன் பிடிக்கும் உரிமை விட்டுக் கொடுக்கப்பட்டதாகக் கூறுவது சுத்தப்பொய், பித்தலாட்டம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

1996ஆம் ஆண்டு முதல் 2001 வரையிலும், பிறகு 2006 முதல் 2011 வரையிலும் தி.மு. கழகம் தானே ஆட்சியிலே இருந்தது, அப்போது கருணாநிதி கச்சத் தீவை மீட்க ஏன் ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப்போடவில்லை என்று ஜெயலலிதா கேட்டிருக்கிறார். நான் திரும்ப 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரையிலும், 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலும், ஏன் இப்போது 2011 முதலும் ஜெயலலிதாதானே ஆட்சியிலே இருக்கிறார், இவர் ஏன் கச்சத் தீவை மீட்கவில்லை என்று கேட்டால் இவர் எங்கே கொண்டுபோய் முகத்தை வைத்துக்கொள்வார்?

2006ஆம் ஆண்டு முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி பொறுப்பேற்றுக் கொண்டார், இருந்தாலும் கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார்.

2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு கூட, கச்சத் தீவுப் பிரச்சினையில் அ.தி.மு.க. ஆட்சி 1991ஆம் ஆண்டு பேரவையிலே கொண்டு வந்த தீர்மானத்தையும் நினைவூட்டி 22-9-2006 அன்று நான் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் - "I am sure you are also aware of the fact that the Legislative Assembly of Tamil Nadu had passed a Resolution in 1991 on this issue wherein the Tamil Nadu Legislative Assembly called upon the Government of India to take all urgent action and efforts necessary to get back Katchathivu and restore it to

the Indian territory apart from moving the Sri Lankan Government to pay compensation for families of fishermen killed by the Sri Lankan Navy as well as those who have lost their belongings in the attacks by them. Government of India was also requested to move the Sri Lankan Government to create "Congenial conditions for Tamil Nadu fishermen to lead a peaceful life" - என்றும் நினைவூட்டியிருக்கிறேன்.

கிறித்தவர்களும், மற்றவர்களும் ஆண்டு தோறும் கச்சத் தீவுக்குச் சென்று அந்தோணியார் திருவிழாவில் கலந்து கொள்வார்கள். 1983ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்தத் திருவிழாவே நடக்கவில்லை. 2010ஆம் ஆண்டு கழக ஆட்சியிலேதான் நான் முதலமைச்சராக இருந்த போது மத்திய அரசிடம் இதுபற்றிப் பேசி மீண்டும் அந்தக் கோவில் திருவிழா நடைபெற்றது.

23-7-2003 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்தியா - இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையே நல்லுறவு பேணவும், தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் உரிமைகளைக் காப்பாற்றவும் உள்ள ஒரே வழி என்று குறிப்பிட்டு மேலும் எழுதியிருக்கிறார். "The best possible solution is to get the island of Katcha Theevu and adjacent seas on lease in perpetuity solely for fishing, drying of nets and pilgrimage. Sri Lanka's Sovereignty over Katcha Theevu could be upheld at the same time." - அதாவது, கச்சத் தீவையும், அதற்கு அருகிலே உள்ள கடல் பகுதிகளையும் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், வலைகளைக் காயவைப்பதற்கும், யாத்திரை செல்வதற்கும் நிரந்தரக் குத்தகைக்குப் பெறலாம்; அதே நேரத்தில் கச்சத் தீவில் இலங்கை நாட்டுக்குள்ள இறையாண்மையை ஏற்றுக் கொள்ளலாம் - என்று இப்படியெல்லாம் அன்றைக்கு எழுதி யவர்தான் இன்றைக்கு நம்மைப் பார்த்துக் கேள்விக் கணை தொடுக்கிறார்; பாவம்!

ஜெயலலிதா ஏற்கனவே ஒருமுறை வெளியிட்ட அறிக்கையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார். "கச்சத் தீவுப் பிரச்சினை என்பது மற்றொரு நாட்டுடனான பிரச்சினை. அதை மீட்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது. மாநில முதலமைச்சருக்கு அந்த அதிகாரம் இருந்திருந்தால்

அன்றைக்கே கச்சத்தீவு மீட்கப்பட்டிருக்கும்” என்று அவரே வெளியிட்டிருக்கிறார்.

ஆனால் இதையெல்லாம் மறைத்துவிட்டு, தான்தான் இலங்கைத் தமிழர்களுக்காகவும், தமிழக மீனவர்களுக்காகவும் “அவதாரம்” எடுத்ததைப் போலவும், மற்றவர்கள் எல்லாம் எதுவுமே செய்யவில்லை என்பதைப் போலவும் கருதிக் கொண்டு, தனக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதற்காகச் சட்டப்பேரவையில் சண்டமாருதம் செய்துவிட்டுப் போகட்டும்; அதற்காக என்னைப் பற்றி “வாய் நீளம்” காட்டிப் பேசினால், அவர் அதில் தோற்றுத்தான் போவார்! “வாய்மையே வெல்லும்” என்பதை நாம் நிலைநாட்டியே தீருவோம்.

அன்புள்ள,

மு.க.

5-5-2013

3749. இந்துக்களை இம்மியளவும் புண்படுத்தாத சேதுத் திட்டம்!

கலைஞர் தொடர் கடிதம்-3

உடன்பிறப்பே,

சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 15-5-2013 அன்று தமிழகம் முழுவதும் "எழுச்சி நாள்" கூட்டங்களை நடத்த முடிவெடுத்து அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் திட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டு மென்பதற்காக 1-5-2013 அன்றும் 3-5-2013 அன்றும் பல குறிப்புகளை நான் எழுதியிருந்தேன். அதனைத் தொடர்ந்து வேறு சில விளக்கங்களையும் தொடர்ந்து நேரம் கிடைக்கும்போது எழுதுகிறேன்.

இந்திய தீபகற்பம் முழுவதிலும், 3,554 கடல் மைல் தூரத்திற்கு கடற்கரை அமைந்துள்ளது. எனினும், இப்பகுதியில் தொடர்ந்து கப்பல்கள் செல்வதற்குரிய வசதி அமையப் பெறவில்லை. இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் இருந்து கிழக்குக் கடற்கரை பகுதியில் உள்ள தூத்துக்குடி செல்வதற்குக் கப்பல்கள் இலங்கையைச் சுற்றி வரவேண்டியுள்ளது. ஏனெனில், இந்தியாவின் தென் கிழக்குக் கடல் பகுதியில் உள்ள இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் மணல் பாறைப் பகுதிகள் (Sand Stone Reef) அமைந்துள்ளன. அது, ஆதாம் பாலம் (Adams bridge) என அழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் கடலின் ஆழம் ஏறத்தாழ 11 அடி அளவுக்கே உள்ளது. இந்த குறைந்த ஆழம் காரணமாக கப்பல்கள் இலங்கையைச் சுற்றி வரவேண்டியுள்ளது.

கப்பலின் பயண தூரத்தைக் குறைப்பதற்காக இந்திய கடற்பகுதிக்குள் கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படும் வகையில்,

'சேது சமுத்திரக் கால்வாய்' வெட்டுவதற்கு 1860ஆம் ஆண்டு முதல் பல்வேறு திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன.

1860இல் கமாண்டர் ஏ.டி டெய்லர் திட்டம்

1861இல் டவுன்ஸ்சென்ட் திட்டம்

1862இல் பிரிட்டிஷ் பாராளுமன்றக்குழு திட்டம்

1863இல் சென்னை மாகாண ஆளுநர் சர் வில்லியம் டென்னிசன் திட்டம்

1871இல் ஸ்டோட்டர்ட் திட்டம்

1872இல் துறைமுக பொறியாளர் ராபர்ட்சன் திட்டம்

1884இல் சர்ஜான் கோட் திட்டம்

1903இல் தென்னிந்திய ரயில்வே பொறியாளர் திட்டம்

1922இல் இந்திய அரசின் துறைமுக பொறியாளர் சர் இராபர்ட் பிரிஸ்டோ திட்டம்

-என பல்வேறு திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. எனினும், எந்த ஒரு திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின் மத்திய அரசு 1955ஆம் ஆண்டில் சர் ஏ.இராமசாமி முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு சேதுசமுத்திரத் திட்டக் குழு ஒன்றை அமைத் தது. அப்போதைய தெற்கு ரயில்வே தலைமை வர்த்தகக் கண்காணிப்பாளர் எஸ்.கே. முகர்ஜி, கல்கத்தா துறைமுகத்தின் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் பி.என்.சட்டர்ஜி, கடல்வள ஆலோசகர் கேப்டன் ஜே.ஆர். டேவிஸ் ஆகியோர் இதன் உறுப்பினர்கள். சர் ஆர்.ஏ. கோபாலசாமி அய்யங்கார், ஐ.சி.எஸ். (1969ஆம் ஆண்டில் கழக அரசு அமைத்த முதல் காவல் ஆணையத்தின் தலைவராகத் திகழ்ந்தவர்) இந்த சேது சமுத்திரத் திட்டக்குழுவின் உறுப்பினர் செயலாளராகப் பணியாற்றினார்.

இந்தக் குழு,

1) இந்தியாவின் மேற்குக் கரையில் இருந்து கிழக்குக் கரைக்கு ஆழ்கடல் கப்பல்கள் வந்துசேர ஆடம்ஸ் பாலம்

அருகில் ஒரு கால்வாய் வெட்டி மன்னார் வளைகுடாவையும், பாக் ஜலசந்தியையும் இணைப்பதன் சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்ந்தது.

2) தூத்துக்குடியை ஆழ்கடல் துறைமுகம் ஆக்குவதற்கு இந்தக் கால்வாய் துணைபுரியுமா என்பது குறித்தும் ஆராய்ந்தது.

இதன் பயனாக, தூத்துக்குடி துறைமுகம் வெற்றி பெற வேண்டுமென்றால் சேதுக் கால்வாய்த் திட்டம் அவசியமென்று இக்குழு கருதியது.

விரிவான ஆராய்ச்சி, கவனமான மதிப்பீடு ஆகியவற்றின் மூலம் இத்திட்டம் சாத்தியமானது என்றும், நன்மை பயக்கக் கூடியது என்றும்,

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இத்திட்டத்தினை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்றும், 1956 ஆம் ஆண்டில் சர் ஏ. ராமசாமி முதலியார் குழு பரிந்துரை செய்தது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம் சென்னை தூத்துக்குடி கடல் வழி பயணத்திற்கு 360 கடல் மைல் தூரம் குறையும் என்றும், பயண காலத்தில் ஒன்றரை நாள் மிச்சமாகும் என்றும் இக்குழு தெரிவித்தது. எனினும், சேதுக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

சேது சமுத்திரத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்திட வேண்டுமென மத்திய அரசினை திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளிலும் இது பற்றிய தீர்மானங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன. சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டு வந்த தேர்தல் அறிக்கைகளிலும் இத்திட்டம் சேர்க்கப்பட்டு வந்தது.

1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.க. அரசு அமைந்த நிலையில், எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டு சேது சமுத்திரத் திட்டம் கோரப்பட்டது. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் 23.7.1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து எழுச்சி நாள்

கூட்டங்கள் நடத்த முடிவு செய்தார். அதனையொட்டி, தமிழக சட்டப்பேரவையில் அனைவருடைய ஆதரவையும் கோரினார். அப்பொழுது அண்ணா அவர்கள்,

"சேதுக் கால்வாய் திட்டம் - தூத்துக்குடி துறைமுகத் திட்டம் இரண்டும் ஒருங்கிணைந்தால் அதைத் தமிழகத்தின் 'சூயஸ் கால்வாய்' என்று கருதலாம்.

இப்போது சிலோனைச் சுற்றி கொழும்பு துறைமுகத்திற்குப் போய் கிட்டத்தட்ட 600 மைல்கள் சுற்றிக் கொண்டு வருகின்ற வெளிநாட்டுக் கப்பல்கள், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் அந்நிலைமையை தவிர்த்துவிட இயலும்.

வெளிநாட்டுக் கப்பல்கள் - பிரமாண்டமான கப்பல்கள் இப்போது தூத்துக்குடி துறைமுகத்தில் நிற்க முடியாது. ஆழ்கடல் துறைமுகமாக இருக்குமானால் பெரிய கப்பல்கள் வர பல நாட்டுக் கப்பல்கள் வரத்தக்க பெரிய அனைத்து நாட்டுத் துறைமுகமாக மாறும்.

அப்படி மாறும்போது பல்வேறு வகையான தொழில்கள் கிடைக்கும். அப்படி கிடைக்குமானால் பொருளாதார வளர்ச்சி நிரம்ப ஏற்படும்"

-என்று கூறி தமிழக சட்டமன்றத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை அண்ணா வலியுறுத்தினார்.

சேலம் இரும்பாலைத் திட்டத்தையும், சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தையும், தூத்துக்குடி துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டத்தையும் நிறைவேற்றிட தமிழகம் முழுவதிலும் 23.7.1967 அன்று 'எழுச்சி நாள்' கடைப்பிடிக்கப்பட்டது.

அந்த எழுச்சி நாளின்போது தமிழகம் முழுவதும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் எழுச்சி நாள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தில்,

"தூத்துக்குடி, சேலம் திட்டங்கள் ஏன் தேவை - எதற்குத் தேவை என்பனவெல்லாம் ஆண்டுக் கணக்காக தமிழ்நாட்டுத் தலைவர்களால் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்தக் கூட்டம் மீண்டும் நினைவூட்டுகிறது. சேலம் இரும்பு

உருக்காலையும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகமும், தமிழர்களின் இன்றியமையாத் தேவை என்பதை சர்வ கட்சியினரும் அடங்கிய இந்தக் கூட்டம் மத்திய அரசுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி தெரிவிப்பதுடன், இந்தத் திட்டங்களை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றுவதற்கு உடனடிச் செயல்களில் முனைந்து ஈடுபட வேண்டுமென்று மத்திய அரசை மிக அழுத்தமாக வற்புறுத்துகிறது" என்று எழுச்சி நாள் கூட்டத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

2004ஆம் ஆண்டு மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்த பிறகு தான்,

- சேது சமுத்திரத் திட்டம் 2427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.
- ஏறத்தாழ 150 ஆண்டு கால கோரிக்கை நிறைவேறக் கூடிய நாளாக 2.7.2005 அமைந்தது.
- 2.7.2005 அன்று இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் இத்திட்டத்தைத் தொடங்கிவைத்து அடிக்கல் நாட்டினார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஒருங் கிணைப்பாளர் திருமதி சோனியாகாந்தி அம்மையார் அவர்களும், நானும் முன்னிலை வகித்தோம்.
- சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் பணி தொடங்கி சிறப்பாக நடைபெறவும் தொடங்கியது.

ஆனால் திட்டம் தொடங்கி, பல கோடி ரூபாய் மக்களின் வரிப்பணம் இந்தத் திட்டத்திற்காக செலவிடப்பட்ட பிறகு, இத்திட்டம் நடைபெற்று விட்டால், தி.மு.கழகத்திற்கு பெயர்வந்து விடுமே என்ற ஒரே காரணத்திற்காக இத்திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடுவதற்கு பல்வேறு முயற்சிகளிலே ஈடுபடுகிறார்கள். ராமர் பாலம் என்றெல்லாம் அதற்கு வர்ணம் பூசி மதப் பிரச்சினைகளை ஏற்படுத்த முயலுகிறார்கள்.

ராமர் சேது பாலம் எதுவும் அந்தப் பகுதியில் இருந்ததற்கான எந்த அடையாளமும் இல்லை என்றும், எந்தவொரு தொல்லியல்

ஆராய்ச்சியும் இப்படி ஒரு பாலம் இருந்ததாக உறுதி செய்யவில்லை என்றும் திட்டவட்டமாக மத்திய அரசின் சார்பில் மாநிலங்களவையில் சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை அமைச்சர் திருமதி அம்பிகா சோனி அவர்களால் எழுத்துப் பூர்வமான பதிலிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்ட சுற்றுச் சூழல் கண்காணிப்புக் குழு தலைவர் டாக்டர் எஸ். கண்ணையன் 25-4-2007 அன்று செய்தி யாளர்களுக்கு ஒரு பேட்டி அளித்துள்ளார். அந்தப் பேட்டியில், "ராமர் பாலம் என்றழைக்கப்படும் ஆதாம் பாலத்தின் 70 இடங்களில் 20 மீட்டர் ஆழத்துக்கு பாறை மாதிரிகளை ஜியோ கெமிக்கல் முறையில் சோதனை செய்தோம். அதில், கடலில் உள்ள படிமங்கள்தான் உள்ளன. அறிவியல் ரீதியாக ராமர் பாலத்தை மனிதர்கள் உருவாக்கியதற்கான எந்த அடையாளங்களும் இல்லை. பாலம் இருக்கும் இடத்திற்குப் பதிலாக வேறு இடத்தில் கால்வாய் தோண்டினால், மன்னார் வளைகுடா பகுதியில் இருக்கும் 26 தீவுகளும் அழிந்து விடும் வாய்ப்பு அதிகம்" என்று தெரிவித்திருக்கிறார்.

அ.தி.மு.க., பா.ஜ.க. போன்ற கட்சிகள் ராமர் பாலம் இருப்பதற்கான ஆதாரமாக செயற் கைக்கோள் படத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான "நாஸா" வெளியிட்டிருப்பதாகக் கூறினர்.

"ராமர் பாலம் இருப்பதாக நாஸா படங்களை வெளியிட்டதாகக் கூறுவதில் உண்மை இல்லை" என்று அப்போதே மறுத்த மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு., "நாஸா'' அமைப்புக்கே மத்திய அரசு சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும், ஆனால் இது குறித்து நாஸா எந்தவிதமான பதிலும் அனுப்பவில்லை" என்றும் அப்போதே விளக்கினார்.

மேலும் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு இராமநாதபுரத்தில் அளித்த பேட்டியில் "ஒட்டு மொத்த இந்து மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்தில் தனுஷ்கோடி கடலில் ராமர் பாலம் இருப்பதாக பிரச்சினையை கிளப்புகிறார்கள். அந்தக் கடல் பகுதியில் மனித கட்டமைப்புகளால் உருவாக்கப்பட்ட பாலம் இருந்ததாக துளி அளவு கூட ஆதாரம் இல்லை . கடந்த 2004ஆம் ஆண்டு முதல்

2007ஆம் ஆண்டு வரை 81 இடங்களில் கடலுக்குள் ஆழ் துளை சோதனை நடத்திப் பார்த்ததில் பாலம் இருந்ததற்கான அடிப்படை ஆதாரமோ, சுற்றுச் சூழல் பாதிப்போ இல்லை. இந்து மக்களின் மனம் புண்படக் கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதற்கான அறிவியல் ஆய்வு ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. டெல்லியில் இந்து மத சன்னியாசிகளை அழைத்து அந்த ஆதாரங்களை காட்டினோம். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர்" என்று தெளிவாக்கினார்.

தொடர்ந்து மீண்டும் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

07-05-2013

3750. எழுச்சி நாள் வெற்றி பெற பணியாற்றுவோம்!

உடன்பிறப்பே,

7-5-2013 அன்று "சேது சமுத்திரத் திட்டம்" பற்றி "நாஸா" அமைப்பு தெரிவித்ததாக எதிர்த் தரப்பினர் கூறிய வார்த்தைகளையும், அதற்கு மத்திய அமைச்சராக இருந்த தம்பி டி.ஆர்.பாலு தெரிவித்த பதில்களையும் எழுதியிருந்தேன். அதற்கு மற்றுமோர் ஆதாரமாக "நாஸா" அமைப்பு என்ன தெரிவித்தது என்றால்,

"NASA had issued the following disclaimer when it was brought to their notice that certain statements were attributed to them - "The image may be ours, but their interpretation is not certainly ours..... Remote sensing images or photographs from orbit cannot provide direct information about the origin or age of a chain of islands, and certainly cannot determine whether humans were involved in producing any of the pattern seen"

எனவே, அறிவியல் ரீதியாகவோ - ஆழ் கடல் வேதியியல் பகுப்பாய்வு மூலமாகவோ - மனிதர்களால் உருவாக்கப்பட்ட பாலம் எதுவும் அங்கே இருந்ததற்கான எவ்வித அடிப்படையோ, ஆதாரமோ கிடையாது என்பதுதான் உண்மை.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் அண்ணாமலை மகிழ்நன் என்பவர் 'ராமர் பாலம் என்பது ஒரு கட்டுக்கதை' என்று தனது கட்டுரையில் எழுதியுள்ளார்.

20.3.2007 அன்று மத்திய அரசின் சார்பில் சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஒரு விவாதம் நடைபெற்றபோது, சேது சமுத்திரத் திட்டத்தின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான என்.கே.ரகுபதி, ஐ.ஏ.எஸ்., பல்வேறு தனியார் மற்றும் அரசு நிறுவனங்களின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆய்வுகள் மூலம் சேது

சமுத்திரத் திட்டப் பகுதியில் மனிதர்களால் கட்டப்பட்ட பாலம் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்பதை மத்திய அமைச்சர், துறை அதிகாரிகள், மத அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் உரிய ஆவணங்களுடன் எடுத்து விளக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற இந்து தர்ம ஆச்சார்யாசபை செயலாளர் சுவாமி பரமானந்த சரஸ்வதி தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர், அதிகாரிகள் அளித்த விளக்கம் பற்றித் திருப்தி தெரிவித்துள்ளனர்.

மேலும், பத்திரிகையாளர்களிடம் அவர்கள் அந்தப் பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தாங்கள் ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்தனர்.

சேதுக் கால்வாய் திட்டத்தினால்; ஒட்டுமொத்தத் தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் பொருளாதாரத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திடும் என்பது குறித்துத் தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகத் தலைவராக இருந்த திரு.ரகுபதி கூறுவது என்ன?

> “செங்கடலையும் மடகாஸ்கரையும் இணைக் கும் சூயஸ் கால்வாய், பசிபிக் - அட்லாண்டிக் பெருங்கடல்களை இணைக்கும் பனாமா கால்வாய், வடகடலையும் பால்டிக் கடலையும் இணைக்கும் கீல் கால்வாய் போன்று மன்னார் வளைகுடாவையும் பாக் நீரிணையையும் கால்வாய் மூலம் இணைத்துப் பெருங் கப்பல் போக்குவரத்தை ஏற்படுத்தும் சேது சமுத்திரத் திட்டம் தமிழகத்தில் தொழில் வர்த்தக மேம்பாட்டையும், பொருளாதார வளர்ச்சியையும் நிச்சயம் ஏற்படுத்தும். இது தமிழகத்துக்குக் கிடைத்துள்ள அரிய பரிசு”
>
> - என்று கூறியிருக்கிறார்.

இதிலிருந்து நடுநிலை உணர்வுகளுடன் சிந்திப்பவர்களுக்கு சேது சமுத்திரத் திட்டத்தின் நியாயம் புலனாகிறது என்பதும் இத்திட்டத்தைத் தடுக்க வேண்டுமென்ற நோக்குடன் செயல்படுபவர்களுக்கு நியாயம் என்றுமே புலப்படாது என்பதும் தெளிவாகிறது.

‘பனாமா கால்வாய்’ ‘சூயஸ் கால்வாய்’ இந்த இரண்டு கால்வாய்களும் நிலத்தை அகழ்ந்து ஆழப்படுத்தி அதன்

வழியாகக் கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால் சேது கால்வாய்த் திட்டம் இந்த இரு கால்வாய்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது! வேறுபட்டது! வித்தியாசமானது! வட அமெரிக்கா-தென் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் நிலத்தில் வெட்டப்பட்டது பனாமா கால்வாய்; எகிப்துக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே நிலத்தில் வெட்டப்பட்டது சூயஸ் கால்வாய்! ஆனால் சேதுக் கால்வாய் முழுக்க முழுக்க இந்தியாவுக்குச் சொந்தமான கடற்பரப்பில் பாம்பனுக்கு அருகில்; ஆதம் பாலம் எனப்படும் பாறைகளை 40 அடி ஆழப்படுத்திக் கப்பல்களை இயக்கிடத் திட்டமிடப்பட்ட ஒன்றாகும்.

தி.மு. கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகச் சட்டமன்றத்தில் நீண்டதோர் உரையினை 9-10-1960 அன்று ஆற்றினார். அதிலே சேது சமுத்திரத் திட்டம் பற்றி பேசியதாவது :-

“நாம் திட்டவட்டமாக மத்திய அரசிடம் கேட்க வேண்டியது - மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு என்னென்ன திட்டங்களை, திட்டவட்டமாக நிறைவேற்றப் போகிறீர்கள்? சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா இல்லையா என்று திட்டவட்டமாகக் கேட்க வேண்டும். இந்த நேரத்தில் நான் அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இதில் நீங்கள் வெற்றி பெறுவதிலிருந்துதான், இனிமேல் உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். இதைப்பற்றி விசாரித்து அறிக்கை கொடுப்பதற்காக இந்திய சர்க்கார் நமது ராஜ்யத்தின் தலைசிறந்த அறிவாளி திரு.ராமசாமி முதலியார் அவர்களை நியமித்தார்கள். அவர்கள் ஆராய்ச்சி செய்து கொடுத்த அறிக்கையை வைத்துக்கொண்டு அதில் ஏற்படுகின்ற சில்லறை தகராறை வைத்துக்கொண்டு, பத்து கோடியா, பதினைந்து கோடியா என்கின்ற புள்ளி விவரங்களால் ஏற்படும் தகராறை வைத்துக்கொண்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியுமோ என்னவோ தெரியவில்லை. நான் மீண்டும் இந்த தமிழகத்தின் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத்

திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா அல்லது நாங்கள் இதைவிட்டு விலகவா என்று மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் துணிந்து கேட்க வேண்டும்”

1960ஆம் ஆண்டில் அதாவது 50 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு அண்ணா அவர்கள் சட்டப்பேரவையில் சேது சமுத்திரத் திட்டம் பற்றி பேசியுள்ளார். 1961ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்திலும், 1966ஆம் ஆண்டு விருகம்பாக்கத்திலும் நடைபெற்ற கழக மாநாடுகளில் சேது சமுத்திரத் திட்டம் தீர்மானமாக வலியுறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, 1967ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான், “எழுச்சி நாள்” கொண்டாடி அதில் சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் பற்றி அண்ணா அவர்கள் வலியுறுத்தியதோடு சட்டமன்றத் தொடரிலும் இவை பற்றி வலியுறுத்திப் பேசினார்.

தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுக வேலைகள் சுணக்கமுற்று, மீன் பிடித் துறைமுகமாக மாற்ற முயற்சி நடந்தபோது, 1967ஆம் ஆண்டு சென்னை வந்த மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. வி.கே.ஆர்.வி.ராவ் அவர்களை அவர் தங்கியிருந்த இடத்திற்கே அண்ணா அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நானும் தேடிச் சென்று சந்தித்தோம். அப்போது முன்னாள் முதல்வர், பெரியவர் திரு.பக்தவத்சலம் அவர்களையும் முன்னாள் தொழில் அமைச்சர் ஆர்.வெங்கட்ராமன் அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்று துறைமுகம் நஷ்டத்தில் இயங்கும் நிலைவந்தால், அந்த நஷ்டத்தை மாநில அரசே ஏற்கும் என்ற உறுதியையும் தந்து தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் வருவதற்குப் போறிஞர் அண்ணா பெரும்பாடுபட்டார்.

1972ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவுவாயிலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சிலையைப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார், முதல்வராக இருந்த என் தலைமையில் திறந்து வைத்தார். அப்போதும் நான் தூத்துக்குடி துறைமுகத்தின் பயன் மேலும் வளர, சேதுக் கால்வாய் திட்டம் மிகமிக அவசியம் என்று பேசினேன்.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, தி.மு.க. சார்பில் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையிலும்,

"நீண்ட காலமாக வாக்குறுதி அளவிலேயே இருந்து வருகிற சேதுக் கால்வாய் திட்டப் பணியை விரைவில் தொடங்கிச் செயல்படுத்த உரிய நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை வலியுறுத்துவோம்" (பக்கம் 13) என்று குறிப்பிட்டிருந்தோம். நம்மைப் போலவே அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், சேது சமுத்திரம் திட்டம் தேவை என்பது அப்போது வலியுறுத்தப்பட்டிருந்தது. (பக்கம் 33)

சேது சமுத்திரத் திட்டம் 2,427 கோடி ரூபாய்த் திட்டம். இதில் அரசின் மூலதனம் 495 கோடி ரூபாய். இந்தியக் கப்பல் கழகம் 50 கோடி ரூபாய். தூத்துக்குடி துறைமுகம் 50 கோடி ரூபாய். இந்திய தூர்வாரிக் கழகம் 30 கோடி ரூபாய். எண்ணூர் துறைமுகம் 30 கோடி ரூபாய். பாரதீப் துறைமுகம் 30 கோடி ரூபாய். சென்னை துறைமுகம் 30 கோடி ரூபாய். விசாகப்பட்டினம் துறைமுகம் 30 கோடி ரூபாய். பொதுமக்களுடைய பங்கு 226 கோடி ரூபாய். அரசு உத்தரவாதம் தருகின்ற கடன் தொகை வகையில் 1456 கோடி ரூபாய். மொத்தம் 2,427 கோடி ரூபாய். இதில் சுமார் 800 கோடி ரூபாய்க்கான பணிகள் ஏற்கனவே முடிவடைந்துவிட்டன.

இந்தத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. அந்தக் குழுவின் தலைவர் பிரதமர் ஆவார். மேலும் அந்தக் குழுவில் உறுப்பினர்களாகப் பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம், சரத்பவார், லல்லுபிரசாத்யாதவ், டி.ஆர்.பாலு, தயாநிதிமாறன், கமல்நாத், மணிசங்கர் அய்யர் ஆகியோர் இடம்பெற்று இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள்.

சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 8 கோடி மனித நாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். சேது சமுத்திரத் திட்டத்தின் வாயிலாக ஏராளமான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். ராமேஸ்வரம் மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதன் வாயிலாகச் சுமார் 10 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிட்டும். துறைமுகங்களில் கையாளப்படும் ஒவ்வொரு டன் சரக்கின் மூலம் தலா 11 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சேது சமுத்திரத் திட்டம் குறித்து சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எழுப்பியுள்ள

அனைத்து ஐயங்களுக்கும் விடை காணப்பட்டுள்ளது. 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுச் சுற்றுச் சூழல் சம்பந்தமான கூடுதல் பரிசோதனைகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நிறைவேறினால் முதல் ஆண்டில் இருந்தே செயலின இலாபம் இருக்கும். இத்திட்டம் நேரடியாகவே இலாபகரமாக இருக்கும்.

1955ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நடத்தப்பட்ட எல்லா ஆய்வுகளும் தொழில்நுட்ப ரீதியாக இந்தத் திட்டம் சாத்தியமானது என்று நிரூபித்திருக்கின்றன. இதில் எள்ளளவு ஐயம்கூட யாருக்கும் இருந்தது இல்லை.

பவளப் பாறைகளை இத்திட்டம் பாதிக்குமா?

மன்னார் வளைகுடாவில் ஆதாம் பாலம் பகுதி தவிர, பிற பகுதிகளில் எவ்வித ஆழப்படுத்தும் பணியும் இந்தத் திட்டத்தில் நடைபெறாது. மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடிக்கும், பாம்பன் தீவிற்கும் இடையில் கடற்கரையைச் சார்ந்த மன்னார் வளைகுடா கடல் வாழின தேசிய பூங்கா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவிலிருந்து பத்து கி.மீ.வரை உள்ள பகுதிகள் மன்னார் வளைகுடா கடல் வாழின உயிர்ச் சரணாலயம் என்று தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 21 தீவுகளைச் சுற்றி ஆழமற்ற பகுதிகளில்தான் பவளப் பாறைகள் அமைந்துள்ளன. ஏற்படப்போகும் கடல் வழிப்பாதையிலோ அல்லது ஆழப்படுத்தப் போகும் ஆதாம் பாலத்திலோ பவளப்பாறைகள் இல்லை என்பது மறுக்க முடியாத ஒன்று. இக்கடல் பாதை வழியாகச் செல்லும் கப்பல்களிலிருந்து கழிவுப் பொருட்கள் பன்னாட்டுச் சட்டங்களின்படியும், இந்தியக் கடல் வணிகச் சட்டத்தின்படியும் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதால் கழிவுப் பொருட்கள் குறிப்பாக எண்ணெய் கசிவுகள் பவளப் பாறைகளைத் தாக்கும் வாய்ப்பும் ஒரு சிறிதும் இல்லை.

நிலத்தில் அமையப் போகும் கட்டமைப்புகள் தனுஷ்கோடி பகுதிகளில் 12.5 ஏக்கர் பரப்பளவிலும், கோடியக்கரை பகுதிகளில் 2.5 ஏக்கர் நிலப் பகுதியிலும் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. தமிழக அரசின் நிலம் மட்டுமே இதற்குப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே கட்டமைப்புகள் ஏற்படுவ தால் மீனவர்கள் இடமாற்றம் செய்யப்படும் வாய்ப்பும் இல்லை. சில

மீனவர்கள் அரசு நிலங்களில் குடிசை அமைத்து வாழ்ந்தால்கூட அவர்களுடைய இடமாற்றத்திற்கான முழு செலவும் திட்ட நிறுவனமே ஏற்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இத்தகைய சிறப்பான சேது சமுத்திரத் திட்டத்தைத் தொடரக் கூடாது என்றுதான் தமிழக அ.தி.மு.க. அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்திலே மனுதாக்கல் செய்திருக் கிறார்கள். தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருக்கின்ற நிலையிலும், அந்தத் திட்டத்தின் அவசியத்தை எடுத்து மக்களுக்கு விளக்கிடத் தான் வரும் 15ஆம் தேதியன்று தமிழகமெங்கிலும் "எழுச்சி நாள்" கண்டனக் கூட்டங்களை அறிவித்திருக்கிறோம்.

அன்புள்ள,

மு.க.

8-5-2013

3751. ஒரு நாடகமன்றோ நடக்குது நாட்டிலே!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவையில் 2013-2014ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை 21-3-2013 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது பொது விவாதம் முடிவற்று, நிதியமைச்சர் அதற்கு நீண்ட பதிலும் அளித்துள்ளார். அதன் பின்னர் அரசின் பலவேறு துறைகளுக்கான மானியக் கோரிக்கை கள் அந்தந்தத் துறை அமைச்சரால் முன்மொழியப் பட்டு, அதன் மீது மன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்து, அமைச்சர்களும் பதிலளித்து அறிவிப்புகளையும் செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத்துறை அமைச்சர் 8-4-2013 அன்றும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் 7-4-2013 அன்றும், வேளாண்மைத் துறை அமைச்சர் 5-4-2013 அன்றும் தங்கள் துறைக்கான மானியக் கோரிக்கைகளுக்குத் தேவையான நிதி வினைக்கோரி பேரவையும் அந்தத் தொகைக்கு அனுமதி அளித்துவிட்டது. ஆனால் அந்த மூன்று துறைகள் பற்றிய ஏராளமான அறிவிப்புகளை 6-5-2013 அன்று முதல் அமைச்சர் பேரவையில் 110வது விதியின் கீழ் மூன்று அறிக்கைகளைப் படித்து, வழக்கம்போல, அந்த அறிவிப்புகளைப் பாராட்டி கட்சிகளின் தலைவர்களும் உரையாற்றி விருக்கிறார்கள்.

குறிப்பாக வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை நேற்று ஒரு நாளில் மட்டும் 984 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டங்களை முதல் அமைச்சர் அறிவித்திருக் கிறார். ஆனால் நிதி நிலை அறிக்கையில் இந்தத் துறைக்குச் செய்யப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடே 5.19 கோடியே 15 லட்சம் ரூபாய்தான். அதாவது சுமார் ஐந்தில் ஒரு பங்கு அளவிற்கு - 18.97 சதவிகித அளவிற்கு முதலமைச்சரே 110வது விதியின் கீழ் அறிவித்திருக்கிறார். தற்போது அறிவித்துள்ள இந்த அறிவிப்புகள்

ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் வருமா? அல்லது புதிதாக இதற்கென தனியாக நிதி ஒதுக்கப்படுமா? அல்லது வெறும் அறிவிப்பு என்பதின் கீழ் வருமா? முதல் அமைச் கரை இந்த அறிவிப்புக்காக பேரவையில் பாராட்டினார்களே, அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

பல்வேறு துறைகளுக்கு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் குறைவான தொகை ஒதுக்கப் ட்டிருந்ததாகவும், தற்போது அந்தத் தொகை உயர்ந்துள்ளதாகவும் முதல் அமைச்சர் 110வது விதியின் கீழான அறிக்கையில் குறை சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் வருவாய் அதிகமாக அதிகமாக, ஒதுக்கீட்டுத் தொகையும் உயரும். நிதியமைச்சராக சி.சுப்பிரமணியம் அவர்கள் தமிழகச் சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது, நமது பட்ஜெட் 100 கோடி ரூபாய் அளவிற்குத்தான் இருந்தது. ஆனால் தற்போது இந்தத் தொகை ஒரு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. எனவே தற்போது ஒதுக்கீட்டுத் தொகை உயர்ந்து விட்டதாக முதலமைச்சர் பெருமை பேசிக் கொள்வதில் பயனில்லை.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 2001-2006ஆம் ஆண்டுக் காலத்தில் ஐந்தாண்டு களில் அ.தி.மு.க. ஆட்சியில் வேளாண்மைத் துறைக்கான மொத்த ஒதுக்கடு எவ்வளவு தெரியுமா? 3 ஆயிரத்து 393 கோடியே 62 இலட்சம் ரூபாய். ஆனால் 2006 முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வேளாண்மைத் துறைக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 7 ஆயிரத்து 414 கோடி ரூபாய். அதாவது கழக ஆட்சிக் காலத்தில் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.

அடுத்து உணவு உற்பத்தி பற்றி குறிப்பிடும் போது முதலமைச்சர் ஜெயலலிதா 2011ஆம் ஆண்டில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கு வதற்காக அவர் எடுத்த நடவடிக்கை காரணமாக உணவு தானிய உற்பத்தி 100 லட்சம் டன் என்ற அளவினையும் கடந்து சாதனை படைத்தது என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டுள்ளார். 2011ஆம் ஆண்டில் மே திங்கள் வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் இருந்தது. எனவே அந்த ஆண்டில் வேளாண் உற்பத்தி பெருகியது என்றால், அதிலே கழக அரசுக்கும் பெருமை உண்டு. ஆனால் தற்போது நிலைமை என்ன? இந்த ஆண்டு முழுக்க முழுக்க அ.தி.மு.க. ஆட்சிதானே

நடைபெற்றது? உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்களா? இன்னும் சொல்ல வேண்டுமேயானால், 2005-2006இல் அ.தி.மு.க. ஆட்சியில் உணவு தானிய உற்பத்தி தமிழகத்தில் 61.46 இலட்சம் டன்தான். இந்த உற்பத்தி 2006-2007இல் தி.முகழக ஆட்சியில் 82.63 இலட்சம் டன்னாகவும், 2008-2009இல் 91.11 இலட்சம் டன்னாகவும், 2009-2010இல் 95.60 இலட்சம் டன்னாகவும் பெருகியது என்றால், அது தி.மு.கழக அரசின் சாதனை அல்லவா?

கரும்பு உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் கரும்பு உற்பத்தி திட்டம் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 275 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப் போவதாக முதலமைச்சர் பேரவையில் அறிவித்திருக்கிறார். ஆனால் தமிழ்நாட்டிலே உள்ள கரும்பு விவசாயிகள் இந்த அரசிடம் எதிர்பார்ப்பது என்ன? கரும்புக்கு உரிய விலை கேட்கிறார்கள்.

“2012-2013ஆம் ஆண்டுக்கான கரும்புப் பருவத்திற்கு, கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2,350 என்று விலை நிர்ணயம் செய்ய நான் உத்தரவிட்டுள் ளேன்” என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித் தார். அப்போதே தென்னிந்திய கரும்பு உற்பத்தி யாளர் சங்கத்தின் செயல் தலைவர் “கரும்பு உற்பத்தி யாளர்கள் மிகக் கடுமையான நெருக்கடி களுக்கு இடையே கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மின் பற்றாக்குறை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு , தண்ணீர்ப் பற்றாக்குறை எனப் பல நெருக்கடிகள் உள்ளன. எனவே, உற்பத்திச் செலவுகளை உரிய ஆதாரங்களுடன் பட்டியலிட்டு, கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாய் கொள்முதல் விலை வழங்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கைவைத்துப் போராடி வருகிறோம். ஆனால், தமிழக அரசு தற்போதுள்ள விலையை விட 250 ரூபாய் மட்டுமே உயர்த்தி, டன்னுக்கு 2,350 ரூபாய் என்று விலையை அறிவித்திருப்பது வேதனையாக இருக்கிறது. கரும்பு உற்பத்தியாளர்களுக்கு இது திருப்தி அளிக்கவில்லை” என்றெல்லாம் தெரிவித்தார்.

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பக்கம் 3இல் “கரும்பு உற்பத்தி புரட்சித் திட்டம்” என்ற தலைப்பில் “எத்தனால் எரிபொருள் உற்பத்தியைப் பெருக்குகிற வகையில், கரும்பு கொள்முதல் விலை; டன்னுக்கு 2,500/- ரூபாயாக உயர்த்தப்படும் - அரசு கரும்பு ஆலைகள் நவீனப்படுத்தப்பட்டு நிர்வாகம் சீரமைக் கப்படும்” என்று கூறியிருந்தார். தேர்தல் அறிக்கை யிலே 2,500

ரூபாய் என்று சொல்லிவிட்டு, கடந்த ஆண்டும் 2,100 ரூபாய் என்றுதான் அறிவித்தார் கள். அப்போது கரும்பு விவசாயிகள் எல்லாம் இந்த ஆண்டாவது டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று அ.தி.மு.க. அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்தார்கள். ஆனால் இந்த ஆண்டிலும் 2,350 ரூபாய் என்று மட்டுமே அறிவித்திருப்பதைக் கேட்டு நொந்து போயிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சர்க்கரை ஆலை உரிமையாளர்களையும், விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆஜல தனி அலுவலர்களையும் கொண்ட முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை மாநில அரசின் பிரிந்துரை விலையாக அறிவித்து வழங்கி வந்தது.

ஆனால், 2001ல் ஆட்சிக்கு வந்த அதி.மு.க. 5 ஆண்டுக் காலம் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டியோ, விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் தனி அலுவலர்களின் கருத்துக்களைக் கேட்டோ முடிவெடுக்காமலேயே மத்திய அரசு விலையை மட்டுமே வழங்கி வந்ததை கரும்பு விவசாயிகள் அனைவரும் அறிவார்கள் அதனை அவர்கள் நிச்சயம் மறந்திருக்கமாட்டார்

எனவே கரும்பு விலை உயர்வு பற்றி 110வது அறிக்கையில் தெரிவிக்காமல், மீண்டும் கரும்பு உற்பத்தி திட்டம் என்றும், அதற்கு 275 கோடி செலவிடப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்.

தோட்டக்கலைத் துறை பற்றியும் குறிப்பிட்டு, அதற்கு 112 கோடியே 49 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று முதலமைச்சர் 110வது விதியின் கீழ் அறிவித்திருக்கிறார். இந்தத் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள இடம், ஆளுங்கட்சிக்காரர்களால் “ஸ்வாகா” செய்யப்பட்டது பற்றி, நான் பல ஆதாரங் களுடன் ஏற்கனவே கூறியிருக்கிறேன். அந்த இடத்தை அரசு மீட்பதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த அழகில் அந்தத் துறைக்கு மேலும் 112 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாக முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையைப் பற்றி முதல் அமைச்சர் படித்த அறிக்கையில் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் நலிவற்று இருந்ததாக ஒரு குற்றச்சாட்டினை 110வது விதியிலே பேரவையிலே சொல்லியிருக்கிறார். 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோதும், ஏறத்தாழ 1,200 தொடக்க கூட்டுறவு வங்கிகள் நலிந்த நிலையிலேதான் இருந்தன. அ.தி.மு.க. ஆட்சியில் 171 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகைகளை திரும்ப வழங்கமுடியாமல் கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் நம்பிக்கையை இழந்து நின்றன. 22 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் 12 வங்கிகள் தேசிய வங்கிகளிடமிருந்து கடன் பெற தகுதி இல்லாமல் இருந்தன. பல கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் செயல் இழந்து கிடந்தன. கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களும் பல கோடி ரூபாய் நட்டத்தில் இருந்தன. இத்தகைய நலிந்த நிலையில் இருந்த கூட்டுறவு இயக்கத்தை கழக ஆட்சியில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து உன்னத நிலைக்கு கொண்டு வந்தோம், அ.தி.மு.க. ஆட்சியில் 199 தொடக்க வேளாண்மை கூட்டுறவ சங்கங்கள் நிர்வாகச் சீர்கேட்டால் செயல்படாதது என்று நீக்கி வைத்ததையெல்லாம், கழக ஆட்சியில் மீண்டும் புதுப்பித்து இயங்கச் செய்தோம்.

50 கோடி ரூபாயில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு பொருள்கள் செல்வதைக் கண்காணிக்க கணின் மயம் ஆக்கப் போகிறார்களாம். கழக ஆட்சிக் காலத்திலேயே மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பொதுவான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, 1033 வங்கிக் கிளைகளில் 1021 கிளைகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. மேலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அனைத்திலும் பொதுக்கணக்கு முறையை அமுல்படுத்திடவும், அதற்கான பொதுவான மென்பொருளை உருவாக்கிடவும் கழக ஆட்சியில் திட்டமிட்டு, தமிழகத்தில் உள்ள 4531 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும் பயன்படுத்திட வழிவகை செய்யப்பட்டது. 38 இலட்ச ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட இந்த மென்பொருளை தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி,

இந்தியா முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைக் கணினி மயமாக்கப் பயன்படுத்த அப்போதே விருப்பம் தெரிவித்தது.

இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகளை அதி.முக. ஆட்சியில் உருவாக் கியதாகவும் முதலமைச்சர் ஜெயலலிதா பெருமையாகச் சொல்லியிருக்கிறார். ஆசியாவிலேயே முதலாவதாக கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காக 1990ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியிலேதான் ஒரு புதிய பல்கலைக் கழகமே தொடங்கப்பட்டது அந்தப் பல்கலைக் கழகத்திற்காக 2 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் பதிய கட்டிடமும் கழக ஆட்சியிலேதான் கட்டப்பட்டது.

கால்நடை பராமரிப்புத் துறையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எப்போது மில்லாத அளவாக 274 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று முதலமைச்சர் ஜெய லலிதா 110வது விதியின் கீழான அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். ஆனால் பேரவையில் படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், -20132014 ஆம் ஆண்டில், மேலும் 100 கால்நடைத் துணை நிலையங்கள் கால்நடை மருத்துவமனை களாக தரம் உயர்த்தப்படும், 450 கால்நடை மருத்துவ மனைகளில், 115 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற் கொள்ளப்படும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் தற்போதுள்ள கால்நடை மருத்துவமனைகளை மேலும் சீரமைக்க 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது" என்று பக்கம் 23-24இல் கூறப்பட்டுள்ளது. இதிலே எது உண்மை என்பதை அரசுதான் விளக்க வேண்டும்

ஒட்டுமொத்தமாக 6-5-2013 அன்று ஒரு நாளில் மட்டும் வேளாண்மைத் துறைக்காக 965 கோடி ரூபாய்க்கான அறிவிப்புகளும் - உணவுத் துறையைப் பொறுத்து 771 கோடி ரூபாய்க்கான அறிவிப்புகளும் - கால்நடைத் துறையில் 15 கோடி ரூபாய்க்கான அறிவிப்பு களும் என்று அறிவிப்புகளாக அடுக்கியிருக் கிறார்கள். இந்த அறிவிப்புகள் எல்லாம் அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டதா? இந்த அளவிற்கு கோடிக்கணக்கான ரூபாய்க்கான அறிவிப்புகள் அன்றாடம் முதல் அமைச்சரால் செய்யப்படுகிறதே, இந்த அறிவிப்புக்கான திட்டங்களை எல்லாம் நிதிநிலை அறிக்கையிலே ஏன்

செய்யவில்லை? ஒவ்வொரு துறைக்குமாக மொத்தம் முப்பதுக்கு மேற்பட்ட அமைச்சர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்தபோது இந்த அறிவிப்புகளை யெல்லாம் ஏன் செய்யவில்லை? சட்டப்பேரவை விதி ாயின் கீழ் படிக்க வேண்டிய அறிக்கையையே 110வது விதியின் கீழ் முதல் அமைச்சரே படிக்கிறார்! யார் தான் எதைப் பற்றித்தான் இப்போது கவலைப்படு கிறார்கள்! ஒரு நாடகமன்றோ நடக்குது நாட்டிலே!

அன்புள்ள,

மு.க.

09-05-2013

3752. “சேது”வுக்கு முட்டுக்கட்டை!
தமிழர் வாழ்வைச் சீரழிக்கும் நடவடிக்கை!

உடன்பிறப்பே,

கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் செயல்பட அனுமதிப்பது பற்றி 6-5-2013 அன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில், “அணு மின் நிலையம் செயல்படுவதால் தங்களின் வாழ்வுரிமை பறிக்கப்படுகிறது என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அணு மின் நிலையங்கள் அமைப்பது வாழ்வுரிமையைப் பறிப்பதற்காக அல்ல; வாழும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவே என நீதிமன்றம் கருதுகிறது. பொதுநலனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், வாழ்வுரிமைக்கு உத்தரவாதம் அளிக்க இதுபோன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்” என்றெல்லாம் கூறப்பட்டிருப்பதை நினைவில் கொண்டால், சேதுசமுத்திரத் திட்டமும் மக்களின் வாழும் உரிமைகளை உறுதிப் படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்படும் திட்டமாகும்; மேலும் முழுவதுமாய்ப் பொதுநலனுக்கே முக்கியத்துவம் அளித்திடும் திட்டமுமாகும்.

சேது சமுத்திரத் திட்டத்தின் தொடக்க விழா, 2-7-2005 அன்று மதுரையில் நடைபெற்றபோதே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா விடுத்த நீண்ட அறிக்கையில்,

“என்னுடைய வற்புறுத்தலின் பேரில்தான் 1998 ஆம் ஆண்டில் இத்திட்டம் ஒரு முன்னுரிமைத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு, தொடக்கச் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆய்வுப் பணி தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திடம் 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அறிக்கையும், 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில்

அளிக்கப்பட்டது. இவ்வாறாக, சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் நனவாவதை உறுதிப்படுத்துவதற்கு நான் முக்கியக் காரணமாக இருந்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

அதாவது சேது சமுத்திரத் திட்டம் வருவதற்கே தான்தான் காரணம் என்பதைப்போல கூறிக் கொண்டார். அப்படிச் சொல்லி அப்போது தனக்குப் பெருமை தேடிக் கொண்டவர், தற்போது அதே திட்டம் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தை நாடிச் சென்றுள்ளார் என்பதுதான் வேடிக்கையான முரண்பாடு!

1998ஆம் ஆண்டு தேசியச் சுற்றுச் சூழல் பொறியியல் நிறுவனத்திடம் ஜெயலலிதாவின் வலியுறுத்தல் காரணமாக அறிக்கை பெறப்பட்டதாக ஜெயலலிதா தனது அறிக்கையிலே கூறியுள்ளார். அதற்குப் பிறகு நடந்ததை அவர் அறியவில்லைபோலும்! அப்போது தரப்பட்ட அறிக்கை போதுமானதாக இல்லை என்பதற்காக மீண்டும் ஒருமுறை அதே நிறுவனத்திடம் விவரமான அறிக்கையைத் தருமாறு தூத்துக்குடி துறைமுகக் கழகம் கேட்டுக்கொண்டு, அவ்வாறே ஒரு விளக்கமான அறிக்கை அந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது.

கடந்த 2004ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் இத்திட்டம் குறித்து "சிலரின்" தூண்டுதலின்பேரில் வழக்கு ஒன்று வந்தபோது, தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் நிறுவனத்திடம் அவர்கள் அளித்த அறிக்கை விவரமான ஒன்றா என்று கேட்டபோது, அந்த நிறுவனம் திட்டவட்டமாகத் தாங்கள் முழுமையாக ஆய்வு நடத்திய பிறகுதான் அந்த விவரமான அறிக்கையைத் தாக்கல் செய்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த உறுதியான விளக்கத்திலிருந்தும்; இத்திட்டம் நன்றாக ஆய்வு நடத்தப்படாமல் நிறைவேற்ற முன் வந்து விட்டது என்ற ஜெயலலிதாவின் கூற்று எந்த அளவுக்கு உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்பது தெளிவாகிறது!

"மத்திய சுற்றுச் சூழல் - வனத்துறை அமைச்சகம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி மாநில அரசிடமிருந்து அவ்வமைச்சகம் தடையின்மைச் சான்றிதழ் பெற வேண்டியது சட்டப்படி அவசியம் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட, தமிழக அரசின் தடையின்மைச் சான்றிதழுக்காகக் காத்திருக்காமல்,

இத்திட்டத்திற்கான சுற்றுச் சூழல் சார்ந்த அனுமதியை மத்திய சுற்றுச்சூழல் வனத் துறை அமைச்சகம் தடாலடியாக வழங்கிவிட்டது'' என்று ஜெயலலிதா தனது நீண்ட அறிக்கையிலே அப்போதே தெரிவித்தார்.

"N.O.C. from the State Government or Tamilnadu Pollution Control Board is not a statutory requirement for consideration of environmental clearance for a project for which such clearance is to be accorded by the Central Government as per the Environmental Impact Assessment Notification dated 27-1-1994. Neither the notification, which has the force of law, nor Schedule IV which is appended to it and lays down the procedure for public hearing stipulates such No Objection Certificate"

(27-1-1994ஆம் தேதிய சுற்றுச்சூழல் துறை வகுத்துள்ள விதிமுறைப்படி, மத்திய அரசினால் அனுமதி வழங்கப்பட வேண்டிய எந்த ஒரு திட்டத்திற்கும் மாநில சுற்றுச் சூழல் வாரியத்தின் தடையில்லா சான்றிதழ் தேவை என்பது சட்டப்பூர்வமான ஒன்றல்ல. சட்டப்பூர்வமாக ஏற்கப்படும் அந்த விதி முறைப்படியோ அல்லது அத்துடன் இணைக்கப்பட்ட ஷெட்யூல் நான்கின்படியோ மக்கள் கருத்தாய்வினைப் பெறும்போது தடையில்லாச் சான்றிதழ் தேவையென்று சொல்லப்படவில்லை.)

சேது சமுத்திரத் திட்டம் கூடாது என்று ஓ. பொன்னாண்டஸ் என்பவர் தொடுத்த வழக்கில் 17-12-2004 அன்று சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ மற்றும் நீதிபதி வி.பாலசுப்பிரமணியம் அளித்த தீர்ப்பில் முக்கிய பகுதி :-

"தேசிய நலனுக்காகக் கொண்டு வரப்படும் சேது சமுத்திரத் திட்டத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன் மனுதாரர் இந்த நீதிமன்றத்திற்கு விரைந்து வந்து வழக்கைத் தொடர்ந்துள்ளார். சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நாட்டிற்கு மிகுந்த நற்பலனை கொடுக்கக் கூடியது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால் தற்போது கப்பல்கள் ஸ்ரீலங்கா நாட்டைச் சுற்றி வங்காள விரிகுடா கடலுக்கு வரவேண்டியுள்ளது. பாக்ஜலசந்தியில் குறுக்காகக் கப்பல் கால்வாய் அமைத்தால் பெருமளவு பணமும், நேரமும் சேமிக்கப்பட ஏதுவாகும். கப்பல்

கம்பெனிகளின் எரிபொருள் செலவும் சேமிக்கப்பட்டு வியாபார விருத்திக்கு அவை பயன்பட வழிவகுக்கும். இத்திட்டத்தின் மூலம் தூத்துக்குடி துறைமுகம் மற்றும் கரையோர நகரங்களிலும் போக்குவரத்து மேம்பாடு அடைந்து அபிவிருத்தி செய்ய ஏதுவாகும். இத்திட்டமானது சூயஸ் கால்வாய்த் திட்டத்தைப் போன்றது. அதாவது ஐரோப்பா நாட்டிலிருந்து ஆசியாவின் துறைமுகங்களை அடைய வேண்டிய கப்பல்கள் சூயஸ் கால்வாயை அமைப்பதற்கு முன், ஆப்பிரிக்கக் கண்டத்தை முழுவதும் சுற்றி வலம்வர வேண்டியதாய் இருந்தது. சூயஸ் கால்வாய்த் திட்டத்தின் மூலம் மேற்படி சுற்றுப் பாதை தவிர்க்கப் பட்டுக் காலநேரம் மற்றும் பணம் மிச்சப்படுத்தப்பட்டது. இதே மாதிரி சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமும் நல்ல விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. பொதுமக்களிடம் விசாரணை செய்து மாவட்ட ஆட்சியாளர்கள் ஏற்கனவே விசாரணை அறிக்கையை அனுப்பிவைத்துள்ளார்கள். எங்கள் அபிப்பிராயத்தில் சேது சமுத்திரம் கால்வாய் திட்டம் விரைவில் முடிவடைய ஏதுவாகும். நாட்டின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களைச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்ற கருத்தை வலியுறுத்துவதன்மூலம் தடை ஏற்படுத்தல் கூடாது என்று இந்த வழக்கைவிட்டுப் பிரியும் முன் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்."

சேது சமுத்திரத் திட்டத்தைத் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை மனதிலே கொண்டு ஓர் அரசின் பெயரைப் பயன்படுத்தி, அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும், முட்டுக்கட்டை போடுவதும் நாட்டு மக்களின் வாழ்வையும், முன்னேற்றத்தையும் குலைக்கச் செய்யும் நடவடிக்கைகளாகும். சமச்சீர் கல்வித் திட்டமா? அது தி.மு.கழக ஆட்சியால் தொடங்கப்பட்ட திட்டமா? அதற்கு அனுமதி கிடையாது என்பதும்; ஓமந்தூரார் வளாகத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலகமா? 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து தி.மு.கழக ஆட்சியிலே கட்டப்பட்ட திட்டமா? அது கூடாது என்பதும்; அங்கே மருத்துவமனை அமைப்போம் என்றெல்லாம் சொன்னால், அதனால் கருணாநிதிக்கு எந்த இழப்பும் இல்லை. அந்த இடத்திலே தொடர்ந்து தலைமைச் செயலகமும், சட்டப்பேரவையும் நடைபெற்றிருந்தால் அதைக் கட்டியது யார், எந்த ஆட்சியில் கட்டப்பட்டது என்று

பேசுபவர்களைவிட, அந்த இடத்திலே மருத்துவமனை தொடங்கப் போவதாகச் சொல்வது பற்றியும், கடந்த இரண்டாண்டு காலமாக அந்தக் கட்டிடத்தை அப்படியே எதற்கும் பயன்படாத இடமாக வைத்திருக்கிறார்களே, அதைப்பற்றியெல்லாம் இப்போது அந்தப் பக்கம் போவோரும் வருவோரும் என்ன பேசிக்கொண்டு செல்வார்கள்? "கருணாநிதி கட்டியது என்பதற்காக ஜெயலலிதா இப்படி எதற்கும் பயன்படாமல் செய்திருக்கிறாரே, நாம் கொட்டிக் கொடுத்த வரிப்பணத்திலே கட்டப்பட்ட கட்டடம் அல்லவா?" என்று பேசிக் கொண்டுதானே சென்றிருப்பார்கள்! இதுபோல் எத்தனை திட்டங்கள்? காவல் துறையினர் மீது தனக்குத்தான் அக்கறை என்பது போல முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகிறார். ஆனால் சென்னை மாநகரில் காவல்துறை ஆணையர் அலுவலகத் திற்காக 100 கோடி ரூபாய்ச் செலவில் பல மாடிக் கட்டிடம் கட்டி முடித்து எத்தனை மாதங்கள் ஆகின்றன? கழக ஆட்சியிலே கட்டப்பட்டது என்பதற்காகத் திறப்பு விழா நடத்தப்படாமல் போட்டு வைத்திருக்கிறார்கள். அதனால் கருணாநிதிக்கு என்ன இழப்பு? அதைப் பார்க்கும் காவல் துறையினர் அனைவரும் "மகராஜன், 100 கோடி ரூபாய் செலவழித்து கட்டிவைத்ததை, இந்த அம்மாளுக்குத் திறக்க மனம் வரவில்லையே?" என்றுதான் பேசிக்கொண்டு செல்வார்கள். அதைப் போலத்தான் மதுரவாயல் - துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் கழக ஆட்சியில் பிரதமர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார் என்பதற்காகப் பல கோடி ரூபாய்ச் செலவிடப்பட்ட நிலையில், அதற்கும் தடங்கல் செய்து அந்தத் திட்டமும் சுணங்கிக் கிடக்கிறது. இதையெல்லாம் தொடர்ந்து பார்த்துவரும் தமிழ்நாட்டு மக்கள் இந்த அரசைப் பற்றி என்ன எண்ணிக் கொள்வார்கள்?

சுமார் 800 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்துச் சேது சமுத்திரத் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வந்த நிலையில் ஒரு சிலர் கற்பனையான காரணத்தை முன் வைத்து, அதிலே தலையிட்டு, அதற்கு மூடு விழா நடத்த முனைவது சரிதானா என்று நியாயம் கேட்டு உண்மையை நிலைநாட்டுவதற்காகத்தான் 15ஆம் தேதியன்று தி.மு.க. "எழுச்சி நாள்" கண்டனக் கூட்டங்களை நடத்துகிறது. காழ்ப்புணர்ச்சிக்கும் ஓர் எல்லை உண்டு. அதைச் சொந்தக் காரியங்களிலேகூட காட்டட்டும்; ஆனால் மக்களுக்குப்

பயனளித்திடும் அரசுப் பணிகளிலே காட்டுவது எப்படிச் சரியாகும்? நான்கு பேருக்கு நல்லது செய்யத் தான் பொதுவாழ்வுக்கு வருவது; நல்லது செய்யா விட்டாலும் கெடுதல் செய்வதற்காகவா பதவி?

தற்போது நடைபெறும் ஆட்சியினர் எப்படியெல்லாம் அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் நடந்து கொள்கிறார்கள் என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் அனுபவப்பூர்வமாக உணர்ந்துதான் வருகிறார்கள். ஆனால் அதை நாட்டு மக்களிடம் விளக்கிட வேண்டிய பல எதிர்க்கட்சிகள், அதனை எடுத்துக் கூறுவதற்கே தயங்குகிறார்கள். நமக்கு ஏன் வீண் வம்பு என்று நினைக்கிறார்கள். துணிந்து யாராவது ஆட்சியை எதிர்த்துக் குரல் கொடுத்தால், அதை ஜனநாயகத்தின் இயல்புதானே என்று எடுத்துக்கொள்ளாமல், அவர்கள் மீது பல்வேறு நடவடிக்கைகளை இந்த ஆட்சியினர் எடுக்கிறார்கள். பத்திரிகைகளாவது அதைப் பற்றியெல்லாம் எழுதுகின்றனவா என்றால், அவர்களுக்கும் பிரச்சினை. கடந்த மாதம் ஆங்கில நாளேடு ஒன்றில், போக்குவரத்துத் துறையில் நடைபெற்ற 200 கோடி ரூபாய் டெண்டர் ஊழல் பற்றிப் பெரிதாக முதல் பக்கத்திலேயே செய்தி வெளியிடப்பட்டது. அதை யாருமே கண்டுகொள்ளவில்லை. மறுநாள் அதுபற்றி தி.மு. கழகத்தின் சார்பில் விரிவாக எழுதியவுடன், அந்தப் பத்திரிகை மீது வழக்கு போடப்போவதாக அரசு அறிவித்துவிட்டது. மறுநாளே அந்தப் பத்திரிகை நமக்கேன் வம்பு என்று அரசைத் தாக்கி அப்படிச் செய்தி வெளியிடுவதையே நிறுத்திவிட்டது.

சேது சமுத்திரத் திட்டம் என்பது தென் மாவட்ட மக்களுக்கெல்லாம் வாழ்வாதாரத்தை உயர்த்தித் தரக் கூடிய ஒரு திட்டம். பல ஆண்டுக் காலமாகப் பலரும் கோரிக்கை வைத்த திட்டம். அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களும் குரல் கொடுத்த திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும் என்பதற்காகத்தான் கோரிக்கை வைக்கவேண்டுமே தவிர, அந்தத் திட்டம் கூடாது என்று எந்த ஆட்சியினராவது கேட்பார்களா? ஆனால் அந்த விசித்திரமும், வேதனையும்தான் தற்போது தமிழ்நாட்டில் நடைபெறுகிறது என்பதை 15ஆம் தேதி கழகம் நடத்தவிருக்கின்ற கூட்டங்களில் தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் எடுத்துரைத்திட வேண்டும். அதை மனதிலேகொண்டுதான் இந்த விளக்கங்களையெல்லாம் திரட்டி உனக்குத் தந்துள்ளேன்.

இந்தக் கருத்துகளை நீயும் தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் தெளிவுபடுத்து! யார் எது சொன்னாலும், என்றும் போல் நம் பணி தொடரட்டும்!

15ஆம் தேதி வடசென்னையில் நடைபெறும் எழுச்சி நாள் கூட்டத்தில் நான் உரையாற்றுகிறேன். அதைப்போலவே கழகத்தின் முன்னணியினரும், சொற்பொழிவாளர்களும் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் உரையாற்ற இருக்கிறார்கள். அந்தக் கூட்டங்களையெல்லாம் மிகவும் வெற்றிகரமாக நடத்தித் தர வேண்டுமென்று உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்றும்)

அன்புள்ள,

மு.க.

10-5-2013

3753. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி; அன்றும் - இன்றும்!

உடன்பிறப்பே,

7-5-2013 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் எந்தத் துறை பற்றிய மானியக் கோரிக்கை விவாதிக்கப்பட்டது, அதிலே யார் யார் பேசினார்கள், அந்தத் துறையின் அமைச்சர் அதற்கு என்ன பதில் சொன்னார் என்று எந்த விவரமாவது ஏடுகளில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டிருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. தமிழகத்தில் நடைபெறுவது என்ன? ஆங்கிலத்தில் சொல்வார்களே, "One Man Show" - அதுதான் இங்கே நடைபெறுகிறது. அந்த வரிசையில் பேரவையில் கேள்வி நேரம்கூடச் சில நாட்களில் இடம்பெறாமல் இருக்கிறது, ஆனால் முதலமைச்சரின் 110வது விதியின் கீழான அறிக்கைகள் அன்றாடம் உண்டு; அவை நாளேடுகளிலும் பக்கம் பக்கமாக இடம் பெறுகின்றன.

7-5-2013 அன்று தொழில்துறை பற்றிய அறிவிப்புகளை முதலமைச்சர் படித்திருக்கிறார். தொழில்துறை பற்றிய மானியக் கோரிக்கை பேரவையிலே ஏற்கனவே விவாதிக்கப்பட்டு பதிலும் அந்தத் துறை அமைச்சர்களால் கூறப்பட்டாகிவிட்டது. ஆனால் அந்தத்துறை பற்றிய அறிவிப்புகளைத்தான் முதலமைச்சர் பேரவையில் நேற்று படித்திருக்கிறார்.

முதலமைச்சர் 110வது விதியின்கீழ் அறிக்கை படித்து முடித்ததும், குடியரசுக் கட்சி, கொங்குப் பேரவை, பார்வார்டு பிளாக், சமத்துவ மக்கள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் பாராட்டுரைகள்! முதல்வரின் அறிவிப்புகளால் தமிழகம் இந்தியாவின் மான்செஸ்டர் ஆனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை - இது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

பாராட்டுரை. அத்துடன் பாராட்டுரை முடியவில்லை. துறையின் அமைச்சர் மோகன், "செயற்கரிய செயல்களை செய்யக் கூடியவர் நம்முடைய அம்மா. அவர் சுனாமியையே விரட்டி அடித்தவர். தமிழகம் முதல் மாநிலம் என்கிற பெயர் பெற வேண்டும் என்பதற்காக இது போன்ற நல்ல திட்டங்களை அறிவிக்கிறார். வெளிச்சத்தைத் தருகிறார்" என்று கூறியிருக்கிறார். அடுத்து துறையின் இன்னொரு அமைச்சர் எழுந்து, "எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்று முனைப்புடன் அம்மா நல்லாட்சி நடத்துகிறார். அதற்கு முத்தாய்ப்பாக இந்தத் திட்டங்களை அறிவித்துள்ளார்" என்கிறார்.

பேரவைத் தலைவர், "தமிழகம் ஏற்றம் பெற வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் உழைக்கின்ற நம் அம்மா இப்போது தொழில் துறையில் தமிழகத்தை மேலும் முன்னேற்றுவதற்காக இந்தப் புதிய அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார். விடிவெள்ளியாக வந்து அவர் தமிழகத்திற்கு வெளிச்சத்தைத் தந்து கொண்டிருக்கிறார்" என்று முற்றுப் புள்ளி வைத்திருக்கிறார்.

அன்றாடம் கேள்வி நேரம் முடிந்து, முதலமைச்சர் 110வது விதியின்கீழ் அறிக்கைகளைப் படிக்க, அதை அனைத்துக் கட்சிகளின் சார்பில் வரவேற்று பாராட்டுரை வழங்க, அமைச்சர், பேரவைத் தலைவர் ஆகியோரின் போற்றிப் புகழுரைக்குப் பிறகுதான் திட்டமிட்டபடி மானியக் கோரிக்கை மீதான விவாதம். இதுதான் தமிழகச் சட்டப்பேரவையில் இப்போதெல்லாம் நடக்கிறது. எதிர்த்துக் கேட்பவர்கள், மாற்றுக் கருத்தோடு விமர்சனம் செய்பவர்கள் யாரும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், ஜனநாயக நெறிகளுக்குப் புறம்பாக, தி.மு.கழக உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். அன்றையதினம் தொழிற்துறை குறித்து முதலமைச்சர் அறிவித்துள்ள திட்டங்கள் என்ன தெரியுமா?

- திருவரங்கம் தொகுதியில் 1200 கோடி ரூபாய் முதலீட்டில் காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலை; நாகை மாவட்டத்தில் ஓர் ஆழ்கடல் துறைமுகம், ஒரு மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம், 500 மெகாவாட்திறனுள்ள

எரிவாயுவைப் பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலை ஆகியவை 3,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்; ஒன்பது மாவட்டங்களில் ஒன்பது புதிய தொழிற் பூங்காக்கள் ஏற்படுத்தப்படும்; திருமழிசையில் அடுக்குமாடித் தொழில் வளாகம் ஒன்று சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்.

இப்படி அறிவிப்புகள் தொடருகின்றன. இதிலே திருமழிசையில் அடுக்குமாடித் தொழில் வளாகம் பற்றிய அறிவிப்பினைப் படித்தபோது எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டது! அதைப்பற்றி நான் கடந்த மாதமே எழுதியிருந்தேன்.

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் 9-9-2011 அன்று முதலமைச்சர் இதே 110வது விதியின்கீழ் ஓர் அறிக்கை படித்தார். அது திருமழிசையில் 311 ஏக்கரில் குடியிருப்புகளை அமைக்கப் போவதாகவும், சென்னை அருகே துணை நகர் அமைக்கப் போவதாகவும் அறிவித்து, அனைத்து ஏடுகளிலும் இப்போது போலவே பெரிதாகச் செய்தி வெளியிட்டிருந்தார்கள். - ஆனால் அந்தத் திட்டம் முதலமைச்சர் அவ்வாறு அறிவிப்பதற்கு முன்பே 25-8-2011 அன்று பேரவையில் வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இடம்பெற்றிருந்தது. அதையேதான் பின்னர் முதல மைச்சர் 110வது விதியின்கீழ் அறிவிப்பாகப் படித்தார்.

ஆனால் அந்த அறிவிப்பு என்னவாயிற்று? திருமழிசையிலே துணைக்கோள் நகரம் அமைந்துவிட்டதா என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும். அதுபற்றி 5-5-2013 அன்று வெளி வந்த செய்தியிலேகூட, அத்திட்டம் வருவதற்குச் சிக்கலோ சிக்கல் என்றுதான் கூறப்பட்டுள்ளது.

தொழில்துறை பற்றி முதலமைச்சர் ஏராளமான அறிவிப்புகளை பேரவையில் வெளியிட்டுள்ள இந்த நேரத்தில்; கழக ஆட்சியில் தொழிற் துறைக்காக எதுவுமே செய்யப்படவில்லையா என்ற கேள்விக்கு விடையளிக்கும் வகையில், கழக ஆட்சியில் நடந்த ஒரு சில பணிகளை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

2006இல் கழக அரசு அமைந்தபின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் (Blocks) கண்டறிந்து, அவற்றில் தொழில் தொடங்கும் வழிமுறைகளை நிர்ணயிப்பதற்காகத் தொழில்துறைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று 20.7.2006 அன்று அமைக்கப்பட்டது.

தமிழக தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கு உதவிட முதலமைச்சர் தலைமையில் தொழில் வர்த்தகக் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட, "சிறப்புத் தொழில் முனைப்புக் குழு" (Special Task Force) 8.11.2006 அன்று அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் தயாரிப்புத் துறைகளின் பங்களிப்பை 21 சதவீதத்தில் இருந்து 27 சதவீதமாக உயர்த்துவதற்கும் தமிழ்நாட்டின் ஏற்றுமதி மதிப்பை ஆண்டுக்கு 1 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் என இரட்டிப்பாக்கிடவும், புதிய கண்டுபிடிப்புகளிலும், உயர்தொழில் நுட்பத்திலும் தமிழகத்தை ஒப்புயர்வற்ற நிலைக்கு உயர்த்துவதற்கும், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைப்பதற்கும் வழிவகுக்கக்கூடிய புதிய தொழிற்கொள்கை 2007ஆம் ஆண்டில் உருவாக்கி வெளியிடப்பட்டது.

தமிழகத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் தன்மையை அதிகரித்து அவற்றின் செயல்திறனைப் படிப்படியாக மேம்படுத்துதல்; விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்திட, வேளாண் சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10 சதவீதத்திற்கும் அதிகமாக நிர்ணயித்தல் போன்றவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக 2008ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தனிக் கொள்கை உருவாக்கப்பட்டது.

2009-2010ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கை தயாரிப்பதற்கு முன்பாகத் துணை முதலமைச்சர் தம்பி மு.க.ஸ்டாலின் 13.6.2009 அன்று சென்னை தலைமைச் செயல கத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து குறு, சிறு மற்றும்

நடுத்தர மற்றும் பெரும் தொழில் முனைவோர் கூட்டமைப்புகளின் கூட்டத்தைக் கூட்டி தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்தாலோசித்தார். அதன்பின் அத்தகைய கூட்டம் நெல்லை, கோவை, திருச்சி, ஈரோடு ஆகிய இடங்களிலும் நடத்தப்பட்டன. **மைய அரசின் மத்திய புள்ளிவிவர நிறுவனம்** (Central Statistical Organisation) 2011இல், தனது 2008-09இல் தொழிற்சாலைகள் குறித்த ஆண்டு ஆய்வினை வெளியிட்டது. அந்த ஆய்வின்படி; தமிழ்நாடு மொத்தம் 26,122 தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது; இதன் மூலம் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது; தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் 17 இலட்சத்து 74 ஆயிரத்து 19 பேர் தொழிற்சாலைகளில் மட்டும் பணிபுரிகின்றனர்; "மொத்த முதலீட்டின்" வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது; "மொத்த தொழில் உற்பத்தியில்" தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது; மேலும் "நிகர மதிப்பு கூடுதல்" அளவில் தொழிற்சாலை வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது என்றெல்லாம் எழுதியிருந்தது.

"Wall Street Journal" தனது 2010, ஜூலை 8ஆம் நாளிட்ட இதழில் தமிழக அரசின் செயல்பாடுகளை மிகவும் புகழ்ந்து கூறியிருக்கிறது. மேலும், அந்த இதழில் "தமிழ்நாடு வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலங்கள், சாலைகள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதில் மற்ற இந்திய மாநிலங்களைவிடச் சிறப்பாக செயல்படுகிறது. மேலும், தொழில் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் 12க்கும் மேற்பட்ட அரசுத்துறை சார்ந்த அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது என்றும் கூறிப் பாராட்டியுள்ளது.

முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்ப்பதில் இந்தியாவின் சிறந்த மூன்று மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகத் திகழ்வதை, "ASSO CHAMP" நிறுவனம் வெளியிட்ட BIZCON என்ற அறிக்கையில் சிறப்பித்துக் கூறியிருக்கின்றது.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (Centre for Monitoring Indian Economy) 2010 அக்டோபர்-டிசம்பர் காலாண்டிற்கான அறிக்கையில் தமிழகம் இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் மூன்றாவது மாநிலமாகத் திகழ்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 2001இல் அ.தி.மு.க. ஆட்சியின் தொடக்கத்தில் அதாவது, 2001 மே திங்கள்வரை தமிழகத்தில் செய்யக் கருதப்பட்ட தொழில் முதலீடு 1 இலட்சத்து 83 ஆயிரத்து 49 கோடியே 37 இலட்ச ரூபாய்; அ.தி.மு.க. ஆட்சி முடிவடைந்த 2006 மே திங்கள் வரை 5 ஆண்டுகளில் இந்த முதலீடு ஏறத்தாழ 8 ஆயிரத்து 742 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே உயர்ந்து 1 இலட்சத்து 91 ஆயிரத்து 791 கோடியே 98 இலட்ச ரூபாய் என இருந்தது.

ஆனால், 2006இல் கழக ஆட்சி அமைந்த பிறகு புதிய தொழில் கொள்கையை வகுத்துத் தொழில்வளர்ச்சிக்கு அளித்துவரும் ஊக்கம், தொழில் முதலீட்டாளர்களுடன் தொழில் நேயத்துடன் கொண்டுள்ள வெளிப்படையான அணுகுமுறை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்தப்பட்டுள்ள தொழில் கட்டமைப்புகள் முதலியவற்றின் பயனாக ஐந்தாண்டுகளில் 5 இலட்சத்து 73 ஆயிரத்து 765 கோடியே 94 இலட்ச ரூபாய் அதிகரித்து மொத்த முதலீடு 2010 டிசம்பர்த் திங்களில் 7 இலட்சத்து 65 ஆயிரத்து 557 கோடியே 92 இலட்ச ரூபாய் என - ஏறத்தாழ நான்கு மடங்கு உயர்ந்து, தொழில் வளர்ச்சியில் ஓர் அமைதிப் புரட்சி ஏற்பட்டது.

2001-2006 ஐந்தாண்டு அ.தி.மு.க ஆட்சியில் அதற்கு முந்தைய கழக அரசின் ஆட்சியில் இருந்த முதலீட்டைவிட அதிகரித்த தொழில் முதலீடு 8 ஆயிரத்து 742 கோடியே 61 இலட்சம் ரூபாய் மட்டுமே.

ஆனால், 2006-2011 ஐந்து ஆண்டுகால கழக ஆட்சியில் முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட அதிகரித்த தொழில் முதலீடு 5 இலட்சத்து 73 ஆயிரத்து 765 கோடியே 94 இலட்ச ரூபாய்.

"சிப்காட்" பற்றியெல்லாம் முதலமைச்சர் பேரவையில் படித்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். தி.மு.கழக ஆட்சியிலேதான் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் மேம்

படுத்தப்பட்ட தொழில்மனைகளை அனைத்து அடிப்படை வசதிகளுடனும் உருவாக்கி; தொழில் முதலீட்டாளர்களுக்கு வழங்கிட, "சிப்காட்" நிறுவனத்தையே 1971ஆம் ஆண்டில் அன்றைய கழக அரசு ஏற்படுத்தியது.

முதலமைச்சர் படித்த அறிக்கையில் அவரது தலைமையிலான அரசுதான் தொழில்துறையில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்று கூறிய காரணத்தால், கழக ஆட்சிக் காலத்தில் தொழில் துறையில் எந்த அளவிற்கு முனைப்புக் காட்டப்பட்டது, முன்னேற்றம் ஏற்பட்டது என்பதற்கான சிறு குறிப்பினை மட்டும் தந்துள்ளேன். எந்தெந்த தொழிற்சாலைகள் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டன என்பதைக் கூறவேண்டு மென்றால் அதற்குத் தனியாகத்தான் எழுத வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

11-5-2013

3754. ஈழத்தில் இன்னமும் தொடர்வதா இந்தக் கொடுமை?

உடன்பிறப்பே,

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட எண்ணற்ற இன்னல்களுக்கு இன்னமும் உரிய பரிகாரமும், நியாயமும் கிடைத்திடவில்லை. இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்துச் சுதந்திரமான சர்வதேச விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு; குறிப்பிட்ட காலவரையறைக்குள் விசாரணை முடிந்து நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது. பல விசாரணைக் குழுக்கள், சர்வதேச அமைப்புகள் இலங்கை நிகழ்வுகளின் கொடுமைகளை உலக அரங்கிற்குக் கொண்டு சென்று உணர்த்தியுள்ளன. கொடுமைகளுக்கான சான்றுகள் தொடர்ந்து குவிந்து வருகின்றன. மேலும் ஒரு சான்றாவணமாக, சர்வதேசப் பொது மன்னிப்பு அவை (Amnesty International) விசாரணை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

சர்வதேசப் பொது மன்னிப்பு அவை எனும் அமைப்பு எவ்வித அரசியலையும் - எந்த நாட்டு அரசையும் - எந்த ஒரு மதத்தையும் சார்ந்திராத சுதந்திரத் தன்மை கொண்டதாகும். அந்த அமைப்பு 150 நாடுகளில் முப்பது இலட்சம் ஆதரவாளர்களையும், உறுப்பினர்களையும் கொண்டு இயங்கி வருகிறது. அந்த அமைப்பின் அடிப்படை நோக்கமே, மனித உரிமைகளுக்குப் புறம்பான செயல்களைத் தடுத்து நிறுத்துவதாகும்.

இலங்கையின் பல்வேறு தரப்பினரிடமும், நேர்காணல் நடத்தித் தொகுக்கப்பட்ட விவரங்களை 30-4-2013 அன்று சர்வதேசப் பொது மன்னிப்பு அவை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கைக்கு, “கருத்து வேறுபாட்டின் மீது இலங்கை அரசின் தாக்குதல்” என்று தலைப்பிட்டுள்ளது. அந்த அறிக்கையிலே

பதிவாகியுள்ள செய்திகள் நம்மைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கி வேதனை அடையச் செய்கின்றன.

இலங்கையில் கருத்து வேறுபாடு என்பது அபாயகரமானது. போர் முடிந்த பின்னருங்கூட, அரசியல் - சமூக நடவடிக்கைகளில், இலங்கை அரசினர் பொறுமையின்மையையே கடைப்பிடித்து வருகிறார்கள். மனித உரிமைகள் மற்றும் மனித நேயம் தொடர்பான சர்வதேச சட்ட மீறல்களுக்கான சாட்சியங்கள் வரிசையாக வந்து கொண்டே இருக்கின்றன. போரின் போது புரிந்த குற்றச் செயல்களை மறைத்து, சட்ட ரீதியான - அரசியல் ரீதியான நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்காக, அந்தக் குற்றச் செயல்களைப் பற்றி அறிந்தோர் உலகுக்கு உண்மையை உரைத்து இலங்கை அரசின் முகத்திரையைக் கிழித்து விடுவார்கள் என்பதற்காக, அப்படிப்பட்டவர்கள் மீது தாக்குதல் தொடுத்து, அவர்களைச் சிறைக்கு அனுப்புவதும், கடத்திச் செல்வதும், கொலை செய்வதுமான கொடுமைகளை இலங்கை அதிகார பீடத்திலே அமர்ந்திருப்போர் நிகழ்த்தி வருகிறார்கள்.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் என்பதே குற்ற நடவடிக்கை என்பதைப் போலவும், கருத்து வேற்றுமை என்பதே தேசத் துரோகம் என்பதைப் போலவும் கணிக்கப்படுகின்றன. கருத்து வேற்றுமையை வேரறுப்பதிலும்; இலங்கை அரசின் கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் எதிர்ப்பான அமைப்புகளையும், நீதித் துறையையும், மக்கள் பிரதிநிதிகளையும் அழித்தொழிப்பதிலும்; இலங்கை அரசினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மனித உரிமைகளைக் காப்பாற்றிடும் வகையில் தீர்ப்புகளை வழங்கியமைக்காக, 2013 ஜனவரியில் இலங்கை நாட்டின் தலைமை நீதிபதி - வழக்கறிஞர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்புகளுக்கிடையே - பதவி நீக்கம் செய்யப்பட்டார். கருத்து வேற்றுமையை வெளிப்படுத்தும் வழக்கறிஞர்களைக் கண்காணிப்பதும், அவர்களுடைய நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்வதும் தொடர்ந்து நடைபெறுகின்றன. மனித உரிமைகளுக்காக வாழும் வழக்கறிஞர்கள், சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் வழக்கறிஞர்கள், மாணவர் தலைவர்கள், பேராசிரியர்கள், மதத் தலைவர்கள், தொழிற் சங்கத்தினர், அரசியல் கட்சியினர், நீதிபதிகள்,

பத்திரிகையாளர்கள் என யாரும் விட்டு வைக்கப்படாமல், அனைவருமே அரசினரின் கோபத்திற்கும் தாக்குதலுக்கும் ஆளாகி வருகின்றனர். போரினால் பாதிக்கப்பட்டோரைப் பற்றிய விவரங்களைத் திரட்டுவோர் மற்றும் அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவோர் அனைவருமே அச்சுறுத்தப்படுகிறார்கள்.

பத்திரிகையாளர்கள் பயமுறுத்தப்பட்டும், தாக்கப் பட்டும் வருகிறார்கள். 2006 முதல் குறைந்தது பதினைந்து பத்திரிகையாளர்களாவது கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 25க்கும் மேலான பத்திரிகையாளர்கள் நாட்டை விட்டே ஓடி விட்டார்கள். விடுதலைப் புலிகளுக்குச் சார்பான வலைத்தளம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசை விமர்சிக்கும் மேலும் ஐந்து வலைத்தளங்களும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன.

தேசப் பாதுகாப்பு என்று சொல்லியே, தனது நடவடிக்கைகள் அனைத்தையும் இலங்கை அரசு இதுவரை நியாயப்படுத்தி வந்தது. இனியும் இலங்கை அரசின் இந்த வாதத்தை நடுநிலை நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமைக் காப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தியும், அச்சுறுத்தியும், கைது செய்து சிறையில் அடைத்தும், கொலை செய்தும் தொடர்ந்து கொடுமைகள் புரிந்து வரும் இலங்கை அரசு, இத்தகைய மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்திட வேண்டுமென்றும்; 2013 செப்டம்பர் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் நடைபெறுவதால் அதற்கு முன்பே ஐ.நா. மன்றமும், காமன்வெல்த் அமைப்பும் இலங்கையில் நடந்த அனைத்து வகை மீறல்களுக்கும் இலங்கை அரசைப் பொறுப்பேற்கச் செய்திட வேண்டு மென்றும்; பொது மன்னிப்பு அவை வலியுறுத்தி வருகிறது.

காமன்வெல்த் அமைப்பில் இடம் பெற்றுள்ள நாடு என்ற வகையில் இலங்கை, மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தின் அம்சங்கள் அனைத்தையும் பிழையின்றி நடைமுறைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைக்குச் சட்டம் எதையும் இயற்றாத நாடு இலங்கை. கருத்துச் சுதந்திரம், மக்கள் அமைதியாகக் கூடுதல் மற்றும் இணைந்து செயல்படுதல் ஆகிய சர்வதேசப் பொறுப்பை நிறைவேற்ற இலங்கை அரசு மறுத்து விட்டது.

2005 நவம்பரில் ராஜபக்சே அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்தார். ஆனால் அப்பாவி மக்கள் மீது சொல்லொணாக் கொடுமைகளை ஏவியும் - போர்க் குற்றங்களை எண்ணற்ற வகையில் புரிந்தும் - மனித சமுதாயத்திற்கு எதிராக என்னென்ன அத்துமீறல்களைச் செய்ய முடியுமோ, அவை அனைத்தையும் கணக்கற்ற முறையில் நடத்தியும் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

2006 ஜனவரி 2 அன்று திரிகோணமலையில் மனோகரன், யோகராஜா, லோகித ராஜா, தங்கதுரை, சண்முகராஜா என்ற இருபது வயதே ஆன ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர். அந்தக் கோர நிகழ்வைப் படம் பிடித்த பத்திரிகையாளர் சுப்பிர மணியம் சுகித ராஜா என்பவர் 2006 ஜனவரி 24 அன்று கொலை செய்யப்பட்டார்.

இலங்கை கிழக்குப் பகுதியில் உள்ள முத்தூர் நகரத்தில் "பிரெஞ்ச் நிவாரண அமைப்பு" - "பட்டினிக்கு எதிரான நடவடிக்கை அமைப்பு'' ஆகியவற்றைச் சேர்ந்த 15 பேர், 2006 ஆகஸ்ட் 6 அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர். 2006இல் பொன்னுத்துரை யோகராஜா என்பவரின் இரண்டு மகன்களும் கொல்லப்பட்டனர்.

2006இல் வன்முறை பரவிடத் தொடங்கியதும், பத்திரிகை "சென்சார்" நடைமுறைக்கு வந்தது. அதன் தொடர்ச்சியாக, பத்திரிகையாளர்கள் குறி வைக்கப்பட்டனர். பத்திரிகையாளர் திசைநாயகம் 2008 மார்ச் 7இல் கைது செய்யப்பட்டார். 2009 ஜனவரி 8இல் 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர், விக்கிரம துங்கே பட்டப் பகலில் கொலை செய்யப்பட்டார். உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் செயலாளர், ஜெயந்தா 2009 ஜூன் மாதம் கடத்திச் செல்லப்பட்டு, துன்புறுத்தப்பட்டதில் தொடர்ந்து எழுத முடியாத அளவுக்கு அவரது கை விரல்கள் துண்டிக்கப்பட்டன. சிங்களத் தொழிற்சங்கத் தலைவர்களும் - "அகுணா'' என்ற பத்திரிகையை நடத்தி வந்தவர்களுமான லலித் சேனாவி ரத்னா, நிகல் சேரசிங்கே, சிசிரா பிரியங்காரா ஆகியோர் காணாமல் போனதாகக் கற்பனைக் கதை ஜோடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

கேலிச் சித்திரக்காரர் பிரகீத் 2010இல் காணாமல் போனார். 2012 பிப்ரவரி 11 அன்று ராமசாமி பிரபாகரன் என்ற வணிகர் அவரது வீட்டிலிருந்தே கடத்திச் செல்லப்பட்டார். ராணுவம் ஆக்கிரமித்துக் கொண்ட நிலத்தை மீட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு நீதிமன்றம் சென்றதற்காக, அம்பாறா மாவட்டம் அஸ்ரப் நகரைச் சேர்ந்த பெண்கள் பெருமளவுக்குத் துன்புறுத்தப் பட்டார்கள். 2012 ஏப்ரல் 7 ஆம் தேதியன்று முன்னணி சோஷலிசக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் பிரேமகுமார் குணரத்தினம், திமுத்து அட்டிகலா ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டார்கள். 2011 டிசம்பர் 9 முதல் அரசியல் ஆர்வலர்களான லலித் வீர ராஜு மற்றும் குகன் முருகானந்தம் ஆகிய இருவரையும் காணவில்லை. "உதயன்" நாளேட்டில் பணியாற்றுவோர் தொடர்ந்து தாக்கப் படுகின்றனர். 2011 ஜூலையில் "உதயன்" ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் தாக்கப்பட்டு பெருமளவுக்கு காயப்படுத்தப்பட்டார். 2013 பிப்ரவரி 13 அன்று பராஸ் சவுகத் அலி என்ற "சண்டே லீடர்" பத்திரிகையாளர் கழுத்தில் சுடப்பட்டார். 2013 பிப்ரவரியில் தனது கடமையைச் செய்து கொண்டிருந்த பி.பி.சி. செய்தி அமைப்பைச் சேர்ந்த சார்லஸ் ஹாவிலண்ட் என்பவர் போலீசாரால் மிரட்டப்பட்டார். அதன் காரணமாக பி.பி.சி. இலங்கையில் தனது செய்தி ஒலிபரப்பை ரத்து செய்தது. இலங்கை அமைச்சர் மெர்வின் செல்வா பேரணி ஒன்றில் பேசிய போது, சுனந்தா தேசப் பிரியா, நிமல்கா பெர்னாண்டோ, பாக்கியசோதி சரவணமுத்து ஆகிய பத்திரிகையாளர்களின் எலும்பை உடைத்து விடப் போவதாக பகிரங்கமாகவே எச்சரித்தார்.

2007 ஜூன் மாதம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் பணியாற்றி வந்த தமிழர்கள் இருவர் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

2009 ஜூன் 13 அன்று ஐ.நா. அமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் கடத்திச் செல்லப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். 2009 செப்டம்பரில் ஜேம்ஸ் எல்டர் எனும் யுனிசெப் பிரதிநிதி இலங்கையை விட்டு வெளியேற்றப்பட்டார். அதைப் போலவே மற்றொரு பிரதிநிதியான கார்டான் வீஸ் என்பவர் முல்லைத் தீவில் நடந்தது " குருதிக் குளியல்" என்று விமர்சித்ததற்காக நாட்டை விட்டே வெளியேற்றப்பட்டார். 2009 ஜூலையில் ஐ.நா. உதவியாளர் பீட்டர் மெக்கே நாட்டைவிட்டு

வெளியேற்றப்பட்டார். இலங்கை நிகழ்வுகளைப் பற்றி எழுதி வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு இலங்கையில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. 2009 ஏப்ரலில் 'யு.கே. டைம்ஸ்' பத்திரிகையாளர் ஜெரமி பேஜ் கைது செய்யப்பட்டார். "சேனல் 4" செய்தி அமைப்பின் மூன்று செய்தியாளர்கள் 2009 மே மாதம் நாடு கடத்தப்பட்டனர்.

ஐ.நா. அமைப்போடும், வெளிநாட்டுத் தூதரகங்களோடும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடும் சர்வதேசத் தகவல் அமைப்புகளோடும் தொடர்பு வைத்திருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். 2008 செப்டம்பரில் ஐ.நா. அமைப்பைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் அரசு சாரா நிவாரண அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

2009 மே 19 அன்று நாடாளுமன்றத்தில் வெற்றி உரையாற்றிய ராஜபக்சே, "இலங்கையில் இனி சிறுபான்மையோர் என்போரே இல்லை" என்றும்; "நாட்டை நேசிப்போர் மற்றும் பிறந்தது முதலே நாட்டை நேசிக்காதோர் என இரு பிரிவினர் மட்டுமே உள்ளனர்" என்றும் பேசினார். 2010 செப்டம்பர் 8 அன்று செய்யப்பட்ட இலங்கை அரசியல் சட்டத்தின் 18வது திருத்தத்தின்படி, மனித உரிமைகள் ஆணையம், தேசிய போலீஸ் ஆணையம், பொதுப்பணியாளர் தேர்வாணையம், நீதித் துறைப் பணியாளர் ஆணையம் ஆகியவை இலங்கை அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.

இலங்கைத் தலைமை நீதிபதி மீது குற்றம் சாட்டுவது அரசியல் சட்ட விரோதம் என இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததற்குப் பிறகும், குற்றம் சுமத்தப்பட்டது. 2012 சூலையில் முஸ்லீம் ஒருவருக்கும் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் எழுந்த பிரச்சினையில் தீர்ப்பை மாற்றி எழுதிட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் நீதி மன்றமே தீக்கிரையாக்கப்படும் என்றும் அமைச்சர் ஒருவர் தன்னை மிரட்டியதாக மன்னார் மாஜிஸ்திரேட் புகார் தெரிவித்தார். நீதித் துறை பணியாளர் ஆணையத்தின் செயலாளர் மஞ்சுளா திலகரத்னே மீது 2012 அக்டோபர் 7 அன்று தாக்குதல் நடத்தப்பட்டது.

இலங்கையில் இப்போது கருத்து வேற்றுமையின் மீது வன்முறை ரீதியிலான அடக்குமுறை ஒரு புறமும், அரசியல்

அதிகாரத்தை ஒருமுகப்படுத்திக் கொள்ளும் முயற்சி மற்றொரு புறமும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் இலங்கையில் நடைபெற்று வரும் வன்முறை வெறியாட்டங்களை மறுத்தும், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் - சட்ட விதிமுறைகளுக்கிணைந்த ஆட்சி நடத்துதல் பற்றி வெற்று உறுதிமொழிகளைத் தாராளமாக வழங்கியும், சர்வதேச அரங்கில் இரட்டை வேடம் போட்டு நாடகம் ஆடி வருகிறது ராஜபக்ஷே அரசு.

அநீதி இழைக்கப்பட்டோருக்கு நியாயம் கிடைத்திடவில்லை. போருக்கு முன்னும் பின்னும் காணாமல் போனவர்கள், எவ்வித விசாரணையுமின்றி கொலைக் களம் அனுப்பப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லாததால் அவர்களது குடும்பத்தினர் தொடர்பான பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை.

பொது மன்னிப்பு அவை, சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஐ.நா. பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு போன்றவை இலங்கையின் போர்க் குற்றங்கள் மீது சுதந்திரமான நம்பகத்தன்மை கொண்ட சர்வதேச விசாரணை வேண்டுமென்று திரும்பத் திரும்பக் குரல் கொடுத்தும் உரிய பயன் இதுவரை உருவாகிடவில்லை. இலங்கை ராஜ பக்ஷே அரசின் இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் பற்றிச் சுதந்திரமான நம்பகத்தன்மை கொண்ட சர்வதேச விசாரணை ஏற்படுத்தப்பட நாமும் தொடர்ந்து குரல் கொடுப்போம்! நமது குரல் எட்டுத்திக்கும் எதிரொலிக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

12-05-2013

3755. தூங்கும் புலியை இடறுகிறார்கள்!

உடன்பிறப்பே,

“கடந்த கல்வி ஆண்டில், 320 அரசுப் பள்ளிகளில், முதல் மற்றும் ஆறாம் வகுப்பு களில் தலா இரண்டு ஆங்கில வழி வகுப்புகள் தொடங்கப்பட்டன. 640 பிரிவுகள் தொடங்கப்பட்டு அதில் 22,400 மாணவர்கள் படித்து வருகின்றனர். அதனைத் தொடர்ந்து, வரும் கல்வி ஆண்டு முதல் தேவைப்படும் அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் ஆங்கிலவழி வகுப்புகள் தொடங்கப்படும். இதனால் ஆண்டுக்கு 1.5 இலட்சம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்” என்று அ.தி.மு.க. அரசின் பள்ளிக் கல்வி அமைச்சர் 10-5-2013 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் பள்ளிக் கல்வி மானியக் கோரிக்கையின்போது அறிவித்திருக்கிறார். இந்தத் துறையின் சார்பில் சொல்லப்படவேண்டிய முக்கிய அறிவிப்புகளையெல்லாம் 110வது விதியின்கீழ் அறிக்கைகளாக முதல் அமைச்சரே படித்துவிட்டு, முரண்பாடான, சர்ச்சைக்குரிய இந்த அறிவிப்பினை மட்டும் அமைச்சரைவிட்டு அவையிலே அறிவிக்கும்படி செய்யப்பட்டுள்ளது. அமைச்சரும்தான் என்ன அறிவிக்கிறோம் என்பதைத் தெரிந்தோ தெரியாமலோ, தமிழ் பயிற்று மொழி பற்றிய நீண்ட நெடிய திராவிட இயக்க வரலாற்றினைத் தெரிந்து கொள்ளாமலே, இந்த அறிவிப்பினைச் செய்துள்ளார்.

ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயின்றால்தான் அறிவு மேம்படும் என்பது ஒருவித மனநிலையே தவிர, அதில் எள்ளளவும் உண்மை இல்லை. தாய் மொழியில் கல்வி பயில்வதுதான் சுயசிந்தனை செழுமை அடைவதற்கு வாய்ப்பாகும். பிறமொழியில் கல்வி கற்பது என்பது சுயசிந்தனைக்குப் பெரும் தடையாக அமைந்துவிடும். தாய்மொழியில் கல்வி பயில்வதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் அண்ணல் காந்தி அடிகள், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட சமுதாய அக்கறை

கொண்ட தலைவர்கள் அனைவரும், கல்வி இயல் மேதைகளும், சிந்தனையாளர்களும் வலியுறுத்தி இருக்கின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளில் ஆங்கிலம் வழக்கு மொழியாகக்கூட இல்லை. ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான், சீனா போன்ற பல நாடுகளில் அந்த நாட்டு மொழிகள்தான் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் விளங்குகின்றன.

தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகள் மாணவர்களை ஈர்க்க வேண்டும் என்பதற்காக, ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக அறிவிப்பது ஏற்கத்தக்க நடைமுறை ஆகாது. சமச்சீர் கல்வி நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகு, பாடத் திட்டத்தைப் பொறுத்தவரை தனியார் பள்ளிகளும், அரசுப் பள்ளிகளும் சமநிலையிலேயே உள்ளன. எனவே அரசுப் பள்ளிகளை மேம்பாடுடைய கல்வி மையங்களாக மாற்றிட, சிறந்த தனியார் பள்ளிகளைப்போல, அரசுப் பள்ளிகளிலும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, வளர்த்து, தரமான கல்வி வழங்குவது ஒன்றே நல்ல ஏற்பாடாக இருந்திட முடியும்.

தமிழ்ப் பயிற்று மொழி பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்தில், இதற்காக நாம் ஆற்றிய கடந்த காலப் பணிகளைச் சற்று நினைவுகூர்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

கல்விக் கூடங்களில் பின்பற்றப்பட வேண்டிய மொழிக் கொள்கையை உருவாக்கிட அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக; -

தமிழ் பாடமொழி குறித்து முடிவெடுப்பதற்காக நான் முதலமைச்சராக இருந்தபோது, என்னுடைய முன்னிலையில் அப்போது கல்வித்துறை அமைச்சராக இருந்த பேராசிரியர், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டு 16-11-1998 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

1. தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் (as a subject) பள்ளிகளுக்குத்தான் ஏற்பளிக்கப்படும்.

2. 1999-2000ஆம் ஆண்டு முதல் பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத்

தமிழ் வழியில் (through the medium of Tamil) கற்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் தமிழ் ஒரு பாடமாகச் சொல்லித் தரும் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு மட்டுமே இனி அங்கீகாரம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்புக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அது போலவே தமிழக தமிழாசிரியர் கழகத்தின் சார்பிலும் வரவேற்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

இவ்வாறு பலராலும் வரவேற்கப்பட்ட அந்த முடிவுகளின் மீது சிலர் அய்யங்களை எழுப்பியிருந்தார்கள். அவைகளைப் பற்றி ஆய்வு செய்திட 12-1-1999 அன்று என்னுடைய தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு :-

16-11-1998 அன்று தமிழக அரசின் சார்பில் அறிவித்தவாறு, மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ்மொழியை ஒரு பாடமாக நடத்துவதோடு, பிற பாடங்களை ஆங்கில மொழியில் நடத்துவதை மாற்றிக் குறைந்தது மூன்றில் இரண்டு பாடங்களையாவது - அதாவது சமூகவியல் (பூகோளம், வரலாறு உள்ளடங்கிய), கணிதம், அறிவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழ் வழியில் (through the Medium of Tamil) அடுத்த கல்வி ஆண்டு முதல் கற்பிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது.

இத்தகைய அறிவிப்புகளைச் செய்த போதிலும், தமிழ் மொழிக் கல்விக்கு எதிராக ஒரு தரப்பினரால் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு, அதனை ஏடுகளும் பெரிதுபடுத்தி வெளியிட்டுக் கொண்டே வந்தன. ஆனால் மழலையர் பள்ளி உட்பட உயர் கல்வி வரை தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்தக் கோரி, தமிழ்ச் சான்றோர்கள் தொடர்ந்து கோரிக்கை அளித்து வந்ததை அடுத்து, நீதியரசர் திரு.எஸ். மோகன் அவர்கள் தலைமையில் - 3.5.1999 அன்று கழக ஆட்சியில் அரசாணை எண். 117ன்படி குழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் அந்தக் குழு கழக அரசுக்கு சமர்ப்பித்த பரிந்துரைகள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, அரசாணை எண். 324, பள்ளிக்கல்வித்துறை, நாள் 19.11.1999இல் பின்வருமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

1) அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மாநில அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும்) தமிழ் அல்லது தாய் மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

2) முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை அனைத்து மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசு (State Board) பாட முறை பின்பற்றும் பள்ளிகளில் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

3) மெட்ரிகுலேஷன் வாரிய விதிகளில் ஆங்கிலத்துடன் தமிழ் மற்றும் தாய் மொழியும் பயிற்று மொழியாகச் சேர்க்கப்படும். இதற்கான மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் விதிகளுக்குத் திருத்தங்கள் தனியாக வெளியிடப்படும்.

இந்த அரசாணையைச் செல்லுபடி அற்றதென விலக்கக் கோரி (Quash) தமிழ்நாடு மழலையர், தொடக்க, மெட்ரிகுலேஷன் மற்றும் மேல்நிலைப் பள்ளி நிர்வாகிகள் சங்கங்களும் மற்றும் சில பெற்றோர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பல்வேறு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டதில், உயர் நீதிமன்றம் பயிற்று மொழி தொடர்பான அரசு ஆணை நிலை எண்.324, பள்ளிக்கல்வி, நாள் 19.11.1999ஐ ரத்து செய்து, 20.4.2000 அன்று தீர்ப்பு வழங்கியது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பிற்கு எதிராக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுக்கள் (SLP) 10.7.2000 அன்று (SLP Civil No.13299-13301/2000) தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் எந்தவொரு மாணவ, மாணவியரும் தமிழ்மொழி கற்காமல் பள்ளியை விட்டு வெளியேறக் கூடாதென்பதை எங்கள் ஆட்சியில் உறுதிப்படுத்துவோம் என்று சொல்லிக் கொள்கிற வகையில் அ.தி.மு.க. ஆட்சியில் "அறிவியல் தமிழ்" என்ற பாடத்தினை முதலமைச்சர் ஜெயலலிதா அறிமுகப் படுத்தி, 2003-2004 கல்வி ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் +2 வரை மற்ற பாடங்களுடன் "அறிவியல் தமிழ்" என்ற பாடத்தினைக் கற்பிக்க ஆணையிட்டு அதற்கெனப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. எனினும் இந்தத் திட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

அதுவரை நடைபெற்ற அனைத்தையும் கருத்திலே கொண்டுதான் தி.மு.க. அரசு ஐந்தாம் முறையாக 2006ஆம் ஆண்டில் பொறுப்பேற்றதற்குப் பிறகு 9.6.2006 அன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாகத் தமிழைக் கற்றுக் கொள்வதற்கு வகை செய்கின்ற சட்டம் ஒன்றை இயற்றினோம். அந்தச் சட்டத்தின் பெயர் 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் என்பதாகும். இந்தச் சட்டத்தின் முக்கிய கூறுகளாவன :-

தமிழ் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் ஒரு பாடமாக - 1ஆம் வகுப்பிற்கு 2006-2007ஆம் கல்வி ஆண்டில் இருந்தும், 1 மற்றும் 2ஆம் வகுப்புகளுக்கு 2007-2008ஆம் கல்வியாண்டில் இருந்தும் தொடங்கி, படிப்படியான முறையில் கற்பிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அதைப் போன்றே பத்தாம் வகுப்பு வரையிலும் நீட்டிக்கப்படுதல் வேண்டும்.

கழக அரசு இவ்வாறு சட்டம் இயற்றிய பின்னர், இந்தப் பிரச்சினையில் எந்தவிதமான பின்னடைவும் ஏற்படாமல் நல்ல முறையிலே செயல்பட்டு வந்தது. கழக அரசு பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி தொடர்பான இத்தகைய முயற்சிகளோடு நின்று விடாமல், 2010ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் நடைபெற்ற சிறப்புமிக்கத் தருணத்தில், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களில் கட்டுமானவியல், இயந்திரவியல் ஆகிய பாடப் பிரிவுகளில் மாணவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தாய்மொழியில் கற்க - தமிழ் மொழி மூலமாகக் கற்கவகை செய்து ஆணையிடப்பட்டது. முதலாண்டிலேயே இந்தப் பாடப் பிரிவுகளில் 2010-2011இல் நிர்ணயிக்கப் பட்ட 1,400 இடங்களில் 1,378 மாணவர்கள் தமிழ்வழிப் பொறியியல் வகுப்புகளில் சேர்ந்தனர். மேலும் 2009-2010ஆம் கல்வியாண்டுவரை, பொறியியல் பட்டப் படிப்புக்கான பல்கலைக் கழக வினாத்தாள்கள் ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கப்பட்டு; விடைகளும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டுமென்று இருந்த நிலையை மாற்றி,. 2010ஆம் ஆண்டு முதல் ஆங்கிலம் அல்லது தமிழில் வினாத்தாள் வழங்கவும், விடைகளை ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவும் பல்கலைக் கழகங்கள் கழக ஆட்சியில் அறிவுறுத்தப்பட்டன.

கழக அரசு தமிழ்ப் பயிற்று மொழி தொடர்பாக மேற்கொண்டு வந்த இத்தகைய அரிய முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லாமல், அந்த முயற்சிகள் அனைத்தையும் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் அ.தி.மு.க. அரசின் அமைச்சர் இப்போது பேரவையிலே கூறியிருக்கிறார். மத்திய அரசு நடத்தும் வேலைவாய்ப்புக்கான தேர்வுகள் அனைத்தையும் தமிழிலும் நடத்திட வேண்டும்; சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகத் தமிழ் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற முற்போக்குக் கொள்கைகள் வலிவு பெற்றுவரும் இந்தக் கால கட்டத்தில் திடீரென்று அரசுப் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி என்பது தூங்குகின்ற புலியை வீண் வம்புக்கு இழுக்க இடறி விடுவதைப் போன்றது.

தமிழகத்தின் முக்கியமான இந்தப் பிரச்சினை குறித்து வாயைத் திறந்தால், எங்கே முதலமைச்சரின் கோபத்திற்கு ஆளாகிட நேரிடுமோ என்று, தமிழகத்திலே தமிழுக்காகத் தாங்கள்தான் பிறவியெடுத்திருக்கிறோம் என்பதைப்போல எண்ணிக்கொண்டு செயல்படும் சில அரசியல்வாதிகள் தங்கள் வாயைத் திறக்காமல் இருப்பதைப் பார்க்கும்போது "புலிக்குப் பயந்தவர்கள் என்மேல் படுத்துக் கொள்ளுங்கள்!" என்ற பழமொழி தான் நினைவிற்கு வருகிறது!

அன்புள்ள,

மு.க.

14-5-2013

3756. அறிவிப்போடு நிற்குமா அம்மாவின் திட்டங்கள்!

உடன்பிறப்பே,

30-4-2013 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் படித்த 110வது விதியின் கீழான அறிக்கையில்,

"கோயம்பேடு புறநகர்ப் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும், இங்கிருந்து செல்லும் பேருந்துகளில் பாதிக்குமேல் தென் மாவட்டங்களுக்குச் செல்பவையாக இருப்பதைக் கருத்தில் கொண்டும், தென் மாவட்டங்களிலிருந்து வந்து செல்லும் பேருந்துகளுக்கென தெற்கத்திய பெருஞ்சாலை மற்றும் வெளி வட்டச்சாலை ஆகியவற்றிற்கு இடையே வண்டலூர் - வாலாஜாபாத் மாநில நெடுஞ்சாலையை ஒட்டி வண்டலூர் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அறிவித்தார்.

இவ்வாறு வண்டலூரில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று முதல் அமைச்சர் அறிவித்ததற்கு, அந்தப் பகுதி விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்று செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியில், புதிய பேருந்து நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த விவசாயிகள் கூறும்போது "வண்டலூர் -வாலாஜாபாத்தை ஒட்டியுள்ள நஞ்சை விவசாய நிலத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் பல குடும்பங்கள் விவசாயம் செய்து வருகின்றன. ஏற்கனவே சாலை விரிவாக்கம், வண்டலூர் உயிரியல் பூங்கா அமைக்கவென்று பல ஏக்கர் நிலங்களை அரசு எடுத்துள்ளது. 1985இல் வண்டலூர் பூங்காவைத் திறந்த அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். வண்டலூரில் ஏராளமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுவிட்டன. இனி ஒரு நிலம்கூட எடுக்கப்பட மாட்டாது என்றார். ஆனால் இப்போது விவசாய

நிலத்தில் புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று இன்றைய முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, புறநகர்ப் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்" என்று கூறியதாக "தினமலர்" நாளேடு எழுதியுள்ளது.

வண்டலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று முதல் அமைச்சர் பேரவையில் அறிக்கை படித்தவுடன், "ஏற்கனவே வேளச்சேரியிலும், மாதவரத்திலும் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்போவதாகத் தீட்டப்பட்ட திட்டங்கள் என்னவாயிற்று?" என்று கேட்டிருந்தேன். அதற்கு அரசுத் தரப்பி லிருந்து பதில் வராவிட்டாலும், அதே "தினமலர்" நாளேட்டில் இன்றைய தினம் (14-5-2013) வெளி வந்துள்ள செய்தியில், "வேளச்சேரி வெளியூர் பஸ் நிலையம் கைவிடப்படுகிறது - சி.எம்.டி.ஏ. புதிய முடிவு" என்ற தலைப்பில் ஒரு செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தி வருமாறு :-

"சென்னை வேளச்சேரியில் வெளியூர் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டத்தை ஒட்டுமொத்தமாகக் கைவிடுவது என, சி.எம்.டி.ஏ., (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்) முடிவு செய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. கோயம்பேட்டில் உள்ள புறநகர்ப் பேருந்து நிலையத்தில் வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்ததில், வேளச்சேரியிலும், மாத வரத்திலும் வெளியூர் பேருந்துகளுக்கான முனை யங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது. கடந்த 2011-12ஆம் ஆண்டு தமிழக பட்ஜெட் உரையில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் படி வேளச்சேரியில் மேம்பால ரயில் நிலைய வளாகத்தில் காலியாக உள்ள, 12 ஏக்கர் நிலத்தில் பேருந்து நிலையம் அமைக்க, 48 கோடி ரூபாயும், மாதவரத் தில் 8 ஏக்கர் நிலப் பரப்பில் பேருந்து நிலையம் அமைக்க 32 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த இரண்டு திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கியதுடன், நிர்வாக ஒப்புதலும் அளித்து 2011 அக்டோபர் 31ஆம் தேதி (அ.தி.மு.க. ஆட்சியில்) அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதில், வேளச்சேரி யில் பேருந்து முனையம் அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட நிலம், போக்குவரத்துத் துறையால் உத்தேசிக்கப்பட்டுள்ள "மோனோ" ரயில் திட்டத்துக்குத் தேவைப்படும். எனவே "மோனோ" ரயில் திட்டத்துக்கான நிலம் எவ்வளவு என்பதை முடிவு செய்தபின்,

பேருந்து முனையம் அமைப்பதற்கான நிலத்தை இறுதி செய்யலாம் என போக்குவரத்துத் துறையால் தெரிவிக்கப்பட்டது. அதுவரை இந்தத் திட்டத்தை நிறுத்தி வைப்பது என சி.எம்.டி.ஏ. முடிவு செய்திருந்தது.

சமீபத்தில், தென் மாவட்டப் பேருந்துகளின் தேவைக்காக வண்டலூரில் 65 ஏக்கரில் புதிய புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. இந்த நிலையில், வேளச்சேரியில் வெளியூர் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம், ஒட்டுமொத்தமாக கைவிடப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன."

- இவ்வாறு செய்தி வெளிவந்திருப்பதோடு, இதைப் பற்றி சி.எம்.டி.ஏ. உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "வேளச்சேரியில் வெளியூர் பேருந்துகளுக்கான நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கைவிடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைச் செயலருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது" என்றும் தெரிவித்திருக்கிறார்.

தற்போது முதலமைச்சர் வண்டலூரில் புற நகர்ப் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று 110வது விதியின்கீழ் அறிக்கை படித்து - அந்த அறிவிப்பை அந்தப் பகுதி விவசாயிகள் எம்.ஜி.ஆரின் வாக்குறுதியை எடுத்துக்காட்டி எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்ற நிலையில் தமிழக அரசு என்ன செய்யப் போகிறது? வண்டலூரில் விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி புறநகர்ப் பேருந்து நிலையம் வரப்போகிறதா? வேளச்சேரி, மாதவரம் புறநகர்ப் பேருந்து நிலையங்களின் கதி என்ன? இதற்கான விளக்கங்களை முதல் அமைச்சர் மற்றொரு 110வது விதியின்கீழ் எப்போது படிப்பார்? ஓகோ! 110வது விதிப்படி விளக்கம் தரக் கூடாதோ?

அன்புள்ள,

மு.க.

15-05-2013

3757. இரண்டாண்டு ஆட்சி; சாதனையா? வேதனையா?

உடன் பிறப்பே,

2013-2014ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்” கூட்டத்தொடர் 16-5-2013ஆம் தேதியோடு நடைபெற்று முடிந்திருக்கின்றது. அ.தி.மு.க. ஆட்சியின் இரண்டாண்டுகள் முடிவடைகின்ற நாள் வரை பேரவையை நீடிக்கச் செய்து, இறுதி நாளன்று ஆளுங்கட்சிக்கு மிகவும் நெருக்கமான கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் முதலமைச்சர் ஜெயலலிதாவை வானளாவப் போற்றிப் புகழ்ந்த பிறகு, அவர்களின் பேச்சுக்கு நன்றி தெரிவித்து, முதலமைச்சர் ஏற்கனவே தான் தயாரித்து வந்த நீண்ட உரையைப் படித்து முடித்திருக்கிறார். அவரின் நீண்ட பதிலுரையில், பெரும் பகுதியை; நான் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளுக்கெல்லாம் அவர் தன் நேரத்தைச் செலவிட்டு விளக்கமளித்துள்ளார். விளக்கத்தைக்கூட அவருக்கே உரிய நாகரிகமான” நடையில் தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வந்த இந்த இரண்டாண்டு காலத்தில் 100க்கு மேற்பட்ட அறிவிப்புகளை 110வது விதியின் கீழ் பேரவையில் படித்தாரே, அந்த அறிக்கைகள் எல்லாம் பல துறை அமைச்சர்களின் பொறுப்பிலே உள்ளவை ஆயிற்றே, அந்த அறிக்கைகளைச் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களை விட்டுப் படிக்கச் சொல்லாமல் அனைத்தையும் முதலமைச்சரே அன்றாடம் படித்தாரே, பிறகு அந்த அமைச்சர்கள் எல்லாம் எதற்காக இருக்கிறார்கள் என்று கேட்டிருந்தேன். அதற்குப் பதிலளித்த முதலமைச்சர், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களின்போது உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும் கோரிக்கைகளை அதிகாரிகளோடு கலந்து பேசி விட்டு அதன் பிறகு அறிவிப்புகளை; தான் வெளியிடுவதாகச் சொல்லியிருக்கிறார்.

உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்த பிறகு, அதிகாரிகளோடு கலந்து பேசி விட்டு, அந்த அறிவிப்புகளை சம்மந்தப்பட்ட துறை

அமைச்சர்களே 110வது விதியின் கீழ் படித்திருக்கலாம் அல்லவா? முதல் அமைச்சர் படித்த அந்த 100க்கு மேற்பட்ட அறிவிப்புகளில் ஒருசிலவற்றையாவது அந்தத் துறை அமைச்சர்கள் மூலமாகப் படிக்கச் செய்திருக்கலாம் அல்லவா? அல்லது தற்போது அவை விதி 110 என்பது முதலமைச்சர் மட்டுமே படிக்கத் தகுந்தது - முதலமைச்சருக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பு வாய்ந்தது என்று மாற்றப்பட்டு விட்டதா? இதைப்பற்றி முதலமைச்சர் தனது நீண்ட பதிலில் எதுவும் தெரிவிக்கவில்லை .

அது மாத்திரமல்ல; முதலமைச்சர் தனது பதிலில், மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பல உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகளை அதிகாரிகளோடு கலந்து பேசிவிட்டு, அதன் பிறகு 110வது விதியின் கீழ் அறிவிப்புகளைப் படிப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் முதலமைச்சர் படித்த பல அறிவிப்புகள், பேரவையில் எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் எழுப்பாத கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதை பதிலைத் தயாரித்த அதிகாரிகள் மறந்து விட்டனர்போலும்!

உதாரணமாக திருச்சி மாவட்டத்தில் 1200 கோடி ரூபாய் முதலீட்டில் காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலை, நாகை மாவட்டத்தில் ஓர் ஆழ்கடல் துறைமுகம், ஒரு மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம் ஆகியவை 3500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்; திருமழிசையில் அடுக்கு மாடித் தொழில் வளாகம்; போன்ற அறிவிப்புகளையெல்லாம் எந்த உறுப்பினரும் கோரிக்கையாக பேரவையில் எழுப்பியதாகச் செய்திகள் இல்லை.

முதலமைச்சர் பேரவையில் நன்றி தெரிவித்துப் பேசும்போது, கடந்த இரண்டாண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சி எந்தெந்தத் திட்டங்களை அறிவித்து நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது என்று நீண்ட பட்டியலிட்டிருக்கிறார். ஆனால் முதலமைச்சர் படித்த அந்தத் திட்டங்கள் எல்லாம் 16ஆம் தேதி காலையிலேயே வெளிவந்த ஆங்கில, தமிழ் நாளேடுகள் அனைத்திலும் - ஒவ்வொரு பத்திரிகையிலும் நான்கு பக்க விளம்பரங்கள் என்ற அளவிலே சொல்லப் பட்டவைகளைத்தான் பேரவையிலே முதலமைச்சர் படித்திருக்கிறார். “முரசொலி”, “தினகரன்“ ஏடுகளைத் தவிர அரசின் அந்த நான்கு பக்க விளம்பரங்கள் “தீக்கதிர்” உள்ளிட்ட அனைத்து ஏடுகளிலும் வெளிவந்துள்ளன.

அந்த விளம்பரங்களுக்காக அ.தி.மு.க. அரசு எத்தனை கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தைச் செலவிட்டிருக்கிறது; கடந்த இரண்டாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் எந்த அளவிற்கு விளம்பரத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது; என்ற விவரத்தை வெளியிட்டால் மக்கள் அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். அரசு சார்பில் விளம்பரங்கள் செய்யப்படக் கூடாது என்பது என் நோக்கமல்ல. தி.மு.கழக ஆட்சியிலும் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவை ஓர் அளவோடும் எல்லைக் குள்ளும் இருக்க வேண்டும்.

பத்திரிகைகளுக்கு இந்த அளவிற்கு அதிகமாக மிதமிஞ்சிய விளம்பரங்கள் என்ற பெயரால் அரசுப் பணத்தை வாரி வழங்குவது என்பது மறைமுகமாக, அரசுக்கு எதிரான செய்திகளைப் பத்திரிகை நெறியைப் போற்றிடும் வகையில் ஜனநாயக ரீதியாக வெளியிடாமல் செய்வதற்கான ஒரு தூண்டுகோலாக அமைந்து விடும். அரசை எதிர்த்து எழுதும் ஏடுகளுக்கு கோடிக்கணக்கான ரூபாயை வழங்கும் விளம்பரங்கள் கிடைக்காது என்றால், கோடி

பெரிதா - ஏடு பெரிதா என்ற நிலையில் எந்த ஏடுகள்தான் அரசின் குறைகளை எழுதி நடுநிலையோடு கடமையாற்றிட முடியும்? சட்டமன்ற விதி 110இன் கீழ் முதலமைச்சர் வெளியிட்ட திட்டங்களுக்கு நிதி ஆதாரம் - நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதியின் தொகை வருமா? அல்லது இதற்கெனத் தனியாக நிதி ஒதுக்கப்படுமா? அல்லது வெறும் அறிவிப்பு என்பதின் கீழ் வருமா? இவ்வளவு அறிப்புகளை நிதிநிலை அறிக்கையிலேயே என் செய்யவில்லை? துறைகளின் அமைச்சர்கள் மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த போது என் இந்த அறிவிப்புகளைச் செய்யவில்லை? என்றெல்லாம் கேட்டதற்கு, "ஐந்து முறை முதலமைச்சராகவும், நான்கு முறை நிதியமைசராகவும இருந்தவருக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வழிமுறைகள் தெரியவில்லையா?" என்று குதர்க்கமாகக் கேட்டிருக்கிறார்.

அந்த வழி முறைகள் ஓரளவுக்குத் தெரிந்த காரணத்தால்தான் இந்தக் கேள்விகளைக் கேட்டிருந்தேன். இதுவரை நடைபெற்ற எந்த ஆட்சியிலாவது, இத்தனை அறிவிப்புகளை முதல் அமைச்சரே பேரவையில் படிப்பதும், அதற்கு அன்றாடம் பாராட்டுச் சொற் பொழிவுகள் நடைபெறுவதும் என்ற நடைமுறை இருந்தது உண்டா ?

என் கேள்விக்குப் பதிலாக, "வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்ட பின் அறிவிக்கப்படும் புதிய திட்டங்களுக்கு, திட்ட நிதி அளவு முழுமையாக வரையறுக்கப் படாத நிலையில், வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்ய இயலாது, எனவேதான் நிதி ஒதுக்கம் இல்லாத புதிய திட்டங்களுக்குத் தனியே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அவை "புதுப் பணி"களாகவும் "புது துணைப் பணி"களாகவும் கருதப்பட்டுத் திருத்திய மதிப்பீட்டில் தேவையான நிதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்படும்" என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

இதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். இதுதான் உண்மை . ஆனால் திருத்திய மதிப்பீட்டில் ஓரளவிற்குத் தான் நிதியினைக் கோர முடியும். ஒரு நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட வேண்டிய அளவிற்கும் மேலாக அறிவிப்புகளையெல்லாம் செய்துவிட்டு, அத்தனையையும் திருத்திய மதிப்பீட்டில் கோரிப் பெறுவோம் என்றால், அதற்குத் தேவையான நிதி; மிகவும் அதிகமாக தேவைப்படும் நிலையில், அதனை எப்படித் திரட்ட முடியும்?

அதற்காகத்தான் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக, "நிதி நிலைக் குழு" (Standing Finance Committee) கூட்டங்கள் பல நாட்கள் நடைபெற்று, ஒவ்வொரு துறையின் அமைச்சரும், தன் துறையின் வாயிலாக நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்பட வேண்டிய திட்டங்கள் எவை என்பது பற்றியும், பதிலுரையில் சொல்வதற்கான திட்டங்கள் எவை என்பது பற்றியும் அந்தத் துறையின் மூத்த அதிகாரிகளின் துணையோடு விவாதிப்பார்கள். தலைமைச் செயலாளர். நிதித்துறைச் செயலாளர் ஆகியோரும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, முதலமைச்சர் அந்தக் கூட்டத்தில் எந்தெந்த திட்டங்களைச் சேர்க்கலாம் என்று முடிவெடுத்துக் கூறுவார். அந்தத் திட்டங்கள்தான் நிதிநிலை அறிக்கை யிலே இடம் பெறும். அதற்கு மாறாக அன்றாடம் ஒவ்வொரு துறை பற்றியும் சாதாரணமாக ஒரு கோடி ரூபாய் அறிவிப்பு, இரண்டு கோடி ரூபாய் அறிவிப்புகளைக்கூட, அந்தத் துறையின் அமைச்சரை விட்டுப் படிக்கச் செய்யாமல் முதலமைச்சரே திடீரென்று முடிவெடுத்து, அவையில் வந்து படிப்பதும், அதை முதன்முதலாகத் தெரிந்துகொண்டதைப்போல அந்தத் துறையின் அமைச்சரும்

மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களைப்போல அவையிலே எழுந்து முதலமைச்சருக்குப் பாராட்டு தெரிவிப்பதும், அதைக் கேட்டு முதல்வர் புளகாங்கிதம் அடைவதும் எந்த நடைமுறையைச் சேர்ந்தது?

ராஜாஜியைப்போலத் தன்னைக் கருதிக் கொண்டு, ஜெயலலிதா ராமகிருஷ்ண பரமஹம்சரின் குட்டிக் கதையைக் கூறி, உண்மையைத் திசை திருப்ப முனைவது நல்லதல்ல. "வெறும் அறிவிப்பு என்பது திரு. கருணாநிதிக்குத்தான் கைவந்த கலை. 2006ஆம் ஆண்டு நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பத்திற்கு குறைந்த பட்சம் இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவோம் என்று கூறினார். கடைசிவரை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பத்திற்கு நிலம் வழங்கப்பட வில்லை" என்று ஒரேயொரு உதாரணத்தைத் தன் பதிலில் முதலமைச்சர் எடுத்துக்காட்டியிருக்கிறார். பாவம்; அவரால் சொல்ல முடிந்தது அந்த ஓர் உதாரணத்தைத்தான் போலும்! ஆனால் அதுவும் உண்மையான தகவலா?

2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் வாக்குறுதி அளித்தபடி, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் 17-9-2006 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 15-2-2011 வரை 41 ஆயிரத்து 970 ஆதி திராவிடர்களுக்கு 45 ஆயிரத்து 64.62 ஏக்கர் நிலமும், 3 ஆயிரத்து 277 பழங்குடியினருக்கு 3 ஆயிரத்து 872.46 ஏக்கர் நிலமும், 66 ஆயிரத்து 790 பிற்படுத்தப் பட்டோருக்கு 82 ஆயிரத்து 222.69 ஏக்கர் நிலமும், 58 ஆயிரத்து 269 மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 62 ஆயிரத்து 84:18 ஏக்கர் நிலமும், பிற வகுப்பினரில் 8 ஆயிரத்து 692 பேருக்கு 19 ஆயிரத்து 750.65 ஏக்கர் நிலமும் என மொத்தம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 1இலட்சத்து 79 ஆயிரத்து 2 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 12 ஆயிரத்து 995 ஏக்கர் பண்படுத்தப்பட்ட நிலம் இலவசமாக வழங்கப்பட்டது என்பதை முதலமைச்சர் ஜெயலலிதா, அந்தத் துறையின் கீழே இன்றைக்கும் கிடைக்கும் ஆதாரங்களை வாங்கிப் பார்த்துத் தெளிவடையலாம். கழக ஆட்சியில் எந்தெந்தத் தேதியில், எந்தெந்த மாவட்டத்தில் நிலம் வழங்குவதற்கான விழாக்கள் நடைபெற்றன என்ற விவரம்

வேண்டுமானால், அதையும் விரிவாகக் கொடுப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன். அந்த விழாக்கள்கூட "வீடியோ கான்பரன்சிங்" மூலமாக அல்ல; நானே நேரடியாகச் சென்று வழங்கிய விவரங்களைப் பழைய நாளேடுகளை வாங்கிப் படித்துப் பார்த்தால்கூடத் தெரிந்து கொள்ள முடியும்.

எனவே வெறும் அறிவிப்பு என்பது எனக்குக் கை வந்த கலை அல்ல; சொல்வதைச் செய்து, செய்வதைச் சொல்லிப் பழக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். இன்னும் கூற வேண்டுமானால் சொல்லாததையும் மாநில நலன் கருதிச் செய்து பழக்கப்பட்டவன்தான் என்பதை மனச்சாட்சி உள்ள அதிகாரிகளிடம் கேட்டால் விளக்கம் பெற முடியும்.

என்னைப் பற்றிக் கேள்வி கேட்கும் முதலமைச்சர், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் விலை கொடுக்கப்படும் என்று அறிவித்தாரா இல்லையா? ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் முடிந்து நான்கு பக்கங்களுக்கு விளம்பரம் கொடுத்திருக்கிறாரே, அதிலே கரும்பு விலை பற்றி ஏன் தெரிவிக்கவில்லை?

ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவருக்கு இது தெரியவில்லையா என்று வக்கணையாக என்னைக் கேட்டுள்ள முதல்வரிடம், 111வது விதியின்கீழ்ப் படிக்க வேண்டிய விளக்க அறிக்கையை 110வது விதியின்கீழ் எப்படி படித்தீர்கள் என்று கேட்டிருந்தேனே, மூன்று முறை முதல்வராக இருந்தவருக்கு இதுகூடத் தெரியவில்லையா என்று நான் சிறுபிள்ளைத்தனமாகக் கேட்க மாட்டேன்.

110வது விதியின்கீழ் முதலமைச்சர் படித்த 100க்கு மேற்பட்ட அறிக்கைகளில் எவற்றையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம் என்பதற்கு ஒரு சில சான்றுகளையும் முதலமைச்சர் பேரவையில் படித்துக் காட்டியிருக்கிறார். முதலமைச்சரோ, அமைச்சர்களோ பேரவையில் அறிவித்துவிட்டால், அவைகளை நடைமுறைப் படுத்தித்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட "உறுதிமொழிக் குழு" (Assurance Committee) கேள்வி எழுப்பும். ஆனால் முதலமைச்சர் 110வது விதியின்கீழ் அறிவித்த பின்வரும் திட்டங்கள் என்னவாயிற்று?

8-9-2011 அன்று ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு திருமழிசையில் 2,160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்றும், 12 ஆயிரம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி வழங்கப்படும் என்றும்;

3-5-2012 அன்று காவலர்களுக்கு "உங்கள் சொந்த இல்லம்" என்ற திட்டத்தின்கீழ் 36 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என்றும்;

7-5-2012 அன்று காவேரி டெல்டா பகுதிகளில் வெள்ள நீரைத் தேக்கி வைக்க 1500 கோடி ரூபாய்ச் செலவில் திட்டம் என்றும்; 9-5-2012 அன்று மாமல்லபுரத்தையும் எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்க 1,420 கோடி ரூபாயில் திட்டம் என்றும்; பல்வேறு திட்டங்களையெல்லாம் 110வது விதியின் கீழ் முதலமைச்சர் பேரவையில் படித்தாரே, அந்தத் திட்டங்கள் எல்லாம் என்னவாயிற்று என்பதையும் விளக்கியிருக்கலாமே? அதையெல்லாம் விட்டுவிட்டு, பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டது பற்றியும், வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டது பற்றியும், சேமிப்புக் கிடங்குகள் கட்டியது பற்றியும் மிகச் சாதாரண அறிவிப்புகளை நிறைவேற்றிவிட்டதாகப் பேரவையில் முதலமைச்சர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆட்சிக்கு வந்து ஆண்டுகள் இரண்டு பூர்த்தியாகிவிட்டது. தற்போது என்ன நிலைமை? விலைவாசி விண்ணை முட்டுகின்ற அளவிற்கு உயர்ந்துகொண்டே போகிறது. காய்கறிகளின் விலைகூட, கட்டுக்குள் இல்லை. சட்டம், ஒழுங்கு நிலையோ கேட்க வேண்டியதில்லை. நேற்றையதினம் கூட எழும்பூர் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்த ஒருவரே சரமாரியாக வெட்டப்பட்டிருக்கிறார். அவர் நீதிபதியின் அறைக்குள் சென்று உயிர் பிழைத்திருக்கிறார். சென்னை பொது மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வந்தவரையே கொலை செய்திருக்கிறார்கள். இந்த ஆட்சியில் விவசாயிகள், வணிகர்கள், தொழிலாளர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இரண்டாண்டு கால ஆட்சியில் வரலாறு காணாத மின்வெட்டு. கிராமங்களில் 15 மணி நேர மின்வெட்டு. கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடிக்கிடக்கின்றன. தொழிலாளர்கள் வெளி

மாநிலங்களுக்கு வேலை தேடிச் செல்கிறார்கள். காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டு விவசாயிகள் சாகுபடியே செய்ய முடியவில்லை. இந்த இலட்சணத்தில் இரண்டாண்டு சாதனை என்று நான்கு பக்கங்களுக்கு ஆங்கிலம், தமிழ்ப் பத்திரிகைகளிலே விளம்பரம் கொடுத்து, அந்தப் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட முனைந்துள்ளார்கள். சட்டப்பேரவையிலே ஜனநாயகம் இல்லை. அரசை எதிர்த்துப் பேச எந்த உறுப்பினருக்கும் வாய்ப்பு தரப்படுவது இல்லை. சட்டமன்றத்திற்கு வெளியே கூட யாராவது அரசை எதிர்த்துப் பேசினால் உடனே அவதூறு வழக்குகள். பத்திரிகைகளும் அவதூறு வழக்குகளுக்குத் தப்புவதில்லை.

எந்த அமைச்சருக்கும் எந்த அதிகாரமும் இல்லை. கேவலம் ஒரு கோடி ரூபாய் அறிவிப்புகளைக்கூட முதலமைச்சரே அறிவிக்கிறார். அதுவும் விவாதத்தின்போது அல்ல. கேள்வி கேட்க யாரும் முன்வராத நிலையில் 110வது விதியின்கீழ் அரசின் அறிவிப்புகள் வெளியாகின்றன. உடனே பாராட்டு சொற் பொழிவுகள். இதுதான் நடைபெறுகின்றன. காழ்ப்புணர்வுக்கோ கேட்கவே தேவையில்லை.

கடந்த கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்றால் கிடப்பிலே போடுகிறார்கள். உதாரணம் சேது சமுத்திரத் திட்டம் மற்றும் மதுரவாயல் - எண்ணூர் துறைமுக இணைப்புச் சாலைத் திட்டம் போன்றவைகளாகும். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்க வேண்டிய மாநில அரசே, உச்ச நீதிமன்றத்திற்கு சென்று அந்தத் திட்டம் வேண்டாம் என்று கூறுகின்ற அளவிற்கு நிலைமை உள்ளது. ஒட்டு மொத்தத்தில் இந்த ஆட்சி என்பது பாராட்டு மழையிலும், விளம்பர வெள்ளத்திலும் அடித்துச் செல்லப்படுகிறது என்பதுதான் உண்மையிலும் உண்மை.

அன்புள்ள,

மு.க.

18-5-2013

3758. இட ஒதுக்கீட்டுக் கொள்கை முழுமை பெற...

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தியதன் விளைவாக, கழகமும் இடம்பெற்றிருந்த தேசிய முன்னணி அரசின் பிரதமர் - சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்கள் காலத்திலிருந்தே, மத்திய அரசு, இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (Other Backward Classes) 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை வழங்கி வருகிறது. இவர்களில் முன்னேறியவர்களை (கிரீமிலேயர்) தவிர்ப்பதற்காக, ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மிகாமல் வருவாய் உள்ளவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இந்த உச்ச வரம்பை நகர்ப் புறங்களில் ரூ. 12 இலட்சமாகவும், கிராமப் புறங்களில் ரூபாய் 9 இலட்சமாகவும் உயர்த்த வேண்டும் என்று இதர பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் பரிந்துரை செய்தது. ஆனால் இந்த அளவிற்குச் சாத்தியம் இல்லை என்றும், ஒரே மாதிரியாக 6 இலட்சம் ரூபாயாக உயர்த்தலாம் என்றும் மத்திய அமைச்சர்கள் குழு பரிந்துரை செய்தது. இந்த நிலையிலேதான் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இதர பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு பெறுவதற்கான வருவாய் உச்சவரம்பை நான்கரை இலட்சம் ரூபாயிலிருந்து ஆறு இலட்சம் ரூபாயாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது எனச் செய்தி வெளிவந்துள்ளது.

18-4-2008 அன்று தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது, "சமூக நீதிப் பயணத்தில் நாம்" என்ற பொருள் பற்றி விவாதிப்பதற்காக நடைபெற்ற தி.மு. கழக உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டத்தில், நீண்ட நேரம் விவாதித்து, நான் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் வருமாறு :-

"டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையிலும், திருமதி சோனியா காந்தி அவர்கள் வழிகாட்டுதலிலும், மத்தியிலே அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்த கோரிக்கையை நிறைவேற்றிடும்வண்ணம், இந்திய அரசியல் சட்டத்தில் 93வது திருத்தத்தைச் செய்து, அதனடிப்படையில் மத்திய அரசின் உயர்கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டிற்கான சட்டத்தை நிறைவேற்றியதையும்; அந்தச் சட்டத்தின் செல்லத்தக்க தன்மையினை (validity), இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சட்ட பெஞ்ச் ஏற்றுக்கொண்டு வழங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினையும்; கழகத்தின் உயர்நிலை செயல்திட்டக் குழு மனமார வரவேற்று, பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் - 27 சதவீத இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்டோருள் பொருளாதார ரீதியாக முன்னேறிய பிரிவினரை விலக்கிவிட வேண்டுமென்று (exclusion of creamy layer) தெரிவித்திருப்பது உறுத்தலாக அமைந்துவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை தொடக்கத்திலிருந்தே இடஒதுக்கீட்டுக்குள் பொருளாதார அளவுகோலைத் திணிப்பதையோ, பிற்படுத்தப்பட்டோருள் பொருளாதாரரீதியாக முன்னேறிய பிரிவினரை இடஒதுக்கீட்டிலிருந்து விலக்கி வைப்பதையோ ஏற்றுக் கொண்டதில்லை.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் தமிழகத்தில் நடத்திய பெரும் கிளர்ச்சியின் காரணமாகவும் - பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொடுத்த அழுத்தத்தினாலும் (pressure) - பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்வந்து இந்திய அரசியல் சட்டத்தில் 1951ஆம் ஆண்டு நிறைவேற்றிய முதலாவது திருத்தத்தின் மூலம், இணைக்கப்பட்ட 15 (4) என்ற புதிய பிரிவில் "சமூகரீதியாகவும், கல்வி நிலையிலும் (socially and educationally)" என்ற சொற்றொடர்தான் இணைக்கப்பட்டது. அப்போது சிலர் "பொருளாதார ரீதியாக (economically)" என்ற

சொற்றொடரும் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்தியும், அதனைப் பண்டித நேரு அவர்களோ, அன்றைய சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் அவர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. "சமூகரீதியாக" என்பது பரந்துபட்ட பல பொருள்களை உள்ளடக்கிய விரிவானதொரு சொல்லாகும். (`socially' is a much wider word including many things)" என்று பண்டித நேரு பதில் விளக்கமளித்தார். அன்றிலிருந்து இன்றுவரை "சமூகரீதியாகவும், கல்வி நிலையிலும்" என்ற சொற்றொடர் இந்திய அரசியல் சட்டத்தில் எவ்வித மாற்றத்திற்கும் உட்படுத்தப்படாமல், நிரந்தரமாகிவிட்ட நிலையில்; "பொருளாதார ரீதியாக" என்ற இந்திய அரசியல் சட்டத்தில் இடம்பெறாத சொற்றொடரைப் பயன்படுத்தி "பிற்படுத்தப்பட்டோருள் பொருளாதாரரீதியாக முன்னேறிய பிரிவினரை இடஒதுக்கீட்டிலிருந்து விலக்கிவிட வேண்டும்" என்று சொல்வது, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டினை நீர்த்துப் போகச் செய்துவிடும்.

இடஒதுக்கீடு என்பது ஏழ்மையைப் போக்குவதற்கான கருவி அல்ல. நூற்றாண்டு களாக உரிய வாய்ப்புகள் மறுக்கப்பட்ட - சமூக ரீதியாகவும், கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு - அரசியல் சட்டம் வழங்கிய உரிமையே இடஒதுக்கீடு என்பதாகும்.

ஒரு குடும்பத்தினுடைய ஆண்டு வருவாய் என்பது ஆண்டுக்காண்டு பல்வேறு காரணிகளால் வேறுபடுவது கண்கூடு. எனவே, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் வருமான வரம்புக்கு மிகுந்த வருமானத்தின் காரணமாக இடஒதுக்கீட்டுக்குத் தகுதியில்லை என்று சான்றளிக்கப்பட்ட ஒருவர், வேறு ஒரு ஆண்டில் வருமான வரம்பிற்கு உட்பட்ட வருமானத்தின் காரணமாகச் சான்றிதழ் பெறுவதற்கு வாய்ப்புண்டு. அதைப்போலவே, ஒரே குடும்பத்தில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் சான்றிதழ் பெறுவதற்குத் தகுதி பெற்றவராகவும், மற்றொருவர் மற்றொரு ஆண்டில் சான்றிதழ் பெறுவதற்குத் தகுதியில்லாதவராகவும் ஆகிவிடுவதற்கும் வாய்ப்புண்டு. இது ஒரு தாயின் வயிற்றுப் பிள்ளைகளுள் வேறுபாட்டையும், சில நேரங்களில் வெறுப்பையும், பகைமையையும் உருவாக்குவதற்கு வழி வகுத்தது போல் ஆகிவிடும். பிற்படுத்தப்பட்டோரைப் பேதப்படுத்தினால் முழு இடஒதுக்கீட்டு அளவும் அவர்களுக்குக் கிட்டாமல் போய்விடக் கூடும்.

எனவே, பிற்படுத்தப்பட்டோருள் பொருளாதாரரீதியாக முன்னேறிய பிரிவினரை இடஒதுக்கீட்டிலிருந்து விலக்கி வைத்திட வேண்டும் என்ற அம்சத்தை நீக்கி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் பாகுபாடின்றி இடஒதுக்கீட்டின் பலன்களை அனுபவிப்பதற்கு ஏதுவாக அனைத்து முயற்சிகளையும் பண்டித நேருவும், அண்ணல் அம்பேத்கரும் எடுத்துரைத்த கருத்துக்கு முரண் இல்லாமல், சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டுமென்றும்; இதற்கிடையே -

அரிய வாய்ப்பாக மத்திய அரசின் உயர்கல்வி நிலையங்களில் நீண்டகாலத்திற்குப் பிறகு, பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைத்துள்ள 27 சதவீத இடஒதுக்கீட்டினை முழுமையாகவும், உடனடியாகவும் வரும் கல்வியாண்டு முதலே நடைமுறைப்படுத்திட வேண்டுமென்றும்; மத்திய அரசை கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

இந்த முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கும் அப்போதே அனுப்பிவைத்தோம்.

உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பிலேயே "Government can make a relaxation to some extent so that sufficient number of candidates may be available for the purpose of filling up the 27 per cent reservation. It is for the Union Government and the State Governments to issue appropriate guidelines to identify the `creamy layer' so that SEBC are properly determined in accordance with the guidelines given by this Court. If, even by applying this principle, still the candidates are not available, the State can issue appropriate guidelines to effectuate the implementation of the reservation purposefully. - அதாவது;

27 சதவீத இடஒதுக்கீட்டினை முழுமையாக நிரப்பிடும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான அளவுக்கு மாணவர்கள் கிடைத்திடத் தக்கவகையில், 'கிரீமிலேயருக்கான' அளவுகோல்களை ஓரளவுக்கு அரசு தளர்த்திக் கொள்ளலாம். இந்த நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை ஒட்டி - சமூகரீதியாகவும், கல்வி நிலையிலும்

பிற்படுத்தப்பட்டோரை முறையாகத் தீர்மானித்திட - மத்திய அரசும், மாநில அரசுகளும் - 'கிரீமிலேயரை' அடையாளப்படுத்துவதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவதைப்பற்றி முடிவு செய்துகொள்ளலாம். அதற்குப்பிறகும் தேவையான அளவுக்கு மாணவர்கள் கிடைக்கவில்லை என்றால், இடஒதுக்கீட்டினை - அதன் நோக்கம் நிறைவேறும் வகையில் - செயல்படுத்திடத் தேவையான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வழங்கலாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதால்; பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்குப் போக, எஞ்சியுள்ள இடங்களைப் பொருளாதாரத்தில் முன்னேறிய பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே உள்ளோர் பெற்றிடத்தக்க வகையில் கிரீமிலேயருக்கான அளவுகோல்களைத் திருத்திக்கொள்ள தீர்ப்பிலேயே இடம் உள்ளது என்பதையும் நாம் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

வருமான வரம்பை 2 லட்சம் ரூபாயிலிருந்து 4.5 லட்சம் ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியபோது, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலேதான் உயர்த்தப்பட்டது. வருமான வரம்பை உயர்த்தியதன் மூலமாக அதிக எண்ணிக்கையிலான பிற்படுத்தப்பட்டோர் மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இடம்பெற முடியுமென்ற காரணத்தால், அப்போதே அதனை நான் வரவேற்றுப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். அதன்பிறகும் அந்த 4.5 லட்சம் ரூபாய் என்ற வருமான வரம்பினையும், 9 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கடிதமும் எழுதினேன்.

தற்போது தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம், வருமான வரம்பினைக் கிராமப்புறமக்களுக்கு 9 லட்சம் ரூபாய் என்றும், நகர்ப்புற மக்களுக்கு 12 இலட்சம் ரூபாய் என்றும் உயர்த்தப் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் மத்திய அமைச்சரவை தற்போது இந்தப் பரிந்துரையை முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல், வருமான வரம்பினை 4.5 லட்சம் ரூபாயிலிருந்து 6 இலட்சம் ரூபாயாக உயர்த்த முடிவு செய்திருப்பது, நமக்கு முழு நிறைவு அளிக்கவில்லை என்றபோதிலும், நீண்ட காலமாக

இதற்காக வாதாடி வந்தவன் என்ற முறையில் ஓரளவு திருப்தியை அளித்துள்ளது. இந்த முடிவினை எடுத்துள்ள மத்திய அரசுக்கு கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதே நேரத்தில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையைக் கடந்த முறை முழுவதுமாக ஏற்றுக்கொண்டதைப் போலவே, இந்த முறையும் ஏற்றுக்கொண்டு வருமான வரம்பினைக் கிராமப்புற மக்களுக்கு 9 லட்சம் ரூபாய் என்றும், நகர்ப்புற மக்களுக்கு 12 இலட்சம் ரூபாய் என்றும் உயர்த்தி அறிவித்திட வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன். மேலும் இட ஒதுக்கீட்டிலிருந்து "கிரீமிலேயர்" என்ற பாகுபாட்டையே முழுவது மாக நீக்கிவிட வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கோரிக்கையாகும்.

அன்புள்ள,

மு.க.

19-5-2013

3759. மத்திய அரசின் திட்டம், மாநில அரசால் பாழாகலாமா?

உடன்பிறப்பே,

இன்றைய "இந்து" நாளிதழில் "Expressway : Contractor demands Rs. 103.95 Crores" என்ற தலைப்பில் புகைப்படத்துடன் ஒரு செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தி வருமாறு :-

"Soma Constructions Ltd., the Contractor of the Chennai Port - Maduravoyal Elevated Expressway Project, has sought Rs. 103.95 crore from the National Highways Authority of India. The latest claim from the company, for the four-month period from January 1, 2013 is towards idling and loss of turnover profit. The Rs. 1815 crore project that will allow residents of Poonamallee and Vanagaram to commute to the City quicker, has been on hold for over 13 months after the Water Resources Department issued stop notice in March 2012 citing a deviation from the original alignment. The issue is in Court. Around Rs. 500 crore has already been spent on the project and 20 percent of the work completed. In February, it had sought Rs. 668.8 crore as compensation for the delay in executing the project. In a recent letter to the NHAI, Soma has also sought an interest of Rs. 14 crore for March and April for non-payment of compensation within 30 days"

(மதுரவாயல் - சென்னை துறைமுக உயர்நிலை பறக்கும் சாலைத் திட்டத்தை எடுத்து செயல்படுத்திவரும் "சோமா கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்" என்ற நிறுவனம், இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடமிருந்து 103.95 கோடி ரூபாய் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறது. 2013 ஜனவரி 1ஆம் தேதி முதல் நான்கு மாதங்களாக வேலை எதுவும் நடைபெறாமல் இருந்ததற்காகவும், இலாபத்தில் ஏற்பட்டிருக்கும் இழப்புக்காகவும் இந்தத் தொகையை அந்த நிறுவனம்

கோரியிருக்கிறது. அடிப்படையான திட்ட வரைவிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு விட்டதாகக் காரணத்தைச் சொல்லித் தமிழக அரசின் நீராதாரத் துறை 2012 மார்ச் மாதத்தில் "நோட்டீஸ்" கொடுத்ததன் விளைவாகக் கடந்த 13 மாதங்களாக வேலை எதுவும் நடைபெறாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 1815 கோடி ரூபாயாகும். திட்டம் நிறைவேற்றப்பட்டால் பூவிருந்தவல்லி, வானகரம் பகுதியிலிருந்து சென்னை மாநகரத்திற்கு வருவோர் மிக விரைவில் வந்து சேர முடியும். மாநில அரசு கொடுத்த நோட்டீஸ் சம்மந்தமான பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது. திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கான இழப்பீட்டுத் தொகையாக 668.8 கோடி ரூபாயை "சோமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனம்" பெப்ரவரி மாதத்திலேயே கேட்டிருந்தது. இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அந்த நிறுவனம் அண்மையில் அனுப்பிய கடிதத்தில் 14 கோடி ரூபாய் வட்டியாகத் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கிறது. முப்பது நாட்களுக்குள் அவர்களுக்குச் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தாததால் மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கான வட்டித் தொகையாகும் இது.)

இவ்வாறு 20-5-2013 தேதிய "இந்து" நாளிதழில் செய்தி வெளிவந்துள்ளது. 2006 தமிழக சட்டசபைத் தேர்தலையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்,

> "சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடிக்குப் பெரிதும் உள்ளாகியுள்ள பகுதிகளில் "பறக்கும்சாலைத் திட்டத்தை (Elevated Highway) செயல்படுத்துவோம்"

என்று வெளியிட்டிருந்ததை அடுத்து, தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், 5.6.2006 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், சென்னைத் துறைமுகத்திற்கு உயர்மட்டப் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை அனுமதித்திட வேண்டுமென கேட்டுக்கொண்டேன்.

தம்பி டி.ஆர். பாலு போன்றவர்கள் தொடர்ந்து முயற்சியெடுத்து, சென்னைத் துறைமுகத்தையும், மதுரவாயல் சந்திப்பையும் இணைக்கும் மேம்பாலச் சாலைத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்ததோடு, பிரதமர் மன்மோகன்சிங்

அவர்களே நேரில் வந்து 8.1.2009 அன்று முதலமைச்சராக இருந்த என் தலைமையில், அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

இது, இந்தியாவிலே மிக நீளமான உயர்மட்ட சாலையாக அமையும் என்றும் அப்போதே அறிவிக்கப்பட்டது.

சென்னைத் துறைமுகத்திலிருந்து தங்கு தடையற்ற சரக்குப் பெட்டகப் போக்குவரத்திற்கு வழிவகை செய்வதற்காகக் கூவம் ஆற்றின் ஒரு கரையோரமாகப் பறக்கும் விரைவுச் சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குத் தமிழக அரசு 22-6-2007 அன்று கொள்கை அளவில் அனுமதி வழங்கியது. இந்த மேம்பாலச்சாலை அமைப்பதற்குத் தேவைப்படும் நில எடுப்புக்கான செலவுத் தொகையையும் மற்றும் இத்திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், மறு குடிஅமர்வுக்கு வகை செய்தல் ஆகியவற்றுக்காக ஏற்படும் செலவினத்தையும் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகமும், தமிழ்நாடு அரசும் 50க்கு 50 என்கிற விகிதாச்சார அடிப்படையில் ஏற்பதற்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் தமிழக அரசுக்கு 130 கோடி ரூபாய் செலவாகும். இதைத் தவிர, இந்த உயர்மட்ட பறக்கும் சாலை அமைப்பதையொட்டி இப்பகுதிகளில் மாசுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அனுமதி பெறுதல், குடிநீர்க் குழாய்கள், கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் மின் கம்பங்கள் ஆகியவற்றை இடமாற்றம் செய்தல் போன்ற பணிகளுக்காக இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட இதுபோன்ற மிகப் பெரிய திட்டங்கள் என்றால், இன்றைய தமிழக முதல் அமைச்சருக்கு எப்படித்தான் இருக்குமோ, அவற்றுக்கு மூடு விழா நடத்துவதற்கு என்ன வழி என்றுதானே பார்ப்பார்! சேது சமுத்திரத் திட்டம் என்ற ஒரு உதாரணம் போதாதா? தமிழகத்தின் 150 ஆண்டுக்காலக் கனவான அந்தத் திட்டத்தைக் கழக ஆட்சியில் அரும்பாடுபட்டு மத்திய அரசில் வாதாடி, போராடி ஒப்புதலும் பெற்று அதற்கான அடிக்கல் நாட்டு விழா பிரதமரும், சோனியா காந்தியும், நானும் மற்றும் தமிழகத்தின் முக்கிய கட்சித் தலைவர்கள் எல்லாம் கலந்துகொண்டு மதுரை மாநகரிலே மிகச்

சிறப்பாக நடைபெற்று - அதன் பிறகு 800 கோடி ரூபாய்க்கு மேல் மக்களின் வரிப்பணம் செலவிடப்பட்ட பிறகு, ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அந்தத் திட்டத்தைப் பல மாதங்களாக முடக்கி போட்டிருக்கின்ற அ.தி.மு.க. அரசின் செயல்பாடு தமிழகம் அறியாததா என்ன? இவ்வளவுக்கும் சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதே பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். ஏன் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கைகளில் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரிய திட்டம் அது. அந்தத் திட்டமே கூடாது என்று இப்போது அவர்களே உச்ச நீதிமன்றத்திலே மனு தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால், எப்படிப்பட்ட ஆட்சி தமிழகத்திலே நடைபெறுகிறது என்பதற்கு வேறு சான்றுகளா வேண்டும்?

இந்தச் சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் திட்டத்திற்கான பணிகள் பற்றி "இந்து", "டைம்ஸ் ஆப் இந்தியா", "தினத்தந்தி" நாளேடுகள் ஏற்கனவே விரிவாகச் செய்திகள் வெளியிட்டுள்ளன. அவற்றில் வந்துள்ள தகவல்படி, கடந்த ஓராண்டாக மீண்டும் தொடங்குவதற்கான அறிகுறிகூடத் தெரியவில்லை.

இந்தத் திட்டத்தைத் தொடரவிடாமல் அ.தி.மு.க. அரசு தடுத்துவிட்ட காரணத்தால்தான், இந்தப் பணிகளை மேற்கொண்டு வந்த "சோமா" நிறுவனம், தனக்கு நஷ்ட ஈடாக 668 கோடி ரூபாய் வழங்கவேண்டுமென்று ஏற்கனவே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் கோரியிருந்ததோடு, தற்போது மேலும் 103.95 கோடி ரூபாய் இந்த நான்கு மாத கால தாமதத்திற்கான இழப்பீட்டுத் தொகையாக வழங்க வேண்டுமென்று கோரியிருப்பதாக "இந்து" நாளிதழ் எழுதியிருக்கின்றது.

இந்தக் காலதாமதம் மேலும் நீடிக்குமேயானால் இந்த இழப்பீட்டுத் தொகை மேலும் உயர்ந்துகொண்டே போகும் அபாயமும் உள்ளது. இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தமிழக அரசின் அணுகுமுறையால் மிகுந்த கவலைக்குள்ளாகியுள்ளது. இதுபோன்ற மிகப் பெரும் கட்டமைப்புக்கான திட்டங்கள் மற்ற மாநிலங்களில் எவ்விதத் தடையுமின்றி மாநில அரசுகளின் மனப்பூர்வமான ஒத்துழைப்போடும், உதவியோடும் வேகமாக நிறைவேறி

வருகின்ற நிலையில் தமிழகத்தில் மட்டும்தான் மாநில அரசின் எதிர்மறை அணுகுமுறையின் காரணமாகத் திட்டம் தாமதமாகி வருவதோடு, இழப்பீட்டுத் தொகையை ஒப்பந்தக்காரர்கள் கேட்கின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சருக்குக் கடந்த ஒரு வார காலமாகத்தான் 110வது விதியின்கீழ் அறிக்கை படிப்பதிலிருந்து சற்று ஓய்வு கிடைத்துள்ளது. எனவே இனியாவது காழ்ப்புணர்வுக்கு விடை கொடுத்துவிட்டு, கழக ஆட்சியிலே தீட்டப்பட்ட திட்டங்கள் என்பதற்காகக் கிடப்பிலே போட ஏற்பாடுகளைச் செய்து அதனால் கெட்டப் பெயரைச் சம்பாதிப்பதை விட்டுவிட்டு, கிடப்பிலே போடப்பட்டுள்ள இந்தத் திட்டங்களை யெல்லாம் உடனடியாகத் தொடங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

21-5-2013

3760. எச்சரிக்கையல்ல; எண்ணிப் பார்ப்பதற்காக!

உடன்பிறப்பே,

13-5-2013 அன்று பேரவையில் கொண்டு வரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றுக்குப் பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா, அவருடைய நீண்ட சொற்பொழிவை முடிக்கும்போது, "அரசியல் கட்சி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அனைத்து வகையிலும் பாடுபடக் கூடியதாகவும், பொதுமக்களின் நலனை முன்வைத்துச் செயல்படக் கூடியதாகவும், மற்ற அமைப்புகளுக்கு முன்னுதாரணமாக விளங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு பொருள் குறித்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமெனில், அதனை ஜனநாயக ரீதியாக, அறவழியில் மட்டுமே தெரிவிக்க வேண்டும். எதிர்ப்பை வன்முறை மூலம் தெரிவிப்பது என்பது எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. மேலும் கட்சியினரைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதுடன், அவர்களைச் சமுதாயத்தின் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்று, சட்ட விரோதச் செயல்கள் எதிலும் ஈடுபடாமல் பார்த்துக் கொள்வது கட்சித் தலைவர்களின் பொறுப்பும், கடமையும் ஆகும். ..... பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் வகையிலும், சட்டம் ஒழுங்கைச் சீரழிக்கும் வண்ணமும், வன்முறைச் செயல்களில் எந்தக் கட்சி ஈடுபட்டாலும், அந்தக் கட்சியைத் தடை செய்ய இந்த அரசு தயங்காது, நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்" என்று தெரிவித்திருந்தார்.

செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து பா.ம.க.வைத் தடை செய்யப்போவதாக முதலமைச்சர் பேரவையில் தெரிவித்திருக்கிறாரே என்று கேட்டபோது, 16-5-2013 அன்று நான் அளித்த பதிலில், "அவர்கள் குறிப்பிட்டது பா.ம.க. என்று

நாம் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? பொதுவாக வன்முறைக் கட்சிகளைத் தடை செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தர்மபுரியில் சில ஆண்டுகளுக்கு முன்பு மூன்று பெண்களைக் கொளுத்தி, பேருந்துகளை அடித்து நொறுக்கி - கோவை விவசாயக் கல்லூரி மாணவிகள் மூன்று பேரை, பேருந்திலே வைத்து உயிரோடு கொளுத்தி, அந்தச் சாம்பலை அவர்களுடைய பெற்றோர்களுக்கு அனுப்பினார்களே, அந்த வன்முறைக்கு இவர்கள் என்ன விளக்கம் அளித்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், "வன்முறை" என்ற வார்த்தையை வைத்துக் கொண்டு, எந்தக் கட்சிகளையும் அடக்கி விடலாம் என்று கருதுவது கனவாகவே முடியும்" என்று கூறியிருந்தேன்.

வேளாண் கல்லூரி மாணவிகள் கொல்லப்பட்டது பல ஆண்டுகளுக்கு முன்பு என்பதால், அதுபற்றிய விளக்கத்தைச் சற்று விரிவாக நினைவுபடுத்துவது அவசியமென்று கருதுகிறேன். கொடைக்கானலில் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளை மீறி ஏழு மாடிகள் கொண்ட "பிளசண்ட் ஸ்டே" ஓட்டலுக்குச் சட்ட விரோதமாக அனுமதி அளித்தது தொடர்பாகக் கண்காணிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறையின் சார்பில் இன்றைய முதலமைச்சர் உள்ளிட்ட சிலர் மீது வழக்கு நடைபெற்று 2-2-2000 அன்று வழக்கை விசாரித்த இரண்டாவது தனி நீதிபதி திரு. இராதாகிருஷ்ணன் ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்துகொள்ள அனுமதி அளிக்கும் வகையில் 3-3-2000வரை தீர்ப்பின் அமலாக்கத்தை நிறுத்தியும்வைத்தார். ஆனால் அன்று நடைபெற்றது என்ன?

இந்தத் தீர்ப்பு கூறப்பட்டவுடன், நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாகக் கூடியிருந்த அ.தி.மு.க.வினர் அங்கேயே வன்முறையில் இறங்கினர். அந்த வழியாக வந்த பேருந்துகளை அடித்து நொறுக்கினார்கள். அங்கிருந்த கடைகள் மீது கல்வீசித் தாக்கியதோடு கடைகளைச் சூறையாடினர். இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பீதிக்கு ஆளானார்கள். அங்கு மட்டுமின்றித் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அ.தி.மு.க.வினர் வன்முறையில் இறங்கினர். ஆங்காங்கே பேருந்துகளைத் தீவைத்துக் கொளுத்துவது, கடைகளைச் சூறையாடுவது போன்ற அராஜகத்தில் ஈடுபட்டார்கள்.

அப்போது கோவை வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இரண்டு பேருந்துகளில் கிருஷ்ணகிரி அருகே உள்ள பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு செய்துவிட்டுக் கோவைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அந்தப் பேருந்துகளைத்தான் அ.தி.மு.க. வினர் வழிமறித்துத் தாக்க முற்பட்டனர். தங்களை விட்டுவிடுமாறு மாணவிகள் கெஞ்சியும் கேளாமல், பெட்ரோல் குண்டுகளை அந்தப் பேருந்துகளின் மீது வீசி மாணவிகளை உள்ளேயே வைத்துக் கொளுத்திய காரணத்தால் மூன்று மாணவிகள், நாமக்கல்லைச் சேர்ந்த கோகிலவாணி, விருதாசலத்தைச் சேர்ந்த காயத்ரி, சென்னையைச் சேர்ந்த ஹேமலதா ஆகியோர் உயிரோடு எரிந்து சாம்பலானார்கள். மேலும் 17 மாணவிகள் தீக்காயமடைந்தனர். இந்தச் செய்தியினைத் தொடர்ந்து தமிழக மாணவர்கள் எல்லாம் கொதித்தெழுந்தனர்.

ஆனால் அப்போது ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் "தீவிரவாதிகள் தலைதூக்கி நிற்கும் தர்மபுரி மாவட்டத்தில் பெரும் கொடுமைகளை இழைத்துவிட்டு அ.தி.மு.க.வினர் மீது பழிபோட முயற்சி நடைபெறுகிறது. தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், ரவுடிகள், விஷமிகள், குண்டர்கள் துணையோடு இந்த அராஜகச் செயல்களை இழைத்துவிட்டு அ.தி.மு.க.வினர் மீது பழி போடுகிறார்கள்" என்று கூறினார். நடைபெற்ற சம்பவத்திற்காக தி.மு.கழக ஆட்சியை "டிஸ்மிஸ்" செய்ய வேண்டுமென்றும் ஜெயலலிதா அப்போது கூறினார். அந்த மூன்று மாணவிகளை உயிரோடு கொளுத்திச் சாம்பலாக்கியது பற்றிய வழக்கு முறைப்படி நடைபெற்ற போதிலும், 2001ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு இந்த வழக்கில் சுணக்கம் ஏற்பட்டது.

5-11-2001இல் வழக்கு விசாரணை தர்மபுரி அமர்வு நீதிமன்றத்தில் தொடங்கியது. 22 பேர் சாட்சிகளாகச் சேர்க்கப்பட்டனர். அ.தி.மு.க. ஆட்சி என்பதால், 20 சாட்சிகள் தடம் புரண்டனர். இதனை எதிர்த்து இறந்துபோன கோகிலவாணியின் தந்தை வீராசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். 20-9-2003 அன்று உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜ் அளித்த தீர்ப்பில் முக்கிய பகுதி வருமாறு :-

"வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவ்வழக்கை அனாதைக் குழந்தையைப்

போல போலீஸ் அதிகாரிகள் நடத்தியுள்ளனர். போலீஸ் மீதான நம்பிக்கை, நன் மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்துள்ளனர். இந்த இமாலயத் தவறுக்காக உள்துறைச் செயலாளர் மற்றும் சி.பி., சி.ஐ.டி. கூடுதல் எஸ்.பி. ஆகியோரை இந்த நீதிமன்றம் கண்டிக்கின்றது. அரசு தரப்பு சாட்சியங்களைக் கலைப்பதற்கு அனுமதி அளித்த குற்றத்துக்காக சி.பி., சி.ஐ.டி., கூடுதல் எஸ்.பி. மீது, அதன் ஐ.ஜி. ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தின் வலிமையையும், கம்பீரத்தையும் நிலைநாட்டவும், இவ்வழக்கில் நியாயமான, சுதந்திரமான விசாரணை நடைபெறவும், இவ்வழக்கு தர்மபுரி மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் இருந்து சேலம் மாவட்டக் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுகிறது.

தவறான சாட்சியம் அளித்தது, பொய்யான அறிக்கையில் கையெழுத்திட்டது, வழக்கில் சம்பந்தப்பட்ட ஆதாரங்களை அழிக்கக் காரணமாக இருந்தது, குற்றவாளிகள் சட்டப்பூர்வ நடவடிக்கையில் இருந்து தப்பிக்கக் காரணமாக இருந்தது போன்ற குற்றங்களுக்காக விருப்பாட்சிபுரம் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோர்மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசு அலுவலர்கள் மீதான நம்பிக்கையைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்து கொண்டது, கீழ்த்தரமானது, வெட்கப்படக்கூடியது."

உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜ் அவர்கள் கூறியுள்ள இந்தக் குற்றச்சாட்டுகள் சாதாரணமானவைகளா? ஆனால் அதற்குப் பிறகும் சேலம் நீதிமன்றத்தில் வழக்குத் துவங்கவே இல்லை.

3-12-2004 அன்று சேலம் நீதிபதி காவல் துறை அதிகாரியிடம் பேருந்து எரிப்பு வழக்கு கிருஷ்ணகிரி நீதிமன்றத்திலிருந்து சேலம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு 14 மாதங்கள் ஆகிவிட்டன. ஒவ்வொரு வாய்தாவின் போதும் விசாரணை அதிகாரிகள் யாரும் ஆஜராவதில்லை. வழக்கு காலதாமதம் ஆகிறது. அரசு வழக்கறிஞர் நியமன உத்தரவைப் பெறுவதில் உங்களுக்கு என்ன சிரமம் என்று கேட்டார். நீதிபதியின் கேள்விக்குக் காவல் துறை அதிகாரி பதில் அளிக்கையில் அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கான அறிவிப்பு வெளியிட வேண்டும் என மேல் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதிவிட்டேன். அவரும் அரசுக்குப் பலமுறை கடிதம் எழுதியுள்ளார் என்று கூறினார். எனவே கோகிலவாணியின் தந்தை

மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அரசு வழக்கறிஞர் நியமனம் தொடர்பாக அரசு முறையான உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றும், வழக்கு விசாரணையும் ஐகோர்ட்டு உத்தரவுப்படி விரைவாக நடக்கவில்லை என்றும் தனது மனுவிலே குறிப்பிட்டிருந்தார். இந்த மனு குறித்த வழக்கு 17-2-2005 அன்று வந்தபோது, அரசு வழக்கறிஞர் துரைசாமி தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்குத் தொடர்பான ஆவணங்கள்காணாமல் போய்விட்டதாகவும், கோர்ட்டு ஊழியர்கள் அவற்றைத் தேடி வருகிறார்கள் என்றும், காணாமல் போன ஆவணங்களைப் புதுப்பிக்கக் காலம் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இதன்மீது நீதிபதி கனகராஜ், "3 மாணவிகள் கொடூரமாக எரித்துக் கொல்லப்பட்டுள்ளனர். தமிழக அரசு இந்த விஷயத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்கிறது. 3 நாட்களுக்குள் கோப்புகளைக் கண்டுபிடித்து வழக்கு விசாரணையைத் துரிதமாக நடத்த வேண்டும். தவறினால் சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடுவேன்" என்று அரசின் காவல் துறைக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அதன்பிறகு இந்த வழக்கு 18-2-2005 அன்று விசாரணைக்கு வந்தபோது நீதிபதி கனகராஜ் தெரிவித்த கண்டனம் வருமாறு :-

"மாணவிகளை எரித்த வழக்கைச் சேலம் கோர்ட்டு விரைவாக நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தோம். ஆனால் அதைச் செய்யவில்லை. கடந்த 15 மாதங்களாக வழக்கு கிடப்பில் போடப்பட்டு உள்ளது. இந்த வழக்கு விசாரணையை நடத்தாமல் ஏன் இருந்தீர்கள் என்று தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும். இதில் அரசு வக்கீல் மீது அதிகமாகக் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஐகோர்ட்டு உத்தரவிட்ட நாள் முதல் இதுவரை இந்த வழக்கு விசாரணை நடத்தப்படவில்லை. கோர்ட்டு உத்தரவிட்ட பிறகு இதுவரை தமிழகத்தில் எந்தெந்த உள்துறை செயலாளர்கள் பொறுப்பில் இருந்தார்களோ அவர்கள் அனைவரும் இந்த வழக்கின் தாமதத்திற்குக் காரணம் என்ன என்று விளக்கம் அளித்து அடுத்த வாரம் 27 ஆம் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கின் ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் காரணம் என்ன என்றும் பதிலளிக்க வேண்டும்."

இந்த அளவிற்கு அ.தி.மு.க. ஆட்சியில் அந்த வழக்கு இழுத்தடிக்கப்பட்டது.

ஆனால் இதையெல்லாம் மறந்துவிட்டு, தமிழக மக்களும் மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தோடு, இந்த ஆட்சியினர் தமிழகத்திலே உள்ள எதிர்க்கட்சிகளின்மீது தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். காவல் துறையினர் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்குக்கூட அனுமதிக்க மறுக்கிறார்கள். விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் சார்பில் நடத்தவிருந்த கூட்டத்திற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது என்றும், அந்தக் கட்சியின் தலைவர் திருமாவளவனுக்கு விழுப்புரம் மாவட்டத்துக்குள் நுழைய மாவட்ட ஆட்சித் தலைவர் தடை விதித்துள்ளார் என்றும் செய்திகள் வந்துள்ளன. கரூர் மாவட்டத்தில் கழகப் பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் 15ஆம் தேதியன்று திருமணவிழா, பொதுக்கூட்டம் போன்றவற்றில் கலந்துகொண்டபோது, அதற்காக விளம்பரத்தட்டிகளை வைத்திருந்தவர்கள் மீதெல்லாம் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. ஆட்சியிலே இருக்கும்போது, கடந்த காலத்தில் தாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது என்னென்ன செய்தோம் என்பதையே மறந்துவிட்டுச் செயல்படுவது நல்லதல்ல! ஆட்சி என்றைக்கும் நிரந்தரமல்ல! அதை இன்றைய ஆட்சியாளர்கள் மறந்துவிட வேண்டாம்! இது எச்சரிக்கையல்ல; எண்ணிப் பார்ப்பதற்காக!

அன்புள்ள,

மு.க.

22-5-2013

3761. நிலக்கரி நிறுவனப் பங்குகளை மீண்டும் விற்க முயற்சியா?

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 23-5-2013 அன்று இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் இருக்கும் தனது பங்குகளை மத்திய அரசு மேலும் 5 சதவிகிதம் விற்பனை செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறிவதாகவும், அந்த முயற்சி விரும்பத்தக்கதல்ல என்றும், எனவே என்.எல்.சி. பங்குகளை விற்பனை செய்வதற்குப் பதிலாக மாற்று வழிமுறைகளை ஆராயுமாறு கேட்டுக்கொள்வதாகவும் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது.

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதும் 22-6-2006 அன்று நெய்வேலி பங்குகளில் 10 சதவிகிதத்தை விற்பனை செய்யும் முடிவினை மத்திய அரசு அறிவித்தது. மறுநாள் 23ஆம் தேதி காலையிலேயே தி.மு.க. தொழிற்சங்கம் (தொ.மு.ச.) சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., அதிகாரிகள் சங்கம் ஆகிய சங்கத்தினரை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தியது. 4-7-2006 அன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவதென அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

25-6-2006 அன்று இந்தப் பிரச்சினை குறித்துப் பிரதமருக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தில், "நெய்வேலியில் பத்து சதவிகிதப் பங்கினை விட்டுத் தருவது பற்றி, தமிழகத்தில் எழுந்துள்ள எதிர்க்கருத்துக்களை மத்திய அரசு அலட்சியப்படுத்தி விடக்கூடாது. ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட குறைந்தபட்சத் திட்டத்தில் இருந்து விலகிச் செல்வதற்கு; எந்தக் காரணம் கூறப்பட்டாலும், அது முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்கும்

உறுதிப்பாட்டிலிருந்து தளர்வதாகவே கருதப்படும். எனவே மத்திய அரசு இந்த முடிவை மறு பரிசீலனை செய்திட வேண்டுகிறேன்" என்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

2004ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறைந்தபட்சத் திட்டத்தில், "இலாபகரமாக இயங்கும், அரசுத் துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படாது; நவரத்தினங்களாக விளங்கும் அரசு நிறுவனங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும்" என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

எனது இந்தக் கடிதத்திற்கு உடனடியாகப் பதில் வராத நிலையில் 4ஆம் தேதி முதல் நெய்வேலியில் வேலைநிறுத்தம் தொடங்கியது. 6-7-2006 அன்று செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, "நெய்வேலி பிரச்சினையில் தொழிலாளர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் மத்திய அரசு இருக்கும்போது, மத்திய அரசினால் எடுக்கப்பட்டுள்ள அந்த முடிவுக்குத் தி.மு.க. அந்த அரசிலே இடம்பெற்று, இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதை டெல்லியிலே உள்ள கழக அமைச்சர்கள் பிரதமரிடத்திலே அறிவித்திடுமாறு கூறியிருக்கிறேன்" என்று சொன்னேன். அவ்வாறே மத்திய அமைச்சராக இருந்த தம்பி தயாநிதிமாறனும் உடனடியாக பிரதமரைச் சந்தித்து எனது கருத்தைத் தெரிவித்தார். அதன் பின்னர் அன்று இரவே நெய்வேலி நிறுவனத்தின் பத்து சதவிகித பங்குகளை விற்கும் முடிவை நிறுத்திவைப்பதாக மத்திய அரசு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து தொழிலாளர்கள் தங்களது வேலை நிறுத்தத்தையும் திரும்பப்பெற்றனர்.

அதன் பின்னர், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 13 ஆயிரம் பேர், பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 21-4-2012 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இந்தப் பிரச்சினை குறித்து 8-5-2012 தேதிய "முரசொலி"யில், உடன்பிறப்பு மடலில் நான் எழுதும்போது, "மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு இந்தப் பிரச்சினையிலே அக்கறையின்றி இருந்தாலும், மத்திய அரசும், இந்தத் துறையின்

அமைச்சரும் உடனடியாக நெய்வேலி நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டு போராடுகின்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளை; அழைத்துப் பேசிச் சுமூக முடிவுகாண முன்வர வேண்டுமென்றும், அதற்குப் பிரதமர் அவர்கள் ஆவன செய்திட வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டேன்.

பேரவை நடைபெற்றபோது, 3-5-2012 அன்று கேள்வி நேரம் முடிந்ததும், கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், "நெய்வேலி தொழிலாளர்கள் பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர், தொழிலாளர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை, எனவே மாநில அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டனர்.

உடனே தமிழக் அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர், திரு. சி.த. செல்லப்பாண்டியன் எழுந்து, "என்.எல்.சி. தொழிலாளர்களின் போராட்டப் பிரச்சினை தமிழக அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது அல்ல, எனவே அதில் தலையிட முடியாது" என்று பதிலளித்தார். (தினமணி 4-5-2012) இதிலே தலையிட முடியாது என்று பேரவையில் பதிலளித்த இதே அமைச்சர், 8-5-2012 அன்று மீண்டும் பேரவையில், "என்.எல்.சி., தொழிலாளர்கள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர மத்திய அரசின் தொழிலாளர் நல ஆணையம் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தவில்லை. என்.எல்.சி., தொழிலாளர்களின் போராட்டத்துக்குத் தீர்வு காண மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்" என்றார். (தினமணி 9-5-2012)

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சினை என்பது இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை தொடர்கின்ற ஒன்றாகும். நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தொடங்கப்பட்ட காலந்தொட்டு நீடித்த ஒப்பந்தப் பிரச்சினை 1994ஆம் ஆண்டில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் முயற்சியின் காரணமாக ஓரளவு தீர்த்து

வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தொழில் கூட்டுறவு சேவை சங்கம் தொடங்கப்பட்டு (Neyveli Lignite Corporation Industrial Co-operative Service Society) அதில் 5000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பதிவு செய்து, அதன் மூலம் இடைத் தரகர்களை (Contractors) நீக்கி, அவர்களுக்குக் கூட்டுறவு சங்கமே ஊதியம் வழங்கி வந்தது. பின்னர் நிர்வாகத்தில் பணி காலியாகும் பொழுதெல்லாம், ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தி வருகிறார்கள்.

1994க்குப் பின், தொடர்ந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாக வந்தவர்களைக் கூட்டுறவு சங்கத்திலே உறுப்பினர்களாக்க நிர்வாகம் தவறி விட்டதால், மீண்டும் இடைத்தரகர்களின் ஆதிக்கம் தொடர ஆரம்பித்தது. இதனால் 2008ஆம் ஆண்டில் தி.மு. கழக ஆட்சியின் போது போராட்டம் நடைபெற்றது. அப்போதும் 13 ஆயிரம் தொழிலாளர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் ஆட்சியிலே இருந்த தி.மு. கழகம் மாநில அரசுக்கு இதிலே அக்கறை இல்லை என்று சொல்லாமல், முதலமைச்சராக இருந்த நானே இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு; அதன் விளைவாக, 16-6-2008 அன்று தொழிற்சங்கமும், நிர்வாகமும், டெல்லி தலைமை தொழிலாளர் ஆணையர் முன்பாகக் கலந்து பேசி ஓர் முத்தரப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஒப்பந்தத் தொழிலாளர்கள் 5000 பேர்களைக் கூட்டுறவு சங்கத்தில் பதிவு செய்வது; ஒப்பந்தத் தொழிலாளர்கள் பெற்றுவந்த ஊதியத்தைவிட, மாதம் ரூ. 750/- உயர்வு தருவது என்று இசைவு தந்து ஒப்பந்தம் ஏற்பட்டதால் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுத் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

அதன் பின்னர் கூட்டுறவு சங்கத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களை பதிவு செய்வதில் நிர்வாகம் கால தாமதம் செய்ததால், 2010ஆம் ஆண்டு மீண்டும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்பொழுதும் தமிழக முதலமைச்சராக இருந்த நான், 15-10-2010 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அதன் பின்னர் நிர்வாகத்தை அழைத்துப் பேசி, மாதம் 1,040 ரூபாய் ஊதிய உயர்வு என ஏற்றுக்கொள்ளச் செய்தேன். இதனைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் மட்டும்

ஏற்றுக்கொண்டார்கள். மற்றத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். உடனே நான் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், 26-10-2010 அன்று தலைமைச் செயலகத்திற்கே அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, நிர்வாகத்தையும் சம்மதிக்க வைத்து, உயர்வு ரூ. 1,040 என்பதை ரூ. 1,560 என்ற அளவிற்கு உயர்த்தியும், மேலும் பல சலுகைகளையும் வழங்கச் செய்தேன். நான் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் திருப்தியடைந்து பணிக்குத் திரும்பினார்கள். எனக்கு நன்றி தெரிவித்தார்கள். இது 2010ஆம் ஆண்டு கழக ஆட்சியில் நடைபெற்றது.

ஆனால் 2012ஆம் ஆண்டில் நிர்வாகம் ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கூட்டுறவு சேவை சங்கத்தில் பதிவு செய்வதை நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டி கால தாமதம் செய்து வந்தது. அதன் காரணமாகத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். நெய்வேலியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததைத் தொடர்ந்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத் தலைமை ஆணையர் அலுவலகத்தில் முத்தரப்பு பேச்சு வார்த்தை நடந்தபோதிலும், உடன்பாடு ஏற்படவில்லை. தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை விரைந்து முடிக்க என்.எல்.சி. நிர்வாகம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அப்போது கூறப்பட்டது.

தி.மு. கழக ஆட்சியில் நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தியபோது எத்தகைய நடைமுறை மேற்கொள்ளப்பட்டது என்பதை மேலே எழுதினேன். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியின்போது தமிழக அரசு என்ற ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகமே எழுந்தது. இந்த நிலையில், "மத்தியில் ஒரு அரசு இருப்பதாகவே தெரியவில்லை" என்று அ.தி.மு.க.வினர் குறை சொன்னார்கள். அதிகாரிகள் மட்டத்தில் ஏதோ பேச்சுவார்த்தை நாள் கணக்கில் நடந்ததே தவிர, முதல் அமைச்சரோ, அமைச்சரோ இதிலே தலையிடவில்லை! இறுதியாக அந்தப் போராட் டம் 5-6-2012 அன்று முடிவுற்றது.

இதற்கிடையே 24-5-2013 அன்று மத்திய அமைச்சர், நண்பர் நாராயணசாமி அவர்கள் என்.எல்.சி. பங்குகளை விற்பதில் தவறு ஒன்றுமில்லை என்பதைப் போலக் கருத்து தெரிவித்திருக்கிறார். புதுவை உட்பட தமிழகத்திற்கும், குறிப்பாகத் தொழிலாளர்களுக்கும் விரோதமான இந்தக் கருத்து, தி.மு.கழகத்திற்கு ஏற்புடைய கருத்து அல்ல.

தம்பி முரசொலி மாறன் மத்திய அரசின் தொழில் வர்த்தகத்துறை அமைச்சராக இருந்தபோது எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக "நவரத்னா" தகுதி பெற்ற என்.எல்.சி. பங்குகளைவிற்கும் முயற்சியில் மத்திய அரசு மீண்டும் ஈடுபடக்கூடாது, அது தேவையன்றித் தமிழர்களைக் குறிப்பாக நெய்வேலி தொழிலாளர்களை வீண் வம்புக்கு இழுக்கும் செயல், அப்படிப்பட்ட செயலில் மத்திய அரசு ஈடுபட்டு மேலும் ஒரு எதிர்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்க விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-5-2013

3762. உவகை ஊட்டும் ஒகேனக்கல் தொடக்கம்!

உடன்பிறப்பே,

25-5-2013 தேதிய “தினமணி” நாளிதழில் “ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் - மே 29இல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்” என்ற தலைப்பில் ஒரு செய்தி வந்துள்ளது.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்குவதற்காக ஒகேனக்கல் குடிநீர் மற்றும் ஃப்ளோரைடு பாதிப்புக் குறைப்புத் திட்டத்தை ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிறைவேற்றுவதற்கான பணிகள் முழு வீச்சில் கழக ஆட்சியிலேதான் நடைபெற்றன.

இத்திட்டத்தின் மூலம்

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய 3 நகராட்சிப் பகுதிகள்;

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த

பொ.மல்லாபுரம், அரூர், கடத்தூர், கம்பை நல்லூர், காரிமங்கலம், மாரண்ட ஹள்ளி, பாலக்கோடு, பாப்பிரெட்டிபட்டி, பென்னாகரம், பாப்பாரப்பட்டி;

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த

பருகூர், காவேரிப்பட்டினம், நாகோஜன ஹள்ளி, ஊத்தங்கரை, மத்தகிரி, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை

-ஆகிய 17 பேரூராட்சிப் பகுதிகள்;

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த

மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு, காரிமங்கலம், பென்னாகரம், நல்லம்பள்ளி, தருமபுரி;

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த

பருகூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், மத்தூர், ஊத்தங்கரை, வேப்பனப்பள்ளி, கெலமங்கலம், தளி, சூளகிரி, ஓசூர்

-ஆகிய 18 ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகள்;

இவை அனைத்திலும் வாழும் 6 ஆயிரத்து 755 குடியிருப்புகளைச் சேர்ந்த ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் பாதுகாக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் வசதியைப் பெற்றுப் பயனடையத் தக்க வகையில் இந்தத் திட்டம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தினால், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வாழும் மக்களின் வாழ்க் கைத் தரம் மேம்படும். தற்போது கிடைக்கும் குடிநீரால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளிலிருந்தும் இம்மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் விடுதலை பெற்று மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் 1997ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் 576 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு - பின்னர் சுகாதார வசதிகளை உள்ளடக்கி இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு - ஜப்பானிய நாட்டு நிதி நிறுவனத்தின் உதவியைப் பெறு வதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத்திட்டத்திற்கான களஆய்வுப் பணிகள் தொடங்கின. 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் காவிரி ஆற்றி லிருந்து தண்ணீர் எடுப்பதற்கான தடையில்லாச் சான்றுக்கு விண்ணப்பிக்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய அரசின் நீர்வள அமைச்சகம் தடையில்லாச் சான்றை வழங்கியது. ஆனால், 1998ஆம் ஆண்டு மே மாதம் பொக்ரானில் நடைபெற்ற அணுசக்தி சோதனையின் காரணமாக, ஜப்பான் நாட்டு நிதி நிறுவனம் இந்திய நாட்டின் எந்தவொரு புதிய திட்டத்திற்கும் நிதி உதவி வழங்குவதை நிறுத்திவிட்டது. - 2001 முதல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வித உருப்படியான

நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. 2006, மே மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற் கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11.8.2006 அன்று தி.மு.கழக ஆட்சியில் தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தினையொட்டி காவிரி நீரை ஆதாரமாகக் கொண்டு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. பின்னர், சட்டப்பேரவையில் 27.1.2007 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றியபொழுது,

'ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இந்த வாரம்தான் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் தர்மபுரி மாவட்டம் சென்று திட்ட ஆய்வை மேற்கொண் டுள்ளார்கள். மைய அரசு இந்தத் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற மிகுந்த முன்னுரிமை அளித்து ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ளது. ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ள இந்தச் செய்தி, ஜப்பான் நாட்டு நிதியுதவி கிடைக்க வாய்ப்புகளை அதிகமாக்கி இருக்கிறது. எனினும், ஜப்பான் நிதியுதவி ஏதேனும் ஒரு காரணத்தால் கிடைக்காவிட்டால் அரசு வேறு நிதி ஆதாரம் பெற்று இத்திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றும்' என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2007-2008ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 23.3.2007 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் அளித்த பொழுது,

> 'தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரே தீர்வான ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் திட்டம், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவிக்காக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அந்த வங்கியின் வல்லுநர் குழு, இதற்கான ஆரம்ப கட்ட ஆய்வுகளை அண்மையில் இந்த மாவட்டங்களில்

நடத்தியுள்ளது. இத்திட்டத்தை ஒரு அறைகூவலாக ஏற்று, இந்த அரசு செயல்படுத்தும்' - என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக, கழக ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி மு.க.ஸ்டாலின் அதிகாரிகள் குழுவுடன் ஜப்பான் தலைநகர் டோக்கியோ சென்று அங்குள்ள ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் செயல் இயக்குநர் திரு. டிசியோகுசி அவர்களை 6.2.2008 அன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்விளைவாக, 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகரில் நிறைவேற்றப்படவுள்ள மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகிய 1330 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் நிதியுதவி அளிப்பதாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி ஒப்புதல் தெரிவித்தது.

அதன் தொடர்ச்சியாகத்தான் 26.2.2008 அன்று தருமபுரியில் நடைபெற்ற பிரம்மாண்டமான நிகழ்ச்சியில் இத்திட்டத்திற்கான அடிக்கல் என்னால்தான் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டப் பட்டது மட்டுமல்லாமல், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை முறைப்படி செயல்படுத்துவதற்கான கால அட்டவணை நிர்ணயம் செய்யப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

1334 கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட நிர்வாக ஒப்புதல் வழங்கி 25.2.2008 அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் ஆணைகள் வெளியிடப்பட்டன. பின்னர், இத்திட்டத்திற்கான செலவு அதிகரிக்கும் என்பதால் 28.1.2010 அன்று வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆணையின்படி இத்திட்டத்தின் மதிப்பீடு 1928 கோடியே 80 இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

3.10.2008 அன்று திட்ட மேலாண்மை குறித்த கலந்தாலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மொத்தம் 5 கட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முதல் கட்டப் பணிகளுக்கு 10 நிறுவனங்களிடமிருந்து தகுதிகாண்

விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டன. இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஐந்தாவது கட்டப் பணிகளுக்கு பல நிறுவனங்களிடமிருந்து தகுதி காண் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை மதிப்பிடப்பட்டன. அதேநேரத்தில் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களும் தயாரிக்கப்பட்டன. ஜப்பானிய நிதி நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ள கால அட்டவணைப்படி, 2009 ஜூலை மாதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 2009 டிசம்பர் மாதத்தில் களப்பணிகள் தொடங்கப்பட்டு, 2012 டிசம்பர் மாதத்தில் திட்டம் முழுமையடைந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அந்த கால அட்டவணைப்படி எந்தவிதத் தொய்வும் தி.மு. கழக ஆட்சியில் இன்றி பணிகள் நடைபெற்று வந்தன.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் குறித்து கொடுத்த வாக்குறுதியை குறிப்பிட்ட காலத்திற்குள் நிச்சயமாக நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக மிகுந்த அக்கறையோடு இந்தப் பணிகளை நிறைவேற்றி வந்ததை தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வாழும் மக்களே நேரில் அறிவார்கள்.

தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு நல்ல திட்டங்களுக்கு மூடு விழா நடத்திய அ.தி.மு.க. ஆட்சியினர் நல்லவேளையாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத் திற்கு எந்தவிதமான இடைஞ்சலையும் செய்யாமல், தாமதமாகவாவது இந்தக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்ற முன்வந்துள்ளார்கள். ஆனால் பணிகள் இன்னும் முழு அளவிற்கு நிறைவேற்றப்படாமலே, அவசர அவசரமாக முதல் அமைச்சரைக் கொண்டு இதனைத் தொடங்கி வைக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இத்திட்டம் தி.மு. கழக ஆட்சியிலே விரைவுபடுத்தப்பட்டது என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் திட்டமிட்டு மறைக்க முயற்சித்தாலும், "தீக்கதிர்" நாளேடு இன்று வெளியிட்ட செய்திக் கட்டுரையில் கழக ஆட்சியில் இத்திட்டத்திற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக "தி.மு. கழக ஆட்சியில் 5 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. இதில் 1,200 கோடி செலவு செய்து 90 விழுக்காடு பணிகள் முடிந்துவிட்டன" என்று எழுதியுள்ளது.

தற்போது அரசு சார்பில் வரும் 29ஆம் தேதியன்று முதலமைச்சர் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கவுள்ளார் என்ற செய்தி கூட, திட்டம் இன்னமும் முழுமை அடையாத நிலையில், ஓரளவுக்கு பணிகள் முடிந்திருக்கும் நிலையில்தான் முதலமைச்சர் தொடங்கி வைக்கவிருக்கிறார் என்றும், பின்னர் படிப்படியாக இந்தத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் செய்து முடிக்கப்படும் என்று தெரிகிறது. எப்படியோ, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெரு முயற்சி எடுத்துத் தொடங்கப்பட்ட திட்டம் ஒன்று முடிவுற்று, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு பாதுகாப்பான நல்ல குடிநீர் கிடைக் கப் போகிறது என்பதில், அந்தத் திட்டத்திற்காக முயற்சிகளை மேற்கொண்டவன் என்ற முறையில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-05-2013

3763. அனைத்து உண்மையும் அனைவருக்கும் தெரியுமே!

உடன்பிறப்பே,

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை "வீடியோ கான்பரன்சிங்" மூலமாக முதல்அமைச்சர் 29-5-2013 அன்று தலைமைச் செயலகத்தில் இருந்தவாறு திறந்துவைக்க இருந்ததைப் பற்றி விரிவாக நான் வரவேற்று, மகிழ்ச்சி தெரிவித்து எழுதியிருந்தேன். திட்டத்தைத் தொடங்குவது பற்றி அனைத்து நாளேடுகளிலும் முழுப்பக்க விளம்பரம் அரசின் சார்பில் வெளிவந்திருப்பதையும், தொடங்கிவைத்த பிறகு, அதற்கு நன்றி தெரிவித்துப் பொது மக்கள் அல்ல, அந்தத் துறையின் அமைச்சரே முழுப்பக்க விளம்பரம் கொடுத்திருப்பதையும் கண்டிருக்கக் கூடும். விளம்பரம் பெற்றதற்கு நன்றிக் கடனாக அந்தப் பத்திரிகைகள் எல்லாம் முதல் அமைச்சரின் உரையை முழுவதுமாக வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காகத்தானே முழுப் பக்க விளம்பரம்?

காணொலிக் காட்சி மூலமாகத் திட்டத்தைத் தொடங்கிவைத்து முதல் அமைச்சர் ஆற்றிய உரையில் வழக்கம்போல் தி.மு.கழக ஆட்சியின்மீது பாய்ந்து பிறாண்டியிருக்கிறார். குறிப்பாக 1994ஆம் ஆண்டு 350 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டதாகவும், போதிய நிதி உதவி கிடைக்காததன் காரணமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலவில்லை என்றும் சொல்லியிருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சியில் போதிய நிதி திரட்ட இயலவில்லை என்றால் எதற்காகத் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது?

அவர் இரண்டாவதாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்தத் திட்டத்திற்காக நிதி உதவி கேட்டு 18-8-2005 அன்று மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டது என்று முதலமைச்சர் பேசியிருக்கிறார். இரண்டாவதாக அவர் ஆட்சிப் பொறுப்பேற்றது

2001ஆம் ஆண்டு. பொறுப்புக்கு வந்தவுடன் 2001ஆம் ஆண்டே இந்தத் திட்டத்திற்காக நிதி உதவி கேட்டு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பாமல் 18-8-2005 வரை நான்காண்டுகள் என்ன செய்து கொண்டிருந்தார்?

மேலும் முதலமைச்சர் தனது பேச்சில் 2008ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்று கூறியிருக்கிறார். ஆனால் அப்போது எந்த ஆட்சி நடைபெற்றது என்பதைக் குறிப்பிடவில்லை. 2008ஆம் ஆண்டு நடைபெற்றது தி.மு.கழக ஆட்சி. அந்த ஆட்சிக் காலத்திலேதான் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து கர்நாடகாவில் பா.ஜ.க. போராட்டம் நடத்தியது என்றும், அதை எதிர்த்து அ.தி.மு.க. போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்ததாகவும், 27-3-2008 அன்றும் 1-4-2008 அன்றும் மத்திய அரசின் ஒத்துழைப்பைக் கோரித் தமிழகச் சட்டப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதாகவும் ஜெயலலிதா குறிப்பிட்டுவிட்டு, அதன்பின்னர் "கர்நாடகத்தில் தேர்தல் முடியட்டும், பின்னர் நாம் கலந்து பேசி தேவைப்பட்டால் களம் காண்போம்" என்று 5-4-2008 அன்று நான் அறிவித்து அந்தத் திட்டத்தை நான் நிறுத்தி வைத்துவிட்டதாகவும், அதுபற்றிப் பேரவையில் கேள்வி கேட்க முயன்ற ஜெயலலிதாவிற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும், அதனால் அவர் வெளியே சென்று, முதலமைச்சராக இருந்த நான் பதவி விலக வேண்டுமென்று கூறியதாகவும் பேசியிருக்கிறார்.

இதற்கான விளக்கங்களை நான் அளித்தாக வேண்டும். ஒகேனக்கல் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டபோது கர்நாடகாவில் தேர்ந் தெடுக்கப்பட்ட ஓர் அரசு இல்லை. ஆளுநர் ஆட்சிதான் நடைபெற்றது. பொதுத் தேர்தல் நடை பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அந்த நேரத்தில் கர்நாடக பா.ஜ.க. சார்பில் அங்கே எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு, அங்கே வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்கள் எல்லாம் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். தமிழர்களின் கடைகள் எல்லாம் நாசமாக்கப்பட்டன. பேருந்துகள் கொளுத்தப்பட்டன. தமிழ்த் திரைப்படங்கள் வெளியான திரையரங்குகளின் மீது தாக்குதல்கள் நடைபெற்றன. தமிழகச் சட்டப்பேரவையில் மத்திய அரசின் ஒத்துழைப்பைக்கோரி இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றிய

பிறகும், தமிழர்கள் தாக்கப்படுவது நின்றபாடில்லை. கர்நாடக பா.ஜ.க.வின் செயல்களைக் கண்டித்து, தமிழ்த் திரையுலகம் சார்பில் 4-4-2008 அன்று சேப்பாக்கத்தில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத் தலைவராக இருந்த கே.ஆர்.ஜி. தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அதில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கலைஞானி கமல்ஹாசன், விஜய்காந்த், அஜீத்குமார், கவிப்பேரரசு வைரமுத்து, இயக்குநர்கள் இராம.நாராயணன், டி. ராஜேந்தர், பி. வாசு, முக்தா சீனிவாசன், சேரன், கே.எஸ். ரவிக்குமார் மற்றும் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்., சரத்குமார், தனுஷ், ஜீவா, சிம்பு, நடிகைகள் மனோரமா, குஷ்பு, ஸ்நேகா, நயன்தாரா, ரம்யாகிருஷ்ணன் மற்றும் ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்தப் பிரச்சினை காரணமாக இரண்டு மாநிலங்களிலும் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படும் சூழ்நிலை உருவானபோது, கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் பெரிதும் அல்லல்களுக்கு ஆளான நேரத்தில் - அங்கே ஒரு ஆட்சி அமைய ஒரு சில நாட்கள் மட்டுமே இருந்த நிலையில் அதுவரை தற்காலிகமாக இந்தப் பிரச்சினையில் அமைதி காப்போம் என்றும், அதற்குப் பிறகும் நிலைமை நீடிக்குமானால் பொறுமையாக இருக்கத் தேவையில்லை என்றும் முதலமைச்சராக இருந்த நான் அறிக்கை கொடுத்தது உண்மைதான். அவ்வாறு நான் அறிக்கை வெளியிடாமல் அமைதியாக இருந்திருந்தால், கர்நாடகாவில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கப்பட்டிருக்கும். தமிழர்களுக்குத் தீங்கேதும் நேர்ந்து விடாமல் காப்பதற்காக முன்னெச்சரிக்கையாக நான் மேற்கொண்ட நடவடிக்கையைத்தான் நேற்றைய தினம் முதலமைச்சர் மிகப்பெரிய புகாராகத் திட்டத்தையே கைவிட்டதைப் போல எடுத்துக் கூறியிருக்கிறார்.

உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட என்னுடைய இந்த முடிவு பற்றி அப்போதே 7-4-2008 தேதிய "இந்து" ஒரு தலையங்கமே எழுதியிருந்தது. அது வருமாறு :-

"அமைதியும், பொறுமையும் சில நேரங்களில் மிகப் பெரும் நற்குணங்களாகும். கர்நாடக மாநிலச் சட்ட மன்றத் தேர்தல் நடந்து முடியும்வரை ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் பற்றிப் பொறுமை

காக்கும்படி அறிவுறுத்தி தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.கருணாநிதி எடுத்துள்ள நடவடிக்கை மிகச் சரியானது. அரசியல் முதிர்ச்சியுடன் கூடிய இந்தத் தலையீடு கர்நாடகாவிலும் தமிழ்நாட்டிலும் உடனடியாகப் பதற்றத்தைத் தணித்துள்ளது. பேருந்துகளைத் தீக்கிரையாக்குதல், கடைகளைத் தாக்குதல், திரையரங்குகளை மூடுதல் போன்றவற்றில் சில நாட்களாக ஈடுபட்டு வந்த இருபுறமும் உள்ள வன்முறையாளர்களுக்குத் திடீரென்று போராடுவதற்கு எந்தக் காரணமும் இல்லாமல் போய்விட்டது.

வன்முறையை அமைதி அணி வகுப்பு மூலம் எதிர்க்கும் தமிழக முதல்வரின் (கருணாநிதியின்) முன் முயற்சியின் பின்னுள்ள நல்ல எண்ணத்தைக் கர்நாடகாவிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் உடனடியாகப் புரிந்துகொண்டனர்.

ஒகேனக்கல் திட்டம் பேச்சுவார்த்தை நிலையிலிருந்து களத்திற்கு வருவதற்குப் பல ஆண்டுகள் ஆயின, அதனால் மேலும் ஓரிரு மாதங்கள் காத்திருப்பதால் எந்த இழப்பும் ஏற்பட்டு விடாது. எப்படிப் பார்த்தாலும் இந்தத் திட்டம் பற்றிக் கர்நாடகாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுடன்தான் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையையும் நடத்த முடியும். புதிய சட்டமன்றம் அமைந்த பிறகுதான் இது சாத்தியமாகும். நடைமுறைக்கு உகந்த இந்த நடவடிக்கை மூலமாக, திரு. கருணாநிதி நிலைமையை வெகு சாமர்த்தியமாகச் சமாளித்துள்ளார். இதிலே வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், தமிழ்நாட்டிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர்கள், குறிப்பாக எதைப் பார்த்தாலும் சந்தேகப்படும் முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. தலைவருமான ஜெயலலிதா, இந்தப் பிரச்சினையில் மாநில அரசுடன் பொதுவான, ஆக்கப்பூர்வமான நிலைப்பாட்டை எடுப்பதற்குப் பதிலாக, இதிலும் குற்றம் கண்டுபிடித்து அரசியல் ஆதாயம் தேட முயலுகின்றனர்”

(Silence and patience are sometimes great virtues. No dialogue is possible in an emotion-charged atmosphere and Tamil Nadu Chief Minister M. Karunanidhi has done very well to counsel patience on the Hogenakkal drinking water project until the Karnataka Assembly election is concluded.

This Statesmanly intervention cooled tempers overnight in both Tamil Nadu and Karnataka; after days of burning buses, attacking shops, and closing down cinemas, chauvinist elements on both sides were suddenly left without a cause to fight for.

Political leaders in Karnataka, who seemed belligerent on the issue after the BJP raised the ante, were quick to see the good sense behind the Tamil Nadu Chief Minister's initiative to counteract the violence with a peace march.

The Hogenakkal project took years to move from the discussion board to the field and waiting out another couple of months will cost nothing.

In any case meaningful talks on the project can only be held with an elected Government in Karnataka, and this will be possible only after the new Assembly is constituted by the end of May. By injecting a dose of practicality, Mr. Karunanidhi skilfully managed a situation that, in less experienced hands, could have spun out of control.

Sadly, opposition leaders in Tamil Nadu, especially former Chief Minister and AIADMK leader Jayalalithaa, instead of making common, constructive cause with the State Government on this issue, are cynically trying to make political capital out of it.)

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றையதினம் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்துப் பேசும்போது என்மீது கூறிய குற்றச்சாட்டிற்கு "இந்து" அப்போதே எழுதிய தலையங்கமே பதிலாகும். "இந்து" நாளேடு ஜெயலலிதாவைப் பற்றி அன்று விளக்கி விமர்சனம் செய்தது இன்றும் பொருந்தும் என்பதை ஜெயலலிதா நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

இந்தத் திட்டத்தை ஒரு சில மாதங்களுக்கு நிறுத்தி வைக்கலாம் என்று நான் வெளியிட்ட அறிக்கையைப் பேரவையில்

அறிவிக்காமல், அனைவரையும் கலந்து பேசாமல் அறிக்கை விடலாமா என்று ஜெயலலிதா கேட்டிருக்கிறார். இதே கேள்வியை 2008ஆம் ஆண்டிலேயே அவர் கேட்டு, அப்போதே நான் அதற்குப் பதிலளித்திருக்கிறேன். பேரவை மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து விடுமுறை.

அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து கொண்டு பேரவையில் அறிவிப்பதென்றால், அதற்குள் இரண்டு மாநிலங்களிலும் பல உயிரிழப்புகளும், உடைமை நாசங்களும் ஏற்படுவதற்கு இடம் தந்துவிடுவதாக அமைந்துவிடும் என்பதால் நெருக்கடியான நிலைமையைத் தவிர்ப்பதற்காக, காலந் தாழ்த்தாமல் அப்போது அவசரமாக அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

நான் அப்போது வெளியிட்ட அறிக்கை பற்றிப் பேரவையில் கேள்விகேட்க ஜெயலலிதா முயன்றதாகவும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் ஒரு புகார் சொல்லியிருக்கிறார். அதற்கும் நான் விளக்கமளிக்கிறேன்.

சட்டமன்றக் கூட்டம் நடக்கும்போது ஒரு உறுப்பினரோ அல்லது ஒரு கட்சி சார்பிலோ விளக்கம் கேட்பதாக இருந்தாலும், உரிமை மீறல், ஒத்திவைப்பு போன்ற பிரச்சினைகள் பற்றி எழுப்புவதாக இருந்தாலும், காலையில் பேரவை தொடங்கி, வினா விடை என்ற கேள்வி பதில் நேரம் முடிந்த பிறகுதான் எழுப்ப முடியும் என்பது சட்டமன்ற விதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அப்போது அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா அவர்களும், அவரது கட்சியினரும் காலையில் சட்டமன்றம் கூடியதும், உரிமைப் பிரச்சினையோ, ஒத்திவைப்புப் பிரச்சினையோ எழுப்புவதாகச் சொல்லிப் பேசுவதற்கு முற்பட்டபோது, கேள்வி நேரம் முடிந்த பிறகு பிரச்சினையை எழுப்புங்கள், அதற்கு ஆளுங்கட்சி சார்பில் விளக்கம் தரப்படும் என்று எடுத்துக் கூறியும் கூட, பேரவையின் விதிகளை மதித்து அந்த ஒரு மணிநேரம் கூட காத்திருக்க அவர்களுக்கு மனம் இல்லாமல், வெளியூர் செல்ல வேண்டிய சூழ்நிலையில் பேரவையை விட்டு வெளியேறி விட்டு, தற்போது பேரவையில் அனுமதி வழங்கவில்லை என்று கூறியிருக்கிறார். தற்போது அவர்கள் ஆட்சியில் எந்த அளவிற்கு எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது என்பதைத் தமிழகமே நன்கறியும். ஜனநாயகத்தில் இன்னமும் நம்பிக்கை உள்ளவர்களும், சட்டமன்ற

மரபுகளை உணர்ந்தவர்களும் அதை அனுபவரீதியாகத் தெரிந்து கொண்டேயிருக்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் ஒகேனக்கல் திட்டம் முடுக்கி விடப்பட்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இந்தத் திட்டம் யார் ஆட்சிக் காலத்தில் விரைந்து திட்டம் தீட்டப்பட்டு, முடுக்கி விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது என்பதை அந்தப் பகுதி மக்களே நேரில் கண்கூடாகக் கண்டு தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கழகப் பொருளாளர் தளபதி மு.க. ஸ்டாலின் கிருஷ்ணகிரியில் கடந்த பிப்ரவரி மாதம் சென்றபோது, 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே முடிவடைந்திருக்கக் கூடிய திட்டம், அ.தி.மு.க. ஆட்சி செய்த தாமதத்தால் தொடங்கப்படவில்லை என்று கூறியதைப் பொய்ப்பிரச்சாரம் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். இந்தத் திட்டத்திற்காக அட்டவணை ஒன்றே தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தான் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் திட்டம் முடியக் கூடிய அளவிற்குக் கழக ஆட்சியில் முறைப்படுத்தப்பட்டு, அவ்வாறே பணிகள் நடைபெற்றுவந்தன. அந்தப் பணிகளையெல்லாம் அடிக்கடி நேரில் சென்று அந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் கண்காணித்து வந்ததன் அடிப்படையிலேதான் மு.க.ஸ்டாலின் கிருஷ்ணகிரியில் பேசினாரே தவிர, பொய்ப் பிரச்சாரம் செய்யவில்லை. தி.மு.க. ஆட்சியில் இருந்த போது இரண்டாண்டு காலத்தில் செய்யாததை ஆட்சியில் இல்லாத போது இரண்டு மாதத்தில் நிறைவு செய்வதாக ஸ்டாலின் கூறியது நகைப்புக்குரியதாக உள்ளது என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது முனைப்பாக பணிகளை விரைவுபடுத்திய காரணத்தினால் தான் தற்போது அம்மையாரால் தொடக்க விழாவினை நடத்த முடிந்திருக்கிறது என்பதுதான் உண்மை. கழக ஆட்சியில் மேற்கொண்ட பணிகளின் அறுவடையைத்தான் தற்போது அவர்கள் செய்திருக்கிறார்களே தவிர, இந்தத் திட்டத்தின் பயன்களைத் தி.மு.க.வைப் போல கொண்டாடுவதற்கு அ.தி.மு.க.விற்கு உரிமை இல்லை என்பதுதான் நிதர்சனம்.

ஒகேனக்கல் திட்டப் பணிகள் முழுமை பெறவில்லை, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதற்கு அடையாளமாக “தினமலர்”

நாளேடு வெளியிட்டிருந்த புகைப்படத்தையே எடுத்துக்காட்டி, அவசர அவசரமாக இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்படுவது ஏன் என்று நான் கேட்டிருந்த கேள்விக்கு முதலமைச்சர் ஏனோ பதிலே அளிக்கவில்லை. நான் கூறியது உண்மை என்பதை நிரூபிக்கத்தக்க வகையில், இன்று "இந்து" நாளேட்டிலேயே "People in many rural areas were upset that the water did not reach them" (கிராமப்புறங்கள் பலவற்றுக்குக் குடிநீர் சென்று சேராததால், மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்) என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாவம், முதலமைச்சர் என்ன செய்வார்? அதிகாரிகள் பதில் எழுதிக் கொடுத்திருந்தால் தானே, அவர் படித்திருப்பார்! அதிகாரிகள் ஏன் எழுதிக் கொடுக்கவில்லை என்றால், அவர்களுக்குத்தான் அனைத்து உண்மைகளும் தெரியுமே!

அன்புள்ள,

மு.க.

31-5-2013



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022